
திருமந்திரம்

மூலபாட ஆய்வுப் பதிப்பு

முதற் பகுதி



"மான்கன்று நின்று வளர்கின்ற வாறே" - திருமந்திரம், 731

பதிப்பாசிரியர்

டாக்டர் சுப. அண்ணாமலை



டாக்டர் *சுப. அண்ணாமலை*
பதிப்பாசிரியர்

திருமந்திரம் – மூலபாடப் பதிப்பை உருவாக்கிக் கருத்து வரைந்தவர்.

“தமிழாகரர்” என்னும் பட்டம் இவருக்குத் தவத்திரு குன்றக்குடி அடிகளாரால் வழங்கப்பட்டது.

1929 - ஆம் ஆண்டு பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், தேவகோட்டையில் தோன்றினார்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பயின்று, 1952 - இல் B.O.L (Hons) தேர்வில் மாநில முதன்மை பெற்றுத் தேறி, சென்னைப் பல்கலைக் கழகத்தில் “லாசரஸ்” – தங்கப்பதக்கமும், அரங்கையா செட்டி பரிசும் பெற்றார்.

கோவை பி.எஸ்.ஜி. கலைக் கல்லூரியில் ஓர் ஆண்டும், மதுரைத் தியாகராசர் கல்லூரியில் 34 ஆண்டும் தமிழ்த் துறையில் பணியாற்றி, இதில் 20 ஆண்டு, இக்கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவராகவும், 11 ஆண்டுகள் முதல்வராகவும் பணியாற்றி, 1988 - இல் ஒய்வு பெற்றார்.

(தொடர்ச்சி பின்பக்க உள்அட்டையில்)

உ
சிவமயம்

திருமூலநாதர் அருளிய

திருமந்திரம்

என வழங்கும்

சதாசிவ ஆகமம்

மூலபாட ஆய்வுப் பதிப்பு

முதற் பகுதி :

கடவுள் வாழ்த்து முதல்
திருவம்பலச் சக்கரம் வரை

கருத்துரை எழுதிப் பதிப்பித்தவர்:

டாக்டர் சுப. அண்ணாமலை, எம். ஏ., பிஎச்.டி.

இந்தியப் பண்பாடு - ஆராய்ச்சி நிறுவனம்
84, கலாக்ஷேத்ரா சாலை
திருவான்மியூர், சென்னை - 600 041

முதற் பதிப்பு: ஏப்ரல் 1997
இரண்டாம் பதிப்பு : ஜூன் 2002

பக்கங்கள் : 70 + 594 = 664
Map Litho Paper - 18.6 Kg.

மூன்று பகுதிகள் சேர்த்து விலை ரூ.450/-

நன்றியுரை

இந்நூலை வெளியிட அன்புடன்
இசைவு நல்கிய மதுரை, காமராசர்
பல்கலைக் கழகத்தார்க்கு நன்றி

அச்சிட்டோர் :

கலாக்ஷேத்ரா பதிப்பகம்
திருவான்மியூர், சென்னை - 600 041

உள்ளுறை

உ
சிவமயம்

நூன் முகம்

"மறை உடையாய், தோல் உடையாய் வார்சடைமேல் வளரும்
பிறை உடையாய், பிஞ்ஞகனே"

என்று சிவபெருமானை விளித்துப் போற்றுவர் திருஞானசம்பந்தர். (திருநெடுங்களப் பதிகம், 1 ஆம் திருமுறை) உயிர் பிறையாகப் படிமம் செய்யப்படும் சைவ சமய மரபைப் பின்பற்றி, இறைவனைச் சரணடைந்து சார்ந்த உயிர், பிறப்பு இறப்புகளில் அகப்பட்டு அழியாது, வளர்தலை இங்கு அவர் கூறியருள்கின்றார்.

திருமூலர் இதனை, "மான்கன்று வளர்கின்றது" என மற்றொரு படிமத்தில் அமைக்கின்றார்.

"நான்கண்ட வன்னியும் நாலு கலை ஏழும்
தான் கண்ட வாயுச் சரீர முழுதொடும்
ஊன்கண்டு கொண்ட உணர்வும் மருந்தாக
மான்கன்று நின்று வளர்கின்ற வாறே"

– திருமந்திரம், பா. 731

உயிரின் வளர்ச்சிக்கு உடம்பும் பயன்படுதலை இப்பாடலில் கூறுகின்றார். இங்கு உயிர் வெற்று – ஆன்மா அன்று; உடம்பில் வாழும் சீவன்; பிரகிருதியின் பிள்ளை. ஆகவே, அதனை "மான் கன்று" என்றார். (மான் – பிரகிருதி.) இப்பிள்ளை இந்த உடம்பிலேயே, மூச்சுக் காற்றின் உதவியால், உணர்வு கொண்டு சிவனைப் பேரொளியாகக் கண்டு, அந்த அனுபவத்தையே மேலும் மேலும் உணவாக உண்டு வளர்கிறது என்கின்றார். இது வளர்ந்துகொண்டே செல்லும். அதற்கு முற்றுப்புள்ளி இல்லை.

இவ்வாறு, சிவ – அனுபவத்திற்குச் சாதனமாக உடம்பைப் பண்படுத்தும் முறைகளைச் "சிவயோகம்" என்ற முழு இயலாக உருவாக்கிய

முதற்சித்தர் திருமூலநாதர்.

அவர் தமிழில் முதல் ஆகமமாக மட்டுமின்றி, முதல் யோக நூலாகவும் செய்தருளிய நூல் தமிழ் மூவாயிரம் என்னும் திருமந்திரம்.

சைவத் திருமுறைகளுள் இடம்பெறும் இந்த நூலுக்கு முன்பே பல பதிப்புகள்

உரையுடனும், உரை இன்றியும் வெளிவந்துள்ளன. ஆயினும் பாடத்திரிபுகளும் இடைச்செருகலும் மிகுதியாகப் புகுந்துவிட்ட இந்நூலுக்குச் செம்மையான பாடங்களைக் கொண்ட திருத்தமான பதிப்பு இதுவரை வெளிவராமை வியப்பிற்குரியதே!

அவ்வாறு ஒரு செம்மையான பதிப்பை வெளிக்கொணர, 1965 இல் நான் திருவருட்பாவை ஆராய்ந்தபொழுதே விருப்பம் தோன்றியது. திருவருட் பிரகாச வள்ளலார், இராமலிங்க சுவாமிகள் கண்டருளி, வகுத்துப் பரப்பிய சுத்த சிவ சன்மார்க்க நெறிக்கு அடிப்படை திருமந்திரமே எனத் திருவருட்பா நூலாய்விற் கண்டபொழுது, இந்த விருப்பம் மேலும் பெருகியது.

1988 ஆம் ஆண்டு கல்லூரி முதல்வர் பணியிலிருந்து ஒய்வு பெற்ற பிறகு, இப்பணியைத் தொடங்கினேன். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர், டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அவர்கள் பல்கலைக் கழகத் தமிழியல் ஆய்வுத் துறையில் ஆய்வுப் பேராசிரியனாகப் பணிதந்தார். திருமந்திரம் எழுதப்பட்ட பழமையான ஏட்டுச் சுவடிகள் 15 க்கும் மேல் தேடி, நிழற்படி எடுத்துக் கொணர்ந்து, மூலபாட ஆய்வியல் முறையில் (Textual Criticism) 4 ஆண்டுகள், திருமந்திரப் பாடல்கள் முழுதையும் ஆய்வு செய்து, ஒரு செம்மையான ஆய்வுப் பதிப்பை உருவாக்கினேன்.

கோவிலூர் ஆதீன அதிபர், வணக்கத்திற்குரிய ஸ்ரீ நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள், தமது நிறுவனமாகிய Indian Institute of Indology - யின் வெளியீடாக இதனைப் பெருங்கருணையுடன், பேரார்வத்துடன் வெளிக் கொணர்கின்றார்கள். நான் பதிப்பு உருவாக்கியதைப் பற்றிக் கூறியவுடன், மனம் உவந்து இதனை வெளியிட்டுதவ முன்வந்த அவர்களது பெருந்தகைமைக்கு என்றும் நன்றி உடையேன்.

திருமந்திரம் 'பிறந்த' இடம் திருவாவடுதுறை. இத்தலத்து அம்பிகை தம்மை ஆட்கொண்டார் என்று திருமூலர் பெருமகிழ்ச்சியுடன் பாடுகின்றார்: "என் பிறப்பறுத்து ஆண்டவள், சீர் உடையாள், சிவன் ஆவடு தண்டுறைச் சீர் உடையாள் பதம் சேர்ந்திருந்தேனே" (திருமந்திரம், பா. 60). சுவடி தேடி இத்தலத்திற்கே முதலில் சென்றேன். திருவாவடுதுறை யாதீனம் ஏற்கனவே திருமந்திரத்தைப் பெரும் பேராசிரியர் ச. தண்டபாணி தேசிகர் உரையுடன் பல பதிப்புகள் வெளியிட்டிருப்பினும், அவ்வாதீனத் தலைவர், 23 ஆவது மகாசன்னிதானம், ஸ்ரீ–ல–ஸ்ரீ சிவப்பிரகாச தேசிக சுவாமிகள், ஆதீனத்துச் 'சரசுவதி மகால்'– நூலகத்திலிருந்து, 4 வெவ்வேறு சுவடிப் பிரதிகளைக் கருணையுடன் வழங்கியருளி, பல நாட்கள் என்னைத் தங்க வைத்து ஆசி வழங்கினார்கள். திருமூலர் அகண்டாகார வெளியாகக் கண்டு விளக்கும் சிவபரம்பொருள் ஆதீன ஒடுக்கத்தில் "ஞானமா நடராச மூர்த்தியாக" அருள் பாலிக்கின்றார். இப்பெருமானை வணங்கி, மகா சன்னிதானம் அவர்கட்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

தருமையாதீனம் 26 ஆவது மகா சன்னிதானம், ஸ்ரீ–ல–ஸ்ரீ சண்முக தேசிக

சுவாமிகள் ஆதீனச் சுவடிகள் காப்பகத்தினின்று ஒரு திருமந்திரப் பிரதி, அன்புடன் அளித்து, ஆசிகூறினார்கள். தருமையாதீனம், பெரும்புலவர் சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களைக் கொண்டு, திருமந்திரத்தை உரையுடன் பதிப்பிக்கும் பணி நடந்துகொண்டிருப்பினும், ஆதீனத் தலைவர், ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் 'மூலபாட ஆய்வு' எனக் கேட்டருளியதும் ஆர்வம் கொண்டு, பிரதியைத் தந்தார்கள், அவர்கள் கருணைக்கு நன்றி.

திருச்சி, துறையூர் பெரிய மடத்தின் அதிபர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள், தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் பேரர் திரு. க. சுப்பிரமணிய ஐயர், சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் காப்பகத்தினர், புதுச்சேரி பிரெஞ்சு - இந்தியக் கழகத்தார், தஞ்சைச் சரசுவதி மகால் நூலகத்தார், திருவனந்தபுரம் கீழ்த்திசைச் சுவடிகள் காப்பகத்தார், பாரீசு நகரத்தில் Biblotheque Nationale - நூலகத்தில், சுவடிகள் படியெடுத்து (Micro Film) உதவிய திரு. மா. கோபால கிருஷ்ணன் பேராசிரியர் ஜோசப் முடியப்பநாதன், இவ்வகையில் உதவிய டாக்டர் திருமுருகனார், திருவான்மியூர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் நினைவு நூலகக் காப்பாளர் வித்வான் திரு. பாலசாரநாதன், உதவியாளர் திரு. சாயிராமன், விருதுநகர் மகளிர் கல்லூரித் தாளாளர் திரு. டி.கே.எஸ்.பி. அருணாசலம், செயலர் திரு. டி. கே. செகதீசன் – ஆகிய பெருமக்களுக்கும் சுவடிகள் பெற்றமை தொடர்பாக நன்றியுடையேன்.

இந்நூலை வெளியிட இசைவு அளித்த மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தாருக்கு நன்றி. இதனை எழிலுற அச்சேற்றிய சென்னை கலாக்ஷேத்திரா அச்சகத்தார்க்கு நன்றி.

மதுரை
9.11.1996

சுப. அண்ணாமலை
பதிப்பாசிரியன்

[illegible]

[illegible] Bibliothèque Nationale - [illegible] (Photo Film) [illegible]

[illegible]

[illegible]

உ
சிவமயம்

ஆசியுரை

ஸ்ரீ நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள்,
ஆதீனகர்த்தர்,
கோவிலூர்.

கோவிலூர் மடம்,
கோவிலூர் – 630 319
20-1-1997

திருமந்திரம் திருமூலர் தந்தருளிய மாபெரும் சாத்திர நூல். "தமிழ் மூவாயிரம்" என்று சிறப்பிக்கப்படுவது. சைவ சமயத்திற்கு முதற் சாத்திரமும், தோத்திரமுமாக அமைந்த அரிய நூல். பன்னிரு திருமுறைகளுள், பத்தாவ[illegible] வைத்து எண்ணப்படும் பெருமையுடையது.

இந்த நூல் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களையும், அன்பின் சிறப்பையும், இறைபக்தி, சக்தியின் பெருமை, சமய வாழ்க்கை, யோக முறைகள், சிவகுருவாக உள்ள ஞானாசிரியரின் பெருமை முதலியவற்றைக் கூறுகின்றது.

இவ்வரிய நூலுக்கு நமது அன்பிற்குரிய டாக்டர் சுப. அண்ணாமலை ஒரு புதிய பதிப்பை உருவாக்கியுள்ளார். பாடல்களைப் பதம் பிரித்துப் படிப்பதற்கு எளிமையாக்கியுள்ளார். அவற்றின் கருத்தையும் தந்துள்ளார். அறிஞர்களுக்கு உதவியாகப் பாட பேத ஆராய்ச்சியும் செய்து, சிறந்த பாடங்களைத் தேர்ந்தெடுத்துப் பதிப்பித்துள்ளார்.

சமய வாழ்க்கையில் மிகுதியாக ஈடுபட்டுள்ள டாக்டர் அண்ணாமலை முறைப்படி சிவபூசை செய்யும் நியதியை மேற்கொண்டவர். சிவ பூசையில் ஈடுபடுவது என்பது தற்காலத்தில் மிகவும் அருகி வரும் பழக்கமாகும். முறைப்படி ஒரு குருவிடம் இவ்வழிபாட்டு முறையை உபதேசமாகப் பெற்றுச் செய்து வரும் அவர் நம்முடைய ஆசிக்கு முற்றிலும் தகுதி உடையவர் ஆவார்.

அவருக்கு எல்லா நலமும் பெருக ஸ்ரீ கொற்றவாளீசர், திருநெல்லையம்மன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

அணிந்துரை

பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன்

நண்பர் டாக்டர் சுப. அண்ணாமலை அவர்களின் பெருமுயற்சியால் வெளிவரும் திருமந்திரம் முதல் ஆயிரத்தைக் காணும் வாய்ப்புப் பெற்றேன். அவருடைய முன்னுரையைப் படித்துப் பார்க்கும்பொழுது யாருக்கும் வியப்புத்தட்டாமல் இருக்க முடியாது. இன்று பதிப்பிக்கப்பெறும் பல நூல்கள் 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்ற முறையில்தான் வெளிவருகின்றன. ஆனால் டாக்டர் அண்ணாமலையின் பதிப்பு, எவ்வளவு சுவடிகளையும், முன்னர் வந்த பதிப்புக்களையும் ஆய்ந்து வெளியிடப் பெற்றது என்பது மனத்திற் கொள்ளத்தக்கது ஆகும். டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தாம் இது போன்ற முயற்சியை மேற்கொண்டு அக்காலத்தில் நூல்களை வெளியிட்டார்கள். அதன் பிறகு சைவ சித்தாந்த மகா சமாஜத்தில் திரு. வையாபுரிப் பிள்ளை அவர்களும் திரு. மா. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களும் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களும் ஏடுகளைப் பார்த்துத் திருமுறைகளை வெளியிட்டார்கள். இப்பொழுது டாக்டர் சுப. அண்ணாமலை அவர்கள் ஏறத்தாழப் பதினேழு ஏடுகளை ஒப்பாய்வு செய்து சிறந்த முறையில் பாடல்களைத் தேர்வு செய்துள்ளார்கள். அவருடைய இமாலய முயற்சிக்குத் தமிழ் உலகம் என்றும் கடமைப் பட்டது ஆகும்.

திருமந்திரம் பத்தாம் திருமுறை என்று சொல்லப்பட்டாலும் ஏனைய திருமுறைகளோடு முற்றிலும் மாறுபட்டு இருக்கக் காணலாம். ஆறாம் நூற்றாண்டில் திருநாவுக்கரசரில் தொடங்கி எட்டாம் நூற்றாண்டில் சுந்தரர் காலம் வரை தமிழகத்தில் பக்தி இயக்கம் என்ற ஒன்று சூறாவளியாய் வீசத்தொடங்கியது. அடுத்து வந்த மணிவாசகப் பெருமானின் திருவாசகம் அந்தப் பக்தி இயக்கத்தின் முடிமணியாய் விளங்கிற்று. திருமுறைப் பகுப்பு என்பது இவர்கள் அருளிய எட்டுத் திருமுறைகளோடு முடிந்திருக்க வேண்டும். பத்தாம் நூற்றாண்டில் பக்தி இயக்கம் குறையத் தொடங்கியபோது திருவிசைப்பா முதலியவை தோன்றின. அவற்றையும் பழைய திருமுறைகளோடு சேர்க்க வேண்டும் என்று விரும்பிய பிற்காலத்தார் ஒன்பது, பத்து, பதினொன்று என்று திருமுறைகளை விரிவு செய்தனர். இவ்வாறு செய்வதற்கு முக்கியமான ஒரு காரணம் நாவரசருக்கும் மூன்று நூற்றாண்டுகள் முற்பட்டவராகிய காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதிகம் முதலிய மூன்று நூல்களும், சேரமான் பெருமாளின் பொன்வண்ணத்தந்தாதி முதலிய மூன்று நூல்களும் விடுபட்டுப் போயினமையை அறிந்த பிற்காலத்தார் இவற்றை எங்கே சேர்ப்பது என்று அறியாமல் பதினோராம் திருமுறை என்ற தொகுப்பை உண்டாக்கினர்.

இக்காலத்தில் தான் திருமந்திரம் பத்தாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டது. இத்திருமுறை போக மற்ற பதினொரு திருமுறைகளும் பக்தி அடிப்படையில் தோன்றியவை ஆகும். அங்கே சரியை, கிரியை யோகம் ஞானம் என்ற பிரிவினைக்கு

இடமேயில்லை. பக்தியின் அடிப்படை அகங்கார, மமகாரங்களை அறவே ஒழித்த பின் தோன்றியது ஆகும். இந்த நிலையில் மேலே கூறிய நான்கு படிகளும் பொருந்தா என்பதை ஊகிக்க முடியும்.

திருமந்திரத்துள் பெரிதாகப் பேசப்பெறும் குருவின் இன்றியமையாமை யோகத்தின் விரிவான விளக்கம் என்பவை முதல் எட்டுத் திருமுறைகளில் இடம்பெறவில்லை. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய மணிவாசகருக்குக் கிடைத்த ஒப்பற்ற சிறப்பு இறைவன் குருவாக வந்து ஆண்ட நிகழ்ச்சியாகும். அதன் பிறகு சித்தர்கள் செல்வாக்கு தமிழகத்தில் வலுப்பெறத் தொடங்கியது.

திருத்தொண்டத் தொகையில் 'நம்பிரான் திருமூலன்' என்று வருவதைக் கொண்டும், "புணர் குவடே சார்வாகப் பயில் யோக பரம்பரையின் விரும்பினார்" என்று பெரியபுராணத்தில் வருவதைக் கொண்டும் பரியங்க யோகம் பேசும் சித்தர் கூட்டத்துடன் சுந்தரர் தொடர்புடையவர் என்று டாக்டர் அண்ணாமலை கூறுவது ஆய்வுக்கு உரியதாகும். திருத்தொண்டத் தொகையில் 'நம்பிரான் சம்பந்தன்' என்று வருவதைக் காணல் வேண்டும். பக்தி மார்க்கத்தை அடிப்படையாக கொண்ட சைவ சமயத்திற்கு மாறுபட்ட வைதிக ரிக் வேதிகள் குடும்பத்தில் தோன்றியதால் திருஞானசம்பந்தரையும் அதே பக்தி மார்க்கத்துக்கு மாறுபட்ட யோகம், சக்கரம் என்பவற்றைப் பிரித்துப் பேசும் திருமூலரையும் அன்றைய சைவ உலகம் ஏற்றுக் கொள்ள முழுமனத்துடன் ஈடுபடவில்லை. அதனாலேயே இந்த இரண்டு பேருக்கு மட்டும் 'நம்பிரான்' என்ற அடைமொழியைச் சுந்தரர் தந்தார் என்பதை அறிதல் நலம்.

சிதம்பரம் என்று கூறப்படும் தில்லை ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னர் இல்லை. ஆறாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றிய தில்லை, சிதம்பரம் என்ற பெயரை எட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு தான் பெறுகிறது. நாவரசரோ, திருஞான சம்பந்தரோ சுந்தரரோ சிதம்பரம் என்ற பெயரைப் பயன்படுத்தவில்லை, ஆனால் திருமூலர் பன்னிரண்டு இடங்களில் சிதம்பரம் என்ற பெயரைப் பயன்படுத்துகிறார், எனவே எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் திருமூலர் தோன்றியிருக்கவேண்டும் என்று நினைப்பதும் பொருத்தமுடையது ஆகும். மூவர் முதலிகள் போற்றிய ஐந்தெழுத்தைப் பஞ்சாட்சரம் என்ற பெயருடன் ஸ்தூலம், சூக்குமம், அதிசூக்குமம் என்று பிரிவினை செய்து திருமூலர் பேசுவது எட்டாம் நூற்றாண்டுக்கு முன்னர் இயலாத காரியம். மூவர் முதலிகள் பாடல்களிலும் திருவாசகம் கூட அம்மையைத் தனியே சிறப்பித்துப் பாடும் பாடல்களைக் காணமுடியாது. திருமூலர் சாக்தத்தின் அடிப்படையில் நின்று முக்திக்கு நாயகி ஒரு பெண் பிள்ளை என்றும் ஹ்ரீம் என்ற மந்திர வடிவினள் அம்பிகை என்றும் பேசுவது திருமந்திரம் இந்நாட்டுத் திருமுறைகளோடு இணைந்து போகவில்லை என்பதை அறிவிக்கும்.

திருமந்திரத்தில் வரும் வேதம் ஆகமம் என்பவற்றை விளக்கும் பகுதிகளையும் வேதச்சிறப்பு என்ற பகுதியையும் அதில் வரும் மகாவாக்கியம் என்ற பகுதியையும் தம்முன்னுரையில் எடுத்துக் கூறும் டாக்டர் அண்ணாமலை சிவமேயாதல் என்று மூலர் கூறுவது, 'தத்வமசி' என்ற மகா வாக்கியத்தின் பொருளோடு பொருந்துவதாகக் கூறுகிறார். மகாவாக்கியத்தின் அடிப்படையில் பிரமம் தவிர வேறு எதுவும் இல்லை.

ஆனால் சைவர்கள் முப்பொருள்களை அநாதி என்று கூறுவர். திருமூலரும் கூட பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில் பதியினைப் போல் பசு பாசம் அநாதி என்று கூறுவதைக் காணலாம். எனவே சிவமேயாதல் என்ற மூலர் கூற்று சைவத்தோடு பொருந்துவதா என்பதைச் சிந்திக்க வேண்டும். மணிவாசகர் பாடலிலும் 'சிவமாக்கி எனை ஆண்ட' என்று வருவதும் 'சித்தம் சிவமாக்கிச் செய்தனவே' என வருவதும் ஆழ்ந்து சிந்திப்பதற்கு உரியன.

கோரக்கநாதர் பரம்பரையில் வந்த சித்தர்கள் தமிழகத்திலும் புகுந்து தம் கொள்கைகளைப் பரப்பி உள்ளனர். வேதத்தில் காணப்படாத சிவபெருமானை வேதத்தில் இருப்பதாகக்கூறி வேதத்தையும் ஆகமத்தையும் ஒருங்கிணைக்கும் முயற்சியில் முதன்முதலில் ஈடுபட்டவர்கள் திருமூலர் போன்ற சித்தர்களே ஆவர். இந்நாட்டு பதி பசு பாசக் கொள்கையோடு யோகம் சக்கரம் பிராணாயாமம் என்பவற்றையும் இணைத்துப் புது வழி ஒன்றை நிறுவ முயன்றவர்கள் இவர்கள்.

திருமூலருக்கு முன்னும் அவருக்குப் பின்னும் வேறு எவரும் இவ்வழி சென்றதாகத் தெரியவில்லை. அதனாலேயே திருமுறைகள் பயிலப்பட்டதைப் போல திருமந்திரம் பயிலப் பெறவில்லை, இங்கு ஒருவர் அங்கு ஒருவர் என்ற முறையில் ஈடுபட்டதால் தான் பாடல்களில் இத்துணைப் பாடபேதங்களும் இடைச் செருகல்களும் எளிதாகப் புகுந்துவிட்டன.

இத்தனை இடையூறுகளையும் அறிந்திருந்தும் மிக்க துணிவோடு இப்பதிப்பை மேற்கொண்டு ஒவ்வொரு சீருக்கும் ஒவ்வொரு அடிக்கும் ஒவ்வொரு சொல்லுக்கும் அத்தனை ஏடுகளையும் பரிசோதித்துத் தக்க பாடத்தைத் தேர்ந்தெடுத்துப் பதிப்பித்த டாக்டர் அண்ணாமலையின் அசுர சாதனைக்கு நான் தலைவணங்குகிறேன்.

ஒவ்வொரு பாடலுக்கும் புரிந்து கொள்ளும் முறையில் எளிதாகக் கருத்து எழுதிச் சேர்த்துள்ளமை நம் போன்றவர்க்குப் பேருதவியாக இருக்கும்.

இம் முதலாயிரத்தை அடுத்து இன்னும் இரண்டு பகுதிகள் வெளிவருகின்றன. அவற்றிலும் டாக்டர் அண்ணாமலையின் சீரிய உழைப்பையும் நுண்மாண் நுழை புலத்தையும் காண முடியும். இந்த மாபெரும் தொண்டைச் செய்த டாக்டர் அண்ணாமலைக்கு என்னுடைய வாழ்த்துக்கள் உரியனவாகும்.

19, டாக்டர் நடேசன் ரோடு,

அசோக்நகர், சென்னை - 600 083.

15-1-97

உ

சிவமயம்

ஆய்வு முன்னுரை

திருமந்திரச் சிறப்பு:

சைவத் திருமுறை பன்னிரண்டனுள் பத்தாவதாகிய திருமந்திரத்திற்கு ஓர் ஆராய்ச்சிப் பதிப்பு இப்பொழுது வெளியிடப் பெறுகின்றது. இந்நூல் பலவகையிலும் சிறப்புடையது. இந் நூலை அருளிய திருமூலர் அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர். சுந்தர மூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையில், "நம்பிரான் திருமூலன்" எனக் குறிப்பிட்டு வணங்கும் சிறப்புடையவர். தாயுமானவர் "சக்கரவர்த்தி தவராச யோகியெனும் மிக்க திருமூலனருள் மேவு நாள் எந்நாளோ?"[1] என்று திருமூலரது யோகநெறியின் உயர்வைப் பாடுகின்றார். இரு பேராறுகள் கலப்பதே போல், தமிழ்நெறியும் வைதிக நெறியும் கலந்து அமைந்திட, சைவ சமயம் ஒரு பெருஞ்சமயமாக உருவாகிய காலத்தில், அவ்வுருவாக்கத்திற்குத் திருமூலர் தமது பணியினை ஆற்றிச் சைவநெறிக்குச் சாத்திரமும் தோத்திரமுமாக அமையும் முதல் நூலை ஆக்கினார். வைதீக நெறியினர் இந்திரன், பிரமன் முதலிய கடவுளரை விடுத்துச் சிவபெருமானைப் பரம்பொருளாக ஏற்றுக் கொண்டமைக்குத் தமது நூலில், வேத, புராண, உபநிடத நூற்சான்றுகள் காட்டுகின்றார்.

தமிழ் நெறியைத் தழுவி வடமொழியில் எழுதப்பட்ட ஆகமங்களை ஒப்பத் தமிழில் முதல் ஆகமமாகத் தமது நூலை அமைத்தார். இதனைத் "தண்ணிலவார் சடையார்தாம் தந்த ஆகமப் பொருளை மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ் வகுப்ப" என்பர் சேக்கிழார்[2]. ஆகமம் என்ற வடசொல்லுக்குத் 'தொன்று தொட்டு வரும் மரபின் வழி வருவது' என்று பொருள். அப்பொருளுக்கு ஏற்பத் தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு வரும் நெறியாகிய அன்பு நெறியின் மரபில், இறையன்பின் வெளிப்பாடாக, ஆடல்பாடல் நெறி திருமூலர் காலத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு படிநிலைக் கூறுபாடுகளை உடையதாக வளர்ந்திருந்தது. சைவ ஆகமங்கள் இந்நான்கையும் பாதங்களாகக் (பிரிவுகள்) கொண்டு சைவ நெறியை விளக்குவன என்பர். திருமூலர் தமது ஆகம நூலில் யோக பாதத்தை விரிவாகவும் ஏனைய மூன்றையும் பண்டைத் தமிழ்நெறியைத் தழுவிச் சுருக்கமாகவும் கூறுகின்றார். யோகத்திற்கும் அன்பு நெறியே அடிப்படை என்று வலியுறுத்துகின்றார்.

திருமந்திரம் சிவயோகம் பற்றித் தோன்றிய முதற்பெரு நூலாகும். யோகியரைச்

1. *தாயுமான. எந்நாட்கண்ணி :* 3 : 7

2. *பெ. புரா. : திருமூல :* 23

சித்தர் எனத் திருமூலர் வழங்குவர் ஆதலின், அவர் தமிழகத்தின் முதற் சித்தர் ஆவார். பிற்காலத்தில் ஒரு சித்தர் மரபு தோன்றிக் கிளைபிரிந்து வளர்வதற்கு அவர் வித்தூன்றினார். அவரது சிவயோகமுறை ஒரு புது உண்மையைத் தோற்றுவித்தது. அழியும் தன்மையதாகிய உடம்பை யோக சாதனையால் அழியாமல் நிலை நிறுத்தலாம் – இறவாமை பெறலாம் என்பதைத் திருமூலர் முதன்முதலாகக் கூறி நிலை நாட்டினார்.

திருமந்திரப் பதிப்புகள்:

இத்தகைய பல சிறப்புக்களை உடைய திருமந்திரத்திற்குப் பல பதிப்புகள் வெளிவந்துள்ளன. அவை,

1. திருமந்திரம் மூவாயிரம் – கொ. சண்முகசுந்தர முதலியார், 1887. இதில் சிறப்புப்பாயிரம் உட்பட 235 – இயல்கட்கு 3083 பாடல்கள் உள்ளன.
2. திருமந்திரம் – திரு. வி. கலியாணசுந்தரனார் பார்வை, 1909. 3083 பாடல்கள்.
3. திருமந்திரம் – திருவாவடுதுறைச் சுப்பிரமணியத் தம்பிரான் பதிப்பு, 1897. இயல் 234க்கு 3083 பாடல்கள்.
4. மாவை. வே. விசுவநாதப் பிள்ளை பதிப்பு, 1912 – 3048 பாடல்கள்
5. திருமந்திரம் – வி.உலகநாத முதலியார் – விவேக போதினி, மைலாப்பூர், சென்னை.
6. திருமூலர் அருளிய திருமந்திரம் – எஸ். சங்கரலிங்க முதலியார் பார்வை, இரத்தின நாயக்கர் சன்ஸ். சென்னை. 1934. பாடல்கள் 3083.
7. திருமூலநாயனார் திருவாய் மலர்ந்து அருளிய திருமந்திரம் – பதிப்பாசிரியர், பதிப்பு, பதிப்பித்த ஆண்டு ஆகியன பற்றித் தெரியவில்லை
8. திருமந்திரம் – சைவசித்தாந்த மகா சமாஜம் – எஸ். வையாபுரிப் பிள்ளை பதிப்பு[1], 1940. 3047 பாடல்கள்.
9. திருமந்திரம் மூவாயிரம் – துடிசை கிழார் அ. சிதம்பரனார். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1942 – 3000 பாடல்கள்.
10. திருமூலர் திருமந்திரம், ஸ்ரீபஞ்சாட்சர தீபம் என்ற உரையுடன் – திருவாவடுதுறை ஆதீனம், 1957. 3046 பாடல்கள்
11. திருமந்திர மாலை எனப்பெயர் பெற்ற திருமந்திரம் – ஸ்ரீகாசிமடம், டி.எம். குமரகுருபரன்பிள்ளை, 1956. 3047 பாடல்கள்
12. திருமந்திர மாலையாகிய திருமந்திரம். 3 பகுதிகள் – சி. அருணை வடிவேல் முதலியார், தருமபுர ஆதீனம், 1974, 3000 பாடல்கள்.

1 *இப்பதிப்புப் பாட வேறுபாடுகளை அடிக்குறிப்பிற் கொண்டுள்ளது.*

13. திருமந்திரம் முதல்மூன்று தந்திரங்கள் – ஜி. வரதராசன் உரையுடன், 1971.

14. திருமந்திரம் 4, 5, 6 – ஆம் தந்திரங்கள் – ஜி. வரதராசன் – பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1983.

15. திருமந்திரம் 7, 8, 9 – ஆம் தந்திரங்கள் – ஜி. வரதராசன் – 1985. இவை மூன்றும் மொத்தம் 3047 பாடல்கள் கொண்டவை)

16. திருமந்திர மாநாட்டு மலர், கன்னடியத் திருமேனி கம்பளிச்சட்டை கைலாயச் சித்தர் உரை – திருவாவடுதுறை ஆதீனம். 1954.

17. TIRUMANTIRAM - With English Translation, SRI RAMAKRISHNA MATH, MADRAS, 1991.

என்பனவாகும். மற்றும் சில பதிப்புகள் இப்பொழுதைய பதிப்பாசிரியர் பார்வைக்கு வராமல் போயிருக்கலாம்.

பாடல் தொகை

மேற்கண்ட பதிப்புகளுள், முன்னர் வந்தவற்றில், முறையே, 3083, 3048, 3047 என்ற மொத்த எண்ணிக்கை உடைய பாடல்கள் காணப்படுகின்றன, அவற்றுள், சைவசித்தாந்த மகா சமாஜப் பதிப்பிலும், சைவசித்தாந்தக் கழகப் பதிப்பிலும், அவற்றிற்கு முன்னைய பதிப்புகளில், ஒரே பாடல் இரண்டு முறை வந்தனவாகச் சில இடங்களைக் குறித்துள்ளனர்.

சைவசித்தாந்த மகா சமாஜப் பதிப்பில், உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுப் திருமந்திரப் பதிப்புகளில் காணப்படாத பாடல்கள் தனியாகத் தரப்பட்டுள்ளன.

மேற்போந்த செய்திகளாலும், 'திருமந்திரம் 3000', 'தமிழ் மூவாயிரம்' என இந்நூலின் பெயர் வழங்குதலாலும், இவற்றுள் இரண்டாவது பெயரை, "முன்னிய அப்பொருள் மாலைத்தமிழ் மூவாயிரம் சாத்தி" எனச் சேக்கிழார் மொழிதலானும் திருமந்திரப் பாடல் தொகை எத்துணை என ஐயம் நிகழ்கின்றது. திருமந்திரப் பாயிரத்துள் "மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்" என வரும் பாடல் பிற்காலத்தார் வாக்காயினும், திருமந்திரப் பாடல் தொகையினை உறுதி செய்தற்குச் சான்றாக அமையும். ஆகவே, பதிப்புகளில் முறையே 83, 48, 47 என்ற எண்ணிக்கையில் பிற்காலத்தார் சேர்த்த பாடல்கள் உள்ளமை உறுதியாகிறது. அவை, எவையெனக் கண்டறியப்படவில்லை. ஆதலின் அவற்றைக் கண்டறிந்து, தனியே காட்ட வேண்டும் என்ற இன்றியமையாமை இவ்வாய்வுப் பதிப்புக்குத் தூண்டுகோலாக அமைந்தது.

மூலபாடத்தின் நிலை:

திருமந்திரப் பாடல்களின் மூலபாடம் மேற்காட்டிய பதிப்புகள் தோறும் வேறுபடுகின்றது. அப்பதிப்புகளுள் சைவசித்தாந்த மகா சமாஜப் பதிப்பு மட்டுமே, பாடல்தோறும் பாடபேதங்களைக் குறிக்கின்றது. மாவை. வே. விசுவநாதப் பிள்ளை பதிப்பில் மிகச்சில விடங்களில் பாடவேறுபாடு காட்டப்படுகின்றது. திருவாவடுதுறை ஆதீனப் (தண்டபாணிதேசிகர் உரை) பதிப்பில், உரையின் போக்கில், சிலவிடங்களில் பாடவேறுபாடு காட்டப்படுகிறது. தருமபுர ஆதீனப்பதிப்பில், அதன் ஆசிரியர் தமது பதிப்பு முன்னுரையில், திருமந்திரத்தின் மூலம் தக்க வகையில் சைவர்களால் பாதுகாக்கப்படவில்லை என்ற குறையைக் குறிப்பிட்டு, பாடத்திரிபும், இடைச்செருகலும் இந்நூலுள் மிகுதியாக உள்ளன என்று எழுதுகிறார். ஆயினும், தமது பதிப்பிற்குத் திருமந்திரச் சுவடி,கையெழுத்துப் படி எதனையும் ஒப்புநோக்கியதாகக் குறிப்பிடவில்லை. எனினும், அவர் தமது உரையின் போக்கில் பல பாடல்களில், பாடம் பொருந்தாது என்றும், பாடமன்று என்றும் சுட்டிக்காட்டி, தாம் பொருந்தும் என எண்ணியவாறு பாடங்களைத் திருத்தியுள்ளார். இது மூலபாட ஆய்வியல் முறையினை அறிந்தவர்க்கு வியப்பைத் தருவதாகும்.

திருமந்திர நூலுக்கு மூலபாடம் செம்மையாக வெளிவருவதற்கு, இப்போது கிடைக்கக்கூடிய ஏட்டுச்சுவடிகளும், கையெழுத்துப் படிகளும் ஆகிய படிகளை எல்லாம் திரட்டி, இக்கால மூலபாட ஆய்வியல் முறையில் ஆய்வு செய்து, படிகளின் ஆதாரத்துடன் பாடத்தைச் செம்மை செய்து, பாடவேறுபாட்டுடன் வெளியிட வேண்டும் என்னும் அவாவும் இப்பொழுதைய பதிப்புக்குச் சிறப்புத் தூண்டுகோலாயிற்று.

இப்பொழுதைய பதிப்பிற்குக் கிடைத்த சுவடிகளின் வரலாறு

பதிப்பாசிரியர் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தொகுக்கப்பட்டுள்ள 'ஏட்டுச் சுவடிகள் விவரணப்பட்டியலைப்' பார்த்து, அதில் உள்ள விவரப்படி, சென்னை, கீழ்த்திசைச் சுவடிகள் காப்பகம், திருவாவடுதுறை ஆதீனம், சென்னை டாக்டர் உ.வே.சாமிநாதஐயர் நூலகம், தஞ்சைச் சரஸ்வதி மகால் நூலகம், புதுச்சேரி பிரெஞ்சு – இந்தியக் கழகம், திருவனந்தபுரம் கீழ்த்திசைச் சுவடிகள் காப்பகம், விருதுநகர் வன்னியப் பெருமாள் மகளிர் கல்லூரி, துறையூர் சிவப்பிரகாச சுவாமிகள் பெரியமடம், தருமபுர ஆதீனம் ஆகிய இடங்களில் உள்ள திருமந்திர ஏட்டுச் சுவடிகள், ஒரு கையெழுத்துப் பிரதி – ஆக 15 பழைய திருமந்திரப் படிகளை, அந்தந்த ஊர்கட்கே சென்று, நிழற்படப்படி எடுத்து வந்தார். அவற்றை ஆராய்ந்து, அவற்றைப் பற்றிய விவரங்களைத் தொகுத்தார். அவை வருமாறு:–

கிடைத்த சுவடிகள் பற்றிய விவரங்கள்:– (வசதிக்காகச் சுவடிகளுக்கு, அ, ஆ, இ – முதலியனவாகக் குறியீடுகள் (Codes) கொடுக்கப்பட்டுள்ளன. இக்குறியீடுகள் இப்பதிப்பில் பாடவேறுபாடு காட்டும் இடந்தோறும் இன்ன சுவடிப் பாடம் என்பதைக் காட்டப் பயன்படுத்தப்படும்.

சுவடி - அ

சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் காப்பகத்தில் உள்ளது. சுவடியில் உள்ள ஏடுகளின் எண்ணிக்கை : 122, ஏட்டின் நீளம் : 26 செ.மீ. அகலம் : 3.5 செ.மீ. ஏட்டின் இரு புறமும் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. எழுதப்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை : 2754 (நூலின் பாடல்கள் 3000. ஆனால் இச்சுவடியில், மற்ற பாடல்கள் காணப்படவில்லை)

ஏடுகளின் இடப்பக்கத்து வெற்றிடத்தில், கீழே ஏட்டின் வரிசை எண் தரப்பட்டுள்ளது. இயலின் பெயர் இங்குத் தரப்பட்டுள்ளது. சில விடங்களில் ஒவ்வோர் இயல் முடியும் போதும், அதன் பெயர் எழுதி, 'மற்றும்' என்ற குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

ஒவ்வோர் இயலின் பாடல்களுக்கும் தனி வரிசை எண்ணும், மொத்தப் பாடல் எண்ணும் தரப்பட்டுள்ளன. இந்த மொத்தப் பாடல் எண் இயல் தோறும் கூடுதல் தொகையாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

நூலின் பெயர் 'திருமந்திரம்' எனத் தொடக்கத்தில் எழுதப்பெற்றுள்ளது.

இதில் 'உபதேசம்' என்ற இயலும், பாயிரம் என்ற குறிப்பும், தந்திரப் பிரிவும் இல்லை.

சுவடி 'ஆ'

திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ளது. சுவடியில் உள்ள ஏடுகளின் எண்ணிக்கை: 206. ஏட்டின் நீளம் : 30 செ.மீ அகலம் : 4 செ.மீ. ஏட்டின் இரு புறமும் பாடல்கள் எழுதப்பெற்றுள்ளன. எழுதப்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை: 3002 (நூலின் பாடல்களை விடக் கூடுதலாக 2 பாடல்கள் சுவடியில் உள்ளன).

சுவடியின் இறுதியில், ஏட்டின் இடப்பக்கத்தில், துகை. வாழி. சிவயோகி தன்மை என்று உள. 'வாழிக்குப்' பின் 3 பாடல்கள் உள்ளன. பிறகு, "ஆக மூன்றாவது தொகுதி முற்று. ஆக தொகுதி மூன்றுக்கு 3002 திருமந்திரம் முற்றும். 1021 ஸ்ரீ பங்குனி மீ 16 எழுதி முடிந்தது" – என்று எழுதப்பெற்றுள்ளது.

ஏடுகளின் இடப்பக்கத்தில் கீழே, ஏடுகளின் வரிசை எண் தரப்பட்டுள்ளது. அங்கு இயலின் பெயர் தரப்பட்டுள்ளது. ஒவ்வோர் இயல் முடிவிலும், இன்ன இயல் முற்றும் என்ற குறிப்பு உள்ளது. இயல் தோறும் பாடல்களுக்குத் தனி வரிசை எண்ணும், அதுவரை எழுதப்பட்ட பாடல்களின் மொத்த எண்ணிக்கையும் தரப்பட்டுள்ளன. இந்த முறை இறுதிவரை பின்பற்றப்படவில்லை.

நூலின் பெயர் 'திருமந்திரம்' எனத் தொடக்கத்திலும், இறுதியிலும் எழுதப்பட்டுள்ளது.

பின்னிணைப்பாக, இயல் வரிசையும் அவற்றில் தனித்தனி உள்ள பாடல் எண்ணிக்கையும் தரப்பட்டுள்ளன. ஆனால் இப்பகுதி முழுமையாக இல்லை.

சுவடி - இ

இதுவும் திருவாவடுதுறையில் உள்ளது. இது 'சுவடி 'ஆ' வின் பிரதி அன்று. சுவடியில் உள்ள ஏடுகளின் எண்ணிக்கை 179, ஏட்டின் நீளம் : 15.5. செ.மீ. அகலம் : 4 செ.மீ. ஏட்டின் இருபுறமும் பாடல்கள் எழுதப்பெற்றுள்ளன. எழுதப் பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை: 3040 (40 பாடல்கள் கூடுதலாக உள்ளன). ஏட்டின் இடப்பக்கத்து வெற்றிடத்தில் ஏட்டின் வரிசை எண், இயலின் பெயர் ஆகியவை எழுதப்பட்டுள்ளன. இயல் தோறும் பாடல்களுக்குத் தனி வரிசை எண்ணும், அதுவரை எழுதப்பெற்ற பாடல்களின் மொத்த எண்ணிக்கையும் தரப்பட்டுள்ளன. இன்ன இயல் முற்றும், இன்ன இயல் தொடங்கும் என்ற குறிப்புச் சுவடி முழுவதும் காணப்படுகின்றது.

நூலின் பெயர், 'திருமந்திர மாலை' எனத் தொடக்கத்திலும் இறுதியிலும் எழுதப்பட்டுள்ளது.

'உபதேசம்' என்ற இயல் 30 பாடல்கள் கொண்டதாக உள்ளது. தந்திரப் பிரிவுகள் இல்லை. பாயிரம் என்ற குறிப்பு இல்லை.

சுவடி ஈ

இதுவும் திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ளது. ஆயின், முன்னைய இரண்டின் பிரதியன்று. சுவடியில் உள்ள ஏடுகளின் எண்ணிக்கை 118. ஏட்டின் நீளம்: 32 செ.மீ. அகலம்: 3 செ.மீ. ஏடுகளின் இருபுறமும் பாடல்கள் எழுதப்பெற்றுள்ளன. எழுதப் பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை: 2876. சுவடி முழுதும் பாடல்களுக்குத் தொடர் எண் தரப்பட்டுள்ளது. ஏட்டின் இடப் பக்கத்திலும் ஒவ்வொரு இயலின் தொடக்கத்திலும் இயலின் பெயர் தரப்பட்டுள்ளது. 'உபதேசம்' என்ற பகுதி இருக்கிறது. சுவடியின் இடையிலும் இறுதியிலும் சில ஏடுகள் காணப்படவில்லை.

சுவடி 'உ'[1]

இதுவும் திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ளது. ஆனால் முன்னையவற்றின் பிரதியன்று. சுவடியில் உள்ள ஏடுகளின் எண்ணிக்கை: 137. ஏட்டின் நீளம்: 25 செ.மீ. அகலம்: 3.5 செ.மீ ஏட்டின் இருபுறமும் பாடல்கள் எழுதப்பெற்றுள்ளன. எழுதப் பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை: 1669. ஏட்டின் இடப்பக்கம் கீழே ஏட்டின் வரிசை எண்ணும் இயலின் பெயரும் தரப்பெற்றுள்ளன. இயல் ஒவ்வொன்றின் முடிவிலும் அதுவரை எழுதப்பட்ட பாடல்களின் மொத்த எண்ணிக்கை தரப்பட்டுள்ளது.

நூலின் பெயர் தொடக்கத்தில், 'திருமந்திரம்' என உள்ளது. 'உபதேசம்' என்ற பகுதி, 'பாயிரம்' என்ற குறிப்பு, 'தந்திரப் பிரிவுகள்' ஆகியவை இல்லை.

1. *இச்சுவடிகள் நான்கையும் அன்போடு உதவிய திருவாவடுதுறை ஆதீனத்து 23 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாசதேசிக சுவாமிகட்கு நன்றி.*

சுவடி 'ஊ'

புதுச்சேரிப் பிரெஞ்சு – இந்தியக் கழகத்தில் உள்ளது. சுவடியில் உள்ள ஏடுகளின் எண்ணிக்கை : 78. ஏட்டின் நீளம் : 27 செ.மீ. அகலம் : 3.5 செ.மீ. எழுதப்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை : 770. ஏட்டின் இடப்பக்கம் கீழே, ஏட்டின் வரிசை எண் உள்ளது. இயலின் பெயர் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வோர் இயலின் இறுதியிலும் அதன் பெயர், முற்றும் என்ற குறிப்புடன் தரப்பட்டுள்ளது. இயல் தோறும் பாடல் வரிசை எண்ணும், ஒவ்வோர் இயல் முடிவிலும் அதுவரை எழுதப்பட்ட பாடல்களின் மொத்த எண்ணிக்கையும் தரப்பட்டுள்ளன. 'பாயிரம்' என்ற குறிப்பு இல்லை. 'உபதேசம்' என்ற பகுதி இல்லை.

சுவடி 'எ'

இதுவும் புதுச்சேரிப் பிரெஞ்சு – இந்தியக் கழகத்தில் உள்ளது. சுவடியில் உள்ள ஏடுகளின் எண்ணிக்கை : 214. ஏட்டின் நீளம் : 32.5 செ.மீ. அகலம் : 3 செ.மீ. ஏடுகளின் இரு புறமும் பாடல்கள் எழுதப் பெற்றுள்ளன. எழுதப்பட்டுள்ள பாடல்களின் எண்ணிக்கை : 1345. ஏட்டின் கீழே இடப்பக்கம் ஏட்டின் வரிசை எண் உள்ளது. இயல் தோறும் பாடல் வரிசை எண் தனித்தனியாகத் தரப்பட்டுள்ளது. இயல்களின் முடிவில் அதுவரை எழுதப்பட்ட பாடல்களின் மொத்த எண்ணிக்கை தரப்பட்டுள்ளது.

தந்திரப் பிரிவுகள் உள்ளன. தொடக்கத்தில் சில தந்திரங்களின் வரிசைப் பெயர் இடப்பக்கம் தரப்பட்டுள்ளது. 2 ஆம் தந்திர முடிவிலும் 3 ஆம் தந்திர முடிவிலும் இயல் தொகையும் அதுவரை எழுதப்பட்ட பாடல்களின் மொத்தப் பாடல் தொகையும் தரப்பட்டுள்ளன.

முதல் தந்திரம்	–	336 பாடல்கள்
இரண்டாம் தந்திரம்	–	212 பாடல்கள்
மூன்றாம் தந்திரம்	–	335 பாடல்கள்
நான்காம் தந்திரம்	–	462 பாடல்கள்

பாடல்கள் ஒரடிக்குக் கீழ் ஒரடியாக எழுதப்பட்டுள்ளன. 'ஈ' என்ற உயிரெழுத்து இவ்வடிவுடனே எழுதப்பட்டுள்ளது. மெய்யெழுத்துக்கள் புள்ளி பெற்றுள்ளன. ரகர உயிர்மெய் (ர) போல அன்றிப் பாதம் நீட்டப் பெற்றிருக்கின்றது. இவை பிற்காலச் சுவடியின் அடையாளங்கள்.

'ஐந்து கரத்தனை' என்ற பாடலுக்கு 'விநாயகர் காப்பு' என்ற தலைப்பு இடப்பட்டுள்ளது. அடுத்து, 'போற்றிசைத் தின்னுயிர்' என்ற பாடலுடன் தொடங்கும் பகுதி, 'சிறப்புப் பாயிரம்' என இடப்பக்கத்தில் தலைப்புப் பெற்றுள்ளது. உபதேசம் என்ற பகுதி இருக்கிறது.

நூற்பெயர் 'திருமந்திரம்' எனத் தொடக்கத்தில் உள்ளது.

சுவடி - 'ஏ'

தஞ்சைச் சரஸ்வதி மகாலில் உள்ளது. இதில் உள்ள பாடல்கள் தேர்ந் தெடுக்கப்பட்டவை. ஏட்டின் நீளம்: 34.5 செ.மீ. அகலம் : 3 செ. மீ. சுவடியில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை: 111. "தொடர்ந்து நின்றானை" என்பது முதலாக உள்ள 5 பாடல்களைக் 'கடவுள் வாழ்த்து' எனக் குறிப்பிடுகிறது.

சுவடி - 'ஐ' [1]

சென்னை டாக்டர் உ.வே. சாமிநாதஐயர் நூலகத்தில் உள்ளது. ஏடுகளின் எண்ணிக்கை: 238. ஏட்டின் நீளம் : 21.5 செ.மீ. அகலம் : 4 செ.மீ. ஏடுகளின் இருபுறமும் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. எழுதப்பட்டுள்ள பாடல்களின் எண்ணிக்கை 2855. ஏட்டின் இடப்பக்கம் ஏட்டின் வரிசை எண்ணும் இயலின் பெயரும் உள்ளன. இயல் தோறும், முடிவில் அதன் பெயர் 'முற்றும்' என்ற குறிப்புடன் தரப்பட்டுள்ளது. இயல் தோறும் பாடல் வரிசை எண்ணும், இயல் முடிவில் அதுவரை எழுதப்பட்டட பாடல்களின் மொத்த எண்ணிக்கையும் தரப்பட்டுள்ளன.

நூலின் பெயர் தொடக்கத்தில் 'திருமந்திரம்' எனக் குறிக்கப்பட்டுள்ளது.

சுவடி - ஒ[2]

துறையூர் சிவப்பிரகாச சுவாமிகள் பெரிய மடத்தில் உள்ளது. சுவடியில் உள்ள ஏடுகளின் எண்ணிக்கை : 283 ஏட்டின் நீளம்: 28 செ.மீ. அகலம் : 3 செ.மீ. ஏடுகளின் இருபக்கமும் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. எழுதப்பட்டுள்ள பாடல்களின் எண்ணிக்கை : 2965.

நூலின் பெயர் தொடக்கத்தில், 'திருமந்திரமாலை' என்று முதல் ஏட்டிலும், "திருமந்திர வேதம்" என்று அடுத்த ஏட்டிலும் எழுதப்பெற்றுள்ளது. இந்த இரண்டு ஏடுகளிலும் ஏட்டு வரிசை எண் இல்லை; பிற ஏடுகளில், இடப்பக்கம் ஏட்டின் வரிசை எண் உள்ளது. இயலின் பெயரும் தரப்பெற்றுள்ளது. இயல் தோறும் பாடல் வரிசை எண்ணும் இயல் முடிவில், அதுவரை எழுதப்பெற்ற பாடல்களின் எண்ணிக்கையும் தரப்பட்டுள்ளன. பாயிரம் என்ற குறிப்பு இல்லை, 'உபதேசம்" என்ற பகுதி இல்லை. தந்திரப் பிரிவுகள் இல்லை.

1. இச்சுவடியை அன்புடன் உதவிய திரு.க. சுப்பிரமணிய் ஐயரவர்கட்கு (டாக்டர் ஐயரவர்களின் பேரர்) நன்றி, நூலகர் வித்வான் எஸ். பாலசாரநாதன் அவர்கட்கு நன்றி. படிஎடுக்க உதவிய எஸ். சாயிராமனுக்கு நன்றி.

2. இச்சுவடியை அன்புடன் உதவிய துறையூர்ப் பெரியமடத்து ஆதீனகர்த்தர் ஸ்ரீசிவப்பிரகாச சுவாமிகட்கு நன்றி. படியெடுக்க உதவிய திரு. இரத்தினவேலாயுதம் அவர்கட்கு நன்றி.

சுவடி - ஓ[1]

தருமபுர ஆதீனத்தில் உள்ள சுவடி. சுவடியில் உள்ள ஏடுகளின் எண்ணிக்கை : 270. ஏட்டின் நீளம் : 25.5 செ.மீ. அகலம் : 2.5 செ.மீ ஏடுகளின் இரு புறமும் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. தந்திரப் பிரிவுகள் உள்ளன.

சிறப்புப்பாயிரம் என்ற பிரிவு உள்ளது. முதல் இயல் “கடவுள் வாழ்த்து”. பிற இயல்களின் பெயர்கள் ஏட்டின் இடப்பக்கம் வெற்றிடத்தில் எழுதப்பட்டுள்ளன. இயல் முடிவில் அதன் பெயர் இல்லை. அதிகாரம் தோறும் பாடல் வரிசை எண் உள்ளது. அதுவரை எழுதப்பட்ட பாடல்களின் மொத்த எண்ணிக்கை தரப்படுகிறது.

“உபதேசம்” என்ற பகுதி உள்ளது. பின்னிணைப்பாக இயல்களின் பட்டியலும் இயல்தோறும் உள்ள பாடல் எண்ணிக்கையும் உள்ளன. இங்குப் பாடல்களின் மொத்த எண்ணிக்கை 3000 என்று குறிக்கப்பட்டுள்ளது. பின்வரும் விவரம் உள்ளது.

பாயிரம்: அதிகாரம் 9 பாடல் 112

முதல் தந்திரம்	அதிகாரம் 23	பாடல் 223
2–ஆம் தந்திரம்	அதிகாரம் 25	பாடல் 210
3–ஆம் தந்திரம்	அதிகாரம் 21	பாடல் 329
4–ஆம் தந்திரம்	அதிகாரம் 12	பாடல் 535
5–ஆம் தந்திரம்	அதிகாரம் 23	பாடல் 156
6–ஆம் தந்திரம்	அதிகாரம் 14	பாடல் 156
7–ஆம் தந்திரம்	அதிகாரம் 38	பாடல் 156
8–ஆம் தந்திரம்	அதிகாரம் 38	பாடல் 540
9–ஆம் தந்திரம்	அதிகாரம் 22	பாடல் 390
		மொத்தம் 3040[2]

சுவடி - ஔ

திருவனந்தபுரம் கீழ்த்திசைச் சுவடிகள் காப்பகத்தில் உள்ளது. சுவடியில் உள்ள ஏடுகள் 6. ஏட்டின் நீளம் : 25 செ.மீ. அகலம் : 5 செ.மீ. ஏட்டின் இருபுறமும் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 116 பாடல்கள் உள்ளன.

1. *இச்சுவடியை உதவிய தருமபுர ஆதீன 26வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக சுவாமிகட்கு நன்றி.*

2. *இக் கூட்டுத்தொகை தவறாக உள்ளது.*

சுவடி - க

திருவனந்தபுரம் கீழ்த்திசைச் சுவடிகள் காப்பகத்தில் உள்ளது. நூலின் பெயர்: “திருமந்திரம் தெரிவு முப்பது”. ஏட்டின் நீளம் 23.5 செ.மீ. அகலம்: 2.5 செ.மீ. இதில் ‘உபதேசம்’ என்ற பகுதியின் முப்பது பாடல்களும் உள்ளன.

சுவடி - கா

தருமபுரம் திருமந்திரம் பிரதியுடன் இணைந்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட சில பாடல்களுக்கு விளக்கம் உள்ளது. நூலின் பெயர்: ‘கட்டளைத் திருமந்திரம்’.

சுவடி - மு

சென்னை டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகத்தில் உள்ளது. கையெழுத்துத் தாட் பிரதி. இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 227 பாடல்கள் உரையுடன் உள்ளன. உரையாசிரியர் பெயர் குறிக்கப்படவில்லை. இதில் உள்ள பாடம், பிற சுவடிகளின் பாடத்தினின்றும் மிகப் பெரிதும் வேறுபடுகின்றது.

சுவடி - பா 1

பாரீஸ் நகரத்து Biblotheque National நூலகத்திலிருந்து இப்பதிப்பின் ஆசிரியர் பெற்ற சுவடி. தொடக்கம் முதல் 200 பாடல்கள் கொண்டது.

சுவடி - பா 2

மேற்படி நூலகத்தில் இருந்து பெற்ற சுவடி தேர்ந்தெடுக்கப்பட்ட 164 பாடல்களை உடையது ‘திருமந்திர மாலை’ எனப் பெயரிடப்பட்டது.

சுவடி - பா 3

மேற்குறித்த நூலகத்துச் சுவடி ‘திருமந்திரத் திரட்டு’ என்னும் பெயர் உடையது[1]. தொடக்கம் முதல் 510 பாடல்ளை உடையது.

சுவடி : பா 4

மேற்குறித்த நூலகத்துச் சுவடி. ‘திருமந்திர மாலை’ எனப் பெயரியது[2] தேர்ந்தெடுக்கப்பட்ட 167 பாடல்களை உடையது.

1. *நூலக எண் ; INDIEN No.* 28

2. *நூலக எண் : INDIEN No.* 34

சுவடி : பா 5

மேற்குறித்த நூலகத்துச் சுவடி. 'கடவுள் வாழ்த்து' முதல் 'தக்கன் வேள்வி' வரையுள்ள அதிகாரங்களைக் கொண்டது.

சுவடி: பா 6

மேற்குறித்த நூலகத்துச் சுவடி 'கடவுள் வாழ்த்து' முதல் 'உயிர் நிலையாமை' வரை உள்ள இயல்களைக் கொண்டது.

சுவடி: பா 7

மேற்குறித்த நூலகத்துச் சுவடி[1]. தேர்ந்தெடுக்கப்பட்ட பதினொரு பாடல்களுக்கு உரையுடன் கூடியது. உரையாசிரியரின் பெயர் தெரிந்திலது.

சுவடி: வி 1

விருதுநகர் வன்னியப் பெருமாள் கல்லூரிச் சுவடித்துறையில் உள்ளது. 'உபதேசத் திருமந்திரம்' என்னும் பெயருடையது. தேர்ந்தெடுக்கப்பட்ட 30 பாடல்கள் கொண்டது. (இவை திருமந்திரப் பதிப்புகளில், முதல் தந்திரம், முதல் இயலாக உள்ள 'உபதேசம்' என்னும் பகுதி அன்று; பிற பகுதிகளினின்று தேர்ந்தெடுக்கப்பட்டவை.)

சுவடி: வி 2

மேற்கண்ட கல்லூரிச் சுவடித் துறையில் உள்ளது. "திருமந்திரம்" என்னும் பெயருடையது. 126 பாடல்களை உடையது. இவற்றுள் திருமூலர் திருமந்திரத்தைச் சேர்ந்தன அல்லாத வேறுபாடல்களும் கலந்துள்ளன.

சுவடி - வி 3

மேற்கண்ட கல்லூரிச் சுவடித் துறையில் உள்ளது. "திருமந்திர உரை" என்னும் பெயருடையது. தேர்ந்தெடுக்கப்பட்ட 18 பாடல்களும் அவற்றின் உரையும் உடையது. உரையாசிரியர் பெயர் தெரிந்திலது.[2]

1. *நூலக எண் : எம். எஸ். 40. பாரீசு நகரத்து நூலகத்தில் சுவடிகளைப் பெற்று நிழற்படப்படிகள் எடுத்து அனுப்பியுதவிய திரு. மா. கோபாலகிருஷ்ணன் அவர்கட்கும் பேராசிரியர் திரு. சோசப் முடியப்பநாதன் அவர்கட்கும் நன்றி.*

2. *இச்சுவடிகளை உதவிய விருதுநகர் வன்னியப்பெருமாள் மகளிர் கல்லூரித் தாளாளர் டி. கே. எஸ். பி. அருணாசலம் அவர்கட்கு நன்றி. இச்சுவடிகள் பற்றிய செய்திகள் கூறிய இக்கல்லூரி ஆட்சிக்குழு உறுப்பினர் டி. கே. ஜெகதீசன் அவர்கட்கு நன்றி.*

சுவடி - கீ

சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில், "திருமந்திர ஞான விளக்கம்" என்றொரு சுவடி உள்ளது. அதில் 18 பாடல்கள் உள்ளன. அவற்றுள் 15 பாடல்கள் திருமந்திரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை.

சுவடி - கு

மேற் கண்ட நூலகத்தில், "உண்மைத் திருமந்திரம் தெரிந்த முப்பது" என்றொரு சுவடி உள்ளது. அதில் 30 பாடல்கள் உள்ளன. அவற்றுள் இரண்டு பாடல்களே விசுவநாதப் பிள்ளை பதிப்பில் உள்ளன. அவை திருமந்திரச் சுவடிகளிலும் உள்ளன. இம் முப்பது பாடல்களும் கலிவிருத்த யாப்பில் அமைந்தவை.

மேற்குறிப்பிட்டவாறு கிடைத்த சுவடிகளின் அடிப்படையில் 'திருமந்திர மூல பாட ஆய்வு' நடத்தலாம் என்று தீர்மானம் செய்து, S.M. Katre என்பாரின் "Introduction to Indian Textual criticism"[1] என்ற நூலில் கூறப்படும் மூலபாட ஆய்வு முறைப்படி, இச்சுவடிகளுள் பத்துச் சுவடிகளின் முதல் 200 பாடல்களை ஒப்புநோக்கிய பொழுது, இந்த 10 சுவடிகளும் ஏழு குடும்பங்களாக வகைப்பட்டு அமைந்திருப்பது அறியப்பட்டது. அவ்வாறு அறியப்பட்ட ஆய்வு வருமாறு:

குடும்பங்கள் - சுவடிகள்:

1. சுவடி – அ .. சுவடி – உ
2. சுவடி – ஆ .. சுவடி – ஐ
3. சுவடி – எ .. சுவடி – ஒ
4. சுவடி – இ
5. சுவடி – ஈ
6. சுவடி – ஊ
7. சுவடி – ஒ

பிற சுவடிகளில் பாடல்கள் மிகுதியாக இல்லாமையாலும் அப்பாடல்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவை ஆதலாலும் குடி வழியில் சேர்க்கவில்லை. ஆனால் அவற்றின் பாடல்கள் ஒப்பு நோக்கப்பட்டன.

மேலே காட்டிய குடிவழிகளுள் முதல் மூன்றும் இரண்டு இரண்டு சுவடிகளை உறுப்பாக உடையவை. ஏனைய நான்கும் ஒற்றைச் சுவடிக் குடும்பங்கள். எனவே, பாட

1. *Deccan College, Poona,* 1954.

ஒப்புநோக்கில், முதல் மூன்று குடும்பங்கட்கும் மேலேடுகள் எவ்வாறு இருந்திருக்கும் என்று கண்டு, பிறகு ஒற்றைச் சுவடிகளின் பாடங்களை, அம் மேலேட்டுப் பாடங்களுடன் ஒப்பு நோக்குவது மூலபாட ஆய்வியல் முறையாகும். இவ்வாறு ஒப்பு நோக்கிச் 'சரியான' பாடத்தைத் தேர்வதற்கு உரிய மூலபாட ஆய்வியல் விதிகள் வருமாறு:

1. சுவடிகளின் பாடங்கள் ஒத்திருப்பின் அதுவே தேரப்படும். ஒரு குடிவழிச் சுவடிகளின் பாடம் ஒத்திருப்பின் அவற்றின் மேலேட்டின் பாடமும் அதுவே. ஒவ்வா எனின், அவற்றுள் செவ்விய பாடம் மேலேட்டுப் பாடமாகும்.

2. ஒரு குடிவழியின் ஓர் உறுப்பு – மற்றொரு குடிவழியின் யாதேனும் ஓர் உறுப்புடன் ஒத்திருப்பின் அது தேரப்படும்.

3. பல குடிவழிகள் உள்ளபொழுது இரண்டும், அதற்கு மேற்பட்டவையுமான குடிவழிகளின் மேலேடுகளின் பாடம் ஒத்திருப்பின், அது தேரப்படும்.

4. குடிவழிகள் பாடத்தில் வேறுபடின், படியெடுத்தோர் தற்செயலாகச் செய்த தவறா (Transcriptional Possibility) அல்லது அவர்கள் ஒரு காரணம் பற்றித் திருத்தியதா என்று ஆய்ந்து கண்டு, முதற் பிரிவில் பிழையற்ற பாடத்தைத் தேர வேண்டும். மற்ற பிரிவில், அவர் திருத்திய திருத்தம் எது, ஆசிரியரின் வாக்கு எது என்பதை உள்ளார்ந்த வாய்ப்புகளைக் கொண்டு கண்டறிய வேண்டும். உள்ளார்ந்த வாய்ப்புகள் (Intrinsic Possibility) என்பவை பாடற் பொருள், அதிகாரப் பொருள், நூலின் நோக்கு, யாப்பு, சொல்லிலக்கணம், தொடரிலக்கணம், நூலாசிரியர் காலச் சொல் வழக்கு, அவரது நடை என்பனவாகும். இவ்விரு வகையாலும் பாடம் தேர்தல் 'மீட்டுருவாக்கம்' (Recension) எனப்படும். எந்தக் குடிவழியின் பாடமும் பொருந்த வில்லையெனின், ஏறக்குறைய நூலாசிரியர் கருத்திற்கு ஒத்த பாடத்தை, ஏற்ற வகையில் திருத்துவது மூலபாட ஆய்வாளரால் ஏற்றுக் கொள்ளப்படுவதே.

மேற் காட்டிய விதிகளை மேற்கொண்டு திருமந்திர நூல் முழுதும் இப்பொழுதைய பதிப்பில் பாடத் தேர்வும், மிகச் சில இடங்களில் பாடத் திருத்தமும் பெற்றுள்ளது. பாடத்தேர்விற்கு இங்குச் சில சான்றுகள் காட்டப்படும்.

1. பாடல் எண் 366[1] : "துடுப்பிடு" என்னும் பாடல்:
   2 ஆம் அடி, 3 ஆம் சீர்:
   சுவடி அ: பாடம் : மச்செரி
   சுவடி உ: பாடம் : மஞ்செரி

1. *இவ்வாய்வு முன்னுரையில் குறிப்பிடும் திருமந்திரப் பாட்டெண்கள், இப்பொழுதைய பதிப்பில் உள்ளவை.*

இவை ஒரு குடிவழி ஆயினும் தம்முள் வேறுபடுகின்றன. பிற குடி வழிகளின் மேலேடுகள் ''மஞ்செரி'' என்ற பாடமே உடையன. சுவடி 'உ' வின் பாடம் அவற்றை ஒத்தலின், அதன் குடிவழி மேலேடு கொண்ட பாடமும் அதுவே எனக் கொண்டு அப்பாடம் தேரப்படுகின்றது.

2. பாடல் எண் 449 : ''அன்புறு சிந்தை'' என்னும் பாடல்:
3 ஆம் அடி, 4 ஆம் சீர்:

சுவடி அ.	பாடம்	துடக்கறுத்	மேலேடு : துடக்கறுத்
சுவடி உ.	பாடம்	துடக்கறுத்	
சுவடி எ	பாடம்	துடக்கற்று	மேலேடு : துடக்கற்று
சுவடி ஒ	பாடம்	துடக்கற	
சுவடி ஆ	பாடம்	துடக்கறுத்	மேலேடு : துடக்கறுத்
சுவடி ஐ	பாடம்	துடக்கறுத்	
சுவடி ஊ	பாடம்	துவக்கறு	
சுவடி ஒ	பாடம்	தொடக்கறுத்து	

(1) தொடக்கு என்பதே சொல்லின் வடிவம் ஆதலின் ஒ– சுவடி போல, எல்லாக் குடி வழியிலும் தொகரமே முதல் எழுத்தாக இருந்திருக்க வேண்டும். அது துகரமாக எழுதப்பட்டமை, படி எடுத்தோரின் தற்செயலான தவறு.

(2) 'தொடக்கறுத்து' என்ற பாடம் இரண்டுக்கு மேற்பட்ட மேலேடுகளில் உள்ளமையால் அது தேரப்படுகின்றது.

3) பாடல் எண் 687: ''காலோடுயிரும்'' என்னும் பாடல் :
4 ஆம் அடி, 2 ஆம் சீர்:

சுவடி அ	பாடம்	யெண்மண்டி	மேலேடு: யெண்மண்டி
சுவடி உ	பாடம்	யென்மண்டி	
சுவடி ஆ	பாடம்	வெண்மடி	மேலேடு : வெண்மடி
சுவடி ஐ	பாடம்	வெண்மடி	
சுவடி எ	பாடம்	பெண் மண்டிக்	மேலேடு வெண்மண்டிக்
சுவடி ஒ	பாடம்	வெண் மண்டிக்	
சுவடி இ	பாடம்	வேண்டிக்	

சுவடி ஈ பாடம் வேண்டிக்

சுவடி ஊ பாடம் வென் மண்டி

சுவடி ஒ பாடம். வெண் மண்டி

மேலேடுகளை ஒப்பு நோக்குமிடத்து, 'வெண்மண்டி' என்பது இரண்டு குடிவழியில் உள்ளமையின், சரியான பாடம் எனத் தோன்றினாலும், ஈண்டு "காலது எண் மண்டிக் கொண்ட இப்போதே" என நின்று, 'பிராண வாயு எண்ணால் மிகுந்து' எனப் பொருந்தாப் பொருள் தருகின்றது. 'வேண்டிக் கொண்ட' என்பதும் பொருள் வகையாலும் யாப்பிலக்கணம் பற்றியும் பொருந்தாப் பாடம் ஆகும். 'எண் மடி' என்ற பாடம் 'எட்டு முறை' எனப் பொருள்பட்டு ஈண்டுப் பொருந்துகின்றது. இஃது உடம்படுமெய்சேர, 'வெண்மடி' என்றாயிற்று.

4) பாடல் எண் 978 : "எட்டு வரையின்" என்னும் பாடல் :
4 ஆம் அடி, 3 – 4 ஆம் சீர்கள்:

சுவடி அ. பாடம் : செவிசித் தாமே

மேலேடு : செவிசித்தாமே.

சுவடி உ பாடம் : செவிசித் தாந்தமே

சுவடி ஆ பாடம் : செய்விதிற்காமே

மேலேடு : செவ்விதிற்காமே

சுவடி ஐ பாடம் : செவ்விதிற் காமே

சுவடி எ பாடம் : செபி சீக்கிரமே

மேலேடு : செவிசக்கரமே

சுவடி ஒ பாடம் : செவிசக் கரமே

சுவடி இ பாடம் : செவிசிறகாமே

சுவடி ஒ பாடம் : செவி சிறகாமே

மேற்கண்ட ஐந்து மேலேட்டுப் பாடங்களும் படியெடுத்தோரின் தற்செயலான தவறுகள் அற்றவை. ஆசிரியரின் பாடத்தை ஒரு காரணம் பற்றி அவர்கள் திருத்தியமையால் நேர்ந்த வேறுபாடங்கள். உள்ளார்ந்த 'வாய்ப்புகளைக் கொண்ட இவற்றுட் சரியான பாடத்தைத் தேரவேண்டும். சித்தி என்பது ஆசிரியரின் வழக்கேயன்றிச் சித்து என்பதன்று ஆதலின் 'செவி சித்தாமே' என்ற பாடம் சொல் வழக்கால் பொருத்தமின்று. மந்திரம் சித்தியன்று ஆதலின் இது பொருளாலும் பொருத்தமின்று. செவிசிறகாமே என்பது வேற்றுமைத் தொகை. ஆதலின் சகரம் மிக வேண்டும். அன்றிச் 'செபி சிறகு' எனினும், பொருந்தாத் தொடராகும். எஞ்சி நிற்கும் 'செவிசக்கரமே' 'செவ்விதிற் காமே' என்ற இரு பாடங்களும் பொருந்தும் ஆயினும், இப்பகுதியில் மந்திரங்கள் செபித்தலினும் தியானித்தலே யோகச் செயலுக்கு ஏற்றது ஆதலின், 'செவ்விதிற் காமே' என்ற பாடம் தேரப்படுகின்றது.

பாடவேறுபாடு ஆய்ந்து சரியான பாடம் என்று கருதத்தக்க பாடம் இப்பதிப்பில் மூலபாடமாகக் கொடுக்கப்பட்டது. ஏனைய பாடங்கள் அடிக்குறிப்பில் வேறுபாடமாகக் காட்டப்படுகின்றன. அவ்வாறு காட்டப்படும் வேறு பாடம் ஒவ்வொன்றின் இறுதியிலும், அப்பாடம் எச்சுவடியில் உள்ளது என்பது, இவ்வாய்வு முன்னுரையில் சுவடிகளுக்குக் கொடுக்கப்பட்ட குறியீட்டைக் கொண்டு சுட்டப்படுகின்றது. அதனை அடுத்துச் சரியான பாடத்தைத் தேர்ந்தெடுத்தமைக்கான காரணமும் குறியீட்டின் மூலம் சுட்டப்படுகிறது.

பாடத் தேர்விற்கான காரணங்களின் குறியீடுகளும் விளக்கமும்

குறியீடு – **I:** எல்லா வகையிலும், ஒலிப்பு, கேட்புத்தவறுகளால் நிகழ்ந்த பாடவேறுபாடுகளும், பாடல் அடிகளின் முன்னும் பின்னும் உள்ள சொல் ஒற்றுமை, தொடர் ஒற்றுமை, ஒலி ஒற்றுமைகளால் நிகழ்ந்த பாடவேறுபாடுகளும் I என்ற குறியீட்டுடன் சுட்டப்படும். படி எழுதுவோரின் தற்செயலான தவற்றால் நேர்ந்த பிழையான பாடம் – பொருள் பொருத்தமில்லாத ஒரு பாடம் – இக்குறியீடு பெறும். ஒரு பாடம் பெரும்பான்மைபற்றிக் கொள்ளப்பட்டு, வேறு பாடம் பொருள் பொருத்தம் உடையதாக இருப்பினும், அது படி எடுத்தோர் தவற்றினால் நேர்ந்ததாகக் கருதப்பட்டால் இக்குறியீடு இடப்படும். எவ்வகையிலும் பொருள் விளங்காத பாட வேறுபாடுகள் இக்குறியீட்டால் சுட்டப்பெறும். படியெடுப்போர் தற்செயலாகச் செய்த தவற்றினால் நேர்ந்த பாடவேறுபாட்டில் , பிழையற்ற சொல்–ஆனால் அவ்விடத்திற்குப் பொருந்தாத சொல் – வருவதுண்டு. இதுவும் இக்குறியீடு பெறும்.

குறியீடு – **II:** படி எழுதுவோர் ஒரு காரணம் பற்றித் திருத்தியதனால் நேர்ந்த பாட வேறுபாடுகள் பல வகைப்படும். அவற்றை ஆராயும் போது, நூலாசிரியரின் சொல்லாட்சி, நடை, பொருளைச் சொல்லும் முறை, யாப்பு, ஏனைய இலக்கணம், புணர்ச்சிவிதிகள், அதிகாரத்தினுள் பொருள் பொருத்தம், ஆசிரியரின் கருத்து, அவர் கூறும் பொருள் பற்றிய விளக்கமாக இந்நூலிலும் வேறு நூலிலும் காணப்படும் செய்திகள், ஆசிரியர்கள் பயன்படுத்தும் கலைச் சொற்கள், அவர் விளக்கும் பொருளுக்குரிய கலைச்சொற்கள் ஆகிய உள்ளார்ந்த செய்திகள் கருத்தில் கொள்ளப்பட்டன. சரியான பாடம் என்று கருதத்தக்க பாடம் இப்பதிப்பில் மூலபாடமாகக் கொடுக்கப்பட்டது. மற்றயவை அடிக்குறிப்பில் வேறுபாடமாகக் காட்டப்பட்டு, II – என்ற குறியீடு பெறுகின்றன.

குறியீடு – **III:** சரியான பாடமாகக் கருதப்பட்டு இப்பதிப்பில் மூல பாடமாகக் காட்டப்பட்ட ஒரு பாடத்திற்கு இணையான வேறுபாடம் உள்ளதாயின், அது அடிக்குறிப்பில் III என்ற குறியீட்டால் சுட்டப்படுகிறது.

குறியீடு – **IV:** பிழையற்ற பாடங்கள் பலவாக உள்ளபோது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குடிவழிகளின் மேலேடுகள் ஒத்தபாடத்தைக் கொண்டிருந்தால் அப்பாடத்தையே சரியான பாடமாகக் கருதவேண்டும் இதைப் பெரும்பாலான குடிவழிகளின் பாடம் ஒத்திருத்தல் எனக் கொள்ளலாம். அத்தகைய பாடம் இப்பதிப்பில்

மூலபாடமாகக் காட்டப்பட்டுள்ளது. ஏனைய பாடங்கள் அடிக்குறிப்பில் IV – என்ற குறியீட்டால் சுட்டப்படுகின்றன.

குறியீடு – **V:** சுவடிகளிலும், பதிப்புகளிலும் உள்ள பாடம் பொருந்தாதது எனக் கருதப்படும் இடத்தில், மீட்டுருவாக்கம் செய்ய வழியில்லாத போது மேற்குறிப்பிட்ட உள்ளார்ந்த செய்திகளைக் கருத்தில் கொண்டு இப்பதிப்பாசிரியரால் ஒரு சில பாடங்கள் திருத்தப்பட்டன. அவை இப்பதிப்பில் மூலபாடமாகக் காட்டப்பட்டு, ஏனையவை V– என்ற குறியீட்டுடன் அடிக்குறிப்பில் காட்டப்படுகின்றன.

சுவடிகளின் பாட வேறுபாட்டைக் காட்டும் பொழுது அவற்றின் குடி வழி முறை பின்பற்றப்படுகின்றது. எடுத்துக் காட்டாக 'அ' சுவடியும் 'உ' சுவடியும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவை. அவை இரண்டும் ஒப்பு நோக்கப்பட்டுக் கண்டறியப்பட்ட பாடமே அவற்றது மேலேட்டின் பாடம். ஆகவே, பாட வேறுபாடு காட்டும் போது அ, அல்லது உ என்ற குறியீடு மட்டுமே இடப்படும். ஒப்புநோக்கில், அக்குறியீட்டை உடைய சுவடியின் பாடமே, அக் குடும்பத்தின் மேலேட்டின் பாடமாகக் கருதப்படுவதாகப் பொருள்.

அ – முதல் ஒ – வரை உள்ள சுவடிகளின் பாடமே தேர்வுக்குரிய காரணக் குறியீடு பெறுகின்றன.

முன்னைய பதிப்புகளும் இப்பதிப்பில் காட்டும் பாட வேறுபாடும்

முன்னர் வந்த பதிப்புகளுள் கீழ்க்கண்ட பதினொரு பதிப்புகள், பாடத் தேர்வுக்காக ஒப்புநோக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று அல்லது இரண்டின் பாடத்தைப் "பொருத்தமானது" என ஏற்றுக் கொண்ட இடத்தில், 'சுவடிகளில் கண்ட பாடம் பொருந்தவில்லை என்ற காரணத்தால் 'இன்ன பதிப்பின் பாடம் ஏற்றுக்கொள்ளப்பட்டது' எனக் குறிப்புத் தரப்படுகிறது. மேற்குறிப்பிட்ட பதிப்புகளில் உள்ள பாடவேறுபாடுகள் தமக்குரிய குறியீட்டுடன், ஆனால் பாடத்தேர்வுக் காரணக் குறியீடு இன்றிக் காட்டப்படுகின்றன.

இப்பதிப்புகளின் பெயரும் இப்பொழுதைய பதிப்பில் இவற்றுக்குக் கொடுக்கப்படும் குறியீடுகளும் வருமாறு.

	பதிப்பு	குறியீடு
1.	திருமந்திரம் மூவாயிரம். கொ. சண்முகசுந்தர முதலியார்	(சண்)
2.	திருமந்திரம். மாவை. வே. விசுவநாத பிள்ளை	(விசு)
3.	திருமந்திரம். திரு. வி. கலியாணசுந்தரனார் பார்வை	(திரு. வி. க)
4.	திருமூலர் அருளிய திருமந்திரம். எஸ். சங்கரலிங்க முதலியார்	(சங்)

5. திருமந்திரம். சைவசித்தாந்த மகாசமாஜம்[1] (சைவ)
6. திருமந்திரம் மூவாயிரம். துடிசை கிழார் சிதம்பரனார் (துடி)
7. திருமூலர் திருமந்திரம் – பஞ்சாட்சர தீபம் என்னும் உரையுடன் திருவாவடுதுறை ஆதீனம் (திரு) அல்லது (தி)
8. திருமந்திர மாலையாகிய திருமந்திரம். சி. அருணைவடிவேல் முதலியார் தருமபுர ஆதீனம் (த)
9. திருமந்திரம். ஜி. வரதராசன் உரை (வ)
10. திருமூலநாயனார் திருவாய் மலர்ந்தருளிய திருமந்திரம் – பதிப்பு விவரம் தெரியவில்லை (தெ)
11. திருமந்திரம் – ஆங்கிலமொழி பெயர்ப்புடன். இராமகிருஷ்ண மடம், சென்னை. (இராம)
12. கயிலாயச் சித்தர் உரை. (க.சி.)

மற்றும் டாக்டர் சாமிநாதையர் நூலகத்தில் இருந்து பெற்ற கையெழுத்துத் தாட் பிரதி பெரிதும் வேறுபடுகின்ற (முழு அடியே மாறி இருக்கும்) பாடங்களை உடைமையால், சில இடங்களில் மட்டும் பாடவேறு பாட்டில் 'மு' என்ற குறியீட்டுடன் காட்டப்பட்டுள்ளது. மற்றைய சுவடிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பாடல்களையே உடையவையாதலின் அவ்வவ்விடங்களில் மட்டும். இம்முன்னுரையில் முன்னே அவற்றிற்குரியவெனக் காட்டப்பெற்ற குறியீட்டுடன் பாட வேறுபாட்டிற்காக ஒப்பு நோக்கப்படுகின்றன[2].

இடைச் செருகல் எனக் கருதத்தகும் பாடல்கள்

இப்போது கிடைக்கும் பதிப்புகளில் மிகுதியாக உள்ளனவும், பல காரணங்களால் இடைச்செருகல் எனக் கருதத்தக்கனவும் ஆகிய பாடல்கள், இப்பொழுதைய பதிப்பிற்காக ஆராயப்பட்ட பெரும்பாலான சுவடிகளில் உள்ளன. ஆகவே, இச்சுவடிகளின் மேலேடுகள் எழுதப்பட்ட காலத்துக்கு முன்பே இடைச்செருகள் ஏற்பட்டதாக அறியப்படுகிறது. இச்சுவடிகளுள், பலவற்றில் படியெடுக்கப்பட்ட காலம் பற்றிய குறிப்பு இல்லை. முன்வந்த பதிப்புகளுள் சிலவற்றில், சில பாடல்களை இடைச்செருகல் என இனம்காட்டியுள்ளனர். எனினும் அவற்றினும் எண்ணிக்கையில் மிகுந்த பாடல்கள் இடைச்செருகல் என இப்போதைய ஆய்வில் தோன்றுகின்றன.

சிற்சில இயல்கள் முழுதுமே இடைச்செருகலாகத் தோன்றுகின்றன. அப்பாடல்கள், இடைச்செருகல் எனக் கருதற்குரிய காரணங்களுடன், இப்பதிப்பில் காட்டப்படுகின்றன.

1. இப்பதிப்பில் காட்டப்படும் பாடவேறுபாடு, இப்பொழுதைய பதிப்பில் (சைவ – I) என்ற குறியீடு பெறும்.

2. பதிப்பின் பெயர் மறக்கப்பட்ட இடங்களில், (பதிப்) என்ற குறிப்புடன் பாடவேறுபாடு தரப்படுகிறது. அனைத்துச் சுவடிகளிலும் ஒத்த பாடம் (சுவ) அல்லது (அனை. சுவ) என்ற குறியீடு பெறும்.

அவை இடைச் செருகல் எனக் கருதற்குரிய காரணங்கள் 21 என வகைப் படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றிற்கு மேற்பட்ட காரணங்களை உடையவையும் உண்டு. இக்காரணங்கட்குக் குறியீடுகள் அமைக்கப்பட்டுப் பாடலின் ஈற்றில் நகவளைவினுள் காட்டப்படுகின்றன.

இரண்டு முறையும் மூன்று முறையும் வந்த பாடல்கள்

மாவை. வே. விசுவநாதப் பிள்ளை பதிப்பில் 43 பாடல்கள் இரண்டு முறை வந்துள்ளன. ஒரு பாடல் மூன்று முறை வந்துள்ளது. அவை இப்பதிப்பில் ஏற்புடைமைக்குத் தக்கவாறு ஒவ்வோரிடத்தில் மட்டும் தரப்படுகின்றன. (விசு) பதிப்பில் மொத்தம் உள்ள 3047 பாடல்களில் இந்நாற்பத்தைந்தை நீக்கினால், 3002 பாடல்கள்.

இந்த 44 பாடல்களின் பட்டியல் (பகுதி முறையில்) பின்னிணைப்பில் தரப்படுகின்றது.

இப்பதிப்பிற்காகக் கிடைத்த சுவடிகளுள், நான்கில் மட்டும் உள்ளதும், பதிப்புகள் அனைத்திலும் உள்ளதும் ஆகிய 'உபதேசம்' என்னும் பகுதி முதல் தந்திரத்தில் முதல் அதிகாரமாகக் காணப்படுகிறது. இது சில சுவடிகளில் இல்லாமைக்குரிய காரணங்கள் யாவை என ஆராய்ந்தபோது சில செய்திகள் தெரியவந்தன. சில பதிப்புகளில், நூலின் இறுதியில் வாழ்த்திற்கு முன்னைப் பாடலாக வரும்

"மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்
மூலன் உரை செய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரை செய்த முப்பது உபதேசம்
மூலன் உரை செய்த மூன்றும் ஒன்றாமே"

என்பது. இது திருமூலர் உரைத்தவை மூன்று நூல்கள் எனக் கூறும்.

ஆயினும் சில அறிஞர் இம்மூன்று நூல்களும் தனித்தனி நூல்கள் அல்ல; 'தமிழ் மூவாயிரம்' நூலின் உள்ளே 'மந்திரம் முந்நூறும்', 'உபதேசம் முப்பதும்' அடங்கும் எனக் கருதினர்[1].

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 'திருமந்திரமாலை முந்நூறு' என்னும் நூலினை ந. சிவப்பிரகாச தேசிகர் உரையோடு 1976 இல் வெளியிட்டது. அதில் "தமிழ் மூவாயிரம்" என்ற நூலின் அதிகாரங்களினும் வேறான மொத்தம் 29 அதிகாரங்களிலும் 373 பாடல்கள் உள்ளன. அவற்றுள் 2 பாடல்கள் மட்டுமே 'தமிழ் மூவாயிரத்திலும்' உள்ளன. மேற்குறிப்பிட்ட "மூலன் உரை செய்த" என்னும் பாடலில் குறிப்பிட்ட 'முந்நூறு

1. *மாவை. வே. விசுவநாதபிள்ளை பதிப்பு பக்கம்* 660.

மந்திரம்' என்பது தனி நூல் என இப்பதிப்பின் வாயிலாகத் தெளிவாகிவிட்டமையால், 'முப்பது உபதேசம்' என்பதும் தனி நூலாகவே இருத்தல் வேண்டும். மேலே குறிப்பிட்டவாறு சில சுவடிகளிலும் பதிப்புகளிலும் முதல் தந்திரத்தின் முதலதிகாரமாக உள்ள 'உபதேசம்' என்னும் பகுதியே இத்தனிநூல் எனக் கருதுவதற்குத் தக்க சான்றுகள் அப்பகுதிக்கண் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது, அஃது அந்தாதித் தொடை அமையப்பெற்று மண்டலித்து முடிவதாகும். மேலே குறிப்பிட்ட 'திருமந்திர மாலை முந்நூறு' என்னும் அண்ணாமலைப்பல்கலைக்கழக வெளியீட்டு நூலும் மண்டலித்தே முடிவது ஒப்பு நோக்கத்தக்கது.

'உபதேசம்' என்னும் இப்பகுதியில் ஓரதிகாரத்திற்கு உரிய பொருள் வரையறை அமையாது, 'தமிழ் மூவாயிரம்' நூலில் கூறப்பட்ட செய்திகள் மிகச் சுருக்கமான முறையில் தரப்பட்டனவாகத் தோன்றுகின்றன. ஆதலின் திருமூலர் இயற்றிய 'உபதேசம் முப்பது' என்னும் தனி நூலைச், சுவடி எழுதியோர் 'தமிழ் மூவாயிரத்தோடு' இணைத்து, முதல் தந்திரத்தின் முதலதிகாரமாக எழுதிவிட்டனர் எனத் தோன்றுகிறது. இப்பொழுதைய பதிப்பில் இது தனிநூல் என்னும் குறிப்புடன் சேர்க்கப்பட்டுள்ளது.

திருமூலர் வரலாறு

நூலாசிரியராகிய திருமூலரின் வரலாற்றுக்குச் சான்றாக உள்ளவை சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்துள் திருமூல நாயனார் புராணமும், நம்பியாண்டார் நம்பி திருமூலரைப்பற்றிப் பாடிய பாடலும்[1] 'தமிழ் மூவாயிரம்' என்னும் இந்நூலின் பாயிரத்தில் உள்ள 'திருமூலர் வரலாறு' என்னும் அதிகாரமும் ஆகும். இவற்றுள், பாயிரத்தில் உள்ள பல பாடல்கள் இடைச் செருகலாக உள்ளன. அவற்றின் செய்திகளை நீக்கிப் பிற சான்றுகளுடன் சேர்த்துப் பார்க்கும் இடத்துப், பின்வரும் சில செய்திகளே திருமூலரின் வரலாறாக அறியப்படுகின்றன.

கயிலை மலையில் நந்தியம் பெருமானிடம் உபதேசம் பெற்ற சிவயோகி ஒருவர் பொதிய மலையில் அகத்தியரைக் காண்பதற்காக அங்கிருந்து புறப்பட்டுத் தென்திசை நோக்கி வந்து, பல தலங்களைத் தரிசித்துத் தில்லையின் கண் சிற்றம்பலக் கூத்தரைத் தரிசித்து, தமது மெய் உணர்விற்குக் காட்சிப்பட்ட ஆனந்த தாண்டவத்தையும் தரிசித்து, அவ்வூரின் தெற்கே சாத்தனூர் என்னும் ஊரில் பசுக்களை மேய்த்த மூலன் என்பான் இறந்து வீழ்ந்ததையும் பசுக்கள் வருந்தியதையும் கண்டு, அவற்றின் துன்பத்தை நீக்குவதற்காகத் தாம் ஏற்கனவே பெற்றிருந்த 'பரகாயப் பிரவேசம்' என்னும் சித்தியினால் மூலனின் உடலில் புகுந்து, தனது உடலை ஒரு பாதுகாப்பான இடத்தில் வைத்தபின், பசுக்களை அவற்றின் வீடுகளில் சேர்த்து, மூலனின் மனைக்குச் செல்லாது, பொது மடத்தில் வீற்றிருந்தார். ஊர்ச்சான்றோர் அவரது நிலையைக் கண்டு மூலனின் மனைவிக்கு ஆறுதல் உரைத்தனர். சிவயோகி தாம் பாதுகாப்பாக வைத்த தமது

1. *திருத்தொண்டர் திருவந்தாதி, பாடல் எண் :* 36

உடலைக் காணாமல், ''இறையருள் அது'' எனத் தெளிந்து, திருவாவடுதுறையில் உள்ள அரச மரத்தின் நிழலில் மூவாயிரம் ஆண்டு யோகம் இருந்து 'தமிழ் மூவாயிரம்' என்றும் 'திருமந்திரமாலை' என்றும் பெயர் பெற்ற நூலை, ஆண்டுக்கு ஒரு பாடலாக இயற்றினார்.

இவை சேக்கிழார் புராணத்தில் அறியப்படும் செய்திகள். இனித் திருமந்திரப் பாயிரத்தால் அறியப்படும் செய்திகள் வருமாறு: நந்தியம் பெருமானிடம் இச்சிவயோகியாரைப் போல மற்றும் எழுவர் உபதேசம் பெற்றனர். அவர்கள் அனைவரும் 'நாதர்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றனர். நந்தியம்பெருமான் உபதேசம் செய்தமையோடு சிவயோகியாரின் தலையில் பரிச தீக்கையாகத் தன் பாதங்களை வைத்தான். சிவயோகியார் மூலன் உடலில் புகுந்து, தமது உடலைப் பாதுகாப்பாக வைத்த பின்னர், அதனை இறைவனே மறையச் செய்தான். யோக சக்தியால் சிவயோகியார் உடல் ஒளி வீசியது. அவ்வுடலில் அவர் நெடுங்காலம் வாழ்ந்தார். திருவாவடுதுறையில் சிவபோதி மரத்து நிழலில் யோகம் இருந்தார். தாம் படைக்கப் பெற்றது இறையியலைப்பற்றித் தமிழ் நூல் செய்வதற்காகவே என்பதை உணர்ந்து தமிழாகம நூலினை இயற்றினார். நந்தியம் பெருமானிடம் தாம் தீக்கை பெற்றபோது, சதாசிவன் என்னும் தீக்கைப்பெயர் பெற்றமை போலவே, தமது நூலுக்கும் 'சதாசிவ ஆகமம்' எனத் திருவருள் குறிப்பால் பெயரிட்டார்.

பாயிரத்தில் சிவயோகியாரின் பெயர் சுந்தரன் எனக் காணப்படுகிறது என முற்போந்த அறிஞர் சிலர் எழுதியுள்ளனர்.[1] அவர்கள் காட்டும் பாயிரப் பாடலின் பாடம்

''சுந்தரன் ஆகமச் சொல்மொழிந்தானே''

என்பது. ஆனால் அதன் செவ்விய பாடம் ''சுந்தர வாகமச் சொல் மொழிந்தானே'' என்று அறியப்படுகின்றது. ஆகவே ஆகமத்திற்குரிய அடைமொழியாகச் 'சுந்தர' என்பது காணப்படுகிறதே அன்றி, ஆசிரியர் பெயராக அன்று. மற்றும், இப்பாடல் திருமூலரைப் படர்க்கையில் குறிப்பிடுதலின் ஆசிரியரின் தற்கூற்றாக உள்ள பாடல்களுக்கு இடையே, இது பிற்செருகலாகக் கருதப்படுகிறது.

திருமூலரின் வரலாற்றுச் செய்திகளாகப் பெரிய புராணத்திலும், திருமந்திரப்பாயிரத்திலும் வரும் செய்திகளை ஒருவாறு ஆராய்வோம். இங்குப் பாயிரத்தில் இடைச்செருகல் எனக் கருதப்படும் பாடல்களும் ஆராயப்படும்.

திருமூலர் பொதியமலையில் அகத்தியரைக் காண்பதற்காகக் கயிலை மலையில் இருந்து தென் திசைக்கு வந்தார் என்ற பெரிய புராணச் செய்திக்குத் திருமந்திரப்பாயிரத்தில் ஆசிரியர் கூற்றாக ஆதாரம் யாதுமில்லை. மாறாக, ஆசிரியர் நூலினுள் அகத்தியரின் வரலாற்றை – அவர் பொதிய மலைக்கு வந்த காரணத்தை ஒரு புராணக்கதை போலக் கூறுகின்றார்.[2] அகத்தியர் பற்றிய வரலாறுகள் பல. அவற்றுள் எந்த அகத்தியர் திருமூலருக்குச் சமகாலத்தவர் எனத் தெரியவில்லை.

1. *துடிசைகிழார் சிதம்பரனார், திருமந்திரப் பதிப்பு முன்னுரை.*
2. *பாடல்கள்* 94, 95.

'திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் யோகத்தில் இருந்தார், ஆண்டுக்கு ஒரு பாடலாகத் திருமந்திரப் பாடல்களை இயற்றினார்' என்று சேக்கிழார் கூறும் செய்தி அவர் செவிவழிக்கேட்டதாதல் வேண்டும். திருமூலர் யோக ஆற்றலால் மிகப்பல ஆண்டுகள் வாழ்ந்திருக்கக் கூடும் என்பது உண்மையே. இதனை அவரே "தப்பிலா மன்றில் தனிக் கூத்துக் கண்டபின் ஒப்பில் எழுகோடி யுகம் இருந்தேனே" என்றும், "இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி" என்றும் கூறுகின்றார். இக்கூற்றைத் தெளிவு பற்றி வந்த காலவழுவமைதியாகக் கொண்டு, 'இறவாமல் இருப்பேன்' எனக் கூறற் பாலதை இவ்வாறு கூறினார் எனக் கொள்ள வேண்டும். ஆனால் யோகத்தில் 3000 ஆண்டுகள் இருந்து ஆண்டுக்கொரு பாடலாகத் திருமந்திரத்தைப் பாடினார் எனக் கொள்வதற்குச் சான்றில்லை. மாறாக, திருமந்திரத்தின் பல பகுதிகளை நோக்கும் போது, அவை ஒருங்கே ஒரு காலத்தில் செய்யப்பட்டனவாகத் தோன்றுகின்றனவே அன்றி, ஆண்டுக்கொரு பாட்டாக வெளிப்போந்தவையாகத் தோன்ற வில்லை.

பாயிரத்தில், "நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடின்" எனவரும் பாடலில் திருமூலரின் சமகாலத்தவராகக் குறிப்பிடப்படுவோருள், பதஞ்சலி, வியாக்கிரர் ஆகியோர் புராண மாந்தர் ஆவர். அவர்கள் திருமூலருக்குச் சமகாலத்தவர் எனல் பொருந்தாது. இப்பாடல் குறிப்பிடும் நான்கு நந்திகள் யார் என்பது இப்பாடலால் அறியப்படவில்லை. ஆனால் உரைகாரர்கள் புராணத்தில் தட்சிணா மூர்த்தியிடம் உபதேசம் பெற்றவராகக் கூறப்படும் சனகர், சனந்திரர், சனாதனர், சனற்குமரர் என்னும் நால்வர் என எழுதியுள்ளனர். அவர்களும் புராண மாந்தரே ஆதலின் திருமூலருக்குச் சமகாலத்தவர் அல்லர். சிவயோக மாமுனி என இப்பாடலில் வரும் பெயர் பொதுப் பெயராகத் தோன்றுகின்றது. எனவே, இதனால் சுட்டப்படுபவர் யார் யார் எனப் புலப்படவில்லை.

அறிஞர் ஆர். வெங்கட்ராமன் என்பார் "இந்தியா முழுதும் பரவலாகக் காணப்பட்ட தந்திரிக முறைச் சித்தர் – இயலுக்குரிய பல சிறப்புச் செய்திகள் திருமந்திரத்தில் உள்ளன. குறியீட்டு ஆட்சி, இரசவாதம் என்பவையும், காபாலிகரால் சிறப்பாகக் கைக்கொள்ளப்பட்டு அவர்கட்குப்பின் நாத சித்தர்களால் மேற்கொள்ளப்பட்ட பைரவர் வழிபடும் அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. நாத சித்தர்களான கோரக்க நாதரும், மச்சேந்திர நாதரும் சில வேறுபாடுகளுடன் கூறும் 'ஆண் பெண் போகமே யோக மாகும் முறையை', கோரக்க நாதரின் கருத்தான, 'விந்து உடலின் மேற்பாகத்திற்கு ஏற்றப்படவேண்டும்' என்பதனோடு இணைத்துத் திருமூலர் 'பரியங்க யோகம் என்னும் யோகத்தை விளக்குகின்றார். மக்கள் உடலில் 72,000 நாடிகள் உள்ளன என்றும் யோகசாதனையில் சில இசையோசைகள் கேட்கப்பெறும் என்றும் அவர் கூறும் கருத்துகளும் போகியின் உடலைச் சமாதியில் வைப்பது பற்றி அவர் கூறுவனவும் கோரக்க நாதரின் கொள்கைகளைப் பின்பற்றின" என்று கூறுகிறார்[1].

1. *A History of the Tamil siddha eult, pp.* 42-45

அவர் மேலும், திருமூலர் 'காலச் சக்கரம்' பற்றி விளக்கும் செய்திகள் கி.பி. 966-இல் மத்திய ஆசியாவில் இருந்து இங்கு வந்து பரவிய பௌத்த சமயக் கருத்து என்று கூறி, முன்பு குறித்த[1] கோரக்க நாதரும் கி.பி. 10-ஆம் நூற்றாண்டினர் ஆதலின் திருமூலர் பத்தாம் நூற்றாண்டின் பின் வாழ்ந்தவர் என்றும், அவரைப் பற்றியே சேக்கிழார் பாடினார் என்றும், சுந்தரர் 'திருத்தொண்டத் தொகையில்' குறிப்பிடும் திருமூலர் காலத்தால் முற்பட்டவர் என்றும் கூறுகிறார்[2]. ஆகவே, இரண்டு திருமூலர்கள் இருந்துள்ளனர் என்பது அவரது கருத்து.

மற்றும் சில அறிஞர்கள், நாதசித்தர்களின் கருத்து திருமந்திரத்தில் இருப்பதைக் கொண்டும், நாதர் என்னும் சிறப்புப் பெயர் திருமூலருக்கு அளிக்கப்பட்டதாகப் பாயிரம் கூறுவதைக் கொண்டும், திருமூலர் நாத சித்தர்களுள் ஒருவர் எனக் கருதுவர்.

இவ்விரு சாரார் கருத்துகளும் பொருந்தா. இங்குக் குறிப்பிட்ட பாயிரப் பாடல் ஐயத்திற்குரியதாக உள்ளதை மேலே குறிப்பிட்டோம். எனவே அதனை ஆதாரமாகக் கொள்ள இயலாது. நாத சித்தர்கள் கூறிய 'போகயோகமுறை' அவர்களுக்கு முற்பட்ட சாக்த தந்திரங்களிலும் கூறப்படுகின்றது. காபாலிகசைவர் மேற்கொண்ட யோக முறைகளுள் அதுவும் ஒன்று. இக்காபாலிக சைவரின் முறைகளைப் பின்பற்றியே நாதசித்தர்களின் சைவ சமயம் உருவாயிற்று. கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் கோரக்க நாதர் அதற்கு வடிவம் கொடுத்தார். நாதசித்தர்கள் தம் தத்துவக் கொள்கைகளைக் காசமீரச் சைவத்தின் கொள்கைகளைப் பின்பற்றி வகுத்தனர். காசுமீரச் சைவத்தின் ஆதிமுதல்வர்களாகிய வசுகுப்தரும் கல்லடரும் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். இச்சைவத்தின் கொள்கை சிவாத்துவைதக் கோட்பாட்டைத் தழுவியது. திருமூலரின் சில பாடல்கள் சிவாத்துவைதக் கொள்கையுடையன போலச் சிலரால் விளங்கிக் கொள்ளப்பட்டாலும், திருமூலர் சிவாத்துவைதர் அல்லர் என்பதை இவ்வாய்வு முன்னுரையில் 'திருமூலர்நெறி' என்ற தலைப்பில் விளக்கியுள்ளோம். திருமூலர் காபாலிக சைவத்தின் தாக்கம் பெற்றவர் அல்லர் என்பதையும் காட்டியுள்ளோம்.

அறிஞர் வெங்கடராமனின் கருத்துப்படி இரண்டு திருமூலர்கள் இருந்தார்கள் எனக் கொண்டால், நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியும், சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணமும் சுந்தரரின் திருத்தொண்டத் தொகைக்கு முறையே வழிநூலும் விரிநூலுமாம் என்னும் மரபுக்கருத்துப் பழுதுபடும். மேலும் சுந்தரர், 'நம்பிரான் திருமூலர்' எனக் குறிப்பிடும் ஆசிரியர் நூலொன்றும் செய்யவில்லை எனக் கொள்வதும் பொருந்தாது.

பெரியபுராணச் செய்தியிலிருந்து, சுந்தரர் யோக முறையைப் பின்பற்றியவர் எனக் கருத இடமிருக்கிறது. அவர் பரவையாரை மணந்து, அவருடன் கூடி அப்போகத்தையே

1. *Ibid, P.* 45
2. *Ibid. PP* 47-48

யோகமாகப் பயின்றார் எனச் சேக்கிழார் கூறுவார்[1]. அவர் மேலும், பெருமிழலைக் குறும்பர் என்னும் யோகி சுந்தரரைச் குருவாகக் கொண்டார் என்றும் கூறுவார். இதனாலும் சுந்தரரை யோகி எனக் கூற இடமிருக்கிறது. அவர் மேற்கொண்ட சகமார்க்கம் யோக மார்க்கமே எனக் கருதும் மரபும் உண்டு. சுந்தரர் யோகியாதல் பற்றியே திருத்தொண்டத் தொகையில் திருமூலருக்கு, வேறு யாருக்கும் கொடாத அடைமொழியாகிய 'நம்பிரான்' என்பதை வழங்கினார் போலும்.

யோகியின் உடலைச் சமாதி வைப்பதுபற்றிச் ''சமாதிக்கிரியை'' என்ற தலைப்பில், திருமந்திரத்தில் உள்ள பாடல்கள் ஆசிரியரின் நடையினின்றும் வேறுபடுகின்றன. அவை இடைச் செருகலாகக் கொள்ளப்படலாம். எனவே நாதசித்தர்களைப் பின்பற்றியே திருமூலர் மேற்கூறிய செய்திகளை விளக்குகிறார் என்று கொள்ளுவதைவிட, அவர்கள் தோன்றுவதற்குமுன், பிற தாந்திரிக இயல்களில் கூறப்பட்ட செய்திகளைத் திருமூலர் தழுவிக் கொண்டார் என்பது பொருத்தமாகலாம். அதுபற்றித் 'திருமூலர் நெறி' என்னும் தலைப்பில் கூறப்படும்.

இனி, பாயிரத்தில் 'குருபாரம்பரியம்' என்னும் அதிகாரத்தில், தம் மாணவர் எழுவர் எனத் திருமூலர் கூறுவதாக வரும் பாடல் அவரது நடையினின்றும் வேறுபடுவதால் அஃது அவர் வாக்கு அன்று. அந்த எழுவருள் காலாங்கி என்பவரைத் தவிர, ஏனையோர் எந்நூலிலும் கேட்கப்படவில்லை. காலாங்கி என்பவர் கி.பி. 17–18–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சித்தர் என அறிகின்றோம்[2]. எனவே, அவர் திருமூலரின் மாணவர் எனக்கொள்ளல் பொருந்தாது. ஏனைய அறுவருள் மாலாங்கனையும் இந்திரனையும் விளித்துப் பாடும் பாயிரப்பாடல் இரண்டும், ஆசிரியர் யாரையும் விளித்துப்பாடும் வழக்கம் உடையவர் அன்மையால், இடைச்செருகல் என்றே கருத வேண்டியுள்ளது.

திருமூலர் தாம் கயிலையில் நந்தியம் பெருமானிடம் உபதேசம் பெற்றமையால் கைலாய பரம்பரையைச் சேர்ந்தவராக இப்பாயிரத்தில் கூறிக் கொள்கிறார். தமிழ்நாட்டில் அவரது நெறியைப் பரப்புவதற்காக ஏழு மடங்கள் தோன்றின என ஒரு பாயிரப்பாடல் கூறுகிறது. அவை எங்கெங்கு தோன்றின என்ற செய்தியோ, அவை தோன்றியமைக்குப் பிற நூல் ஆதாரமோ, வரலாற்றுச் சான்றோ கிடைக்கவில்லை. அந்த மடங்களில் காலாங்கன், அகோரர், மாளிகைத் தேவர், நாதாந்தர், பரமானந்தர், போக தேவர், மூலர் என்னும் எழுவர் இருந்ததாக மற்றும் ஒரு பாடல் பாயிரத்துள் வருகிறது. இவர்களுள், போக தேவர் மட்டும் சித்தர் இலக்கியத்தில் காணப்படுகிறார். போகர் என்னும் பெயரில் மூன்றுபேர் இருந்ததாகவும் அறிகின்றோம். முதலாமவர் 10–11–ஆம் நூற்றாண்டினர் என்றும் இரண்டாமவர் 17–ஆம் நூற்றாண்டினர் என்றும் மூன்றாமவர் 18–ஆம் நூற்றாண்டினர் என்றும் அறிகின்றோம்.[3] ஆகவே இவர் மூவரும் திருமூலருக்குப்

1. *பெரிய புராணம், தடுத்தாட் கொண்ட புராணம்* : 181
2. *A History of the Tamil Siddha cult*, 74
3. Ibid PP 74-75

பிற்பட்டோரே. திருமாளிகைத் தேவரின் பாடல்கள் சைவத்திருமுறைகளுள் ஒன்பதாவதாகிய "திருவிசைப்பா திருப்பல்லாண்டில்" உள்ளன. அவை சித்தர் நெறி பற்றி யாதும் கூறவில்லை.

திருமூலர் காலம்

இலக்கிய வரலாற்றை ஆராய்ந்த அறிஞர்கள் திருமூலரின் காலத்தைக் கண்டறிவதில் இடர்ப்பாடுகள் உள்ளமையைத் தெரிவித்துள்ளனர். ஆயினும் இங்கு ஒரு சில அகச் சான்றுகளைக் கொண்டு அவரது காலத்தை வரையறுக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. கி.பி. 8–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர் திருத்தொண்டத் தொகையுள் 'நம்பிரான் திருமூலர்' எனக் குறிப்பிடுகின்றமையின், 8 – ஆம் நூற்றாண்டையே திருமூலரின் காலத்திற்குப் பின்எல்லையாகக் கொள்ளலாம். திருமந்திரத்துள் 'தமிழ் மண்டலம் ஐந்து' என்னும் குறிப்பு வருகிறது.[1] சேர, சோழ, பாண்டிய மண்டலங்களுடன், கொங்குமண்டலமும் தொண்டை மண்டலமும் சேர்த்து மண்டலங்கள் ஐந்தாக எண்ணப்படும் வழக்கு உண்டான பின்னரே திருமூலர் நூல் பாடியிருக்க வேண்டும். சங்க இலக்கியத்திலும், சிலப்பதிகாரத்திலும் கொங்கரைப் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன என்ற போதிலும் கொங்கு மண்டலம் என்ற குறிப்பீடு இல்லை. தொண்டை மண்டலம் என்ற வழக்குப் பல்லவர் ஆட்சிக்குப் பின்னரே உண்டாயிற்று. பல்லவரின் ஆட்சி கி.பி. 3–ஆம் நூற்றாண்டு முதல் 9 – ஆம் நூற்றாண்டு வரை நிலவியது. திருமூலர் தில்லையில் உள்ள சிற்றம்பலத்தைப் பொன்னம்பலம் என்ற பெயரால் குறிப்பிடுகிறார்[2]. சிற்றம்பலத்தில் முதல்முதலில் பொன்வேய்ந்தவன் 5–ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த பல்லவ மன்னனாகிய சிம்மவர்மன்–1 ஆவான்.

தேவார காலத்திலும் அதற்குப் பின்னும் சமய, காப்பிய இலக்கியங்களைப் பல்வகை விருத்த யாப்புகளில் பாடும் வழக்கம் இருந்தது. திருமூலரோ தம் நூல் முழுதும் ஒரே வகைக் கலிவிருத்த யாப்பையே மேற்கொண்டுள்ளார். இக்காரணத்தால் அவர் தேவார காலத்திற்கு முன்பிருந்தவராதல் வேண்டும். மேலும் ஞானசம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்திருப்பின் அவர் பௌத்த சமணசமயங்களைக் கண்டிக்காமல் இருந்திரார். அவர் 'புறச்சமய தூடணம்' என்னும் இயல் அமைத்தும், இச்சமயங்களுக்குக் கண்டனம் யாதும் தெரிவிக்கவில்லை.

மேற்குறித்த காரணங்களைக் கொண்டு திருமூலர் நூல் பாடிய காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டினையொட்டிச் சற்று முன்பின்னாகக் கொள்ளப் படலாம். வெள்ளைவாரணனார் திருமந்திரத்தின் சொற்கள் தொடர்கள் ஆகியவை மூவர் தேவாரத்திலும் ஆளப் பெற்றமையை எடுத்துக்காட்டுகின்றார்.

1. *திருமந்திரம் பாடல் எண்* 1590
2. *திருமந்திரம்* பாடல் எண் 878

திருமூலர் காலத்துச் சமய நிலை

திருமூலர் தமிழகத்திற்கு வரும் முன்னரே, இங்குச் சமணமும் பௌத்தமும் செல்வாக்குப் பெற்று விளங்கின. மணிமேகலைக் காப்பியத்தில் வரும் சைவவாதி கூறும் செய்திகளிலிருந்து, அக்காலத்தில் சைவசமயம் ஒரு பெரும் சமயமாக உருவாகியிருக்கவில்லை என அறியப்படுகிறது. அக்காலத் தமிழ் நாட்டில் சைவம் தவிர, வைதீக நெறியின் அளவை வாதமும், வேதமே தொழத்தக்கது என்னும் மதமும், பிரமவாதம், வைணவவாதம் என்பனவும், ஆசீவகம், நிகண்டம் என்னும் மதங்களும், பூதவாதம் என்னும் லோகாயதமும், சாங்கியம், நையாயிகம், வைசேடிகம் என்னும் தரிசனங்களும் அறிஞர்களால் அறியப்பட்டிருந்தன என்று மணிமேகலையிலிருந்து தெரிகின்றது. மணிமேகலையின் காலமாகிய கி.பி. 3–ஆம் நூற்றாண்டிற்குப் பின்பே முழுமையான வைதிகநெறி–உபநிடத வேதாந்தத் தத்துவத்துடன் கூடிய வைதிக நெறி தமிழகத்தில் பரவியிருக்கக் கூடும் என்று கருதலாம். அக்காலத்திலேயே சைவத்திற்கு ஆகமங்கள் வடமொழியில் எழுதப்பட்டிருக்க வேண்டும். அவை வடமொழியில் எழுதப்படினும் தமிழ்நெறியை அடிப்படையாகக் கொண்டனவே. அவை வைதிக நெறியின் யாகம், மந்திரங்கள் ஆகியவற்றை ஏற்றவாறு தழுவிக் கொண்டன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு அங்கங்களை உடையவையாக அமைந்தமையே கோயில் வழிபாட்டு நெறி, சடங்கு முறைகள், ஔத்திரி என்னும் ஓமத்தீயில் ஆகுதி செய்தல், தீட்சை முறைகள், ஆன்மீகப் பயிற்சிகள், மெய்ப்பொருள் ஆராய்ச்சி என்னும் பல கூறுபாடுகளை ஒருங்கிணைத்த பெருஞ்சமயமாகச் சைவம் அக்காலத்தில் உருவானமையைக் காட்டுகின்றது. ஆகமங்கள் வடமொழியில் எழுதப்பட்டன வாயினும், வேதநெறியை அவை கூறவில்லை என்பது "வேதம் வேறு ஆகமம் வேறு" என அக்காலத்தில் நிலவிய கருத்தைத் திருமூலர் எடுத்துக் காட்டுவதில் இருந்து அறியலாம்[1].

வேறுவேறாக இருந்த தமிழ்நெறி, வைதிக நெறி ஆகியவற்றை இணைக்கும் முயற்சி அக்காலத்தில் நடந்துள்ளது. வேதத்தைப் பொதுநூல் என்றும், ஆகமங்களைச் சிறப்பு நூல் என்றும் சைவநெறியினர் கருதத் தொடங்கினர். வேதாந்தம் என்று கூறப்படும் உபநிடதங்கள் பிரமம் எனக் கூறி விளக்கும் பரம்பொருள் தத்துவத்தைச் சைவநெறியினர் ஏற்றுக் கொண்டு தமது வழிபாடு கடவுளாகிய சிவமே அப்பரம்பொருள் என்றனர். ஆகமங்கள் சிவனே தனிப்பெருங்கடவுள் எனக் கொள்ளும். வைதிக நெறியினரும் சிவனைப் பரம்பொருளாக ஏற்றனர் என்பது தக்கன் வேள்வி, பிரளயம், அடிமுடி தேடல் முதலிய புராணக்கதைகளால் அறியப்படும். ஆகமங்கள் வைதிக முறையைப் பின்பற்றி மந்திர பூசை, யாக பூசை, ஓமத்தீயில் ஆகுதி செய்தல் ஆகியவற்றைச் சிவனுக்கு உரியனவாக்கின. திருமூலர் சிவனின் பரம்பொருள் தன்மையை விளக்குதற்காகவே 'கடவுள் வாழ்த்து' இயலை அமைக்கின்றார். அதை அடுத்து, வேதச்சிறப்பு, ஆகமச் சிறப்பு என்னும் இயல்களைப் பாடி அவ்விரண்டும்

1. *"வேதமோடு ஆகமம் .... பேதமது என்ப"* *திருமந்திரம் விசுபதிப்பு* 2397.

சிறப்பால் ஒத்தவை என்று புலப்படுத்துவதுடன் மேற்கண்ட புராணக் கதைகளையும் சிவனின் தனித்தலைமைக்குச் சான்றாக அமைக்கின்றார்.

திருமந்திர நூலின் பிற்பகுதியில் வேதாந்தம் என்னும் தத்துவத்தையும் ஆகமங்கள் கூறும் சித்தாந்தம் என்னும் தத்துவத்தையும் ஒப்பு நோக்கி வேதம், ஆகமம் இரண்டும் சிவபெருமான் உரைத்த நூல்களே, இவற்றைப் பெரியோர் வேறுபாடு அற்றவை எனவே கொள்வர் என்று கூறுகின்றார்[1]. வேதச் சிறப்பு என்னும் அதிகாரத்தில் வேதம் கூறும் நெறியைத் 'திருநெறி' என்று குறிப்பிட்டுச் சிவனை வழிபட்டுச் சிவமே ஆகின்ற நெறியே திருநெறி என்று விளக்குகின்றார்[2]. உயிர் சிவமேயாதல் என்பது 'தத்வமசி' என்னும் மகா வாக்கியப் பொருள் எனத் திருமந்திரத்தின் பிற்பகுதியில் விளக்குகின்றார். 'திரு' என்பது பின்னர்த் தேவார காலத்தில் வீடுபேறு என்ற பொருளில் வழங்கியது. வைதிக நெறியும் தமிழ்நெறியும் கலந்து பெரிய சமயமாக உருவாகிய சைவநெறிக்குத் திருமூலர் 'திருநெறி' என்று புதுப்பெயர் சூட்டுகின்றார் என்றும் கருதலாம். திருஞானசம்பந்தர் இப்பெயரையே மேற்கொண்டு 'திருநெறிய தமிழ்' எனத் தமது முதற் பதிகத்தைக் குறிப்பிட்டார்[3]. திருமூலர் "சைவம்" என்ற பெயரையும் குறிப்பிடுகின்றார்[4].

திருமூலரின் காலத்திற்கு முன்பே செல்வாக்குப் பெற்றிருந்த பௌத்த சமண சமயங்களின் தாக்கம் சைவநெறியில் உண்டாகி இருந்தது என்றும் அறியப்படுகிறது. சுத்தசைவர் (சித்தாந்தசைவர்) என்னும் பிரிவினர் கொல்லாமை, (நரபலி முதலிய பலிகள் இடாமை) புலால் உண்ணாமை, கள்ளுண்ணாமை, பொது மகளிரை விழையாமை முதலிய ஒழுக்கங்களை இத்தாக்கத்தின் விளைவாக மேற்கொண்டனர் எனலாம். திருமூலர் இவ்வொழுக்கங்களை நூலின் தொடக்கத்திலேயே வற்புறுத்துகின்றார். வைதீகமும் தமிழ்நெறியும் கலந்து சைவம் ஒரு பெருஞ்சமயமாக உருவாகிக் கொண்டிருந்த காலம் என்பதனால் திருமூலர் பௌத்த சமண சமயங்களைக் கண்டனம் செய்யாமல் இருந்தார் போலும்.

திருமூலர் பணி

சைவ நெறியின் உருவாக்கக் காலத்தைச் (Formative Stage) சேர்ந்தவர் ஆகையால், திருமூலர் தம் காலத்தில் சைவநெறியின் முக்கியக் கொள்கைகளாக அறியப்பட்டிருந்தவற்றைத் தொகுத்துச் சுருக்கமாக விளக்குகின்றார். சரியை முதலிய நான்கு படிநிலைகள், தாசமார்க்கம் முதலிய நான்கு மார்க்கங்கள், பதமுத்தி பரமுத்தி என்னும் வீடுபேற்று வகைகள், சத்திநிபாதம், திருவருள், அவத்தைகள், முப்பொருள் உண்மை என்ற சைவக் கோட்பாடுகளைத் தத்துவக்கோட்பாட்டு விளக்கமாக அன்றிச் செய்திகளாகத் தந்துள்ளார்[5].

1. *மேலது*
2. *திருமந்திரம்* 88
3. *'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் பதிகம்.*
4. *பா. எண் :* 1497
5. *தத்துவக்கோடுபாடுகளாக விளக்குபவை* 12 *ஆம் நூற்றாண்டிற்குப் பின்வந்த சித்தாந்த சாத்திரங்கள்.*

அவர் காலத்தில் வைதிகநெறி, தமிழ் நெறி என்ற இருபெரு நெறிகள் கலந்தாலும், தமிழ் நெறியின் தனித்தன்மை மாசுபடாமல் இருந்தது என்பதை அவர் குன்றின்மேலிட்ட விளக்குப்போல் காட்டுகிறார். அவர் தமிழில் ஆகமம் செய்வது தன் பணி என்று குறிப்பிட்டுக் கூறும்

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்ற அடிகள் அவர் தமிழ்நெறியின்பால் கொண்ட பற்றினையும் அவர் செய்த திருமந்திரமே முதல் தமிழாகமம் என்பதையும் பறைசாற்றுகின்றன. திருமூலர் சைவத்தின் அடிப்படை அன்பு நெறியே என்பதை வலியுறுத்தி, "அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" எனக் கூறித் தொன்றுதொட்டு வரும் இத்தமிழ்நெறியினை நிலை நாட்டுகிறார். அவரது அன்பின் மிகுதியை இந்நூற் கடவுள் வாழ்த்தால் அறியலாம். அவர் பதஞ்சலியின் யோகமுறைகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு சிவயோக நெறியை மிகவிரிவாக அமைத்துக் கூறினாலும் அன்புநெறியின் அடிப்படையின்றி இவ்யோகம் பயன்படாது என்று கூறுகின்றார்[1]. வேதாந்தம் கூறும் 'பரம்பொருள் ஒன்றே' என்ற கோட்பாட்டுடன் ஒப்பவைத்துத் தமிழ்நெறியின் கோட்பாடாகிய, 'மாந்தர் யாவருக்கும் குலம் ஒன்றே' என்பதை 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்று கூறுகின்றார். [2]

திருமூலர் வடநாட்டில் இருந்து தென்னாட்டிற்கு வந்தார் ஆதலின் வடநாட்டில் இருந்த சைவநெறிகளுள் சாக்தம், காபாலிகம், சிவாத்துவைதம் முதலியவற்றின் கொள்கைகளுள் ஏற்புடையனவற்றைத் தழுவி, அவற்றிற்குத் தமது நூலில் இடமளித்துள்ளார். யோகமுறைகளுள் ஒன்றாக அவர் கூறும் 'பரியங்கயோகம்', 'சாக்தம்' 'காபாலிகம்' ஆகியவற்றின் தாக்கத்தினால் இவர் ஏற்றுக் கொண்டதாதல் வேண்டும். இவர் கூறும் பல்வேறு வகைச் சக்கரங்கள் (யந்திரங்கள்) சாக்தமதத்தின் தாக்கத்தினால் ஏற்படுத்தப்பட்டிருக்கக் கூடியவையே.

உடம்பில் உறையும் குண்டலிசத்தியை விழிப்படையச் செய்து, மூலக் கனலைச் (உயிராற்றல்) சுழுமுனை நாடி வழியாக, கழுத்தில் உள்ள விசுத்தி என்ற ஆதாரம் வரை ஏற்றி, அருட்சத்தியின் அருளால் அதைக் குளிரச் செய்து, தலையில் உள்ள பராசத்தியுடன் சேர்த்து, அங்குப் பெருகும் அமுதத்தைப் பருகி இன்புறல் பற்றி இவர் கூறுவன, தம் காலத்தில் இருந்த யோக சாதனை நெறியைச் சிவயோகநெறியாக வளர்த்துக் கூறுவனவாகும். சாக்த மதத்தின் முறையையும் ஏற்றுக் கொண்டு, அதைச் சுத்தசைவ நெறிக்கு ஏற்ப இவர் வளர்த்தமையை இது காட்டுகின்றது. சாக்தமதம் கி.பி. 1, 2 நூற்றாண்டுகளில், வடநாட்டில் செல்வாக்குடன் விளங்கியது.

1. *பாடல்* 439
2. *திருமந்திரம் – விசு பதிப்பு* – 2104

திருமூலர் நெறி

திருமூலர் வேதாந்த சூத்திரத்துக்குப் பேருரை வரைந்த ஸ்ரீகண்ட சிவாச்சாரியார் போலச் சிவாத்துவிதக் கொள்கையைப் பரப்பினார் என்று கருதுவோர் உண்டு[1]. காசுமீரத்தில் கி.பி. 8–ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே நிலவிய சைவத்தில் இக்கொள்கை இருந்திருக்க வேண்டும். இது பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களைக் கூறுவதாயினும், சைவசித்தாந்தம் இவற்றுக்குக் கூறும் இலக்கணத்தினின்று மாறுபடும். ''இறைவனே உயிர்களாகவும் உலகமாகவும் தோன்றுகின்றான். அவனது சக்தி விபூதியே இப்பிரபஞ்சம்'' என்பது சிவாத்துவிதக் கொள்கையின் சாரம் ஆகும்.[2]

(1) ''சீவ னென்னச் சிவன் என்ன வேறிலை'' [3]

(2) ''தானே உடலுயிர் தத்துவமாய் நிற்கும்'' [4]

என்பன முதலிய திருமந்திர வாக்குகள் சிவாத்துவிதக் கொள்கை பற்றியன போலத் தோன்றுவது உண்மையே. ஆயினும், உண்மையை ஆராயுமிடத்து, சிவாத்துவிதக் கொள்கை திருமூலரின் நெறியன்று எனத் தெரிகின்றது. ''திதி'' என்னும் இயலில்,

''அணுகினும் சேயவன்; அங்கியிற் கூடி
நணுகினும் ஞானக்கொழுந்து ஒன்று நல்கும்,
பணிகினும் பார்மிசைப் பல்லுயிர் ஆகித்
தணிகினும் மன் உடல் அண்ணல் செய்வானே''[5]

என்ற பாடலில், 'உயிர்கள் எத்துணை அணுகி நின்றாலும், அவன் அவற்றால் எட்ட முடியாத தொலைவில் இருப்பான். சிவயோக சாதனையால் அவனைக் கூடினாலும் பதிஞானம் சிறிதளவே நல்குவான். அவன் பூவுலகில் பல உயிர்களும் ஆகிநின்றான். அச்சீவர்கள் தன்னை வழிபட்டாலும், ஆணவம், ஆன்மபோதம் முதலியவை அடங்கப் பெற்றாலும், அவர்களுக்கு அருளுடல் வழங்கி வீடுபேறு அளிப்பவன் அந்தத் தலைவனே' என்று ஆசிரியர் கூறுகின்றார். இதில் இறைவன் தலைவன் என்பதையும், அவன் உயிர்களுடன் ஒன்றாகியும், உடனாகியும், அவற்றினின்று வேறாகியும் இருக்கின்றான் என்பதையும் தெளிவாகக் கூறுகின்றார். 'அத்வைதம்' என்ற சொல்லுக்குச் சைவ சித்தாந்தம் கூறும் விளக்கம் இது.

1. *காஷ்மீர சைவம், பெ. திருஞானசம்பந்தன், சென்னை பல்கலைக் கழகம்* 1978 – பக்கம் - 2.

2. *உலகத்தின் நிமித்த காரணனாகவும் உபாதான காரணமாகவும் இறைவனே இருக்கிறான்.*

3. *திருமந்திரம்,* 1953.

4. *திருமந்திரம்* 22

5. *திருமந்திரம்* : 229

பல அண்டங்களிலும் தான் புகுவதற்கு உரிய உடம்பைத் தேடி அலையும் சீவாத்மாவின் பொருட்டு, உடலும் உயிரும் கூடிவாழும் பிறவியை அமைத்துக் கொடுக்கும் இறைவன் என்னும் பொருள் உடைய

"தேடும் திசை எட்டும் சீவன் உடல் உயிர்
கூடும் பிறவி குணம் செய்த மாநந்தி" (பாடல் எண் : 175)

என்ற திருமந்திர அடிகள் சீவான்மா சிவனினின்றும் வேறுபட்டது என்பதை உணர்த்தும்.

மாயை சுத்தமாயை. அசுத்த மாயை, பிரகிருதி மாயை என மூன்று. அவற்றுள், அசுத்தமாயையிலிருந்து உலகம் உண்டாகும் என்ற பொருள் உடைய

"உற்ற முப்பால் ஒன்று மாயாள் உதயமாம்" (பாடல் : 162) என்னும் அடி, மாயை தனிப்பொருள் என்பதை உணர்த்தும்.

(3) குயவன் சக்கரத்தில் வைத்த மண், அவன் மனத்தில் எண்ணிய வடிவத்தைப் பெறும். அதுபோல், சிவன் சங்கற்பிக்க, உலகம் பலப்பல உருவங்களை உடைய பொருள்களுக்கு இடம் ஆகும் என்னும் பொருள் உடைய

"குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணும்
குசவன் மனத்துற்றது எல்லாம் அமையும்;
குசவனைப் போல் எங்கள் கோன் நந்தி வேண்டில்
அசையில் உலகம் அது இது வாமே. (பாடல் 203)

என்ற பாடல், உலகிற்கு ஒரு முதற் காரணம் இருத்தலையும், இறைவன் நிமித்த காரணனாக இருந்து, அதைக் கொண்டு உலகைப் படைப்பதையும் உணர்த்துகின்றது.

மேற்கூறிய காரணங்களால் திருமூலர் சிவாத்துவிதர் அல்லர் என்பது தெளிவாகும். அவர் காபாலிக சைவரோ எனின், அவ்வாறு அன்று. காபாலிகர் கையில் ஏந்தும் மண்டையோடு, பிரம்பு, மாத்திரைக்கோல் ஆகியவற்றை அவர் தவவேடம் என்று குறிப்பிடினும்[1] காபாலிகர் பஞ்சமகாரம் எனக் கூறி வற்புறுத்தும் மத்ய (கள்), மாம்ச (புலால்), மத்ஸ்ய (மீன்), முத்ரா (அவல் உணவு), மைதுனம் (பெண் போகம்) ஆகியவற்றுள் மீன், அவல் என்ற இரண்டு ஒழிந்த பிறவற்றைத் திருமூலர் கண்டிக்கின்றார். இவ்விரண்டினையும் பற்றி அவர் நூலிற் குறிப்பு யாதும் இல்லை. பெண்போகமே யோகமாகத் திருமூலர் விளக்கும் ஒரு யோக முறை சாக்த தந்திரங்களின் தாக்கத்தினால் அவரது நூலில் இடம் பெற்றுள்ளது.

அவர் இலகுலீச பாகுபத நெறியினரோ எனின், அதுவும் பொருந்தாது. பாசுபதர் தீவிரமான சிவபத்தி உடையவர் எனினும், நரபலியில் நம்பிக்கை உடையோர். திருமூலர்

1. *திருமந்திரம்* 1607. *இஃது இடைச்செருகல் எனக் கருத இடம் உண்டு.*

“மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்”[1] எனக் ‘கொல்லாமை வழிபாட்டுச் சாதனங்களுள் ஒன்று – சிறந்த ஒன்று’ என்று கூறுகின்றார். பாசுபதர் ஆணவமலம் என ஒன்றைக் கூறார். திருமூலரோ, மூவகை ஆன்மாக்களைக் கூறுமிடத்தில், ஆணவ மலம் மட்டும் உடைய ஆன்மாக்களை ‘விஞ்ஞானாகலர்’ என்பார்[2]

திருமூலர் சத்தியை இறைவனின் அருள் என்றலின், சாக்தர் அல்லர். அவரது நெறி சுத்த சைவம் என அக்காலத்தில் வழங்கிய நெறியாகும். அந்நெறி அக்காலத்திலேயே, தலைவனாகிய சிவபெருமானின் அருளைப் பெறவில்லையேல் வீடுபேறில்லை என்பதைத் தெளிவுறக் கூறிற்று. அவ்வருளைப் பெறுதற்குச் சிவபூசை, குருபூசை, மாகேசுர பூசை என்ற வழிபாட்டு முறைகளை, ஆகமம் வகுத்த வழியில் செய்தலைத் திருமூலர் எடுத்துக் கூறுகிறார். சீவனையே சிவலிங்கமாகப் பாவித்துச் செய்யும் அக வழிபாட்டைக் கூறுகின்றார். ஆகமங்களின் ஞானபாத முடிவைச் சுருக்கமாகச் ‘சித்தாந்தம்’ எனக் குறிப்பிடுகின்றார். சித்தாந்தம் என்பது, எப்போதும் பரசிவனை நினைத்து, புலன்களிலிருந்து நீங்கி, அசுத்தமாயையும் சுத்த மாயையும் தன்னைத் தொடக்காமல் நின்று, பரசிவனை அடைதல் என்றும் விளக்குகின்றார்.[3] சித்தாந்தம் என்று சைவ நெறியை முதலிற் கூறுபவர் திருமூலரே.

இதுவரை கூறியவற்றால், வைதிக நெறியும் தமிழ் நெறியும் கலந்து உண்டாகிய திருநெறி என்ற சுத்த சைவநெறியின் முதற்பேராசிரியர் திருமூலர் என்று அறியலாம். அவர்க்குப் பின்னர்ச் சமய குரவர்கள் ஆகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர் ஆகியோர் இச்சைவநெறியை, ஆகமக் கருத்துகளை உள்ளடக்கி மிக விரிவாகப் பாடினர். மற்ற திருமுறை ஆசிரியரும் அவர்களைப் போலவே சைவத்தை விளக்கினர். அவ்வாக்குக்களைக் கொண்டும், கயிலாய பரம்பரையில் பரஞ்சோதி முனிவரிடம் பெற்ற உபதேசத்தை வைத்தும் மெய்கண்டார் 13 ஆம் நூற்றாண்டில் ‘சைவசித்தாந்தத் தத்துவக் கட்டளையை’ வகுத்தார்.[4]

நூலின் பெயர்

திருமூலர் தமது நூற் பெயரை யாண்டும் ‘திருமந்திர மாலை’ எனக் கூறவில்லை. இது நூற் பெயர் என்பதற்குப் பலரும் சான்றாகக் காட்டும், “மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை உறைப்பொடுங்கூடி நின்று ஓதலுமாமே” என வரும் அகச்சான்றுள் மந்திரமாலை என்பதன் பொருள் திருவைந்தெழுத்து என்பதாகும். திருமூலர் ‘ஆகமம் செப்பலுற்றேனே’ என்று பாடுகின்றார். திருமந்திரப் பதிப்புகள் அனைத்திலும் “செப்பும்

1. *திருமந்திரம்* 487

2. *திருமந்திரம்* 305

3. *திருமந்திரம், விசு, பதிப்பு* 2373.

4. *திருமூலர் கயிலாய பரம்பரையில் வந்தவர் என, அவரது நூலில், ‘வரலாறு’ என்ற பகுதியால் அறியலாம்.*

சிவாகமம் என்னுமப் பேர் பெற்றும்'' என்ற பாடமே உள்ளது. ஆனால், இப்பொழுதைய பதிப்புக்குக் கிடைத்த சுவடிகளுள், காலத்தாற் பிந்திய சுவடி ஒன்றைத்[1] தவிர, ஏனையவற்றில் ''செப்பும் சதாசிவம் என்னுமிப் பேர்பெற்றும்'' என்ற பாடம் உள்ளது. சிவாகமம் என்பது நூல் வகையின் பெயரே யன்றி நூலின் பெயர் என்றல் சாலாது. ''நந்தி அருளாலே மூலனை நாடிப் பின் நந்தி அருளாலே சதா சிவன் ஆயினேன்'' எனத் திருமூலர் கூறுதலின், தாம் 'சதாசிவன்' எனப் பெயர் பெற்றமைக்கு ஒப்பத் தம் நூலுக்குச் 'சதா சிவ ஆகமம்' எனப் பெயரிடும் திருக்குறிப்புப் பெற்றார் எனக் கொள்ளலாம்.

மற்றொரு பாடலில் ''என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'' (பாடல் 58) எனக் கூறுகின்றார். இதனையே பிறிதொரு பாடலில் 'தமிழ்ச் சாத்திரம்' (பாடல் 63) எனக் கூறுகின்றார். தேவார அடங்கன் முறையில், திருக்கடை காப்பு, தேவாரம், திருப்பாட்டு என்ற மூன்று நூல்களும் அடங்கியமை போலத் திருமந்திர அடங்கல் முறையில் சதாசிவ ஆகமம், திருமந்திர மாலை, உபதேசம் என்னும் மூன்று நூல்களும் அடங்கும் எனக் கொள்ளத் தடையில்லை ஆயினும் திருமூலர் தமிழில் ஆகமம் செய்தார், அதற்கு நந்தியருளால் 'சதாசிவ ஆகமம்' எனப் பெயர் இட்டார் என்பதை மறத்தலாகாது. ஆகமங்கள் யாவும் வடமொழியிலே உளவாக, தமிழில் இவ்வோர் ஆகமம் உளதாதல், தமிழுக்குப் பெருமையன்றோ?

தமிழ் ஆகமம் இறைவன் திருவாக்காகவே வெளிப்போந்தது என்னும் கருத்துப்படத் திருமூலர் 'ஆகமச் சிறப்பு' –அதிகாரத்தில் ''ஆரியமும் தமிழும் உடனே சொலிக் காரிகையார்க்குக் கருணை செய்தானே'' என்று கூறுவதும் காணத் தகும்.

நூலமைப்பு

இந்நூல் 9 தந்திரங்களாக வகுக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. சைவ சித்தாந்த மகா சமாசப் பதிப்பின் முன்னுரையில் 'தந்திரப் பிரிவுகளும் அதிகாரப் பகுப்புகளும் ஆசிரியர் செய்தன வல்ல' என்று எழுதப்பட்டுள்ளது. இப்பொழுது கிடைக்கும் சுவடிகளுள் ஏழில் தந்திரப் பிரிவுகள் இல்லை. மற்றும், சுவடிகளில் இயல் வைப்புமுறை ஒத்திருக்கவில்லை. தந்திரப் பிரிவுகள் தொன்று தொட்டுவரின் இயல் வைப்பு முறையும் மாறாது ஆதலின், தந்திர வகைப்பாடு பிற்காலத்தவரால் செய்யப்பட்டமை தெளிவு.

''ஆகமச் சிறப்பில்'' ''நவ ஆகமம் எங்கள் நந்தி பெற்றானே'' என்றும்,

''பெற்ற நல் ஆகமம் காரணம் காமிகம்
உற்ற நல் வீரம் உயர் வாதுளம் சிந்தம்
மற்றவ் வியாமள மாகுங்கா லோத்தரம்
துற்றநல் சுப்பிரம் சொல்லு மகுடமே''[2]

1. *புதுச்சேரிப் பிரெஞ்சு – இந்தியக் கழகத்துச் சுவடி. (எ – சுவடி)*
2. *திருமந்திரம்* : 97

என்றும் வருவன கொண்டு, குருபரம்பரையாக நந்தி பெற்றவை ஒன்பது ஆகமங்கள் என்றும், அவை காரணம், காமிகம் முதலியவை என்றும் கருதி, திருமூலர் நந்தியின் மாணவர் ஆதலின் அவர்பால் தாம் கேட்ட ஆகமப் பொருளை 9 தந்திரங்களாக வகுத்திருப்பார் என்றும் எண்ணிப் பிற்காலத்தார் இத் தந்திரப் பிரிவைச் செய்திருக்க வேண்டும். ஞானாவரண விளக்கம் என்னும் நூலுக்குப் பேருரை வரைந்த வெள்ளியம்பல வாண சுவாமிகள், ''பெற்ற நல்லாகமம்'' என்ற பாடல் போலிக் கட்டுரை (பிறர் செய்தது) என்று தக்க காரணங்களுடன் கூறியுள்ளார். திருமந்திரத்திற்கு உரையெழுதிப் பதிப்பித்த அருணை வடிவேல் முதலியார் இப்பாடலின் மூன்றாவது அடி பிறர் திரித்துவிட்டது என்று கூறுகின்றார்[1]. அதில் கூறப்படும் யாமளம் சிவாகமம் அன்று, வாம ஆகமம். காலோத்தரம் ஓர் உபாகமம் என்பன அவர் தரும் காரணம். ''காமிகாதி முழுதும் உணர்தற்குச் சில சந்தானத்திற்கு மாத்திரம் குரவர் என வந்து ஒன்பது என வாராது எனச் சிற்றறிவு தோன்றக் கிடத்தலானும்... பாரம்பரியக் கிரமத்தில் உருத்திர தேவாதிகளும் இவ்வொன்பதே பெற்றார், மற்றைய பெற்றிலர் என வருதலானும்'' என்று இவ்வாறு காரணம்காட்டி இப்பாடல் போலிக் கட்டுரை என வெள்ளியம்பல சுவாமிகள் கூறுகின்றார்.

இவ்வாசிரியர் இருவருடைய கருத்தையும் நோக்கும் போது, சிவாகமங்கள் இருபத்தெட்டுள் ஒன்பதை மட்டும் நந்தி பெற்றார் என்று கூறுதலும் அவ்வொன்பதுள் யாமளம், காலோத்தரம் என்னும் இரண்டும் சேர்ந்திருந்தன என்பதும் பொருந்துவன அல்ல என்று அறியலாம். ஆகவே இடைச்செருகலாகிய இப்பாட்டை ஆதாரமாகக் கொண்டு இந்நூலை ஒன்பது தந்திரங்களாகப் பிரித்தமையும் பொருந்தா தாகின்றது. ''நவ ஆகமம் எங்கள் நந்தி பெற்றானே'' என இங்கு ஆசிரியர் கூறுவதைப் பிறிதோரிடத்தும் ''ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழும்''[2] எனக் கூறி ஐயம் அகற்றுகின்றார். 28 சிவாகமங்களும் ஒன்பது வகையாகக் கொள்ளப்படும் என்பது அவர் கருத்து.

மேற் குறிப்பிட்ட ''பெற்ற நல்லாகமம்'' என்னும் பாடலுட் கூறிய ஒன்பது ஆகமங்களின் மொழி பெயர்ப்பாக ஆசிரியர் ஒன்பது தந்திரங்களையும் செய்தார் என நிலவும் கருத்தும் மேற்போந்த காரணத்தால் மறுக்கப்படும்.

பாயிரம்

சுவடிகளுள் தந்திரப் பிரிவு உள்ளவற்றில் மட்டுமே பாயிரம் என்ற பிரிவும் காணப்படுகின்றது. அவற்றுள் புதுச்சேரிச் சுவடியிலும், தருமபுர ஆதினத்துச் சுவடியிலும் 'சிறப்புப் பாயிரம்' என்னும் பெயர் உள்ளது. மற்றொன்று திருவாவடுதுறை ஆதீனத்துச்

1. *திருமந்திரம் முதல் மூன்று தந்திரம் தருமையாதீனப் பதிப்பு, பக்கம்* 98.

2. *திருமந்திரம்* 1415

சுவடி. அதில் பாயிரமா, சிறப்புப் பாயிரமா என்பது தெளிவாக அறியக்கூடவில்லை. தந்திரப் பிரிவு செய்த பிற்காலத்தாரே தந்திரங்களுள் அடங்காதவையாகச் சில இயல்களைப் 'பாயிரம்' அல்லது 'சிறப்புப் பாயிரம்' என்னும் பெயருடன் ஒரு பிரிவாக அமைத்திருத்தல் வேண்டும். இப்பாயிரத்துள் இடைச்செருகலாகப் பல பாடல்கள் உள்ளன எனக் கருத இடம் இருக்கிறது. விசுவநாதப்பிள்ளை பதிப்பின் நூன்முகத்தில் ஒய். வி. இரமண சாஸ்திரி, இப்பிரிவின் 16 பாடல்கள் இடைச்செருகல் என்று எழுதியுள்ளார். இப்போதைய பதிப்பிற்காக ஆராய்ந்த பொழுது 17 பாடல்கள் இடைச் செருகல் என்று அறியப்பட்டன. அவற்றை நீக்கி, உரிய பாடல்களை உரிய இயல்களில் அமைத்த பொழுது, பாயிரத்தின் இயல்களாக முன்னைப் பதிப்புகளில் உள்ள குருபாரம்பரியம், திருமந்திரத் தொகைச் சிறப்பு, குருமட வரலாறு என்னும் இயல்கள் மிகையாதலும் காணப்பட்டது. ஆகவே இப்போதைய பதிப்பில் 'பாயிரம்' என்ற பெயர்இன்றிக் கடவுள் வாழ்த்து, வேதச் சிறப்பு, ஆகமச் சிறப்பு, வரலாறு, அவையடக்கம், திரிமூர்த்தி என்னும் ஆறு இயல்கள் மட்டும் கொள்ளப் படுகின்றன. நூல் முழுதும் தந்திரப் பிரிவு மேற்கொள்ளப்படவில்லை. இயல்கள் வரிசையெண் இட்டுத் தரப்படுகின்றன.

விசுவநாத பிள்ளை பதிப்பில், பாயிரத்தின் முதல் இயல், 'பரசிவப்பிரபாவம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. தருமபுரவாதீனப் பதிப்பு, "ஒன்றவன் றானே" என்னும் பாடலைக் "கடவுள் வாழ்த்து" இயலாகக் காட்டுகின்றது. இப்பாடலில் வாழ்த்தும் குறிப்போ, வணங்கும் குறிப்போ இல்லை. இதனை அடுத்துவரும் "போற்றிசைத்தின்னுயிர்" என்னும் பாடலை "நுதலிய பொருள்" என்றும், அடுத்த இரு பாடல்களை "நூற் சிறப்பு" என்றும் தருமபுரப் பதிப்புக் குறிக்கிறது. இதற்குச் சுவடியாதாரம் காட்டப்படவில்லை. இந்நான்கு போக, எஞ்சிய 46 பாடல்களை மட்டும் இப்பதிப்பு, சிவபரத்துவம் என்ற அதிகாரமாகக் கொள்கின்றது. இதற்கும் சுவடியாதாரம் காட்டப்படவில்லை. இவ்வியலின் இறுதிப் பாடலில் வாழ்த்தி வணங்கும் குறிப்பு உள்ளமையால், இவ்வியல் 48 பாடலும் 'கடவுள் வாழ்த்து' என்பதே பொருந்தும்.

இயல் வைப்புமுறை

திருமந்திரப் பதிப்புகளுள் துடிசை கிழார் அ. சிதம்பரனார் பதிப்பும் (சைவ சித்தாந்தக் கழகம்) தருமை யாதீனப் பதிப்பும் தவிர, ஏனையவை இயல் வைப்புமுறையில் ஒத்திருக்கின்றன. இப்பொழுது உள்ள சுவடிகளுள்,

1) அ, உ ; ஊ ; ஒ

2) ஆ ஐ

3) எ ஒ ; இ ; ஈ

ஆகிய குடிவழி முப்பிரிவுகள் ஒவ்வொன்றும் தம்முள் ஒத்த இயல் வைப்பு முறையை உடையன. இம்முக்குடிகளுள் முதல் இரண்டும் ஒற்றுமை உடையன. மூன்றாவது குடி இவற்றினின்று பெரிதும் வேறுபடுகின்றது. (இவ்வொப்பு நோக்கு, முதல்

இரண்டு தந்திரங்கட்கு மட்டுமே உரியது. இப்பொழுதைய பதிப்பின் இம் முதற்பகுதியில், ஏனைய இயல்களின் முறை வைப்பில், சுவடிகள் தம்முள் பெரிதும் மாறுபடவில்லை.) இயல் வைப்பில் ஒத்துள்ளவையாக மேலே குறிப்பிட்ட பதிப்புகள் இம் மூன்றாவது குடியையே பின்பற்றியுள்ளன. ஆனால் பொருள் தொடர்பு நோக்கில் முதல் இரண்டு குடிவழிகள் கொண்ட வைப்பு முறையே பெரும்பாலும் பொருத்தமாக உள்ளது. அவ்வியல்பை மேலும் ஆய்வு செய்து, வைப்பு முறையை மேற் காட்டிய முதல் இரண்டு குடிவழி ஏடுகளின் முறையினின்று சிறிதே மாற்றி இப்போதைய பதிப்பில் பொருள் இயைபு உடைய ஒரு புதிய வைப்பு முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுவடிகளின் ஒப்பு நோக்கின் விளைவாகக் கிடைத்த இயல் வைப்பு நிரல் பின்னிணைப்பில் தரப்படுகின்றது. இவ்வாய்வில் பாடல்கள் மட்டும் அன்றி, இயல்களும் புதியனவாகச் செய்து இடைச் செருகப்பட்டமை காணப்பட்டது. அவை, முதல் இரண்டு தந்திரங்களுள் மிகுதியாக உள்ளன. அவை, பாத்திரம், அவபாத்திரம், திருக்கோயிலிழிவு, குருநிந்தை, மயேசுர நிந்தை என்பவை. ஏனைய தந்திரங்களிலும் பிற்காலத்தில் செருகிய இயல்கள் உள்ளன. அவை இப்பதிப்பின் அடுத்தடுத்த பகுதிகளில் காட்டப்படும்.

இம்முதற்பகுதியில் மூன்றாந் தந்திரமும் நான்காம் தந்திரத்தின் முதலிரண்டு இயல்களும் அடங்குவதால், அவற்றின் இயல்கள் பற்றிய செய்தி வருமாறு:

இயல் முறை வைப்பிலும் அவற்றின் பெயர் வழக்கிலும் ஒரு சிறு மாற்றமே உள்ளது.

3–ஆம் தந்திரம் – கலை நிலை – இயலை, ஒ–சுவடி மட்டும் 'ஆயுள் பரீட்சை' என்று குறிக்கிறது. ஏனைய சுவடிகளில், 'ஆயுள் பரீட்சை' என்றே ஓர் இயல், 'காலசக்கரம்' என்ற இயலை அடுத்துள்ளது. இதனை ஒ–சுவடி 'காலசக்கரத்திலேயே' பொருத்தம் நோக்கி, அடக்கியுள்ளது. இப்பொழுதைய பதிப்பிலும் இதுவே பின்பற்றப்படுகிறது. முன்னை இயல் 'கலைநிலை' என்றே குறிக்கப்படுகிறது.

ஆயுள் பரீட்சையை, ஈ–சுவடி 'ஆயுசு பரிதேஷம்' எனக் குறிக்கிறது. இது 'ஆயுசு பரிசேதம்' என்பதைப் பிழைபட எழுதியதாயிருக்கலாம். 'பரிசேதம்' என்பது 'எல்லை' எனப் பொருள்படும்.

4–ஆம் தந்திரம் 'அசபை' என்னும் இயலை முதலாவதாகவும், 'திருவம்பலச் சக்கரம்' என்னும் அதிகாரத்தை இரண்டாவதாகவும் உடையது.. இம் முறை வைப்பில், சுவடிகள் தம்முள் மாறுபடவில்லை. ஆனால், ஆ, ஐ – சுவடிகள் (ஒரு குடி வழி) 'அசைவை' என்னும் பெயரிட்டு, 10 பாடல்கள் கொண்டுள்ளன. பிற சுவடிகளில் இவ்வதிகாரம் இல்லை. ஆ, ஐ – சுவடிகளில், 'அசைவை' என்பதை அடுத்து, 'அசபை' அதிகாரம் உள்ளது. எனவே, இச்சுவடிகளின் 'அசைவை'– அதிகாரம் இடைச் செருகல் என்பது தெளிவு.

ஒ–சுவடி, 'அசபையை' 'ஆனந்தத் தாண்டவம்' எனப்பெயர் குறிக்கிறது.

நூலமைப்புப் பற்றிய ஆய்வு

திருமூலர் தமது நூலினை ஆகமம் எனக் குறிப்பிடுகின்றாரேனும் வடமொழியில் உள்ள ஆகமங்களைப் போலச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களாக வகுக்கவில்லை. ஆயினும், இச் செய்திகள் சிறியதும் பெரியதும் ஆகிய அளவில் இந்நூலில் இடம் பெறுகின்றன. அதுபற்றியே சேக்கிழார்,

"ஞான முதல் நான்கும் மலர் நற்றிருமந்திர மாலை"[1]

எனச் சரியை முதலிய நான்குவகை மலர்களால் தொடுத்த மாலையைத் திருமூலர் அமைத்தார் எனக் கூறினார். திருமந்திரத்துள் சரியை, கிரியை, ஞானம் ஆகிய மூன்று செய்திகளைவிட, யோகம் பற்றிய செய்தியே மிகுதியாகவும் தலைமையாகவும் இடம் பெறுகிறது. சைவசமயம் பற்றிய விரிவான சாத்திர நூலாக முதன்முதலில் அருளப்பெற்ற இந்நூல் யோகத்திற்குச் சிறப்பிடம் அளித்து மிக விரிவானதொரு யோகநூலாக இயற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நூல் பதஞ்சலி முனிவரின் யோகசூத்திரத்தைக் காட்டிலும் மிக்க விரிவானது. பதஞ்சலி கூறும் அட்டாங்க யோகத்தை அடிப்படையாகக் கொண்டு அதனைச் சிவயோகமாக வளர்த்துக் காட்டுகிறது திருமந்திரம். இஃது அட்டாங்க யோகம் மட்டுமே கூறி அமையாமை போலக் குண்டலினியோகம், அடயோகம் முதலிய பிறவகை யோகங்களையும் கூறாது, குண்டலினி சத்தியையும் சிவயோக நெறியில் பயன்படுத்தும் முதிர்ச்சி பெற்ற ஒரு நெறியைக் கூறுகிறது. முன்பு எடுத்துக்காட்டியது போல், பிற நெறிகளின் செல்வாக்கால் பரியங்கயோகம் என்னும் யோக வகையைத் திருமூலர் கூறினாலும், அதனையும் சிவநெறிச் சார்புடனேயே கூறியுள்ளார். [2]

திருமூலர் தமது நூலுக்குச் சதாசிவாகமம் என்று பெயரிட்டார் என்பதை முன்பு கூறினோம். அப்பெயருக்கு ஏற்ப இந்நூலின் மையக் கருத்தாகச் சதாசிவ மூர்த்தியை யோக நெறியில் வழிபாடு செய்தலை அமைத்துள்ளார். இம்மையக் கருத்தைச் சார்த்தியே நூலின் இயல்கள் அனைத்தும் அமைக்கப்பட்டுள்ளன.

சதாசிவமூர்த்தியை யோகநெறியில் வழிபாடு செய்தற்காக ஆசிரியர் திருமூலர் 'திருவம்பலச் சக்கரம்' என்னும் மந்திரத்தியான முறையைத் தாமே புதுவதாக அமைத்து விளக்கி உரைக்கின்றார். சக்கரம் என்பதும் மண்டலம் என்பதும் ஒரு பொருட் சொற்கள். சக்கரமுறையில் அமைக்கப்பெற்ற மந்திரமுறையை எழுதிவைக்கும் சாதனத்தை 'இயந்திரம்' என்பர். உடம்பும் ஓர் இயந்திரம் ஆதலின், அதன் கண் மூலக்கனலை எழுப்பிப் பயிலும் யோகத்திற்கு மந்திரங்கள் தியானித்தலை உந்து சக்தியாகக் கொள்ளும்போது இவ்வகை யோகமே ஒரு இயந்திர வழிபாடாகிறது.

திருமூலர் திருவம்பலச்சக்கரத்தில் திருவைந்தெழுத்து மந்திரத்தை, இவ்வைந்தெழுத்துகளும் ஐந்து முறையாக மாறியமையும் அடுக்குகளாக அமைத்து,

1. *பெ. பு. திருமூல. பாடல்* 26.
2. *திருமந்திரம்* 825

திருமந்திர நூல் அமைப்பு

நூல்

அடிப்படைகள்
1. கடவுள் வாழ்த்து
2. வரலாறு
3. அவையடக்கம்
4. வேதச்சிறப்பு
5. ஆகமச்சிறப்பு

சிவ யோக நெறி

ஏனைய மரபுகளால் உணர்த்துவன
1. புராண மரபு
2. உயிர்நிலை பேறு
   - ஐந்தொழில்
   - நிலையாமை
   - நிலைபேறு
3. அறநெறி

சிவயோக முழு நெறி
1. அட்டாங்க யோகம்
2. சிவயோகம்
3. யோகமும் மந்திரங்களும்
4. யோகமும் சத்தியும்
5. யோகமும் சிவமூர்த்தங்களும்

சைவத்தின் பிற படிநிலைகள்
- சைவநெறி தவம்
- பதமுத்தி, பரமுத்தி
- மாணவரும் ஞானாசிரியரும்
- சிவலிங்க வழிபாடு
- திருவருள்
- ஆன்ம இலக்கணம்

சிவ அனுபவம்
1. யோகநெறி – உணர்வு நிலைகள்
2. சிவஞானம்
3. ஒளிப் பேறு
4. திருவைந்தெழுத்து விளக்கம்
5. திருக்கூத்து
6. சிவபோகம்
7. வீடுபேறு

சத்தி–சிவன் இருவருக்கும் உரிய பீஜ மந்திரங்களோடு சேர்த்துத் தியானிக்கும் முறையைக் கூறுகின்றார். இக்காலத்தார் 'சிதம்பர இரகசியம்' எனக் கூறுவது இத்திருவம்பலச் சக்கரமே எனக் கருத இடம் இருக்கிறது. சத்தியும் சிவமுமாகக் கலந்து நிற்கும் இம்மூர்த்தியைச் சிவயோக நெறியில் வழிபாடு செய்வதால், யோகி தனது உச்சந்தலைக்குமேல், தான் காணும் சிதாகாச வெளியில் சிவபெருமானின் ஆனந்தத் தாண்டவத்தைக் காண்பான். அச்சிவத்துடன் உணர்வு கலந்து பேரின்பம் எய்துவான்.

இத்திருவம்பலச் சக்கரத்தில் உள்ள திருவைந்தெழுத்து மந்திரத்தையே திருமூலர், 'மந்திரமாலை' என, தம் வரலாறு கூறும் அதிகாரத்துள் குறிப்பிடுகின்றார் என்று கருதலாம்.

"மறப்பிலர் நெஞ்சினுள் மந்திரமாலை உறைப்பொடும்கூடி நின்று ஓதலுமாமே" (பாடல் எண் : 67) என்பவை அவ்வாறு குறிப்பிடும் பாடல் வரிகளாம். அவர் மாலை எனக் குறிப்பிடுவது திருவம்பலச்சக்கரத்தில் உள்ள அடுக்குகளே யாகலாம். இத்திருவம்பலச் சக்கரமாகிய திருமந்திர மாலை நூலின் மையக்கருத்தாதல் பற்றியே, சேக்கிழார் முதலியோர் நூலினை இப்பெயரால் வழங்கினர் போலும்:

மேற்கூறியவாறு, சதாசிவ யோகத்தை மையக்கருத்தாக உடைய இந்நூல் அவ்யோக நெறியை மேற்கொள்வதற்கான அடிப்படைகளைத் திருவம்பலச் சக்கரம் என்னும் அதிகாரத்திற்கு முன்னுள்ள அதிகாரங்களிலும், இம்மையக்கருத்தின் பொருள் விரிவுகளையும், இதன் பயனாக அடையப்பெறும் சிவபோகம், சிவஞானம் ஆகியவற்றையும் பின்னுள்ள அதிகாரங்களிலும் கூறுகின்றது.

திருமந்திர நூலினை நான்கு பெரும்பிரிவுகளாகப் பிரிக்கலாம். (அவற்றில் அடங்கும் செய்திகளை இங்கு இணைத்துள்ள அட்டவணையில் காண்க.

அவை வருமாறு:

1. அடிப்படைகள்
2. சிவயோக நெறி
3. சைவத்தின் பிற படிநிலைகள்
4. சிவ அனுபவம்

இவற்றைச் சற்றே விளக்குவோம்:

1. அடிப்படைகள்:

சிவயோகம் என்பது சிவனோடு ஒன்றுபடுதல். ஆதலின் சிவபரம்பொருளின் தன்மைகளைக் கூறி வாழ்த்தும் 'கடவுள் வாழ்த்து' முதற்கண் அமைந்துள்ளது. பிற நூல்களில் கடவுள் வாழ்த்து ஒரு பாடலிற் கூறப்படும். இந்நூலில், கடவுளின் இலக்கணம், பரம்பொருட்டன்மை முதலியனவும், நூலாசிரியர்க்கு உடம்பினுள் கடவுள் தரிசனம் தந்த இயல்பும் கூறப்படுகின்றன. எனவே கடவுள் இயல்பு பொதுவாகவும், சிறப்பாகவும் கூறப்பட்டு, அவர் வாழ்த்தப்படுகிறார் எனலாம்.

அடுத்து, நூலாசிரியரின் வரலாறு, தன்மையிடத்தில் வைத்துக் கூறப்படுகின்றது. அதில் ஆசிரியர் தமது குரு பரம்பரை, தாம் இந்நூலினைப் பாடிய இடம், காரணம், நூலின் பெயர், பொருள் ஆகியவற்றைக் கூறுகின்றார்.

பின்னர், அவையடக்கத்தினை யடுத்து, சைவ சமயத்தின் ஆணை நூல்களான வேதம், ஆகமம் ஆகியவற்றின் சிறப்பு ஓதப்படுகின்றது.

2. சிவயோக நெறி:

நூலின் மையப்பகுதி இதுவே. இதனை இரண்டு பிரிவுகளாகக் கூறுகின்றார். அவை,

1. சிவயோகத்தை ஏனைய மரபுகளின் வாயிலாக உணர்த்துதல்.
2. சிவயோக நெறி

என்பவை. முதற்பிரிவு புராண மரபு, நிலையாமை கூறும் மரபு, அறநெறி காட்டும் மரபு— என்ற மூன்று மரபுகளின் வாயிலாகச் சிவயோகத்தை உணர்த்துகின்றது. இரண்டாம் பிரிவு சிவயோகத்தை 5 உட்பிரிவுகளில் முழுமையாகப் பேசுகின்றது.

3. சைவத்தின் பிற படிநிலைகள்:

சைவ சமயம் நான்கு வகை வழிபாட்டு முறைகளைக் கூறும். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை. இவற்றுள், யோகத்தை விரிவாக முன்னர்க் கூறி, ஏனைய முறைகளை இப்பிரிவில் விளக்குகின்றார். அவற்றுள், ஞானப் பகுதியில் குரு, சத்தி நிபாதம், திருவடிப் பேறு என்ற இன்றியமையாச் செய்திகள் இடம் பெறுகின்றன.

4. சிவ அனுபவம்:

சிவ யோகத்தின் பயன் சிவபோகம்; அதுவே சிவ அனுபவம். அதனை இப்பகுதி ஏழு உட்பிரிவுகளில் விளக்குகின்றது.

இவ்வாறு ஒன்றற்கு ஒன்று தொடர்புற அமையும் இப்பிரிவுகள், திருமந்திர நூலினை, மையக் கருத்து ஒன்றுடன் அமைந்த, சிறந்த கட்டமைப்பு உடைய நூல் எனத் தெளிவுறுத்தும்.

நூலின் யாப்பு

ஆசிரியர் இந்நூல் முழுவதையும் கலிவிருத்த யாப்பில் பாடியுள்ளார். பலவகைக் கலிவிருத்தங்களை ஆளாது, ஒருவகையையே ஆண்டுள்ளார். தொல்காப்பிய நெறியில் எழுத்து எண்ணி, முதல் மூன்று அடிகளிலும், அடிதோறும் 12 எழுத்தும், இறுதியடி, நேரசையில் தொடங்கின் 11 எழுத்தும், நிரையசையில் தொடங்கின் 12 எழுத்தும் வரத் தொடுத்துள்ளார். பெரும்பாலும் இயற்சீர் வெண்டளையும் சிறுபான்மை வெண்சீர் வெண்டளையும் இப்பாடல்களில் அமைந்துள்ளன. இத்தகைய கலி விருத்தம் பிற்தொரு நூலிலும் இல்லாமையால், இதனைத் 'திருமந்திர யாப்பு' என்றே வழங்கலாம் என்பர் க. வெள்ளைவாரணனார்.

இது காறும் கூறியவற்றால், சைவ நெறியின் முதல் நூலாகத் திருமூலர் அளித்த திருமந்திரம் என்னும் சதாசிவ ஆகமம், தமிழ்நெறி – வடநெறிக் கலப்பின் சான்றாக நின்று, பிற்காலத்தில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலிய திருமுறை யாசிரியர்கள் வளர்த்த பக்தி நெறிக்கு வித்திடுவதாகவும், சிவயோக நெறியின் ஒப்பற்ற பெரு நூலாகவும் விளங்குவதை அறியலாம்.

பிற்குறிப்பு

இப்பொழுதைய பதிப்பின் ஆசிரியர் சுவடிகட்காகத் தேடியபோது, துறையூர்ச் சிவப்பிரகாச சுவாமிகள் மடத்தில், (1) "திருமூலர் கட்டளை" (2) "உடலறி விளக்கம் – திருமூலர்" என்னும் சுவடிகளைக் கண்டார். அவை திருமூலர் பெயரால் வேறு ஆசிரியர் ஒருவர் அல்லது இருவர் செய்த நூல்கள் எனத் தோன்றுகின்றன.

"திருமந்திரம் எண்ணாயிரம்" என்ற ஒரு நூலினை இராமலிங்க அடிகள் குறிப்பிடுகின்றார். அது மருத்துவ நூலாகும். "சாத்திரங்களுள் சிறந்தது திருமந்திரம்" என அவர் குறிப்பிடுவது தமிழ் மூவாயிரமே.

இப்பதிப்பைப் பற்றிய குறிப்பு

இப்பெருநூலின் இப்பொழுதைய பதிப்பு மூலபாடத்தை ஆய்ந்து, ஆசிரியர் அமைத்த பாடத்தை ஏறத்தாழ ஒத்துள்ள பாடத்தைத் தருவதையே முதன்மை நோக்கமாகக் கொண்டது ஆதலின், பாடல்களின் கருத்துரை, பதவுரை, பொழிப்புரை முதலியவை இன்றிக் கருத்து மட்டும் சுருக்கமாகத் தரப்படுகின்றது. அருஞ்சொற் பொருளும் தரப்படுகின்றன. தேவையான இடத்தில் கருத்து விளக்கம் தரப்படுகின்றது.

இப்பதிப்பில், முன்பு குறிப்பிட்டவாறு 'தந்திரங்கள்' என்ற பிரிவு மேற்கொள்ளப் படவில்லை. முன்பு வெளிவந்துள்ள பதிப்புகளில் உள்ளவாறு இயல் வைப்பு மேற்கொள்ளப்படவில்லை. சுவடி ஆய்வுக்கு ஏற்பவும், பொருட் பொருத்தம் நோக்கியும் அமைக்கப்பட்டுள்ளன. நூலின் முற்பகுதியிலேயே இவ்வைப்புமுறை மாற்றம் பெரிதும் மேற்கொள்ளப்பட்டது.

நூலுள் இரண்டு அல்லது மூன்று முறை வந்த பாடல்கள், பொருட்பொருத்தம், இடப் பொருத்தம் நோக்கி, உரிய இடங்கள் ஒவ்வொன்றில் மட்டும் வருமாறு பதிப்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய இடங்களில், அவை விடப்பெற்றமைக்குரிய குறிப்புச் சேர்க்கப்பட்டுள்ளது. இடைச்செருகல் எனக் கருதத் தக்க பாடல்கள் தத்தம் இடங்களில் அச்சிடப்படுகின்றன. அவை அங்ஙனம் கருதப்பெறற்குரிய காரணங்களின் குறியீடு, வலப்பக்கம் நகக் குறியிட்டுத் தரப்படுகின்றது.

பாடல்கள் சொற்பிரித்து ஒரு முறையும், சீரமைப்புடன் ஒரு முறையும் தரப்படுகின்றன. பின்னையதில் குறிகள் இட்டுப் பாட வேறுபாடுகள் காட்டப்படுகின்றன. புணர்ச்சி எளிதாக உள்ள பாடல்கள் சீரமைப்புடன் மட்டும் இடம் பெறுகின்றன. பாட வேறுபாடு, பாடத் தேர்வு, பாடங்கள் இப்பதிப்பில் திருத்தப்பெற்ற மிகச் சில இடங்கள், யாப்பும் கட்டளையும் சிதையினும், திருத்தப் பெறாமல், சுவடிகளில் உள்ளவாறே பதிப்பிக்கப்பட்ட இடங்கள் ஆகியவை பற்றிய குறிப்பு, பாடவேறுபாட்டை அடுத்துத் தரப்படுகின்றது.

சுருக்கமாக மேற்கோள்கள் இடம் பெறுகின்றன. அடுத்து, அருஞ்சொற் பொருளும், மிகத் தேவையான இலக்கணக் குறிப்பும் அமைகின்றன. மேற்கண்டவற்றில் வரும் சைவசித்தாந்த, யோகநூற் கலைச் சொற்களுள் உரியவற்றுக்கு விளக்கம், "கலைச் சொல் விளக்கம்" என்ற தலைப்பிட்டுப் பின்னிணைப்பாகத் தரப்படுகின்றன.

பின்னிணைப்பில், மேற்கூறியதோடு, இன்றியமையாத பல நிரல்களும் இடம் பெறுகின்றன.

இடைச் செருகல் : காரணங்களும் குறியீடுகளும்

இப்பதிப்பில், இம் முதற் பகுதியில் 152 பாடல்கள் இடைச்செருகல் எனக் கருதப்பட்டு, அவை வரும் இடங்களிலேயே தரப்படுகின்றன. ஒவ்வொரு பாடலின் முடிவிலும் தரப்படும் குறியீட்டினால், அப்பாடல் இடைச்செருகல் எனக் கருதப்படுதற்குரிய காரணம் சுட்டப்படுகிறது. இக் குறியீட்டு விளக்கம் இங்குத் தரப்படுகின்றது. இக்காரணங்கள் 21 ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பிட்ட பாடல் இடைச்செருகல் எனக் கருதப்படுதற்கு இவற்றுள் 1 முதல் 3 காரணங்கள் வரை குறிக்கப்படுகின்றன.

சுவடிகளில் இல்லாமை என்னும் காரணம் காட்டப்படுங்கால், குறிப்பிட்ட பாடல் எத்துணைச் சுவடிகளில் இல்லை என்பது அடிக் குறிப்பில் காட்டப்படுகின்றது. பிற இன்றியமையாத குறிப்புகளும் தரப்படுகின்றன.

எண்	காரணம்	குறியீடு
1.	கூறியது கூறல்	அ
2.	பொருட் சிறப்பு இன்மை	ஆ
3.	பொருட் பிழை உடைமை	இ
4.	பொருள் தெளிவு இன்மை	ஈ
5.	இயலின் பெயர்க்குப் பொருந்தாமை	உ
6.	இயலின் பிற பாடலுடன் கருத்து மாறுபடுதல்	ஊ
7.	இயலின் பிற பாடலை வடிவால் ஒத்தல்	எ
8.	ஆசிரியர் கருத்துடன் மாறுபடுதல்	ஏ
9.	ஆசிரியர் நூல்கூறும் முறையுடன் மாறுபடுதல்	ஐ
10.	ஆசிரியரைப் படர்க்கையில் குறிப்பிடுதல்	ஒ
11.	ஆசிரியரின் வரலாற்றோடு மாறுபடுதல்	ஓ
12.	நடைச் சிறப்பு இன்மை	ஔ
13.	ஆசிரியரின் நடைக்கு மாறுபடுதல்	க
14.	பிற்காலச் சொல் வழக்கு உடைமை	ங
15.	பொருந்தாச் சொல்லாட்சி, பொருந்தாத் தொடர் உடைமை	ச
16.	சொல்லாட்சியும் நடையும் சிறப்பு இலவாதல்	ஞ
17.	யாப்புப் பிழை உடைமை	ட
18.	இலக்கணப் பிழை உடைமை	ண
19.	வேறுநூற் செய்தி உடைமை	த
20.	நூற்பொருளோடு பொருந்தாமை	ந
21.	சுவடிகளில் இல்லாமை	ப

சொற்சுருக்க விளக்கம்

1.	சிவ. சித்	..	சிவஞான சித்தியார்
2.	சிவ. போ	..	சிவஞானபோதம்
3.	தாயுமான	..	தாயுமானவ சுவாமிகள் பாடல்
4.	திருவா	..	திருவாசகம்
	அ) சிவபு	..	சிவபுராணம்
	ஆ) திருவண்	..	திருவண்டப் பகுதி
	இ) திருப்பள்ளி	..	திருப்பள்ளியெழுச்சி
	ஈ) போ. திரு.	..	போற்றித் திருவகவல்
	எ) கோ. மூ. ப	..	கோயில் மூத்த திருப்பதிகம்
	ஏ) திருச்சத		திருச்சதகம்
5.	திருவாய்	..	திருவாய் மொழி
6.	திருமந்.	..	திருமந்திரம்
	அ) பரியங்க	..	பரியங்க யோகம்
7.	பெ. புரா	..	பெரிய புராணம்
	அ) திருஞான	..	திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணம்.

இயல் நிரல்

பொருள் மாலை

10. தக்கன் வேள்வி

தேவர்களுக்குப் பாடம் 157 - 162, இறைவன்
கருணை 163, நல்ல யாகமும் கொடிய யாகமும் 164 - 165

11. பிரளயம்

சிவபரத்துவம் 166 - 170

12. சக்கரப் பேறு

திருமால் பெற்ற பேறு 171 - 173,

திருமாலின் செருக்கு அடங்குதல் 174

13. எலும்பு கபாலம்

புனிதம் காத்தல் 175

14. அடிமுடி தேடல்

சிவனது அளப்பரிய தன்மை 176 - 177,
திருவடியே சத்தி 178, உலகம் சத்தி மயம் 179 - 180,
சிவனும் மும்மூர்த்திகளும் 181 - 182,
அருள் பெறும் வழி 183 - 185

15. அதோமுக தரிசனம்

அதோ முகத்தின் செயலுக்குச் சான்று 186,
மூலக்கனலை மேலேற்றுவது அதோமுகம் 187 - 189,
செயல்களுக்கு உதவும் சத்திகள் தோன்றுவது
அதோ முகத்தால் 190 - 191

16. சர்வ சிருட்டி

பரசிவன் – பராசத்தி நிலைகள் 192 - 195,
படைப்பில் சிவ சத்தி 196 - 199,
கடவுளர்க்குள் நிற்பவன் 200, 202 - 204,
உயிர்வகைக்குள் நிற்பவன் அவனே 205 - 206,
படைப்பின் நோக்கு 207,
ஐந்தொழில் அதிகாரிகள் 208 - 219

17. திதி

'ஒன்றாதல்' 220 - 223, சிவன் தரும் ஆக்கம் 224 - 229

18. சங்காரம்

எல்லாம் எரித்து அழிப்பான் 230 - 232,
அருளில் ஒடுங்கச் செய்வதும் நெருப்பே (மூலக் கனலே) 233,
ஒடுக்கம் பல 234 - 236, 238, 239

34. அன்பு செய்வாரை அறிவன் சிவன்

இறைவன் அருளும் வகை 447 - 456

35. கல்வி

மெய்யறிவு 457 - 459,
ஒளியுடம்பு பெறலாம் 460 - 461,
இறைவனோடு கலத்தல் 462 - 463, அருளே துணை 464 - 466

36. கேள்வி கேட்டு அமைதல்

கேட்டலின் பயன் 467 - 468,
சிறப்புப் பயன் 471 - 472, உணர்வின் தேடுதல் 473 - 476

37. கல்லாமை

அருளால் காணல் 477, 478,
பிற கல்வி பயனற்றது 479, உலகை வெல்க 480 - 481,
எங்குமாகிய இறைவனைக் காண்க 482 - 483,
அறியாமை 484 - 485, பதி ஞானம் 486

38. கொல்லாமை

உயிர்களைக் காத்தல் அருள் பெறும் வழி 487 - 490

39. பிறர் மனை நயவாமை

அறியாமையின் விளைவு 491 - 493

40. மகளிர் இழிவு

அழகின் வஞ்சனை 494 - 495,
ஏமாற்று 496 கேடு 497 - 498

41. நல்குரவு

வறுமையின் கேடு 499,
உணவை விரும்ப வேண்டாம் 500 - 502, துன்பம் 503

42. கள்ளுண்ணாமை

பழக்கத்தை மாற்றுக 504 - 505,
அறிவை இழக்காமல் வளர்க்க 506 - 508,
நன்மை இல்லை, தீமை 509 - 510,
வாம நெறி மறுப்பு 511-514, அமுத பானம் 515 - 516

43. சிவநிந்தை

சிவனை இகழ்வதும், வெறுப்பதும் கேடு 517 - 520

44. பொறையுடைமை

ஒருமை 530, சரணாகதி 532

58. திருவம்பலச் சக்கரம்

உ
சிவமயம்

திருமந்திரம்

விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்து இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து, அடி போற்றுகின்றேனே.

[1] ஐந்து கரத்தனை யானை முகத்தனை
[2] யிந்து விளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

வேறு பாடம்: 1. அந்தி நிறத்தனை. 2. யிந்தினிளம் பிறை

இந்து-சந்திரன். ஞானக்கொழுந்து-ஞானத்தின் பயன்.

குறிப்பு:-சுவடிகளில் இப்பாடலுக்கு வரிசையெண் இடப்பெறவில்லை. ஆ, உ - சுவடிகளில் இப்பாடல் இல்லை. எ-சுவடியில் இதன் தலைப்பு "விநாயகர் காப்பு" என உள்ளது. நான்கு சுவடிகளில் "கடவுள் வாழ்த்து" என்னும் அதிகாரம் இதனுடன் தொடங்குகின்றது. திருமூலர் "ஒன்றவன்தானே" எனத் தொடங்கி நூல் செய்தார் எனச் சேக்கிழார் கூறுதலால் (பெ.பு.திருமூல: 26) இது பிற்சான்றோர் வாக்கு.

1. கடவுள் வாழ்த்து

ஒருவனே தேவன்

1. ஒன்று அவன்தானே; இரண்டு அவன் இன்னருள்;
நின்றனன் மூன்றினுள்; நான்கு உணர்ந்தான்; ஐந்து
வென்றனன்; ஆறு விரிந்தனன்; ஏழு உம்பர்ச்
சென்றனன்; தான்இருந்தான்; உணர்ந்து எட்டே.

ஒன்றவன் றானே யிரண்டவ னின்னரு[1]
ணின்றனன் [2]மூன்றினு ணான்குணர்ந் தானைந்து
வென்றன னாறு விரிந்தன னேழும்பர்ச்[3]
[4]சென்றனன் றானிருந் தானுணர்ந் தெட்டே. (1)

வேறு பாடம் : 1. றன்னரு (ஊ) III 2. மூன்றினும் (ஐ) III 3. ஏழின் பால் (ஆ ஊ) IV; ஏழும்பார் (பா 3) 4. சென்றவன் (ஆ ஊ எ) I.

கருத்து: ஒன்றாய் உள்ளவன் சிவபரம்பொருள்; அவனது அருட் சத்தியை வேறாகக் கருதினால், அப்பொருள் சிவம், சக்தி என இரண்டு. மூன்றாவதாகிய ஆன்மாவினுள் நிற்கின்றான். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை உணர்பவன். புலன் ஐந்தும் வென்றோன். வன்னம், பதம், மந்திரம், கலை, புவனம், தத்துவம் என்னும் அத்துவாவாக விரிந்தவன். ஏழு உலகத்தையும் கடந்தவன். நெஞ்சே, அவனை உணர்ந்து எய்துக.

'ஓம்' என்னும் பிரணவத்தில் அகரம் ஆன்மா, உகரம் சத்தி, மகரம் சிவம் என ஆசிரியர் பின்னர்க் கூறுவர். (திருவம்பலச்சக்கரம்: பா. 966) அதன்படி, சிவம், சத்தி தவிர, ஆன்மா மூன்றாவது ஆகும்.

குறிப்பு:-சேக்கிழார் கூற்றுப்படி, திருமந்திர நூலின் முதற் பாடல் இதுவே. ஈ, எ - இரு சுவடிகளைத் தவிர ஏனையவற்றில் "கடவுள் வாழ்த்து" என்னும் அதிகாரமே தொடர்கின்றது. இவ்விரண்டிலும் அதிகாரப் பெயர் வெவ்வேறு. ஈ - "திருமந்திரப் பாயிரம்; எ- "சிறப்புப் பாயிரம்". இப்பதிப்பில் பாயிரம், தந்திரம் என்னும் பிரிவுகள் மேற்கொள்ளப் படவில்லை. விளக்கம் ஆய்வு முன்னுரையிற் காண்க. ஆசிரியர் கடவுள் வாழ்த்தினைப் பிறர் போல் ஒரு பாடலில் முடிக்காமல் ஓர் இயலாக அமைக்கின்றார் ஆதலின், இவ்வியல் இறுதிப் பாடலில் "பிரான் என்று பாடுவன் பன்மலர் தூவித் தொழுது நின்று ஆடுவன்" என வாழ்த்தி வணங்குகின்றார்.

எமனுக்கு எமன்

2. போற்றிசைத்து இன்னுயிர் மன்னும் புனிதனை
நால் - திசைக்கும் நல்ல மாதுக்கு நாதனை
மேல் - திசைக்குள் தென்-திசைக்கு ஒரு வேந்தனாம்
கூற்று உதைத்தானை யான் கூறுகின்றேனே.

[1]போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் குந்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குட்டென் றிசைக்கொரு வேந்தனாங்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே. (2)

வேறு பாடம் : 1. போற்றிசைக் கின்னுயிர் (இ) I ; போற்றிசைத் தென்னுயிர் (உ) I.

கருத்து: உயிரினுள் உறையும் தூயோன். உயிர்க்கெலாம் தலைவன். சத்தியின் தலைவன். என் தலையின் பின்புறத்தில் விளங்குபவன். எமனை உதைத்தவன். அவனைப் பாடி வணங்குகிறேன்.

யோகிக்குத் தலையின் பின்புறம் மேற்கு என்பர். பிடரியில் உள்ள கண் உதிக்கப் பெற்றோர்க்கு இறப்பில்லை என்பது குறிப்பு. இந்நூல், "பக்குவன்" இயலில், - "குணக்கொடு தெற்கு உத்தர பச்சிமம் கொண்டு, உணர்த்துமின் ஆவுடையான் தன்னை உன்னியே" (பா. 1684) - என வருவது காண்க.

குறிப்பு. அ. உ. எ. ஒ - சுவடிகளில் இது முதற்பாடலாக உள்ளது.

ஒன்றாய், வேறாய், உடனாய்...

3. ஒக்க நின்றானை, உலப்பு - இலி தேவர்கள்
நக்கன் என்று ஏத்திடும் நாதனை, நாள்தொறும்
பக்கம் நின்றார் அறியாத பரமனைப்
புக்கு நின்று, உன்னி, யான் போற்றிசெய்வேனே.

ஒக்கநின் றானை யுலப்பிலி தேவர்க
[1]ணக்கனென் றேத்திடு நாதனை நாடொறும்
பக்கநின் றாரறி யாத பரமனைப்
புக்குநின் [2]றுன்னியான் போற்றிசெய் வேனே. (3)

வேறு பாடம் : 1. ணக்கு நின் (சுவடிகள்) I 2. றானையான் (பா.1)

2 ஆம் அடி 1 ஆம் சீர்க்குப் பதிப்புகளில் உள்ள பாடமே கொள்ளப்பட்டது.

கருத்து: உடனாக நிற்போன். வியாபகன் என்று தேவர்கள் போற்றும் நாதன். முத்தி பெற்றோரும் அறியாப் பரமன்- இவ்விறைவனது அருளில் அடங்கி, நினைந்து போற்றுவேன்.

மண்ணும் விண்ணும் அவனே

4. அகல்-இடத்தார் மெய்யை, அண்டத்து வித்தை,
புகல்-இடத்து என் மெய்யைப் போத விட்டானைப்
பகல்-இடத்தும் இரவும் பணிந்து ஏத்தி
அகல்-இடத்தே இருள் நீங்கி நின்றேனே.

அகலிடத் தார்மெய்யை யண்டத்து வித்தைப்
புகலிடத் [1]தென்மெய்யைப் [2]போதவிட் டானைப்
பகலிடத் தும்மிர [3]வும்பணிந் தேத்தி
[4]யகலிடத் தேயிரு ணீங்கிநின் றேனே. (4)

வேறு பாடம்: 1. தெம்மையே (இ ஈ ஓ) (பா 3) (பா 1); தெம்மெய்யைப் (அ ஆ எ) II ; தென்றனைப் (விசு) 2. போக விட்டானைப் (ஆ ஈ ஊ) I 3. வும்பதுமப்பா (பா 1) 4. யிகலிடத்தே (ஆ எ ஓ) (பா 1) II

கருத்து: உலகில் நிலவும் உண்மைப் பொருள். வானுலகின் வித்து. என் உடம்பை மறையச் செய்தவன். அவனை எப்போதும் வணங்கி அறியாமை நீங்கப் பெற்றேன்.

புகலிடம் - பொதிந்து வைத்த இடம். உடம்பை மறைவித்தமை ஆசிரியர் தன்வரலாற்றுக் குறிப்பு.

சிவனை ஒத்தார் யார்?

5. சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை;
அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை;
புவனம் கடந்த அன்று பொன் ஒளி மின்னும்
தவனச் சடை முடித் தாமரையானே.

[1]சிவனொடொக் குந்தெய்வந் தேடினு மில்லை
[2]யவனொடொப் [3]பாரிங் கியாவரும் மில்லை
புவனங்க டந்தன்று பொன்னொளி மின்னுந்
[4]தவனச் சடைமுடித் தாமரை யானே. (5)

வேறு பாடம்: 1. சிவனொடொப் பாந்தெய்வந் (ஒ) (பா.1) I 2. யிவனொடொப் (ஆ) II 3. பாரிங்ஙன் (ஒ) (பா 1) I 4. தவளச் (பா 1)

கருத்து: புவனங்கள் தோற்றுவதற்கு முன்னே ஒளிதிகழ்பவன். சூரியன் போன்ற சடைமுடி உடையோன். என் தலையுச்சியில், சகஸ்ராரத் தாமரையில் பொலிபவன். இத்தகைய சிவனோடு ஒப்பாகும் தெய்வம் இல்லை.

தா மரை - தாவும் மான் எனலும் ஆம். கடந்த அன்று - வேறாக நின்று படைத்தலும், அழித்தலும் செய்தபோது.

குறிப்பு: இப்பாடலை யடுத்துச் சுவடிகளிலும், பதிப்புகளிலும் உள்ள "அவனை யொழிய" என்னும் பாடல், பின்னர்த் "திரிபுரைச் சக்கரம்" - இயலில், சிறு வேறுபாட்டுடன் வருகின்றது. அஃது அங்கு இருப்பதே பொருத்தம். ஆதலின், இங்கு விடப்படுகின்றது.

ஒப்பிலி; அப்பன்

6. முன்னை ஒப்பாய் உள்ள மூவர்க்கும் மூத்தவன்
தன்னை ஒப்பார் என்றும் இல்லாத் தலைமகன்
"அன்னை, அப்பா" என்னில் அத்தனுமாய் உளன்
பொன்னை ஒப்பு ஆகின்ற போதகத்தானே.

முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
றன்னையொப் [1]பாரென்று மில்லாத் தலைமக
[2]னன்னையப் பாவென்னி [3]லத்தனு மாயுளன்
பொன்னையொப் பாகின்ற போதகத் தானே[4]. (6)

வேறு பாடம்: 1. பாயொன்று (அ எ) I 2. றன்னையப் (உ எ) I; றன்னையொப்பாமென்னி லப்பனு (பதிப்) 3. லப்பனு (பா 3) 4. தானுமே (இ ஈ ஊ ஒ) (பா 1) I

கருத்து: யானைத்தோற் போர்வையை உடைய சிவபெருமான் தம்முள் ஒத்த மும்மூர்த்திகட்கும் முன்பே உள்ளோன். இணையற்ற தலைவன்;

அம்மையே, அப்பா என்று அழைக்கும் அன்பர்க்குத் தாயாகித், தந்தையுமானவன்.

போதகம்-யானை. அதன் தோலுக்கு ஆகியது.

எளிமையும் அன்பும்

7. தீயினும் வெய்யன், புனலினும் தண்ணியன்;
ஆயினும் ஈசன் அருள் அறிவார் இல்லை;
சேயினும் நல்லன்; நணியவன் அன்பர்க்கு;
தாயினும் நல்லன்; நல் தாழ்சடை யோனே.

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணிய[1]
னாயினு மீச னருளறி வாரில்லை
சேயினு [2]நல்ல [3]னணியவ னன்பர்க்குத்
தாயினு நல்லனற் றாழ்சடை யோனே. (7)

வேறு பாடம்: 1 நண்ணிய (ஆ) I. 2. மல்ல (ஊ ஒ) I சேயனு மல்லன் (த) 3. னணிய (அ ஊ); னணியனல் லன்பர்க்கு (எ) (பா 3) II.

கருத்து: தீயை விட வெய்யவன்; அதே சமயம், அன்பர்க்கு நீரை விடக் குளிர்ச்சி யானவன். ஆயினும் யாரும் அவனது அருட் சத்தியை அறியார். அவன் அன்பருக்குக் குழந்தையை விட எளியன். அண்மையில் இருப்பவன். தாயினும் பரிவுடையோன்.

தெய்வத்தின் தெய்வம்

8. பொன்னால் புரிந்திட்டது பொற்சடை முடி
பின்னால் பிறங்க இருந்தவன்; பேர் நந்தி;
என்னால் தொழப்படும் எம் இறை; மற்று அவன்
தன்னால் தொழப்படுவார் இல்லைதானே.

பொன்னாற் [1]புரிந்திட் டதுபொற் சடைமுடி[2]
[3]பின்னாற் பிறங்க விருந்தவன் பேர்நந்தி
யென்னாற் றொழப்படு மெம்மிறை மற்றவன்
றன்னாற் றொழப்படு வாரில்லை தானே. (8)

வேறு பாடம்: 1. புரிந்திட்ட பொற்சடையென்னப் (எ) IV; குடையென்னப் (பா 1) 2. புரிசடை (அ) III 3. மின்னாற் (ஊஜ) III.

கருத்து: பொன்னால் செய்யப்பட்டது போன்ற சடை முதுகில் புரள வீற்றிருப்பவன்; நந்தி; என் இறைவன்; மகாதேவன். அவன் யாரையும் தொழ வேண்டுவதில்லை.

பின்னால் - பின்னலினால் எனலுமாம். இஃது இயற்கைப் பின்னல்.

நீரும் நெருப்பும்

9. தானே இருநிலம் தாங்கி விண்ணாய் நிற்கும்;
தானே சுடும் அங்கி, ஞாயிறும் திங்களும்;
தானே மழை பொழி தையலுமாய் நிற்கும்;
தானே வடவரை, தண்கடல் ஆகுமே.

தானே யிருநிலந் தாங்கிவிண் ணாய்நிற்குந்
தானே சுடுமங்கி [1]ஞாயிறுந் திங்களுந்
தானே [2]மழைபொழி தையலு மாய்நிற்குந்
தானே [3]வடவரை [4]தண்கட லாகுமே. (9)

வேறு பாடம்: 1. நாயறுந் (ஆ இ ஈ உ ஓ) I 2. மறை பொழி (ஐ) I 3. தடவரை (பா 3) 4. தருகட (பா 1)

கருத்து: அவனே பூமியைத் தாங்குவோன். ஆகாயமாய்க் கவிப்போனும் அவனே. தீ, சூரியன், சந்திரன் என்னும் முச்சுடரும் அவனே. மழை பொழிவிக்கும் அருட் சத்தியும் அவனே. இமயமும் இமிழ்கடலும் அவனே.

வினையும் விளைவும்

10. அயலும் புடையும் எம் ஆதியை நோக்கில்
இயலும் பெருந்தெய்வம் யாதும் ஒன்று இல்லை;
முயலும், முயலின் முடிவும் மற்று ஆங்கே
பெயலும் மழைமுகில்; பேர் நந்தி தானே.

அயலும் புடையுமெம் மாதியை நோக்கி
[1]லியலும் பெருந்தெய்வ மியாதுமொன் றில்லை
முயலு முயலின் முடிவுமற் றாங்கே
பெயலு [2]மழைமுகில் பேர்நந்தி தானே. (10)

வேறு பாடம்: 1. யியலும் (ஆ ஊ எ) II; னியலும் (விசு) 2. முகிற் (விசு)

கருத்து: எம் முதல்வனை நோக்கப் பெருந்தெய்வம் வேறில்லை. முயற்சியும் பயனுமாக விளங்கி, அருள்மழை பொழியும் மேகம் அவன்.

புடை -பக்கம். அயலும் பக்கமும் பெருந்தெய்வம் இல்லை எனக்கூட்டுக. முயல் - முயற்சி. முதனிலைத் தொழிற்பெயர். பெயல் - நீர்த்தாரை. பெயல் மழைமுகிலும் என உம்மையைப் பிரித்துக் கூட்டுக.

அவனே தலைவன்

11. கண்ணுதலான் ஒரு காதலின் நிற்கவும்
எண்இலி தேவர் இறந்தார் எனைப் பலர்;
மண் உறுவார்களும் வான் உறுவார்களும்
அண்ணல் இவன் என்று அறியகிலார்களே.

கண்ணுத லானொரு [1]காதலி னிற்கவு
மெண்ணிலி தேவ ரிறந்தா ரெனைப்பலர்[2]
மண்ணுறு வார்களும் வானுறு வார்களு
மண்ண லிவனென் [3]றறியகி லார்களே. (11)

வேறு பாடம்: 1. காதல (இ உ) IV ; காதலன்றாகவு (ஓ) II 2. ரெனப்பலர் (ஆ இ ஈ ஊ) I 3 . றறியகில்லாரே (விசு)

கருத்து: நெற்றிக்கண் ஈசன் அருளுடன் என்றும் இருக்க, எத்துணையோ தேவர் இறந்தனர். ஆனால், மக்களும் தேவரும் அவனை முதல்வன் என உணரவில்லை.

காதலின் - மூன்றாம் வேற்றுமை 'இன்' - உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது.

உள்ளான், இல்லான்

12. மண் அளந்தான், மலரோன் முதல் தேவர்கள்
எண் அளந்து இன்னம் நினைக்கிலர் ஈசனை;
விண் அளந்தான் தன்னை மேல்அளந்தார் இல்லை;
கண் அளந்தான் எங்கும்; கடந்து நின்றானே.

மண்ணளந் தான்மல ரோன்முதற் றேவர்க
ளெண்ணளந் தின்ன [1]நினைக்கில ரீசனை
விண்ணளந் தான்றன்னை மேலளந் தாரில்லை
கண்ணளந் [2]தெங்குங் கடந்துநின் றானே. (12)

வேறு பாடம்: 1. நினைக் கல்லா (ஊ) II; நினைக்கிலா (விசு)
2. தானெங்குங் (இ ஈ) II.

கருத்து: சிவன் எப்பொருளிலும் கலந்தும் அவற்றைக் கடந்தும் விளங்குகின்றான். ஆதலால் திருமால், பிரமன் முதலியோரும் அவனை அறியார்.

எண் - அறிதல். அறிதலில் தோற்று, அதனால் நினையாமலும் உள்ளனர். விண் - அண்டம். கண் அளத்தல் - கலந்து நிற்றல். கண், இடத்தையும் குறித்துப் பொருள்கட்கும் ஆகியது.

அனைத்தும் பார்க்கின்றான்

13. கடந்துநின்றான் கமல மலர் ஆதி;
கடந்துநின்றான் கடல்வண்ணன் எம் மாயன்;
கடந்துநின்றான் அவர்க்கு அப்புறம் ஈசன்;
கடந்துநின்றான் எங்கும் கண்டு நின்றானே.

கடந்துநின் றான்கம லம்மல ராதி
கடந்துநின் றான்கடல் வண்ணனெம் மாயன்
கடந்துநின் றானவர்க் கப்புற மீசன்
கடந்துநின் [1]றானெங்குங் கண்டுநின் றானே. (13)

வேறு பாடம்: 1. றெங்குங் (ஓ) (பா 1) I.

கருத்து: பிரமன் உலகைக் கடந்தவன்; திருமால் அவனைக் கடந்தவன்; ஈசன் திருமாலையும் கடந்தவள். மும் மூர்த்திகள் நிலை இது. சிவபரம்பொருள் இவர்களையும் கடந்து நின்று, எல்லாம் கண்டு நிற்பவன்; சர்வ சாட்சி.

சோதியுடம்பு ஆக்குவான்

14. ஆதியுமாய், அரனாய், உடலுள் நின்ற
வேதியுமாய் இருந்தான்; திருந்து ஆரருள்-
சோதியுமாம் சுருங்காதது ஓர் தன்மையுள்
நீதியும் ஆய், நித்தம் ஆகி நின்றானே.

ஆதியு மாயர [1]னாயுட லுண்ணின்ற
[2]வேதியு [3]மாயிருந் [4]தான்றிருந் தாரருட்
சோதியு மாஞ்சுருங் காததோர் தன்மையு[5]
[6]ணீதியு மாய்நித்த [7]மாகிநின் றானே. (14)

வேறு பாடம்: 1 னாமுட (ஆ இ ஈ ஓ) (பா 1) ; னாயுமுட (அ) I 2. சோதியு (ஊ) I; வோதியு (ஆ) I; 3. மாயிருந்தார் (ஆ இ ஈ ஊ) I; மாய் விரிந்தார்ந்திருந்தான் (எ) I; மாய்விருந்தார்ந்திருந் (பா 1) 4. றிருந்தாருடன் (அ) I 5. கண்ணினு (ஓ) II 6. நீதியு (அ ஆ இ ஈ) I 7. மதாகிநின் (பா 1)

கருத்து: பரம்பொருள் ஆதி யாகவும், உருவ இறைவனாகவும், நம் உடம்பினுள் நின்று அதைச் சோதியுடம்பாக மாற்றம் செய்பவனாகவும் உள்ளான். அருட்சோதி. யாவர்க்கும் அருள் வழங்குவதில் நீதிமான். அழியாப் பொருள்.

வேதி - மாற்றம். இங்கு அதைச் செய்பவனைக் குறித்தது. தன்மையுள்- தன்மையில்.

பித்தனை வணங்குவது ஏன்?

15. கோது குலாவிய கொன்றைக் குழல்-சடை
மாது குலாவிய வாள்-நுதல் பாகனை
யாது குலாவி அமரரும் தேவரும்
கோது குலாவிக் குணம் பயில்வாரே?

கோதுகு லாவிய கொன்றைக் குழற்சடை
மாதுகு லாவிய வாணுதல் பாகனை
யாதுகு லாவி யமரருந் தேவருங்
கோதுகு லாவிக் குணம்பயில் வாரே. (15)

கருத்து: சடையில் கொன்றை மாலை அணிந்தவன். உமை ஒரு பாகன். மூவரும் தேவரும் இவனது பித்தினையே குணமாகக் கொண்டாடிச் சார்வது எதற்காக?

கோது (1 ஆம் அடி) - கொழுது என்பதன் மரூஉ. முதனிலை திரிந்த தொழிற்பெயர். குழற்சடை - குழலுதலை (சுருளுதலை) உடைய சடை. மாது - விருப்பம். வாள் நுதல்-ஒளி திகழும் நெற்றியை உடைய உமையம்மை. அன்மொழித் தொகை. குலாவி (3 ஆம் அடி) - எண்ணி. கோது (4 ஆம் அடி) - குற்றம். குணம் குலாவி என மாற்றுக.

மகேசன் உறவு

16. காயம் இரண்டும் கலந்து கொதிக்கினும்
மாயம் கத்தூரி-அது மிகும்; அவ்வழி
தேயம் கலந்து ஒரு தேவன் என்று எண்ணினும்
ஈசன் உறவுக்கு எதிர் இல்லை தானே.

காய மிரண்டுங் கலந்து கொதிக்கினு
[1]மாயங்கத் தூரி யதுமிகு மவ்வழி
[2]தேயங் கலந்தொரு தேவனென் றெண்ணினு
மீச னுறவுக் கெதிரில்லை தானே. (16)

வேறு பாடம்: 1 மாயங்க ளேகூரி (பா 1) 2. தேசங் (ஆ இ ஊ எ ஓ) I

கருத்து: பெருங்காயமும் கத்தூரியும் கலந்து கொதிக்க வைத்தால், பின்னதன் மணமே மிகுந்து நிற்கும். அது போல, மக்கள் சிவபெருமானை ஏனைய தேவருடன் ஒப்ப வைத்து எண்ணினாலும், அவனுடன் கொள்ளும் உறவே சிறந்தது.

வரம் தரும் வள்ளல்

17. அதிபதி செய்து அவ் அளகை நகரை
நிதிபதி செய்த நிறைதவம் நோக்கி
அதுபதி ஆதரி ஆக்கம்-அது ஆகி
"இதுபதி கொள்" என்ற எம் பெருமானே.

[1]அதிபதி செய்தவ் வளகை நகரை
[2]நிதிபதி செய்த நிறைதவ நோக்கி
யதுபதி [3]யாதரி யாக்கம தாகி
யிதுபதி கொள்ளென்ற வெம்பெரு மானே. (17)

வேறு பாடம்: 1. செய்து அளகை வேந்தரை (தி); செய்த வளகை (அ ஆ இ ஊ எ ஓ) V செய்து அளகையர் வேந்தனை (த) 2. நெதிபதி (எ) (ஊ) I. 3. யாதரித்தாக்கமதாக்கி (எ) I; யாதரித்தாக்கமதாக்கின் (த); தாக்கம தாக்கென (தி)

கருத்து: குபேரன் செய்த கடுந்தவத்திற்கு இரங்கி, அவனை அளகாபுரிக்கு அரசன் ஆக்கித் தனது அருட்சத்தியால் துணை நின்றவன் எம் தலைவனாகிய சிவபெருமான்.

நகரை - வேற்றுமை மயக்கம்.

குறிப்பு: முதலடி இரண்டாம் சீர் 'செய்த' என்றே சுவடிகளில் உள்ளது. தளை சிதைதல் நோக்கி, 'செய்தவ்' என இப்பதிப்பில் திருத்தப் பட்டது.

உடலிடங்கொண்டான்

18. இது பதி ஏலம் கமழ் பொழில் ஏழும்
முதுபதி செய்தவன்; மூதறிவாளன்;
விது பதிசெய்தவன்; மெய்த்தவம் நோக்கி,
அது பதியாக அமருகின்றானே.

இதுபதி யேலங் கமழ்பொழி லேழு
முதுபதி செய்தவன் மூதறி வாளன்
[1]விதுபதி செய்தவன் மெய்த்தவ நோக்கி
யதுபதி யாக வமருகின் றானே. (18)

வேறு பாடம்: 1. விதிபதி (அ இ ஊ ஐ ஓ) I.

கருத்து: ஏழு உலகையும் அழித்தவன். பேரறிவினன். யோகியர்க்கு நெற்றியில் சந்திரகலையைப் பதிவித்தவன். யோகியின் உண்மை யான தவத்திற்கு இரங்கி அவனது உடம்பையே இடமாகக் கொண்டு வீற்றிருப்பான்.

அது-தவம். சந்திர மண்டலமாகிய தலை எனலுமாம்.

ஒளி ஒலிச் சேர்க்கை

19. முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அருநெறி நாடில்,
இடியும் முழக்கமும் ஈசன் உருவம்;
கடிமலர்க் குன்றம் மலை-அது தானே.

முடிவும் பிறப்பையு முன்னே படைத்த
வடிக ளுறையு [1]மருநெறி நாடி
லிடியு முழக்கமு மீச னுருவங்[2]
கடிமலர்க் குன்ற மலையது தானே. (19)

வேறு பாடம்: 1. மாநெறி (ஆ ஈ உ ஊ ஒ ஓ) II; மறனெறி (தி) (த); மற நெறி (விசு) I. 2. ருருவங் (அ எ) (த) III.

கருத்து: பிறப்பு இறப்புகளைத் தரும் இறைவன் வாழும் அரிய கோயில் யாது? நம் தலையின் உச்சியாகும். அவன் உருவம் யாது? விந்துவும் நாதமும் ஆகும்.

அருநெறி மலை என்க. மின்னலும் இடியும் ஒன்று; அதுபோல் விந்துவும் நாதமும் ஒன்றாதல் யோகானுபவம். இது சிவதரிசனம். கடி-மணம். நெறி - கோயில். யோகிக்குத் தன் தலையே மலை. அங்கு மலரும் மணமலர் சகஸ்ரார்த் தாமரை.

புகழ்க, புணரலாம்

20. வானப் பெருங்கொண்டல்; மால், அயன், வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனை,
கானக் களிறு கதறப் பிளந்த எம்
கோனைப் புகழுமின், கூடலும் ஆமே.

வானப் பெருங்கொண்டல் மாலயன் வானவ
ரூனப் பிறவி யொழிக்கு மொருவனைக்
கானக் களிறு கதறப் பிளந்தவெங்
கோனைப் புகழுமின் கூடலு மாமே. (20)

கருத்து: பரமாகாயத்தில் பரவி அருள்மழை பொழியும் மேகம். தேவர், மூவர் முதலியோரின் பிறவியை நீக்குபவன். வேதகானம் செய்து, ஓமத்தீயினின்றும் எழச் செய்து, தாருக வனத்து முனிவர்கள் விடுத்த யானையைக் கொன்ற எம் தலைவன் -இவனைப் புகழ்க. அதனால் இவனை அணைதலும் கூடும்.

ஊனம் - குற்றம்; ஆணவம். கூடல் - புணர்தல்; ஒன்றி நிற்றல்.

யாருக்கு உதவுவான்?

21. மனத்தில் எழுகின்ற மாய நன்னாடன்
நினைத்தது அறிவனே; நீசர் நினையார்,
"எனக்கு இறை அன்புஇலன்" என்பர்; இறைவன்
பிழைக்கநின்றார் பக்கம் பேணி நின்றானே.

மனத்தி லெழுகின்ற மாயநன் னாட
னினைத்த தறிவனே [1]நீசர் நினையா
ரெனக்கிறை [2]யன்பில னென்ப ரிறைவன்
பிழைக்கநின் றார்பக்கம் பேணிநின் றானே. (21)

வேறு பாடம்: 1. நீதானினைக்கிலை (உ) னெனில்தானினைக்கில (எ) II நீதானினையா (பா 3); நீசரெனையா (ஆ) I. 2. யன்பில ரென்ப (அ ஆ இ ஈ ஊ ஒ) I.

கருத்து: சிவன் சுத்த மாயையை இடமாகக் கொண்டு அருள்திருமேனி தாங்குபவன். அதனால், மந்திர உருவமாக நினைவில் எழுவான். அவ்வாறு நினைத்தால் அதை அறிவான். ஆனால் கீழ்மக்கள் அவனை நினையாது இருந்து, பின் 'எமக்கு இறைவன் அருள் செய்யவில்லை' என்பர். அவன் உய்ந்து போக எண்ணுவோரைக் காத்து, அவர் 'உடனாக' நிற்பான்.

பேணி - காத்து.

வாழ்வு அவனால்

22. வல்லவன், வன்னிக்கு இறை இடை வாரணம்
நில் என நிற்பித்த நீதியுள் ஈசனை
இல் என வேண்டா; இறையவர் தம் முதல்
அல்லும் பகலும் அருளுகின்றானே.

வல்லவன் வன்னிக் கிறையிடை வாரண
நில்லென நிற்பித்த நீதியு ளீசனை
யில்லென வேண்டா 'விறையவர் தம்முத
லல்லும் பகலு மருளுகின் றானே. (22)

வேறு பாடம்: 1. மிறையவர் (சுவடிகள்) II.

கருத்து: எல்லாம் வல்லான். கடலின் இடையில் தீக்கடவுளை நிறுத்தியவன். நீதிமான். அவனை 'இல்லை' என்று சொல்லாதீர். மகா தேவனாய் என்றும் அருள்கின்றான்.

மாறுபாடு உடைய நீரினையும் நெருப்பினையும் ஒன்றாய் நிறுத்துதல் அவனது வல்லமையைக் காட்டும். அவன் அருளால்தான் நம் வாழ்வு நடைபெறுகிறது.

செல்வம் அவனுக்கே

23. போற்றிசைத்தும், புகழ்ந்தும் புனிதன் அடி
தேற்றுமின் என்றும்; சிவன் அடிக்கே செல்வம்
ஆற்றியது என்று, மயல் உற்ற சிந்தை உள்-
மாற்றிநின்றார் வழி மன்னி நின்றானே.

போற்றிசைத் தும்புகழ்ந் தும்புனி தன்னடி
தேற்றுமி னென்றுஞ் சிவனடிக் கேசெல்வ[1]
[2]மாற்றிய தென்று மயலுற்ற சிந்தையுண்[3]
மாற்றிநின் [4]றார்வழி மன்னிநின் றானே. (23)

வேறு பாடம்: 1. கேசெல்ல (அ இ ஊ ஒ ஓ) (பா 1) I. 2. வாற்றியதென்று மயலுற்றுச் சிந்தையை (எ) I. 3. சிந்தையை (விசு) 4. றார்மன (அ) IV.

கருத்து: தூயவனாம் சிவனது திருவடியைப் போற்றியும் புகழ்ந்தும் தெளிக. செல்வம் படைத்தது அத்திருவடியில் அர்ப்பணிப்பதற்கே என்று, உலகியலில் சென்று மயங்கும் மனத்தை மாற்றும் அன்பரின் எண்ணப்படி அவன் அருள்புரிவான்.

உள் மாற்றி - ஆழ்ந்த எண்ணத்தை மாற்றி. தேறுமின் என்பது விரித்தல் விகாரம் பெற்றது.

விடமுடியுமா அவனை?

24. பிறப்பு - இலி, பிஞ்ஞகன், பேரருளாளன்
இறப்பு - இலி, யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பு - இலி தன்னைத் தொழுமின்; தொழுதால்
மறப்பு - இலி, மாயா விருத்தமும் ஆமே.

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாள
னிறப்பிலி யாவர்க்கு மின்ப மருளுந்
துறப்பிலி தன்னைத் தொழுமின் றொழுதான்
மறப்பிலி [1]மாயா விருத்தமு மாமே. (24)

வேறு பாடம்: 1 விருகமு (அ ஒ) (பா 1) II ; மாயா விருக்கலு (ஆ) IV ; மாய மருக்கலு (ஊ) I.

கருத்து: பிறவான். பிறந்தோரை ஒடுக்குவோன். அவர்க்கு மலமறுத்து அருள்புரிவோன். இறப்பிலான். யாவர்க்கும் வீடு பேற்றை அருளுகின்றவன். ஆதலால் மனிதரால் துறக்க வொண்ணாதவன் - இத்தகைய சிவபெருமானைத் தொழுக. தொழுதால் மனம் கோயில் ஆகும். மாயை மாயும்.

விருத்தம் - பகை. பிஞ்ஞகன் - சடைமுடி உடையவன். தலைக் கோலம் உடையவன் என்றுமாம். கங்கையை அடக்கிக்கொண்ட சடையாதலின், யாவரையும் ஒடுக்குதலைக் குறிப்பாற் காட்டியது.

தலையுச்சித் தாமரையான்

25. தொடர்ந்து நின்றானைத் தொழுமின்; தொழுதால்,
படர்ந்துநின்றான், பரிபாரகம் முற்றும்
கடந்துநின்றான், கமல மலர் மேலே
புணர்ந்திருந்தான் அடிப் புண்ணியன் ஆமே.

தொடர்ந்துநின் றானைத் தொழுமின் றொழுதாற்
படர்ந்துநின் றான்பரி பாரக முற்றுங்
கடந்துநின் றான்கம லம்மலர் மேலே
[1]புணர்ந்திருந் [2]தானடிப் புண்ணிய னாமே[3]. (25)

வேறு பாடம்: 1. புடர்ந்திருந் (ஆ) ; புடந்திருந் (அ இ ஈ எ ஒ) I.
2. தானணி (ஆ இ ஈ ஊ ஒ) I 3. மாமே (விசு) (தி) (த)

கருத்து: நமக்கு அருள் செய்து தொடர்பவனாம் சிவனைத் தொழுக. தொழுதால், உலகில் முற்றும் கலந்து நிற்பவனும், அதனைக் கடந்தவனும், யோகியர்க்குத் தலை யுச்சியில், சகஸ்ராரத் தாமரையில் எழுந்தருள்பவனுமாகிய அவனது திருவடியில் ஒன்றிநிற்கும் புண்ணியன் ஆகலாம்.

படர்தல்-ஒன்றாகி நிற்றல். கடத்தல் - வேறாகி நிற்றல். புணர்தல் - உடனாதல். புணர்ந்திருந்தான் - காலவழுவமைதி. இம் மூன்றும் 'சுத்தாத்துவிதம்' எனப்படும். திருவடி - அருள்வெளி.

நெஞ்சமே கோயில்

26. "சந்தி எனத்தக்க தாமரை வாள்-முகத்து
அந்தம் இல் ஈசன் அருள் எனக்கே" என்று
நந்தியை நாளும் வணங்கப்படும் - அவர்
புந்தியின் உள்ளே புகுந்து நின்றானே.

சந்தி யெனத்தக்க தாமரை வாண்முகத்
தந்தமி லீச [1]னருளெனக் கேயென்று
நந்தியை நாளும் வணங்கப் படுமவர்
புந்தியி னுள்ளே புகுந்துநின் றானே. (26)

வேறு பாடம்: 1. னருணமக் (எ) IV.

கருத்து: 'அந்தி வான வண்ணம், தாமரை - இவைபோன்ற திருமுகத்தை உடைய ஈசன் அருள் எனக்கு வாய்க்கும்' - என்று உறுதியுடன் சிவனை நாள்தோறும் வணங்கி, அவனருளைப் பெற்றவரின் புத்தி தத்துவத்தில் உறைகின்றான். அதனால் அவர்க்கு அகலா நினைவாயினான்.

சந்தி - (பகலும் இரவும்) கூடும் வேளை. படுதல் (3 ஆம் அடி) அருள் பெறுதல். "சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்" (திருவா. 395) புத்தி, மெலித்தல் விகாரம் பெற்றது.

வணங்குவோர் வழித்துணை

27. இணங்கி நின்றான், எங்குமாகி நின்றானும்,
பிணங்கி நின்றான், பின் முன் ஆகிநின்றானும்,
உணங்கி நின்றான், அமராபதி நாதன்;
வணங்கி நின்றார்க்கே வழித்துணை ஆமே.

இணங்கிநின் [1]றானெங்கு மாகிநின் றானும்
பிணங்கிநின் றான்பின்முன் னாகிநின் றானு
[2]முணங்கிநின் றானம ராபதி நாதன்
வணங்கிநின் றார்க்கே வழித்துணை யாமே. (27)

வேறுபாடம்: 1. றாரெங்கு (பா 1) 2. மணங்கிநின் (ஆ) I

கருத்து: உயிர்களோடு இசைந்து நின்றான். எங்கும் உள்ள எப்பொருளிலும் உள்ளான். மாறுபட்டு நின்றான். உலகிற்கு முடிவும் முதலுமாயினான். அசுரரைக் காய்ந்தான். அதனால் தேவரால் வணங்கப் படுபவன். அவன் யாரோடு உடன்வருவான் என்றால், தன்னை வணங்கும் அடியாரோடு என்க.

உணங்கல் - சினந்து பொருது அழித்தல்.

நீயே உறவு

28. காண நில்லாய், அடியேற்கு உறவு ஆர் உளர்?
நாண நில்லேன் உனை நான் தழுவிக் கொள்ள;
கோண நில்லாத குணத்து அடியார் மனத்து
ஆணியன் ஆகி அமர்ந்து நின்றானே.

காணநில் லாயடி யேற்குற வாருளர்[1]
நாணநில் லேனுனை நான்றழு விக்கொள்ளக்
கோணநில் லாத குணத்தடி யார்மனத்
தாணிய னாகி யமர்ந்துநின் றானே. (28)

வேறு பாடம்: 1. வாருள்ள (அ எ) ; வாருள (ஊ) I.

கருத்து: தாமதம், இராசதம் என்ற மாறுபாடான குணங்கள் இன்றிச் சத்துவ குணம் உடைய அடியாரது மனத்தில் நீங்காமல் உறைபவனே, அடியனேற்கு நீயன்றி யார் உறவு? வா. உன்னைத் தழுவ நாணங் கொள்ளேன்.

காணல் - ஞானக்காட்சி. ஆசிரியர் நாயகி நிலையில் பாடுதலால் "நாண நில்லேன்" என்றார். ஆணி - உரையாணி. அமர்தல் - விரும்புதல்.

இறைவா, வா!

29. 'வான்நின்று அழைக்கும் மழைபோல், இறைவனும்
தான் நின்று அழைக்கும்கொல்' என்று தயங்குவார்;
ஆன்நின்று அழைக்கும்-அதுபோல், என் நந்தியை
நான் நின்று அழைப்பது; ஞாலம் கரியே.

வானின் [1]றழைக்கு மழைபோ லிறைவனுந்
தானின் [2]றழைக்குங்கொ லென்று தயங்குவா
ரானின் றழைக்கு மதுபோலென் னந்தியை
நானின் [3]றழைப்பது [4]ஞாலங் கரியே. (29)

வேறுபாடம்: 1. றிழைக்கு (இ ஊ ஐ); றிறைக்கு (பா 1) I 2. றிழைக்குங்கொ (இ ஊ) I. 3. றழைத்தது (ஆ) IV. 4. ஞானலங் (உ ஒ) I; ஞானங் கருதியே (விசு) (தி) (த) (வ).

கருத்து: "வானில் முழங்கும் இடிபோலக் குரல் எழுப்பி, இறைவன் நம்மை அழைப்பான் போலும்" என்று சில அன்பர் எதிர் பார்க்கின்றனர். ஆனால், கன்றைப் பசு அழைப்பது போல் என் நந்தியை நான் தொடர்ந்து அழைக்கின்றேன். அதனை உலகமே அறியும்.

"ஞாலமே கரியாக நான் உனை நச்சி நச்சிட" (திருவா. 470)

எண்ணத்தில் இசையானான்

30. மண்ணகத்தான் ஒக்கும், வானகத்தான் ஒக்கும்,
விண்ணகத்தான் ஒக்கும், வேதத்தினான் ஒக்கும்,
பண் அகத்து இன்னிசை பாடல் உற்றானுக்குக்
கண்ணகத்தே நின்று காதலித்தேனே.

மண்ணகத் தானொக்கும் வானகத் தானொக்கும்
விண்ணகத் தானொக்கும் [1]வேதத்தி னானொக்கும்
பண்ணகத் தின்னிசை பாடலுற் [2]றானுக்குக்
கண்ணகத் தேநின்று காதலித் [3]தேனே. (30)

வேறுபாடம்: 1. வேதகத் தானொக்கும் (விசு) (தி) (த) 2. றானுங் (ஆ) II றானுக்கே(எ) IV. 3. தானே (ஆ ஒ) I.

கருத்து: எளிமையால் எம் போல்வான்; ஒளியால் தேவர் போல் வான்; எண்ணமும் சொல்லும் எட்டாமையால் வீட்டுலகத்தானைப் போல்வான்; வேதங்களுக்கு முடிபொருளும் போல்வான். எனது உயிருணர்வுப் பண்ணில் இசையாக இழைந்து, பாட்டாக எனது அகத்தே அனுபவம் தருகின்றான். என் உயிருணர்வு விளங்கித் தோன்றும் எனது உடம்பின் சந்திரமண்டலப் பகுதியில் (நெற்றி, முன்தலை, உச்சி) நின்று, அவனை ஒளிவடிவில் கண்டு, அன்பு செய்கின்றேன்.

கண் - இடம். பண், இசை, பாடல் என்பன உருவகம். பண்ணின் இசையும் பாட்டின் பொருளும் இசைந்தது போல், சகஸ்ராரத்தில் சத்தியும் சிவனும் சேர்ந்து தரிசனம் தந்தனர் என்பது உருவகத்தாற் காட்டப்படும் பொருள்.

எப்படிப் பாடுவேன்?

31. தேவர் பிரான், எம்பிரான், திசை பத்தையும்
மேவு பிரான், விரிநீர் உலகு ஏழையும்
தாவு பிரான் தன்மைதான் அறிவார் இல்லை
பாவு பிரான் அருள் பாடலும் ஆமே?

தேவர் [1]பிரானெம் பிரான்றிசை பத்தையு
மேவு பிரான்விரி நீருல கேழையுந்
தாவு பிரான்றன்மை தானறி வாரில்லை
பாவு [2]பிரானருள் பாடலு மாமே. (31)

வேறு பாடம்: 1 பிரானப் (அ ஒ); பிரானம் (எ) I 2. பிரானடி (ஆ ஊ) III

கருத்து: மகா தேவன். எம் தலைவன். பத்துத் திசைகளையும் உடலாக உடையவன். ஏழு உலகத்தையும் (கலப்பினால்) அளந்தவன். அவன் தன்மையை நேரே முழுமையும் அறிவார் இல்லை. அங்ஙனமாக, எங்கும் நிறைந்த அப்பெருந்தகையினது அருளைப் பாடல் இயலுமோ?

விரிநீர்-கடல்.

ஒன்றி நிற்க

32. பதிபல ஆவது பண்டு இவ் உலகம்
விதிபல செய்து, ஒன்றும் மெய்ம்மை உணரார்,
துதிபல தோத்திரம் சொல்லவல்லாரும்
மதிஇலர், நெஞ்சினுள் வாடுகின்றாரே.

பதிபல [1]வாவது பண்டிவ் வுலகம்
விதிபல செய்தொன்று மெய்ம்மை யுணரார்
துதிபல தோத்திரஞ் சொல்லவல் லாரு
[2]மதியிலர் நெஞ்சினுள் வாடுகின் றாரே. (32)

வேறு பாடம்: 1. வாயிது (ஆ இ ஊ ஒ); வாவிது (அ) I வாயது (த) 2. மதியிலி (ஒ) IV.

கருத்து: பண்டு தொட்டு உலகோர் 'கடவுள் பல' என்றே நம்புகின்றனர். அவற்றை வழிபடும் விதிமுறை பலவும் வகுத்துள்ளனர். 'ஒருவனே தேவன்; அவன் அதிட்டித்து நிற்கும் தெய்வம் பல' என்னும் உண்மையை உணரவில்லை. தோத்திரம் சொல்லித் துதிப்போரும் அக அனுபவத்தை மதிக்கும் அறிவற்று வருந்துகின்றனர்.

ஒன்றும் - சிறிதும். நெஞ்சினுள் மதியிலர் என மாற்றுக. மனத்தால் உள்ளனுபவத்தை மதிக்க அறியாமல் என்பது பொருள். மதி - முதனிலைத் தொழிற்பெயர். உள் - உயிர் அனுபவம். இடவாகு பெயர்.

ஆகமத்தில் யோகநெறி

33. சாந்து கமழும் கவரியின் கந்தம் போல்
வேந்தன் அமரர்க்கு அருளிய மெய்ந்நெறி
ஆர்ந்த சுடர் அன்ன ஆயிர நாமமும்
போந்தும் இருந்தும் புகழ நின்றானே.

[1]சாந்து கமழுங் கவரியின் கந்தம்போல்
வேந்த னமரர்க் கருளிய மெய்ந்நெறி
[2]யார்ந்த சுடரன்ன வாயிர நாமமும்
போந்து மிருந்தும் புகழநின் றானே. (33)

வேறுபாடம்: 1. சாந்தங் (ஈ) IV; சாந்தும் புழுகுங்கஸ் தூரியின் சாந்தம் போல் (பா 1) 2. ஆய்ந்த சுடரான் (ஈ) I 3. புகழவென்றானே (எ) IV; புகழுகின்றேனே (விசு) (தி) (த) (வ); புகுந்துநின்றானே (பா 1)

கருத்து: சந்தனத்தினும் கவரிமானது கஸ்தூரி மிக்க மணம் உடையது ஆதல் போல் அமரர்க்குச் சிவபிரான் அருளிய நெறியே பிற நெறிகளை விடச் சிறந்தது. அவ்வாகம நெறிக்கண், மூன்றாம் பாதமாகிய யோகத்தில் நிற்பவர், தாம் தமது தலையுச்சிச் சகஸ்ராரத்தில் தரிசித்து உணர்ந்து அனுபவிக்கும் ஒளிவடிவிற்கு இணையான ஆயிரம் நாம மந்திரங்களை, இயங்கும் போதெல்லாம் இயம்பிப் புகழுமாறு அவன் விளங்குகின்றான்.

ஆர்ந்த - உணர்ந்து அனுபவித்த.

34. ஆற்றகில் லாவழி நீரு மிறைவனைப்
போற்றுமின் போற்றிப் புகழ்மின் புகழ்ந்திடின்
மேற்றிசைக் குங்கிழக் குந்திசை யெட்டொடு
மாற்றுவ னப்படி மாற்றலு மாகுமே. (ங)

அன்பால் போற்றுக

35. அப்பனை, நந்தியை, ஆரா அமுதனை,
ஒப்பு - இலி வள்ளலை, ஊழி முதல்வனை
எப்பரிசு ஆயினும் ஏத்துமின்; ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே.

அப்பனை நந்தியை யாரா வமுதனை[1]
யொப்பிலி வள்ளலை யூழி முதல்வனை
யெப்பரி சாயினு மேத்துமி னேத்தினா
லப்பரி சீச னருள்பெற லாமே. (34)

வேறு பாடம்: 1. வமுதினை (விசு) (தி) (த) (வ)

கருத்து: எந்தை. நந்தி. ஆரா அமுது. உவமை இலா வள்ளல். கால காரணன் - இத்தகைய சிவபெருமானை எம்முறையிலாவது புகழ்க. அம்முறையிற் காட்டிய அன்புக்கு ஏற்ப அவனருளைப் பெறலாம்.

புகழ்தல் சாதியொருமைப் பெயராய் வழிபடுதலைக் குறிக்கும். முறை முதன்மையானது அன்று; அன்பே தலையாயது ஆதலின் 'அப் பரிசு' என்பது அன்பின் அளவைக் குறிக்கும்.

உணர்வில் இழைந்தான்

36. நானும் நின்று ஏத்துவன் நாள்தொறும் நந்தியை;
தானும் நின்றான் தழல்போல் ஒக்கும் மேனியன்;
வானில் நின்று ஆர் மதி போல் உடல் உள்ளு வந்து
ஊனில் நின்று ஆங்கே உயிர்க்கின்றவாறே.

நானுநின் றேத்துவ னாடொறு நந்தியைத்
தானுநின் றான்றழல் [1]போலொக்கு மேனியன்
வானினின் றார்மதி போலுட [2]லுள்ளுவந்
[3]தூனினின் றாங்கே யுயிர்க்கின்ற வாறே. (35)

வேறு பாடம்: 1. தானொக்கு (அ) IV; லொக்குஞ்செம் (விசு) 2. லுள்ளத்தி (ஆ இ ஊ); லுள்ளவன் (அ ஒ) II. 3. மானிநின் (அ); னூனினின் (ஊ ஒ ஆ) I.

கருத்து: நந்தியை நாள்தோறும் ஏத்துவேன். அவன் தீப்போலும் செந்நிறத்தான். அவன் வானில் ஒளி வீசும் சந்திரனைப் போவ என் உடம்பில் உள்ள சந்திரமண்டலத்தில் எழுந்தருளி, உடம்பினை இயக்கும் உயிரின் உணர்வுடன் கலந்து நின்று, புதுப்புது அனுபவங்களைத் தருகின்றான்.

மதிபோல் - சந்திரனில் அவன் இருப்பது போல. உள் உகரச்சாரியை பெற்றது. உயிர்த்தல் - உயிரின் ஆற்றல் வளர்தல். வளர்ப்பவன் சிவன்; உயிருடன், 'உடனாக' நின்று வளர்க்கின்றான். ஆதலின் 'அவன் உயிர்க்கின்றான்' என்றார்.

பெரியவன் பெருமை

37. பிதற்று ஒழியேன் பெரியான், அரியானை;
பிதற்று ஒழியேன் பிறவா உருவானை;
பிதற்று ஒழியேன் எங்கள் பேர்நந்தி தன்னை;
பிதற்று ஒழியேன் பெருமைத் தவம் தானே.

பிதற்றொழி யேன்பெரி யானரி யானைப்
பிதற்றொழி யேன்பிற வாவுரு வானைப்
பிதற்றொழி யேனெங்கள் பேர்நந்தி தன்னைப்
பிதற்றொழி யேன்பெரு [1]மைத்தவந் தானே. (36)

வேறு பாடம்: 1. மைத்தவன் னானே (விசு) (தி) (த) (வ) மைத்தவன்றானே (எ) I.

கருத்து: பெரியான். அரியான். பிறவாத வடிவம் உடையவன். எம் நந்தி - இவனை அன்புமிகுதியால் பிதற்றுதலை விடேன். தவத்தின் பெருமையைப் பிதற்றுதலையும் விடேன். ஏனெனில், அவனைப் பிதற்றக் கிடைத்தது என் தவப்பயன்.

பிதற்றல் - பலகால் பேசுதல்.

அன்பு உறவும் அருட்பேறும்

38. வாழ்த்தவல்லார் மனத்துள் உறு சோதியை,
தீர்த்தனை, அங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும், எம்பெருமான் என்று இறைஞ்சியும்
ஆத்தம் செய்து ஈசன் அருள் பெறலாமே.

வாழ்த்தவல் லார்மனத் [1]துள்ளுறு சோதியைத்
[2]தீர்த்தனை யங்கே [3] திளைக்கின்ற தேவனை
யேத்தியு மெம்பெரு மானென் றிறைஞ்சியு
[4]மாத்தஞ்செய் தீச னருள்பெற லாமே. (37)

வேறுபாடம். 1. உள்ளுறை (ஓ) (பா 1) II 2. தீத்தனை (ஆ எ) II 3. திகழ் கின்ற (இ) IV 4. மார்த்தஞ்செய் (பா 3)

கருத்து: ஈசன் தன்னை வாழ்த்துவாரது உயிருணர்வில் வந்து எழும் சோதியாவான். புனித தீர்த்தமும் அவ்வுயிரில் உள்ளது. அங்கு முழுகி ஆடுவோன் ஈசனே. அவனைப் புகழ்ந்தும், வணங்கியும் உறவு பாராட்டி, அவனருள் பெறலாம்.

ஆப்தம் - ஆத்தம்; உறவு.

உடம்பில் உள்ளொளி

39. குறைந்து அடைந்து ஈசன் குரைகழல் நாடும்;
நிறைந்துஅடை செம்பொனின் நேர்ஒளி ஒக்கும்,
மறைஞ்சு அடம் செய்யாது வாழ்த்த வல்லார்க்குப்
புறம் சடம் செய்யான், புகுந்துநின்றானே.

குறைந்தடைந் தீசன் குரைகழ னாடு
நிறைந்தடை செம்பொனி னேரொளி யொக்கு
[1]மறைஞ்சடஞ் செய்யாது வாழ்த்தவல் லார்க்குப்
புறஞ்சடஞ் செய்யான் புகுந்துநின் றானே. (38)

வேறுபாடம்: 1. மறஞ்சடஞ் (ஆ இ எ ஒ) I; மறஞ்சிடஞ் (பதிப்); மறைந்தடஞ் (சைவ)

கருத்து: மாற்றுயர்ந்த தங்கத்தின் ஒளியை ஒப்பதும், அன்பர் துன்புறும்பொழுது, அபயமாக அடைந்து, நாடி அறியப்படுவதும் ஆகிய சிவபிரானது திருவடியை, பொய்யுலக மயக்கில் மறந்து, அறிவிழக்காமல் வாழ்த்துவோருக்கு, அவன் வெளியே சடப் பொருளாக அமைந்திராமல், அவர் உடம்பில் புகுந்து உள்ளொளி யாகத் திகழ்வான்.

குறைந்து அடைந்து நாடும் கழல் எனக்கூட்டுக. துன்புற்று அபயமாக அடைந்து, நாடப்படும் ஒளி ஒக்கும் கழல் எனவும் கூட்டுக. மறைந்து - மறைஞ்சு - போலி. பொய்யில் மறைந்து. புறம் - வெளியே. சடம் செய்யான் - சடம் போலச் சும்மா இரான். அகத்தே புகுவான்; அனுபவம் அளிப்பான். வாழ்த்த வல்லார்க்கு அவன் சிலை அல்லன்; உணர்வுப் பொருள்; உயிருக்கு வாழ்வு.

சிவானுபவம் யாருக்கு?

40. சினம் செய்த நஞ்சுஉண்ட தேவர் பிரானைப்
புனம்செய்த நெஞ்சிடைப் போற்றவல்லார்க்கு, உற்-
பனஞ்செய்த வாள்-நுதல் பாகனும் ஆங்கே
இனஞ்செய்த மான் போல் இணங்கிநின்றானே.

சினஞ்செய்த நஞ்சுண்ட தேவர் பிரானைப்
புனஞ்செய்த நெஞ்சிடைப் [1]போற்றவல் லார்க்குற்
[2]பனஞ்செய்த வாணுதல் பாகனு மாங்கே
யினஞ்செய்த மான்போ லிணங்கிநின் றானே. (39)

வேறுபாடம்: 1. போற்றவல்லார்க்கு (அ ஆ) I. 2. கனஞ்செய்த (ஒ) (பா 3) I கனஞ் செய்த வார் குழல் (த)

கருத்து: தேவர்களை அழிக்கப் பாற்கடலில் எழுந்த ஆலகால நஞ்சை உண்டு, அத்தேவர்களால் தொழப்படும் தலைவனை, அன்பு வளரும் நெஞ்சில் இருத்திப் போற்றுவோர்க்கு, உலகங்களைப் படைத்த தாயாகிய உமையம்மையை ஒருபாகமாக உடைய அவ்வீசன், தன் இனத்தோடு கூடிய மான்போல் 'உடனாக நின்று' சிவானுபூதி அருள்வான்.

புனம் - பயிர் விளையும் இடம். செய்த - உவமஉருபு. உற்பனம் செய்த - உலகங்களைப் படைத்த. வாள்நுதல் - இங்கு உமாதேவி. இனம் செய்த மான் - இனத்தோடு சேர்ந்த மான்.

அவன் விருப்பமே

41. போய், அரன் தன்னைப் புகழ்வார் பெறுவது
நாயகனால் முடிசெய்து, அதுவே நல்கும்;
மாயகம் சூழ்ந்து வரவல்லர் ஆயினும்
வேயன தோளிக்கு வேந்து ஒன்றுந்தானே.

போயரன் றன்னைப் புகழ்வார் பெறுவது
நாயக னான்முடி செய்தது வேநல்கு
மாயகஞ் சூழ்ந்து வரவல்ல ராயினும்[1]
[2]வேயன தோளிக்கு [3]வேந்தொன்றுந் தானே. (40)

வேறுபாடம்: 1 ராகினும் (அ) ராகிலும் (ஒ) I. 2. வேய்நகுந் (பா 1) 3. வேந்தவன் (இ) IV வேய்ந்தொன்றுந் (பா 1).

கருத்து: மாயாகாரியம் ஆகிய உலகினைச் சுற்றிவர வரங் கேட்டாலும், உமையாள் கணவன் அதற்கு இசைந்து வரம் நல்குவான். ஆயினும், அவனிடம் எதனையும் வேண்டற்க. தன்னைப் போற்றும் அடியார் பெறத்தக்கது இதுவென, உடையவன் ஆகிய அவன் முடிவு செய்து நல்குவான்.

அரனிடம் சென்று (சரண்புகுந்து) புகழ்வார் என்க. பெறுவது, நாயகனால் முடி(வு) செய்து, நல்குமதுவே எனக் கூட்டிப் பொருள் கொள்க. மாயகம் - மாயாகாரியமாகிய உலகம். வேய் - மூங்கில். தோளி - தோளை உடைய உமை.

பதிஞானம் பரிபூரணம்

42. அரன் அடி சொல்லி, அரற்றி, அழுது
பரன் அடி நாடி, பரவிப் பன்னாளும்
உரன் அடிசெய்து அங்கு ஒருங்க வல்லார்க்கு
நிரன் அடிசெய்து நிறைந்து நின்றானே.

அரனடி சொல்லி யரற்றி யழுது
பரனடி [1]நாடிப் [2]பரவிப்பன் னாளு
முரனடி செய்தங் [3]கொருங்கவல் லார்க்கு
நிரனடி செய்து நிறைந்துநின் றானே. (41)

வேறுபாடம்: 1. நாடியே (அ இ ஊ ஒ ஓ) II. 2. பாவிப்ப நாளு (அ) I. 3. கொதுங்கவல் (ஓ) I.

கருத்து: சிவபிரான் திருவடிகளைப் போற்றியும், அரற்றியும், அழுதும், அப் பரசிவத்தின் காட்சியைப் பெற உள்முகமாக, யோக சாதனையில் தேடியும், சிறிது உணர்ந்த அளவிலே தருக்கி நில்லாமல், பலநாளும் அவனை முன்னிலைப்படுத்திப் புகழ்ந்தும், திருவடிஞானமாகிய 'பதிஞானம்' பெறுதற்கு, மனம் ஒருமைப் பட்டுத் தியானிப்பவர்க்கு, கருணையுடைய அவன், பதிஞானம் அளிக்கத்தொடங்கி, அவர்தம் 'உயிருணர்வில்' நிறைந்து நிற்பான்.

உரன் - ஞானம். ஒருங்குதல்-மனம் ஒன்றுதல். நீரன் என்பது நிரன் எனக் குறைந்தது. அடி செய்து - தொடங்கி; ஞானம் அளிக்கத் தொடங்கி.

அருட்பெருஞ்சோதி

43. போற்றி என்பார் அமரர் புனிதன் அடி;
போற்றி என்பார் அசுரர் புனிதன் அடி;
போற்றி என்பார் மனிதர் புனிதன் அடி;
போற்றி என் அன்புள் விளங்க வைத்தானே.

போற்றியென் பாரம ரர்புனி தன்னடி
போற்றியென் பாரசு ரர்புனி தன்னடி
போற்றியென் பார்மனி தர்புனி தன்னடி
போற்றியெ னன்புள் [1]விளங்கவைத் தானே. (42)

வேறுபாடம்: 1. பொலியவைத்தேனே (விசு) (தி) (த) (வ); விளங்க வைத்தேனே (ஒ ஒ) III.

கருத்து: தேவரும், அசுரரும், மக்களுள் அன்பரும் அத்தூயவனது திருவடியை வாழ்த்துவர். யானும் போற்றினேன். என் அன்பினை ஏற்று, என் நெஞ்சில் குடிகொண்டு, ஒளியாகக் காட்சி நல்குகின்றான்.

அன்புள் - அன்புநிறைந்த உள்ளத்தில். புனிதன் - மலங்கள் அற்றவன். நெஞ்சம் கோயில் கொண்டவன் அவன் ஆதலின், விளங்க வைத்தான் என்றார்.

"மனத்து உன்னை வைத்தாய்" என்ற சுந்தரர் வாக்குக் காண்க. என் அன்புறும் நெஞ்சில் அவன் திருவுருவம் திகழுமாறு அருள்செய்தான் என்க.

சூரியன் காட்டும் சோதி

44. விதிவழி அல்லது இல் வேலை உலகம்;
விதிவழி இன்பம் விருத்தமும் இல்லை;
துதிவழி நித்தலும் சோதிப் பிரானும்
பதிவழி காட்டும் பகலவன் ஆமே.

விதிவழி [1]யல்லதில் வேலை யுலகம்
விதிவழி யின்பம் விருத்தமு மில்லை
துதிவழி [2] நித்தலுஞ் சோதிப் பிரானும்
பதிவழி காட்டும் பகலவ னாமே. (43)

வேறுபாடம்: 1. யல்லதில் (அ ஆ இ ஊ ஒ) I 2. நிற்றலுஞ் (அ) I.

கருத்து: மக்கள் வாழ்வு விதியினால் இயக்கப்படுவது ஆதலின் விதிப்படி வரும் இன்பம் ஒவ்வாதது அன்று. நாளும் சிவனை வாழ்த்தினால், அவன் நம் வலக்கண் ஆகிய சூரியனை நிலைப் படுத்தி, அவனைக் கொண்டு, நம் உச்சந்தலையில் உள்ள 'சகஸ்ராரத்தை' நம் உயிருணர்வு சென்றடைய வழிகாட்டுவான்.

வேலை - கடல். விருத்தம் - ஒவ்வாமை; விரோதம். பதி - ஊர்; வீடுபேறு. உடம்பில் வலக்கண் ஆகிய சூரியன், பதியின் இருப்பிடமாகிய சகஸ்ராரத்தை அடைய உதவுவான்.

வழிபட்டேன்; மனம் புகுந்தான்

45. ‘அந்திவண்ணா, அரனே, சிவனே’ என்று
சிந்தைசெய் வண்ணம் திருந்து அடியார் தொழ
‘முந்திவண்ணா, முதல்வா, பரனே’ என்று
வந்தி வண்ணன் என் மனம் புகுந்தானே.

அந்திவண் ணாவர னேசிவ னேயென்று
சிந்தைசெய் வண்ணந் திருந்தடி யார்தொழ
முந்திவண் ணாமுதல் வாபர னேயென்று
[1]வந்திவண் ணன்னென் [2]மனம்புகுந் தானே. (44)

வேறுபாடம்: 1. வந்திவ்வண்ணம் எம் (ஓ) (த) I புந்தி வண்ணன் எம் (தி)
2. அகம் புகுந்தானே (விசு)

கருத்து: “செக்கர்வானை ஒத்த மேனியனே, மகாசங்கார காரணா, சிவனே” என அரற்றி, அருளியலின்படி வாழும் அடியார் பரவி வணங்க, அருள்புரியும் சிவன், வழிபட்ட அளவில் என் மனத்தில் புகுந்தான். 'அவன் கருணை என்னே!

முந்திவண்ணா - எல்லாவற்றுக்கும் முன்பு உருக்கொண்டவனே. வந்தி - வாழ்த்தும்; வழிபடும். வண்ணன் - உருவத்தை உடையவன். அன்பர் எவ்வுருவில் வழிபடுகிறார்களோ அவ்வுருவில் வந்து அருள்வான் ஆதலின், யான் வந்திக்கும் வண்ணன் என்றார்.

நேசமே ஞானம்

46. மனையில் இருந்தவர் மாதவர் ஒப்பர்;
நினைவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்;
பனையுள் இருந்த பருந்தது போல
நினையாதவர்க்கு இல்லை நின்ற இன்பம் தானே.

மனையி லிருந்தவர் மாதவ ரொப்பர்
நினைவு ளிருந்தவர் [1]நேசத்து ணிற்பர்
பனையு ளிருந்த பருந்தது போல
நினையா தவர்க்கில்லை [2]நின்றின்பந் தானே. (45)

வேறுபாடம்: 1. நெஞ்சத்து (அ இ ஊ ஒ ஓ) II. 2. நின்னின்பந் (எ)

கருத்து: தியானம் செய்து நேசிப்பவர் மனையில் இருந்து இல்லறம் நடத்தினாலும் முனிவரை ஒப்பர். முனிவரேயாயினும் தியானித்து நேசிக்காதவர்க்கு நிலையான இன்பம் இல்லை.

பனைமரத்தில் அமர்ந்த பருந்து பனம் பழத்தைத் தின்னாதது போல என்க.

அணையா விளக்கு

47. அடியார் பரவும் அமரர் பிரானை
முடியால் வணங்கி, முதல்வனை முன்னிப்
படியார் அருளும் பரம்பரன் எந்தை
விடியா விளக்கு என்று மேவி நின்றானே.

அடியார் பரவு மமரர் பிரானை
[1]முடியால் வணங்கி முதல்வனை முன்னிப்
படியா [2]ரருளும் [3]பரம்பர னெந்தை
விடியா [4]விளக்கென்று மேவிநின் றானே[5]. (46)

வேறுபாடம்: 1. முடியார் (விசு) 2. லருளும் (அ ஆ இ ஊ ஒ) I 3. பராபர (ஊ ஒ) III 4. விளக்கொன்று (பா 3) 5. றேனே (பா 1)

கருத்து: அடியார் வணங்க, அவர் இவ்வுலகில் இன்புறுமாறு அருளும் எம் தந்தை ஆகிய சிவன், அணையா விளக்காக என் உள்ளத்தில் திகழ்கின்றான்.

முன்னி - நினைத்து. படியார என்பது படியார் என, இறுதி அகரம் மறைந்தது; இவ்வுலகில் அனுபவிக்க. விடியா விளக்கு - அணையாத விளக்கு. என்று - என.

கடல் இங்கே, கரை அங்கே

48. நரை பசு பாசத்து நாதனை உன்னி,
உரை பசு பாசத்து ஒருங்க வல்லார்க்குத்
திரை பசு பாசச் செழுங்கடல் நீங்கிக்
கரை பசு பாசம் கடந்து, எய்தலாமே.

[1]நரைபசு [2]பாசத்து நாதனை யுன்னி[3]
[4]யுரைபசு பாசத் தொருங்கவல் லார்க்குத்
திரைபசு [5]பாசச் செழுங்கட னீங்கிக்[6]
கரைபசு பாசங் கடந்தெய்த லாமே. (47)

வேறுபாடம்: 1. நரபசு (ஊ); நார்பசு (அ ஆ இ ஒ); பரைபசு (எ) I. 2. பாசத்தை (இ); பாசத்துள் (ஆ ஊ) I. 3. யுள் கி (அ ஆ ஊ ஒ); யுள்ளி (பதிப்) III. 4. வரைபசு (ஆ இ ஊ எ) III. 5. பாவச் (விசு) (தி) (த) (வ) 6. னீந்திக் (இ எ) III.

கருத்து: மாயா காரியமாகிய உடம்பைத் தந்தவனும் உயிருக்குத் தலைவனும் ஆணவ மலத்தைக் காரியப்படுத்தும் முதல்வனும் ஆகிய சிவபெருமானை நினைந்து பாச ஞானம், பசு ஞானம் ஆகியவற்றி லிருந்து விலகி, சிவத்தியானத்தில் ஒன்றிநிற்க வல்லவர், உயிரின் ஆணவமலத்தால் அடுத்தடுத்து வரும் பிறவிகள் ஆகிய கடலில் இருந்து விலகிப் பசுத்தன்மையிலிருந்தும், பாசப் பிணிப்பிலிருந்தும் நிலையாக விடுபட்டு, வீடுபேறு ஆகிய கரையை அடையலாம்.

நரை - மாயா காரியமாகிய உடம்பு. திரை - அலை. ஆன்மாக்களுக்குப் பசுத்தன்மை, மலப்பிணிப்பால் உண்டாவது. நாதன் - பதி.

பாடுவேன், ஆடுவேன்

49. கூடுவன் நெஞ்சிடை வைப்பன்; பிரான் என்று
பாடுவன்; பன்மலர் தூவி, தொழுது நின்று
ஆடுவன்; ஆடி, அமரர் பிரான் என்று
நாடுவன்; நான் நின்று அறிவது தானே.

கூடுவ னெஞ்சிடை வைப்பன் பிரானென்று
பாடுவன் பன்மலர் [1]தூவித் தொழுதுநின்
றாடுவ னாடி யமரர் பிரானென்று
நாடுவ னானின் றறிவது தானே. (48)

வேறுபாடம்: 1. தூவிப் பணிந்துநின் (இ) IV.

கருத்து: "என் தலைவன்" என்று வணங்குவேன். நெஞ்சில் இருத்துவேன். புகழ்ந்து பாடுவேன். மலர்தூவித் தொழுது, ஆடுவேன். அவனை மேன்மேலும் அறிய முயல்வேன். திருவருளில் நின்று நான் செய்பவை இவையே அன்றி, உலகியற் செயல் யாதுமில்லை.

குறிப்பு: 2 சுவடிகள் தவிரப் பிறவற்றில் இப்பாடலுடன் 'கடவுள் வாழ்த்து' முடிவுறுகின்றது. அவ்விரண்டு சுவடிகளிலும், முறையே 'திருமந்திரப்பாயிரமும்', 'சிறப்புப் பாயிரமும்' இப்பாடலுடன் முடிவுறுகின்றன.

2. வரலாறு

நந்தியின் சீடர்

50. நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர்; சிவயோக மாமுனி,
மன்று தொழுத பதஞ்சலி, வியாக்கிரன்
என்ற இவர், என்னுடன் எண்மரும் ஆமே.

நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடி
னந்திக ணால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி, வியாக்கிர[1]
[2]னென்றிவ ரென்னுட னெண்மரு மாமே (1)

வேறு பாடம்: 1 வியாக்ரமர் (விசு) 2. ரென்றிவ (ஊ எ) III.

கருத்து: நந்தியின் சீடர் எண்மர். அவர்கள் 'நாதன்' என்ற பட்டப் பெயர் பெற்றவர். அவர்கள் நான்கு நந்திகள், சிவயோக முனிவர், பதஞ்சலி, வியாக்கிர பாதர், திருமூலர் என்போர்.

இவ்வகையில், திருமூலர் திருமூலநாதர் எனப்பட்டார். நாதன் என்பதற்குப் பிரணவயோகத்தில் சிறந்ததாகிய பிராசாத யோகம் கைவந்தவர் என்று பொருள் கொள்ளலாம். எண்மர் ஆதலுமாம் என்க. நந்தி என்றது தம் ஞானாசிரியரை.

குறிப்பு: அனைத்துச் சுவடிகளிலும் இப்பாடலுடன் புது அதிகாரம் தொடங்குகிறது. அவற்றுள் எட்டில் இவ்வியல் 'குருபாரம்பரியம்' எனப் பெயர் இடப் பெற்றுள்ளது. ஆயின் இப்பாடலும் அடுத்ததும் தவிர ஏனையவை இடைச் செருகல் எனத் தக்கவை. ஆதலின் இப்பதிப்பில், 'திருமூலர் வரலாறு' எனச் சுவடிகளில் உள்ள இயலும் இவ்வியலுடன் இணைக்கப்பட்டு, "வரலாறு" எனப் பெயர் கொடுக்கப்படுகின்றது. சுவடிகளில், "திருமூலர் வரலாற்றில்" பாடல் வைப்பு முறை பலவாறு வேறுபடுகின்றது. முன்னைப் பதிப்புகளும் வேறுபடுகின்றன. இப்பதிப்பில், வரலாற்று நிகழ்ச்சித் தொடர்பை வைத்துப் புது வைப்பு முறை மேற்கொள்ளப் பெறுகின்றது.

சுவடிகளில் 2, 3 ஆம் இயல்களாக முறையே 'வேதச்சிறப்பு', 'ஆகமச்சிறப்பு' என்பவை உள்ளன. வைப்புமுறைப் பொருத்தம் நோக்கி இப்பதிப்பில் 'வரலாறு' என்பது இரண்டாம் இயலாகவும் 'அவையடக்கம்' மூன்றாம் இயலாகவும் கொள்ளப்படுகின்றன.

மூலன் உடலிற் புகுந்தேன்

51. நந்தி அருளாலே நாதனாம் பேர் பெற்றேன்;
நந்தி அருளாலே மூலனை நாடினேன்;
நந்தி அருளா அது என் செயும் நாட்டினில்?
நந்தி வழிகாட்ட நான் இருந்தேனே.

நந்தி யருளாலே [1]நாதனாம் பேர்பெற்றேன்
நந்தி யருளாலே மூலனை நாடினேன்[2]
நந்தி யருளாவ தென்செயு நாட்டினில்
நந்தி வழிகாட்ட நானிருந் தேனே. (2)

வேறு பாடம்: 1. நாதநாமம் பெற்றோம் (ஆ) III பெற்றேன் (த)
2. நாடினோம் (சுவ)

கருத்து: நந்தியின் ஆணையால் 'நாதன்' என்னும் பெயரைப் பெற்றேன். பின்பு நந்தி அருளால் மூலன் உடலில் புகுந்தேன். நந்தியின் திருவருட் சம்மதம் இல்லாத செயல் என்ன பயனைத் தரும்? என் வாழ்வு அவன் திருக்குறிப்பின் வழியில்.

மூலன் - ஓர் இடையன். நந்தி அருளா அது - நந்தியின் திருவருட் சம்மதம் இல்லாத செயல். வழி - அருள்வழி. திருமூலர் இறைவனது அருட்கண்ணால் எதையும் பார்த்து இருந்தவர் என்பதற்கு இப்பாடல் சான்று.

52. மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்க
னிந்திரன் சோமன் பிரம னுருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்சன் மலையனோ
டிந்த வெழுவரு மென்வழி யாமே. (ண, ஓ)

53. நால்வரு நாலு திசைக்கொன்று நாதர்க
ணால்வரு நானா விதப்பொருள் கைக்கொண்டு
நால்வரு நான்பெற்ற தெல்லாம் பெறுகென
நால்வருந் தேவராய் நாதரா னார்களே. (ஔ)

54. மொழிந்தது மூவர்க்கு நால்வர்க்கு மீச
னொழிந்த பெருமை யிறப்பும் பிறப்புஞ்
செழுஞ்சுடர் மூன்றொளி யாகிய தேவன்
கழிந்த பெருமையைக் காட்டுகி லானே. (ஊ)

55. எழுந்துநீர் பெய்யினு மெட்டுத் திசையுஞ்
செழுந்தண் ணியமங்கள் செய்மினென் றண்ணல்
கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே
யழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே. (உ, ஊ, ப)

சிவனே தீட்சை தந்தான்

56. பெற்றமும் மானும் மழுவும் பிரிவுஅற்ற
தற்பரன் கற்பனை ஆகும் சராசரத்து
அற்றமும் நல்கி, அடியேன் சிரத்தினில்
நற்பதமும் அளித்தான் எங்கள் நந்தியே.

பெற்றமு மானு மழுவும் பிரிவற்ற
தற்பரன் கற்பனை யாகுஞ் சராசரத்
தற்றமு நல்கி யடியேன் சிரத்தினி
னற்பத மும்மளித் தானெங்க ணந்தியே. (3)

கருத்து: விடையேற்று ஊர்தியும், மானும் மழுவும் எப்போதும் கொண்டு இலங்கும் சிவபிரான், தான் நினைத்த அளவிலே தோன்றிய இவ்வுலகில், எனக்கு உண்மைஞானம் அருளி, என் தலையில் பாதமலர் சூட்டினான்.

பெற்றம் - மாடு; காளையைக் குறித்தது. அற்றம் - உண்மை. கற்பனை - மாயையினின்றும் படைக்கப்பட்டது. சர அசரம் - சராசரம்; இயங்கும் உயிரினங்கள்; நிற்கும் உயிரினங்கள். இங்கு நந்தி என்றது, திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்க மூர்த்தியை.

உடம்பிற்கு வளம் தந்தான்

57. சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களின்
உத்தமமாகவே ஓதிய வேதத்தின்
ஒத்த உடலையும் உள்நின்ற உற்பத்தி
அத்தன் எனக்கு இங்கு அருளால் அளித்ததே.

சித்தத்தி னுள்ளே சிறக்கின்ற நூல்களி
னுத்தம மாகவே யோதிய வேதத்தி
னொத்த வுடலையு முண்ணின்ற வுற்பத்தி
யத்த னெனக்கிங் கருளா லளித்ததே. (4)

கருத்து: உலகைப் படைத்தவனாகிய சிவன் எனக்கு ஞானம் அளித்ததோடு, வேதத்தில் சிறந்தது எனக் கூறப்பட்ட உடம்பையும் (மூலனது உடம்பு) தந்து, என் உயிருணர்வில் நின்றான்.

உள்நின்ற - உயிரினுள் உயிராய் நின்ற. உற்பத்தி அத்தன் - படைப்புத் தலைவன் ஆகிய இறைவன். மூலனுடைய உடம்பு சிறந்ததொன்று எனக்கூறுகின்றார்.

சிவயோகத்திற்கு ஏற்ற உடம்பு

58. இருக்கில் இருக்கும் எண் இலி கோடி
இருக்கின்ற மூலத்தில் அங்கே இருக்கும்
அருக்கனும் சோமனும் ஆரழல் வீச
உருக்கி, உரோமம் ஒளிவிடும் தானே.

இருக்கி லிருக்கு மெண்ணிலி கோடி
[1]யிருக்கின்ற [2]மூலத்தி லங்கே யிருக்கு
மருக்கனுஞ் சோமனு மாரழல் வீச
வுருக்கி யுரோம மொளிவிடுந் தானே. (5)

வேறு பாடம்: 1. யருக்கின்ற (ஒ) I அருக்கிய (த) 2. மூலத்துள் (எ) I.

கருத்து: அவ்வுடம்பில் யோகம் பயின்றால், எண்ணில்லாத ஆண்டு வாழ்வு தொடரும். மூலாதாரத்தில் மூண்டு எழும் தீயால், நம் வலக்கண் ஆகிய சூரியனும், இடக்கண் ஆகிய சந்திரனும் ஒளிபெற, இறையருளால் நம் உள்ளம் உருக, உடம்பும் மயிர்க்கால் தொறும் ஒளிபெறும்.

இருக்கில் - இருக்க முயன்றால். மூலம் - மூலாதாரம். அருக்கன் - சூரியன். சோமன் - சந்திரன். இவை முறையே வலக்கண்ணிலும் இடக்கண்ணிலும் விளங்குபவை. ஆரழல் - மூலாதாரத்தில் மூண்டு எழும் நெருப்பு. உருக்கி - உருக்க என மாற்றிக்கொள்க.

இறைப் பித்து

59. பிதற்றுகின்றேன் என்றும் பேர்நந்தி தன்னை;
இயற்றுவன் நெஞ்சத்து இரவும் பகலும்;
உயற்றுவன் ஓங்குஒளிவண்ணன் எம்மானை;
இயல் திகழ் சோதி இறைவனும் ஆமே.

பிதற்றுகின் றேனென்றும் பேர்நந்தி தன்னை
யியற்றுவ [1]னெஞ்சத் திரவும் பகலு
முயற்றுவ னோங்கொளி வண்ணனெம் மானை
யியற்றிகழ் சோதி யிறைவனு மாமே. (6)

வேறு பாடம்: 1. னெஞ்சிலிரவும் (இ) IV

கருத்து: நந்தியின் பெயரையே பித்தாகிய மனத்துடன் செபிக்கின்றேன். அவனையே இரவும் பகலும் எண்ணுகின்றேன். சுயம்பிரகாசனும், அறிதோறும் அருள் ஒளியால் மிகுபவனும் ஆகிய எம் தலைவனை வழிபடுகின்றேன்.

பிதற்றுதல் - அன்பினால் பித்தாகிய மனத்துடன் செபித்தல். நெஞ்சத்து இயற்றுதல் - தியானித்தல்; உஞற்றுதல்-உயற்றுதல் எனத் திரிந்தது. உடம்பால் வழிபடுதல். இயல் - இயல்பு.

குறிப்பு: ஒன்பதுசுவடிகளில், இப்பாடலுடன் 'திருமூலர் வரலாறு முற்றும்' என்ற குறிப்பு உள்ளது.

ஆவடுதுறையாள் ஆட்கொண்டாள்

60. நேரிழை ஆவாள் நிரதிசயானந்தப்
பேறுடையாள்; என் பிறப்பு அறுத்து ஆண்டவள்;
சீருடையாள்; சிவன் ஆவடுதண்துறைச்
சேர்வு உடையாள் பதம் சேர்ந்திருந்தேனே.

நேரிழை யாவா [1]ணிரதிச யானந்தப்
பேறுடை யாளென் பிறப்பறுத் தாண்டவள்
சீருடை யாள்சிவ னாவடு தண்டுறைச்
சேர்வுடை யாள்பதஞ் சேர்ந்திருந் தேனே. (7)

வேறு பாடம்: 1. ணிரந்திசை (இ ஈ ஓ) பா 3 I.

கருத்து: செவ்விய அணிகலன்களை அணிந்தவள். பேரின்பப் பேறு பெற்றவள். புகழ் வாய்ந்தவள். என்னை ஆட்கொண்டு, என் பிறவிப்பிணியை நீக்கியவள். திருவாவடுதுறையில் சிவனோடு வீற்றிருப்பவள். அவள் திருவடியை என்றும் நினைக்கின்றேன்.

நிரதிசயானந்தம் - பேரின்பம்.

சிவபோதி மரம்

61. சேர்ந்திருந்தேன் சிவமங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந்தேன் சிவன் ஆவடுதண்துறை;
சேர்ந்திருந்தேன் சிவபோதியின் நீழலில்;
சேர்ந்திருந்தேன் சிவன் நாமங்கள் ஓதியே.

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவ னாவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியி னீழலிற்
சேர்ந்திருந் தேன்சிவ னாமங்க ளோதியே. (8)

கருத்து: சிவசத்தியின் தலைவனைச் சார்ந்திருந்தேன். திருவாவடுதுறையில், சிவபோதிமரத்தின் நிழலில் சிவன் பெயர்களை ஓதியவாறு இருந்தேன்.

போதி - அரசமரம்.

ஞானவுடம்பு பெற்றேன்

62. இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி;
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே;
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே;
இருந்தேன் என் நந்தி இணையடிக் கீழே.

இருந்தேனிக் 'காயத்தே யெண்ணிலி கோடி
யிருந்தே னிராப்பக லற்ற விடத்தே
யிருந்தே னிமையவ ரேத்தும் பதத்தே
யிருந்தேனென் னந்தி யிணையடிக் கீழே. (9)

வேறு பாடம்: 1. காயத்தி லெண்ணிலி (ஆ) III.

கருத்து: இவ்வுடம்புடனே எண்ணற்ற ஆண்டுகள் இருந்தேன். காலவுணர்ச்சி அற்றிருந்தேன். தேவர்கள் ஏத்தும் சிவனின் திருவடியைச் சார்ந்திருந்தேன்.

ஊனுடம்பு எண்ணற்ற ஆண்டுகள் இருப்பதன்று. எனவே ஆசிரியர் ஞான உடம்பு பெற்றார் எனக் கொள்ளலாம்.

காயம் - உடம்பு; ஞானஉடம்பு. பதம் - பதவி.

தமிழ் ஆகமம் பாட வைத்தான்

63. பின்னை நின்று என்னே பிறவி பெறுவது?
முன்னை நன்றாக முயல்தவம் செய்திலீர்;
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயறவஞ் செய்திலீ[1]
ரென்னைநன் றாக விறைவன் படைத்தனன்
றன்னைநன் றாகத் [2]தமிழ்செய்யு மாறே. (10)

வேறு பாடம்: 1. செய்கில (அ) செய்கலிர் (ஒ) III. 2. தமிழ் செய்யும் வாறே (பா 1)

கருத்து: மாந்தர்களே, நீவிர் முற்பிறவிகளில் தவம் செய்யாமல் இருந்து, இப்போது பிறவிச் சுழலில் சிக்கி அழிவது என்னே. இறைவன் என்னை நல்லுணர்ச்சியுடன் படைத்து, தன்னை நன்கு தமிழால் ஏத்துமாறு செய்தான்.

முயல் தவம் - முயன்று செய்யும் தவம். தமிழ் செய்யுமாறு - தமிழால் ஆகமம் செய்யும்படி.

ஆகமம் செய்தேன்

64. நந்தி இணைஅடி நான் தலைமேற் கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து, போற்றிசெய்து
அந்தி மதிபொதி அரனை அடிதொறும்
சிந்தைசெய்து ஆகமம் செப்பலுற்றேனே.

நந்தி யிணையடி நான்றலை மேற்கொண்டு
புந்தியி னுள்ளே புகப்பெய்து போற்றிசெய்
தந்தி [1]மதிபொதி [2]யரனை யடிதொறுஞ்
சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற் றேனே. (11)

வேறுபாடம்1. மதிபுனைவானை (இ-ஏ) III 2. யரனடி நாடொறுந் (எ) III

கருத்து: பிறை அணிந்த பெருமானின் திருவருட் குறிப்பை நான் மேற்கொண்டு, அவனை வணங்கி, ஆகம நூலைச் செய்யத் தொடங்கினேன்

மதி பொதி - சந்திரனைச் சடையினில் வைத்துக் காத்த. அடி தொறும் - பாடலின் அடிதோறும்.

குறிப்பு: 10 சுவடிகளில் இப்பாடலுடன் 'திருமூலர் வரலாறு' என்னும் அதிகாரம் தொடங்குகின்றது. திருமூலர் செய்த இந்நூல் ஆகமம் என அவரே கூறும் இடம் இது.

நூற்பெயர் 'சதாசிவ ஆகமம்'

65. செப்பும் சதாசிவம் என்னும்இப் பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றும்
தப்புஇலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம் இருந்தேனே.

செப்புஞ் [1]சதாசிவ [2]மென்னுமிப் பேர்பெற்று
மப்படி நல்கு மருணந்தி தாள்பெற்றுந்
தப்பிலா [3]மன்றிற் றனிக்கூத்துக் கண்டபி
[4]னொப்பிலெழு கோடி யுகமிருந் தேனே. (12)

வேறு பாடம்: 1. சிவாகம (எ) II. 2. மென்று மப் (பதிப்) 3. மண்ணிற் (பா 3) 4. னொப்பிலி கோடி (அ ஆ இ) III; யெழுவது கோடியுமாமே (ஈ) I.

கருத்து: நான் "சதாசிவன்" என்ற தீட்சைப்பெயர் பெற்றதோடு, என் நூலும் 'சதாசிவ ஆகமம்' என்று வழங்க நந்தியின் திருவருட் குறிப்பைப் பெற்று, அருள் மாறாத பொன் மன்றில் அவனது ஆனந்தத் தாண்டவத்தைக் கண்டு, எண்ணற்ற காலம் இருக்கும் நிலை பெற்றேன்.

செப்பும் - எச்சவும்மை பெற்றது; சொல்லப்பட்டது; நூல் - ஆகுபெயர்.

குறிப்பு: திருமூலர் இந்நூலுக்குச் 'சதாசிவாகமம்' என்பது பெயர் என இங்குக் குறிக்கின்றார். மேற்பாடலை ஒப்பு நோக்குக. இப்பாடலில் அன்றி நூற்பெயர் இதுவென எங்கும் குறித்திலர்.

உலகம் உய்க

66. நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்;
வான்பற்றி நின்ற மறைப்பொருள், சொல்லவும்
ஊன்பற்றி நின்ற உணர்வுஉறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே.

[1]நான்பெற்ற வின்பம் பெறுகவிவ் வையகம்
வான்பற்றி நின்ற [2]மறைப்பொருள் சொல்லவு[3]
[4]மூன்பற்றி நின்ற [5]வுணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் [6]தலைப்படுந் தானே. (13)

வேறு பாடம்: 1. யான்பெற்றபேறு (க.சி) 2. மறைப்பொருள் ஒன்றுண்டு (க.சி) 3. சொல்லுவ (இ ஊ) ; சொல்லலு (ஆ) III சொல்லிடி (விசு) (தி) (த); சொல்குவன் (பதிப்) 4. னூன்பற்றி (விசு) (தி) (த) III. 5. உணருறு (க.சி) 6. தலைப்படு மாறே (க.சி).

கருத்து: நான் பெற்ற சிவானுபவத்தை பிறரும் பெறுக. நம் உடம்பில் ஆக்ஞை என்ற ஆதாரம் உள்ள புருவமத்தியில், விழிப்பு நிலையில் இருக்கும் உயிருணர்வு மனம், பொறிகள் முதலிய கருவிகள் இன்றித் தானே நேராக உணருமாறு செய்யக்கூடிய மந்திரம் ஒன்று உண்டு. அதை இடையறாது தியானித்தால், வேதங்களின் முடிபொருளும், அகண்டாகாரமாக உள்ள பொருளும் ஆகிய சிவம் அருள்தரத் தொடங்கும்.

வான் - பரவெளி. ஊன் - உடம்பு. உணர்வு - உயிருணர்வு. தலைப்படும் - தொடங்கும். வான் பற்றி நின்ற பொருள், மறைப்பொருள்.

திருவைந்தெழுத்துச் சக்கரம்

67. பிறப்பு இலி நாதனை, பேர்நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்று கைகூப்பி
மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை
உறைப்பொடும் கூடி நின்று ஓதலும் ஆமே.

பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி
மறப்பிலர் நெஞ்சினுண் மந்திர மாலை
யுறைப்பொடுங் கூடிநின் றோதலு மாமே. (14)

கருத்து: நந்தியைத் தேவர்கள் சென்று வணங்கி, அந்த மந்திர வரிசையை மறப்பு இன்றியும் மிக்க அன்புடனும் செபித்து வருவர்.

மந்திர மாலை - திருவைந்தெழுத்துச் சக்கரம். உறைப்பு - அன்பின் மிகுதி.

குறிப்பு: மந்திரமாலை என்பது இந்நூலின் பெயராக இங்குக் கூறப்படவில்லை. யோகசாதனையில் தியானத்தில் நிறுத்தும் மந்திரம் 'திருவைந்தெழுத்து' எனச் சென்ற பாடலில் கூறினார் ஆதலின், ஈண்டு அதனைக் கூறி, வானவர் வழிபடுதலை எடுத்து ஓதுகின்றார். திருவைந்தெழுத்துச் சக்கரமாகிய திருவம்பலச் சக்கரமே இந்நூலின் மையப் பொருள்.

வாழ்வியல் விதி

68. அங்கி மிகாமை வைத்தான் உடல்; வைத்தபின்
எங்கும் மிகாமை வைத்தான் உலகு ஏழையும்;
தங்கி மிகாமை வைத்தான் தமிழ்ச்சாத்திரம்
பொங்கி மிகாமை வைத்தான் பொருள்தானுமே.

அங்கிமி காமைவைத் தானுடல் வைத்தபி'
னெங்குமி காமைவைத் தானுல கேழையுந்
தங்கிமி காமைவைத் தான்றமிழ்ச் சாத்திரம்
பொங்கிமி காமைவைத் தான்பொரு டானுமே. (15)

வேறு பாடம்: 1. உடல்வைத்தான் (விசு) (தி) (த)

கருத்து: சிவபெருமான் மக்கள் உடம்பில் மூலக்கனலை அளவாக வைத்தான். ஏழு உலகங்களிலும் உயிர்கட்கு அளவாக வாழ்வு அமைத்தான். தமிழ்ச் சாத்திரங்கள் அளவில் மிகுந்து, படிப்பார் இன்றி, வீணே கிடவாமல், அளவாக வைத்தான். மக்கள் அகந்தையுடனும், அளவு கடந்தும் நடவாமல் இருப்பதன் பொருட்டு, அச்சாத்திரங்களில் விதிகள் வைத்தான்.

அங்கி - நெருப்பு. தங்கிமிகாமை - வீணேகிடவாமல். சாத்திரம் - ஆகமம்

ஆகமத்தின் பொருள் நிரல்

69. ஞேயத்தை, ஞானத்தை, ஞாதுரு -அத்தினை
மாயத்தை, மாமாயை தன்னில் வரும்பரை
ஆயத்தை, அச்சிவம் தன்னை, அகோசர
வீயத்தை முற்றும் விளங்கியிட்டேனே.

ஞேயத்தை ஞானத்தை [1]ஞாதுரு வத்தினை
மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை[2]
யாயத்தை [3]யச்சிவந் தன்னை யகோசர
வீயத்தை முற்றும் விளங்கியிட் டேனே. (16)

வேறு பாடம்: 1. ஞாதுரியத்தினை (அ ஆ இ ஊ ஒ) I. 2. வரும்பராபரை (ஊ); வருகம்பரை (பா 1) II. 3. யச்சிவன்றன்னை (அ இ எ) II. 4. விளங்கிவிட்டேனே (அ) விளங்கவிட்டேனே (இ) I.

கருத்து: அறியப்படும் பொருளையும், அறிவையும், அறிபவன் ஆகிய ஆன்மாவையும்; அசுத்த மாயை, சுத்தமாயை, சத்திபேதம், சிவம், அனைத்திற்கும் சங்கற்ப மாத்திரையில் நிமித்த காரணமாக உள்ளதும், சிந்தையும் சொல்லும் எட்டாத நிலையில் உள்ளதும் ஆன பொருள் - இவற்றையும் விளங்கிக் கொண்டேன்.

ஞேயம் - அறியப்படும் பொருள். ஞானம் - அறிவு. ஞாதுரு - அறிபவன். அத்து - பகுதிப்பொருள்விகுதி. மாமாயை - சுத்தமாயை. பரை யாயம் - சத்தியின் பேதங்கள். அகோசரம் - பற்றப்படாதது. வீயம் - பீஜம் என்ற வடசொல்லின் திரிபு; வித்து. இச்செய்திகளை நூலுள் விளக்கியுள்ளார் என்பது குறிப்பு. முதலில் தான் விளங்கியே பின் "விளக்குவேன்" என்றார்.

திருக்கயிலாய பரம்பரை

70. விளக்கிப் பரம் ஆகும் மெய்ஞ்ஞானச் சோதி
அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி
துளக்குஅறும் ஆனந்தக் கூத்தன் சொற் போந்து
வளப்பின் கயிலை வழியில் வந்தோமே.

[1]விளக்கிப் பரமாகு மெய்ஞ்ஞானச் சோதி[2]
யளப்பில் பெருமைய னானந்த நந்தி
துளக்கறு மானந்தக் கூத்தன்சொற் போந்து
வளப்பிற் கயிலை வழியில்வந் தோமே[3] (17)

வேறு பாடம்: 1. விளக்கிற் (இ எ); வினைக்கு (அ) I. 2. சோதியை (ஊ) I. 3. தேனே (பதிப்)

கருத்து: உயிர்களுக்குப் பொருள்களை அறிவித்து, அவற்றைக் கடந்து மேலான பொருளாய் விளங்கும் ஞான வடிவனும், சோதி வடிவனும்

ஆகிய நந்தி அளவிலாப் பெருமை உடையவன். ஆனந்தத்தாண்டவ மூர்த்தி. அவன்பால் உபதேசம் பெற்றுத் திருக்கயிலாய பரம்பரையில் வந்தோம்.

விளக்கி - உயிர்களுக்குப் பொருள்களை அறிவித்து. பரம் அப்பொருள் களைக் கடந்து மேலான பொருளாய் நிற்கும். துளக்கு–துளக்கம்; அசைவு; சொல் - உபதேசம். வளப்பு - மாட்சிமை. கயிலை வழி - திருக்கயிலாய பரம்பரை.

'சதா சிவன்' ஆனேன்

71. நந்தி அருளாலே மூலனை நாடிப் பின்
நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்;
நந்தி அருளால் மெய்ஞ்ஞானத்துள் நண்ணினேன்;
நந்தி அருளாம் என நான் இருந்தேனே.

நந்தி யருளாலே மூலனை நாடிப்பின்
னந்தியரு ளாலே சதாசிவ னாயினே[1]
னந்தி யருளான்மெய்ஞ் [2]ஞானத்து ணண்ணினே
னந்தியரு [3]ளாமென நானிருந் தேனே. (18)

வேறு பாடம்: 1. மாயினேன் (அ) (பா 3) II. 2. ஞானத்தை நண்ணினேன் (ஆ) III. 3. யருளாலே (அ) (பா 3) III.

கருத்து: நந்தி அருளால் மூலனை அடைந்து, அவனது உடம்பில் புகுந்து, 'சதாசிவன்' என்னும் தீட்சைப் பெயர் ஏற்று, மெய்ஞ்ஞானம் பெற்றேன். அனைத்தும் நந்தி அருள் என்று வாழ்கின்றேன்.

மூலன் - மூலன் என்ற இடையன். சதாசிவன் என இவ்வாசிரியர்க்கு இறைவன் தீட்சாநாமம் சூட்டினான். இதுபற்றியே முன்பு (இவ்வதிகாரம் 12 ஆம் பாடல்) இவர் தமது நூலைச் 'சதாசிவ ஆகமம்' என்றார் போலும்.

72. இருந்தவிக் காரணங் கேளிந் திரனே
பொருந்திய செல்வப் புவனா பதியை
யருந்தவச் செல்வியைச் சேவித் தடியேன்
பரிந்துடன் வந்தனன் பத்தியி னாலே (ஐ)

73. சதாசிவன் றத்துவ முத்தமிழ் வேத
மிதாசனி யாதிருந் தேனின்ற கால
மிதாசனி யாதிருந் தேன்மனம் நீங்கி
யுதாசனி யாதுட னேயிருந் தோமால். (ஔ)

74. மாலாங்க னேயிங்கி யான்வந்த காரணம்
நீலாங்க மேனிய ணேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந்தேனே. (ஐ, க)

75. ஞானத் தலைவிநன் னந்தி நகர்புக்கு
வூனமி லொன்பது கோடி யுகந்தன்னுள்
ஞானப்பா லாட்டியென் னாதனை யர்ச்சித்து
நானு மிருந்தேனற் போதியின் கீழே. (ஊ)

76. செல்கின்ற வாற்றில் சிவமுனி சித்தசன்
வெல்கின்ற ஞானத்து மிக்கோர் முனிவராய்ப்
பல்கின்ற தேவ ரசுரர் நரர்தம்பா
லொல்கின்ற வான்வழி யூடுவந் தேனே. (ஓ)

3. அவையடக்கம்

மூலம் அறியேன்

77. ஆர் அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை;
ஆர் அறிவார் அந்த அகலமும் நீளமும்;
பேர் அறியாத பெருஞ்சுடர் ஒன்று; அதன்
வேர் அறியாமை விளம்புகின்றேனே.

ஆரறி வாரெங்க ளண்ணல் பெருமையை
யாரறி [1]வாரந்த வகலமு நீளமும்[2]
பேரறி யாத பெருஞ்சுட ரொன்றதன்[3]
வேரறி யாமை [4]விளம்புகின் றேனே. (1)

வேறு பாடம்: வாரிந்த (ஆ ஊ ஒ) III; வாரவ் (த) 2. நிகளமும் (விசு)
3. ரொன்றதின் (இ ஊ எ ஒ) I. 4. யாமல் (இ) III; யாதே (ஒ) I.

கருத்து: எம் தலைவனது பெருமையை அறிபவர் யார்? அவனை அறியும் அளவைகள் யாவை? சுட்டிக்கூற இயலாத அவன் பெருஞ்சோதியாக விளங்குகின்றான். அதன் மூலம் யாது என்று உணராமலே நூல் செய்கின்றேன்.

அகலமும் நீளமும் - பரப்பு. வேர் - உண்மை. அறியாமை - அறியாமல்.

குறிப்பு: 8 சுவடிகளில் 'அவையடக்கம்' என்ற அதிகாரம் இப்பாடலுடன் தொடங்குகிறது. இவற்றுள் இரண்டில், 'அவையடக்கந் திருமந்திரத் தொகைச் சிறப்பு' என்று எழுதப்பட்டுள்ளது.

நெறி அறியேன்

78. பாடவல் லார்நெறி[1] பாட வறிகிலே[2]
னாடவல் லார்நெறி யாட வறிகிலே
னாடவல் லார்நெறி [3]ஞான மறிகிலேன்
றேடவல் லார்நெறி [4]தேடுகில் லேனே. (2)

வேறு பாடம்: 1. லானெறி (அ ஓ) I. 2. பாடியறிகிலே (ஓ) I. 3. நாட வறிகிலேன் (விசு) 4. தேடகில்லேனே (அ ஆ இ ஊ) III.

கருத்து: பாடுவேன்; ஆனால் பாடும்நெறி அறியேன். ஆடுவேன்; ஆனால் ஆடும் நெறி அறியேன். உள்முகமாகத் தேடும் நெறியும், அதில் பெறும் ஞானமும் அறியேன். வேறு வழிகளில் அவனைத் தேடுவோரின் நெறியும் அறியேன்.

நாட - ஆராய; விசாரிக்க. பாடல் ஆடல் இரண்டும் பக்தி நெறி. நாடல் ஞான நெறி. தேடல் - உடம்பினுள் தேடல்; காட்சிக்காக ஏங்கல். இது யோக நெறி யாகலாம்.

யோகமுனிவர் அறிவர்

79. மன்னிய வாய்மொழியாலும் மதித்தவர்
இன்னிசையுள்ளே எழுகின்ற ஈசனை
பின்னை உலகம் படைத்த பிரமனும்
முன்னும் அவனை உணரலும் ஆமே?

மன்னிய வாய்மொழி யாலு மதித்தவ
ரின்னிசை யுள்ளே யெழுகின்ற வீசனைப்
பின்னை யுலகம் படைத்த பிரமனு
[1]முன்னு மவனை யுணரலு மாமே. (3)

வேறு பாடம்: 1. முன்னியவனை (எ) III. 2. யுணருவதாமே (ஒ) II.

கருத்து: வேதத்தில் கூறப்பட்ட உண்மை மொழிகளைக் கடைப் பிடிக்கும் மதிநிறைந்த முனிவரின் யோக அனுபவத்தில், பரநாதமாக உணரப்படும் இறைவனைப் பிரமனும் அவன் தந்தையாகிய திருமாலும் உணரக்கூடுமோ?

வாய்மொழி: வேதமும் ஆகமமும். மதித்தவர் - மதியை உடைய முனிவர். முன்னும் - பிரமனின் தந்தையாகிய திருமாலும்.

பத்தி கண்டு ஏற்பர்

80. தத்துவ ஞானம் உரைத்தது தாழ்வரை
முத்திக்கு இருந்த முனிவரும் தேவரும்
ஒத்துஉடன் வேறாய் இருந்து துதி செய்யும்
பத்திமை ஆன பயன் அறிவாரே.

தத்துவ ஞான முரைத்தது தாழ்வரை
முத்திக் கிருந்த முனிவருந் தேவரு
மொத்துடன் வேறா யிருந்து துதிசெய்யும்
[1]பத்திமை யான பயனறி வாரே[2]. (4)

வேறு பாடம்: 1. பத்திமையானிப் (எ) II. 2. யாரே (ஆ இ ஊ ஒ) I.

கருத்து: தத்துவஞானம் உரைக்கப்பட்ட இடமாகிய கயிலை மலையில் முத்தி பெறும் பொருட்டுத் தவம் செய்யும் முனிவர்களும் தேவர்களும் அந்த ஞானத்தின் பயனாகச் சிவபிரானைப் போற்றிப் புகழ்வர். பக்தியின் பயனையும் அறிவர்.

உரைத்தது தாழ்வரையில் என்க. தாழ்வரை - கயிலை மலைச்சாரல். முத்திக்கு - முத்தி பெறுவதற்கு. இருந்த - தவம் இருந்த. ஒத்துடன் ஒருங்கே. வேறாய் - தனித்தனியாக. தத்துவ ஞானத்தின் பயன் பத்திமை என்க.

குறிப்பு: 8 சுவடிகளில் இப்பாடலுடன் 'அவையடக்கம் முற்றும்' என்ற குறிப்பு உள்ளது.

திருமந்திரத் தொகைச் சிறப்பு

81. மூல னுரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞால மறியவே நந்தி யருளது
காலை யெழுந்து கருத்தறிந் தோதிடில்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே. (ஓ)

82. வைத்த பரிசே வகைவகை நன்னூலின்
முத்தி முடிவிதின் மூவா யிரத்திலே
புத்திசெய் பூர்வத்து மூவா யிரம்பொது
வைத்த சிறப்புத் தருமவை தானே. (ஔ)

குருமட வரலாறு

83. வந்த மடமேழு மன்னுஞ்சன் மார்க்கத்தின்
முந்தி யுதிக்கின்ற மூலன் மடவரை
தந்திர மொன்பது சார்வுமூ வாயிரஞ்
சுந்தர வாகமஞ் சொன்மொழிந் தானே. (ஓ ஓ)

84. கலந்தருள் காலாங்கர் தம்பால கோரர்
நலந்தரு மாளிகைத் தேவர்நா தாந்தர்
புலங்கொள் பரமானந் தர்போக தேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே. (ஓ)

4. வேதச் சிறப்பு

வீடுபேறு எய்துவிக்கும்

85. வேதத்தை விட்ட அறமில்லை; வேதத்தின்
ஓதத் தகும் அறம் எல்லாம் உள; தர்க்க -
வாதத்தை விட்டு, மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே.

வேதத்தை விட்ட வறமில்லை வேதத்தி
னோதத் தகுமற மெல்லா முளதர்க்க
வாதத்தை விட்டு 'மதிஞர் வளமுற்ற
வேதத்தை யோதியே வீடுபெற் றார்களே. (1)

வேறு பாடம்: 1. மதியர் (அ) II ; மதி நன் வளமுற (ஓ) II; பதி ஞான (பா 3)

கருத்து: வேதத்தை விடச் சிறந்த அறநூல் இல்லை. மக்கட்கு உரைக்க வேண்டிய அனைத்து அறங்களும் அவற்றில் உள. மதியுடையோர் தருக்க வாதத்தை விட்டு, வேதம் ஓதி வீடு எய்தினர்.

மதிஞர் - அறிஞர்.

குறிப்பு: இவ்விடத்தில் சிதைந்துள்ள ஒரு சுவடி தவிரப் பிறவற்றில் 'வேதச்சிறப்பு' என்னும் அதிகாரம் இங்குத் தொடங்குகின்றது. பாயிரமோ, கடவுள் வாழ்த்தோ தொடரவில்லை. பாடல்கட்கு 1 - லிருந்து வரிசை எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இங்குக் குறிப்பிட்ட சிதைந்த ஏடுகளைக் கொண்ட ஈ - சுவடியில் நூல் முழுவதற்கும் தொடர் எண் தரப்பட்டுள்ளது. (விசு) (தி) (வ) பதிப்புகள் இவ் வதிகாரத்தைப் பாயிரத்தில் அடக்கியுள்ளன. அது பொருத்தமின்று என (த) பதிப்பு குறித்து, இதனை முதல் தந்திரத்தில் சேர்த்துள்ளது.

சிவனே பேராசான்

86. வேதம் உரைத்தானும் வேதியன் ஆகிலன்
வேதம் உரைத்தானும் வேதா விளங்கிட
வேதம் உரைத்தானும் வேதியர் வேள்விக்கா
வேதம் உரைத்தானும் மெய்ப்பொருள் காட்டவே.

வேத முரைத்தானும் வேதிய னாகிலன்[1]
வேத முரைத்தானும் வேதா விளங்கிட
வேத முரைத்தானும் வேதியர் வேள்விக்கா[2]
வேத முரைத்தானு மெய்ப்பொருள் காட்டவே. (2)

வேறுபாடம்: 1. னாகிலென் (அ ஆ) I 2. வேள்விக்காய் (ஓ) I

கருத்து: வேதம் உரைப்பவன் ஆகிய பிரமன் அவ்வேதத்தின் ஆசிரியனோ, தலைவனோ அல்லன். சிவபரம்பொருளே இவ்விரு வராகவும் உள்ளவன். பிரமன் முதலியோரும் மக்களும் அறிவுபெறும் பொருட்டு, அவன் வேதம் உரைத்தான். யாகம் நிகழ்தற்காகவும், மெய்ப்பொருள் ஆராய்ச்சி நிகழ்தற்காகவும் வேதம் உரைத்தான்.

வேதம் உரைத்தான் - பிரமன். வேதா - பிரமன். 2-4 அடிகளில் உள்ள 'வேதம் உரைத்தான்' என்பது வேதத்தை அருளிய பரம்பொருளைக் குறிக்கும். வேதியன் - வேதத்தின் ஆசிரியன்; தலைவன். வேள்விக்

காக - யாகத்திற்காக. யாகத்திற்காக என்றமையால், வேதத்தின் கர்ம காண்டமும், 'மெய்ப்பொருள் காட்டவே' என்றமையால் அதன் ஞான காண்டமும் குறிக்கப்பட்டன.

வேத முடிபொருள்

87. இருக்கு உருவாம் எழில் வேதத்தின் உள்ளே
உருக்கு உணர்வாய் உணர் வேதத்துள் ஓங்கி,
வெருக்கு உரு ஆகிய வேதியர் சொல்லும்
கருக் குருவாய் நின்ற கண்ணனும் ஆமே?

இருக்குரு வாமெழில் வேதத்தி னுள்ளே
யுருக்குணர் வாயுணர் வேதத்து ளோங்கி
வெருக்குரு வாகிய வேதியர் சொல்லுங்
கருக்குரு வாய்நின்ற கண்ணனு மாமே. (3)

கருத்து: வேதம் மந்திரங்களின் தொகுதி. மந்திரம் இறைவனின் வடிவம். மந்திரங்களைச் செபித்து, வேதத்தின் உட்பொருளை அனுபவமாக உணர்ந்தால், உருக்குகின்ற உணர்வாய் நிற்பவன் இறைவன். வேதம் ஓதும் அந்தணர் சிலர் சொல்வது போல் அவன் 'தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரன்' அல்லன். அனைத்தும் கடந்த பரம்பொருள்.

திருநெறி

88. திருநெறி ஆவது, சித்து அசித்து அன்றிப்
பெருநெறி ஆய பிரானை நினைந்து
குருநெறியாம் சிவமாம் நெறி கூடும்
ஒருநெறி; ஒன்றாக வேதாந்தம் ஓதுமே.

[1]திருநெறி யாவது சித்தசித் தன்றிப்[2]
பெருநெறி யாய பிரானை நினைந்து
குருநெறி யாஞ்சிவ மாநெறி கூடு
மொருநெறி யொன்றாக [3]வேதாந்த மோதுமே. (4)

வேறு பாடம்: 1. குருநெறி (பா 1) 2. தின்றிப் (ஒ) I. 3. வேதத்து (அ இ) II; வேதத்தி னோதுமே (பா 1).

கருத்து: அறிவுடைய பொருள், அறிவிலாத பொருள் என்று சுட்டி அறியப்படாது, பேருணர்வால் மட்டும் உணரப்படும் இறைவனை நினைத்து, குருவால் உபதேசிக்கப் பட்டவாறு, சிவம் ஆம் தன்மை எய்தும் நெறியே திருநெறி. இஃது ஒன்றே நெறி என வேதாந்தம் (உபநிடதங்கள்) கூறும்.

சித்து - அறிவுப் பொருள். அசித்து - அறிவில்லாப் பொருள். 'அன்றி, ஆயவன் பிரான்' என வினை முடிவு செய்க. சிவபெருமான் சித்து, அசித்து என்ற இரு நிலையையும் கடந்தவன். பெருநெறி - பேருணர்வால் உணரப்படும் பொருள். நெறி என்பது நீதி. இங்கு நீதியை உடைய பொருளுக்கு ஆயிற்று. குருநெறி - குரு உபதேசத்தால் பெறும் நெறி. நெறி - வழி. ஒன்றாக - இது ஒன்றே நெறியாக. வேதம் பலவாறு சொல்லியதை வேதாந்தம் நெறிப்படுத்திக் கூறிற்று.

குறிப்பு: சைவசமயத்தின் பெயர் "திருநெறி" என்று, முதன் முதலாக அறிவித்தவர் ஆசிரியர் திருமூலர்.

சிவனும் நாமும்

89. ஆறு அங்கமாய் வரு மாமறை ஓதியைச்
கூறு அங்கம் ஆகக் குணம் பயில்வார் இல்லை,
வேறு அங்கம் ஆக விளைவு செய்து அப்புறம்
பேறு அங்கம் ஆகப் பெருக்குகின்றாரே.

ஆறங்க மாய்வரு மாமறை யோதியைக்
கூறங்க மாகக் குணம்பயில் வாரில்லை;
வேறங்க மாக விளைவுசெய் தப்புறம்
பேறங்க மாகப் பெருக்குகின் றாரே. (5)

கருத்து: மாந்தர் ஆறு அங்கங்கள் உடைய வேதங்களை உரைத்த பரம்பொருளைத் தமக்கு அன்னியம் இல்லாததாகக் கருதி நன்மை எய்தாமல், தம்மின் வேறாகச் கருதிப் பல கற்பனைகளை உண்டாக்கி வழிபட்டு வரம் பெறுதற்கு முயலுகின்றனர். உண்மையான பேறு அவனை அடைதலே.

ஓதி - ஓதுபவன்; அருளியவன். பரம்பொருள். கூறு அங்கம் ஆக - தம் அங்கங்களுள் ஒன்றாக - அன்னியம் இல்லாததாகக் கொண்டு. குணம் பயிலுதல் - நன்மை கடைப்பிடித்தல். வேறு அங்கம் ஆக - தம்மின் வேறான பொருளாகக் கருதி. பேறு அங்கமாக - பேறு பலவாக.

வேள்வி செய்யாதோர்

90. பாட்டும் ஒலியும் பரக்கும் கணிகையர்
ஆட்டும் அறாத அவனியில் மாட்டாதார்
வேட்டு விருப்பார், விரதம் இல்லாதவர்
ஈட்டும் இடம் சென்று இரக்கல் உற்றாரே.

பாட்டு மொலியும் பரக்குங் கணிகைய
ராட்டு மறாத வவனியில் மாட்டாதார்[1]
வேட்டு [2]விருப்பார் விரதமில் லாதவ
ரீட்டு மிடஞ்சென் [3]றிரக்கலுற் றாரே. (6)

வேறு பாடம்: 1. மாட்டாதார் (விசு) I. 2. விரும்பார் (அ இ ஈ ஊ ஒ) I. 3. றிரக்க வல்லாரே (பா 1)

கருத்து: பலராய் மிகுந்த கணிகையரின் பாட்டும் கூத்தும் நீங்காத இவ்வுலகில், சில அந்தணர் வேதநெறியில் ஒழுகுதலை விட்டு, தாம் பெறவியலாதவற்றை விரும்பி, விரதம் ஒன்றும் இன்றி வாழ்கின்றார். இவர்கள் வேள்வி செய்தும் பிறரை யாசிக்கின்றனர்.

பரக்கும் - பயிலும். வேட்டு - வேள்வி செய்து. விருப்பார் - விருப்பங்களை உடையவர். மாட்டாத - பெறவியலாதவற்றை. வினைப்பெயர்.

குறிப்பு: அனைத்துச் சுவடிகளிலும் இப்பாடலுடன் 'வேதச்சிறப்பு' என்ற அதிகாரம் முடிவுறும் என்ற குறிப்பு உள்ளது.

5. ஆகமச் சிறப்பு

ஆகமங்களை அருளியவன்

91. அஞ்சன மேனி அரிவை ஓர் பாகத்தன்
அஞ்சொடு இருபத்து மூன்று உள ஆகமம்;
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே.

அஞ்சன மேனி யரிவையோர் பாகத்த
னஞ்சொ டிருபத்து மூன்றுள வாகம
[1]மஞ்சலி கூப்பி யறுபத் தறுவரு
மஞ்சா முகத்தி லரும்பொருள் கேட்டதே[2]. (1)

வேறு பாடம்: 1. எஞ்சலில் விஞ்ஞுகர் இருபத்தெண்மரும் (துடி) 2. காட்டே (பா 1)

கருத்து: மைபோலும் கருநிறம் கொண்ட மேனியளாகிய உமையவளை ஒரு பாகமாக உடைய சிவபெருமான் உரைத்த ஆகமங்கள் இருபத்தெட்டு. அவனது ஈசான முகத்தைத் தரிசித்த 66 பேர்கள் அந்தச் சன்னிதியில் அவற்றைக் கேட்டனர்.

அஞ்சனம் - கருமை. அஞ்சாம் முகம் - ஐந்தாவது முகம் ஆகிய ஈசானம். சிவபெருமானுக்கு ஐந்து முகம். அவற்றுள் மேல் நோக்கியது ஈசானம்.

குறிப்பு: அனைத்துச் சுவடிகளிலும் இப்பாடலுடன் அடுத்த அதிகாரம் தொடங்குகிறது. 8 சுவடிகளில் 'ஆகமச் சிறப்பு' என்ற பெயர் காணப்படுகின்றது.

ஆகம வழி

92. அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணில், இருபத்தெண் கோடி நூறாயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்;
நண்ணிநின்று அப்பொருள் ஏத்துவன் நானே.

அண்ண லருளா லருளுஞ் சிவாகம
மெண்ணி லிருபத்தெண் கோடிநூ றாயிரம்
விண்ணவ ரீசன் விழுப்ப முரைத்தனர்
[1]நண்ணிநின் றப்பொரு ளேத்துவ னானே. (2)

வேறு பாடம்: 1. எண்ணிநின் (அ) IV.

கருத்து: இருபத்தெட்டுச் சிவாகமங்களும் இருபத்தெட்டுக் கோடி, அல்லது இருபத்தெட்டு இலட்சம் நூல்கட்கு இணை. அவற்றின் வழிநின்று, தேவர்கள் சிவபிரானது மேன்மையை உரைத்தனர். அந்தப் பரம்பொருளையே யானும் புகழ்ந்து கூறலுற்றேன்.

விழுப்பம் - மேன்மை. பரம்பொருட்டன்மை. அப்பொருள் - சிவபெருமான், ஆகமத்தால் உரைக்கப்பட்ட பொருள் அவனே ஆதலின். ஒவ்வோர் ஆகமமும் கோடி அல்லது இலட்சம் நூல்களுக்கு ஒப்பு ஆதலின் 'இருபத்தெண் கோடி நூறாயிரம்' என்றார். இத்துணை எழுத்து என்று எண்ணும் மரபும் உண்டு. 'நூறாயிரம்' என்பதன் பின் 'என்று' என ஒரு சொல் வருவிக்க.

93. பண்டித ராவார் பதினெட்டுப் பாடையுங்
கண்டவர் கூறுங் கருத்தறி வாரென்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையு
மண்ட முதலா னறஞ்சொன்ன வாறே. (க)

94. அண்ண லருளா லருளுந்திவ் யாகமம்
விண்ணி லமரர் தமக்கும் விளங்கரி
தெண்ணி லெழுபது கோடிநூ றாயிர
மெண்ணிலு நீர்மே லெழுத்தது வாகுமே. (ஊ எ)

ஆகம ஞானம்

95. பரனாய்ப் பராபரம் காட்டி உலகில்
தரனாய்ச் சிவதன்மம் தானேசொல் காலத்து
அரனாய் அமரர்கள் அர்ச்சிக்கும் நந்தி
உரன்ஆகி ஆகமம் ஓங்கிநின் றானே.

பரனாய்ப் பராபரங் [1]காட்டி யுலகிற்
றரனாய்ச் சிவதன்மந் தானேசொல் காலத்
தரனா யமரர்க ளர்ச்சிக்கு நந்தி
யுரனாகி யாகம [2]மோங்கிநின் றானே. (3)

வேறு பாடம்: 1. காட்ட (ஆ இ ஒ) II. 2. மோங்குகின்றானே (ஆ ஊ) III.

கருத்து: சிவபெருமான் விண்ணோர்க்குப் பரசிவமாகத் தரிசனம் அருளிப் பராபரநிலையை உணர்த்தி, மண்ணுலகில் தக்கதோர் உருவம் தரித்து, சிவநெறியை விளக்கும் காலத்தில், அவனை ‘அரன்’ என்று தேவர்கள் வழிபடுவர். அவன் ஆகம ஞானம் உடையோர்க்கு நன்கு புலனாகி நின்றான். (அதாவது, ஆகம ஞானம் சிவானுபவமே).

தரனாய் - தகுதியான உருவம் தரித்தவனாய். உரன் - வலிமை; ஈண்டு ஞானம். ஆகம ஞானத்தில் ஓங்கி நின்றான் என்க. “ஆகமமாகி நின்று அண்ணிப்பான்” (திருவா. சிவபு. அடி. 4)

ஆகமம் கேட்டவர்

96. சிவமாம் பரத்தினில் சத்தி, சதாசிவம்,
உவமா மகேசர், உருத்திர தேவர்,
தவமால், பிரமேசர் தம்மில் தாம் பெற்ற
நவ ஆகமம் எங்கள் நந்தி பெற்றானே.

சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவ
முவமா [1]மகேச ருருத்திர தேவர்
தவமால் [2]பிரமேசர் தம்மிற்றாம் பெற்ற
[3]நவவா கமமெங்க ணந்திபெற் றானே. (4)

வேறு பாடம்: 1. மயேச்சுர ருத்திர (ஊ); மகேசுர ருத்திர (பா 1) I. 2. பிரமீசர் (அ ஆ இ ஊ எ ஒ) I. 3. நவமெழு நான்குடன் நந்தி பெற்றானே (முத்திநிச்சயப்பேருரை மேற்கோள்)

கருத்து: பரசிவம், பராசத்தி, சத்தி, சிவம், சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், திருமால், பிரமன் என்ற 9 இறைவர்களின் வழியாக வந்தமையால் 9 ஆகமங்கள் எனப்படும் சிவாகமங்கள் இருபத் தெட்டையும் எம் நந்தி பெற்றான்.

ஒன்பது என்பது வகையே.

பரம் - மேலானது. இங்குச் சிவம், சத்தி எனச் சொல்லப்பட்டவற்றில் நாதம், விந்து என்னும் இரண்டும் அடங்கும். ஆக இங்குக் கூறப் பட்டவர் ஒன்பது சிவமூர்த்தங்கள். பிரமேசர் - பிரமனாகிய தலைவன். ஒன்பது மூர்த்திகளாக இருந்து சிவபெருமான் கூறியருளியமையால் 28 சிவாகமங்களும், ஒன்பது ஆகமங்கள் எனத் தொகுத்துக் கூறப்பட்டன. 'ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழ்' என்று ஆசிரியர் பின்னர்க் கூறுவது காண்க. (திருமந்.) மேற்காட்டிய முத்திய நிச்சயப் பேருரை கொண்ட பாடம் இதைத் தெளிவுபடுத்துகின்றது.

97. பெற்றநல் லாகமங் காரணங் காமிக
முற்றநல் வீர முயர்சிந்தம் வாதுள
மற்றவ்வி யாமள மாகுங்கா லோத்தரந்
துற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே. (இ)

குறிப்பு: இப்பாடலில் கூறப்படும் யாமளம் சிவாகமம் அன்று. வாம ஆகமம். காலோத்தரம் உபாகமம். இவற்றைச் சிவாகமங்களுள் வைத்துக் கூறுவதால் இப்பாடல் இடைச் செருகல்.

பதிஞானம் வேண்டும்

98. அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்இலி கோடி தொகுத்திடும் ஆயினும்
அண்ணல் அறிந்த அறிவு அறியாவிடில்
எண்இலி கோடியும் நீர்மேல் எழுத்தே.

அண்ண லருளா லருளுஞ் சிவாகம
மெண்ணிலி கோடி தொகுத்திடு மாயினு[1]
மண்ண [2]லறிந்த வறிவறி யாவிடி
லெண்ணிலி கோடியு நீர்மே லெழுத்தே. (5)

வேறு பாடம்: 1. மாயின் (பதிப்) 2. லறைந்த (ஐ) I.

கருத்து: சிவபிரான் அருளினால் நல்கிய ஆகமங்கள் எண்ணிலாத அறிவுச் செய்திகள் உடையயவையேனும், பதிஞாளம் பெறாவிடின் அவை அபரஞானமே ஆகும். அவை தண்ணீரில் எழுதிய எழுத்துப் போல நிலையற்று நீங்கும்.

அண்ணல் அறிந்த அறிவு - இறைவன் அறிந்து அறிவிக்கும் அறிவு; பதிஞானம். எண்ணிலி கோடி அறிவு என்க. இத்துணை மிகுந்த அறிவாயினும், அதனை அறிவது அபர ஞானமே யாகும். அண்ணல் அறிந்த அறிவே பதிஞானம். அதனைப் பெறாவிடில், அபர ஞானத்தால் வீடு எய்த இயலாது .

தமிழ், வடமொழி - இரண்டிலும் ஆகமம்

99. மாரியும் கோடையும் வார்பனி தூங்க, நின்று
ஏரியும் நின்று அங்கு இளைக்கின்ற காலத்தது
ஆரியமும் தமிழும் உடனே சொல்லிக்
காரிகையார்க்குக் கருணை செய்தானே.

மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்[1]
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்த[2]
[3]தாரிய முந்தமி ழும்முட னேசொல்லிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே. (6)

வேறுபாடம்: 1. தூங்கிநின் (அ ஆ இ ஊ ஒ) II தூங்கியும் (பா 1)
2. காலத்து (அ இ எ ஒ) II. 3. வாரிய (எ) II.

கருத்து: மாரிக்காலத்தும், கோடைகாலத்தும், பனி நீளும் காலத்தும் எனக் கால வேறுபாட்டால் இளைக்கும் உயிர்க்கு உய்தி கிடைக்குமாறு ஆகமங்களை அருளினான். இப் பருவ வேறுபாடு ஊழி வேறுபாட்டையும் குறிப்பாற் காட்டும். ஆகமங்களை அருளியது, சலனப்படும் உயிர்க்கு, அச் சலனம் இல்லாத இறைவன் அத்தன்மையை வழங்கும் பொருட்டு என்க.

வார்பனி - சொரியும் பனி. தூங்க - நீடிக்க. ஏறியும் என்பது எதுகை நோக்கித் திரிந்தது. காலத்தது - என்பது உபதேசத்தைக் குறித்தது. காரிகையார் - உமாதேவியார்.

ஆகமம் கூறும் செய்தி

100. அவிழ்க்கின்றவாறும், அது கட்டுமாறும்
சிமிட்டலைப் பட்டு உயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ் இரண்டும்
உணர்த்தும் அவனை உணர்தலும் ஆமே ?

அவிழ்க்கின்ற வாறு மதுகட்டு மாறுஞ்'
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறுந்
தமிழ்ச்சொல் வடசொல் லெனுமிவ் விரண்டு
முணர்த்து மவனை யுணர்தலு மாமே. (7)

வேறு பாடம்: 1. கட்டும் வாறுஞ் (ஆ இ ஈ) I

கருத்து: இறைவன் உயிரின் அறியாமை முடிச்சை விடுவிப்பது பற்றியும், ஆணவ மலத்தின் வலிமையால் பின்னும் அறியாமை உண்டாவது பற்றியும், வினையால் வஞ்சிக்கப்பட்டு உயிர் போவது பற்றியும், மீண்டும் பிறவி உண்டாகி, இறைவனது கருணையால் உயிர், அறியாமையினின்றும் விடுவிக்கப்படுவது பற்றியும், தமிழ், வடமொழி - இரண்டிலும் உள்ள ஆகமங்களால் அறியலாம்.

அவிழ்த்தல் - விடுவித்தல். சிமிட்டல் - வஞ்சித்தல். வினையால் வஞ்சிக்கப்பட்டு என்க.

6. திரிமூர்த்தி

ஐந்தொழில் முதல்வன்

101. அளவில் இளமையும் அந்தமும் ஈறும்
அளவிய காலமும் நாளும் உணரின்
தளர்வுஇலன் சங்கரன்; தன்னடியார் சேர்
அளவில் பெருமை அறிய நின்றானே.

அளவி லிளமையு மந்தமு மீறு
[1]மளவிய காலமு [2]நாளு முணரிற்
றளர்விலன் சங்கரன் றன்னடி யார்சே[3]
ரளவில் பெருமை [4]யறியநின் றானே. (1)

வேறு பாடம்: 1. மளவியல் (எ) IV. 2. நாலு (பதிப்) 3. யார்சொல் (எ) IV. 4. யரியயற்காமே. (எ) II.

கருத்து: எத்துணையோ முறை படைத்தல், காத்தல், ஒடுக்கல், மறைத்தல், அருளல் ஆகிய தொழில்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றைச் சோர்வின்றிச் செய்பவன் சங்கரன் என அறிக. இவற்றுள் முதல் மூன்று தொழில்களையும் அவன் ஏவலால் முறையே அயனும் திருமாலும் உருத்திரனும் செய்வர். ஏனைத் தொழில்கள் இரண்டையும், அம்மூவரிடத்தும் ஐந்தொழில்களையும் சோர் வின்றிச் செய்பவன் சங்கரன். அடியார் தனது திருவடியில் சேர அருளும், அளவிலா அருட்பெருமையும் உடையவன். அவ்வாறு திருவடி சேரும் போது அவன் அடியார், திரிமூர்த்திகளுக்கு அன்றி அவனுக்கு மட்டுமே உரிய பெருமையை அறியுமாறு நிற்பான்.

இளமை - படைப்பு. அந்தம் - அருளல். ஈறு - ஒடுக்குதல். அளவிய காலம் - காத்தல்.

குறிப்பு: 10 ஏடுகளில் இப்பாடலுடன் புது இயல் தொடங்குகிறது. 'திரிமூர்த்தி' 'திருமூர்த்தி சேடம்' 'திரிமூர்த்தம்' 'திரிமூர்த்திகளின் சேட்ட கனிட்ட முறைமை' எனப் பலவாறாக இயலின் பெயர்கள் இவற்றில் உள்ளன. 7 சுவடிகளில் 'குருமட வரலாறு' அல்லது 'குருமட தரிசனம்' என்ற இயலை அடுத்து இவ்வியல் உள்ளது. பொருட் பொருத்தத்தை நோக்கி, இப்பதிப்பில் இயல் வைப்புமுறை புதியதாக மேற்கொள்ளப்பெற்றது.

(விளக்கம் முன்னுரையிற் காண்க)

ஒருவனே மூவரும்

102. ஆதிப் பிரானும் அணி மணிவண்ணனும்
ஆதிக் கமலத்து அலர்மிசை ஆயனும்
சோதிக்கின் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்று எனார்
பேதித்து உலகம் பிணங்குகின்றார்களே.

ஆதிப் பிரானு மணிமணி வண்ணனு
மாதிக் கமலத் தலர்மிசை யாயனுஞ்[1]
சோதிக்கின் மூன்றுந் தொடர்ச்சியி லொன்றெனார்[2]
[3]பேதித் துலகம் பிணங்குகின் றார்களே. (2)

வேறு பாடம்: 1. யயனுந் (இ ஈ); யானுஞ் (அ ஊ ஒ) I. 2. லொன்றானார் (ஆ இ) I. 3. பேதித்து நின்று (ஆ இ ஊ) III.

கருத்து: சிவனும், திருமாலும், பிரமனும் (பின் இருவரைச் சிவன் அதிட்டித்து நிற்பதால்) ஒருமையுடையவரே என அறியாமல், மக்கள் இவர்களுள் வேறுபாடு செய்து, தம்முள் மாறுபடுகின்றனர்.

மணிவண்ணன் - திருமால். உலகம் - உலகத்தின்கண் என்க. ஏழாம் வேற்றுமைத் தொகை.

அயன், ஆயன் என நீண்டது, ஓசையினிமை பற்றியும் தளை சிதையாமைப் பொருட்டும்.

வினை கடந்தவன்

103. ஈசன் இருக்கும் இருவினைக்கு அப்புறம்;
பீசம் உலகில் பெருந்தெய்வம் ஆனது;
நீசர் ‘அது, இது’ என்பார்-நினைப்பு இலார்;
தூசு பிடித்தவர் தூர் அறிந்தார்களே.

ஈச னிருக்கு மிருவினைக் கப்புறம்
பீச முலகிற் பெருந்தெய்வ மானது
[1]நீச ரதுவிது வென்பார் நினைப்பிலார்
தூசு பிடித்தவர் தூரறிந் தார்களே. (3)

வேறு பாடம்: 1. ஈசனதுவிது (அ எ) II.

கருத்து: இருவினைப் பயனைக் கடந்தவனே ஈசன். அவனே பெருந்தெய்வம். உலகிற்கு வித்து. கீழான அறிவுடையோர்

ஆராய்ந்து பாராமல், 'அத்தெய்வம், இத்தெய்வம்' எனப் பேசுவர். அறிவின் தூய்மை உடையோரே மறைப்பை அகற்றி, உண்மையைக் கண்டறிவர்.

அப்புறம் - கடந்தநிலை. பீசம் - வித்து. தூசு - தூய்மை. (தூய்து என்பது திரிந்தது) தூர் - பள்ளத்தைத் தூர்க்கும் பொருள்; மறைப்பு. இதனை அகற்றி, உள்ளே இருப்பதை அறிவது போல, மறைப்பை நீக்கி உண்மையை அறிவார் என்க.

நவநிலை

104. சிவன் முதல் மூவரோடு ஐவர் சிறந்த
அவைமுதல் ஆறு, இரண்டு, ஒன்றொடு ஒன்று ஆகும்,
அவை முதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவைமுதல் சங்கரன் தன் பெயர் தானே.

சிவன்முதல் மூவரோ டைவர் சிறந்த
வவைமுத லாறிரண் டொன்றொடொன் றாகு
மவைமுதல் விந்துவு நாதமு மோங்கச்
சவைமுதற் சங்கரன் றன்பெயர் தானே. (4)

வேறு பாடம்: 1 தாமே (பதிப்)

கருத்து: சிவனின் நிலைகள் மூன்று:- சிவன், சதாசிவன், மகேசுரன். ஐவர் - மேல் உள்ளவரோடு திருமால், பிரமன் சேர ஐவர். ஆறு, இரண்டு, ஒன்று, ஒன்று : பத்து. பரசிவம், நாதம், விந்து, சிவம், சத்தி, சதாசிவன், மகேசுரன், உருத்திரன், திருமால், பிரமன். இவற்றுள் பரசிவம் தவிர மற்றைய ஒன்பதையும் 'நவந்தரு பேதம்' என்பர்.

சவை - சபை; தொகுதி. உயிர்களின் தொகுதி. "அவன் அவள் அது எனும் அவை" (சிவ. போ. சூத். 1)

மூவரால் வரம் பெறுக

105. பயன் அறிந்து அவ்வழி எண்ணும் அளவில்
அயனொடு மால் நமக்கு அன்னியம் இல்லை;
நயனங்கள் மூன்று உடை நந்தி தமராம்;
வயனம் பெறுவீர் அவ் வானவராலே.

பயனறிந் தவ்வழி யெண்ணு மளவி
[1]லயனொடு மானமக் கன்னிய மில்லை
நயனங்கண் மூன்றுடை நந்தி தமராம்
வயனம் பெறுவீரவ் வானவ ராலே. (5)

வேறு பாடம்: 1. லயனோ டரனமக் (ஆ) II

கருத்து: மேற்கூறிய வழியில், ஒவ்வொரு மூர்த்தத்தினுடைய பயனையும் சிந்திப்பின், பிரமனும் திருமாலும் நமக்கு அன்னியம் அல்லர். அவர்களும் நந்தியின் அடியார்களே. அவர்களையும் வழிபட்டு வரம் பெறுக.

வயனம் - வயணம் என்பதன் திரிபு; வகை; அவர் அளிக்கும் வரங்களின் வகை.

நம்மவர்

106. ஓலக்கம் சூழ்ந்த உலப்புஇலி தேவர்கள்
பால்ஒத்த மேனி பணிந்து அடியேன் தொழ,
“மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் ஒப்புநீ
ஞாலத்து நம் அடி நல்கிடு” என்றானே.

ஓலக்கஞ் சூழ்ந்த வுலப்பிலி தேவர்கள்
பாலொத்த மேனி பணிந்தடி யேன்றொழ
‘மாலுக்கு மாதிப் பிரமற்கு மொப்புநீ
ஞாலத்து நம்மடி நல்கிடென் றானே. (6)

கருத்து: சிவபெருமானது திருப்பேரவை மண்டபத்தில் தேவர்கள் எல்லாம் சூழ்ந்திருக்க, நான் அப்பெருமானைப் பணிந்து தொழுதேன். அவன் எனக்கு அருள்புரிந்து, “நீ திருமாலுக்கும் பிரமனுக்கும் ஒப்பானவன். உலகில் மக்கள் அறியுமாறு நம் பெருமையைப் பாடு” எனப் பணித்தான்.

ஓலக்கம் - அத்தாணி மண்டபம். உலப்புஇலி - எண்ணிக்கையற்ற. அடி - திருவடிப் பெருமை. நல்கிடு - நூலாகச் செய்க.

குறிப்பு: இப்பாடல் எல்லா ஏட்டுச் சுவடிகளிலும் இவ்வதிகாரத்தி லேயே உள்ளது. இது திருமூலர் வரலாறு என்ற அதிகாரத்தில் இருப்பது பொருத்தம் உடையது எனத் தோன்றுகின்றது. திருமாலும் பிரமனும் அணுபட்சமே (உயிர் வகையினரே) எனத் தெரிவித்ததுமாம். “நம்மவரவரே” (திருவா. திருச்ச - 4)

பரம்பொருளே படைத்தோன்

107. வானவர் என்றும், மனிதர் இவர் என்றும்,
தேன் அமர் கொன்றைச் சிவன் அருள் அல்லது
தான் அமர்ந்து ஒரும் தனித்தெய்வம் மற்று இல்லை;
ஊன் அமர்ந்தோரை உணர்வது தானே.

வானவ ரென்று மனித ரிவரென்றுந்
தேனமர் கொன்றைச் சிவனரு ளல்லது
தானமர்ந் தோருந் தனித்தெய்வ மற்றில்லை
யூனமர்ந் தோரை [1]யுணர்வது தானே. (7)

வேறு பாடம்: 1. யுணரலு மாமே. (இ ஈ) IV.

கருத்து: சிவபிரானே அருளால் சிலரைச் சூக்கும உடம்புடன் கூடிய தேவராகவும், சிலரைத் தூல உடம்புடன் கூடிய மனிதராகவும் படைக்கின்றான். அவனை அன்றிப் பிறரை எல்லாம் கடவுளாகக் கருதலாகாது. பிறர் எல்லாம் உடம்புடன் கூடிய, அளவு பட்ட வாழ்க்கை உடையவரே.

அருள் அல்லது - அருளால் உணர்வது அல்லது. ஊன் அமர்ந்தோர் - உடம்பு கொண்டு பிறந்தோர்; உடம்பு சூக்கும உடம்பும் ஆம். ஆன்மாக்களை மனிதராகவும் தேவராகவும் படைக்கும் ஒரே தெய்வம் சிவபரம்பொருளே. பிறவா வடிவன் அவனே.

மூவரானான்; ஐவர் ஆனான்

108. சோதித்த பேரொளி மூன்று, ஐந்து என, நின்ற
ஆதிக்கண் ஆவது அறிகிலர் ஆதர்கள்;
நீதிக்கண் ஈசன், நெடுமால், அயன் என்று
பேதித்து அவனைப் பிதற்றுகின்றாரே.

சோதித்த பேரொளி மூன்றைந் தெனநின்ற
[1]வாதிக்க ணாவ [2]தறிகில ராதர்க
ணீதிக்க ணீச னெடுமா லயனென்று
பேதித் [3]தவனைப் பிதற்றுகின் றாரே. (8)

வேறு பாடம்: 1. வாதிக்கு ளாவ (எ) IV. 2. தறிகிலா தார்க (பா 3)
3. தவரைப் (எ) IV.

கருத்து: மெய்ஞ்ஞானம் உடையோர் ஆய்ந்து உணர்ந்த பேரொளியாகிய பரம்பொருளே மூன்றும், ஐந்துமான நிலைகளை உடையதாயிற்று. முத்தொழிற்கடவுளர் மூவரும், இந்நிலைகளில் அடங்குவர். இதனை அறியாத மூடர், மூன்று தனிக்கடவுளர் என வேறுபடுத்திப் பிதற்றுகின்றனர்.

நின்ற ஆதிக்கண் - என்றும் ஒரு நிலையில் நின்ற பரம்பொருளிடத்து. பிரமன், திருமால், உருத்திரன் என்ற மூன்று நிலைகளும் பரம்பொருளின் நிமித்தத்தால் தோன்றுகின்றன. இவற்றுடன் மகேசுவரன், சதாசிவன் சேர, ஐந்து ஆகும். ஆதர்கள் - மூடர்கள். அவனை - ஆதியை.

பலரானான்

109. பரத்திலே ஒன்றாய், உள்ளாய், புறம் ஆகி,
வரத்தினுள் மாயவனாய், அயனாகி,
தரத்தினுள் தான் பல தன்மையன் ஆகி,
கரத்தினுள் நின்று கழிவு செய்தானே.

[1]பரத்திலே யொன்றாயுள் ளாய்ப்புற மாகி
வரத்தினுண் மாயவ னாயய னாகித்
தரத்தினுட் டான்பல தன்மைய னாகிக்
கரத்தினு ணின்று கழிவுசெய் தானே. (9)

வேறு பாடம்: 1. பரத்திலொன்றாய் (ஆ இ ஈ ஊ) II; பரத்தினோடொன்றாய் (அ) (பா 3) II.

கருத்து: பரம்பொருள் என நோக்கும்பொழுது ஒன்றாகி, யாவர்க்கும் உள்ளும் புறமுமாக இருந்து, வரம்தரும் நிலையில் திருமாலும் பிரமனும், உருத்திரனும் ஆகி, மற்றும் பலப்பல குணங்கள் உடைய கடவுளர்களாகி, பக்குவம் அடைந்த உயிர்களுக்கு அருள் வழங்கிப் பாசத்தைப் (ஆணவ மலத்தை) போக்குகின்றான்.

பரம் - மேல்நிலை. வரத்து - வரவு. கரம் - கை; அருள். கழிவுசெய்தான் - பாசத்தைப் போக்கியருளினான்.

கோலம் வேறு; உயிர் ஒன்றே

110. தான் ஒரு கூறு சதாசிவன் எம் இறை
வான் ஒரு கூறு மருவியும் அங்கு உளன்;
கோன் ஒரு கூறு உடலுள் நின்று உயிர்க்கின்ற;
தான் ஒரு கூறு சலமயன் ஆமே.

தானொரு [1]கூறு சதாசிவ னெம்மிறை
வானொரு கூறு மருவியு மங்குளன்
கோனொரு கூறுட லுண்ணின் றுயிர்க்கின்ற[2]
தானொரு கூறு சலமய னாமே[3] (10)

வேறுபாடம்: 1. கூறுஞ் (ஆ) (ஊ) I. 2. றுயிர்க்கணே (ஆ) IV. 3. லாமே (பா 3).

கருத்து: சத்தியும் சிவமும் சமமாக மருவி நிற்கும் 'சதாசிவம்' என்ற திருமேனி கொண்டவன் எம் சிவபரம்பொருளே. வானவர் களுள்ளும் கலந்து கடவுளர்களாக விளங்குகின்றான். நம் உடலினுள் உயிர்க்குயிராய் நின்ற தலைவனும் அவனே. நமக்கு நீர் போல் குளிர்ந்த அருள் வழங்குபவன் அந்தச் சதாசிவனே.

கூறு - நிலை. சலமயன் - தண்ணீரின் தன்மை (குளிர்ச்சி) உடையவன்.

குறிப்பு: 9 சுவடிகளில் இப்பாடலுடன் 'திருமூர்த்தி முற்றும்' என்ற குறிப்பு உள்ளது. ஒரு சுவடியில் மட்டும், "ஆக அதிகாரம் 9 க்குப் பாடல் 112 சிறப்புப் பாயிரம் முற்றும்" என்ற குறிப்பு உள்ளது. மற்றொரு சுவடி 'அதிகாரம் 9' என்று மட்டும் குறிப்பிட்டுப் பாடல் மொத்த எண் 112 என்று குறிப்பிடுகின்றது.

உபதேசம்

111. விண்ணின்று இழிந்து, வினைக்கு ஈடாய் மெய்கொண்டு
தண் நின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உள் நின்று உருக்கி ஓர் ஒப்பிலா ஆனந்தக்
கண் நின்று காட்டிக் களிம்பு அறுத்தானே.

விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவன் முன்வைத்து
வுண்ணின் றுருக்கியொ ரொப்பிலா வானந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே. (1)

கருத்து: ஆசிரியர் திருமூலர் தமக்கு நந்தியம்பெருமான் உபதேசித்த வகையைக் கூறுகின்றார். பரசிவமூர்த்தி பரமாகாயத்திலிருந்து வெளிப்பட்டு, முதலில் தனது குளிர்ந்த திருவடிகளை என் உலகியல் வாழ்வுக்குப் பாதுகாவலாக அமைத்தான். பின்னர், எனது பக்குவத்தை நோக்கி, (சகல நிலையில் நின்ற) எனக்குப்

பதிஞானத்தை உபதேசிக்கும் பொருட்டு, நந்தியாசிரியனாகத் திருமேனி தாங்கித் தன் திருவடிகளை என் தலையில் சூட்டினான். என் புருவ மத்தியில் ஒரு கண்ணைத் தோற்றுவித்து, அதனால் காணுமாறு சோதியாகத் திகழ்ந்தான். அதனைக் கண்டு இணையற்ற இன்பம் கொண்டேன். என் உள்ளத்துள் நின்று அதை உருகச் செய்தான். அதன் பேறாக என் ஆணவ மலத்தை நீக்கினான்.

இழிந்து - சொரூபத் திருமேனியை விட்டுத் தடத்தத் திருமேனி கொண்டு. வினை - பக்குவம். உபசார வழக்கு. காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது. மெய் - நந்தி திருமேனி. திருவடி சத்தியாகும். அது முன்னர், திரோதான சத்தியாய் நின்று வளர்த்தது. பின்பு, அருட் சத்தியாய் நின்று அருளியது. காவலாக வைத்தது முன்னே, தலையில் வைத்தது பின்னே என்க. "பேதித்து நம்மை வளர்த்து, எடுத்த பெய்வளை" என்பார் மணிவாசகரும் (திருவா. திருவெம். - 14) கண் - உயிருணர்வின் விழிப்பு. செம்பிற் களிம்பு போல என ஆணவ மலத்தை உவம முகத்தால் சுட்டுவது மரபாதலின், "களிம்பு அறுத்தானே" என்றார்.

112. களிம்பு அறுத்தான் எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பு அறுத்தான் அருட்கண் விழிப்பித்து;
களிம்பு அணுகாத கதிர்-ஒளி காட்டிப்
பளிங்கில் பவளம் பதித்தான் பதியே.

களிம்பறுத் தானெங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தானருட் கண்விழிப் பித்துக்
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே. (2)

கருத்து: எம் முதல்வனும், நெற்றிக்கண் உடையோனுமாகிய நந்தி எனக்கு அருள் - அறிவு தந்து, ஆணவ மலத்தைப் போக்கினான். மீண்டும் என் அறிவை அம்மலம் சார்ந்து மறைக்காதவாறு, என் உணர்விற்குத் தனது பேரொளியைக் காட்டிப், பளிங்கில் பவளம் பதித்தாற் போல என்னுடன் கலந்தான்.

அருள் அறிவு - அருளின் துணைகொண்டு உணரும் அறிவு. கதிர் ஒளி - அருள் - ஒளி. பளிங்கிற் பதித்த பவளம், அதையும் தன் வண்ணமாக்கி உடன் இருக்கும். அது போல, ஆன்மாவுடன் கலந்த சிவம், அதனையும் 'சிவமாக்கி' உடன் நிற்கும். பளிங்கு வேறாகப் புலப்படாதது போல ஆன்மா தற்போதம் இழந்து, சிவபோதம் எய்தியிருக்கும்.

113. பதி பசு பாசம் - எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல், பசு பாசம் அனாதி;
பதியினைச் சென்று அணுகா பசு, பாசம்
பதி அணுகின், பசு, பாசம் நில்லாவே.

பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாச மனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசநில் லாவே. (3)

கருத்து: பதி, பசு, பாசம் எனக் கூறப்படும் மூன்று பொருள்களுள், பதி ஆகிய இறைவன் எவ்வாறு தோற்றம், முடிவு இல்லாதவனோ, அவ்வாறே பசுவாகிய உயிரும், பாசம் ஆகிய மலங்களும் தோற்றம், முடிவு அற்றவை. ஆனால், உயிரும் மலங்களும் தாமே சென்று இறைவனை நெருங்கவியலாது. இறைவன் உயிருக்கு அருளினால், அதன் பசுத்தன்மையும், அதனைப் பிணித்துள்ள மலங்களும் ஒரு கணமும் நில்லாது நீங்கும்.

பதி, பசு, பாசம் என்பன தடத்த வடிவங்களின் பெயர். இவற்றின் இயல்பான வடிவத்திற்கு (சொரூபத்திற்கு) முறையே, சிவம், ஆன்மா, மலம் எனப் பெயர். சிவம் உலகைப் படைத்தல் முதலிய ஐந்தொழில் செய்தலின் பதி எனப்பட்டான். ஆன்மா ஆணவ மலத்தினாற் கட்டுண்டிருத்தலின், பசு எனப்பட்டது. ஆணவ மலம் ஆன்மாவைக் கட்டும் கயிறு போல, அதன் அறிவை மறைத்தலின், பாசம் எனப்பட்டது. உயிர் அறிவுடையது ஆயினும், தானே அறியமாட்டாது, மலம் அறிவற்ற சடப்பொருள். ஆதலின், "சென்று அணுகா" என்றார். 'பசு பாசம் நில்லா' என்பது, தடத்த வடிவம் நீங்கி இயல்பான வடிவம் பெறும் எனப் பொருள்படும். ஆன்மாவின் சொரூபம் வியாபக அறிவு. மலத்தின் சொரூபம், வறுத்த விதை போன்று இருத்தல், உயிரின் அறிவை மறையாது இருத்தல்; பதி அணுகின் - இறைவன் அருளால் மெய்யறிவு உணர்த்த எழுந்தருளினால்.

114. வேயின் எழும் கனல் போலே இம் மேனியும்
கோயில் இருந்து குடிகொண்ட கோன் நந்தி
தாயினும் மும்மலம் மாற்றித், தயா என்னும்
தோயம் - அதாய் எழும் சூரியனாமே.

வேயி னெழுங்கனல் போலேயிம் மேனியுங்
கோயி லிருந்து குடிகொண்ட கோனந்தி
தாயினு மும்மல மாற்றித் தயாவென்னுந்
தோயம தாயெழுஞ் சூரிய னாமே. (4)

கருத்து: மூங்கிலினுள் மறைந்திருந்து, உரிய சூழ்நிலை உண்டாகும் பொழுது வெளிப்படும் நெருப்பு, அதனை ஒளியுடைய பொருளாகச் செய்தல் போல, மனிதவுடம்பிலும் திரோதான சத்தியாக மறைந்திருந்து, உயிர் பக்குவம் உறும் பொழுது, அருட்சத்தியாகவும் சிவமாகவும் வெளிப்பட்டு, அவ்வுடம்பைக் கோயிலாக்கிக் குடியேறும் சிவபெருமான் எத்தகையோன் என்றால், தாயினும் மிக்க தயவுடைவன்; கருணையினால் மும்மலங்களையும் நீக்குபவன்; அருட்கதிர் பரப்பிக் கருணை வெள்ளம் பாலிக்கும் சிவ ஞாயிறு.

தோயம்-வெள்ளம். "மாறிலாத மாக்கருணை வெள்ளமே" என்பர் மணிவாசகர். (திருவா. திருச்ச. 91)

115. சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே,
சூரியகாந்தம் சூழ்பஞ்சைச் சுடமாட்டா
சூரியன் சன்னிதியில் சுடுமாறு போல்
ஆரியன் தோற்றம் முன் அற்ற மலங்களே.

சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ்சூழ் பஞ்சைச் சுடமாட்டா
சூரியன் சன்னிதி யிற்சுடு மாறுபோ
லாரியன் தோற்றமு னற்றம லங்களே. (5)

கருத்து: உயிரும் மலங்களும் முறையே சூரியகாந்தக் கல்லும், அதனைச் சூழ்ந்துள்ள பஞ்சும் போன்றவை. பஞ்சைச் சூரிய காந்தம் எரிக்காது. ஆனால், சூரியன் இருந்தால், அதன் ஒளியைச் சூரியகாந்தம் வாங்கிப் பஞ்சைச் சுடும். அதுபோல, குரு அருளினால், உயிர் தன்னைப் பிணித்த மலங்களை நீக்கும்.

116. "மலம் களைந்தாம்" - என மாற்றி, அருளி,
தலங்கள் ஐந்தால் நற்சதாசிவமான
புலம் களைந்தான் அப் பொதுவினுள் நந்தியே
நலங்கள் ஐந்தான் உள் நயந்தான் அறிந்தே.

மலங்களைந் தாமென மாற்றி யருளித்
தலங்களைந் தானற் சதாசிவ மான
புலங்களைந் தானப் பொதுவினு ணந்தியே
நலங்களைந் தானுண் ணயந்தா னறிந்தே. (6)

கருத்து: சிற்றம்பலத்தில் நடனமிடும் சிவபெருமான், "உன் மலங்களை நீக்குகிறோம்" என்று கூறி, அவ்வாறே நீக்கித் தன்னைத் தந்தான். சுத்த தத்துவங்கள் ஐந்தினுள் சதாசிவமாய் விளங்கி ஐந்தொழில் புரிதலை என் அளவில் தவிர்த்தான். நான் செய்யும் திருவைந்தெழுத்துத் தியானத்தால் மகிழ்ந்து, என் உள்ளமே கோயிலாகக் கொண்டான்.

117. அறிவு ஐம்புலனுடனே நான்றது ஆகி
நெறி அறியாது உற்ற நீராழம் போல
அறிவு அறிவுள்ளே அழிந்தது போலக்
குறி அறிவிப்பான் குருபரன் ஆமே.

அறிவைம் புலனுட னேநான்ற தாகி
நெறியறி யாதுற்ற நீராழம் போல
வறிவறி வுள்ளே யழிந்தது போலக்
குறியறி விப்பான் குருபர னாமே. (7)

கருத்து: உயிரின் அறிவு பொறி புலன்களில் கட்டுண்டு, அவற்றின் மயக்கிலிருந்து விடுபடும் வழியறியாது துன்புறும். எது போல? ஆழமான குளத்தில் மூழ்கிக் கரையேற அறியாமல் இருப்பவனைப் போல. அதனை மீட்டுச் சிவத்தினுடைய பேரறிவில் கலப்பித்து, அது தன்னை இழந்து நிற்கும் நிலையை உண்டாக்குபவன் ஞானாசிரியனே.

மெய்யுணர்வை நல்கி மயக்கத்தைத் தெளிவிப்பான் என்க. உயிர் தானே தெளியாது என உணர்த்துகிறார்.

118. ஆமேவு பால் நீர் பிரிக்கின்ற அன்னம் போல்
தாம் மே தனிமன்றில் தன்னந்தனி நித்தம்
தீமேவு பல்கரணங்களுள் உற்றன
தாமே பிறப்பு எரி சேர்ந்த வித்து ஆமே.

ஆமேவு பானீர் பிரிக்கின்ற வன்னம்போற்
றாமே தனிமன்றிற் றன்னந் தனிநித்தந்
தீமேவு பல்கர ணங்களு ளூற்றன
தாமே பிறப்பெரி சேர்ந்தவித் தாமே. (8)

கருத்து: பால், நீர் - இரண்டையும் அன்னம் தனித்தனியே பிரிப்பது போல, சத்தி நிபாதர்க்கு, இறைவனது திருவருள், ஐந்தொழிற் கூத்தின் மூலமாக, அவர்களது கருவி கரணங்களுடன் இணைந்துகிடக்கும் வினைகளைப் பிரித்து அழிக்கும். அதனால், பிறத்தற்கு ஏதுவாகிய வினைகள் வறுத்த விதையைப் போல அழியும்.

நித்தம் - கூத்து. தாம் மே (2 ஆம் அடி) சிவபெருமான் மேற்கொள்ளும். தனி நித்தம் - சத்தி நிபாதர் மட்டும் காணும் கூத்து. இது பரவெளியில் நிகழ்வது. தீ - தீமை. கடைக்குறை. உற்றன - உள்ளவையாகிய வினைகள். வினையாலணையும் பெயர்.

119. வித்தைக் கெடுத்து வியாக்கிரத் தேமிகச்
சுத்தத் துரியம் பிறந்து தொடக்கற்று
வொத்துப் புலனுயி ரொன்றா யுடம்பொடு
செத்திட் டிருப்பர் சிவயோகி யர்களே. (9)

கருத்து: சிவயோகியர், மேற்கூறியவாறு, தம் பிறப்புக்குரிய விதைகள் ஆகிய சஞ்சித வினைகளைத் திருவருளால் நீக்கப்பெற்று, சுத்ததுரிய அவத்தை என்னும் உணர்வுநிலையை எய்தி, உலக பந்தம் இன்றி, ஐம்புலன்களும் உயிருணர்வுடன் ஒத்து இயங்க, அவ்வுயிருணர்வும் சிதாகாசத்தில் நிற்க, செத்தார் போலே இருப்பர்.

உடம்பொடு - கருவி கரணங்கள் கெடாதிருக்கும் நிலையிலேயே. வியாக்கிரம் - மேலானது. இங்குப் பரவெளியைக் குறித்தது. சுத்த துரியம் - சுத்தாவத்தை ஐந்தனுள் ஒன்று. உயிர் ஒன்றாய் உடம்பொடு - உயிரும் உடம்பும் ஒன்றாயிருக்கும் போதே. ‘உயிர்’ என்ற சொல் இடைநிலை விளக்காய் முன்னும் பின்னும் இணையும்.

120. சிவயோகமாவது, சித்து - அசித்து என்று
தவ யோகத்துள் புக்குத், தன் ஒளி தாயது;
அவ யோகம் சாராது, அவன்பதி போகம்
நவ யோகம்; நந்தி நமக்கு அளித்தானே.

சிவயோக மாவது சித்தசித் தென்று
தவயோகத் துட்புக்குத் தன்னொளி தாய
தவயோகஞ் சாரா தவன்பதி போக
நவயோக நந்தி நமக்களித் தானே. (10)

கருத்து: 'அனாதி முத்த சித்து' உருவாகிய சிவத்துடன், தான் சித்துப் பொருளாயினும், அறிவிக்க அறிதலால், அசித்துப் பொருள் போன்றதாகிய ஆன்மா, ஒன்றி நிற்பதே சிவயோகம் - என்று துணிந்து, தவங்களுள் ஒன்றாகிய யோகநெறியில் நின்று, சிவத்தின் அருள் - ஒளி தனது உணர்வில் இணையப்பெற்றுப் பயில்வது ஒரு புதுவகை யோகம். பிறரால் முன்பு கூறப்பட்டவை எல்லாம் வீணான யோகம். அவற்றைப் பின்பற்றலாகாது. இப்புது யோகத்தில், சிவம் நமது உயிரில் பதிந்து நின்று, சிவானந்தம் அளிப்பான். இந்த யோகத்தை நமக்கு உபதேசித்தவன் நந்தியம் பெருமான்.

சித்து-சிவம்; அசித்து- (இங்கு) உயிர். தவம் நான்கு. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை. போக நவ யோகம்-சிவ போகத்தைத் தருகின்ற புதுவகை யோகம். யோகம் என்பதும் பாடம்.

நவயோகம் தன் ஒளி தாயது; போகம் (ஆவது) என வினைமுடிவு செய்க.

121. அளித்தான் உலகுளங்கும் தான் ஆன உண்மை;
அளித்தான் அமரர் அறியா உலகம்
அளித்தான் திருமன்றுள் ஆடும் திருத்தாள்
அளித்தான் பேரின்பத்து அருள்வெளி தானே.

அளித்தா னுலகெங்குந் தானான வுண்மை
யளித்தா னமர ரறியா வுலக
மளித்தான் றிருமன்று ளாடுந் திருத்தா
ளளித்தான் பேரின்பத் தருள்வெளி தானே. (11)

கருத்து: சிவயோகத்தின் வாயிலாகச் சிவபெருமான் எமக்கு மெய் யுணர்வை நல்கினான். அது வருமாறு: உலகம் முழுவதும் சிவம் வியாபகமாக உள்ளமையை உணர்ந்தோம். தேவர்களும் அறியாத சிவலோகக் காட்சியைக் கண்டோம். பரவெளியில் திருநடம் புரியும் திருவடியை எம் உயிருணர்வு சார்ந்து பற்றிக் கொள்ளச் செய்தான். அதன் அருளால் யாம் அருள்வெளி ஆகிய பெருஞ்சுகவெளி அடைதலை உறுதி செய்தான்.

பெருஞ்சுக வெளி - சிவ துரியாதீத நிலையில் அடையப் பெறுவது. அதுவே சிவப்பேறு. மிக உயர்ந்த வீடுபேறு.

122. வெளியின் வெளி போய் விரவியவாறும்
ஒளியின் ஒளிபோய் ஒடுங்கியவாறும்
அளியின் அளிபோய் அடங்கியவாறும்
தெளியுமவரே சிவசித்தர் தாமே.

வெளியின் வெளிபோய் விரவிய வாறு
மொளியி னொளிபோ யொடுங்கிய வாறு
மளியி னளிபோ யடங்கிய வாறுந்
தெளியு மவரே சிவசித்தர் தாமே. (12)

கருத்து: சிவதுரியாதீத - உணர்வு நிலையில் பெறுகின்ற சிவப் பேற்றை மேலும் விளக்குகின்றார்: வெளி என்பது உணர்வுநிலை; அனுபவக்களம். ஒளி என்பது இறைக் காட்சி. அளி என்பது திருவருள். ஆன்மா தன் உணர்வு - நிலைகளில் படிப்படியாக மேலேறிச் செல்லும் பொழுது, அது சுத்தாவத்தைகளை அடையும் நிலையில், உடம்பைக் கடந்த சிதாகாயத்தை - பரவெளியை அடையும். பின்பு, அக்களத்தினைக் கடந்து, பரம்பர வெளியை அடையும். அங்குப் பராவத்தைகளை எய்தும். இவ்வாறு, வெளிகளைக் கடந்து வரும்போது, ஒவ்வொரு வெளியிலும் அது பெறும் 'இறைக்காட்சி' (Experience of God), அடுத்த வெளியின் இறைக்காட்சியில் உள் - அடங்கிவிடும். அப்பொழுது அது பெறும் திருவருளின் படிநிலைகளும் வளரும். இவ்வனுபவங்களை எய்துபவரே சிவசித்தர்.

சித்தரும் யோகியரும் ஒருவரே. ஆன்மாவின் வியாபகம், அறிவு, அன்பு ஆகியவை முறையே சிவத்தின் வியாபகம், பேரறிவு, திருவருள் என்பவற்றில் அடங்கும் என உரை கூறுதலும் உண்டு. இக்கருத்து முன்னைப் பாடலில், "அவன் பதி போகம்" என்பதாற் கூறப்படுதலின், கூறியது கூறலாய் முடியும்.

123. சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்
சத்தமும் சத்தமுடிவும் தம்முட் கொண்டோர்,
நித்தர், நிமலர், நிராமயர், நீள் பர
முத்தர், தம் முத்திமுதல் முப்பத்தாறே.

சித்தர் சிவலோக மிங்கே தரிசித்தோர்
சத்தமுஞ் சத்த முடிவுந்தம் முட்கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர
முத்தர் தமுத்தி முதன்முப்பத் தாறே. (13)

கருத்து: சித்தர் என்போர், இங்கேயே சிவலோகத்தைக் கண்டோர். அதாவது சிவத்தைப் பெற்றோர். ஓங்காரத்தை உணர்ந்து அதன் முடிவாகிய விந்து - நாத அனுபவத்தைப் பெற்றோர். அழிவற்றோர். மலமற்றோர். மனக் கவலையற்றவர். என்றும் நின்று நிலவும் பேரானந்தப் பெருவாழ்வில் உள்ளோர். அவரது இவ் வீடு பேற்றிற்கு அடிப்படை முப்பத்தாறு தத்துவங்களே.

தத்துவங்களால் அறிவு பெற்று, அவ்வறிவை உவர்த்துப் பதிஞானம் பெற முயன்று, அத்தவத்தின் பயனாக எய்துவதே வீடுபேறு.

124. முப்பதும் ஆறும் படி முத்தி யேணியா
ஒப்பிலா ஆனந்தத்து உள்ளொளி புக்கு,
செப்ப அரிய சிவம் கண்டு, தான் தெளிந்து
அப்பரிசாக அமர்ந்திருந்தாரே.

முப்பது மாறும் படிமுத்தி யேணியா
வொப்பிலா வானந்தத் துள்ளொளி புக்குச்
செப்ப வரிய சிவங்கண்டு தான்றெளிந்
தப்பரி சாக வமர்ந்திருந் தாரே. (14)

கருத்து: சித்தர் முப்பத்தாறு தத்துவங்களை எங்ஙனம் வீடு பேற்றுக்குப் பயன்படுத்தினர் என்றால், முத்தி என்ற உயர்நிலையை அடையும் ஏணிக்கு, 36 தத்துவங்களும் படிகளாக அமைத்து ஏறினர் என்க. ஏறி, தம் உயிரின் உள்ளேயே விளங்கும் இறையொளியைக் கண்டு, அந்தக் கால்வழியைப் பிடித்துக் கொண்டு, பல உணர்வு - நிலைகளைக் கடந்து சிவதுரியத்தில், சிவத்தின் சொரூபத் திருமேனியை உணர்ந்தனர். அந்தக் 'காட்சியால்' தெளிவு பெற்றனர். அக் 'காட்சியில், சமாதி கூடி, அதுவாகவே - 'சிவமாகவே' - ஆயினர். இதனை, ஆசிரியர், திருமந்திர நூலுள் "அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" என்பார். (பா. எண்: 437)

125. இருந்தார் சிவமாகி, எங்கும் தாம் ஆகி;
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி;
இருந்தார் முக்காலத்து இயல்பைக் குறித்து; அங்கு
இருந்தார் இழவு வந்து, எய்திய சோம்பே.

இருந்தார் சிவமாகி யெங்குந்தா மாகி
யிருந்தார் சிவன்செய லியாவையு நோக்கி
யிருந்தார்முக் காலத் தியல்பைக் குறித்தங்
கிருந்தா ரிழவுவந் தெய்திய சோம்பே. (15)

கருத்து: சித்தர் என்றும் வாழ்கின்றனர். எவ்வாறு? சிவத்தோடு உணர்வு கலந்து சிவமே ஆயினர். (தாம் என ஒன்றுண்டு என உணராயினர்.) சிவம் உலகு எங்கும் வியாபித்திருப்பது ஆதலின், சிவத்தோடு ஒன்றித்த உணர்வால், தமது வியாபகமும் தோன்றக் கண்டனர். திருவருளால் சிவன் செய்யும் செயல்களை உணர்கின்றனர். முக்காலமும் உணர்கின்றனர். தம்மை இழந்தவராதலின், செயல் செய்யினும் 'செயல் அற்றவராகவே' உள்ளனர்.

சோம்பு - செயல் அற்ற கிடை நிலை. இதனை "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பார் நாவரசர்.

126. சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பது சுத்த வெளியிலே
சோம்பர் உணர்வு சுருதி முடிந்த இடம்
சோம்பர் கண்டார் அச் சுருதிக்கண் தூக்கமே.

சோம்ப ரிருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பது சுத்த வெளியிலே
சோம்ப ருணர்வு சுருதி முடிந்திடஞ்
சோம்பர்கண் டாரச் சுருதிக்கட் டுக்கமே. (16)

கருத்து: சிவாவத்தைகள் ஐந்தையும் காட்டுகின்றார்: பணி செய்தும் செயலற்றவராகவே உள்ள சித்தர், சாக்கிரவுணர்வு பெற்றிருப்பது, பெருஞ்சுக வெளியில். அதாவது, சிவசாக்கிரத்தில் இருப்பதே அவர் விழித்திருப்பது. இனி, அவர் தூங்குவது என்பது சிவ சுழுத்தி. அவர்தம் உயிருணர்வு அருளின் கலப்பும் அற்ற நிலையில் இயங்குவது சிவதுரியம். அவ்வுணர்வுநிலை வேதங்களின் முடிவுக்கு அப்பால் உள்ளது. இனி, அச் சிவசித்தர் 'காண்கின்ற தரிசனம்'

சிவசொரூப தரிசனம். அவரது உணர்வுநிலை சிவதுரியாதீதம். சொரூப சிவமே வேதம் முழுவதும் விரவிக்கிடக்கும் உண்மை .

சுத்த என்ற அடை, அருளும் (சத்தியும்) இல்லாத தனி நிலையைக் (Absolute) குறிக்கும். இவை சுத்தாவத்தைகள் அல்ல. அவற்றினும் மேம்பட்ட பராவத்தைகளையும் கடந்த மேனிலை அவத்தைகள். (இவ்வவத்தைகளைத் திருமந்திரம் விரிவாகக் கூறும்.) சுருதி முடிந்த இடம் என்பது, வேதம் சொல்லாதது ஆகும். தூக்கம் - தொங்குவது; இலக்கு (லயம்). வேதத்தின் இலக்குச் சொரூப சிவம். ஆனால் அது பற்றி வேதத்தில் வெளிப்படையாக, எங்கும் சொல்லப்படவில்லை. மாறாக, வேதம் 'நேதி' என எதிர்மறை முகத்தால் கூறும். இதனைப் பரஞ்சோதி முனிவர்

"பூதங்கள் அல்ல பொறி அல்ல வேறு புலன் அல்ல உள்ள மதியின் பேதங்கள் அல்ல இவையன்றி நின்ற பிறிதல்ல என்று பெருநூல் வேதம் கிடந்து தடுமாறும் வஞ்ச வெளி என்ப கூடல் மறுகின் பாதங்கள் நோவ வளை இந்தனாதி பகர்வாரை ஆயுமவரே" என்று கூறுவர் (திருவிளை: நான்மா. பா. 1)

127. தூங்கிக்கண் டார்சிவ லோகமுந் தம்முள்ளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமுந் தம்முள்ளே
தூங்கிக்கண் டார்சிவ போகமுந் தம்முள்ளே
தூங்கிக்கண் டார்நிலை சொல்வதெவ் வாறே. (17)

கருத்து: இங்குத் 'தூக்கம்', பேருறக்கம்; துரியம். அதாவது, சிவதுரியம். சித்தர் சிவதுரிய உணர்வுநிலையை எய்தி, தமது உயிருணர்விலேயே சாலோக முத்தியை - சிவலோக வாழ்வைப் - பெற்றார். அவ்வுணர்விலே சாமீப முத்தியை - சிவயோக நிலையை - சிவத்தோடு ஒன்றியிருக்கும் நிலையைப் - பெற்றார். அவ்வுணர் வின் முதிர்ச்சியில் - சிவ துரியாதீதத்தில் - சிவபோகத்தை - சிவசாயுச் சியத்தை - சிவச் சேர்க்கையைப் - பெற்றார். அவர் உற்ற சிவானந்தத்தைச் சொல்லச் சொல் ஏது?

ஆசிரியர், திருமந்திர நூலுள், "சென்றே புகும் கதியில்லை, நும் சித்தத்து நின்றே நிலைபெற நீர் நினைந்து உய்ம்மினே" என்று இதனைக் கூறுவர்.

128. எவ்வாறு காண்பான் அறிவு தனக்கு எல்லை
அவ்வாறு அருள் செய்வன் ஆதி அரன்தானும்
ஒவ்வாத மன்றுள் உமை காண ஆடிடும்
செவ்வானில் செய்ய செழுஞ் சுடர், மாணிக்கம்.

எவ்வாறு காண்பா னறிவு தனக்கெல்லை
யவ்வா றருட்செய்வ னாதி யரன்றானு
மொவ்வாத மன்று ளுமைகாண வாடிடுஞ்
செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கம். (18)

கருத்து: ஆன்மா மேல்நிலை அனுபவங்களுள் எதனைப் பெறத் தகுதியுடையவனோ, அதனைச் சிவபெருமான் அவனுக்கு உறுதியாக அளிப்பான். அப்பெருமான் 'மன்று' என்னும் பெயருடையதாயினும், அப்பெயருக்குப் பொருந்தாத பெருஞ்சுக வெளியில், அருட்சத்தியும் திருமேனியில் பங்கு கொள்ளுதல் இன்றி ஞானக்கண்ணால் கண்டு மகிழ, ஞான நடனம் என்ற சூக்கும நடனம் ஆடுகின்றவன். பலர்க்கும் பொதுவாக உள்ள வானத்தில், யாவர்க்கும் ஒப்ப வெயில் பரப்பும் சூரியன் போன்றவன். வளமாக ஒளி விடும் மாணிக்க மணி போன்றவன். உலகுக்கு முதலாகியவன்.

ஒவ்வாத மன்று அளவற்ற பேரின்பச் செல்வத்தையும், உவமையாக வந்த சூரியன் சிவத்தினது நடுவுநிலையையும், மாணிக்கமணி சிவக் காட்சியையும் உணர்த்தின.

குறிப்பு. இப்பாடல் ஆசிரியரின் கலிவிருத்த யாப்பு முறைக்கு மாறாக, ஏகாரத்தில் முடிந்திலது.

129. மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமா
யாணிப்பொன் மன்றினு ளாடுந் திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே.

கருத்து: சத்தி, சொரூபத் திருமேனியில் பாகங்கொள்ளவில்லை யேனும், அது பிரிப்பின்றி அவனோடு இருப்பது; அவனிடத்தில் இலயமாகி இருப்பது - என்பதைக் கூறுகின்றார்.

மாணிக்க மணியினுள் மரகத மணி திகழ்ந்தாற் போலவும், மாணிக்க மணிகளால் ஆகிய மனையில், மரகதக் கல்லால் மாடம்கட்டி விளங்கினாற் போலவும் உள்ள சொரூபத் திருமேனியுடன், பொலிவு மிக்க பெருஞ்சுக வெளியில், சிவபரம்பொருள் இயற்றும் ஞான நடனத்தை, சித்தர்கள் வழிபட்டுக் கண்டு, வணங்கிப் பெற்ற பேறு அதிசயிக்கத் தக்கது.

பேணுதல் - வழிபாடு செய்தல். "பேணலால் எம்மைப் பெற்றார்" (பெரிய பு. 342).

130. பெற்றா ருலகிற் பிரியாப் பெருநெறி
பெற்றா ருலகிற் பிறவாப் பெரும்பயன்
பெற்றாரம் மன்றிற் பிரியாப் பெரும்பேறு
பெற்றா ருலகுடன் பேசாப் பெருமையே.

கருத்து: சிவசித்தர் உலகியலிடையே வாழ்ந்தவாறே, சிவ முதல்வனைப் பிரியாத நிலை பெற்றார். இதன் பயனாக, மீண்டும் பிறவாமையைப் பெற்றார். உடம்பு நீங்கியபின் பெருஞ்சுக வெளியில் சிவத்தை விட்டுப் பிரியாமல் பேரின்ப வாழ்வு வாழ்வர் என்ற உறுதியைப் பெற்றார். உலகில் பிறருடன் ஒப்பவைத்துப் பேசுமாறு அன்றி, யாவரினும் உயர்ந்தார்.

131. பெருமை, சிறுமை அறிந்து, எம் பிரான் போல்
அருமை, எளிமை அறிந்து, அறிவார் ஆர்?
ஒருமையுள் ஆமைபோல், உள் ஐந்து அடக்கி
இருமையும் கெட்டு, இருந்தார் புரை அற்றே.

பெருமை சிறுமை யறிந்தெம் பிரான்போ
லருமை யெளிமை யறிந்தறி வாரார்
ஒருமையு ளாமைபோ லுள்ளைந் தடக்கி
யிருமையுங் கெட்டிருந் தார்புரை யற்றே. (21)

கருத்து: சித்தர் தம்முடைய புலன்களை, ஆமை தன் உறுப்புகளை ஓட்டினுள் அடக்குவது போல, சிவத்தில் தோய்ந்த தமது உணர்வில் ஒன்றிடச் செய்து, இம்மை, மறுமைகளில் பெறுவன பற்றியும் கருத்தின்றி, மாசற்ற மனத்துடன் உள்ளனர். அவர்கள் வீடுபேறு பெறும் வண்ணம் சிவபெருமான் அருள் செய்வான். ஏன்? அன்பரின் அன்பு, உறுதி - இவற்றின் சிறுமை, பெருமைகளை அறிந்து, அவற்றுக்கு ஏற்ப, முறையே காட்சிக்கு அரியவன் ஆகவும், எளிய வனாகவும் நின்று, அவருக்கு என வழங்கவேண்டிய வரத்தை அறிபவன், எம் பெருமானைப் போல வேறு யார்?

132. புரை அற்ற பாலினுள் நெய் கலந்தாற்போல்
திரை அற்ற சிந்தையுள் ஆரியன் செப்பும்
உரையற்று உணர்வோர் உடம்பு இங்கு ஒழிந்தால்
கரை அற்ற சோதி கலந்த சத்து ஆமே.

புரையற்ற பாலினு ணெய்கலந் தாற்போற்
றிரையற்ற சிந்தையு ளாரியன் செப்பு
முரையற் றுணர்வோ ருடம்பிங் கொழிந்தாற்
கரையற்ற சோதி கலந்தசத் தாமே. (22)

கருத்து: ஞானாசிரியனின் உபதேசத்தை, அலைவற்ற உள்ளத்தில் உணர்ந்து, அனுபவம் பெறுவோர் இறந்தால், அவரது உயிர், மாசற்ற பாலில் நெய் வேற்றுமை இன்றி, உள்ளார்ந்திருப்பது போல், அளவற்ற சோதியாகிய இறைவனுடன் கலந்து, என்றும் உள்ள பொருளாய் நிற்கும்.

திரை - அலை. சத் - உண்மை. உரை அற்று உணர்வோர் - வாசகம் வேறு, வாச்சியம் (அதன் பொருள்) வேறு என்றில்லாமல், வாசகமெல்லாம் அனுபவமாகப் பெற்றவர். வாசகம் முழுதும் உணர்ந்தவர் எனினுமாம். உணர்வோரின் ஆன்மா ஆமே என முடிக்க. ஆன்மா அஃறிணை யாதலின், 'ஆமே' என்ற செய்யும் என் வாய்பாட்டு எதிர்கால முற்றுக் கொண்டது.

133. சத்தம் முதல் ஐந்தும் தன் வழித் தான் சாரின்
சித்துக்குச் சித்து அன்றிச் சேர்விடம் வேறு உண்டோ?
சுத்த வெளியில், சுடரில் சுடர்சேரும்
அத்தம் இது குறித்து ஆண்டுகொள் அப்பிலே.

சத்த முதலைந்துந் தன்வழித் தான்சாரிற்
சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ
சுத்த வெளியிற் சுடரிற் சுடர்சேரு
மத்த மிதுகுறித் தாண்டுகொ ளப்பிலே. (23)

கருத்து: சுவை, ஒளி முதலிய தன்மாத்திரைகளை உள்ளிட்ட தத்துவங்களாகிய சடப்பொருள்கள், ஒடுங்கும் போது (ஊழிக் காலத்தில்) தத்தம் முதலாகிய சடப்பொருள்களில் ஒடுங்கி, முடிவில், எல்லாச் சடப்பொருள்களும் மாயையில் ஒடுங்கும். இவ்வாறு, சடம் சடத்தைச் சேர்தலால், உயிராகிய சித்துப் பொருள், சித்துப் பொருளை யன்றி வேறு எதைச் சேரும்? ஆதலின், சிவபெருமான் குருவாக எழுந்தருளி, இப்பயன் குறித்து, மாந்தரை ஆட்கொள்ளும் அருள்வெள்ளத்தினால், அம்மாந்தரின் உயிர் தூய பரவெளியில், சிவசோதியுடன், தானும் ஒளியாய் நின்று கலக்கும்.

134. அப்பினில் கூர்மை, ஆதித்தன் வெம்மையால்
உப்பு எனப் பேர்பெற்று உருச் செய்தது; அவ்வுரு
அப்பினில் கூடி, அது ஒன்றாகுமாறு போல்
செப்பின், இச்சீவன் சிவத்துள் அடங்குமே.

அப்பினிற் கூர்மை யாதித்தன் வெம்மையா
லுப்பெனப் பேர்பெற் றுருச்செய்த தவ்வுரு
வப்பினிற் கூடிய தொன்றாகு மாறுபோற்
செப்பினிச் சீவன் சிவத்து ளடங்குமே. (24)

கருத்து: நீரில் உள்ள உவர்ப்புத் தன்மை, சூரியனின் வெம்மையால் பிரிந்து, வேறு வடிவம் பெற்று, 'உப்பு' எனப்படும். அது நீரில் கலந்தால், அதனோடு வேறுபாடு இன்றி ஒன்றாகும். இவ்வாறு, சிவம் போன்றே சித்துப் பொருளாகிய ஆன்மா, ஆணவ மலத்தினால் தனது வியாபகம் மறைக்கப்பெற்று, தொடக்கமுதல் சிவத்தின் வேறாய், ஒரு வடிவங் கொண்டு, வினைகளை ஈட்டியும் அனுபவித்தும் உழலும். பின்பு குருவருளால் ஆணவ மலத்தடை நீக்கப்பெற்று, சிவத்தோடு ஒன்றி, அதனின் வேறு அல்லாததாய் இருக்கும்.

135. அடங்கு பேரண்டத்து அணு, அண்டம் சென்று அங்கு
இடங்கொண்டதில்லை; இதுவன்றி வேறு உண்டோ?
கடந்தொறும் நின்ற உயிர் கரைகாணின்,
திடம்பெற நின்றான் திருவடி தானே.

அடங்குபே ரண்டத் தணுவண்டஞ் சென்றங்
கிடங்கொண்ட தில்லை யிதுவன்றி வேறுண்டோ
கடந்தொறு நின்ற வுயிர்கரை காணிற்
றிடம்பெற நின்றான் றிருவடி தானே. (25)

கருத்து: அண்டத்தின் கூறாகிய அணு, அவ்வண்டத்தை விட்டு அப்பால், வேறு எங்கும் சென்று தங்காது. அதுபோல, உடம்புகள் பலவற்றுடன் பிறந்து எய்த்த உயிர், அப்பிறவிக்கடலுக்குக் கரைகாண விரும்பினால், மாறுபாடின்றி ஒரே நிலையில் திகழ்பவனாகிய சிவத்தின் திருவடியே கரையாகும். அதுவன்றி வேறு புகலுண்டோ?

136. திருவடி யேசிவ மாவது தேரிற்
திருவடி யேசிவ லோகஞ்சிந் திக்கிற்
றிருவடி யேசெல் கதியது செப்பிற்
றிருவடி யேதஞ்ச முட்டெளி வார்க்கே. (26)

கருத்து: ஆராய்ந்து பார்த்தால், அருள் பாலிப்பதாகிய திருவடியே சிவம். திருவடி சார்ந்து வாழ்தலே சிவலோக வாழ்வு. திருவடியே விண்ணுலகம். மெய்ப்பொருள் அறிவு பெற்றோர்க்குத் திருவடியே புகலிடம்.

137. தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குரு உருச் சிந்தித்தல் தானே.

தெளிவு குருவின் றிருமேனி காண்ட
றெளிவு குருவின் றிருநாமஞ் செப்ப
றெளிவு குருவின் றிருவார்த்தை கேட்ட
றெளிவு குருவுருச் சிந்தித்த றானே. (27)

கருத்து: ஞானாசிரியரின் மேனியைச் சிவனது திருமேனியாகவே கண்டு வணங்குதலும், அவர் பெயரை இறைவனின் திருப்பெயராகவே கொண்டு செபித்தலும், அவரது ஏவலைச் சிவன் பணியெனவே கருதிச் செய்தலும், அவரது திருவுருவைத் தியானிப்பதும் மெய்ஞ்ஞானம் தருவனவாகும்.

138. தானே புலனைந்துந் தன்வச மாயிடுந்
தானே புலனைந்துந் தன்வசம் போயிடுந்
தானே புலனைந்துந் தன்னின் மடைமாறுந்
தானே தனித்தெம்பி ரான்றனைச் சந்தித்தே. (28)

கருத்து: ஞானாசிரியனின் உபதேசத்தால் சீடன் தன்னை உணர்ந்து கொண்டால், ஐம்புலன்கள் அவன் வயம் ஆகும். அவை தம் இயல்பின்படி மனத்தை மயக்கமாட்டா. அவற்றின் இயல்பும், பள்ளமடை மேட்டுமடை யாவது போல் மாறும்.

139. சந்திப் பதுநந்தி தன்றிருத் தாளிணை
சிந்திப் பதுநந்தி செய்ய திருமேனி
வந்திப் பதுநந்தி நாமமென் வாய்மையாற்
புந்திக்கு ணிற்பது நந்திபொற் போதமே.

கருத்து: யான் நாள்தோறும் கண்டு வணங்குவது நந்தியாசிரியன் ஆகிய சிவபெருமானின் திருவடிகளையே. தியானம் செய்வது அப்பெருமானது தூய திருவுருவத்தையே. வாய்மொழியால் வாழ்த்துவது அவன் திருப்பெயரையே. என் அறிவில் நிலைபெற்றது அவன் செய்த உபதேசமே.

ஏகாரம் யாண்டும் பிரிநிலை. இஃது "உள்ளேன் பிற தெய்வம் உன் னையல்லால் எங்கள் உத்தமனே" (திருவா. திருச்ச. 2) என்ற உறுதி நிலை. வணங்குவது முதலியன தொழிற்பெயர்.

140. போதம் தரும் எங்கள் புண்ணிய நந்தியைப்
போதம் தனில் வைத்துப் புண்ணியர் ஆயினார்
நாதன் நடத்தால் நயனம் களிகூர
வேதம் துதித்திடப் போயடைந்தார் விண்ணே.

போதந் தருமெங்கள் புண்ணிய நந்தியைப்
போதந் தனில்வைத்துப் புண்ணிய ராயினார்
நாத னடத்தா னயனங் களிகூர
வேதந் துதித்திடப் போயடைந் தார்விண்ணே. (30)

கருத்து: மெய்ஞ்ஞான வள்ளலாகிய நந்தியாசிரியரைத் தமது சிந்தையில் இடையறாது நினைத்துச் சித்தரானவர்கள், இவ்வுலகிலேயே சிவத்தின் ஞானக் கூத்தைக் கண்டு அகக்கண்கள் மகிழ்ச்சியால் மலர, தாம் எய்திய பேறு மிக உயர்ந்தது ஆதலின், தம்மை வேதங்களும் போற்றிடப், பரவெளியை அடைந்தனர்.

7. அகத்தியம்

யோகநெறி தந்தான்

141. "நடுவுநில்லாது இவ் உலகம் சரிந்து
கெடுகின்றது எம்பெருமான்" என, ஈசன்
"நடு உள அங்கி அகத்திய, நீ போய்,
முடுகிய வையத்து முன் இரு" என்றானே.

நடுவுநில் லாதிவ் வுலகஞ் சரிந்து
கெடுகின்ற தெம்பெரு மானென வீச
னடுவுள வங்கி யகத்திய நீபோய்
முடுகிய வையத்து முன்னிரென் றானே. (1)

கருத்து: யோக நெறியைச் சிவபெருமான் உலகிற்கு நல்கினான்.

படிமப் பொருள்:- உலகம்-மக்களின் மூச்சுக் காற்றின் இயக்கம். நடுவுநில்லாது - நடு நாடியாகிய சுழுமுனையில் நடைபெறாது. சரிந்து - நிலைதவறி. அங்கி - மூலாதாரத்தில் விளையும் கனல். 'அங்கி நடு உள அகத்தியன்' என்று கூட்டி, மூலக்கனல் கீழ்நோக்கிச் சென்று வீணாகாமல், மேல் நோக்கிச் சுழுமுனை நாடியின் வழியே ஏறுகின்ற அக வழி யோக நெறி எனப் பொருள் கொள்ளலாம்.

இவ்வியல் முதல் சில இயல்களில் ஆசிரியர் புராணக் கதைகளைப் படிமங்களாகப் பயன்படுத்தி யோக, ஞானநூற் செய்திகளைக் கூறுகின்றார்.

குறிப்பு: எல்லாச் சுவடிகளிலும் இப்பாடலுடன் புது அதிகாரம் தொடங்குகின்றது. 2 சுவடிகளில் 'இரண்டாம் தந்திரம்' (தொடங்கு கின்றது) என்ற குறிப்பு உள்ளது. இவை பிற்காலச் சுவடிகள். 7 சுவடிகளில் 'அகத்தியம்' என்ற அதிகாரப் பெயரும், 1 சுவடியில் 'வீரட்டம் எட்டு' என்ற அதிகாரப் பெயரும், 1 சுவடியில் 'அகபதி' என்ற அதிகாரப் பெயரும் உள்ளன.

இப்பதிப்பின் ஆய்வு முன்னுரையிற் கூறியவாறு, இவ்வியல் முதல் 51 இயல்களின் வைப்பு முறையில் சுவடிகள் தம்முள் வேறுபடுகின்றன. அவற்றை ஒப்பு நோக்கி மீட்டுருவாக்கம் செய்து பெறப்பட்ட புதிய வைப்பு முறை இப்பதிப்பில் மேற்கொள்ளப்படுகிறது. மீட்டுருவாக்க ஆய்வு பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது. நூல் முழுவதும் 'தந்திரப்

பிரிவு' இரு சுவடிகளில் மட்டுமே உண்மையாலும், அவையும் பிற்காலச் சுவடிகள் ஆகையாலும் இப் பதிப்பில் தந்திரப் பிரிவு மேற்கொள்ளப் படவில்லை. விரிவு முன்னுரையில் காண்க.

உடம்பில் சோதி

142. அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்
அங்கி உதயம்செய் மேல்பாலவனொடும்
அங்கி உதயம்செய் வடபால் தவமுனி
எங்கும் வளம்கொள் இலங்கு ஒளி தானே.

அங்கி [1]யுதயம் வளர்க்கு மகத்திய
னங்கி யுதயஞ்செய் மேல்பா லவனொடு
மங்கியுத யஞ்செய் [2]வடபாற் றவமுனி
யெங்கும் [3]வளங்கொ ளிலங்கொளி தானே. (1)

வேறுபாடம்: 1 யுதய மளக்கு (ஆ ஊ) I; விளக்கு (ஒ) II. 2. வடமாற்றவ முனி (ஊ ஒ) I. 3. வளங்கொள் விளங்கொளி (ஊ) I.

கருத்து: மூலாதாரத்தில் கனலைத் தோற்றுவித்து வளர்க்கும் யோகி (அகத்தியன் - உள்ளே அக்கினிகாரியம் செய்யும் யோகி) தனது தலையின் மேற்குப் பாகமாகிய பிடரியிலும், வடக்குப் பாகமாகிய உச்சியிலும் (சகஸ்ராரம்) சிவபெருமான் சோதியாகத் தோன்றக் காண்பார்.

உதயம் - குளிர்ந்த ஜோதியாக மலர்தல். மேல்பால் - மேற்குத்திசை. யோகிக்கு மேற்குத்திசை அவனது தலையின் பின்புறமாகும். அங்கும் ஜோதி தோன்றும். இதனை ஆசிரியர் 'கடவுள் வாழ்த்து' 2 ஆம் பாடலிலும் கூறினார். வடபால் - வடதிசை; இது உச்சந்தலை ஆகும். இங்குச் சகஸ்ராரத்தில் ஒளி மலரும்.

குறிப்பு: 6 சுவடிகளில் 'அகத்தியம்' முற்றும் என்பதற்குக் குறிப்பு உள்ளது.

8. பதிவலி வீரட்டம்

அந்தகாசுர வதம்

143. 'கருத்துஉறை அந்தகன் தன்போல் அசுரன்
வரத்தின் உலகத்து உயிர்களை எல்லாம்
வருத்தம் செய்தான்' என்று வானவர் வேண்டடக்,
குருத்துஉயர் சூலம் கைக்கொண்டு கொன்றானே.

கருத்துறை 'யந்தகன் றன்போ லசுரன்
வரத்தி னுலகத் துயிர்களை யெல்லாம்
வருத்தஞ்செய் தானென்று வானவர் வேண்டக்
குருத்துயர் சூலங்கைக் [2]கொண்டுகொன் றானே. (1)

வேறு பாடம். 1. யந்தணன் (இ ஈ) I. 2. கொண்டு நின்றானே (ஆ) II.

கருத்து: அந்தகன் என்ற அசுரன், தன் வரபலத்தால் செருக்கி உயிர்களைத் துன்புறுத்த, சிவபிரான் தேவர்களின் வேண்டுகோளை ஏற்று, அவனைச் சூலத்தால் கொன்றான்.

இவ்வீரச்செயல் நடை பெற்ற இடம் திருக்கோவலூர் வீரட்டம். அந்தகன் அறியாமை என்றும் இயமன் என்றும் பொருள்படும். சுழுமுனை நாடியில் மூச்சுக்காற்றை இயங்கச் செய்வித்தலால் இறப்பை வெல்வித்தான் என்பது யோக நூற்குறிப்பு. "காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்குக் கூற்றை உதைக்கும் குறியதுவாமே" - திருமந்திரம்.

'கறுத்து' என்பது எதுகை நோக்கித் திரிந்தது. சூலம் - இடைகலை பிங்கலை, சுழுமுனை என்னும் நாடிகளின் அமைப்பு.

குறிப்பு. 5 சுவடிகளில் இப்பாடலுடன் 'பதிவலிவீரட்டம்' என்ற இயல் தொடங்குகின்றது.

விந்து வீணாகாது

144. கொலையின் பிழைத்த பிரசாபதியைத்
தலையைத் தடிந்திட்டுத் தான் அங்கியிட்டு
நிலை உலகுக்கு இவன் வேண்டும் என்று எண்ணித்
தலையைப் பரிந்து இட்டுச் சந்தி செய்தானே.

[1]கொலையிற் பிழைத்த பிரசா பதியைத்
தலையைத் [2]தடிந்திட்டுத் தானங்கி யிட்டு
நிலையுல குக்கிவன் வேண்டுமென் றெண்ணித்
தலையைப் பரிந்திட்டுச் சந்திசெய் தானே. (2)

வேறு பாடம்: 1. தொலையிற் (அ) ; குலையிற் (ஓ) I 2. யரிந்திட்டு (ஊ); பிரிந்திட்டு (அ இ ஓ) II

கருத்து: சிவனது அமிசமாகிய வீரபத்திரன் தக்கனின் வேள்வியை அழித்தபொழுது, அத்தக்கனது தலையை வெட்டித் தீயில் இட்டு, 'சிவனை இகழ்ந்தோர் அடையும் தண்டனைக்கு இவன் சான்றாக இருத்தல் வேண்டும்' என்று, ஆட்டுத்தலையைப் பொருத்தினான்.

இது நிகழ்ந்த இடம் திருப்பறியலூர் வீரட்டம். விந்துநீக்கம் தடுக்கப்படுதல் குறிப்பு. அவ்விந்துவே மூலக்கனலில் எரிந்து சத்தியாகிச் சுழுமுனை நாடியின் வழியே மேலே செல்கின்றது. நிலை உலகு - வீட்டுலகு.

செருக்கிற்குத் தண்டனை

145. எங்கும் பரந்தும் இருநிலம் தாங்கியும்
தங்கும் படித்து அவன் தாள்; உணர் தேவர்கள்
பொங்கும் சினத்துள் அயன்தலை முன் அற
அங்கு அச்சுதனை உதிரம் கொண்டானே.

எங்கும் பரந்து மிருநிலந் தாங்கியுந்
தங்கும் படித்தவன் றாளுணர் தேவர்கள்
பொங்குஞ் சினத்து ளயன்றலை முன்னற[1]
வங்கச் சுதனை யுதிரங்கொண் டானே. (3)

வேறு பாடம்: 1. முன்னிற (ஓ) I

கருத்து: சிவபிரானது திருவடி எங்கும் வியாபித்துள்ளது. பூமியைத் தாங்குவதும் அனைத்து உயிரிலும் தங்கியிருப்பதும் அதுவே. தேவர் கள் இதனை உணர்ந்திருப்பினும், பிரமன் செருக்குக் கொண்டமை யால், சிவன் அவனது தலையைக் கிள்ளிப் பிச்சைப் பாத்திரமாக்கி, திருமாலது இரத்தத்தையும் அதில் பிச்சையாக ஏற்றான்.

இச்செயல் நிகழ்ந்த இடம் திருக்கண்டியூர் வீரட்டம். படித்து - தன்மையை உடையது. உணர் தேவர்கள் - தேவர்கள் உணரும் வகையில் என மாற்றிப் பொருள் கொள்க. அச்சுதன் - திருமால்.

தாமரை நிமிர்ந்தது

146. எங்கும் கலந்து எனது உள்ளத்து எழுகின்ற
அங்க முதல்வன், அருமறை ஓதிபால்
பொங்கும் சலந்தரன் போர்செல்ல, நீர்மையின்
அங்கு விரல் குறித்து ஆழி செய்தானே.

எங்குங் [1]கலந்தென துள்ளத் தெழுகின்ற
வங்க முதல்வ னருமறை யோதிபாற்[2]
பொங்குஞ் சலந்தரன் போர்செல்ல நீர்மையி
னங்கு விரல்குறித் தாழிசெய் தானே. (4)

வேறு பாடம்: 1. கலந்துமென் னுள்ளத் (எ) II 2. யோகிபாற் (ஆ) I

கருத்து: சிவபிரானிடம் சலந்தரன் போர்செய்யச் சென்றபோது, சிவன் நிலத்தில் தன் கால்கட்டை விரலால் ஒரு சக்கரம் கீறி, சலந்தரனை, அதை எடுக்குமாறு சொல்ல, அவன் அதைப் பெயர்த்து எடுத்தவுடன், அஃது அவன் உடலை இரண்டு கூறாக்கியது.

இச்செயல் நிகழ்ந்த இடம் திருவிற்குடி வீரட்டம். அபானவாயு விந்துநீக்கம் செய்வதை, 'அங்குலி' என்ற முத்திரையால் தடுத்து, பிராண வாயுவாக மேலே ஏற்றி, உச்சந்தலையில் கவிழ்ந்திருக்கும் சகஸ்ராரத் தாமரையை நிமிரச் செய்தல் என்பது குறிப்பு.

அங்கு விரல் - அங்குட்டம். வடசொல்; பெருவிரலைக் குறிக்கும்.

அழிந்தன மும்மலம்

147. அப்பணி செஞ்சடை யாதிப் பிரான்றன்னை[1]
முப்புரஞ் செற்றன னென்பர்கள் மூடர்கள்;
முப்புர மாவது மும்மல காரிய
மப்புர [2]மெய்தமை யாரறி வாரே. (5)

வேறு பாடம்: புராதனன் (அ இ ஈ) II. 2. சுட்டமை (ஓ); மெய்தவை (ஆ) II.

கருத்து: சிவபிரான் முப்புரம் எரித்தான் என்பர். அவை பொன், வெள்ளி, இரும்பாலான கோட்டைகள் என்பது மூடர் நினைப்பு. ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களே அவை. உயிரைச் சாரும் இம்மலங்களை அழித்து வீடருள்வான் என்பதே உண்மை.

இச்செயலைக் குறிக்கும் இடம் திருவதிகை வீரட்டம்.

அப்பு - நீர்; கங்கை. காரியம் பருப்பொருள்; நுண்பொருளுக்கு அடையாளமாக நிற்பது.

கயாசுர வதம்

148. முத் தீக் கொளுவி முழங்கு எரி வேள்வியுள்
அத்தி உரி அரன் ஆவது அறிகிலர்,
சத்தி கருதியது ஆம் பல தேவரும்;
அத்தீயினுள் எழுந்தன்று கொலையே.

முத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியு
ளத்தி யுரியர னாவ தறிகிலர்
சத்தி கருதிய தாம்பல தேவரு
மத்தீயி னுள்ளெழுந் தன்று கொலையே. (6)

கருத்து: வேள்வியால் தமக்கு வலிமை எய்தும் எனத் தேவர் கருதினர். ஆனால் விளைந்தது அழிவே. தேவர்கள் கொல்லப் பட்டனர். வேள்வியில் எழுந்த புலி, மான் முதலியவற்றையும் பின்பு சிவன் கொன்றான்.

இது நிகழ்ந்த இடம் திருவழுவூர் வீரட்டம். அத்தி - யானை. உரி - தோல். வேள்வித் தீயிலிருந்து எழுந்த யானை உருவம் உடைய கயாசுரன் என்க. எழுந்தன்று - எழுந்தது. பல தேவரும் கருதியது சத்திதாம் எனக்கூட்டுக.

எமன் பட்ட பாடு

149. மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்தின்மேல் உற நோக்கி, முற்-
கால் உற்று, காலனைக் காய்ந்து அங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமாய் இருந்ததே.

மூலத்து வாரத்து மூளு மொருவனை
மேலைத்து வாரத்தின் மேலுற நோக்கிமுற்[1]
காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமா யிருந்ததே. (7)

வேறு பாடம்: 1. நோக்கிடுங் (ஓ) II.

கருத்து: மூலா தாரத்தில் கிளர்ந்து எழுகின்ற உயிராற்றலைத் தலை உச்சிச் சகஸ்ராரத்தில் சேர்க்கும் வண்ணம், கண்களால் புருவ மத்தியை உற்று நோக்கி, மூச்சுக் காற்றை மேல் நோக்கிச் சுழுமுனை நாடியில் செலுத்தி, எமனை உதைத்து 'அங்கியோக மாக' இருக்கும் நிலையைச் சிவன் திருக்கடவூரில் வீரட்டக் கோலத்தில் எழுந்தருளி உணர்த்துகின்றான்.

துவாரம் - வழி; ஆதாரம். மூளுதல் - அருளால் எழுந்தருளுதல். மேலை - உச்சி. துவாரம் (2 ஆம் அடி) - பிரம ரந்திரம் என்ற வழி. அங்கி யோகம் - அட்டாங்க யோகத்தை அங்கமாக உடைய சிவயோகம்.

காமத்தை வெல்லும் தவம்

150. இருந்த மனத்தை இசைய இருத்தி,
பொருந்திய லிங்கவெளி-அது போக்கி,
திருந்திய, காமன் செயல்-அது அழித்து, அங்கு
அருந்தவ யோகம் கொறுக்கை அமர்ந்தே.

இருந்த மனத்தை யிசைய விருத்திப்
[1]பொருந்திய லிங்க [2]வெளியது போக்கித்
திருந்திய காமன் [3]செயல தழித்தங்
கருந்தவ யோகங் கொறுக்கை யமர்ந்தே[4].

வேறு பாடம்: 1 பொருந்தியிலிங்க (இ) I; 2. வொளியது (பா 3) 3. செயலை யழித்தங் (ஆ) IV ; செயலழியத்தங் (விசு) I ; செயலழித் தங்கண் (தி) (த) 4. யமர்ந்ததே (ஊ) I; யழித்தே (பா 1).

கருத்து: எண்ணங்களில் அலையும் தனது இயல்புடனே இருந்த மனத்தை, கடினமின்றிப் பொருந்திச் சலனம் இன்றி இருக்குமாறு அமர்த்தி, இறைவனது கருணையால் வந்து, உயிர்-உணர்வுடன் சேர்ந்த அருள்வெளியில், அது எவ்வாறு வியாபகமாகப் பரவி நிற்கிறதோ, அவ்வாறே தானும் வியாபகமாகப் பரவி நின்று, அதனால் மனத்தின் பண்பு செம்மையுற்று, புருவ மத்தியில் ஒளியை நேர்கண்டு, அதிலே மகிழ்ந்து, அதுவே இன்பம் என மனத்தைத் திருத்தி, மன்மதனின் செயலாகிய காமத்தை அழித்துச் செய்யும் தவயோகத்தைச் சிவபெருமான் குறுக்கை என்ற தலத்தில் செய்து வீற்றிருக்கின்றான். அது பற்றி அத்தலம் திருக்குறுக்கை வீரட்டம் எனப்படும்.

லிங்க வெளி - இலிங்கத் திருமேனி வழங்கும் அருளாகிய வெளி. போக்கி - உயிருணர்வைப் பரப்பி நின்று.

9. இலிங்க புராணம்

காமாட்சி வழிபட்டாள்

151. 'அடிசேர்வன்' என்ன, எம் ஆதியை நோக்கி
முடிசேர் மலைமகனார் மகள் ஆகித்
திடம் ஆர் தவஞ்செய்து, தேவர் அறியப்
படியார அர்ச்சித்துப் பத்தி செய்தாளே.

அடிசேர்வ னென்னவெம் மாதியை நோக்கி
முடிசேர் மலைமக னார்மக ளாகித்
[1]திடமார் தவஞ்செய்து தேவ ரறியப்
படியார வர்ச்சித்துப் பத்திசெய் தாளே. (1)

வேறு பாடம்: 1. திடமாதவஞ் (ஆ இ ஊ) I.

கருத்து: உமையவள் பருவதராசனின் மகளாகப் பிறந்து, பார்வதி என்ற பெயருடன் வளர்ந்து, சிவபிரானைக் கணவனாக அடைவதற்காகத் தவம் செய்தாள். பின்பு காஞ்சியில் காமாட்சி ஆகி அப்பெருமானை வழிபட்டாள்.

குறிப்பு: 6 சுவடிகளில் இப்பாடலுடன் 'இலிங்கபுராணம்' என்ற அதிகாரம் தொடங்குகிறது. 2 சுவடிகளில் 'இலிங்கபுராணம் தக்கன் வேள்வி' என்று அதிகாரப் பெயர் குறிக்கப்பெற்றுள்ளது. மற்றும் 2 சுவடிகளில் இப்பாடலுடன் புது அதிகாரம் தொடங்குகிறது. ஆனால் அதிகாரப் பெயர் இல்லை.

அன்பின் பிடியினுள்

152. திரிகின்ற முப்புரம் செற்ற பிரானை
அரியன் என்று எண்ணி அயர்வுற வேண்டா;
புரிவுடையாளர்க்குப் பொய்யலன் ஈசன்
பரிவொடு நின்று பரிசறிவார்க்கே.

திரிகின்ற [1]முப்புரஞ் செற்ற பிரானை
யரியனென் றெண்ணி யயர்வுற வேண்டா
புரிவுடை யாளர்க்குப் பொய்யல னீசன்
பரிவொடு நின்று பரிசறி வார்க்கே[2]. (2)

வேறு பாடம்: 1. வப்புரஞ் (அ ஊ ஐ ஒ) I. 2. பரிசறிவானே (எ) II.

கருத்து: 'முப்புரம் எரித்த சிவன் எம்மால் எய்தப்படுவனோ' என மனத்தளர்ச்சி அடைய வேண்டா. அன்பு செய்து வழிபடுவார்க்கு அவன் பரிவோடு அருளுவது பொய்யாகாது.

புரிவு - விரும்புதல். பரிசு - தன்மை. 'புரிவுடையாளர்க்கு ஈசன் பொய்யலன்; பரிசு அறிவார்க்குப் பரிவொடு நின்று பொய்யலன்' என்று கூட்டுக. நின்று - நிற்றலால். அன்பால் ஞானம் வருமென்றார்.

சிவ பரத்துவம்

153. ஆழி வலம்கொண்ட அயன்மால் இருவரும்
ஊழி வலம்செய்ய, ஒண்சுடர் ஆதியும்
ஆழி கொடுத்தனன் அச்சுதற்கு; அவ்வழி
வாழி பிரமற்கு வாள் கொடுத்தானே.

ஆழி வலங்கொண் டயன்மா லிருவரு
மூழி வலஞ்செய்ய வொண்சுட ராதியு
மாழி கொடுத்தன னச்சுதற் கவ்வழி
வாழி 'பிரமற்கு வாள்கொடுத் தானே. (3)

வேறு பாடம்: 1. பிரமற்கும் (விசு) (தி) (த) (பா 1)

கருத்து: மிக்க வலிமை கொண்ட பிரமனும் திருமாலும் தம்மில் பொருது, பின்பு சிவபெருமானது பரத்துவத்தை உணர்ந்து, அவனை வழிபட, திருமாலுக்குச் சக்கரமும் பிரமனுக்கு வாளும் வழங்கினான்.

ஆழி (3 வது அடி) சக்கரம்.

பெரிய மன்னிப்பு

154. தாங்கி இருபது தோளும் தடவரை
ஓங்க எடுத்தவன் ஒப்பு இல் பெருவலி
ஆங்கு நெரித்து, 'அமரா' என்று அழைத்தபின்,
நீங்க அருள்செய்தான் நின்மலன் தானே.

தாங்கி யிருபது தோளுந் தடவரை
யோங்க வெடுத்தவ னொப்பில் பெருவலி
யாங்கு நெரித்தம ராவென் றழைத்தபி
'னீங்கா வருள்செய்தா னின்மலன் றானே. (4)

வேறு பாடம்: 1. னீங்க (ஆ இ ஈ ஊ) (பா 3) I.

கருத்து: தனது இருபது தோள்களாலும் கயிலை மலையைத் தூக்க முயன்ற இராவணனின் பெருவலிமையைச் சிவன், தன் இடதுகாற் பெருவிரலால் அவனுடைய பத்துத் தலைகளையும் நெரித்ததால் குறைத்து, அவன் தன் பிழையுணர்ந்து, அன்பால் முறையிட்ட பிறகு வாளும் வாணாளும் அருளினான்.

ஓங்க - உயர.

சண்டீச நீதி

155. உறுவது அறிதண்டி ஒண்மணல் கூட்டி
அறுவகை ஆன் ஐந்தும் ஆட்ட, தன் தாதை
செறுவகை செய்து சிதைப்ப, முனிந்து
மறுமழுவால் வெட்டி மாலை பெற்றானே.

உறுவ தறிதண்டி யொண்மணற் கூட்டி
யறுவகை யானைந்து மாட்டத்தன் றாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழு வால்வெட்டி [1]மாலைபெற் றானே. (5)

வேறு பாடம்: 1. மாலை வென்றானே (ஓ) II.

கருத்து: சண்டீசன் எனப் பின்னர்ப் பதவிபெற்ற விசார சருமன் மணலில் இலிங்கம் அமைத்து, பால் முழுக்கு ஆட்ட, அவன் தந்தை சினந்து பாற்குடத்தை எற்ற, புல்லே மழுவாகக் கொண்டு, தந்தையின் காலை வெட்டி, சிவனால் மகனாக ஏற்கப் பெற்று, அவனுடைய நிருமால்யங்களை அணியும் பேறு பெற்றான்.

தண்டி - கோலை உடையவன்; சண்டீசன் ஆனினம் மேய்த்தலின் தண்டு ஏந்தினான். தந்தைப் பாசத்தை மறுத்தமையின் 'சண்டி' ஆனான். உறுவது - சிறப்புடையது. கூட்டி - சிவலிங்கமாகச் சேர்த்து. அறுவகை- பிறவி அறும்பொருட்டு. மறு - மற்றைய. புல்லும் மழுவாகப் பயன் பட்டமையின் 'மற்றைய மழு' என்றார்.

தப்பினர் தேவர்

156. ஓடிவந்து எல்லாம் ஒருங்கிய தேவர்கள்
வாடி முகமும் வருத்தத்துத் தஞ்சு என்று
நாடி, "இறைவா நம" என்று கும்பிட,
ஈடு இல் புகழோன் "எழுக" என்றானே.

ஓடிவந் தெல்லா மொருங்கிய தேவர்கள்
வாடி முகமும் வருத்தத்துத் தஞ்சென்று[1]
நாடி யிறைவா நமவென்று கும்பிட
[2]வீடில் புகழோ னெழுகவென் றானே. (6)

வேறுபாடம்: 1. தாஞ்சென்று (அ இ ஊ எ ஒ); தான் சென்று (ஈ) I. 2. வேடில் (பா 3)

கருத்து: பல காலங்களில் அசுரர்களாலும், பாற்கடல் கடைந்த போது ஆலகால நஞ்சாலும் துன்புற்று ஓடிவந்து சரண் அடைந்த தேவர்கள் வழிபட, சிவபிரான் அவர்களைக் காப்பாற்றினான்.

தஞ்சு - தஞ்சம். கடைக்குறை.

குறிப்பு: 7 சுவடிகளில் இப்பாடலுடன் ‘இலிங்கபுராணம்’ என்ற அதிகாரம் முற்றும் என்ற குறிப்பு உள்ளது.

10. தக்கன் வேள்வி

தேவர்கள் முறைகேடு

157. தந்தைபிரான் வெகுண்டான் தக்கன் வேள்வியில்
வெந்தழல் ஊடே புறப்பட்ட விண்ணவர்
முந்திய பூசை முடியார் முறை கெடச்
சிந்தினர் அண்ணல் சினஞ்செய்த போதே.

தந்தைபி ரான்வெகுண் டான்றக்கன் வேள்வியில்
வெந்தழ லூடே[1]புறப்பட்ட விண்ணவர்
முந்திய பூசை முடியார் முறைகெடச்[2]
சிந்தின ரண்ணல் சினஞ்செய்த போதே. (1)

வேறு பாடம்: 1. புறப்பட (தி) (த) 2. முறைகெட்டு (எ) IV.

கருத்து: தக்கன் யாகத்தில் தேவர் முறைகேடாக நடந்தமையும், வீரபத்திரர் தண்டித்தமையும் இங்குப் படிமம் ஆக்கப்பெற்றன. பதிஞானம் இல்லையேல் நல்ல சத்திகளும் பயனிலவாகும் என்பது பொருள்.

குறிப்பு: 2 சுவடிகளில் ‘பதிவலி வீரட்டம்’ என்ற அதிகாரமே தொடர, 7 சுவடிகளில் இப்பாடலுடன் ‘தக்கன் வேள்வி’ என்ற அதிகாரம் தொடங்குகின்றது.

பாடம் படித்தனர்

158. சந்தி செயக்கண்டு எழுகின்ற அரி தானும்
“எந்தை இவன்; அல்லம் யாமே;” உலகினில்
பந்தம் செய் பாசத்து வீழ்ந்து தவஞ்செய்ய
அந்தம் இலானும் அருள் புரிந்தானே.

[1]சந்தி செயக்கண் டெழுகின் றரிதானு
மெந்தை யிவனல்லம் யாமே யுலகினிற்
பந்தஞ்செய் [2]பாசத்து வீழ்ந்து தவஞ்செய்ய
வந்த மிலானு மருள்புரிந் தானே. (2)

வேறு பாடம்: 1 சந்திசெய் (பதிப்) 2. பாதத்து (த)

கருத்து: தக்கன் வேள்வியில், வீரபத்திரதேவர் தக்கனுக்கும் தேவர்கட்கும் அளித்த தண்டனையைக் கண்டு, திருமால் “நாம் தலைவர் அல்லம். சிவனே நமக்கும் தலைவன்” என உணர்ந்து, ஆணவ மலத்திலிருந்து விடுபட்டுச் சிவபிரானது அருள் வேண்டித் தவம்செய்ய, அவனும் அருள்புரிந்தான்.

சந்தி - பொருத்துதல்; சமாதானம் செய்தல்; வீரபத்திரர் சினம் தணிந்தமை. அரி - திருமால். பந்தம் - பிணிப்பு. பாசம் - ஆணவமலம். பாசத்திலிருந்து விடுபட்டு என்க. யாமே என்பதன் பின் ‘என’ என்று ஒரு சொல் வருவிக்க.

கை போயிற்று

159. அப்பரிசே அயனா பதி வேள்வியுள்
அப்பரிசு அங்கி அதிசயம் ஆகிலும்,
அப்பரிசு ஏயது நீர்மையை உட்கலந்து
அப்பரிசே சிவன் ஆலிக்கின்றானே.

அப்பரி சேயய [1]னாபதி வேள்வியு
ளப்பரி சங்கி யதிசய மாகிலு
மப்பரி சேயது நீர்மையை யுட்கலந்
தப்பரி சேசிவ னாலிக்கின் றானே. (3)

வேறு பாடம்: 1. னார்பதி (விசு) (தி) (த)

கருத்து: அதைப்போலவே பிரமனும் தெளிய, யாககுண்டத்தில் வந்து எரிந்த அக்கினிதேவன் வீரபத்திரரால் மன்னிக்கப்பெற்றுத்

தனது கையை மட்டும் வெட்டப்பெறும் தண்டனையைப் பெற்றான். அஃது அதிசயமே. எனினும் ஓர் இயல்பை எண்ணிச் சிவபிரான் அவ்வளவில் நிறுத்த இசைந்தான்.

அப்பரிசே அயன் ஆ - திருமால் தெளிந்தவாறே பிரமனும் தெளிய. ஆக என்பது கடைக்குறைந்தது. பதி - சிவபெருமான். அங்கி - அக்கினி தேவன். அப்பரிசு - கையை மட்டும் வெட்டும் தண்டனை பெற்றது. ஏயது - பொருந்தியது. ஆலிக்கின்றான் - இசைந்திருக்கின்றான். மூலக்கனல் வீணாகப் போயினும், மூலாதாரத்தில் கனன்று கொண்டேயிருக்கிறது. நீர்மை - அருளால் மாற்றப்படக் கூடிய இயல்பு.

அக்கினியின் அச்சம்

160. அலர்ந்திருந்தான் என்று அமரர் துதிப்பக்
குலம்தரு கீழ் அங்கி கோள் உற, நோக்கி,
சிவந்த பரம் இது சென்று கதுவ
உலந்த பெருவழி ஓடிவந்தானே.

அலர்ந்திருந் தானென் றமரர் துதிப்பக்
குலந்தரு கீழங்கி கோளுற நோக்கிச்
சிவந்த [1]பரமிது சென்று கதுவ
வுலந்த பெருவழி யோடிவந் தானே. (4)

வேறு பாடம்: 1. பதமிது (பா 3)

கருத்து: யாககுண்டத்தில் சுடர்விட்டு எரிந்தான் என்று அக்கினி தேவனைத் தேவர்கள் புகழ, தேவர் கூட்டத்தில் கீழானவன் ஆகிய அக்கினி, தக்கன் வேள்வியில் முதற்குற்றவாளி ஆனான். அவன் மீது சினம் கொண்ட வீரபத்திரன், அவனை வெருட்ட, பெரிய வழியில் அவன் ஓடிவந்தான்.

தக்கனது யாகத்தில் வீரபத்திரதேவர் முதலில் அக்கினியைத் தண்டித்தார். அந்நிகழ்ச்சி இங்குப் படிமம் ஆயிற்று. கீழ் அங்கி- மூலக்கனல். அலர்ந்திருந்தான் - சுடர்விடுகின்றது. கோள் உற - தீமை செய்ய. சிவந்த - கோபித்த. பரம் - பரம்பொருள். உலந்த - அழிந்த. பெருவழி - கீழ் நோக்கிய வழி பெரியது ஆதலால் 'பெருவழி' என்றார். மூலக்கனல் பயன்படாமல் வீணாகியது.

தேவர்களுக்குத் தண்டனை

161. அரி, பிரமன், தக்கன், அருக்கனுடனே
வருமதி, வாலை, வன்னி நல்இந்திரன்
சிரம், முகம், நாசி, சிறந்தகை, தோள் தான்
அரன் அருளின்றி அழிந்த நல்லோரே.

[1]அரிபிரமன் றக்க னருக்க னுடனே
வருமதி வாலை வன்னிநல் லிந்திரன்
சிரமுக நாசி சிறந்தகை தோடா[2]
னரனரு ளின்றி யழிந்தநல் லோரே. (5)

வேறு பாடம்: 1. அரியயன் (ஈ) IV. 2. தோளான் (ஆ இ ஈ ஊ ஒ) I.

கருத்து: அவ்வாறே வீரபத்திரரது கோபத்திற்கு இலக்காகி, திருமால், பிரமன், தக்கன், சூரியன், சந்திரன், அக்கினி, இந்திரன் ஆகியோர் தலை, முகம், கை, தோள் ஆகிய உறுப்புக்களை இழந்தனர்.

அருக்கன் - சூரியன். மதி - சந்திரன். வாலை-கலைமகள். வன்னி - அக்கினி தேவன் - இவர்கள் வீரபத்திர தேவரால் தண்டிக்கப்பட்டனர்.

கொடிய யாகம்

162. செவிமந்திரம் சொல்லும் செய்தவத் தேவர்
அவிமந்திரத்தின் அடுக்களை கோலிச்
செவிமந்திரம் செய்து, தாம் மறி நோக்கும்
குவிமந்திரங்கொல் கொடியது வாமே.

செவிமந் திரஞ்சொல்லுஞ் செய்தவத் தேவ
ரவிமந் திரத்தி னடுக்களை கோலிச்
செவிமந் திரஞ்செய்து [1]தாமறி நோக்குங்
குவிமந் திரங்கொல் கொடியது வாமே. (6)

வேறு பாடம்: 1. தாமுற (எ); தாமுறி (அ இ ஈ ஒ) II.

கருத்து: பதி ஞானம் பெறும் நோக்கு இன்றி மாறுபாடான நோக்குடன் தியானம் செய்தல் உண்மைத் தவம் அன்று. தக்கன் சிவபெருமானை அழைக்காமல் யாகம் நடத்திய புராணக் கதையைப் படிமம் ஆக்கி இச்செய்தியைக் கூறுகின்றார்.

செபி என்பது செவி என மருவிற்று. அவி மந்திரம் - ஒலி அவிந்த மந்திரம்; அசபா மந்திரம். அடுக்களை - மூலாதாரம். கோலுதல் - தீ மூட்டுதல். மறி நோக்கும் - மாறுபாடாகப் பார்க்கும். குவி மந்திரம் - தியானம்.

தேவர்களை மன்னித்தான்

163. அப்பரிசே அயன்மால் முதல் தேவர்கள்;
அப்பரிசே அவர் ஆகிய காரணம்
அப்பரிசு அங்கியும் நாளும் உள்ளிட்டபின்
அப்பரிசு ஆதி அலர்ந்திருந்தானே.

அப்பரி சேயயன் மான்முதற் றேவர்க
ளப்பரி சேயவ ராகிய காரண
மப்பரி சங்கியு [1]நாளுமுள் ளிட்டபி
[2]னப்பரி சாதி யலர்ந்திருந் தானே. (7)

வேறு பாடம்: 1. ணாளுமுள்ளிட்டபின் (ஆ) I; 2. மப்பரிசாகி (எ ஒ) I.

கருத்து: அருளால் மூலக்கனல் மேலே ஏற்றப்பட்டு நன்மை தருதல் போலவே, நாட் கதிர்களாகிய சூரியன், சந்திரன் ஆகியோரும் பிரமன், திருமால் முதலிய தேவர்களும் அருள் வெளியில் கொண்டு வரப்படுவர். பின்பு சிவன் சோதியாகக் காட்சியளிப்பான். (தேவர்கள் மன்னிக்கப்பட்டமை படிமம் ஆகி, இதனை உணர்த்துகின்றது).

அலர்தல் - சோதியாய் விரிதல்.

நல்லாரின் நல்ல யாகம்

164. நல்லார் நலகுண்டம் ஒன்பதும் இன்புறப்
பல்லார் அமரர், 'பரிந்தருள் செய்க' என,
வில்லா வரையை விளங்கு எரி கோத்தவன்
பொல்லா அசுரர்கள் பொன்றும்படிக்கே.

நல்லார் [1]நலகுண்ட [2]மொன்பது மின்புறப்
பல்லா ரமரர் பரிந்தருள் செய்கென
[3]வில்லா வரையை விளங்கெரி கோத்தவன்
பொல்லா வசுரர்கள் பொன்றும் படிக்கே. (8)

வேறு பாடம்: 1. நவகுண்டம் (ஆ இ ஊ எ ஒ) II. 2. மென்பது (ஈ) II. 3. வில்லால் (அ ஆ ஈ ஊ ஒ) வில் லாற்புரத்தை விளங்கொளி கொற்றவன் (இ) I.

கருத்து: நல்லோர்கள் வேள்விக்காக அமைக்கும் ஒன்பது யாக குண்டங்களிலும் நன்கு வேள்வி நடைபெற, தேவர்கள், 'எமக்கு அருள் செய்க' என வேண்ட, சிவபிரான் அசுரர்கள் அழியும் வண்ணம், இமய மலையை வில்லாக வளைத்து, நெருப்பு அம்புகளை எய்தான்.

நல்லார் - வழிபடுவோர். குண்டம் ஒன்பது - ஓமகுண்டம் போல உடலில் உள்ள ஆறு ஆதாரங்கள், இரண்டு கண்கள், சகஸ்ராரம் ஆகியவை. வில் - பிரணவம். எரி - ஞானத்தீ. அசுரர்கள் - மும்மலசத்திகள். (வில் முதலிய மூன்றும் குறியீடுகள்.)

உமாதேவி கோபம்

165. தெளிந்தார் கலங்கினும் நீ கலங்காதே
அளிந்தாங்கு அடைவது எம் ஆதிப்பிரானை
விளிந்தான் அது தக்கன் வேள்வியை வீயச்
சுளிந்தாங்கு அருள் செய்த தூமொழியாளே.

[1]தெளிந்தார் கலங்கினு [2]நீகலங் காதே
யளிந்தாங் கடைவதெம் மாதிப்பி ரானை
[3]விளிந்தா னதுதக்கன் வேள்வியை வீயச்
சுளிந்தாங் [4]கருள்செய்த [5]தூமொழி யாளே. (9)

வேறு பாடம்: 1. நெளிந்தார் (த) 2. தீகலங்காதே (ஊ) நீர் கலங்காதே (ஒ) I. 3. விளிந்தானத் தக்கனவ் (எ) IV. 4. கருள்செயத் (பதி) 5. தூய்மொழி (அ இ ஈ ஊ ஒ) I தூய்மொழியானே (தி) (வ); தூய்மொழியோனே (பா 3)

கருத்து: "தாட்சாயணி ஆகிய உமாதேவியே, தெளிந்தவராகிய தேவர்கள் மதியிழந்து தக்கனது வேள்வியில் கலந்து கொண்டாலும், நீ மதி இழக்காமல் எம் சிவபிரானையே சார்ந்திருந்தாய். தக்கன் யாகம் அழியுமாறு கோபித்து, பின் அருள் செய்தாய்.

நீ எனத் தேவியை முன்னிலையாக்கினார். அளிந்து - அன்பினால் உருகி. சுளிந்து - சினந்து. தூமொழியாள் - உமாதேவி.

குறிப்பு: 7 சுவடிகளில் இப்பாடலுடன் 'தக்கன் வேள்வி' முற்றும் என்ற குறிப்பு உள்ளது.

11. பிரளயம்

சிவனே பரம்பொருள்

166\. கருவரை மூடிக் கலந்தெழு வெள்ளத்து
இருவரும் கோ என்று இகல, இறைவன்
ஒருவனும் நீர் உற ஓங்கொளி ஆகி,
அருவரையாய் நின்று அருள்புரிந்தானே.

கருவரை மூடிக் கலந்தெழு வெள்ளத்
திருவருங் கோவென் றிகல விறைவ
னொருவனு நீருற வோங்கொளி யாகி
[1]யருவரை யாய்நின் றருள்புரிந் தானே. (1)

வேறு பாடம்: 1. யருள்வரை (அ) I.

கருத்து: மலைகளை மூடிப்பெருகிய ஊழிமுடிவு வெள்ளத்தில், திருமாலும் பிரமனும் தாம்தாமே உலகத்தலைவர் எனக் கூறிச் சண்டையிட, சிவபிரான் வெள்ளத்தின் இடையே நெருப்பு மலையாக நின்று, அவ்விருவராலும் அடிமுடி காண இயலாதவனாய் விளங்கி, அவர்கட்கு அருள்புரிந்தான்.

வரை - மலை. வெள்ளம் - ஊழிக்கால வெள்ளம். இருவர் - அரியும் அயனும். கோ - தலைவன் - இகல - மாறுபட.

தேவர்களைக் காத்தான்

167\. அலைகடல் ஊடுஅறுத்து அண்டத்து வானோர்
தலைவன் எனும் பெயர் தான் தலைமேற் கொண்டு
உலகார் அழலைக் கண்டு உள்வீழாது ஓடி
அலைவாயில் வீழாமல் அஞ்சல் என்றானே.

அலைகட லூடறுத் தண்டத்து வானோர்
தலைவ னெனும்பெயர் தான்றலை மேற்கொண்
டுலகா [1]ரழலைக்கண் டுள்வீழா தோடி
யலைவாயில் வீழாம லஞ்சலென் றானே. (2)

வேறு பாடம்: 1. ரழற்கண் (எ); ரழங்கண் (அ ஓ); ரழக்கண் (பா 3) I.

கருத்து: அவ்வாறு நின்றமையால், 'தேவர்தலைவன்' என்ற சிறப்பினைத் தோற்றுவித்து, உலகெங்கும் நிறைந்த நெருப்புக்கு அஞ்சித் தேவர்கள் அதில் விழாமலும், விலகிச் சென்று கடலில் விழாமலும் அபயம் அளித்தான்.

அழல் - ஊழித்தீ. அலைவாய் - அலையினிடத்தில்.

வழிபட மறந்தனர்

168. தண்கடல் விட்டது அமரரும் தேவரும்
எண்கடல் சூழ் எம்பிரான் என்று இறைஞ்சுவர்;
விண்கடல் செய்தவர் மேல் எழுந்து அப்புறம்
கண்கடல் செய்யும் கருத்து அறியாரே.

தண்கடல் விட்ட [1]தமரருந் தேவரு
மெண்கடல் சூழெம் பிரானென் றிறைஞ்சுவர்
விண்கடல் செய்தவர் மேலெழுந் தப்புறங்
கண்கடல் செய்யுங் கருத்தறி யாரே. (3)

வேறு பாடம்: 1. வமரருந் (பா 3)

கருத்து: பிரளயத்தில் சிவன் அருளால் தப்பிப்பிழைத்த பின்பு, விண்ணுலகில் கடல் போலப் பெருகி வாழ்ந்த தேவர்கள் இறைவனை நினைத்து, அன்பால் கண்ணீர்விட்டு வழிபடாது போயினர்.

விட்டது - நீங்கிற்று. எண் கடல் சூழ் - எண்ணற்ற காலக்கடலினைத் தன் சங்கற்பத்தால் இயக்கும். விண்கடல் செய்தவர் - விண்ணுலகில் கடல் போல வாழ்பவர் ஆகிய தேவர்கள். அப்புறம் மேல் எழுந்து - அவ் வாழ்க்கைக்குப் பிறகு உயர்ந்து. கண்கடல் செய்யும் கருத்து அறியாரே - தம் 'கண்ணினால்' சர்வ வியாபகமாக உள்ள சிவபெருமானைக் காணும் ஞானத்தைப் பெறவில்லை என்றுமாம்.

சிவனது அருஞ்செயல்

169. சமைக்க வல்லானைச் சயம்பு என்று ஏத்தி
அமைக்க வல்லார் இவ்வுலகத்து உளாரே?
திகைத்த தெண்ணீரின் கடல்ஒலி ஓசை
மிகைக்கொள, அங்கி மிகாமை வைத்தானே.

சமைக்கவல் லானைச் சயம்புவென் றேத்தி
யமைக்கவல் லாரிவ் வுலகத்து ளாரே
'திகைத்ததெண் ணீரிற் கடலொலி யோசை
மிகைக்கொள வங்கிமி காமைவைத் தானே. (4)

கருத்து: சிவபிரான்அப்பிரளய வெள்ளத்தைக் குறைக்க அதன் நடுவே வடவைத் தீயை வைத்தான். நீர் குறைந்தது. ஓசை மிகுந்தது. இத்துணை அருஞ்செயல் செய்தவனைச் 'சயம்பு' என ஏத்துவதால் மட்டும் புகழ்ந்து முடிக்க இயலுமா?

கடல் ஓசை பரநாதத்தையும், அங்கி மூலக்கனலையும் குறிப்பால் காட்டும்.

சமைக்க - படைக்க. ஏத்தி - ஏத்தியதால் மட்டும். அமைக்கவல்லார்- முழுதும் சொல்லி முடிக்க வல்லார். உளாரே - உள்ளாரா? அவன் புகழ்களை எத்துணைக் கூறினாலும் நிரம்பக் கூறியது ஆகாது. திகைத்த - திசையெல்லாம் பரவிய. மிகைக்கொள - மீதூர்ந்து கேட்கு மாறு; எல்லாத் தத்துவங்களையும் கடந்த நிலையில் கேட்குமாறு. பரநாதம் புறச் செவியால் கேட்பதன்று. அங்கி - வடவைத் தீ; மூலக்கனல். மிகாமை-அளவிற்கு அதிகம் ஆகாமல்.

தலை போயிற்று

170. பண் பழிசெய் வழிபாடு சென்ற அப்புறம்
கண் பழியாத கமலத்து இருக்கின்ற
நண் பழியாளனை நாடிச் சென்று அச்சிரம்
விண் பழியாத விருத்தி கொண்டானே.

பண்பழி செய்வழி பாடுசென் றப்புறங்
கண்பழி யாத கமலத் திருக்கின்ற
நண்பழி யாளனை நாடிச்சென் றச்சிரம்
'விண்பழி யாத விருத்திகொண் டானே. (5)

வேறு பாடம். 1. விண்பழியா விண் பழியாது (உ) I (எ) I.

கருத்து: பிரமன் இராகங்களைப் பழிக்கும் நல்லிசை பாடிச் சிவபிரானைப் பலகாலம் வழிபட்டுப் பின்பு செருக்குக் கொண்டு அவனை இகழ்ந்தான். பாடிப்பரவிய வாயே பழிக்கத் தொடங்கி

யது. அது கண்டு சினம் கொண்ட சிவன், அவனது தலையைக் கிள்ளித் தன் கையில் பிச்சைப் பாத்திரமாக ஏந்தினான். தேவர்கள் தமக்கும் அக்கதி வரும் என்று அஞ்சிப் பழியாதிருந்தனர்.

பழிசெய் - பழிக்கும். கண் - இடம். நண் பழியாளனை - எய்துகின்ற பழியை உடைய பிரமனை. அச்சிரம் - மேல் நோக்கிய தலை. விருத்தி- தொழில்; பிச்சை. இங்குப் பிச்சைப் பாத்திரத்தை உணர்த்திற்று ஆகுபெயர்.

குறிப்பு: 8 சுவடிகளில் இப்பாடனுடன் 'பிரளயம்' என்ற அதிகாரம் முற்றும் என்ற குறிப்பு உள்ளது.

12. சக்கரப் பேறு

சக்கரக் கொடை

171. மால் போதகன் என்னும் வண்மைக்கு இங்கு ஆங்காரம்
கால் போதம் கையினோடு அந்தரச் சக்கரம்
மேல் போக வெள்ளிமலை, அமரர்பதி
பார்போகம் ஏழும் படைத்து உடையானே.

மால்போ தகனென்னும் 'வண்மைக்கிங் காங்காரங்
கால்போதங் கையினோ டந்தரச் சக்கர
மேல்போக வெள்ளி மலையம ரர்பதி
பார்போக ²மேழும் படைத்துடை யானே. (1)

வேறு பாடம்: 1. வண்மைக் கிரங்கா (இ) (ப 3) வண்மைக்கிலங்காரங் (ஊ) I. 2. மெங்கும் (ஓ) IV.

கருத்து: திருமால் சிவனை ஆயிரம் மலரால் ஏத்துபவன், அவற்றில் ஒன்று குறைய, தன் கண்ணையே இடந்து, மலராகக் கொண்டு வழி பட்டமையால், அந்த அன்புக்குச் சிவன் அருளிய வண்மையாக, அகங்காரத்தை மாய்க்கும் ஞானமே சக்கரமாக வடிவம் கொண்டு, திருமாலின் பெருவிரலினை ஒட்டி, அந்தரத்தில் சுழன்றது. அவ்வாறு செய்து ஏழுலகங்களிலும் உள்ளோரைக் காக்கும் தொழிலில் திருமாலை மேம்படுவித்து, அவர்கள் போகம் நுகருமாறு செய்கிறான்.

ஆற்றலும் அளித்தான்

172. சக்கரம் பெற்று நல்தாமோதரன் தானும்
சக்கரம் தன்னைத் தரிக்க ஒண்ணாமையால்
மிக்கு அரன்தன்னை விருப்புடன் அர்ச்சிக்க,
தக்க நல் சத்தியைத் தான் கூறு செய்ததே.

சக்கரம் பெற்றுநற் றாமோ தரன்றானுந்
சக்கரந் [1]தன்னைத் [2]தரிக்கவொண் ணாமையான்
மிக்கரன் றன்னை விருப்புட னர்ச்சிக்கத்
தக்கநற் சத்தியைத் தான்கூறு செய்ததே. (2)

வேறு பாடம்: 1. கையிற் (ஈ) IV. 2. திரிக்க (இ) I.

கருத்து: சக்கரம் பெற்ற திருமால், அதனைத் தரிக்க இயலாமல், சிவபிரானை வழிபட, அப்பிரான் தனது ஆற்றலைப் பகுதி செய்து அளித்தான்.

திருமாலிடம் நின்றான்

173. கூறு-அது ஆகக் குறித்தநல் சக்கரம்
கூறு-அது செய்து கொடுத்தனன் மாலுக்கு;
கூறு-அது செய்து கொடுத்தனன் சத்திக்கு,
கூறு-அது செய்து தரித்தனன் கோலமே.

கூறது [1]வாகக் [2]குறித்தநற் சக்கரங்
கூறது செய்து கொடுத்தனன் மாலுக்குக்
கூறது செய்து கொடுத்தனன் சத்திக்குக்
கூறது [3]செய்து [4]தரித்தனன் கோலமே. (3)

வேறு பாடம்: 1. வாய (பா 3) 2. குறித்து நற் (இ ஈ) I; 3. செய்தனத்தன் (ஒ) I. 4. குறித்தனன் (உ) I.

கருத்து: சலந்தராசுரனைக் கொல்லக் கருதி உண்டாக்கிய சக்கரத்தைத் திருமாலுக்குக் கொடுத்து, அதனைத் தாங்கும் பொருட்டுத் தனது சக்தியில் ஒரு பகுதியையும் வழங்கினான். உமாதேவிக்குத் தன் உடம்பின் இடப்பாகத்தை அளித்தான்.

கூறு - அதுவாக (1 ஆம் அடி) சத்தி ஒரு பகுதி ஆகுக என. குறித்த - சங்கற்பித்த. தரித்தனன் கோலமே - திருமாலிடம் அதிட்டித்து

நின்றான். அந்நிலையில் சக்கராயுதத்தைத் தன் சத்தியாகிய உமா தேவிக்கும் கொடுத்ததாயிற்று.

திருமாலின் தோல்வி

174. தக்கன் தன் வேள்வி தகர்த்த நல் வீரர்பால்
தக்கன் தன் வேள்வியில் தாமோதரன் தானும்
சக்கரம் தன்னைச் சசி முடிமேல் விட
அக்கி உமிழ்ந்தது வாய் உக்கரத்திலே.

தக்கன்றன் வேள்வி தகர்த்தநல் வீரர்பாற்
றக்கன்றன் வேள்வியிற் றாமோ தரன்றானுஞ்
சக்கரந் தன்னைச் சசிமுடி மேல்விட
வக்கி யுமிழ்ந்தது 'வாயுக் கரத்திலே. (4)

வேறு பாடம்: 1. வாமக்கிரத்திலே (ஆ) I ஆயு (பா 1)

கருத்து: தக்கனது வேள்வியை அழித்த வீரபத்திரருடன் திருமால் போருக்குச் சென்று, சந்திரனை அணிந்த அவரது தலையை நோக்கிச் சக்கரத்தைச் செலுத்த, அவர் செய்த உங்காரத்தில் நெருப்புப் பொழித்தது.

வீரர் - வீரபத்திரர். சந்திரனைச் சூடிய அவரது முடிமேல்விட என்க. அக்கி - தீ. உக்கரம் - 'ஹூம்' - என்ற ஓசை. இக்காலத்தார் ஹூங்காரம் என்ப.

குறிப்பு: 9 சுவடிகளில் 'சக்கரப் பேறு' இதனுடன் முற்றும் என்ற குறிப்பு உள்ளது.

13. எலும்பு கபாலம்

புனிதம் காத்தான்

175. எலும்பும் கபாலமும் ஏந்தி எழுந்த
வலம் பல் மணி முடி வானவர் - ஆதி
எலும்பும் கபாலமும் ஏந்திலன் ஆகில்
எலும்பும் கபாலமும் இற்று மண் ஆமே.

எலும்புங் கபாலமு மேந்தி யெழுந்த
வலம்பல் மணிமுடி வானவ ராதி
யெலும்புங் கபாலமு மேந்தில னாகி
லெலும்புங் கபாலமு மிற்றுமண் ணாமே.

கருத்து: சிவபரம்பொருள் அணிந்த இவை மாண்ட திருமால், பிரமன் எண்ணிறந்தவருடையவை. இவற்றை அணிந்து புனிதத்தைக் காக்க வில்லையேல் இவையும் பிற உடம்பு போல் அழியும்.

வலம் - வெற்றி. வானவர் ஆதி - தேவர் முதல்வன்; சிவன். எலும்பும் கபாலமும் - எலும்பும் தலைமாலையும்.

குறிப்பு: 7 சுவடிகளில் இப்பாடலுடன் புது அதிகாரம் தொடங்குகின்றது. இவற்றுள் 5 சுவடிகள் "எலும்பும் கபாலமும்" என்றும், 2 சுவடிகள் 'கங்காளம்' என்றும் அதிகாரப் பெயர் குறிக்கின்றன. 2 சுவடிகள் இதனை 'அடிமுடி தேடல்' அதிகாரத்தில் வைக்கின்றன.

14. அடிமுடி தேடல்

சிவபரத்துவம்

176. பிரமனும் மாலும், 'பிரானும் நான்' என்னப்
பிரமன் மால் தங்கள் தம் பேதைமை யாலே
பரமன் அனலாய்ப் பரந்து முன் நிற்க
அரன் அடி தேடி அரற்றுகின்றாரே.

பிரமனு மானும் [1]பிரானுநா னென்னப்
பிரமன்மா றங்கடம் பேதைமை யாலே
பரம னனலாய்ப் பரந்துமுன் னிற்க
வரனடி தேடி யரற்றுகின் றாரே. (1)

வேறு பாடம்: 1. பிரானேநா (பா 3) (எ) I.

கருத்து: மலைகளை மூடிப்பெருகிய ஊழிமுடிவு வெள்ளத்தில், திருமாலும் பிரமனும் தாம்தாமே உலகத்தலைவர் எனக் கூறிச் சண்டையிட, சிவபிரான் வெள்ளத்தின் இடையே நெருப்பு மலையாக நின்று, அவ்விருவராலும் அடிமுடி காண இயலாதவனாய் விளங்கி, அவர்கட்கு அருள்புரிந்தான்.

பிரானும் நான் - நான் பரம்பொருளும் ஆவேன். பேதைமையாலே அரற்றுகின்றார் என முடிக்க. தற்போதத்தில் உள்ள பேதைமை, மாயையால் விளைந்த பேதைமை இரண்டையும் குறிக்கத் 'தங்கள் தம்' என்றார்.

குறிப்பு: 9 சுவடிகளில் இப்பாடலுடன் அடுத்த அதிகாரம் தொடங்குகிறது. அவற்றுள் 7 சுவடிகளில் அதிகாரப் பெயர் 'அடி முடி தேடல்' என்றும், 1 சுவடியில் 'அடி முடி தேடல் எலும்பு கபாலம்' என்றும், பிறிதொன்றில் 'சருவ சிருட்டி' என்றும் குறிக்கப்பெற்றுள்ளது.

பிரமன் பொய்யுரைத்தான்

177. அடிமுடி காண்பான் அயன் மால் இருவர்
படி கண்டிலர், மீண்டும் பார்மிசைக் கூடி,
'அடி கண்டிலன்' என்று அச்சுதன் சொல்ல,
'முடி கண்டேன்' என்று அயன் பொய் மொழிந்தானே.

அடிமுடி காண்பா 'னயன்மா லிருவர்
படிகண் டிலர்மீண்டும் பார்மிசைக் கூடி
யடிகண் டிலனென் றச்சுதன் சொல்ல
முடிகண்டே னென்றயன் பொய்ம்மொழிந் தானே. (2)

வேறு பாடம்: 1. ரயன்மா (அ இ எ ஒ) I.

கருத்து: சிவபிரானின் அடியையும் முடியையும் காணப் புறப்பட்ட திருமாலும் பிரமனும் அவற்றைக் காணவியலாது திரும்பினர். திருமால் 'அடியை நான் காணவில்லை' என்று சொல்லப் பிரமன் 'முடிகண்டேன்' எனப் பொய் கூறினான்.

படி - சிவபெருமானது உருவம். காண்பான் தொடங்கிய என ஒரு சொல் வருவிக்க.

குறிப்பு: இப்பாடல் 'ஊ' - சுவடியில் 'அடி முடி தேடல்' என்னும் இவ்வியலில் உள்ளது 'ஈ' - சுவடியில் 'திருமூலர் வரலாறு' என்னும் இயலிலும் இங்கும் உள்ளது. இப்பதிப்பில் பொருட்பொருத்தம் நோக்கி இது 'அடிமுடிதேடல்' அதிகாரத்தில் சேர்க்கப்படுகின்றது. பதிப்புகளில் "திருமூலர் வரலாறு" என்ற இயலில் உள்ளது.

அருட் சத்தி

178. ஆம் ஏழ் உலகு உற நின்ற எம் அண்ணலும்
தாம் ஏழ் உலகில் தழற்பிழம்பாய் நிற்கும்;
வான் ஏழ் உலகு உறு மா மணிகண்டனை
நானே அறிந்தேன் அவன் ஆண்மையாலே.

ஆமே ழுலகுற நின்றவெம் மண்ணலுந்
தாமே ழுலகிற் றழற்பிழம் பாய்நிற்கும்
வானே ழுலகுற மாமணி கண்டனை
[1]நானே யறிந்தே [2]னவனாண்மை யாலே.

வேறு பாடம்: 1. நானறிந்தேனவனாண்மையினாலே (துடி) 2. னென்னாண்மையினாலே (இ) IV.

கருத்து: உலகப் பொருள்களிலும் உயிர்களிலும் 'ஒன்றாய்' நிற்கும் இறைவனின் அருட் சத்தி, உடம்புகளில் குண்டலி சத்தியாகவும் நிற்கிறாள். நீலகண்டன் என்னை ஆட்கொண்டமையால் அவனை ஒருவாறு அறிந்தேன்.

படைக்கப்பட்டவை ஆதலின் 'ஆம் ஏழ் உலகு' என்றார். உலகில் 'ஒன்றாய் நின்றவன்' இறைவன்: உலகில் - ஆகு பெயர்; உடல்களில் தழல் பிழம்பு— குண்டலி சத்தியாகவும் அதுவே அருளால் அருட்சோதியாகவும் உள்ள நிலை. அருட்சோதியாக உள்ள நிலை 'உடனாதல்'. வான் ஏழ் உலகு உறு - மேல் ஏழுலகங்களில் உள்ள தேவர்களை வாழ்வித்த. ஆண்மையாலே - ஆண்டமையினால். நானே - ஏகாரம் பிரமன், திருமால் முதலியோரிடமிருந்து பிரித்துக் காட்டியது.

அறிந்தேன் என்றது, திருவடி ஞானத்தை. "திருவடியே சத்தியாய் இருந்தது" ஆதலின் அவ்வருட் சத்தி குண்டலியாகவும் அருட்சோதி யாகவும் விளங்குதலை அறிந்தேன் என்றார். திரோதான சத்தியை யோக நூலார் குண்டலி என்ப.

உலகமே அவன்

179. ஊனாய், உயிராய், உணர்வு - அங்கியாய், முன்னம்
சேணாய் வான் ஓங்கி, திருஉருவே அண்டத்
தாணுவும் ஞாயிறும் தண்மதியும் கடந்து
ஆள் முழுது அண்டமும் ஆக நின்றானே.

ஊனா யுயிரா யுணர்வங்கி யாய்முன்னஞ்
சேணாய்வா னோங்கித் திருவுரு வேயண்டத்
தாணுவு ஞாயிறுந் தண்மதி யுங்கடந்
[1]தாண்முழு தண்டமு மாகிநின் றானே. (4)

வேறு பாடம்: 1. தான் முழு (பா 3)

கருத்து: இறைவன் ‘உலகாக’ நின்றமையை விரித்துரைக்கின்றார்.

உணர்வு அங்கியாய் - உயிருணர்வுடன் சேர்ந்து, புருவ மத்தியில் சோதியாய். இது கலப்பு நிலை. சேண் - “எல்லாப் பொருள் முடிவு” ஆகிய தொலைவு. இது கடப்புநிலை. “திருவுருவே வான் ஓங்கி, ஞாயிறும் மதியும் கடந்து, ஆள் முழுது அண்டமும், அண்டத் தாணுவும் ஆகி நின்றானே” எனக் கூட்டுக. அண்டமுழுதுமாய் நிற்றல் - விசுவம். அண்டத் தாணுவுமாய் நிற்றல் - விசுவாதாரம்.

அடியும் முடியும்

180. நின்றான் நிலமுழுது அண்டத்து நீளியன்
நன்றே அவன்வடிவு அஞ்சினர் ஆய்ந்தது;
சென்றார் இருவர் திருமுடிமேல் செல
நன்று ஆம் கழல்அடி நாட ஒண்ணாதே.

நின்றா னிலமுழு தண்டத்து நீளிய[1]
னன்றே [2]யவன்வடி வஞ்சின ராய்ந்தது
சென்றா ரிருவர் திருமுடி மேற்செல
நன்றாங் கழலடி நாடவொண் ணாதே. (5)

வேறு பாடம்: 1 ணீளியன் (பதிப்) 2. யவனடி (பா 3)

கருத்து: சிவபிரான் உலகம் முழுதும் அகன்று பரவி, அண்ட முகடுவரை உயர்ந்து நின்றான். பிரமனும் திருமாலும் அவனது அடி முடி தேடிச் சென்று, இந்த வடிவத்தைக் கண்டு, தம் செயலுக்கு அஞ்சினர். பரம்பொருளின் அடியும் முடியும் யாரால் காணவும் ஆராயவும் இயலும்?

அண்டத்து நீளியன் - அண்ட முகடுவரை உயர்ந்தவன். 2 ஆம் அடியை இறுதி யடி யாக்கி முடிக்க. ஆய்ந்தது அஞ்சினர் - தேடியமை குற்றம் என அஞ்சினர். விசாரணைக்குப் புலப்படான் என்பது கருத்து.

‘கழலடி’ க்குப் பின்னும் ‘மேற்செல’ என்பதனைக் கொணர்க. மேற்செல - காண.

மூவரால் இயலவில்லை.

181. சேவடி ஏத்தும் செறிவுடை வானவர்
'மூவடி தா' என்றானும், முனிவரும்,
பாவடியாலே பதம் செய் பிரமனும்
தாவடி இட்டுத் தலைப்பெய்யு மாறே.

சேவடி யேத்துஞ் செறிவுடை வானவர்
மூவடி தாவென் றானு முனிவரும்
பாவடி யாலே பதஞ்செய் பிரமனுந்
தாவடி யிட்டுத் தலைப்பெய்யு மாறே. (6)

கருத்து: தேவர்களும், மாவலியிடம் மூவடி மண் யாசித்த திருமாலும், முனிவர்களும், வேதம் ஓதும் பிரமனும் சிவபெருமானது திருவடியை ஏத்தும் கணங்கள் ஆவரே அன்றி, தம்முள் போட்டியிட்டு அவனை நெருங்கவும் வல்லரோ.

ஏத்தும் - ஏத்தும் கடமையுடைய. செறிவு - கூட்டம். மூவடி தா என்றான் - மாவலியிடம் இரந்தவன். பதம் செய்பிரமன் - பிரமன் வேத சுலோகங்களை ஓதுபவன். தாவடி - போர்; போட்டி.

மூவர்க்கும் உயிர்

182. தானக் கமலத்து இருந்த சதுமுகன்
தானக் கருங்கடல் ஊழித் தலைவனும்
ஊனத்தின் உள்ளே உயிர்போல் உணர்கின்ற
தானப் பெரும்பொருள் தன்மையது ஆமே.

தானக் கமலத் திருந்த சதுமுகன்
றானக் கருங்கட லூழித் தலைவனு
மூனத்தி னுள்ளே யுயிர்போ லுணர்கின்ற
தானப் [1]பெரும்பொருட் டன்மைய தாமே. (7)

வேறு பாடம்: 1. பெரும் பொருளண்மைய தாமே (த)

கருத்து: மும்மூர்த்திகளும் தம் உடலுள் உயிரைப் போல் சிவனை உணர்வர்.

யோக நூற் பொருள்: கமலம் - சுவாதிட்டானம். கருங்கடல் - மணிபூரகம்.

தானம் - இருப்பிடம். கருங்கடல் தானத் தலைவன் எனக் கூட்டுக; திருமால். ஊழித்தலைவன் - உருத்திரன். பெரும்பொருள் - சிவபரம் பொருள்.

திருவடி அடைய

183. ஆலிங்கனம் செய்து எழுந்த பரஞ்சுடர்
மேல் இங்ஙனம் வைத்தது ஓர் மெய்ந்நெறி முன் கண்டு
ஆலிங்கனம் செய்து உலகம் வலம்வரும்;
கோல் இங்கு அமஞ்சு அருள் கூடலும் ஆமே.

ஆலிங் கனஞ்செய் தெழுந்த பரஞ்சுடர்
மேலிங் ஙனம்வைத்த தோர்மெய்ந் நெறிமுன்கண்
[1]டாலிங் கனஞ்செய் துலகம் வலம்வருங்
கோலிங்க மஞ்சருள் கூடலு மாமே. **(8)**

வேறு பாடம்: 1. டோலிங் (த)

கருத்து: சிவபெருமான் அனைத்துப் பொருளிலும் கலந்தும், அவற்றைக் கடந்தும் நின்று, தன்னை யாவரும் வழிபட வைத்த மெய்ந்நெறியை உயர்ந்தோர் கண்டு, அதைப் பின்பற்றி வெற்றி பெறுவர். அந்நெறி உலக வாழ்வுக்கு ஊன்றுகோலாய் அமைவதோடு, அவனது திருவடியைப் பெறுதற்கும் உதவும்.

ஆலிங்கனம் செய்து - அனைத்திலும் கலந்து. எழுந்த - அவற்றைக் கடந்த. "இங்ஙனம் மேல் வைத்த மெய்ந்நெறி" என்று கூட்டுக. ஆலிங்கனம் செய்து (3 ஆம் அடி) - பின்பற்றி. வலம்வரும் - வெற்றி பெறும். கோல் - ஊன்று கோல். அமஞ்சு - அமைந்து என்பதன் போலி. அருள் - திருவடி.

அடிமையாக வேண்டும்

184. வாள் கொடுத்தானை வழிபட்ட தேவர்கள்
ஆள் கொடுத்து எம் போல் அரனை அறிகிலர்;
ஆள்கொடுத்து இன்பம் கொடுத்தது கோளாகத்
தாள் கொடுத்தான் அடி சாரகிலாரே.

வாள்கொடுத் தானை வழிபட்ட தேவர்க
ளாள்கொடுத் தெம்போ லரனை [1]யறிகில
[2]ராள்கொடுத் தின்பங் [3]கொடுத்தது கோளாகத்[4]
தாள்கொடுத் தானடி சாரகி லாரே. **(9)**

வேறு பாடம்: 1. யறிகிலர் (த) 2. கோள்கொடுத் (த) 3. கொடுத்து (ஈ) I. 4. கோளாகத் தன் (த)

கருத்து: தமக்கு ஒளி வழங்கிய சிவபிரானை வழிபட்ட தேவர்கள், எம்மைப்போல அடிமை செய்து அவனை அறிந்துகொள்ளவில்லை. யாம் அவனுக்கு அடிமைகள் ஆக அருள் நல்கி, இன்பம் வழங்கி, அதுவே சார்பாகத் திருவடியும் நல்கினான். தேவர்கள் இப்பேறு பெறவில்லை.

வாள் - ஒளி. ஆள் கொடுத்து - அடிமையாகக் கொடுத்து. ஆள் கொடுத்து (3 ஆம் அடி) அடிமையாக இருக்க அருள் நல்கி. கோள் - பற்றுக் கோடு.

ஆணையின் வழியே அருள்

185. ஊழி வலம் செய்து அங்கு ஒரும் ஒருவற்கு
வாழி சதுமுகன் வந்து வெளிப்படும்;
'வீழ் இத்தலை நீ விதித்து, இது தா' என
ஊழிக் கதிரோன் ஒளியை வென்றானே.

ஊழி வலஞ்செய்தங் கோரு மொருவற்கு
வாழி சதுமுகன் வந்து வெளிப்படும்[1]
வீழித் [2]தலைநீ [3]விதித்திது [4]தாவென
வூழிக் கதிரோ னொளியைவென் றானே. (10)

வேறு பாடம்: 1. வெளிப்பட்டு (இ) IV. 2. தலைநீர் (பா 3) 3. விதித்து (பதிப்); விதித்தது (த) 4. காவெனும் (த).

கருத்து: சர்வசங்காரத்தை வெற்றியுடன் செய்து, புனர் உற்பவத்தை எண்ணும் பரம்பொருளின் சன்னிதியில் அவனது சங்கற்பத்தால் பிரமன் தோன்ற, அவனைப் பார்த்து. "நீ உலகங்களைப் படைத்துத் தருவாயாக" என்று கூறி அருள் வழங்கினான்.

புனருற்பவம் கூறப்பட்டது. ஊழி - சர்வசங்காரம். வலம் - வெற்றி. ஒரும் - சங்கற்பமாத்திரையாகப் புனர் சிருட்டியை எண்ணுவான். ஒருவற்கு - சிவபரம்பொருளுக்கு. இத்தலை - இந்த யுகத்தில். வீழ்- விரும்புக. விதித்து - படைத்து. இது - இவ்வுலகத்தை. என - எனக்கூறி. ஊழிக்கதிரோன் ஒளி - அழிக்கும் தீப்போன்ற வெயில். அதனை வெல்லுதல் - அருள்ஒளி வழங்குதல்.

குறிப்பு: 8 சுவடிகளில் இப்பாடலுடன் இவ்வதிகாரம் முற்றும் என்ற குறிப்பு உள்ளது.

15. அதோமுக தரிசனம்

முருகன் திருவவதாரம்

186. ‘எம்பெருமான் இறைவா முறையோ’ என்று
வம்பு அவிழ் வானோர் அசுரன் வலி சொல்ல,
‘அம் பவள மேனி அறுமுகன்’ போய் அவர்
தம் பகை கொல் என்ற தற்பரன் தானே.

எம்பெரு மானிறை வாமுறை யோவென்று
வம்பவிழ் வானோ ரசுரன் வலிசொல்ல
[1]வம்பவள மேனி யறுமுகன் போயவர்
தம்பகை [2]கொல்லென்ற தற்பரன் றானே. (1)

வேறு பாடம்: 1. வம்பவழ் (த) 2. கொல்லுற்ற (ஈ)

கருத்து: தேவர்கள் சிவபிரானிடம் சென்று, சூரபன்மாவின் புதுவலிமையைப் பற்றிக் கூறி, அவன் தமக்குச் செய்யும் துன்பங்களை முறையிட, அவன் ஆறுமுகனை நோக்கி அப்பகையை வெல்லுமாறு ஆணையிட்டான்.

அறுமுகன் - முருகன். இது குறியீடாக நின்று மூலாதாரத்திலிருந்து ஆறு ஆதாரங்களையும் கடந்து மேலே எழும் செஞ்சோதியைக் குறித்தது. வம்பு அவிழ் வலி என்க.

குறிப்பு: அதோமுக தரிசனம் என்னும் இவ்வியல், சுவடிகளின் ஒப்பு நோக்கில் 49 ஆவது இயலாக உள்ளது. இப்பதிப்பில் பொருள் ஒப்புமை நோக்கி 15 ஆவது இயலாக அமைக்கப்படுகின்றது.

இருளும் ஒளியும்

187. அண்டமொடு எண் திசை தாங்கும் அதோமுகம்
கண்டம் கறுத்த கருத்து அறிவார் இல்லை;
உண்டது நஞ்சு என்று உரைப்பர் உணர்வு இலோர்;
வெண் - தலை மாலை விரிசடையோற்கே.

அண்டமொ டெண்டிசை தாங்குமதோமுகங்
கண்டங் கறுத்த கருத்தறி வாரில்லை
யுண்டது நஞ்சென் றுரைப்ப ருணர்விலோர்
வெண்டலை [1]மாலை விரிசடை யோற்கே. (2)

வேறு பாடம்: யேந்தும் (ஓ) II

கருத்து: தலைமாலை அணிந்து விளங்கும் விரித்த செஞ்சடைப் பெருமானுக்கு, ஐந்து முகங்களுள், கீழ் நோக்கிய முகம் உலகம் அனைத்தையும் காக்கும். அவனுக்குக் கழுத்து கருமையடைந்ததன் உட்கருத்தை யாரும் அறியவில்லை. அதனால் உணர்வில்லாதோர், அவன் நஞ்சை உண்டமையால் கறுத்தது என்பர். விந்து சத்தியைக் கீழ் முகமாகச் செலுத்தி, இருளில் ஆழ்ந்துவிடாமல், அதனை மேல் முகமாக ஏற்றி, ஒளிமயமாகச் செய்வதே 'நஞ்சு உண்டது' ஆகும். அதனால் கழுத்துக் கறுத்தது. நெற்றி ஒளி பெற்றது. இதை மக்களுக்கு அறிவிக்கவே சிவபெருமான் 'நஞ்சுண்டான்'.

விந்துவினை மேல்முகமாக ஏற்றுவது அதோமுகம்.

சிவன் உறையும் இடம்

188. செய்தான் அறியும் செழுங்கடல் வட்டத்துப்
பொய்யே உரைத்துப் புகலும் மனிதர்கள்
மெய்யே உரைத்திடில் விண்ணோர் தொழச் செய்வன்
மை தாழ்ந்து இலங்கும் மணிமிடற்றோனே.

செய்தா னறியுஞ் [1]செழுங்கடல் வட்டத்துப்[2]
பொய்யே யுரைத்துப் புகலு மனிதர்கள்[3]
மெய்யே [4]யுரைத்திடில் விண்ணோர் தொழச்செய்வன்
மைதாழ்ந் திலங்கு [5]மணிமிடற் றோனே. (3)

வேறு பாடம்: 1. னறிவன் (சண்) (விசு) 2. வட்டத்திற் (ஈ) IV. 3. மனிதர்காள் (சண்) (திருவிக) (விசு) (தி) 4. யுரைக்கில் (அ இ ஈ ஊ எ) II. 5. மிடறுடையோனே (அ ஈ ஊ எ) III.

கருத்து: மனிதர்கள் பொய்யே கூறி உலகியலில் புகுவதையும் படைத்தவனாகிய சிவன் அறிவான். அவர்கள் மெய் உணர்ந்து கூறி, ஞான நெறியில் சென்றால் அந்நீலகண்டன் அவர்களைத் தேவரும் வணங்கச் செய்வான்.

சுவாதிட்டானம் என்னும் ஆதாரத்தின் உண்மையை மறந்து, பொய்யாகிய புலன் இன்பங்களை அனுபவிக்கும் மக்கள், யோக சாதனை செய்தால், சுவாதிட்டான அனுபவத்தால், உலகைப் படைத்த ஈசனை அறிந்து போற்றுவர் என்பது குறிப்பு. சுவாதிட்டானம்-சுவ அதிட்டானம்; இறைவன் நம் உடம்பில் குடிகொண்ட இடம்.

மூலக்கனல்

189. நந்தி எழுந்து நடுஉற ஓங்கிய
செந்தீ கலந்து உள் சிவன் எனவே நிற்கும்
உந்திக் கலந்து அங்கு உலகம் வலம்வரும்
அந்தி இறைவன் அதோமுகம் ஆமே.

நந்தி யெழுந்து நடுவுற வோங்கிய[1]
செந்தீக் [2]கலந்துட் சிவனென வேநிற்கு[3]
முந்திக் கலந்தங் குலகம் வலம்வரு
[4]மந்தி யிறைவ னதோமுக மாமே. (4)

வேறு பாடம்: 1. வோங்கியே (அ) I. 2. கலந்துடன் (அ ஓ) IV. 3. நிற்கு (விசு) 4. நந்தி (ஓ) II.

கருத்து: மகா சங்கார மூர்த்தியாக நின்று அனைவர்க்கும் இறுதியைச் செய்யும் சிவபிரானது அதோ முகம், மனிதர் உடம்பில் மூலாக்கினி யாக வளர்ந்து எழுந்து, சுழுமுனை வழியாக மேலேறி, அருட்சத்தியுடன் கலந்து, சஹஸ்ராரத்தில் சிவமூர்த்தியாக விளங்கும். சத்தியுடன் கலந்து உலகில் பல திருவுருவங்களாகத் திகழும். எவ்வாறு எனின், அந்தணர்க்கு நித்தியாக்கினியாகவும் ஔத்திரி செய்யும் சிவபூசையாளர்க்குச் சிவாக்கினியாகவும், ஏனைய கிரியா நெறியினர்க்குச் சிவலிங்கமாகவும் என்க.

செயல்கள் நடைபெற

190. அதோமுகம் கீழ் அண்டம் ஆன பிராணன்
அதோமுகம் தன்னொடும் எங்கும் முயலும்;
சதோமுகத்து ‘ஓம்’ மலர்க் கண்ணிப் பிரானும்
அதோமுகன்; ஊழித் தலைவனும் ஆமே.

அதோமுகங் கீழண்ட மான பிராண[1]
னதோமுகந் தன்னொடு மெங்கு முயலுஞ்
சதோமுகத் [2]தோமலர்க் கண்ணிப் பிரானு
[3]மதோமுக [4]னூழித் தலைவனு மாமே. (5)

வேறு பாடம்: 1. புராண (இ ஈ எ) I. 2. தொண்மலர்க் (எ) II. 3. சதோமுக (த) 4. மூழித் (அ ஆ ஓ) I.

கருத்து: சத்தியின் பல கூறுகளை இடமாகக் கொண்ட, பிரணவம் என்னும் மாலையைச் சூடிய பெருமான் அதோமுகம் உடையவனாய் நின்று, மனிதர்க்குப் பிராணசத்தி கீழ் முகமாக நோக்கி, கீழ் உள்ள இருள் உலகில் செல்கின்ற போது, மாயையின் கீழ்ப் பாகமான மோகினியை அதிட்டித்து நின்று, அவர்தம் செயல்களைச் செய்விப்பான். அவன் காலங்களை வென்ற தலைவனுமாவான்.

சதோமுகத்து - சத்தியை இடமாகக் கொண்ட.

பற்பல சத்திகள்

191. அதோமுகம் மாமலர் ஆயது கேண்மின்,
அதோமுகத்தால் ஒரு நூறாய் விரிந்திட்டு
அதோமுகம் ஆகிய அந்தம் இல் சத்தி
அதோ முதல் ஆகி அமர்ந்திருந்தானே.

அதோமுக மாமல ராயது கேண்மி[1]
[2]னதோமுகத் தாலொரு நூறாய் -விரிந்திட்
டதோமுக மாகிய வந்தமில் சத்தி
[3]யதோமுத லாகி யமர்ந்திருந் தானே. (6)

வேறு பாடம். 1. கேளு (அ ஆ இ ஊ எ) II. 2. மதோமுகத் (அ ஆ இ ஈ ஊ எ ஒ) II. 3. வதோமுகமாகி (திரு. வி. க)

கருத்து: அதோ முகம் ஒரு பெரிய மலர் ஆன -விந்தையைக் கேண்மின். இறைவன் அதோமுகத்தால் சத்திகளைப் பலவாகப் பெருகச் செய்து, அவற்றை அதிட்டித்து நிற்கும் சத்திமானாக வீற்றிருக்கின்றான்.

குறிப்பு: விரிந்து என்ற பாடமே அனைத்துச் சுவடிகளிலும் பதிப்பு களிலும் உள்ளது. இச்சொல்லீற்றுக் குற்றியலுகரம் வருஞ்சொல் முதல் உயிர் ஏற இடங்கொடுக்குமாதலின், ஓரசைச் சீராக எஞ்சும். இப்பிழையை நீக்க, இப்பதிப்பில் 'விரிந்திட்' எனத் திருத்தப்பட்டது.

16. சருவசிருட்டி

பராபரமே முதல்

192. ஆதியோடு அந்தம் இலாத பராபரம்
போதம் அது ஆகப் புணரும் பராபரை
சோதி அதனில் பரம் தோன்றத் தோன்றுமாம்
தீதில் பரை; அதன்பால் திகழ் நாதமே.

ஆதியோ டந்தமி லாதப ராபரம்'
போதம தாகப் புணரும் பராபரை
சோதி யதனிற் பரந்தோன்றத் தோன்றுமாந்
தீதில் பரையதன் பாற்றிகழ் நாதமே.

வேறு பாடம்: 1. பராபரன் (இ ஈ ஊ) II; பரம் பரம் (பா 6)

கருத்து: பராபரன் பராபரையுடன் சேரப் பரசிவன் தோன்றுவான். அவன் பராசத்தியுடன் சேர, நாதத் தத்துவம் தோன்றும்.

சத்தியும் சிவனும்

193. நாதத்தில் விந்துவும் நாத விந்துக்களின்
தீதுஅற்று அகம் வந்த சிவம் சத்தி என்னவே
பேதித்த ஞானம் கிரியை பிறத்தலால்
வாதித்த இச்சையில் வந்து எழும் விந்துவே.

நாதத்தில் விந்துவு நாதவிந் துக்களின்'
[2]தீதற் றகம்வந்த [3]சிவஞ்சத்தி யென்னவே
[4]பேதித்த ஞானங் கிரியை பிறத்தலால்
வாதித்த விச்சையில் வந்தெழும் விந்துவே. (2)

வேறு பாடம்: 1. விந்துக்களை (அ இ ஈ ஊ ஒ) (பா 3) II. 2. தீதற்ற வந்தச் (இ ஈ ஊ) I. 3. சிவன்சத்தி (இ எ) I. 4. பேதித்து (த).

கருத்து: நாதத்தில் விந்து எழும். அவற்றில் முறையே சிவமும் சத்தியும் தோன்றுவர். சிவம் ஞான வடிவம். சத்தி கிரியை (செயல்) வடிவம். இவை சுத்த மாயையிலிருந்து கொள்ளப்படும் இறைநிலைகள். இன்னும் சிவம், சத்தியரின் விருப்பம் காரணமாகச் சுத்தமாயையில் பல வடிவங்கள் எழும்.

விந்து (4 ஆம் அடி) - சுத்த மாயை.

மணியும் ஒளியும்

194. இல்லது சத்தி இடம் தனில் உண்டாகிக்
கல் ஒளி போலக் கலந்து உள் இருந்திடும்;
வல்லது ஆக வழி செய்த அப்பொருள்
சொல்லது சொல்லிடின் தூராதி தூரமே.

இல்லது சத்தி யிடந்தனி லுண்டாகிக்[1]
கல்லொளி போலக் கலந்துள் ளிருந்திடும்
வல்லது வாக வழிசெய்த வப்பொருள்[2]
சொல்லது [3]சொல்லிடிற் றூராதி தூரமே. (3)

வேறு பாடம்: 1. லுண்டாகிக் (அ ஆ ஈ ஊ) I ; லுண்டாக்கிக் (பா 3) லுண்டாகக் (பா 2) 2. சோதியைச் (ஆ ஈ ஊ) III. 3. சொல்லிட (ஆ) I.

கருத்து: சிவம் அன்றித் தனிப் பொருள் அல்லாத சத்தி, அச்சிவத்தினிடமிருந்து தோன்றிச் செயற்பட்டாலும், இரத்தினமும் அதன் ஒளியும் போல, சிவத்திற் கலந்தே இருக்கும். அச்சிவ சத்திகளைச் சொல்லால் விளக்க இயலாது.

இல்லது - சிவமன்றி இல்லதாகிய.

நிலைதோறும் துணை

195. தூரத்தில் சோதி தொடர்ந்து ஒரு சத்தியாய்,
ஆர்வத்து நாதம் அணைந்து ஒரு விந்துவாய்,
பாரச் சதாசிவம் பார்முதல் ஐந்துக்கும்
சார் வத்துச் சத்தி ஓர் சாத்துமான் ஆமே.

தூரத்திற் சோதி தொடர்ந்தொரு சத்தியா
[1]யார்வத்து நாத மணைந்தொரு விந்துவாய்ப்
பாரச் சதாசிவம் பார்முத லைந்துக்குஞ்[2]
சார்வத்துச் சத்தியோர் [3]சாத்துமா னாமே. (4)

வேறு பாடம்: 1. யாரத்து (பா 1) 2. பார்முகமைந்தாகி, IV. 3. சார்த்துமா (த) ஆர்வத்து மானதே (பா 1).

கருத்து: சிவம் நிற்கும் ஒவ்வொரு நிலையிலும் சத்தி துணையாய் நிற்பாள். கடந்த நிலையில் சோதியாய் உள்ளபோது அதன் சத்தியாய்

இருக்கும் அவள், சிவம் நாதமாக உள்ளபோது விந்துவாக நிற்பாள். சதாசிவம் முதலிய ஐந்து நிலைகளில் நின்ற போதும் ஐந்து சத்தியராய்த் துணைநிற்பாள்.

பார் முதல் ஐந்து - ஐம்பூதம். சார் வத்து - சார்கின்ற பொருள். சாத்துமான் - சத்தியை உடையவன்.

ஐம்பூதத் தோற்றம்

196. மானின்கண் வான் ஆகி, வாயு வளர்ந்து, அனல்
கானின்கண் நீரும் கலந்து கடினமாய்த்
தேனின்கண் ஐந்தும் செறிந்து அஞ்சு பூதமாய்ப்
பூவின்கண் நின்று பொருந்தும் புவனமே.

மானின்கண் வானாகி [1]வாயு வளர்ந்தனற்[2]
கானின்க ணீருங் கலந்து கடினமாய்த்
தேனின்க ணைந்துஞ் செறிந்தஞ்சு பூதமாய்ப்
[3]பூவின்க ணின்று பொருந்தும் புவனமே. (5)

வேறு பாடம்: 1. வாரி (பதிப்) 2. வளர்ந்திடுங் (இ ஊ); வளந்தன (அ ஈ) I 3. பூணின்க (ப்ா 6)

கருத்து: மகத்து என்னும் பிரகிருதி மாயையிலிருந்து ஐம்பூதங்களும் தோன்றும்.

மான் - பிரகிருதி. அனல்கான் - செறிந்த தீ. பூ - பூமி.

குறிப்பு: இதுவரை விளக்கிய 36 தத்துவங்களையும் காட்டும் விளக்கப் படம் இணைக்கப்பட்டுள்ளது.

படைப்பவன் சிவனே

197. புவனம் படைப்பார் ஒருவன் ஒருத்தி
புவனம் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர்
புவனம் படைப்பானும் பூமிசை ஆயன்
புவனம் படைப்பான் அப்புண்ணியன் தானே.

புவனம் படைப்பார் ஒருவன் ஒருத்தி
புவனம் படைப்பார்க்குப் புத்திர ரைவர்
புவனம் படைப்பானும் [1]பூமிசை யாயன்
புவனம் [2]படைப்பானப் புண்ணியன் றானே. (6)

வேறு பாடம்: 1. பூமிசை யானாய் (எ) IV. 2. படைப்பானும் (ஆ இ ஊ) படைப்பான் (ஒ) I.

கருத்து: புவனங்களைப் படைப்போர் சத்தியும், சிவனுமே. அவர்கட்குச் சதாசிவன், மாயேச்சுரன், உருத்திரன், மால், அயன் எனப் புதல்வர் ஐவர். சிவனது ஏவலின்படியே பிரமன் படைப்புத் தொழிலைச் செய்கின்றான். எனவே உண்மையிற் படைப்போன் சிவனே.

அயன் எனற் பாலது ஆயன் என நீட்டல் விகாரம் பெற்றது.

எங்கும் சத்தி

198. **புண்ணிய நந்தி பொருந்தும் உலகு எங்கும்**
மண்இயல்பு ஆகி வளர்ந்திடும் சத்தியும்
தண்இயல்பு ஆகி, தரணி முழுதுமாய்,
கண்இயல்பு ஆகிக் கலந்து எழும் பூவிலே.

புண்ணிய நந்தி பொருந்து முலகெங்குந்
[1]மண்ணியல் பாகி வளர்ந்திடுஞ் சத்தியுந்
[2]தண்ணியல் பாகித் தரணி முழுதுமாய்க்
[3]கண்ணியல் பாகிக் கலந்தெழும் பூவிலே. (7)

வேறு பாடம்: 1. தண்ணியமானை வளர்த்திடுஞ் (த) 2. கண்ணியல்பாகக் கலவி முழுதுமாய் (த) 3. மண்ணியல்பாக மலர்ந்தெழும் (த)

கருத்து: நந்தி வியாபித்திருக்கும் உலகம் எங்கும், மண்ணில் அதன் இயல்பாகவும், பிற பூதங்களில், அவ்வவற்றின் இயல்பாகவும் சத்தி, தன் அருளால் கலந்திருக்கின்றாள்.

கண் இயல்பு - கருதும் தன்மை. வினைத்தொகை. பூ - பூமி.

ஐம்பூத இயல்பு

199. **நீரகத்து இன்பம் பிறக்கும், நெருப்பு இடை**
காயத்தில் சோதி பிறக்கும், அக்காற்று இடை
ஓர்வு உடை நல் உயிர், பாதம் ஒலி சத்தி
நீர் இடை மண்ணின் நிலை பிறப்பு ஆமே.

நீரகத் தின்பம் பிறக்கு நெருப்பிடை
[1]காயத்திற் சோதி பிறக்குமக் காற்றிடை
யோர்வுடை நல்லுயிர் பாத மொலிசத்தி
நீரிடை மண்ணின் [2]னிலைபிறப் பாமே. (8)

வேறு பாடம்: 1. காரகத்திற் (பா 3) காய்கதிர்ச் (த) 2. னிலைப் பிறப் (த)

கருத்து: பூதங்களின் இயல்புகளாவன: நீரில் சுவை, நெருப்பில் ஒளி, காற்றில் ஊறு, ஆகாயத்தில் ஒலி, மண்ணில் திண்மை.

இன்பம் - சுவை. காயம் - உடம்பு. ஓர்வு - அறிவு. பாதம் - ஆகாயம். நிலை - திண்மை.

காரணக் கடவுளர்

200. உண்டு உலகு ஏழும் உமிழ்ந்தான் உடன் ஆகி
அண்டத்து அமரர் தலைவனும் ஆதியும்
கண்டச் சதுமுகக் காரணன் தன்னொடும்
பண்டு இவ்வுலகம் படைக்கும் பொருளே.

உண்டுல கேழு முமிழ்ந்தா னுடனாகி
யண்டத் தமரர் [1]தலைவனு மாதியுங்
கண்டச் சதுமுகக் காரணன் றன்னொடும்
பண்டிவ் வுலகம் படைக்கும் பொருளே. (9)

வேறு பாடம்: 1. தலைவனா (த)

கருத்து: உருத்திரன், மால், பிரமன் என்னும் காரணக் கடவுளர் மூலம் பரம்பொருளே முத்தொழிலும் செய்கின்றான்.

உமிழ்ந்தான் - மால். அமரர் தலைவன் - உருத்திரன். கண்டம் - எல்லை; ஆயுள் எல்லை. சதுமுகன் - பிரமன். இம்மூவரும் காரணக் கடவுளர். பொருள் - பரம்பொருள். காரணக் கடவுளரையும் படைப்பவன் பரம்பொருளே.

201. ஓங்கு பெருங்கட லுள்ளுறு வானொடும்
பாங்கார் கயிலைப் பராபரன் றானும்
வீங்குங் கமல மலர்மிசை மேலய
னாங்குயிர் வைக்கு மதுவுணர்ந் தானே. (அ, ஔ)

எங்கும் நிறைந்தவன்

202. காரணன் அன்பில் கலந்து எங்கும் நின்றவன்
நாரணன் நின்ற நடுவுடலாய் நிற்கும்;
பார்அணன் அன்பின் பதம்செய்யும் நான்முகன்
ஆரணமாய் உலகாய் அமர்ந்தானே.

காரண னன்பிற் கலந்தெங்கு நின்றவ
னாரண [1]னின்ற நடுவுட லாய்நிற்கும்
[2]பாரண னன்பிற் பதஞ்செய்யு நான்முக
னாரண மாயுல காயமர்ந் தானே. (10)

வேறு பாடம்: 1. னென்று (த) 2. பாரணலன்பிற் (த)

கருத்து: சிவனே எங்கும் வியாபித்தவன். தூலவுடம்பு, நுண்ணுடம்பு, குணவுடம்பு, கஞ்சுக உடம்பு, காரணவுடம்பு என்ற ஐவகை உடம்புகளுள், முதல் மூன்றில் மட்டும் இருப்பவன் மால். பிரமனோ, முதல் உடம்பில் மட்டும், பிருதிவி தத்துவ அதிபதியாக உள்ளான்.

ஆரணம் - வேதம்.

பிரமனுக்குள்ளே

203. பயன் எளிதாம் பருமா மணி செய்ய
நயன் எளிது ஆகிய நம்பன் ஒன்று உண்டு;
அயன் ஒளியாய் இருந்து அங்கே படைக்கும்
பயன் எளிது ஆம் வயணம் தெளிந்தேனே.

பயனெளி தாம்பரு மாமணி செய்ய
நயனெளி தாகிய [1]நம்பனொன் றுண்டு
வயனொளி யாயிருந் தங்கே படைக்கும்
பயனெளி தாம்வய ணந்தெளிந் தேனே. (11)

வேறு பாடம்: 1. நம்பவொன் (த)

கருத்து: பிரமன் படைப்பாற்றலுடன் உலகங்களைப் படைத்தற்கு என்ன காரணம் என்பதை அறிந்தேன். பெரிய இரத்தினம் போன்ற சிவபெருமான் அவனை அதிட்டித்து நிற்கிறான். அவன் தன்னை விரும்புபவர்க்கு எளிதாக இன்பம் தருபவன்.

நயன் - நேர்மை. வயணம் - காரணம். ஒளி - அறிவாற்றல். நம்பன் என ஓர் உண்மை உண்டு என்க.

மாயையினை இயக்குபவன்

204. போக்கும் வரவும் புனிதன் அருள் புரிந்து
ஆக்கமும் சிந்தையது ஆகின்ற காலத்து
மேக்கு மிகநின்ற எட்டுத் திசையொடும்
தாக்கும் கலக்கும் தயாபரன் தானே.

போக்கும் வரவும் புனித னருள்புரிந்
தாக்கமுஞ் சிந்தைய [1]தாகின்ற காலத்து
மேக்கு [2]மிகநின்ற வெட்டுத் திசையொடுந்
தாக்குங் கலக்குந் தயாபரன் றானே. (12)

வேறு பாடம்: 1. வாகின்ற (த) 2. முதனின்ற (பா 6).

கருத்து: சிவபெருமான் உயிர்களின் பொருட்டுப் படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய தொழில்களைச் சங்கற்பித்து, மாயையில் நின்று அதனைத் தொழிற்படுத்துவான்.

வரவு - படைத்தல். போக்கு - அழித்தல். ஆக்கம் - காத்தல். இவை ஒவ்வொன்றையும் தனித் தனிக் காலத்தில் இறைவன் சங்கற்பித்தலால் 'சிந்தையது' என ஒருமை கூறினார். மேக்கு - உயரம்.

என் உடம்பில் நிற்கின்றான்.

205. நின்ற உயிர் ஆக்கும் நிமலன், என் ஆருயிர்
ஒன்று உயிர் ஆக்கும் அளவை உடல் உற
முன் துயர் ஆக்கும் உடற்கும் துணையதா
நன்று உயிர்ப்பானே நடுவு நின்றானே.

நின்றுயி ராக்கு நிமலனென் னாருயி
ரொன்றுயி ராக்கு மளவை யுடலுற
[1]முன்றுய ராக்கு முடற்குந் துணையதா
நன்றுயிர்ப் பானே நடுவுநின் றானே. (13)

வேறு பாடம்: 1. முன்றுயி (பா 3); முன்னுயி (பதிப்)

கருத்து: எல்லா உயிர்களையும் படைத்த இறைவன் என்னையும் படைத்து, இவ்வுடம்பிலேயே, என் உயிருடன் ஒன்றி நிற்கும் காலத்தில், யோகசாதனைக்கு முன்பு துன்பம் தந்த இதே உடம்பு, அதன் பின்பு நன்மை தரும் வகையில், பிராண வாயுவை நல்ல நெறியில் இயங்கச் செய்து, சுழுமுனை நாடியில் விளங்குவான்.

ஆக்கும் - (1 ஆம் அடி) படைக்கும். ஒன்று உயிர் ஆக்கும் அளவை - என் உயிருடன் ஒன்றி நிற்கும் காலத்தில். உடல் உற - இவ்வுடம்பிலேயே. முன் - யோகசாதனைக்கு முன். துயர் ஆக்கும் - துன்பம் தந்த. துணையதா - துணையாக. நன்று உயிர்ப்பான் - பிராண வாயுவை நல்ல நெறியில் இயங்கச் செய்வான். நடுவு நின்றான் - சுழுமுனை நாடியில் விளங்குவான்.

யாவர் உடம்பிலும் அவனே

206. ஆகின்ற தன்மை இல் அக்கு அணி கொன்றையன்
வேகின்ற செம்பொனின் மேல் அணி மேனியன்
போகின்ற சீவன் புகுந்த உடலாய் உளன்
ஆகின்ற தன்மை செய் ஆண்தகையானே.

ஆகின்ற தன்மையி லக்கணி கொன்றையன்
வேகின்ற செம்பொனின் மேலணி மேனியன்
போகின்ற சீவன் புகுந்துட லாயுள
னாகின்ற தன்மைசெய் யாண்டகை யானே. (14)

கருத்து: பிறப்பில்லாதவனும், கபாலமாலையும், கொன்றை மாலையும் அணிந்தவனும், பொன் ஒத்த மேனியனும் ஆகிய சிவபிரான், நிலை நில்லாதது ஆகிய, உயிர் புகுந்த உடலாகவும் நின்று, நன்மை செய்கின்றான்.

ஆகின்ற தன்மை இல் - பிறப்பு இல்லாத. அக்கு - எலும்பு மாலை. மேல் அணி - மிகுதியான அழகுடைய. ஆகின்ற தன்மை (4 ஆம் அடி) நன்மை எய்துகின்ற; ஆக்கம் - நன்மை.

பிறப்பும் முத்தியும்

207. ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றார்;
இருவர் விளையாட்டும் எல்லாம் விளைக்கும்;
பருவங்கள் தோறும் பயன் பல ஆன;
திரு ஒன்றில், செய்கை செகம்முற்றும் ஆமே.

ஒருவ னொருத்தி விளையாட லுற்றா
ரிருவர் விளையாட்டு மெல்லாம் விளைக்கும்[1]
பருவங்க [2]டோறும் [3]பயன்பல வான
[4]திருவொன்றிற் செய்கை செகமுற்று மாமே. (15)

வேறு பாடம்: 1. விளக்கும் (அ) I. 2. ளேறும் (பா 3); ளென்று (பா 6) 3. பயப்பலவாந் (பா 2) 4. திருவொன்றின் (பா 2).

கருத்து: உலகப் படைப்பு சிவசத்திகளுக்கு ஒரு விளையாட்டு. ஆனால் அதுதான் உயிர்களுக்குப் பந்தத்தையும் வீடுபேற்றிற்கு வழியையும் உண்டாக்குகின்றது. இவ்விரண்டு நிலைகளுக்கும் இடையே, உயிர்களின் பக்குவத்திற்கு ஏற்ப, அவற்றுக்கு இப்படைப்பின் பயன் பலவகையாக, பல தரத்ததாக இருக்கின்றது. ஏதேனும் ஓர் உயிர் வீடுபேற்றை அடையுமானால், அதன்அளவில் உலகப் படைப்பு முதலியவை முடிந்துவிடும். அதாவது அது பிறவி வட்டத்தைக் கடந்துவிடும்.

திரு - வீடுபேறு. ஒன்றில் - பொருந்தினால். செகம் முற்றும் - செகச் செய்கை முடியும்; பிறவி வட்டம் முடியும்.

மூவருக்குள் அவன்

208. புகுந்து அறிவான் புவனாபதி அண்ணல்
புகுந்து அறிவான் புரி சக்கரத்து அண்ணல்
புகுந்து அறிவான் மலர் மேல் உறை புத்தேள்
புகுந்து அறியும் உழக்கு ஆகி நின்றாரே.

புகுந்தறி வான்புவ னாபதி யண்ணல்
புகுந்தறி வான்புரி சக்கரத் தண்ணல்
புகுந்தறி வான்மலர் மேலுறை புத்தேள்
புகுந்தறி [1]யும்முழக் காகிநின் றாரே. (16)

வேறு பாடம்: 1. முடிக்காகி நின்றானே. (இ) I.

கருத்து: சிவபரம்பொருள் மூவர்க்குள்ளும் புகுந்து அவரவர் தொழிலைச் செய்விக்கின்றான்.

புவனாபதி - உருத்திரன். சக்கரத்து அண்ணல் - திருமால். புத்தேள் - பிரமன். உழக்கு - சிற்றளவு.

கடவுளர் இருவகை

209. ஆணவசத்தியும் ஆம் அதில் ஐவரும்
காரிய காரண ஈசர் கடைமுறை
பேணிய ஐந்தொழிலால் விந்துவில் பிறந்து
ஆணவம் நீங்காதவர் எனல் ஆகுமே.

ஆணவ சத்தியு மாமதி லைவருங்
[1]காரிய காரண வீசர் கடைமுறை
பேணிய வைந்தொழி லால்விந்து விற்பிறந்
தாணவ நீங்கா தவரென லாகுமே. (17)

வேறு பாடம்: 1. காணிய (ஈ) IV; காணியர் (த)

கருத்து: ஆணவ மலம் நீங்காத கடவுளர் இரண்டு வகை. ஒரு வகை, காரியக் கடவுளர். ஒரு வகை, காரணக் கடவுளர். முதல்வகை, அயன் திருமால், உருத்திரன், சீகண்டர், அனந்தர் என்ற ஐவர். இரண்டாம் வகை, அணுபட்ச அயன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்ற ஐவர்.

மாயையிலிருந்து. . .

210. உற்ற முப்பால் ஒன்று மாயாள் உதயமாம்
மற்றைய மூன்றும் மாமாயோதயம் விந்து
பெற்ற அந்நாதம் பரையில் பிறத்தலால்
துற்ற பரசிவன் தொல் விளையாட்டு அதே.

உற்றமுப் [1]பாலொன்று மாயா ளுதயமா
மற்றைய [2]மூன்றுமா மாயோ தயம்விந்து
பெற்றவந் நாதம் பரையிற் பிறத்தலாற்
றுற்ற பரசிவன் றொல்விளை யாட்டதே[3]. (18)

வேறு பாடம்: 1. பாலொன் றுமையா (ஒ) (பா 6) I. 2. மூன்று (தி) (வ) 3. டிதே (தி) (வ) (த).

கருத்து: மாயை மூன்று; சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என. இவற்றுள் அசுத்த மாயையிலிருந்து பிரகிருதி மாயையும் அதினின்று ஆன்மதத்துவம் 24ம் பிறக்கும். மாயை என்பது சுத்த மாயை. அதில் சாதாக்கியம், மாயேச்சுரம், சுத்தவித்தை என்ற

மூன்றும் பிறக்கும். அதற்குமேல் உள்ள விந்து நாதத்தில் பிறக்கும். நாதம் பராசத்தியிடம் பிறக்கும். ஆதலால் எல்லாம் சத்தி-சிவன் விளையாட்டாகும்.

முப்பால் - மூன்று பகுதி; சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என்பவை. முப்பகுதியாக உதயமாவது ஒன்றாகிய மாயை. மாயை விந்து உதயம் எனக் கூட்டுக.

ஐம்பூதத் தெய்வங்கள்

211. ஆகாயம் ஆதி சதாசிவர் ஆதி என்
போகாத சத்தியுள் போந்து, உடன் போந்தனர்
மாகாய ஈசன் அரன் மால் பிரமனாய்
ஆகாயம் பூமியும் காண அளித்தலே.

[1]ஆகாய மாதி சதாசிவ ராதியென்
போகாத சத்தியுட் போந்துடன் போந்தனர்
மாகாய வீச னரன்மால் பிரமனா
[2]யாகாயம் பூமியுங் காண வளித்தலே[3]. (19)

வேறு பாடம்: 1. ஆகம (அ) I. 2. மாகாயம் (எ) II. 3. யாகி யளித்ததே (இ) IV.

கருத்து: ஆகாயம், காற்று, தீ, நீர், நிலம் என்ற ஐம்பூதங்கட்கும் முறையே சதாசிவன், மயேசுரன், உருத்திரன், திருமால், பிரமன் என்ற ஐவரும் தலைவராக நின்று இயக்குவர்.

இவர் முன்பு கூறிய காரிய, காரணக் கடவுளரல்லர். சிவன் கொண்ட வடிவங்கள். போகாத - நித்தியமான. சத்தி - மாயாசத்தி.

சதாசிவன் - மனோன்மணி

212. அளியார் முக்கோணம் வயிந்தவம் தன்னில்
அளியார் திரிபுரையாம் அவளாலே
அளியார் சதாசிவம் ஆகி அமைவார்
அளியார் கருமங்கள் ஐந்தும் செய்வாரே.

அளியார்முக் கோணம் வயிந்தவந் தன்னி
லளியார் திரிபுரை யாமவ ளாலே[1]
யளியார் சதாசிவ மாகி யமைவா
[2]ரளியார் கருமங்க ளைந்துஞ்செய் வாரே[3]. (20)

வேறு பாடம்: 1. டானே (எ) IV. 2. ளளியார் (அ ஈ எ ஒ) I. 3. வாளே (அ) I.

கருத்து: முக்கோண வடிவம் உள்ள சுத்தமாயையில், சாதாக்கிய தத்துவத்தைத் தோற்றுவிப்பவள் திரிபுர சுந்தரி. இவள் சதாசிவனின் சத்தியாய், மனோன்மணியாய் நிற்க, இவர் ஐந்தொழிலும் செய்வர். இவளது சேர்க்கையால் தான் சிவன், சதாசிவன் ஆகின்றான்.

முக்கோணம் - விந்துவின் வடிவம். வயிந்தவம் - விந்து. திரிபுரையாம் - திரிபுர சுந்தரி வீற்றிருக்கிறாள்.

அவளே காரணி

213. வாரணி கொங்கை மனோன்மணி மங்கலி
காரணி, காரியம் ஆகிக் கலந்தவள்;
வாரணி, ஆரணியான அம்மோகினி
பூரணி, போதாதி போதமும் ஆமே.

வாரணி கொங்கை மனோன்மணி மங்கலி
[1]காரணி காரிய மாகிக் கலந்தவள்
வாரணி யாரணி [2]யானவம் மோகினி
பூரணி போதாதி போதமு மாமே. (21)

வேறு பாடம்: 1. காரண காரியமாக (எ) IV. 2. வானவ (இ); வானவர் (உ ஒ) (பா 6) I.

கருத்து: அத்திரிபுரையே மனோன்மணி. அவள் என்றும் சுமங்கலி. அனைத்திற்கும் காரணி. காரியத்திலும் கலந்து நிற்கின்றாள். உமை, வாணி, இலக்குமி, மகேசுவரி ஆகியவை அவள் பலநிலையில் கொள்ளும் பெயர்கள்.

மனோன்மணி சதாசிவனுடைய சத்தி. வாரணி - பெண்யானை; கணேசை. ஆரணி - வேத வடிவினள். போதாதி போதம் - பேரறிவு.

குறிப்பு: இதனை அடுத்துப் பதிப்புகளில் வரும் "நின்றது தானாய்" என்னும் பாடல் பின்னர்த் 'திரோபவம்' என்னும் இயலிலும் உள்ளது. அஃது அங்கு இருத்தலே பொருத்தமாதலின், இங்கு விடப்படுகிறது.

சிவனே மூவருமாய்...

214. ஒருவனுமே உலகு ஏழும் படைத்தான்
ஒருவனுமே உலகு ஏழும் அளந்தான்
ஒருவனுமே உலகு ஏழும் கடந்தான்
ஒருவனுமே உடலோடு உயிர் தானே.

ஒருவனு மேயுல கேழும் படைத்தா
னொருவனு மேயுல கேழு மளந்தா[1]
னொருவனு மேயுல [2]கேழுங் கடந்தா
னொருவனு மேயுட லோடுயிர் தானே. (22)

வேறு பாடம்: 1. மளித்தா (பா 2) (த) 2. கேழுந் துடைத்தா (பா 2)

கருத்து: படைத்தவன் ஆகிய பிரமனாகவும் ஏழுலகையும் அளந்த மாலாகவும், அவற்றை அழிக்கும் உருத்திரனாகவும் உள்ளவன் சிவனே.

குறிப்பு: ஏடுகளில் இப்பாடலும் அடுத்த பாடலும் முன்பின்னாக மாறியுள்ளன. இரண்டு சுவடிகளில் இப்பாடல் இல்லை.

படைப்பவன் அவனே

215. செந்தாமரை வண்ணன் தீவண்ணன் எம்மிறை
மஞ்சு ஆர் முகில்வண்ணன் மாயம்செய் பாசத்துக்
கொந்து ஆர் குழலியர் கூடிய கூட்டத்து
மைந்தார் பிறவி அமைத்து நின்றானே.

செந்தா மரைவண்ணன் [1]றீவண்ண னெம்மிறை
மஞ்சார் முகில்வண்ணன் மாயஞ்செய் பாசத்துக்[2]
கொந்தார் குழலியர் கூடிய கூட்டத்து
[3]மைந்தார் பிறவி [4]அமைத்துநின் றானே. (23)

வேறு பாடம்: 1. றீயவ (பா 6) 2. பாசத்துங் (த) 3. வைந்தார் (ப ா 6) 4. யறுத்துநின் (வ) (த)

கருத்து: எம் இறைவனே தாமரைமேல் வீற்றிருக்கும் பிரமன்; தீ நிறம் வாய்ந்த உருத்திரன்; மேக வண்ணம் உடைய திருமால். அவன் ஆணவமல நீக்கத்திற்காக, மாயையிலிருந்தும், ஆடவர், பெண்டிர் புணர்ச்சியைக் கொண்டும் படைப்புத் தொழிலை நடத்துகின்றான்.

மைந்தர் என்பது நீண்டது.

குறிப்பு. இதனையடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள "தேடுந் திசை" என்னும் பாடல் பின்னர்த் 'திதி' என்னும் இயலிலும் வருகிறது. அஃது அங்கு இருத்தலே பொருத்தமாதலின், இங்கு விடப்படுகின்றது.

சிவன், சத்தி கூடிச் செய்கின்றார்.

216. ஓர் ஆயமே உலகு ஏழும் படைப்பது
ஓர் ஆயமே உலகு ஏழும் நடப்பது
ஓர் ஆயமே உலகு ஏழும் இறப்பது
ஓர் ஆயமே உலகோடு உயிர் தானே.

ஓராய மேயுல கேழும் படைப்பது[1]
வோராய மேயுல கேழு நடப்பது[2]
வோராய மேயுல கேழு மிறப்பது[3]
வோராய மேயுட லோடுயிர் தானே. (24)

வேறு பாடம். 1. படைத்தது (அ ஈ எ ஒ) II; படைப்பதும் (தி) (த) (வ) 2. மளிப்பது (ஆ) (இ) IV; மளிப்பதும் (தி) (த) (உ) 3. துடைப்பதும் (தி) (த) (வ).

கருத்து: முத்தொழிலும் சிவ-சத்தி கூட்டாலேயே நடைபெறுகின்றன.

ஆயம் - கூட்டம்; சிவசத்திகள். நடப்பதற்கும் இறப்பதற்கும் காரணம் என்க.

ஐவருள் இருவர்

217. நாதன் ஒருவனும் நல்ல இருவரும்
கோது குலத்தொடு கூட்டிக் குழைத்தனர்;
ஏது பணி என்று இசையும் இருவருக்கு
ஆதி இவனே அருளுகின்றானே.

நாத னொருவனு நல்ல விருவருங்
கோது குலத்தொடு கூட்டிக் குழைத்தன[1]
[2]ரேது பணியென் றிசையு மிருவருக்[3]
காதி யிவனே யருளுகின் றானே. (25)

வேறு பாடம்: 1. குழைந்தன (அ) I. 2. வேது (அ ஈ) I. 3. மொருவருக் (பா 6).

கருத்து: சிவனும், மயேச்சுரனும், சதாசிவனும் சுத்தமாயை, அசுத்த மாயை என்னும் இரண்டையும் இயக்கினர். 'எம் பணி யாது' எனப் பணியும் திருமாலுக்கும் பிரமனுக்கும், முதல்வன் ஆகிய சிவனே, முறையே காத்தல், படைத்தல் - தொழில்களை அளிக்கின்றான்.

நாதன் - சிவன். இருவர் - சதாசிவன், மயேச்சுரன். கோது குலம்- சுத்தமாயை, அசுத்த மாயை. இருவர் (3 ஆம் அடி) - அயன், மால்.

குறிப்பு: இப்பாடல் 3 சுவடிகளில் இல்லை.

நம்பாதோர் அறியாதோரே

218. அப்பரிசு எண்பத்து நான்கு நூறாயிரம்
மெய்ப்பரிசு எய்தி விரிந்து உயிராய் நிற்கும்
அப்பரிசு ஏது என்று புகலும் மனிதர்கள்
அப்பரிசே இருள்மூடி நின்றாரே.

அப்பரி செண்பத்து நான்குநூ றாயிர
மெய்ப்பரி செய்தி விரிந்துயி ராய்நிற்கு
[1]மப்பரி சேதென்று புகலு மனிதர்க
[2]ளப்பரி சேயிருண் [3]மூடிநின் றாரே. (26)

வேறு பாடம்: 1. பொய்ப்பரி வெய்திப் (த); மப்பரிதீதென (பா 6) 2. ளிப்பரி (ஆ ஈ ஓ) I. 3. மூட நின்றாரே, (ஈ எ) IV.

கருத்து: இத்தன்மையாக 8400000 உயிர்வகைகள் உடம்புகள் பெற்று உலகில் பிறக்கின்றன. அதை நம்பாத மனிதர், அவ்வண்ணம் அறியாமை இருளில் இருக்கின்றனர்.

இங்குப் போல் அங்கும்

219. ஆதித்தன், சந்திரன், அங்கி, எண்பாலர்கள்
போதித்த வான், ஒலி, பொங்குளரி, நீர் புவி
வாதித்த சத்து ஆதி, வாக்கு மனஆதிகள்
ஓதுற்ற மாயையின் விந்துவின் உற்றதே.

ஆதித்தன் சந்திர னங்கியெண் பாலர்கள்[1]
போதித்த வானொலி பொங்கெரி நீர்புவி
வாதித்த சத்தாதி வாக்கு மனாதிக
ளோதுற்ற மாயையின் விந்துவி னுற்றதே. (27)

வேறு பாடம்: 1. எனப்பலர் (அ ஈ எ ஒ) (பா 6) II.

கருத்து: சூரியன், சந்திரன், அக்கினி, எட்டுத்திசைக் காவலர் ஆகியோரும் ஆகாயம், காற்று, தீ, நீர், நிலம், தன் மாத்திரைகள், ஐம்பொறிகள், கன்மேந்திரியங்கள், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் - முதலிய 31 தத்துவங்களும் (வித்தியா தத்துவம் 7 ஆன்ம தத்துவம் 24) அசுத்தமாயையில் உள்ளதே போல, சுத்த மாயையிலும் உள்ளமையை அறிக.

பாலர் - காப்பவர். ஒலி - காற்று. சத்த ஆதி - தன்மாத்திரைகள் ஐந்து. மன ஆதிகள் - அந்தக் கரணங்கள். விந்து - சுத்தமாயை. மாயையின் - அசுத்த மாயையிற் போல.

குறிப்பு: இப் பாடலுடன் 'சர்வ சிருட்டி' என்ற இயல் முற்றும் என்ற குறிப்பு 8 சுவடிகளில் உள்ளது.

17. திதி

ஒன்று கலந்து. . .

220. புகுந்துநின்றான் வெளியாய், இருள் ஆகிப்
புகுந்துநின்றான் புகழ்வாய், இகழ்வு ஆகிப்
புகுந்துநின்றான் உடலாய், உயிர் ஆகிப்
புகுந்துநின்றான் புந்தி மன்னி நின்றானே.

புகுந்துநின் றான்வெளி யாயிரு ளாகிப்
புகுந்துநின் [1]றான்புகழ் வாயிகழ் வாகிப்
புகுந்துநின் றானுட லாயுயி ராகிப்
புகுந்துநின் றான்புந்தி மன்னிநின் றானே. (1)

வேறு பாடம்: 1. றான்புகழா யிகழாகி (அ) IV.

கருத்து: எனது உடலில் புகுந்து, என் அறிவில் நிலையாக நின்ற சிவபெருமான், உயிர்கட்கு அறிவு விளக்கமாகவும் அறியாமை

யாகவும், புகழ்ச்சியாகவும் இகழ்ச்சியாகவும், உடலோடும் உயிரோடும் ஒன்றாயும் நிற்கின்றான். இவை அவனுடைய காத்தற் செயல்கள்.

குறிப்பு: 8 சுவடிகளில் இப்பாடலுடன் 'திதி' என்ற இயல் தொடங்குகிறது.

எங்கும் நிற்பவன்

221. தானே திசையொடு தேவருமாய் நிற்கும்
தானே உடல், உயிர், தத்துவமாய் நிற்கும்
தானே கடல், மலை, தாபரமாய் நிற்கும்
தானே உலகில் தலைவனும் ஆமே.

தானே திசையொடு தேவரு மாய்நிற்குந்
தானே யுடலுயிர் தத்துவ மாய்நிற்குந்
தானே கடல்மலை [1]தாபர மாய்நிற்குந்
தானே யுலகிற் றலைவனு மாமே. (2)

வேறு பாடம்: 1. தண்புனலாய் (அ); யாதியுமாய் (ஈ எ ஒ) (பா 3) II.

கருத்து: பரம்பொருளே பலராகியும் பல பொருளாகியும் நிற்கிறது. இஃது 'ஒன்றாதல்' என்னும் நிலை.

தாபரம் - நிலை உயிர்கள்.

அது அதுவாக . . .

222. உடலாய் உயிராய் உலகம் அது ஆகி,
கடலாய், கார்முகில் நீர்பொழி வான் ஆய்,
இடையாய், உலப்புஇலி, எங்கும் அது ஆகி,
அடையார் பெருவழி அண்ணல் நின்றானே.

உடலா யுயிரா யுலகம தாகிக்
கடலாய்க் கார்முகி னீர்பொழி வானா
யிடையா யுலப்பிலி யெங்கும தாகி[1]
[2]யடையார் பெருவழி யண்ணனின் றானே. (3)

வேறு பாடம்: 1. யெங்குந்தானாகி (எ) IV. 2. யடையாப் பெருவழி (ஆ) II; யடையார் பெருவிழி (எ) (இ) I.

கருத்து: உயிர்கள் அடைதற்குரிய பெருநெறியை அருளிய தலைவன், உலகப்பொருள்களில் அதுவதுவாக நிற்கிறான்.

பெருநெறி என்பது வீடுபேறு. 'அது அதுவாக நிற்றல்' என்பது 'ஒன்றாதல்'. வீடுபேற்றில் 'உடனாகி' நிற்கிறான். அவனே உயிரினால் உணரவியலாதவனாக, ஆனால் அதற்கு அறிவு காட்டுபவனாக - ' வேறாகி' - நிற்கிறான். இதுவே 'அத்வைதம்' என்பதற்குச் சைவம் கூறும் பொருள்.

இடை - ஆகாயம். உலப்பு - அழிதல். அது ஆகி - பொருளின் தன்மையாகி. அடை ஆர் - அடைதலை உடைய. அடை - முதனிலைத் தொழிற் பெயர். பெருவழி - பெரு நெறி.

சிந்திக்கும் செயலில் ...

223. தேடும் திசை எட்டும் சீவன் உடல் உயிர்
கூடும் பிறவிக் குணம் செய்த மாநந்தி
ஊடும் - அவர் தமது உள்ளத்துளே நின்று
நாடும் வழக்கமும் நான் அறிந்தேனே.

தேடுந் திசையெட்டுஞ் சீவ னுடலுயிர்
[1]கூடும் பிறவிக் குணஞ்செய்த மாநந்தி
யூடு மவர்தம துள்ளத்து ளேநின்று
நாடும் வழக்கமு நானறிந் தேனே. (4)

வேறு பாடம்: 1. கூடுமுணர்விற் (ஆ) IV; கூடுமரபிற் (தி)

கருத்து: எட்டுத்திசைகளிலும் பற்பல சீவர்களாக, உடலையும் உயிரையும் சேர்த்துப் படைக்கும் தொழிலைச் செய்த இறைவன், இறையியலோடு மாறுபடுகின்ற மக்களின் அறிவினுள்ளும் நின்று சிந்திக்கும் தொழிலைச் செய்கின்றான். யாவரது அறிவிலும் 'ஒன்றாகி' நிற்கின்றான். இஃது அவனது காத்தற் செய்கை.

ஊடும் - மாறுபடும். நாடும் - விரும்பிக் காக்கும்.

குறிப்பு: 6 சுவடிகளில் இப்பாடல் 'சர்வசிருட்டி' என்ற இயலில் உள்ளது. 2 சுவடிகளில் இவ்வியலில் 4 ஆம் பாடலாக உள்ளது. ஒரு சுவடியில் இரு இயல்களிலும் உள்ளது. தருமபுரப் பதிப்பில் 'சருவ சிருட்டியில்' உள்ளது. ஏனைய பதிப்புகளில் இரு இயல்களிலும் உள்ளது. இங்கு இருப்பதே பொருத்தம்.

தேவராய் நன்மை தருவான்

224. தான் ஒரு காலம் தனிச்சுடராய் நிற்கும்
தான் ஒரு கால் சண்ட மாருதமாய் நிற்கும்
தான் ஒரு காலம் தண் மா மழையாய் நிற்கும்
தான் ஒரு காலம் தண்மாயனும் ஆமே.

தானொரு காலந் தனிச்சுட ராய்நிற்குந்
தானொரு காற்சண்ட மாருத மாய்நிற்குந்
தானொரு காலந்தண் [1]மாமழை யாய்நிற்குந்
தானொரு காலந்தண் மாயனு மாமே. (5)

வேறு பாடம்: 1. பார் மழை (இ) IV.

கருத்து: இறைவன் உயிர்களின் பக்குவநிலைக்கு ஏற்பச் சூரியனாக விளங்குவான். காற்றுக் கடவுளாகத் திகழ்வான். இந்திரனாக இருப்பான். திருமாலாகப் பொலிவான்.

மாயன் - திருமால்; காத்தற் கடவுள்.

பண்புகளாக ...

225. அன்பும் அறிவும் அடக்கமுமாய் நிற்கும்
இன்பமும் இன்பக் கலவியுமாய் நிற்கும்
முன்பு உறு காலமும் ஊழியுமாய் நிற்கும்
அன்பு உற ஐந்தில் அமர்ந்து நின்றானே.

அன்பு மறிவு மடக்கமு மாய்நிற்கு
மின்பமு மின்பக் கலவியு மாய்நிற்கு
முன்புறு காலமு மூழியு மாய்நிற்கு
மன்புற வைந்தி [1]லமர்ந்துநின் றானே. (6)

வேறு பாடம்: 1. லமைந்து (ஆ) IV.

கருத்து: ஐம்பூதங்களிலும் அவ்வவற்றின் இயல்பாய் நிற்கும் இறைவன், மக்களிடத்தும் அன்பு, அறிவு, அடக்கம் என்ற நற்பண்புகளாக நிற்கிறான். இவற்றுள் அன்பு பக்தியும், அறிவு ஞானமும், அடக்கம் தவமும் உண்டாக வழி வகுக்கும். இவை உண்டாயின் இன்பம் எய்தும். பேரின்பம் தரக்கூடிய சிவச் சேர்க்கையும் எய்தும். காலங்களை நடத்துபவனாயும் கால முடிவை உண்டாக்குபவனாகவும் இறைவன் இருக்கின்றான்.

முன்புறு காலம் - தோற்றக் காலம். ஐந்து - ஐம்பூதம். எண்ணலளவை ஆகு பெயர்.

வாழ்க்கை தருபவன்

226. உற்று வனைவான் அவனே உலகினை;
பெற்று வனைவான் அவனே பிறவியைச்;
சுற்றிய சாலும் குடமும் சிறுதூதை
மற்றும் அவனே வனைய வல்லானே.

உற்று வனைவா னவனே யுலகினைப்
பெற்று வனைவா னவனே பிறவியைச்
சுற்றிய சாலுங் குடமுஞ் சிறுதூதை
மற்று மவனே வனையவல் லானே. (7)

கருத்து: உயிர்களைப் படைப்பவனும் அவனே. உயிரினங்களுக்கு வாழ்க்கையை வகுப்பவனும் அவனே. பேருயிர்களை மட்டும் அன்றிச் சிற்றுயிர்களையும் அவன் படைத்துக் காக்கின்றான்.

வனைவான் (2 ஆம் அடி) - காப்பவன். சால், குடம், தூதை - சிறிய உயிரினங்களைக் குறிக்கும் உருவகங்கள்.

உள்ளுணர்வின் ஒளி

227. உள் உயிர்ப்பு ஆய், உடலாகி நின்றான் நந்தி
வெள்ளுயிர் ஆகும் வெளியான் இலங்கு ஒளி
உள்உயிர்க்கும் உணர்வே உடலுள் பரம்
தள் உயிரா வண்ணம் தாங்கிநின்றானே.

உள்ளுயிர்ப் பாயுட லாகிநின் றானந்தி
வெள்ளுயி ராகும் [1]வெளியா னிலங்கொளி
யுள்ளுயிர்க் கும்முணர் வேயுட லுட்பரந்
தள்ளுயி [2]ராவண்ணந் தாங்கிநின் றானே. (8)

வேறு பாடம்: 1. வெளிவா (ஈ) வெளியாய் நிலங்கொளி (இ) I; வெளியாய் விளங்கொளி (த) 2. ராம் வண்ணந் (த)

கருத்து: மூச்சுக்காற்றாக, உடலாக, ஆன்மாவாக-கலந்து நிற்பவன் இறைவன். ஆன்மாவின் உள்ளுணர்வாக ஒளியுடன் திகழ்வதே உடலினுள் திகழும் மேலான பொருள். அதனை அறியாமல் நின்ற ஆன்மா, பின்பு அறிந்து, வாழும் வண்ணம் இறைவன் காத்தல் தொழிலைச் செய்கின்றான்.

உயிர்ப்பு - மூச்சுக் காற்று. வெள் உயிர் - தூய்மையான ஆன்மா. உயிர்க்கும் உள் உணர்வே எனக் கூட்டுக. உடலுள் பரம் - உடலில் பொதிந்துள்ள உயிர். தள் உயிரா வண்ணம் - தள்ளப்படாதவாறு. “உயிர்க்கும் ஒளி இலங்கு உள் உணர்வு” எனக் கூட்டுக.

யோகநெறி தந்தான்

228. தாங்க அருந் தன்மையும் தான் அவை பல் உயிர்
வாங்கிய காலத்து மற்றோர் பிறிது இல்லை
ஓங்கி எழுமைக்கும் யோகாந்தம் அவ்வழி
தாங்கி நின்றானும் அத்தாரணி தானே.

தாங்கருந் தன்மையுந் தானவை பல்லுயிர்
வாங்கிய காலத்து [1]மற்றோர் பிறிதில்லை
யோங்கி யெழுமைக்கும் யோகாந்த மவ்வழி
தாங்கிநின் றானுமத் தாரணி தானே. (9)

வேறு பாடம்: 1. மாற்றோர் (த)

கருத்து: இறைவன் உயிர்களை எவ்வண்ணம் தாங்குகிறான் எனின், ஏழுபிறப்பிலும் உதவும் யோகநெறியை உணர்த்தித் தாங்குகிறான். அவன் உருத்திரனாக நின்று, உயிர்களை ஒடுக்கும் போது, அவனைத் தடுப்பவர் இல்லை.

பல்லுயிர் தாங்கருந் தன்மை இல்லை. பல்லுயிர் வாங்கிய காலத்து மற்றோர் தன்மை பிறிது இல்லை எனக் கூட்டுக.

ஒன்றி நிற்கலாம்

229. அணுகினும் சேயவன் அங்கியின் கூடி
நணுகினும் ஞானக் கொழுந்து ஒன்று நல்கும்
பணிகினும் பார்மிசைப் பல்லுயிர் ஆகித்
தணிகினும் மன் உடல் அண்ணல் செய்வானே.

அணுகினுஞ் சேயவ னங்கியிற் கூடி[1]
நணுகினு ஞானக் கொழுந்தொன்று நல்கும்
பணிகினும் பார்மிசைப் பல்லுயி ராகித்
தணிகினு மன்னுட லண்ணல்செய் வானே. (10)

வேறு பாடம்: 1. கூடும் (அ ஆ இ ஈ ஒ) II. 2. மண்ணுட (தி)

கருத்து: இறைவன் உயிர்களுடன் 'ஒன்றாய்' இருப்பினும் அவற்றினும் வேறாய், அவற்றால் அணுக இயலாது நிற்பவன். யோக சாதனையில், மூலக்கனலுடன் உயிருணர்வு சேரப்பெற்று, அவனைச் சோதிவடிவில் காணப்பெற்றால், முடிவான ஞானம் என்பதை, அருளில் ஒன்றுதலை ('சிவம் ஆவதை') நல்குவான். அஃது ஒன்றுதலே அன்றி 'ஒன்றாதல்' அன்று. அவனை வணங்கினாலும், பல சீவராசிகளாகப் பிறந்து ஆணவ மலம் நீங்கப் பெற்றாலும், அவன் நல்குவது, 'சிவம் ஆகி நின்று', சிவானுபவத்தைப் பெறும் ஞானவுடம்பே.

சிவானுபவம் தரும் பொழுது உயிருடன் 'உடனாய்' நிற்கிறான். அவன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்பதே அத்துவிதம்.

சேயவன் - தொலைவில் உள்ளவன். அங்கி - மூலக் கனல். பல் உயிராகிப் பணியினும் என மாறுக. ஒன்று - முதனிலைத் தொழிற்பெயர்.

குறிப்பு: 8 சுவடிகளில் இப்பாடலுடன் 'திதி' என்ற இயல் முற்றும் என்ற குறிப்பு உள்ளது.

18. சங்காரம்

நெருப்பே ஆயுதம்

230. அங்கி செய்து ஈசன் அகல்இடம் சுட்டது
அங்கி செய்து ஈசன் அலைகடல் சுட்டது
அங்கி செய்து ஈசன் அசுரரைச் சுட்டது
அங்கி அவ் ஈசற்குக் கை அம்பு தானே.

அங்கிசெய் தீச னகலிடஞ் சுட்டது[1]
வங்கிசெய் தீச னலைகடல் சுட்டது[2]
வங்கிசெய் தீச னசுரரைச் சுட்டது[3]
வங்கியவ் வீசற்குக் கையம்பு தானே. (1)

வேறு பாடம்: அடிகள் 1, 2, 3 - சுட்டதவ் (த); சுட்டதால் (ஒ) III.

கருத்து: இறைவன் ஊழித்தீயை உண்டாக்கி உலகங்களையும் பெரும் புறக்கடலையும், அசுரர்களையும் அழிக்கின்றான். ஊழித்தீயே அவனது படைக்கலம்.

அங்கி - தீ. முதல் மூன்றடி ஈற்றுச் சீர்களில் சுட்டது என்னும் சொல்லை ஆசிரியர் செய்யுளுக்காக முற்றுகர வீற்றுச் சொல்லாகக் கொண்டார் போலும்.

மலையைக் காணோம்!

231. இலயங்கள் மூன்றிலும் ஒன்று கற்பாந்தம்;
நிலை அன்று இழிந்தமை நின்று உணர்ந்தேன் நான்;
உலை தந்த மெல்-அரி போலும் உலகம்
மலைதந்த மாநிலம் தான் வெந்ததுவே.

இலயங்கண் மூன்றினு [1]மொன்றுகற் பாந்த
நிலையன் [2]றிழிந்தமை நின்றுணர்ந் தேனா
[3]னுலைதந்த மெல்லரி போலு முலக
மலைதந்த மாநிலந் தான்வெந் ததுவே. (2)

வேறு பாடம்: 1. ளொன்றுகற் (த) 2. றழிந்தமை (த) 3. லுலைதந்த (தி).

கருத்து: அழித்தல் என்பதற்கு 'இலயம்' என்றும் பெயர். மூன்று இலயங்களுள் 'கற்பாந்தம்' என்பது ஒன்று. அது காலத்தை முடித்தல். அவ்வூழிக் காலத்தில் உலகங்களின் நிலை, 'நிலைத்தல்' என்ற தன்மையிலிருந்து தாழ்ந்தமையை, அதாவது அழிந்தமையை - நான் அருள் நிலையில் நின்று உணர்ந்தேன். அன்று உலகங்கள் உலையில் இட்ட அரிசி போல நிலைமாறும். மலைகளோடு சேர்ந்து மற்று உள்ளனவெல்லாம் வெந்தழியும்.

மாறா நிலைக்கு மலையையும் மாறும் நிலைக்கு உலையிட்ட அரிசியையும் காட்டிய நயம் உணர்க.

இலயம் - பிரளயம். அரி - அரிசி.

எல்லாம் அழியும்

232. பதம் செய்யும் பாரும் பனிவரை எட்டும்
உதம் செய்யும் ஏழ்கடல் ஓதம் முதலாம்
குதம் செய்யும் அங்கி கொளுவி ஆகாயம்
விதம் செய்யும்; நெஞ்சில் வியப்பு இல்லை-தானே.

பதஞ்செய்யும் பாரும் பனிவரை யெட்டு
முதஞ்செய்யு மேழ்கட லோத முதலாங்
குதஞ்செய்யு மங்கி கொளுவியா காயம்[1]
விதஞ்செய்யு நெஞ்சில் வியப்பில்லை தானே. (3)

வேறு பாடம்: 1. காச (த)

கருத்து: உயிர்கட்கு வாழிடமாய் உள்ள ஊர்களும், மலைகளும், மகிழ்ச்சி தரும் கடல்களும் ஊழித்தீயால் ஆகாயம் போல உருவற்றுப் போகுமாறு அழிக்கப்படும். இறைவனின் பேராற்றலை நோக்க, இது வியப்பு அன்று.

பதம் - இடம். உதம் - மகிழ்ச்சி. குதம் செய்யும் அங்கி - மூலக்கனல். விதம் - வகை.

மூலக்கனல்

233. கொண்டல் வரைநின்று இழிந்த குலக்கொடி
அண்டத்துள் ஊறி இருந்து எண் திசை ஆதி
ஒண் திண் பதம் செய்த ஓம் என்ற அப்புறக்
குண்டத்தின் மேல் அங்கி கோலிக்கொண்டாளே.

கொண்டல் வரைநின் றிழிந்த குலக்கொடி
யண்டத்து ளூறி யிருந்தெண் டிசையாதி[1]
[2]ஒண்டிண் பதஞ்செய்த வோமென்ற வப்புறக்
குண்டத்தின் மேலங்கி கோலிக்கொண் டாளே[3]. (4)

வேறு பாடம்: 1. டிரையாகி (இ) I. 2. ஒன்றின் (எ) I. 3. கொண்டானே (ஆ இ ஈ எ ஒ) II.

கருத்து: மலையிலிருந்து இறங்கிவந்த பராசத்தி, அண்டத்தில் கலந்து, எட்டுத்திசைகளையும் பொருள்களையும் படைத்த பிரணவ மந்திரம், மனித உடம்பில் மூலாதாரத்தில் அமைய, அதையே ஓமகுண்டம் ஆக்கி, அதில், மேல் நோக்கி எழவல்ல கனலாக உள்ளாள்.

மலை என்றது தலை உச்சியை.

ஒடுக்கம்: வகைகள்

234. நித்த சங்காரமும் நீடு இளைப்பு ஆற்றலின்
வைத்த சங்காரமும் மன்னும் அனாதியில்
சுத்த சங்காரமும் தோயாப் பரன் அருள்
வைத்த சங்காரமும் நாலாம் மதிக்கிலே.

நித்தசங் காரமு நீடிளைப் பாற்றலின்
வைத்தசங் காரமு மன்னும னாதியிற்
சுத்தசங் காரமுந் தோயாப் பரனருள்
வைத்தசங் காரமு நாலா மதிக்கிலே. (5)

கருத்து: சங்காரம் நான்கு வகை. 1. நித்த சங்காரம், 2. சங்காரம், 3. சுத்த சங்காரம், 4. உய்த்த சங்காரம். இப்பாடலில் பிறப்புக்குரிய சங்காரம் சொல்லப்பட்டது. நாள்தோறும் நடக்கும் சங்காரம் இளைப்பாற்றும் உறக்கம். எனவே, இறப்பு என்பது பிறவியின் இளைப்பை ஆற்றும் பேருறக்கமாக அனாதிகாலமாக உள்ளது. சுத்த சங்காரத்தில் திருவருள் வாய்ப்பதில்லை. எனவே அதற்கு மற்றும் ஒரு சங்காரம் வேண்டும். அதைச்சேர்க்க, சங்காரம் நான்காம்.

சுத்த சங்காரம் - சுத்தமாயையின் ஒடுக்கம்.

செயல் ஒடுங்குதல்

235. நித்த சங்காரம் உறக்கத்து நீள் மூடம்;
வைத்த சங்காரமும் சாக்கிராதீதம் ஆம்;
சுத்த சங்காரம் தொழில் அற்ற கேவலம்;
உய்த்த சங்காரம் பரன் அருள் உண்மையே.

நித்தசங் கார முறக்கத்து நீண்மூடம்
வைத்தசங் காரமுஞ் சாக்கிரா தீதமாஞ்
சுத்தசங் காரந் தொழிலற்ற கேவல
முய்த்தசங் காரம் பரனரு ளுண்மையே. (6)

கருத்து: நித்த சங்காரத்தில் - உறக்கத்தில் - எதனையும் அறியாத நிலை உள்ளது. இறப்பும் நனவுநிலையைக் கடந்ததே. சுத்த சங்காரம் இறையருளால் வாய்க்கும் போது, உயிர் தனது தொழில் என ஒன்றும் இன்றி, எல்லாம் இறைவன் செயலாகக் காணும். இறுதியில் உயிரை

வீடு பேற்றுக்குச் செலுத்தும் நிலையில் சிவபிரானது அருள் வாய்க்கும்.

அருளிற் கலத்தல்

236. நித்த சங்காரம் இரண்டு உடல் நீவுதல்;
வைத்த சங்காரமும் மாயா சங்காரமாம்;
சுத்த சங்காரம் மனாதீதம் தோய்வித்தல்;
உய்த்த சங்காரம் சிவன் அருள் உண்மையே.

நித்தசங் கார மிரண்டுட னீவுதல்
வைத்தசங் காரமு [1]மாயாசங் காரமாஞ்
சுத்தசங் கார மனாதீதந் தோய்வித்த[2]
லுய்த்தசங் காரஞ் சிவனரு ளுண்மையே. (7)

வேறு பாடம்: 1. மாயாள்சங் (ஈ உ எ ஐ) I. 2. தோய்வுறல் (துடி)

கருத்து: நித்தசங்காரத்தில் தூலவுடம்பை விட்டுச் சூக்குமவுடம்பு பிரியும். சங்காரம் என்பது மாயையின் காரியமாகிய மாயேயத்தை - உலகையும் உடல்களையும் - அழித்தல் ஆகும். சுத்த சங்காரம் என்பது, மனம் கடந்த நிலையை அடைவித்தல். செலுத்துகின்ற சங்காரம் என்பது சிவபிரானது அருளில் இலயம் ஆதல்.

இரண்டு உடல் - சூக்கும உடல், தூல உடல். மாயா - அசுத்தமாயை மனாதீதம் - மனம் கடந்த நிலை.

237. நித்தசங் காரங் கருவிடர் நீக்கினால்
ஒத்தசங் கார முடலுயிர் நீவுதல்
வைத்தசங் காரங் கேவல மான்மாவுக்
குய்த்தசங் காரஞ் சிவமாகு முண்மையே. (அ, ப)

அற்றது; ஆனால் அழியவில்லை

238. பாழே முதலா எழும் பயிர் அவ் இடம்
பாழாய் அடங்கினும் பண்டைப்பாழ் ஆகாவாம்;
ஊழ் ஆர் சங்காரத்தோன் மால் அயன் செய்தியாம்
பாழா, பயிராய் அடங்கும் அப் பாழிலே.

பாழே முதலா வெழும்பயி ரவ்விடம்[1]
[2]பாழா யடங்கினும் [3]பண்டைப்பா ழாகாவா
[4]மூழார்சங் காரத்தோன் மாலயன் செய்தியாம்
[5]பாழாப் பயிரா யடங்குமப் பாழிலே. (8)

வேறு பாடம்: 1. ரப்பயிர் (த) (துடி) (சைவ) 2. பாழா (ஒ) IV. 3. பண்டைப் பாழ் பாழாகா (அ இ ஈ) I. 4. வாழாச் சங்காரத்தன் (எ) I (பா 3) 5. பாழாம் (எ) பாழாய்ப் (இ) I.

கருத்து: உருவற்றதாகிய பர சிவத்தை நிமித்த காரணமாகக் கொண்டு, உருவற்றதாகிய மாயையிலிருந்து தோன்றும் பிரபஞ்சம், சங்காரத்தால் சிவத்தில் ஒடுங்கினாலும், சிவமாக மாட்டாது. அது பிரமன், திருமால், உருத்திரன் என்போரால் படைத்துக் காத்து ஒடுக்கப்படுவது. ஒடுங்கும் போது பாழ்த்தன்மையும் விடாமல், பயிராம் தன்மையும் கெடாமல், சிவத்துள் ஒடுங்கும். ஊழ் ஆர் - சிவனின் விதிக்குக் கட்டுப்பட்ட. செய்தி - செயல். அவ்விடம் -அப் பாழில்.

அருளில் ஒடுங்க

239. தீய வைத்து ஆர்மின்கள் சேரும் வினைதனை
மாய வைத்தான் வைத்த வன்பதி ஒன்றுண்டு
காயம் வைத்தான் கலந்து எங்கும் நினைப்பது ஓர்
ஆயம் வைத்தான் உணர்வு ஆர வைத்தானே.

தீயவைத் தார்மின்கள் சேரும் வினைதனை[1]
[2]மாயவைத் தான்வைத்த வன்பதி யொன்றுண்டு
[3]காயம்வைத் தான்கலந் தெங்கு நினைப்பதோ
[4]ராயம்வைத் [5]தானுணர் வாரவைத் தானே. (9)

வேறு பாடம்: 1. வினைகளை (அ) IV. 2. மாயம் (எ) IV. 3. காயவைத் (பா 1) 4. ராயவைத் (பா 1) 5. தாயுணர் (எ) IV; தாருணர் (அ) I.

கருத்து: அழிப்பவனாகிய சிவன் ஆன்மாவிற்கு வைத்த அழியாத இடம் ஒன்று உண்டு. அதை அடைதற்பொருட்டே உடம்பையும் கருவிகளையும் தந்தான். உயிர் - உணர்வினால் சிவமாகிய தன்னை அனுபவிக்க வைத்தான். எனவே ஆகாமிய வினையையும் சஞ்சித வினையையும் அவனது அருளால் தீயுமாறு செய்வித்து ஆரவாரம் செய்க.

ஆர்மின்கள் - முழக்கம் செய்வீர். வன்பதி-வீடு பேறு. காயம் - உடம்பு. ஆயம் - திரள், கூட்டம், கருவிகள். ஆர - அனுபவிக்க.

19. திரோபவம்

தலைவனை அறியோம்

240. உள்ளத்து ஒருவனை உள் உறு சோதியை
உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உரு அறியாதே.

உள்ளத் தொருவனை யுள்ளூறு சோதியை[1]
யுள்ளம்விட் டோரடி நீங்கா வொருவனை[2]
யுள்ளமுந் தானு [3]முடனே யிருக்கினு
முள்ள மவனை யுருவறி யாதே. (1)

வேறு பாடம்: 1. யுள்ளூறை (இ) IV. 2. தொருவனை (இ ஓ) III (பா 3) 3. முடனா (ஆ) III.

கருத்து: மனத்தில் நிற்கும் ஒருவன்; உள்ளே நிறைந்த ஒளி; ஆன்மாவை விட்டுச் சிறிதும் பிரியாதவன். அவன் அவ்வாறு இருப்பினும், மனம் அவனது உருவத்தை அறியாது.

உள்ளம் (2 ஆம் அடி) - உயிர். உடனே - ஒருங்கு.

இன்பத்தில் மறைந்த துன்பம்

241. இன்பப் பிறவி படைத்த இறைவனும்
துன்பஞ் செய் பாசத் துயருள் அடைந்தனன்
என்பில் கொளுவி இசைந்துஉறு தோல் தசை
முன்பின் கொளுவி முடிகுவது ஆக்குமே.

இன்பப் பிறவி படைத்த விறைவனுந்
துன்பஞ்செய் பாசத் துயரு ளடைந்தன[1]
னென்பிற் கொளுவி [2]யிசைந்துறு தோற்றசை
முன்பிற் கொளுவி முடிகுவ தாக்குமே[3]. (2)

வேறு பாடம்: 1. ளடைந்தன (திரு) (த) 2. யிசைந்தது (பா 3) 3. முடிக்குவதாமே (அ) IV தாமே (துடி) 4. தாகுமே (பா 1) (ஆ ஓ ஓ) I.

கருத்து: உடம்பைப் படைக்கும் பொழுதே அழிவதற்குரிய இயல்புடையதாகப் படைத்தான்.

முதல் இரண்டு அடிகளில், இறைவன் அறிந்து உயிருக்கு அறிவித்தலைக் கூறினார். என்பு - எலும்பு. கொளுவி - அகப்படுத்தி. முன்பின் - முன்பு. முடிகுவது - அழியும் இயல்புடையது. ஆக்கும் - ஆக்குவான்.

மூவரும் அறியார்

242. இறையவன் மாதவன் இன்பம் படைத்த
மறையவன் மூவரும் வந்துடன் கூடி
இறையவன் செய்த இரும்பொறி யாக்கை
மறையவன் வைத்த பரிசு அறியாரே.

இறையவன் மாதவ னின்பம் படைத்த
மறையவன் மூவரும் வந்துடன் கூடி
யிறையவன் செய்த விரும்பொறி யாக்கை
மறையவன் வைத்த பரிசறி யாரே[1]. (3)

வேறு பாடம்: 1. வார்க்கே (இ) II; யாதே (துடி) (சைவ)

கருத்து: உருத்திரன், திருமால், பிரமன் என்ற மூவரும், சிவபெருமான் உயிருக்கு அளித்த உடம்பிற்கு (உடம்பில் வாழும் உயிர் வாழ்விற்கு) அவன் செய்யும் திரோபவத்தை (மறைப்பை) அறியாதார் ஆவர்.

இறையவன் - உருத்திரன். மாதவன் - திருமால். மறையவன் - பிரமன். இறையவன் (இரண்டாவது அடி) - பரம்பொருள். பரிசு - இயல்பு.

வீணாகி விட்டனரே!

243. காண்கின்ற கண்ஒளி காதல் செய்து ஈசனை
ஆண் பெண் அலி உருவாய் நின்ற ஆதியைப்
பூண்படு நாஉடை நெஞ்சம் உணர்ந்திட்டுச்
சேண்படு பொய்கைச் செயல் அணையாரே.

காண்கின்ற கண்ணொளி காதல்செய் தீசனை[1]
யாண்பெண் ணலியுரு வாய்நின்ற வாதியைப்
[2]பூண்படு நாவுடை நெஞ்ச முணர்ந்திட்டுச்
சேண்படு பொய்கைச் [3]செயலணை யாரே. (4)

வேறு பாடம்: 1. யீசனை (எ) I. 2. யூண்படு (இ) I. 3. செவியனையானே (பா 1)

கருத்து: யோகப் பயிற்சியால் கண்கள் ஒளி பெறுகின்றமையின், அக்கண்ணொளிக்குக் காரணம், இறைவன் சோதி வடிவாகப் புருவமத்தியில் எழுந்தருளுவதே என்று உணர்ந்து, அவனுக்கு மிக்க அன்பு செய்து, ஆண், பெண், அலி - இந்த மூன்று வடிவமும் மேற்கொண்டு நிற்கும் அவனைத் தலையுச்சிச் சகஸ்ராரத்தில் கண்டு, கலத்தலைச் செய்யாது, மாந்தர் வீணே நாளைக் கழிக்கின்றாரே!.

கண் ஒளியால் காதல் செய்து காண்கின்ற ஈசனை என்று கூட்டுக. பூண்படு நா - தடைபட்ட நாக்கு; பேச்சு எழாத நாக்கு. சேண்படு பொய்கை - தலையுச்சியில் சகஸ்ராரத்தில் தாமரை வடிவாயுள்ள தானம். செயல் - பொய்கையில் அனுபவித்தல். அணையாரே - எய்தாமல் இருக்கின்றார்.

சோதி மலையும் இருட்டறையும்

244. தெருளும் உலகிற்கும் தேவர்க்கும் இன்பம்
அருளும் வகைசெய்யும் ஆதிப் பிரானும்
சுருளும் சுடர் உறு தூவெண் சுடரும்
இருளும் அற நின்று இருட்டறையாமே.

தெருளு முலகிற்குந் தேவர்க்கு மின்ப
மருளும் வகைசெய்யு மாதிப் பிரானுஞ்
சுருளுஞ் சுடருறு [1]தூவெண் சுடரு
மிருளு மறநின் றிருட்டறை யாமே. (5)

வேறு பாடம்: 1. தூ வெஞ் (எ); தூமவெண் (இ) I.

கருத்து: அருளலைச் செய்யும் பொழுது ஞானம் பெறும் மக்களுக்கும் தேவர்க்கும் இன்பம் நல்கும் இறைவன், மறைத்தலாகிய திரோபவத்தைச் செய்யும் பொழுது, சூரியனும் சந்திரனும் இருளும் மறையும் படியான அவ்வளவு இருட்டை (அறியாமையாகிய இருட்டை) உண்டாக்கி மறைப்பான்.

தெருளும் - தெளிவு பெறும். சுருளும் சுடர் - ஆடும் சுடர். தூவெண் சுடர் - தூய வெண் சோதி. இருட்டறை - இன்னது என விளக்க இயலாப் பொருள்.

இருந்தும் இல்லை

245. அமைக்கின்ற அருள்தரும் அங்கங்கள் ஓசை
உரைக்கின்ற ஆசையும் ஒன்றொடு ஒன்று ஒவ்வாப்
பரக்கும் உருவமும் பாரகந் தானாய்க்
கரக்கின்றவை செய் காண்தகையானே.

[1]அமைக்கின் [2]றருடரு மங்கங்க ளோசை
[3]யுரைக்கின்ற வாசையு மொன்றொடொன் றொவ்வாப்
பரக்கு முருவமும் பாரகந் தானாய்க்
கரக்கின் [4]றவைசெய் [5]காண்டகை யானே. (6)

வேறு பாடம்: 1. அரைக்கின் (விசு) (தி) (த) (வ) (திரு வி க) 2. றருட்கரு மங்கங்க (அ); றருட்கரு வங்கங்க (அ ஈ) I; 3. அமைக்கின்ற (அ இ) I. 4. றவைசெய்த (சண்) 5. தாண்டகை (அ ஆ ஓ) III.

கருத்து: தத்துவங்கள், மந்திரங்கள், திசைகள், ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட உடல்கள், உலகம் - இவற்றில் எல்லாம் ஈசன் இருக்கின்றான்; ஆனால் மறைந்திருக்கின்றான்.

அமைக்கின்ற அருள் - இறைவன் பல்வேறு நிலைகளில் சக்தியாக அமைத்துக் கொள்கின்ற அருட்சத்தி. அங்கங்கள் - 36 தத்துவங்கள். ஓசை - சப்தப் பிரபஞ்சம். ஆசை - திசை. ஒவ்வா - ஒத்திராத. உருவமும் என்பதில் உள்ள உம்மையை முன்னும் பின்னும் உள்ள பெயர்களோடும் ஒட்டுக. கரக்கின்றவை - மறைத்தல் தொழில்.

அன்புக்குத் தோன்றுவான்

246. ஒளித்துவைத்தேன் உள்உற உணர்ந்து ஈசனை
வெளிப்பட்டு நின்று அருள் செய்திடும் ஈண்டே;
களிப்பொடும் காதன்மை என்னும் பெருமை
வெளிப்பட்டு இறைஞ்சின் நும் வேட்சியும் ஆமே.

ஒளித்துவைத் [1]தேனுள் ளுறவுணர்ந் தீசனை
வெளிப்பட்டு நின்றருள் செய்திடு மீண்டே
களிப்பொடுங் காதன்மை யென்னும் பெருமை
வெளிப்பட் டிறைஞ்சினும் வேட்சியு மாமே. (7)

வேறு பாடம்: தென்னுள் (பா 1) (சண்) (திருவிக)

கருத்து: ஈசனை என் உயிருணர்வால் உணர்ந்து, என்னுள் நின்றவனாகவே அனுபவித்தேன். என் அன்பு பெருகி வெளிப் படுமாயின், என் விருப்பப்படி, இங்கேயே அவன் களிப்போடு வெளிப்பட்டு நின்று அருள் தருவான்.

உள் உற உணர்ந்து - உயிர் உணர்வால் உணர்ந்து. காதன்மை - அன்பு. வேட்சி - விருப்பம்.

உள் நிற்பவனை யார் அறிவார்?

247. நின்றது தானாய் நிறைந்த மயேசுரன்
சென்றங்கு இயங்கும் அரன் திருமாலவன்
நன்றது செய்யும் மலர்மிசை மேல் அயன்
என்ற இவராகி இசைந்திருந்தானே.

நின்றது தானாய் நிறைந்த மயேசுரன்[1]
சென்றங் [2]கியங்கு [3]மரன்றிரு மாலவ
[4]னன்றது செய்யு மலர்மிசை மேலய
னென்றிவ [5]ராகி யிசைந்திருந் தானே. (8)

வேறு பாடம்: 1. மகேசுரன் (அ ஈ எ ஒ) III. 2. கியங்கி (அ ஆ இ ஈ) I. 3. மயன்றிரு (எ); சிவன் (ஒ) II. 4. மன்றது (இ) (பா 1) IV. 5. ராக (பா 1)

கருத்து: நிலையானதும் கலப்பிலாததும் ஆன பொருளாய் எங்கும் நிறைந்துள்ள மகேசன், செயல் செய்யும் உருத்திரனாயும், திருமாலாயும், பிரமனாயும் உள்ள மூவரையும் உள் நின்று இயக்குகின்றான்.

மறைப்பு நீங்க

248. ஒருங்கிய பாசத்துள் உத்தம சித்தன்
இருங்கரைமேல் இருந்து இன்புற நாடி
வரும்கரை ஓரா வகையினில் கங்கை
அருங்கரை பேணில் அழுக்கு அறலாமே.

ஒருங்கிய [1]பாசத்து ளுத்தம சித்த
னிருங்கரை மேலிருந் தின்புற நாடி
வருங்கரை யோரா வகையினிற் கங்கை
[2]யருங்கரை [3]பேணி [4]லழுக்கற லாமே[5]. (9)

வேறு பாடம்: 1. பாசத்துள்ளூறத் துள்ளூறத்தம்பான் (பா 1) 2. யருங்கலம் (பா 1) 3. பேணா (எ) IV. 4. தழுக்கது (எ) (அ ஆ ஈ ஒ) II. 5. வாமே (அ ஆ ஈ எ ஒ) II யழுக்கது வாமே (பா 1)

கருத்து: சாதகன் உத்தமமான சித்தம் கொண்டு, ஆணவ மலத்தை ஒடுக்கி, வீடுபேற்றை எய்தி இன்புறும் வழியை ஆய்ந்து, மாறி மாறி வரும் பிறவிக்குக் காரணமாக ஒன்றும் செய்துவிடாமல், அருள்வெள்ளம் வரும் ஆற்றின் கரையை அடைந்து நீராடினால் ஆணவமலம் நீங்கும்.

இருங்கரை - வீடு பேறு. வரும் கரை - மாறி வரும் பிறவி. ஓராவகை - நினையாமல். கங்கை - அருள் வெள்ளம். கரைபேணில் - கரையில், துறையில் பொருந்தி நீராடினால். அழுக்கு - ஆணவ மலம். அருளிற் சேர்ந்தால் ஆணவமலம் நீங்கும்.

கண் தன்னைக் காணாது

249. மண் ஒன்று தான் பல நற்கலம் ஆயிடும்
உள் நின்ற யோனிகட்கு எல்லாம் ஒருவனே;
கண் ஒன்று தான்பல காணும், தனைக் காணா
அண்ணலும் அவ்வண்ணம் ஆகி நின்றானே.

மண்ணொன்று தான்பல நற்கல மாயிடு
முண்ணின்ற யோனிகட் கெல்லா மொருவனே
கண்ணொன்று தான்பல காணுந் தனைக்காணா
வண்ணலு மவ்வண்ண மாகிநின் றானே. (10)

கருத்து: பிறவிதோறும் உயிர்கட்கு உள்ளே நிற்கும் பொருள் ஒன்றே; அது ஈசனே; கண் பலவற்றையும் பார்க்கும். ஆனால் தன்னைப் பார்க்காது. அதுபோல உயிர் பலவற்றை அறியும்; ஆனால் தன்னுள் நின்ற ஈசனைக் காணாது.

யோனி - உயிர்வகை பிறக்கும் இடவகை.

20. அனுக்கிரகம்

ஐந்தொழிலும் அருட்டொழிலே

250. எட்டுத் திசையும் அடிக்கின்ற காற்று அவன்;
வட்டத்திரை, அனல், மாநிலம், ஆகாசம்
ஒட்டி உயிர்நிலை என்னும் இக் காயப்பை
கட்டி அவிழ்க்கின்ற கண்ணுதல் காணுமே.

எட்டுத் திசையு [1]மடிக்கின்ற காற்றவன்[2]
வட்டத் திரையனன் மாநில மாகாச
மொட்டி யுயிர்நிலை யென்னுமிக் காயப்பை
கட்டி [3]யவிழ்க்கின்ற கண்ணுதல் காணுமே. (1)

வேறு பாடம்: 1. மறுகின்ற (இ) I எறிகின்ற (த) 2. காற்றொடு (த) (துடி)
3. யவிழ்ப்பன் (வ) (துடி) (சைவ)

கருத்து: காற்று, நீர், தீ, நிலம், ஆகாயம் - என்ற ஐம்பூதங்களால் உடம்பை உண்டாக்கி, மீண்டும் அப் பூதங்களைப் பிரித்து உடம்பை அழியச் செய்யும் நெற்றிக்கண் உடைய பெருமான், அவ்வுடலில் நின்ற உயிருள் நின்று அறிவான்.

கண் நுதல் - சிவன். ஒட்டி - கலந்து. கட்டி - அமைத்து. அவிழ்க்கின்ற - சிதைக்கின்ற. காணும் - காண்கின்றான்.

கட்டுதல் - படைப்பு. அவிழ்த்தல் - அழிப்பு. உயிரினுள் நிற்றல் - மறைப்பு. இந்நான்காலும், ஐந்தாவது ஆகிய அருளலை அருத்தா பத்தியால் பெற வைத்தார்.

இறைவன் உயிருடன் "ஒன்றாய்" நின்று, தான் அறிந்து, அதற்கு அறிவித்தலின் " காணும்" என்றார்.

எமன் இல்லை

251. உச்சியில் ஓங்கி ஒளிதிகழ் நாதத்தை
நச்சியே இன்பம் கொள்வார்க்கு நமன் இல்லை;
விச்சும், விரிசுடர் மூன்றும், உலகுக்குத்
தச்சும் அவனே சமைக்க வல்லானே.

[1]உச்சியி [2]லோங்கி யொளிதிகழ் நாதத்தை
நச்சியே யின்பங்கொள் வார்க்கு நமனில்லை
விச்சும் விரிசுடர் மூன்று முலகுக்குத்[3]
[4]தச்சு மவனே சமைக்கவல் லானே. (2)

வேறு பாடம்: 1. உச்சி (ஆ) II உச்சியுள் (மு) 2. யொடுக்கி (ஆ) II. 3. முலகுக்குந் (ஈ எ ஒ) I. 4. தைச்சு (அ எ) I.

கருத்து: உலகிற்கு வித்தினையும் ஞாயிறு, சந்திரன், தீ என்ற முச்சுடர்களையும் தந்து, அமைப்புத் தொழிலால் அதனைப் படைத்தவன் ஈசன். முச்சுடர்களும் நம் உடம்பிலும் உண்டு. அவை தலையுச்சியில் நாத ஒலியுடன் சோதியாக விளங்கும். அதனைக் காண விரும்பிக், கண்டு இன்புறுவோர்க்கு இறப்பில்லை.

உச்சி - தலையுச்சி. விச்சு - வித்து. தச்சு - அமைப்புத் தொழில்.

அவன் விருப்பம் போல்

252. குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணும்
குசவன் மனத்து உற்றது எல்லாம் அமையும்
குசவனைப் போல் எங்கள் கோன் நந்தி வேண்டில்
அசையில் உலகம் அது இது ஆமே.

[1]குசவன் [2]றிரிகையி [3]லேற்றிய மண்ணுங்[4]
குசவன் மனத்துற்ற தெல்லா மமையுங்[5]
குசவனைப் போலெங்கள் கோனந்தி வேண்டி
[6]லசையி லுலக மதுவிது வாமே. (3)

வேறு பாடம்: 1. குயவன் (அ) IV. 2. திகிரி (ஒ) IV திருகை (ஆ இ ஒ) I; றிருக்கையி (சண்) 3. லேறிய (அ ஒ) III. 4. மண்ணைக் (எ) III. 5. வனைவன் (எ) III மனையுங் (அ ஆ இ ஈ ஊ) I. 6. யசைவி (இ) I.

கருத்து: குயவன் திரிகையில் வைத்த மண் அவன் மனம் போல் உருவம் பெறும். அதைப் போல, நந்தி எவ்வாறு விரும்புவானோ அதற்கு ஏற்ப உலகில் உருவங்கள் அமையும்.

அசையில் - சங்கற்ப மாத்திரமாக இருந்தால். அது இது - பலப்பல உருவம். இறைவனின் சங்கற்பத்தால் உலகம் பலப்பல உருவங்கள் கொண்ட பொருள்களை உடையதாகும்.

சிந்தனைக்கு எட்டினான்

253. விடையுடையான், விகிர்தன், மிகு பூதப்
படையுடையான் பரிசே உலகு ஆக்கும்
கொடையுடையான் குணம் எண் குணம் ஆகும்;
சடையுடையான் சிந்தை சார்ந்து நின்றானே.

விடையுடை யான்விகிர் தன்மிகு பூதப்
படையுடை யான்பரி சேயுல காக்குங்[1]
கொடையுடை யான்குண [2]மெண்குண மாகுஞ்[3]
சடையுடை [4]யான்சிந்தை [5]சார்ந்துநின் றானே. (4)

வேறு பாடம்: 1. காகுங் (அ) (பா 1) I; காகிற் (முத்) 2. மேகுண (ஆ இ ஊ எ ஓ) II 3. மாகச் (மு) 4. யான்சிரஞ் (அ) III 5. தாங்கிநின் (ஓ) II.

கருத்து: எருது ஊர்தியை உடையவன். எல்லோரினும் வேறுபட்டவன். உயிர்களுக்கு அவை செய்த வினைக்கு ஏற்ப உடம்புகளைப் படைக்கும் வண்மையாளன். எண் குணத்தான். என் சிந்தையுள் நிற்கின்றான்.

விகிர்தன் - வேறுபட்டவன். பரிசே - உயிர்கள் செய்த வினைகளுக்கு ஈடான வகையில். உலகு - உடம்புகளை.

படைப்பின் நோக்கம்

254. உகந்து நின்றே படைத்தான் உலகு ஏழும்
உகந்து நின்றே படைத்தான் பல ஊழி
உகந்து நின்றே படைத்தான் ஐந்து பூதம்
உகந்து நின்றே உயிர் ஊன் படைத்தானே

உகந்துநின் றேபடைத் தானுல கேழு[1]
முகந்துநின் றேபடைத் தான்பல வூழி
யுகந்துநின் றேபடைத் தானைந்து பூத
முகந்துநின் றேயுயி [2]ரூன்படைத் தானே. (5)

வேறு பாடம்: 1. கெங்கு (ஓ) IV. 2. ரும்படைத் (ஓ) IV.

கருத்து: இறைவன் ஏழு உலகங்களையும், பல ஊழிக் காலங்களையும் ஐம்பெரும் பூதங்களையும் உயிர் வாழ்வையும் உடம்பு வகைகளையும்

உயிர்கள்பாற் கொண்ட கருணையால், விரும்பிப் படைத்தான். இதற்கு நோக்கம், உயிர்களுக்கு இறுதியாக அருளுதலே ஆகும்.

உகந்து - விரும்பி. ஊழி - காலங்கள். ஊன் - உடம்பு.

பரத்தினைக் காணலாம்

255. படைத்து உடையான் பண்டு உலகங்கள் ஏழும்
படைத்து உடையான் பல தேவரை முன்னே
படைத்து உடையான் பல சீவரை முன்னே
படைத்து உடையான் பரம் ஆகி நின்றானே.

படைத்துடை யான்பண் டுலகங்க ளேழும்[1]
படைத்துடை யான்பல தேவரை முன்னே
படைத்துடை யான்பல சீவரை[2] முன்னே
படைத்துடை யான்பர மாகிநின் றானே. (6)

வேறு பாடம்: 1. ளேளையும் (இ) I. 2. சீவனை (அ) I.

கருத்து: ஏழு உலகங்களையும் படைத்து, உடையவனாக விளங்கும் சிவபெருமான், தேவரையும், சீவர்களையும் படைத்து அவர்களின் தலைவனாக உள்ளான். மேலும் அவர்களினும் மேலான நிலையில் உள்ளான். அவர்கள் பக்குவப்பட்டால் மேலான நிலையை அருள்வான்.

பரம் - மேலான பொருள். உடையான் - உடைமையாகக் கொண்டான்.

கருணையினால் கலந்து . . .

256. ஆதி படைத்தனன் ஐம்பெரும் பூதங்கள்;
ஆதி படைத்தனன் ஆயபல் ஊழிகள்;
ஆதி படைத்தனன் எண் இலி தேவரை;
ஆதி படைத்தவை ஆகி நின்றானே.

ஆதி படைத்தன னைம்பெரும் பூதங்க[1]
ளாதி படைத்தன [2]னாயபல் லூழிக
ளாதி படைத்தன னெண்ணிலி தேவரை
யாதி படைத்தவை [3]யாகிநின் றானே. (7)

வேறு பாடம்: 1. பூதம் (வ) 2. னாசில்பல் (வ) 3. தாங்கிநின் (வ) (பா 1); (விசு) (த) (திரு) (சண்)

கருத்து: இறைவன் தான் படைத்த உடம்பு முதலிய பொருள்களில் 'ஒன்றாகி' நின்றான்.

தன்னைக் காட்டுகிறான்

257. அகன்றான் அகல்இடம் ஏழும் ஒன்றாகி;
இவன் தான் எனநின்ற எளியனும் அல்லன்;
சிவன்தான் பல பல சீவனும் ஆகி
நவின்றான்; உலகு உறு நம்பனும் ஆமே.

[1]அகன்றா னகலிட மேழுமொன் றாகி
[2]யிவன்றா னெனநின் றெளியனு மல்லன்
சிவன்றான் பலபல சீவனு மாகி
நவின்றா னுலகுறு நம்பனு மாமே. (8)

வேறு பாடம்: 1. அவன்றா (ஆ இ ஈ ஓ) I (பா 3) 2. லிவன்றா (பா 3)

கருத்து: உலகம் ஏழிலும் அவன் 'ஒன்றாகி' நின்றான். வேறாகியும் (தனியாகியும்) நின்றான். சுட்டிக்காட்டும்படி எளிமை உடையவனும் அல்லன். பலப்பல உயிர்களுள்ளும் 'ஒன்றாகி' நின்று ஞானம் கற்கின்றான். அந்த ஞானத்தால் அறியப்படும் தலைவனும் அவனே.

நவின்றான் - கற்றான். நம்பன் - தலைவன்; கடவுள்.

யோகத்தின் பயன்

258. உள்நின்ற சோதி உறநின்ற ஓர் உடல்,
விண் நின்ற அமரர் விரும்பும் விழுப்பொருள்,
மண் நின்ற வானோர் புகழ் திருமேனியன்,
கண் நின்ற மாமணி, மா போதகமே.

உண்ணின்ற சோதி [1]யுறநின்ற வோருடல்
விண்ணின் றமரர் விரும்பும் விழுப்பொருள்
மண்ணின்ற வானோர் புகழ்திரு மேனியன்
கண்ணின்ற மாமணி [2]மாபோ தகமே. (9)

வேறு பாடம்: 1. யுடனின்ற (ஆ) I. 2. மாபோதமாமே (அ) (பா 3) IV மாபோதகனே (பதிப்.)

கருத்து: உயிருள் நின்ற பேரறிவு; உடம்பில் பிறங்கும் சோதி; தேவர் விரும்பும் சிறந்த பொருள், மக்கள் வழிபடும் தேவர்கள் புகழும் மேனிவண்ணம் உடையவன். கண்மணி போல்வான். இவனே பெரிய ஞானமாக நின்றவன்.

இது யோகத்தால் அடையும் ஞானம்.

உடம்பினுள் உறுபொருள்

259. ஆரும் அறியாத அண்டத் திருவுரு
பார் முதலாகப் பயிலும் கடத்திலே
நீரினில் பால்போல நிற்கின்ற நேர்மையைச்
சோராமல் காணும் சுகம் அறிந்தேனே.

ஆரு [1]மறியாத வண்டத் திருவுருப்
பார்முத லாகப் பயிலுங் கடத்திலே
நீரினிற் பால்போல நிற்கின்ற [2]நேர்மையைச்
சோராமற் காணுஞ் [3]சுகமறிந் தேனே. (10)

வேறு பாடம்: 1. மறியாதவ் (எ ஒ) I. 2. நோன்மையைச் (ஆ) IV. 3. சுகமிருந்தேனே (ஒ) IV.

கருத்து: அண்டமே திருமேனி என்று கூறும் வண்ணம் உள்ள ஈசனது அருவத்திருமேனி, நிலம் முதலான ஐம்பூதச் சேர்க்கை ஆகிய உடம்பில், நீரில் கலந்த பால் போல நிற்கும் தன்மையை உணர்ந்து இன்புற்றேன்.

கடம் - குடம். உடம்பைக் குறித்தது.

குறிப்பு: 10 சுவடிகளில், இப்பாடலுடன் 'அனுக்கிரகம்' என்னும் அதிகாரம் முடிவுற்றது என்ற குறிப்பு உள்ளது.

21. கருப்பக்கிரியை

கருவில் புகுத்தினான்

260. ஆக்குகின்றான் முன் பிரிந்த இருபத்தஞ்சு
ஆக்குகின்றான் அவன் ஆதி எம் ஆருயிர்
ஆக்குகின்றான் கருக்கோளகையுள் இருந்து
ஆக்குகின்றான் அவன் ஆவது அறிந்தே.

ஆக்குகின் றான்முன் [1]பிரிந்த விருபத்தஞ்
சாக்குகின் றானவ னாதியெம் மாருயி
ராக்குகின் றான்கருக் கோளகை யுள்ளிருந்
தாக்குகின் றானவ னாவ தறிந்தே[2]. (1)

வேறு பாடம்: 1. பிகந்த (ஆ) IV. பிருந்த (ஓ) I. 2. தறிந்ததே (ஊ) I.

கருத்து: எம் தலைவன் இறப்பில் பிரிந்த 25 தத்துவங்களையும் சேர்த்து உடலைப் படைக்கின்றான். கருவினுள் தான் இருந்து, வருவனவற்றை அறிந்து படைக்கின்றான்.

இருபத்தஞ்சு - ஆன்ம தத்துவம் 24ம் புருடத்துவம் 1ம் ஆக 25.
கோளகை - வட்டம்.

கருவை வளர்க்கிறான்

261. அறிகின்ற மூலத்தின்மேல் அங்கி, அப்புச்
செறிகின்ற நாளத்துச் செந்தாள் கொளுவி,
பொறி சென்ற இன்னுயிர் போம்துறை நாடிப்,
பறிகின்ற பத்து உறப் பாகம் செய்தானே.

அறிகின்ற மூலத்தின் மேலங்கி யப்புச்[1]
செறிகின்ற [2]நாளத்துச் [3]செந்தாள் கொளுவிப்
[4]பொறிசென்ற வின்னுயிர் [5]போந்துறை நாடிப்[6]
பறிகின்ற [7]பத்துறப் [8]பாகஞ்செய் தானே. (2)

வேறு பாடம்: 1. யேலச் (மு) 2. ஞாளத்து (ஆ இ); ஞானத்து (எ) ஞானத்துட் (ஊ) I; தானத்துச் (த) 3. சேர்ந்தார் (ஈ); சேர்ந்தான் (எ) I. 4. பொறைநின்ற (அஇஎ) (பா 1) I. 5. போந்துற (அ ஆ ஓ) II; போஞ்சிர (மு) 6. நாடப் (ஆ இ ஈ எ) II (பா 1) 7. பத்தெனும் (வ) (த) (விசு) (திரு) 8. பாரஞ்செய் (அ இ ஈ ஓ); பாசஞ்செய் (ஆ ஊ எ); I.

கருத்து: மூலாதாரத்திற்கு மேல், தீயும் தண்ணீரும் நிறைந்துள்ள இடத்தில் முதுகந்தண்டின் அடிப்பாகத்தைப் பொருத்தி, ஊழின்படி வந்த உயிர் தங்கும் இடத்தை ஆய்ந்து, கருவெளிப்படும் வரை செல்கின்ற காலம் ஆகிய பத்துமாதம் வரை அதை வளர்த்தான்.

பறிதல் - வெளிப்படுதல். போம் துறை - வந்து தங்கும் இடம். பாகம் - பக்குவம்.

குறிப்பு: 4 ஆம் அடி, 2 ஆம் சீர்க்குப் பிற பாடம் ஒன்றும் பொருந்தாமையின் 'மு' - சுவடிப் பாடம் கொள்ளப்பட்டது.

அன்பே வாழ்க்கை

262. இன்புறு காலத்து இருவர் முன்பு ஊறிய
துன்புறு பாசத்துயர் மனை, வான் உளன்
பண்புஉறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்
அன்புஉறு காலத்து அமைத்தொழிந்தானே.

இன்புறு காலத் திருவர்முன் பூறிய
துன்புறு பாசத் துயர்மனை வானுளன்
பண்புறு காலமும் [2]பார்மிசை வாழ்க்கையு
மன்புறு காலத் தமைத்தொழிந் தானே. (3)

வேறு பாடம்: 1. பார்நசை (ஆ) IV.

கருத்து: வானில் உள்ளவனாகிய இறைவன், வாழ்வின் நற்பண்புகளை எய்தும் காலமும் வாழ்வின் பயனை எய்தும் காலமும், உயிரானது அன்பு செய்யும் காலமே என அமைத்தான். அஃதன்றி, பெற்றோரின் புணர்வால் வந்த உடம்பில் இருந்து வாழும் இவ்வாழ்க்கை ஆணவ மலத்தாலும் கன்மத்தாலும் உண்டாகும் துன்பங்கள் நிறைந்ததே.

முன்பு - முன் பிறவிகளில். ஊறிய - செய்யப்பட்டு, இப்பிறவியில் அனுபவித்தற்குரிய வினையாக உள்ள. பாசம் - ஆணவ மலம். மனை - உடம்பு.

கணவனிடமிருந்து மனைவிக்கு

263. கருவை ஒழிந்தவர் கண்ட நால்-மூ ஏழ்
புருடன் உடலில் பொருந்தும்; மற்று ஓரார்;
திருவின் கருக்குழி தேடிப் புகுந்து அங்கு
உருவம் இரண்டாக ஓடி விழுந்ததே.

கருவை யொழிந்தவர் கண்டநான் மூவேழ்
புருட னுடலிற் பொருந்துமற் றோரார்
திருவின் கருக்குழி தேடிப் புகுந்தங்[1]
[2]குருவ மிரண்டாக வோடி விழுந்ததே[3]. (4)

வேறு பாடம்: 1. புகுந்து (ஆ ஊ ஒ) II; புகுந்த (இ எ) III. 2. வுருவ (ஆ) I துருவ (இ எ) III. 3. விழுந்தே (ஒ) I.

கருத்து: பிறவியற்றோர் புரிந்து கொண்ட 24 ஆன்மதத்துவங்களும் புருட தத்துவமும் கணவன் உடம்பில் பொருந்தும். பின்பு மனைவி கருவில் புகுந்து ஆண், பெண் என்ற பாகுபாடு பெறும்.

நால் மூ ஏழ் - 4 + 21 ஆக 25 தத்துவங்கள். உருவம் இரண்டு - ஆண், பெண் என்ற இரண்டு.

தத்துவங்கள் பொருந்தும் இடம்

264. விழுந்தது இலிங்கம்; விரிந்தது யோனி;
ஒழிந்த முதல் ஐந்தும் ஈரைந்தொடு ஏறிப்
பொழிந்த புனல் பூதம் போற்றும் கரணம்
ஒழிந்த நுதல் உச்சி உள்ளம் ஒளித்தே.

[1]விழுந்ததி [2]லிங்கம் விரிந்ததி யோனி
[3]யொழிந்த முதலைந்து மீரைந்தொ டேறிப்
[4]பொழிந்த [5]புனல்பூதம் போற்றுங் கரண
[6]மொழிந்த நுதலுச்சி [7]யுள்ள மொளித்தே[8] (5)

வேறு பாடம்: 1. விழுந்த (அ ஆ இ) II. 2. விலிங்கம் (அ ஆ இ) II; லிங்கம் (எ) I. 3. பொழிந்த (ஆ) I. 4. பொழிந்து (அ ஆ இ எ ஒ) II. 5. புலன் பூதம் (ஆ இ ஈ ஊ ஒ) I. 6. பொழிந்து (ஆ ஒ) IV; மொழிந்தது (உ) I. 7. யுள்ளே (விசு) (திரு) (த) (வ) 8. யொளித்ததே (ஒ); யொளித்தே (இ ஊ எ); யொழிந்ததே (ஆ); யொழித்ததே (அ) I.

கருத்து: கணவன் மனைவியர் கூடினர். ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5, பூதம் 5 ஆக 15 தத்துவங்களுடன் சுக்கிலம் பொழிந்தது. ஏனைய தன்மாத்திரைகள் 5, அந்தக் கரணம் 4 ஆக 9 தத்துவங்கள் புருவ நடுவிலும் உச்சந் தலையிலும் பொருந்தும்.

மூச்சு உயிரைத் தாங்குகிறது

265. பூவின் மணத்தைப் பொருந்திய வாயுவும்
தாவி உலகில் தரிப்பித்தவாறு போல்
மேவிய சீவனில் மெல்ல நீள் வாயுவும்
கூவி, அவிழும் குறிக்கொண்ட போதே.

பூவின் மணத்தைப் பொருந்திய வாயுவந்
தாவி யுலகிற் றரிப்பித்த வாறுபோன்
மேவிய சீவனின் மெல்லநீள் வாயுவுங்
[1]கூவி [2]யவிழுங் குறிக்கொண்ட போதே. **(6)**

வேறு பாடம்: 1. கூறி (இ ஒ) I. 2. விழுங்குங் (ஊ) IV.

கருத்து: பூவின் மணத்தைக் காற்றுச் சுமந்து சென்று உலகில் பரப்புவதுபோல, உடம்பில் மூச்சுக்காற்று இயங்கி உயிரைத் தாங்கும். இஃது எப்போது? சிவன் அவ்வாறு எண்ணும் போது.

நீள் வாயு - பிராணன் (மூச்சுக் காற்று) கூவி அவிழ்தல் - மூச்சு இயங்குதல்.

அவன் இன்றி வாழ்க்கை இல்லை

266. போகின்ற எட்டும் புகுகின்ற பத்தெட்டும்
மூழ்கின்ற முத்தனும் ஒன்பது வாய்தலும்
நாகமும் எட்டுடன் நாலு புரவியும்
பாகன் விடாவிடின் பன்றியும் ஆமே.

போகின்ற வெட்டும் புகுகின்ற பத்தெட்டு[1]
[2]மூழ்கின்ற முத்தனு மொன்பது வாய்தலு
நாகமு மெட்டுட னாலு புரவியும்
பாகன் [3]விடாவிடிற் பன்றியு மாமே. **(7)**

வேறு பாடம்: 1. பத்தொடு (மு) 2. மாதிடைத்தன (மு) 3. விடானெனிற் (வ) (திரு) (த) விடிலிவை (மு); விடவிற் (வி) விடான்விடிற் (பா 3).

கருத்து: குண்டலி சத்தியையும் பிராண வாயுவையும் சிவன் தூண்டாவிடின் எட்டு, பதினெட்டு என்ற எண்ணிக்கையை உடைய தத்துவங்களும், ஆன்மா பதிந்து நிற்கின்ற மூன்று உடம்புகளும் (சுக்குமம், தூலம், காரணம்) உடம்பில் உள்ள 9 வாயில்களும் பயன்படாமற் போகும்.

எட்டு (1) : சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், புத்தி, மனம், அகங்காரம். பத்து - தச வாயுக்கள்.

எட்டு (2) : காமம், கோபம், லோபம், மோகம், மதம், மாற்சரியம், துன்பம், செருக்கு.

குணதத்துவம்

267. ஏற எதிர்க்கில் இறையவன் தானாகும்;
மாற எதிர்க்கில் அரியவன் தானாகும்;
நேர் ஒக்க வைக்கின் நிகர் போதத்தான் ஆகும்.
பேர் ஒத்த மைந்தனும் பேரரசு ஆளுமே.

ஏற வெதிர்க்கி லிறையவன் றானாகு
மாற வெதிர்க்கி லரியவன் றானாகு
நேரொக்க வைக்கி [1]னிகர்போதத் தானாகும்
பேரொத்த மைந்தனும் பேரர சாளுமே[2]. (8)

வேறு பாடம்: 1. போகத்தானாகும் (அ); போதந் தானாகும் (ஈ. ஒ) I போதந்தானாம் (சண்) 2. பேரரசனாமே (ஒ) IV.

கருத்து: விந்து சத்தி மிகுதியானால் உருத்திரனின் குணம் உண்டாகும். நாத சக்தி மிருந்தால் திருமாலின் குணம் உண்டாகும். இரண்டும் சமமானால் பிரமன் குணம் உண்டாகும். இவை முறையே தாமச, இராஜஸ, சத்துவ குணங்கள் என்பன.

பெற்றோரின் சாயல்

268. ஏய் அங்கு அலந்த இருவர்தம் சாயத்துப்
பாயும் கருவும் உருவாம் எனப் பல
காயம் கலந்தது காணப் பதிந்தபின்
மாயம் கலந்த மனோலயம் ஆனதே.

[1]ஏயங் [2]கலந்த [3]விருவர்தஞ் சாயத்துப்
பாயுங் கருவு முருவா மெனப்பல
காயங் கலந்தது காணப் பதிந்தபின்
மாயங் கலந்த மனோலய மானதே. (9)

வேறு பாடம்: 1. ஏகஞ் (ஆ இ ஈ ஊ) II. 2. கலந்தே (உ) II. 3. யிருவர்தஞ் (உ) II; திருவர்தஞ் (ஆ எ) I.

கருத்து: சுக்கிலமும் சுரோணிதமும் கருவாகப் பெண்ணின் கருப்பையில் பதியும் பொழுது, ஆண், பெண் - இருவரின் உடம்பிலும் கலந்துள்ள பலவகைத் தத்துவங்களும் சேர்ந்து பதியும். மாயமாக உள்ள அவர் மனத்தின் எண்ணம், உணர்வு ஆகியவையும் பதியும்.

ஏய் - பொருந்தி. அலந்த - வருந்திய. சாயம் - சுக்கிலம், சுரோணிதம்.

உணர்வு நிலைகள்

269. கர்ப்பத்துக் கேவலம் மாயாள் கிளை கூட்ட
நிற்கும் துரியம்; பேதித்து நினைவு எழ
அற்புறு காமியம் எட்டு ஆதல் மாயேயம்
சொற்பு உறு தூய்மறை வாக்கின் ஆம் சொல்லே.

கர்ப்பத்துக் கேவல மாயாள் கிளைகூட்ட[1]
நிற்குந் [2]துரியம்பே [3]தித்து நினைவெழ
[4]வற்புறு காமிய மெட்டாதன் மாயேயஞ்
சொற்புறு தூய்மறை [5]வாக்கினாஞ் சொல்லே. (10)

வேறு பாடம்: 1. கிளை கூட்டம் (ஊ எ) IV; கிளைக்கூட்ட (சைவ) 2. துரியமும் (அ ஆ இ) I. 3. பெற்று (அ இ); மேற்றது (ஈ) பெய்து (பா 1), (ஓ) I. 4. லற்புறு (அ இ) (பா 1) I. 5. யவர்கணாய்ச் சொல்லே (ஆ) II.

கருத்து: தாயின் கருப்பத்தில் ஒன்றும் அறியாமல் கிடக்கும் உயிருக்கு மாயை தத்துவங்களைச் சேர்ப்பாள். ஆதலால் அவ்வுயிர்க்குத் துரியநிலை உண்டாகும். அதையும் மாற்றி, சாக்கிரம் முதலிய பிற நிலைகள் உண்டாகுமாறு, கான்மியங்கள் எட்டும் மாயையால் சேர்க்கப்படும். சுத்தமாயையிலிருந்து மந்திர ஒலிகள் உண்டாவது போல், உயிருக்குப் பேச்சாற்றலுக்கான விதையும் கிடைக்கும்.

மாயாள் - மாயை. கிளை - தத்துவங்கள். அற்பு - அன்பு. எட்டு ஆதல் - எட்டும் சேரும்.

வீட்டைக் கட்டியவன்

270. என்பால் மிடைந்து நரம்பு வரிக்கட்டிச்
செம்பால் இறைச்சி திருந்த மனை செய்து
இன்பால் உயிர்நிலை செய்த இறை ஓங்கும்
நன்பால் ஒருவனை நாடுகின்றேனே.

என்பான் மிடைந்து [1]நரம்பு வரிக்கட்டிச்[2]
செம்பா லிறைச்சி திருந்த மனைசெய்து
[3]வின்பா லுயிர்நிலை செய்த விறையோங்கு[4]
[5]நன்பா லொருவனை நாடுகின் றேனே. (11)

வேறு பாடம்: 1. நரம்பால் (அ) IV. 2. வரிகட்டி (திரு) (திரு வி க); புரிகட்டி (இ) IV. 3. பின்பா (அ) I. 4. விறையோங்க (அ ஆ இ) I. 5. நண்பா (எ); நம்பா (ஈ) I.

கருத்து: எலும்பும், இறைச்சியும் நரம்பும் கொண்டு, உயிர் நிலைக்கும் இடமாக, உடம்பு என்ற வீட்டைக் கட்டிய இறைவனை - உயர்ந்த பண்புகள் உடைய ஒப்பற்றவனை நாடுகின்றேன்.

வரி - வரிச்சு. மனை - வீடு; உடம்பு. நன்பால் - நல்லியல்பு. உயர்நிலை - உயிர்நிலைக்கும் இடம்; உடம்பு.

சந்திர கலை, சூரியகலை

271. பதம்செய்யும் பால்வண்ணன் மேனி, பகலோன்
இதம் செய்யும் ஒத்து உடல் எங்கும் புகுந்து,
குதம் செய்யும் அங்கியின் கோபம் தணிப்பான்
விதம் செய்யுமாறே விதித்து ஒழிந்தானே.

பதஞ்செய்யும் பால்வண்ணன் [1]மேனி பகலோ
னிதஞ்செய்யு மொத்துட [2]லெங்கும் புகுந்து
குதஞ்செய்யு மங்கியின் கோபந் தணிப்பான்
விதஞ்செய்யு மாறே விதித்தொழிந் தானே[3]. (12)

வேறு பாடம்: 1. மேனிப் (ஈ ஒ) I. 2. லோங்கும் (ஆ) I. 3. தோனே (ஆ ஈ) I.

கருத்து: தாயின் உடம்பின் மூல அக்கினியின் வெம்மையைத் தணிப்பதற்காக ஈசன், பக்குவம் செய்யும் சந்திர கலையையும் நன்மை செய்யும் சூரிய கலையையும் உடம்பு முழுதும் இயங்கச் செய்தான். சந்திரகலை என்றது இட கலையில் இயங்கும் மூச்சு. சூரியகலை, பிங்கலையில் இயங்கும் மூச்சு.

குதம் - மலவாயில். விதம் செய்யுமாறு - மாறி இயங்கும்படி.

கருவைக் காக்கிறான்

272. ஒழி பல செய்யும் வினை உற்ற நாளே
வழி பல நீராட்டி வைத்து அழு வாங்கிப்
பழி பல செய்கின்ற பாசக் கருவைச்
சுழி பல வாங்கிச் சுடாமல் வைத்தானே.

ஒழிபல செய்யும் வினையுற்ற நாளே
வழிபல [1]நீராட்டி [2]வைத்தழு வாங்கிப்
[3]பழிபல செய்கின்ற பாசக் கருவைச்
சுழிபல வாங்கிச் சுடாமல்வைத் தானே[4]. (13)

வேறு பாடம்: 1. நீராடி (ஊ) I. 2. வைத்தெழு (இ) I. 3. பழியில (பா 1); பழிப்பில (பா 3) 4. நின்றானே (அ) IV.

கருத்து: பழிகள் பலவற்றையும் தரும் ஆணவமலத்துடன் கூடிய உயிர்க்கருவை அழிப்பதற்குப் பல உபாயங்களைச் செய்யும் ஊழ் வந்த காலத்தில், தாயின் கருப்பத்தில் உள்ள நீராலும் மூல அக்கினி யாலும் உயிரானது அழிந்துவிடாமல், முறையே சுழியிலிருந்தும் வைக்கோற் குவியலிலிருந்தும் எடுத்துக் காப்பாற்றுவது போல இறைவன் காப்பான்.

ஒழி - ஒழிதல், இறத்தல். அழு - அழுதல்.

எண்சாண் உடம்பு ஏன்?

273. சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்
அக்கிரமத்தே தோன்றும் அவ் யோனியும்
புக்கிடும் எண் விரல் புறப்பட்டு நால்விரல்
அக்கரம் எட்டும் எண் சாண் அது ஆமே.

சுக்கில நாடியிற் றோன்றிய வெள்ளியு
மக்கிர மத்தேதோன் றும்மவ்வி யோனியு[1]
புக்கிடு மெண்விரற் [2]புறப்பட்டு நால்விர
லக்கர [3]மெட்டுமெண் சாணது வாமே. (14)

வேறு பாடம்: 1. வல்லொளி (ஆ) IV; யோனியுள் (பா 3) 2. புறப்படு (இ) I. 3. மெட்டு மண் (சண்).

கருத்து: சுக்கிலமும் சுரோணிதமும் கலக்க, உடம்பு கருவாகித் தோன்றும். தாய் விடும் மூச்சுக்காற்று 12 அங்குல கனத்தில் நான்கு அங்குலம் வெளியே நின்றுவிடுவதால், மீதி எட்டு அங்குலம் எண் சாண் உடம்பாகக் கருக்கொள்ளும். அந்த எட்டு அங்குலத்தில் ஐம்பூதங்கட்கு உரிய எழுத்துக்கள் ஐந்தும், அகரம் ஆகிய நாதமும், உகரமாகிய விந்துவும், மகரம் ஆகிய மாயையும் சேர்ந்தமையும்.

வெள்ளி - விந்து. கிரமம் - முறை. யோனி - சுரோணிதம். விரல் - ஓர் அளவு. மூச்சின் அளவு (கனம்) 12 விரல். அக்கரம் - எழுத்து. (ல, வ, ர, ய, ஹ, அ, உ, ம) எண்சாண் - எட்டுச்சாண் அளவுள்ள உடம்பு.

கருவை உண்டாக்கியவன்

274. போகத்துள் ஆங்கே புகுந்த புனிதனும்
கோசத்துள் ஆங்கே கொணர்ந்த கொடைத் தொழில்
ஏகத்துள் ஆங்கே இரண்டு எட்டு, மூன்று ஐந்து
மோகத்துள் ஆங்கு ஒரு முட்டை செய்தானே.

போகத்து ளாங்கே புகுந்த புனிதனுங்
கோசத்து [1]ளாங்கே கொணர்ந்த கொடைத்தொழி
[2]லேகத்து ளாங்கே யிரண்டெட்டு மூன்றைந்து
மோகத்து ளாங்கொரு [3]முட்டைசெய் தானே. (15)

வேறு பாடம்: 1. ளாகங் (சண்) 2. லோகத்து (விசு) (திரு) (திருவிக) 3. மூட்டை செய் (விசு) (திரு) (திரு வி க).

கருத்து: ஆடவன், மங்கை - இவர்தம் புணர்ச்சியில் கருவைத் தோற்றுவிக்கப் புகுந்த சிவபிரான், தான் வழங்கிய கொடையினால், 31 தத்துவங்கள் கொண்ட கருவை உண்டாக்கினான்.

கோசம் - கருப்பை. இரண்டு எட்டு - 16. மூன்றைந்து - 15 ஆக 31. இவை ஆன்ம தத்துவம் 24-ம் வித்தியா தத்துவம் 7ம் ஆகும். முட்டை - கரு.

கருவிற்கு ஆதாரம்

275. பிண்டத்தி னுள்ளுறு [1]பேதப் புலனைந்தும்
பிண்டத்தி னூடே பிறந்து மரித்தன[2]
வண்டத்தி னுள்ளுறு சீவனு மவ்வகை
யண்டத்து நாதத் [3]தமர்ந்திடுந் தானே. (16)

வேறு பாடம்: 1. பேதைப் (ஒ) IV. 2. மரித்தது (சண்) 3. தமர்ந்திருந்தானே (அ ஆ ஈ) I.

கருத்து: ஐம்புலன்களும் உடம்பைச் சார்பாகக் கொண்டுள்ளன. அதுபோல, கருவினுள் இருக்கும் சீவன், அக்கருவில் உள்ள நாதத்தைப் பற்றுக்கோடாகக் கொள்ளும்.

பேதம் - வேறு வேறான அறிவை உடைய. பிண்டம் - உடம்பு. அண்டத்தின் உள் உறு - ஆகாயத்துடன் தொடர்பு கொள்ளும். நாதம் - சூக்குமை வாக்கு.

உடம்பு என்னும் இயந்திரம்

276. இலைப்பொறி ஏற்றி எனது உடல் ஈசன்
துலைப்பொறியில் கரு ஐந்துடன் நாட்டி
நிலைப்பொறி முப்பதும் நீர்மை கொளுவி
உலைப்பொறி ஒன்பதில் ஒன்று செய்தானே.

இலைப்பொறி யேற்றி யெனதுட லீசன்
[1]துலைப்பொறி யிற்கரு வைந்துட னாட்டி
நிலைப்பொறி முப்பது நீர்மை கொளுவி
யுலைப்பொறி யொன்பதி [2]லொன்றுசெய் தானே. (17)

வேறு பாடம்: 1. அலைப் பொறி (அ) I. 2. லாண்டுசெய் (அ ஆ இ ஈ ஒ) II.

கருத்து: இறைவன் மாயையினின்றும் உடம்பைப் படைக்கும் செயலில், கருவைப் பிரணவத்தால் இயக்கி, 30 தத்துவங்களை மாயையிலிருந்து கருவில் சேர்த்து, ஒன்பது வாயில்களை உடைய, இயந்திரம் போன்ற உடம்பைப் படைத்தான்.

இலைப்பொறி - மாயை. துலைப்பொறி - துலாக்கோல். ஐந்து - அ, உ, ம விந்து, நாதம். முப்பது தத்துவம் -ஆன்மதத்துவம் 24, புருடன் நீங்கிய வித்யா தத்துவம் 6 என்பவை. உலைப்பொறி - உடம்பு. ஒன்பது - ஒன்பது துவாரங்கள்.

துன்புறவே பிறந்தோம்

277. இன்புற்று இருவர் இயல் உற்று வைத்த மண்
துன்பக் கலசம் வனைவான் ஒருவனே;
ஒன்பது நீர்ச்சால், கலசம் பதினெட்டு;
வெந்தது சூளை விளைந்தது தானே.

இன்புற் [1]றிருவ [2]ரியலுற்று வைத்தமண்
டுன்பக் கலசம் [3]வனைவா னொருவனே
யொன்பது [4]நீர்ச்சால் [5]கலசம் பதினெட்டு
[6]வெந்தது சூளை விளைந்தது தானே. (18)

வேறு பாடம்: 1. றிருந்தவ (எ) IV. 2. ரிகலித்து (ஆ இ ஒ); ரியலித்து (எ) I; ரிசைவித்து (விசு) (திரு) (வ) (த); ரிசைய விசைந்ததோர் (மு) 3. மனைவா (எ). மனைவா (அ ஆ இ ஊ ஒ) I. 4. நீர்க்கால் (மு) 5. கரகமுமைந்துள (மு) 6. வெண்பெருஞ்சூளை கலம்பல தானே (மு).

கருத்து: ஆடவனும் மங்கையும் ஆகிய இருவர் இன்புற்று, மங்கையின் உடலில் வைத்த கருவை, துன்பத்திற்கு இலக்காகும் உடம்பாக இறைவன் படைப்பான். அவ்வுடம்பில் 18 தத்துவங்களும், 9 துவாரங்களும் இணைத்துக் கருவை முதிர்வித்துப் பிறக்கச் செய்கின்றான்.

இயல் - இயலுதல்; செயல் புரிதல். மண் - கரு. கலசம் - குடம்; உடம்பு. சால் - துளை. பதினெட்டு - ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5; பூதம் 5; மனம், புத்தி, சித்தம். உடம்பைக் குடமாக உருவகித்தமையால் அது கருவில் முதிர்தலைச் சூளையில் வேதலாகக் கூறினார்.

பற்று ஏன்?

278. அறியீர் உடம்பினின் ஆகிய ஆறும்;
பிறியீர்; அதனில் பெருகும் குணங்கள்
செறியீர்; அவற்றினுள் சித்திகள் இட்டது
அறிய ஈரைந்தினுள் ஆனது பிண்டமே.

அறியீ ருடம்பினின் னாகிய வாறும்
பிறியீ ரதனிற் [1]பெருகுங் குணங்கள்
செறியீ [2]ரவற்றினுட் சித்திக ளிட்ட[3]
[4]தறியவீ ரைந்தினு [5]ளானது பிண்டமே. (19)

வேறு பாடம்: 1. பெருங்குணங்கள் (அ இ ஊ) II. 2. ரிவற்றிடைச் (ஆ) III. 3. ளெட்ட (எ) I. 4. தறிவீ (வ) (திரு) (சண்) (திருவிக) தறிவீரீ (விசு) (த) 5. ளானதும் (இ) I.

கருத்து: உடம்பில் இருந்து வாழும் வாழ்வில் பேறு, இழவு, துன்பம், பிணி, மூப்பு, சாக்காடு என்ற ஆறும் உண்டு என்பதை அறியாமல், அவ்வுடம்பின் மேல் பற்றுக் கொள்ளுதலை விலக்கமாட்டீர். இன்பம்

பெருக்கும் நற்பண்புகளைப் பெற மாட்டீர். அக்குணங்களால் சித்திகளை எய்த வாய்ப்பு உள்ளமையை அறியுமாறு பத்து மாதத்தில் உடம்பு பிறந்தது.

செறியீர் - குணங்களில் அழுந்துக. இட்டது - பொருத்தியிருப்பதை. அறிய - அறியும்படியாக. ஈரைந்து - பத்து மாதம். பிண்டம் - உடம்பு.

உச்சியில் துவாரம் வைத்தான்

279. உடல் வைத்தவாறும் உயிர் வைத்தவாறும்
மடைவைத்த ஒன்பது வாய்தலும் வைத்துத்
திடம் வைத்த தாமரைச் சென்னியுள் அங்கி
கடை வைத்த ஈசனைக் கைகலந்தேனே.

உடல்வைத்த [1]வாறு முயிர்வைத்த வாறு
மடைவைத்த வொன்பது வாய்தலும் வைத்துத்
திடம்வைத்த தாமரைச் சென்னியு ளங்கி
கடைவைத்த [2]வீசனைக் கைகலந் தேனே. (20)

வேறு பாடம்: 1. வாய (அ) I. 2. வீரனைக் (ஆ இ) II.

கருத்து: உடம்பைப் படைத்து, உயிரை அதில் வாழவைத்தது போலவே உடம்பில் உயிர் நீங்கும் வழியே போல ஒன்பது வாயில்களும் வைத்து, மூலாதாரத்தில் மூளும் கனல் உச்சந்தலையில் சகஸ்ராரத்தில் சென்று சோதியாக நிறைவு பெறும் பிரமரந்திர வாயிலையும் இறைவன் வைத்தான். அவனோடு கூடினேன்.

மடை - வருதற்கும் போதற்கும் உரிய வழி. வாய்தல் - வாயில், துவாரம். தாமரைச் சென்னி - சென்னித் தாமரை; தலையில் உள்ள சகஸ்ராரம். கைகலத்தல் - கூடுதல். அங்கி - தீ. கடைவைத்த - (சோதியாக) நிறைவு பெறச் செய்த.

இடையறா உதவி

280. கேட்டுநின்றேன் எங்கும் கேடுஇல் பெருஞ்சுடர்
மூட்டுகின்றான் முதல் யோனி மயன் அவன்
கூட்டிநின்றான் குழம்பின் கருவை உரு
நீட்டிநின்று ஆகத்து நேர்பட்டவாறே.

கேட்டுநின் றேனெங்கும் கேடில் பெருஞ்சுடர்
[1]மூட்டுகின் றான்முதல் யோனி மயனவன்[2]
[3]கூட்டிநின் றான்குழம் பின்கரு வையுரு
நீட்டிநின் [4]றாகத்து நேர்பட்ட வாறே[5]. (21)

வேறு பாடம்: 1. மூட்டிநின் (ஈ) I. 2. மயமவன் (எ) I. 3. கூட்டுகின் (பா 1) 4. றாகத்துள் (பா 1) 5. வாறதே (ஆ) IV.

கருத்து: அழியாச் சோதியாகிய இறைவன் உலகங்கள் யாவற்றுக்கும் முதற்காரணமாகிய மாயையில் தான் கலந்து, அதைக் கலக்கியும் ஆண் பெண்ணைக் கூடச் செய்தும், அவர்களின் சக்தியைக் கொண்டு கருவை உருவாக்கி உருவமாக்கியும் அந்த உடம்பினுள்ளும் நின்று அனுபவப் பொருளாகின்றான். இதனை நூல்களில் அறிந்தேன்.

மயன் - கலந்து நிற்பவன்.

ஆதார சத்தி

281. பூவுடன் மொட்டுப் பொருந்த வலந்தபின்
காஉடைத் தீயும் கலந்து பிறந்திடும்
நீர் இடை நின்ற குமிழி நிழலதாய்ப்
பாருடல் எங்கும் பரந்து, எட்டும் பற்றுமே.

பூவுடன் மொட்டுப் பொருந்த வலந்தபின்[1]
[2]காவுடைத் [3]தீயுங் கலந்து பிறந்திடு[4]
நீரிடை நின்ற [5]குமிழி நிழலதாய்ப்[6]
பாருட லெங்கும் பரந்தெட்டும் பற்றுமே. (22)

வேறு பாடம்: வலர்ந்தபின் (அ) (விசு) (திரு) (வ) (த) (சண்) 2. காயுடன் (அ) II. 3. தீபங் (அ) (எ ஒ) II. 4. பிறந்திடும் (பா 3) 5. குழம்பி (ஒ) குமிழிலதாயப் (உ) I. 6. நிழற்றாய் (சண்)

கருத்து: சுரோணிதத்தைச் சுக்கிலம் பொருந்திய முறையில் சுற்றிக் கொண்டபின், மூலக் கனலும் கலந்து உடம்பு பிறக்கும். நீர்க் குமிழியின் நிழல் போல, அதனைப் புரியட்டக உடம்பு எட்டும் தொடர்ந்து (பற்றி) நிற்கும்.

வலந்தபின் - ஒன்றை ஒன்று வளையச்சுற்றிய பிறகு. வலத்தல் - வளைத்தல். அலர்ந்தபின் என்னும் பாடம் ஈண்டுப் பொருள் தராமை அறிக. கா உடை - சுமக்கப்பட்ட. எட்டு - புரியட்டக உடம்பு; தன் மாத்திரைகள் 5, கரணங்கள் 3 ஆக எட்டு.

282. எட்டினு ளைந்தாகு மிந்திரி யங்களும்
கட்டிய மூன்று கரணமு மாய்விடு
மொட்டிய பாச வுணர்வென்னுங் காயப்பை
கட்டி யவிழ்த்திடுங் கண்ணுதல் காணுமே. (ஈ)

பிறப்பை ஏன் தந்தான்?

283. கண்ணுதல் நாமம் கலந்து உடம்பு ஆயிடப்
பண்ணுதல் செய்து, பசுபாசம் நீக்கிட
எண்ணிய வேதம் இசைந்த பரப்பினை
மண் முதலாக வகுத்து வைத்தானே.

கண்ணுத [1]னாமங் கலந்துடம் பாயிடப்[2]
பண்ணுதல் [3]செய்து பசுபாச [4]நீக்கிட
வெண்ணிய வேத [5]மிசைந்த பரப்பினை
மண்முத லாக வகுத்துவைத் தானே. (23)

வேறு பாடம்: 1. னாதங் (ஆ) IV. 2. பாயிடைப் (துடி) 3. செய்த (அ ஆ இ) I (பா 1) 4. நீங்கிட (அ) IV. 5. மிசைத்த (எ) III.

கருத்து: பிரணவம் கலந்து மாயா தத்துவங்கள் உடம்பாகப் பிறந்தன. அதை அவ்வாறு பிறப்பித்தவன் இறைவன். ஏன் பிறப்பித்தான் என்றால், ஆன்மாவின் ஆணவமலத்தை நீக்குவதற்கு. வேதங்கள் மண் முதலாக நாதம் ஈறாகக்கூறிய தத்துவங்களை வகுத்து வைத்தான்.

நாமம்: பிரணவம்; திருவைந்தெழுத்து. பசு - பசு ஞானம். பாசம் - பாச ஞானம். பரப்பு - தத்துவங்கள். அவை நிலம் முதல் நாதம் வரை 36 ஆகும்.

செவிலித் தாயர்

284. அருள் அல்லது இல்லை; அரன் அறிவு இன்றி
அருள் இல்லை; ஆதலினால் ஓர் உயிர்க்குத்
தருகின்றபோது இரு கைத்தாயர் தம்பால்
வருகின்ற நண்பு வகுத்திடுந் தானே.

அருளல்ல தில்லை [1]யரனறி வின்றி
யருளில்லை யாதலி [2]னாலோ ருயிர்க்குத்[3]
தருகின்ற போதிரு கைத்தாயர் தம்பால்
வருகின்ற நண்பு வகுத்திடுந் தானே. (24)

வேறு பாடம்: 1. யரனவனின்றி (வ) (திரு) (விசு) (த) (திருவிக) 2. னவ்வோ (த) (சைவ) 3. ருயிரைத் (த) (சைவ).

கருத்து: அருள் இன்றிப் படைப்பு முதலிய எச்செயலும் இல்லை. ஈசன் அறிந்தே அருளை வழங்க வேண்டும். ஆதலால், ஓர் உயிரை உடம்பில் வாழவைக்கும் போது, அதை வளர்க்க, குண்டலி சத்தி, சிற்சத்தி என்ற இரண்டு செவிலித் தாய்மாரிடம் ஒப்புவிப்பான்.

அருள், அரனல்லது இல்லை; அரன் அறிவு இன்றி அருள் இல்லை. நண்பு - உறவு.

அறிவூட்டுபவர்

285. வகுத்த பிறவியில் மாது நல்லாளும்
தொகுத்த இருள் நீக்கிய சோதியவனும்
பகுத்துணர்வு ஆகிய பல்வகை எங்கும்
வகுத்து, உள்ளும் நின்றதோர் மாண்பது ஆமே.

வகுத்த [1]பிறவியின் மாதுநல் லாளுந்
தொகுத்திரு ணீக்கிய சோதி யவனும்
பகுத்துணர் வாகிய [2]பல்வகை யெங்கும்
[3]வகுத்துள்ளு நின்றதோர் மாண்பது வாமே. (25)

வேறு பாடம்: 1. பிறவியை (த) (வ) 2. பல்லுயி ரெல்லாம் (த) (வ) 3. வகுத்துள்ளில் (ஊ); வகுத்துள்ளி (ஆ) I.

கருத்து: சிற்சத்தியும், சிவனும் உயிரைப் பல பொருள்களையும் பகுத்து உணர வைத்து, உள்நின்று அறிவு காட்டுவர்.

மாது நல்லாள் - சிற்சத்தி. சோதி - சிவன். பல்வகை - பொருள் வகைகள். வகுத்தல் - அறிவூட்டுதல். வேறாய் நின்று அறிவூட்டுவான். உள்ளும் - உயிரின் உள்ளும். உள்நிற்றல் - “உடனாய்” நின்று அறிதல்.

ஆண் - பெண் வேறுபாடு

286. மாண்பதுவாக வளர்கின்ற வன்னியும்
காண்பது ஆண் பெண் அலி எனும் கற்பனை,
பூண்பது மாதா பிதா வழி போலவே
ஆம் பதி செய்தான்; அச் சோதிதன் ஆண்மையே.

மாண்பது வாக வளர்கின்ற வன்னியும்[1]
காண்பது வாண்பெண் ணலியெனுங் கற்பனை
பூண்பது மாதா பிதாவழி போலவே
[2]யாம்பதி செய்தானச் சோதிதன் னாண்மையே. (26)

வேறு பாடம்: 1. வன்னியைக் (எ) III; கன்னியுங் (ஈ) I. 2. யாம் பணி (இ); யாம்பனை (அ ஆ ஈ ஊ); யாண்பனை (ஒ) I.

கருத்து: இவ்வுலகில் ஆண், பெண், அலி என மூன்று வகையாகக் காணப்படும் உயிர்கள், இறைவன் சங்கற்பித்துப் படைத்த வேறுபாடே அன்றி உயிரில் அவ்வேறுபாடு இல்லை. இவ்வுயிருக்குத் தாய், தந்தை இருவரும் இருந்து இதைப் பெற்றதைப் போல, இனப் பெருக்கத்திற்காக ஆண், பெண் வேறுபாட்டை உண்டாக்குகிறான். இஃது இறைவன் உலகைக் காக்கும் முறை.

வன்னி - உயிர். பதி - இடம்; உடம்பு.

வேறுபடுவது எவ்வாறு?

287. ஆண் மிகில் ஆண் ஆகும், பெண் மிகில் பெண் ஆகும்;
பூண் இரண்டு ஒத்துப் பொருந்தில் அலியாகும்;
தாள் மிகும் ஆயின் தரணி முழுது ஆளும்;
பாழ் நவம் மிக்கிடின் பாய்ந்ததும் இல்லையே.

ஆண்மிகி லாணாகும் பெண்மிகிற் பெண்ணாகும்
பூணிரண் டொத்துப் பொருந்தி லலியாகுந்
தாண்மிகு மாயிற் றரணி முழுதாளும்
[1]பாணவ மிக்கிடிற் பாய்ந்தது மில்லையே. (27)

வேறு பாடம்: 1. பாண்வச (எ); பாண்வழி (ஊ); பாண்பசி (ஆ) IV மாண்வச (விசு) (த) (திருவிக).

கருத்து: ஆண்-பெண் கலப்பில் சுக்கிலம் மிகுதியானால் ஆண் குழவியும், சுரோணிதம் மிகுதியானால் பெண் குழவியும், இரண்டும் சமமானால் அலியும் பிறக்கும். சுக்கிலத்தில் ஆற்றல் மிகுந்திருப்பின் ஆண் குழந்தை அரசாளும். இரண்டில் யாதேனும் ஒன்றில், பாழ்செய்யும் பொருள் மிகுதியாக இருந்தால், கரு உண்டாகாது.

ஆண் - சுக்கிலம். பெண் - சுரோணிதம். பாணவம் - பாழ் நவம், பாழா தற்கு ஏதுவாம் பொருள். பாய்ந்ததும் இல்லை - கருவாக அமையாது.

வாழ்நாள் எவ்வளவு

288. பாய்ந்தபின் ஐந்து ஓடில் ஆயுளும் நூறு ஆகும்;
பாய்ந்தபின் நால் ஓடின் பாரினில் எண்பதாம்;
பாய்ந்திடும் வாயு பகுத்து அறிந்து இவ்வகை
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலும் ஆமே.

பாய்ந்தபி [1]னைந்தோடி [2]லாயுளு நூறாகும்
பாய்ந்தபி னாலோடிற் பாரினி லெண்பதாம்
பாய்ந்திடும் வாயுப் பகுத்தறிந் திவ்வகை
[3]பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலு மாமே[4]. (28)

வேறு பாடம்: 1. னஞ்சோடி (இ எ) I. 2. பாயுரு (அ இ ஈ ஓ); பாரினி (ஆ) I. 3. பாய்ந்திடம் (சண்) 4. மில்லையே II.

கருத்து: சுக்கிலம் ஐந்து விரற்கடை ஓடினால், குழவிக்கு ஆயுள் நூறு. நான்கு விரற்கடை ஓடினால் எண்பது. யோகி தான் விரும்பும் அளவு சுக்கிலத்தைச் செலுத்த வல்லவன் ஆவான்.

குறிப்பு: திருவாவடுதுறை யாதீனத்துச் சுவடி யொன்றில் இப்பாடல் இல்லை.

வடிவம் எதனால்?

289. பாய்கின்ற வாயு குறையின் குறள் ஆகும்;
பாய்கின்ற வாயு இளைக்கின் முடம் ஆகும்;
பாய்கின்ற வாயு நடுப்படின் கூன் ஆகும்;
பாய்கின்ற வாயு மாதர்க்கு இல்லை பார்க்கிலே.

பாய்கின்ற வாயுக் குறையிற் குறளாகும்
பாய்கின்ற வாயு [1]விளைக்கின் முடமாகும்
பாய்கின்ற வாயு நடுப்படிற் கூனாகும்
பாய்கின்ற வாயுமா தர்க்கில்லைப் பார்க்கிலே (29)

வேறு பாடம்: 1. வளைக்கில் (ஆ இ ஈ ஊ) I.

கருத்து: விந்துவைச் செலுத்தும் வாயு குறைந்தால் குழவி குள்ள மாகும். வாயு மெலிந்தால் முடமாகும். தடைப்பட்டால், கூனல் உடையதாகும். மாதரின் வாயு இவ்வகையில் பாதிப்பு எதையும் உண்டாக்குவதில்லை.

குறள் - குள்ளம்.

ஊமையா? குருடா

290. மாதா உதரம் மலம் மிகின் மந்தன் ஆம்;
மாதா உதரம் சலம் மிகின் மூங்கை ஆம்;
மாதா உதரம் இரண்டு ஒக்கின் கண் இல்லை;
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே.

மாதா வுதர மலமிகின் மந்தனா
மாதா வுதரஞ் சலமிகின் மூங்கையா
மாதா வுதர மிரண்டொக்கிற் கண்ணில்லை
மாதா வுதரத்தில் வந்த குழவிக்கே[1] (30)

வேறு பாடம்: 1. குழவிக்கே (ஊ) IV.

கருத்து: கரு வளரும் காலத்தில் தாயின் குடலில் மலம் மிகுதி யாகத் தேங்கினால் குழவி அறிவுமந்தம் உடையதாகும். சலம் மிகுதி யானால் ஊமையாகும். இவை இரண்டும் மிகுதியாயிருந்தால் குருடாகும்.

மூங்கை - ஊமை.

ஆணா, பெண்ணா?

291. குழவியும் ஆணாம் வலத்தது ஆகின்
குழவியும் பெண்ணாம் இடத்தது ஆகின்;
குழவி இரண்டாம் அபானன் எதிர்க்கின்;
குழவி அலி ஆகும் கொண்ட கால் ஒக்கிலே.

குழவியு மாணாம் வலத்தது வாகிற்
குழவியும் பெண்ணா மிடத்தது வாகிற்
குழவி யிரண்டா மபான னெதிர்க்கிற்
குழவி யலியாகுங் கொண்டகா லொக்கிலே. (31)

கருத்து: புணர்ச்சிக் காலத்தில் ஆணுக்கு மூச்சு பிங்கலையில் இயங்கினால் ஆண் குழந்தை பிறக்கும். இடகலையில் இயங்கினால் பெண் குழந்தை பிறக்கும். விந்துவோடு செல்லும் பிராண வாயுவை அபான வாயு எதிர்த்தால் இரட்டைக் குழந்தை பிறக்கும். மூச்சுக் காற்று இடகலை, பிங்கலைகளில் ஒரே நேரத்தில் இயங்கினால் குழந்தை அலியாகப் பிறக்கும்.

வலத்தது - வலது நாடியில் (பிங்கலை) வாயு இயங்குதல். கால் ஒத்தல் - சூரிய கலை, சந்திர கலை ஒத்து இருத்தல்.

292. கொண்டநல் வாயு விருவர்க்கு மொத்தெழிற்
கொண்ட குழுவியுங் கோமள மாயிடுங்
கொண்டநல் வாயு விருவர்க்குங் குழறிடிற்
கொண்டது மில்லையாங் கோல்வளை யாட்கே. (ஊ)

கருப்பிணியும் யோகியும்

293. கோல்வளை உந்தியில் கொண்ட குழவியும்
தால்வளை உள்ளே தயங்கிய சோதியாம்
பால்வளர்ந்து உள்ளே பகலவன் பொன் உருப்
போல் வளர்ந்து உள்ளே பொருந்து உரு ஆமே.

கோல்வளை யுந்தியிற் கொண்ட குழவியுந்
[1]தால்வளை யுள்ளே [2]தயங்கிய சோதியாம்
பால்வளர்ந் துள்ளே பகலவன் பொன்னுருப்
போல்வளர்ந் துள்ளே பொருந்துரு வாமே. (32)

வேறு பாடம்: 1. தாய்வளை (சண்) (பா 3) 2. தாங்கிய (ஆ) I.

கருத்து: தாய் வயிற்றினுள் கொண்ட கரு, யோகிக்கு விசுத்தி என்ற ஆதாரத்தில், சோதி வித்து நிலையில் இருப்பதைப் போன்றது. கரு பத்து மாதம் குழவியாக வளர்வது, அந்த யோகிக்குக் கண்ணொளி பெருகுவதைப் போன்றது.

தால் வளை - தொண்டைச் சக்கரம்; விசுத்தி.

உருவம் யாரால்?

294. உருவம் வளர்ந்திடும் ஒண்-திங்கள் பத்தில்
பருவமது ஆகவே பாரினில் வந்து
மருவி வளர்ந்திடும் மாயையினாலே
அருவம் அது ஆவது இங்கு ஆர் அறிவாரே.

உருவம் வளர்ந்திடு மொண்டிங்கள் பத்திற்
பருவம தாகவே பாரினில் வந்து[1]
மருவி வளர்ந்திடு மாயையி னாலே
யருவம தாவதிங் காரறி வாரே. **(33)**

வேறு பாடம்: 1. வந்தது (எ) I; வந்திடும் (த) (வ)

கருத்து: உயிருக்கு உண்மையில் உருவம் இல்லை. உடலுக்கு வளர்ச்சியைத் தருபவள் மாயை.

மறைந்துள்ள மாயை

295. இட்டான் அறிந்திலன் ஏற்றவள் கண்டிலள்,
தட்டான் அறிந்தும் ஒருவர்க்கு உரைத்திலன்,
பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்கு உளன்,
கெட்டேன், இம் மாயையின் கீழ்மை எவ்வாறே.

இட்டா [1]னறிந்தில [2]னேற்றவள் கண்டிலள்[3]
தட்டா [4]னறிந்து மொருவர்க் குரைத்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனு மங்குளன்
கெட்டேனிம் [5]மாயையின் கீழ்மையெவ் வாறே.

வேறு பாடம்: 1. ரறிகில (ஆ) II; ரறிந்தில (அ ஊ எ ஒ) II. 2. ரேற்றவர் (அ ஆ எ) II. 3. கண்டிலர் (அ ஆ எ) II. 4. னறிந்த தொருவர்க் (ஆ) IV; னறிந்தானொருவர்க்குந் தான் சொல்லான் (மு) 5. னெம்மாயை (எ) I னம்மாயையின் (விசு) I.

கருத்து: கருப் பிடித்தமையை ஆணும் அறியவில்லை; பெண்ணும் அறியவில்லை. பிரமன் அறிந்தும் அவர்க்குச் சொல்லவில்லை. பரமனும் சாட்சியாக அங்கு உள்ளான். அவனும் உணர்த்தவில்லை. மாயையின் வஞ்சனை என்னே.

தட்டான் - பிரமன்.

பிறப்பு எதனால்?

296. இன்பு உற நாடி இருவரும் சந்தித்து,
துன்பு உறு பாசத்தில் தோன்றி வளர்ந்தபின்,
முன்பு உற நாடி நிலத்தில் முன் தோற்றிய
தொன்று உற நாடி நின்று ஓதலும் ஆமே.

[1]இன்புற நாடி யிருவருஞ் சந்தித்துத்[2]
துன்புறு பாசத்திற் றோன்றி வளர்ந்தபின்
[3]முன்புற நாடி [4]நிலத்தின்முன் றோற்றிய[5]
[6]தொன்றுற நாடிநின் [7]றோதலு மாமே. (35)

வேறு பாடம்: 1. இன்புறு (ஊ எ) I. 2. சிந்தித்து (அ இ) I. 3. னன்புற (ஆ ஊ) IV. 4. நிலத்தினில் முன்வந்து (ஒ) IV. 5. தோன்றிய (அ) I. 6. தொன்புற (அ இ ஊ எ) (சண்) (திருவிக) (விசு) (தி); தொண்புற (த) V. 7. றாதலு (விசு).

கருத்து: ஆண் பெண் இருவரும் இன்புறுதற்காகப் புணரும் புணர்ச்சியின் விளைவாக, ஓர் உயிர் தனது ஆணவமலம் காரணமாக, பெண்ணின் கருவில் புகுந்து, பிறந்து, அறிஞராக வளர்ந்த பின், மேம்பாடு அடைய விரும்பி, தன் பிறப்புக்குக் காரணமானவை பழவினைகளே என அறிந்து, வினையகற்றும் நெறியில் முயலுதலும் இயலும்.

உலகில் முன்பு தன்னைத் தோற்றுவித்த பழவினைகளை ஆராய்ந்து, நீக்குதலுமாகும் என்க. இப்பொருளுக்கு, 'தோற்றிய' என்னும் பாடம் (பிறவினை) பொருந்துவது என்க. அது வினைகளைக் குறித்தது. ஓதல் - நீக்குதல்.

குறிப்பு: பல சுவடிகளிலும் 'தொன்பு' என்றே பாடம் உள்ளது. அப்பாடங்கொண்டு, "தொன்பு - பு - விகுதி பெற்ற பண்புப் பெயர்" என விசுவநாதபிள்ளையும் தண்டபாணி தேசிகரும் குறிப்பர். (அன்பு போல). ஆனால் இதற்கு மேற்கோள் இல்லை. ஆதலின் 'தொன்பு' என்ற பாடம் 'தொன்று' என இப்பதிப்பில் திருத்தப் பெற்றது.

அவளுடைய குழந்தையா?

297. குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக்கூட்டு இட்டால்
அயிர்ப்பு இன்றிக் காக்கை வளர்க்கின்றது போல்
இயக்கு இல்லை, போக்கு இல்லை, என் என்பது இல்லை
மயக்கத்தால் ஆக்கை வளர்க்கின்றவாறே.

[1]குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக்கூட் டிட்டா
லயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றதுபோ
லியக்கில்லை போக்கில்லை [2]யென்னென்ப தில்லை
மயக்கத்தா [3]லாக்கை வளர்க்கின்ற வாறே. (36)

வேறு பாடம்: 1. குயிற்குட்டி (அ ஆ இ ஊ எ) II. 2. யேனென்ப (ஆ ஊ எ); யேதென்ப (ஓ) I; யேயென்பதில்லை (சண்) 3. காக்கை (அ இ ஒ) I.

கருத்து: குயில் தனது முட்டையைக் காக்கையின் கூட்டில் இட, நன்முட்டை என்றே எண்ணிக் காக்கை வளர்ப்பது போல, யாதோ ஓர் உயிர்க்கு இறைவன் அளித்த உடல், தாயின் வயிற்றில் கருவாக இடப்பட, தாயும் தன் குழந்தை என்று மயக்கத்தால் எண்ணி, பத்து மாதமும் கருவைக் காக்கின்றாள்.

இயக்கு - பெரு முயற்சியுடன் வேலை செய்தல். போக்கு - போக்கி விடுதல். என் என்பது - பிரசவ வேதனை இவ்வாறு உள்ளதே எனல்.

எங்கே தேடுகிறாய்?

298. முதற்கிழங்கு ஆய முளையாய், முளைப் பின்
அதின் புதலாய், பலமாய் நின்று அளிக்கும்
அதற்கு அதுவாய் இன்பம் ஆவது போல
அதற்கு அதுவாய் நிற்கும் ஆதிப் பிரானே.

முதற்கிழங் [1]காய [2]முளையாய் முளைப்பி
[3]னதிற்புத லாய்ப்பல மாய்நின் றளிக்கு
மதற்கது [4]வாயின்ப மாவது போல
வதற்கது வாய்நிற்கு மாதிப் பிரானே. (37)

வேறு பாடம்: 1. காய்முளையாயம் (ஆ) I. 2. முளையாயம் (பா 3) 3. னதர்ப்புத (த) 4. வாலின்ப (அ) I; வாமின்ப (தி) (விசு)

கருத்து: பயனாகிய இன்பம் மரத்திலேயே உள்ளது. அதுபோல உயிருக்குப் பயனாகிய ‘இன்பமாக’ ஈசன் இவ்வுயிரின் உள்ளும் உடம்பினுள்ளும் உள்ளான். வேறு பயனை வெளியில் தேடவேண்டா.

அடுத்த “ஏனோர்” என்ற பாடல், பின்னர்ச் “சீவன்” - இயலிலும் வருவது.

மறு பிறப்பு

299. பரத்தில் கரைந்து பதிந்த நற்காயம்
உருத்தரித்து இவ்வுடல் ஓங்கிட வேண்டின்,
திரைக்கடல் உப்புத் திரண்டது போலத்
திரித்துப் பிறக்கும் திருவருளாலே.

பரத்திற் [1]கரைந்து பதிந்தநற் காய
[2]முருத்தரித் திவ்வுட லோங்கிட வேண்டிற்[3]
றிரைக்கட லுப்புத் திரண்டது போலத்
[4]திரித்துப் பிறக்குந் திருவரு ளாலே. (38)

வேறு பாடம்: 1. பதிந்து (எ) I. 2. முருத்தெரிந் (இ) IV. 3. வேண்டித் (அ ஆ) I. 4. திரித்தும் (ஆ எ ஊ ஒ) I.

கருத்து: சங்கார காலத்தில் மாயையில் ஒடுங்கி இறைவனிடம் ஒடுங்கிய உடம்பு, மீண்டும் ஓர் உருவம் பெற்று உலகில் பிறக்க வேண்டும் என்றால், கடலில் கரைந்து ஒன்றாயிருக்கும் உப்பு, உப்பளத்தில் திரண்டு உருவம் பெறுவது போல, திருவருளால் பிறக்கும்.

பரம் - சிவம். பதிந்த - ஒடுங்கிய. காயம் - உடம்பு. திரித்து - மீண்டும். உடம்பு மாயையில் ஒடுங்க, மாயை பரத்தில் அடங்கும் என்க.

22. மூவகை யாருயிர் வர்க்கம்

உயிர்களின் வகை

300. விஞ்ஞானர் நால்வரும், மெய்ப் பிரளயாகலத்
தம் ஞானர் மூவரும், தங்கு சகலத்தின்
அஞ்ஞானர் மூவரும் ஆகும் பதின்மராம்;
விஞ்ஞானர் ஆதியர் வேற்றுமை தானே.

[1]விஞ்ஞானர் நால்வரு மெய்ப்பிரள யாகலத்
[2]தஞ்ஞானர் மூவருந் [3]தங்கு சகலத்தி
னஞ்ஞானர் மூவரு மாகும் பதின்மராம்
விஞ்ஞான ராதியர் வேற்றுமை [4]தானே. (1)

வேறு பாடம்: 1. விஞ்ஞான (அ ஆ ஊ) I. 2. தஞ்ஞான (உ ஊ ஈ எ) I; தைஞ்ஞான (அ ஆ) I. 3. தாங்கு (எ) IV. 4. காணே (இ ஈ) IV.

கருத்து: உயிர்கள் மூன்று வகை, விஞ்ஞானாகலர், பிரளயாகலர், சகலர் என. (இவருள் விஞ்ஞானாகலர் நான்கு வகை. பிரளயா கலர் மூன்று வகை. சகலர் மூன்று வகை. இவருள் பிரளயாகலர் பசுஞானம் உடையோர். சகலர் பாசஞானம் மட்டுமே உடையோராதலின் ‘அஞ்ஞானர்’ என்றார்.

பிரளயாகலத் தம் ஞானர் - பசு ஞானம் உடைய பிரளயாகலர். மூன்று வகைக்கும் உட்பிரிவுகள் மொத்தம் 10.

குறிப்பு: பதிப்புகளில் இவ்வியலின் முதற் பாடலாகச் "சத்தி சிவன்" என்பது உள்ளது. இவ்வியலுக்கு அது தொடர்பு அற்றது. சுவடிகளில் இப்பாடல் இவ்விடத்தில் இல்லை. இப்பொழுதைய பதிப்பில், அப்பாடல், பின்னே, "ஞானலிங்கம்" என்னும் அதிகாரத்தில் சேர்க்கப்படுகிறது. முன்னைய பதிப்புகளிலும் இவ்விடத்தில் அது, மீண்டும் வரலாக உள்ளது.

விஞ்ஞானாகலர் வகை

301. விஞ்ஞானர் கேவலத்து ஆராது விட்டவர்;
அஞ்ஞானர் அட்ட வித்தேசுரம் சார்ந்துளோர்,
எஞ்ஞானர் ஏழ்கோடி மந்திர நாயகர்;
மெய்ஞ்ஞானர் ஆணவம் விட்டு நின்றாரே.

[1]விஞ்ஞானர் கேவலத் [2]தாராது விட்டவ
[3]ரஞ்ஞான ரட்டவித் [4]தேசுரஞ் சார்ந்துளோ
ரெஞ்ஞான [5]ரேழ்கோடி மந்திர நாயகர்
மெய்ஞ்ஞான ராணவம் விட்டுநின் றாரே. (2)

வேறு பாடம்: 1. விஞ்ஞான (அ ஆ) I. 2. தாரது (அ ஆ இ) I. 3. தஞ்ஞான (த) 4. தேசுரர் (அ) I தேசராஞ் (துடி) 5. மேழ்கோடி (திருவிக).

கருத்து: விஞ்ஞானாகலருள் நால்வகை கூறினார்.

விஞ்ஞானர் (1) அஞ்ஞானர் (2) மெய்ஞ்ஞானர் என்னும் இரு வகையர். அவருள் ஆணவம் விட்டுநின்றோர் மெய்ஞ்ஞானர். மற்றையோர் அஞ்ஞானர். எஞ்ஞானர் - எல்லா ஞானமும் உடையோர்.

பிரளயாகலர் வகை

302. இரண்டாவதில் முத்தி எய்துவர் அத்தனை,
இரண்டாவதுள்ளே இருமல பெத்தர்,
இரண்டுஆகும் நூற்றெட்டு உருத்திரர் என்பர்
முரண்சேர் சகலத்தர் மும்மலத்தாரே.

இரண்டா வதின்முத்தி [1]யெய்துவ ரத்தனை
யிரண்டாவ [2]துள்ளே யிருமல [3]பெத்த
[4]ரிரண்டாகு நூற்றெட் டுருத்திர ரென்பர்
முரண்சேர் சகலத்தர் மும்மலத் தாரே. (3)

வேறு பாடம்: 1. யேத்துவ (ஆ) I. 2. துள்ளோ ரிருமல (ஊ) IV. 3. போதத்த (ஓ) II. 4. திரண்டாகு (ஈ) I.

கருத்து: மூவகைப் பிரளயாகலரைக் கூறி, சகலரைத் தன்மையாற் சுட்டினார்.

இரண்டாவதில் - அடுத்த படைப்பில். இருமல பெத்தர் - ஆணவம், கன்மம் என்ற இரண்டு மலம் உடைய (கட்டுண்ட) ஆன்மாக்கள். இவர் பிரளயாகலர். இரண்டு - பக்குவர், அபக்குவர்.

மூவகைச் சகலர்

303. பெத்தத்த சித்தொடு பேண்முத்தி சித்து-அது
ஒத்திட்டு இரண்டிடை ஈடுஉற்ற சித்துமாய்
மத்தத்து மும்மலம் வாட்டுகை மாட்டாதார்
சத்தத்து அழிந்து சகலத்து உளாரே.

[1]பெத்தத்த சித்தொடு [2]பேண்முத்தி சித்தது[3]
வொத்திட் டிரண்டிடை [4]யீடுற்ற சித்துமாய்
[5]மத்தத்து மும்மலம் வாட்டுகை மாட்டாதார்
சத்தத் [6]தழிந்து சகலத்து ளாரே.

வேறு பாடம்: 1. பெத்தத்தர் (எ) I. 2. பேண் முத்தச் (த); பேண்முத்திச் (சண்) 3. சித்தத்து (இ) I. 4. யூடுற்றார் (எ) I. 5. மத்தது (துடி) 6. தமிழ்ந்து (எ) IV.

கருத்து: பெத்த நிலையில் உள்ள சித்து (ஆன்மா) - இவர் அபக்குவர். சீவன் முத்தி பெற்ற சித்து (ஆன்மா) - இவர் சீவன் முத்தர். இவ்விரண்டிற்கும் இடையே சாதக நிலையில் ஈடுபடும் சித்து (ஆன்மா) - இவர் சாதகர். இவ்வாறு சகலர் மூவகையினர் என்க.

மலம் எல்லாம் வென்றோர்

304. சிவம் ஆகி ஐவகைத் திண்மலம் செற்றோர்
அவம் ஆகார்; சித்தர்; முத்தாந்தத்து வாழ்வார்
பவம் - ஆன தீர்வோர்; பசுபாசம் அற்றோர்
நவம் ஆன தத்துவம் நாடிக் கண்டாரே.

[1]சிவமாகி யைவகைத் [2]திண்மலஞ் செற்றோ
[3]ரவமாகார் சித்தர்முத் [4]தாந்தத்து வாழ்வார்
[5]பவமான தீர்வோர் பசுபாச மற்றோர்
நவமான தத்துவ நாடிக்கண் டாரே[6] (5)

வேறு பாடம்: 1. சிவமாதி (ஆ இ ஈ ஊ எ) I. 2. திரிமலஞ் (ஈ) I. 3. ரவமாகாச் (எ) I. 4. தாந்தத்துள் (பா 3) 5. பவமானந் (ஆ ஊ) IV. 6. கொண்டாரே (எ) IV.

கருத்து: சிவமே ஆகி, ஐந்து மலமும் வென்றோர் வீணே கழியார். சித்தரும் முத்தரும் அவரே. அவர்க்குப் பிறப்பில்லை. பசுத்தன்மையும் பாச ஞானமும் கழன்றோர் அவர். தத்துவ தரிசனம் பெற்றோர்.

சிவமாகி - சிவத்தின் தன்மையைப் பெற்று. ஐவகை மலம் -ஆணவம், மாயை, மாயேயம், கன்மம், திரோதாயி. அவம் - வீண். நவமான தத்துவம் - தத்துவ தரிசனம்; தத்துவங்களின் உண்மை.

அகலர்

305. விஞ்ஞானர் ஆணவம் கேவலம் மேவுவோர்;
தஞ்ஞானம் மாயையில் தங்கும் இருமலர்;
அஞ்ஞானர் அச்சகலத்தர் அகலராம்
விஞ்ஞானர் ஆதிகள் ஒன்பான் வேறு உயிர்களே.

விஞ்ஞான ராணவங் கேவல மேவுவோர்[1]
[2]தஞ்ஞான மாயையிற் றங்கு மிருமல
ரஞ்ஞான [3]ரச்சக லத்த ரகலராம்
விஞ்ஞான ராதிக ளொன்பான்வே றுயிர்களே[4]. (6)

வேறு பாடம்: 1. மேயுளோ (உ) III மெய்யுளோ (அ) III மேவுவ (சண்) 2. ரஞ்ஞான (உ) I. 3. சகல ரச்சக லத்தராம் (அ ஆ இ) I ரச்சக லத்தர் சகலராம் (எ) I. 4. பேறுயிர்களே I.

கருத்து: செயற்கையால் மும்மலமும் நீங்கப் பெற்று ‘அகலர்’ ஆவோர் ஒன்பது வகை. அவர்களும் விஞ்ஞானாகலர், பிரளயாகலர் என்ற பெயரைப் பெறுவர். அந்த ஒன்பது வகையினர், விஞ்ஞானருள் அபக்குவர் தவிர்த்த நால்வரும் பிரளயாகலருள் உருத்திரன் முதலிய ஐவரும் ஆவர்.

கேவலம் - தனி. தம் ஞானம் - பசு ஞானம். அகலர் - கலை நீங்கியவர்.

குறிப்பு: அனைத்துச் சுவடிகளிலும் 3-வது அடிப்பாடம் பொருந்த வில்லை. தருமபுரப் பதிப்பில் உள்ள பாடம் அதன் பொருத்தம் நோக்கிக் கொள்ளப்பட்டது.

அகலருக்கு மறுபிறப்பு

306. விஞ்ஞான கன்மத்தால் மெய்அகம் கூடிய
அஞ்ஞான கன்மத்தினால் சுவர்யோனி புக்கு
எஞ்ஞான மெய் தீண்டியே இடையிட்டுப் போய்
மெய்ஞ்ஞானர் ஆகி, சிவம் மேவல் உண்மையே.

[1]விஞ்ஞான கன்மத்தான் மெய்யகங் கூடிய[2]
[3]வஞ்ஞான கன்மத்தி [4]னால்சுவர் யோனிபுக்
கெஞ்ஞான மெய்தீண்டி யேயிடை யிட்டுப்போய்
மெய்ஞ்ஞான ராகிச் சிவமேவ லுண்மையே. (7)

வேறு பாடம்: 1. விஞ்ஞானர் (இ) IV விஞ்ஞானகன்மத்தர் (சண்) (திருவிக) 2. கூட்டிய (ஆ) IV; கூடி (ஈ) I; கூடியே (த) 3. தஞ்ஞான (த) 4. னால் சிவயோகிகள் (ஒ) IV; னார்சுவர்யோனிபுக் (சண்)

கருத்து: மேலான ஞானம், செயல் ஆகியவற்றால் மெய்ப்பொருளை அடைவதற்காக முயற்சி மேற்கொண்டு, அவ்வகையான ஞானம், செயல்கள் மேற்கொண்டு, சுவர்க்கத்தில் பிறந்து, உயர்தற்குரிய பலவகை ஞானமும் எய்தி, பிறகு மெய்ஞ்ஞானம் பெற்றுச் சிவத்தைச் சேர்வர்.

விஞ்ஞான கன்மம் - மேலான ஞான கர்மம். அஞ்ஞானம் - அந்த ஞானம். சுவர் யோனி - விண்ணுலகப் பிறப்பு. எஞ்ஞானம் - எவ் ஞானம் - எவ்வும் ஞானம் - உயர்தற்கு ஏதுவாகிய ஞானம்.

உயிர்வகை; மற்றொரு கோணம்

307. ஆணவம் துற்ற அவித்தாம் நனவு அற்றோர்
காணிய விந்துவாம்; நாத, சகல-ஆதி
ஆணவம்-ஆதி அடைந்து, அகன்றோர் அன்றே
சேண் உயர் சத்தி சிவதத்துவம் ஆமே.

ஆணவந் துற்ற வவித்தா நனவற்றோர்[1]
காணிய விந்துவா நாத சகலாதி
யாணவ மாதி [2]யடைந்தகன் றோரன்றே
சேணுயர் [3]சத்திசிவ தத்துவ மாமே. (8)

வேறு பாடம்: 1. நனவிற்றோர் (ஓ) I. 2. யடைந்தோரவரன்றே (எ); யடைந்தோனவனன்றே (அ இ ஈ ஊ ஓ) V; யடைந்தோர்க் கவரன்றே (த) 3. சிவமாயினாரே (ஆ) III.

கருத்து: ஆணவத்தின் காரியமான அறியாமையை உடைய கேவலாவத்தையைக் கடந்தால் சிவசோதியைக் காணலாம். நாதம் முதலிய தத்துவங்களையும், சகலம், சுத்தம், பரம் முதலிய அவத்தை வகைகளையும் கடந்தோர் சிவமேயாகி விடுவர்.

308. திலமத் தனைபொன் சிவஞானிக் கீந்தாற்
பலமுத்தி சித்தி பரபோக முந்தரும்
நிலமத் தனைபொன்னை நின்மூடர்க் கீந்தாற்
பலமுமற் றேபர போகமுங் குன்றுமே. (ஏ)

துரியநிலை அடைந்தோர்

309. கண்டிருந் தாருயி ருண்டிடுங் காலனைக்
கொண்டிருந் தாருயிர் கொள்ளுங் குணத்தனை[1]
நன்றிருந் தார்க்கருள் செய்திடு நாதனைச்
சென்றுணர்ந் தார்சிலர் தேவரு மாமே. (9)

வேறு பாடம்: 1. குணத்தினை (அ ஆ) I.

கருத்து: தரிசித்தோரது ஆன்ம போதத்தை நீக்கும் காலகாலனும் , தன்னைத் தலைவனாகக் கொண்டு வாழ்பவரை அடிமையாக ஏற்றுக் கொள்பவனும், நன்னெறியில் வாழ்பவர்க்கு அருள் செய்பவனும் ஆகிய சிவனை, துரிய நிலைக்குச் சென்று உணர்ந்தோர் சிலரே; அவர் தேவராதலும் ஆகும்.

குறிப்பு: பதிப்புகளிலும் அனைத்துச் சுவடிகயிலும் "ஆணவந் துற்ற" என்னும் பாடலுடன் "மூவகையாருயிர் வர்க்கம்" என்னும் அதிகாரம் முடிவுற, "பாத்திரம்" என்னும் அதிகாரம், "திலமத்தனை" என்னும் பாடலுடன் தொடங்குகிறது. அவ்வதிகாரத்தில் மற்றும் 3 பாடல்கள் உள்ளன. "திலமத்தனை" என்னும் பாடல், ஆசிரியரின் கருத்தோடு முரணுதலின் இடைச்செருகல் ஆகும். மற்ற 3 பாடல்களும் 'பாத்திரம்'

என்ற அதிகாரப் பெயர்க்குப் பொருந்தவில்லை. அவை விஞ்ஞானாகலரின் இயல்பைக் கூறுகின்றன. ஆதலின், இப்பொழுதைய பதிப்பில், அம் மூன்று பாடல்களும் முன் அதிகாரமாகிய 'மூவகை யாருயிர் வர்க்கத்துள்' அடக்கப்படுகின்றன.

நெஞ்ச விளக்கு

310. கைவிட்டிலேன் கருவாகிய காலத்தும்
மெய்விட்டிலேன் விகிர்தன் அடி தேடுவன்
பொய்விட்டு நானே; புரிசடையான் அடி
நெய் விட்டிலாத இடிஞ்சிலும் ஆமே.

கைவிட்டி லேன்கரு வாகிய காலத்து[1]
மெய்விட்டி லேன்விகிர் [2]தன்னடி தேடுவன்
பொய்விட்டு நானே புரிசடை யானடி
நெய்விட்டி [3]லாத விடிஞ்சிலு மாமே. (10)

வேறு பாடம்: 1. காலத்தில் (ஈ) III. 2. விருத்தன்னடி (ஈ) I. 3. டாத (த)

கருத்து: நான் கருவிலே கிடந்தபோதும் சிவபெருமானது திருவடி களைக் கைவிடவில்லை. அறிவறிந்த காலத்தில் பொய் நெறியை விட்டு, ஞானத்தைப் பற்றிக் கொண்டு அத்திருவடிகளைத் தேடுகின்றேன். அவை, நெய் நின்று எரியும் சுடர் போல என்பால் விளங்குபவை அல்லவோ? அவற்றை வெளியில் தேட வேண்டுமோ?

இடிஞ்சில் - அகல்.

சிவ ஞானி

311. ஆவன ஆவ, அழிவ அழிவன,
போவன போவ, புகுவ புகுவன,
காவலன் பேர் நந்தி, காட்டித்துக் கண்டவன்
ஏவன செய்யும் இளங்கிளையோனே.

ஆவன வாவ வழிவ வழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவ
[1]னேவன செய்யு மிளங்கிளை யோனே[2]. (11)

வேறு பாடம்: 1. னேவின (த) 2. மினக்கிளை (ஆ) IV.

கருத்து: உண்டாகும் விதியுடைய செல்வங்கள் உண்டாகும்; அழியும் விதியுடையவை அழியும். நம்மிடம் நடந்து, முடியும் விதியுடைய வினைகள் முடியும். புதியவையாய் வரும் விதியுடையவை வரும். எதுவும் நம் செயலன்று என்ற உண்மையை நந்தியாகிய இறைவன் காட்டக் கண்டிருக்கும் சிவஞானி ஏவிய பணிகளைத் தொண்டனாவான் செய்வான்.

இளங்கிளை - தொண்டன்.

குறிப்பு: அடுத்த அதிகாரமாக, அனைத்துச் சுவடிகளிலும், பதிப்புகளிலும் 'அபாத்திரம்' (மறு வடிவம்:அவபாத்திரம்) இடம் பெறுகிறது. அதில் 4 பாடல்கள் உள்ளன. அவற்றுள் 3 பாடல்கள் ஆசிரியரின் நடையினின்றும் வேறுபடுவதாலும், ஒரு பாடல் அவர் கருத்தோடு முரணுதலாலும் இடைச்செருகல் ஆகும்.

அபாத்திரம்

312. கோல வறட்டைக் குறித்துக் குளகிட்டுப்
பாலைக் கறந்து பருகுவ தென்னொக்குஞ்
சீலமு நோன்பு மிலாதவர்க் கீந்தது
காலங் கழிந்த பயிரது வாகுமே. (க)

313. ஈவதி யோக மியம நியமங்கள்
சார்வ தறிந்தன்பு தங்கு மவர்க்கன்றி
யாவ தறிந்தன்பு தங்கா தவர்களுக்
கீவ பெரும்பிழை யென்றுகொள் ளீரே. (ஔ)

314. ஆமா றறியா னதிபஞ்ச பாதகன்
றோமாறு மீசற்குந் தூய குரவற்குங்
காமாதி விட்டோர்க்குந் தூடணங் கற்பிப்போன்
போமாழ் நரகிற் புகான்போதங் கற்கவே. (ஔ)

315. மண்மலை யத்தனை மாதன மீயினு
மண்ண லிவனென்றே யஞ்சலி யத்தனா
யெண்ணி யிறைஞ்சாதாற் கீந்த விருவரு
நண்ணுவ ரேழா நரகக் குழியிலே. (ஏ)

23. யாக்கை நிலையாமை

மூலத்தை நோக்கி

316. மண் ஒன்று கண்டீர் இருவகைப்பாத்திரம்
திண்ணென்று இருந்தது தீயினைச் சேர்ந்ததும்,
விண்ணின்று நீர் விழின் மீண்டும் மண் ஆனாற்போல்
எண் இன்றி மாந்தர் இறக்கின்ற வாறே.

மண்ணொன்று கண்டீ [1]ரிருவகைப் பாத்திரந்
திண்ணென் றிருந்தது [2]தீயினைச் சேர்ந்ததும்[3]
விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணானாற்போ[4]
[5]லெண்ணின்றி மாந்த ரிறக்கின்ற வாறே. (1)

வேறு பாடம்: 1. ரிருவினைப் (அ ஈ எ ஒ) II. 2. தீவினை (இ ஒ) I (ப ா 3) 3. சேர்ந்தது (எ) I. 4. ணாவபோ (ஆ) II; ணாம்போ (ஊ) II . 5. லெண்ணின்ற (எ) I.

கருத்து: மண் ஒன்றே. அதில் வனையும் பாத்திரமே இரு வகை. சூளையில் சுட்டவுடன் திண்மை பெற்றது. அஃது உடைந்து, மழை நீரில் கரைந்து, மீண்டும் மண் ஆகின்றது. அது போல, உயிர் ஒன்று. பிறப்பு ஆண், பெண் என இருவகை. காலம் முடிந்தால் இவ்விருவகையாரும் இறப்பர்.

இருவகைப் பாத்திரம் - ஆண், பெண் என்னும் உடம்பு வகை. தீ - மண் பாண்டம் சுடும் தீ. இது பிறிதுமொழிதல் அணி.

யார் வருவார்?

317. [1]பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கா[2]
[3]லுண்டவிப் பெண்டிரு மக்களும் பின்செலார்
கொண்ட விரதமு [4] ஞானமு மல்லது
[5]மண்டி யவருடன் வழிநட வாதே[6]. (2)

வேறு பாடம்: 1. பண்டமேய் (அ) III; பண்டம்பொய்க் (ஆ எ) III. 2. விழுதலா (அ) II; விழுதரு (மு) 3. லுண்டவப் (எ) I; முண்டவிப் (மு) 4. தானமு (மு) 5. மண்டியவாயின (பதிப்.) 6. வாதே (பதிப்.)

கருத்து: உடம்பு பொருள்களை அனுபவிக்கும் வீடு போன்றது. இது முதுமையுற்று இறக்கும் போது, அனுபவித்த மனைவி மக்கள்

உடன் செல்லார் (இறவார்). உடம்பில் இருந்த உயிர் அடுத்த கதியை நாடிச் செல்லும் பொழுது, அது மேற்கொண்ட விரதமும் பெற்ற ஞானமும் அன்றி வேறு எதுவும் உடன் செல்லாது.

பின் தங்கி விடுபவராதலின் 'இப்பெண்டிரும் மக்களும்' என்றார். கூரை - கூரை வேய்ந்த வீடு. மண்டி - நெருங்கி. வழி - மறுமைக்குச் செல்லும் வழி.

நினைப்பையும் கழுவினார்

318. ஊர் எலாம் கூடி ஒலிக்க அழுதிட்டு,
பேரினை நீக்கிப் பிணம் என்று பேர் இட்டு,
சூரை அங்காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தாரே.

ஊரெலாங் கூடி யொலிக்க வழுதிட்டுப்[1]
பேரினை [2]நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
[3]சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினின் மூழ்கி நினைப்பொழிந் தாரே[4]. (3)

வேறு பாடம்: 1. வழுதிடப் (எ) IV. 2. மாற்றி (தி) 3. சூரையிற் (ஆ) IV. 4. தார்களே (எ) II.

கருத்து: ஊரார் பெரிதே அழுது, பிணம் எனக்கூறி, மயானத்தில் கொளுத்தி, நீராடி நினைப்பு ஒழிந்தார்.

மீண்டும் நுழையாது

319. காலும் இரண்டு, முகட்டு அலகு ஒன்று உள,
பாலுள் பருங்கழி முப்பத்திரண்டு உள,
மேல் உள கூரை பிரியும், பிரிந்த பின்
போல் உயிர் மீளப் புக அறியாதே.

காலு மிரண்டு [1]முகட்டல கொன்றுள
பாலுட் பருங்கழி முப்பத் திரண்டுள
மேலுள கூரை பிரியும் பிரிந்தபின்[2]
[3]போலுயிர் மீளப் [4]புகவறி யாதே. (4)

வேறு பாடம்: 1. முக்கட்டலக் (ஆ) I; முக்கட்டல (மு) 2. பிரிந்தற்றால் (ஆ) III; பிரிந்தால் (ஊ) II; பிரிந்தால் முன் (த) 3. போமுயிர் (ஊ) III; போயினரென்று புகுந்தறியாரே (மு) 4. புகுவறி (பா 3)

கருத்து: உடம்பு என்ற வீட்டுக்குச் கடைகால் இரண்டு. உச்சி அலக்கு ஒன்று. பக்கங்களில் பெரிய வரிச்சுக்கள் முப்பத்திரண்டு. இவை முறையே இரண்டு கால்களும், மண்டையோடும், விலா எலும்புகளும் ஆகும். இந்த வீட்டின் கூரை பிரியும். அதாவது உடல் இறக்கும். உயிர் போகும். மீண்டும் இந்த வீட்டில் வந்து புகாது.

முகட்டு அலகு - உச்சியில் போடப்பட்ட அலக்கு; தலையோடு. பருங்கழி - பெரிய கம்பு; விலா வெலும்புகள். போல் - ஒப்பில் போலி.

வினைமுடிந்தது; விழுந்தது உடல்

320. சீக்கை விளைந்தது, செய்வினை மூட்டு இற்ற;
ஆக்கை பிரிந்தது; அலகு பழுத்தது;
மூக்கினில் கைவைத்து மூடிட்டுக் கொண்டு போய்க்
காக்கைக்குக் கைப்பலி வைக்கின்றவாறே.

சீக்கை [1]விளைந்தது செய்வினை மூட்டிற்ற[2]
வாக்கை [3]பிரிந்த [4]தலகு பழுத்தது
மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டுபோய்க்
காக்கைக்குக் [5]கைப்பலி [6]வைக்கின்ற வாறே. (5)

வேறு பாடம்: 1. வளைந்தது (மு) 2. மூட்டற்ற (இ) I; மூடிற்று (தி) 3. பிரிந்தன (இஈ) IV. 4. வலகு (இ) IV; வலகை (ஐ) I. 5. காக்கைப் பலியிட்டுக் கைகொட்டும் வாறே (இ) IV. 6. காட்டிய (சண்).

கருத்து: உடம்பிலிருந்து உயிரை ஓட்டும் நிலை, முதுமையாலும் பிணியாலும் நேர்ந்தது. பிராரத்த வினை அனுபவித்துத் தீர்ந்தது. எலும்புகள் முதிர்ந்தன. உடம்பு பிணமாகியதும், மூச்சு உள்ளதோ என மூக்கில் கை வைத்துப் பார்த்து, மூடிப் பாடையில் இட்டு, இடுகாட்டுக்கு எடுத்துச் சென்று புதைப்பர். அதனை நாய்நரிகள் தோண்டும். எஞ்சியதைக் காக்கை தின்னும்.

சீக்கை - ஓட்டுதல்; உடம்பினின்று உயிரைப் போக்கும் நிலை. செய் வினை மூட்டு இற்ற - பிராரத்த வினைத் தொடர்பு முடிந்தது. அலகு - எலும்பு.

வந்தார், படுத்தார், மடிந்தார்

321. அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடியாரொடு மந்தணம் கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்ததே என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே.

அடப்பண்ணி வைத்தா ரடிசிலை யுண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டா
ரிடப்பக்க மேயிறை [1]நொந்ததே யென்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே. (6)

வேறு பாடம்: 1. நேர்ந்ததே (சண்)

கருத்து: உணவு சமைத்தற்கான பொருள்களை ஈட்டினார். நல்லுணவு சமைத்ததை உண்டார். பெண்டிருடன் இன்பம் கொண்டார். இடப்பக்கமாகவே, சிறிதே வலிக்கின்றது என்று கூறிப் படுத்தார். இறந்தார். வாழ்க்கை உண்பதும் இன்புறுவதும் ஆகி முடிந்து விடுகின்றது.

அட - சமைக்குமாறு. மந்தணம் - மறைவு; பால் உறவு.

செல்வம் உயிரை மீட்குமா?

322. மன்றத்தே நம்பிக்கு மாடம் எடுத்தது;
மன்றத்தே நம்பி சிவிகை பெற்று ஏறினான்;
மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்;
சென்று, 'அத்தா' என்ன, திரிந்திலன் தானே.

மன்றத்தே [1]நம்பிக்கு மாட மெடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகைபெற் றேறினான்
மன்றத்தே நம்பிமுக் கோடி வழங்கினான்
[2]சென்றத்தா வென்னத் திரிந்திலன் றானே. (7)

வேறு பாடம்: 1. நம்பி (ஓ) I; நம்பிதன் (பதிப்) 2. சென்றத்தா வென்று (சண்).

கருத்து: நம்பியின் சிறப்பால் ஊர்ப்பொதுவிடத்தில் அவனுக்கு அரண்மனை கட்டப்பெற்றது. அவன் பல்லக்கில் ஊர்ந்து பெரு

வாழ்வு வாழ்ந்தான். கொடை வள்ளலாக விளங்கினான். இப்பொழுது இறந்து பிணமானான். தன் பின்னே பலரும் சென்று 'எம் தலைவா' என அழைத்தும் அவன் மீளவில்லை.

மன்றம் - பலர் வழங்கும் இடம். திரிந்திலன் - மீண்டிலன்.

மனைவியும் மறந்தாள்!

323. வாசந்தி பேசி மணம் புணர்ந்து, அப்பதி
நேசத்தே கூடி நினைப்பு ஒழிவார்; பின்னை
ஆசந்தி மேல் வைத்து அமைய அழுதிட்டுப்
பாசம் தீச்சுட்டுப் பலி அட்டினார்களே.

வாசந்தி பேசி [1]மணம்புணர்ந் தப்பதி[2]
[3]நேசத்தே கூடி நினைப்பொழி வார்பின்னை
யாசந்தி மேல்வைத் தமைய வழுதிட்டுப்
[4]பாசந்தீச் சுட்டுப் பலியட்டி னார்களே. (8)

வேறு பாடம்: 1. மணம் புணர் (பதிப்) 2. தப்படி (ஒ) I; தம்பதி (பதிப்) தாள்பதி (மு) 3. நேசந்தெவிட்டி (எ); நேசத்தே கூட்டி (அ ஆ இ) III; நேசங்கை விட்டு நிலைகெட்டுறங்கினர் (மு) 4. பாசந்தி (சண்).

கருத்து: சடங்கு செய்து, மணம் புரிந்து, கணவனுடன் அன்பாகக் கூடி வாழ்ந்த மங்கையும், அவன் இறந்த பின்பு அந்த அன்பினை மறக்கின்றாள். உறவினர் அவனைப் பாடையில் வைத்து, ஒப்பாரி பாடி அழுது, தீயில் இட்டு, ஆண்டுதோறும் படைத்து அமைகின்றனர்.

வாசந்தி - ஒரு சடங்கு. பதி - கணவன். ஆசந்தி - பாடை. பாசத்தை, உடலுக்குத் தீயிடுவதால் மறக்கின்றனர் என்க.

சேர்த்தவன் அனுபவிக்கவில்லை

324. கைவிட்டு நாடிக் கருத்து அழிந்து அச்சு அற
நெய் அட்டிச் சோறு உண்ணும் ஐவரும் போயினார்;
மை இட்ட கண்ணாளும் மாடும் இருக்கவே
மெய் விட்டுப் போக விடைகொள்ளு மாறே.

கைவிட்டு நாடிக் கருத்தழிந் தச்சற
நெய்யட்டிச் சோறுணு மைவரும் போயினார்
மையிட்ட கண்ணாளு மாடு மிருக்கவே
மெய்விட்டுப் போக விடைகொள்ளு மாறே. (9)

கருத்து: உடம்பை வளர்த்த ஐம்பூதங்களும் வலிகுன்றின. நாடிகள் தளர்ந்தன. மனைவி மக்களும் ஈட்டிய செல்வமும் இருக்க, அவர் உடம்பைவிட்டுச் சென்றார்.

நாடி கைவிட எனக் கூட்டுக. நாடி நல்ல நிலையைக் காட்டாமற் போக என்பது பொருள். அச்சு - அச்சுப் போன்ற உயிர். ஏகதேசவுருவகம். ஐவர் - ஐம்பூதங்கள். மாடு - செல்வம்.

அழுவார்; உடன் வருவாரா?

325. பந்தல் பிரிந்தது, பண்டாரம் கட்டு அற்ற,
ஒன்பது வாய்தலும் ஒக்க அடைத்தன,
துன்பு உறு காலத் துரிசு வர மேன்மேல்
அன்புடையார்கள் அழுது அகன்றார்களே.

பந்தல் பிரிந்தது பண்டாரங் கட்டற்ற
வொன்பது [1]வாய்தலு மொக்க [2]வடைத்தன
துன்புறு [3]காலத் [4]துரிசுவர மேன்மே
லன்புடை யார்க [5]ளழுதகன் றார்களே. (10)

வேறு பாடம்: 1. வாசலு (ஆ இ ஊ எ) III. 2. வடைந்தன (எ) I. 3. காலந் (துடி) (த) 4. துரிசுற (த) 5. ளழுதகண்ணார்களே (ஆ இ ஊ) I; ளழுதகன்றாரே (பா 3).

கருத்து: நிழல் அளித்த பந்தல் பிரிந்தது. செல்வம் தந்த கருவூலம் பாதுகாவல் அற்றது. குடியிருந்த வீட்டின் ஒன்பது வாயில்களும் அடைபட்டன. துன்புறுகின்ற காலம் வந்தது. அன்புடையவர்கள் அடுத்தடுத்து வந்து, அழுது, நீங்கினர்.

பண்டாரம் - கருவூலம். உயிர் ஆகிய செல்வத்தைப் பாதுகாத்தலின் உடம்பைப் பண்டாரம் என்றார். வாய்தல் - துவாரம்; வழி. துரிசு - விரைவு. துரிதம் என்பதன் சிதைவு. இறப்பினால் துன்புறுகின்ற காலம் விரைவில் வர என்க.

வாகனம் மாறிவிட்டது

326. நாட்டுக்கு நாயகன் நம் ஊர்த் தலைமகன்
காட்டுச் சிவிகை ஒன்று ஏறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே.

நாட்டுக்கு நாயக னம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகையொன் றேறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல [1]முன்னே பறைகொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே. (11)

வேறு பாடம்: 1. நாம முறைகொட்ட (இ) IV.

கருத்து: நாட்டுக்கு மன்னன், யானை யேறுவதை விட்டுப் பாடையேற்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டான்.

கடைமுறை - கடைசியில்.

தத்துவங்கள் பிரிந்தன

327. முப்பதும் முப்பதும் முப்பத்தறுவரும்
செப்பும் மதில் உடைக் கோயிலுள் வாழ்பவர்,
செப்பும் மதில் உடைக் கோயில் சிதைந்த பின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத்தாரே.

முப்பது முப்பது முப்பத் தறுவருஞ்
[1]செப்பு மதிலுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்பு மதிலுடைக் கோயில் சிதைந்தபி
[2]னொப்ப வனைவரு மோட்டெடுத் தாரே. (12)

வேறு பாடம்: 1. செப்ப (துடி) 2. னொப்பிய வைவரு (ஓ) II.

கருத்து: உடம்பு என்ற கோயிலில் வாழ்ந்த 96 தத்துவ தாத்துவீகங்களும் நீங்கின.

தத்துவ தாத்துவீகங்கள் 96. கோயில் - உடம்பு. ஓட்டு - ஓடுதல். எடுத்தார் - தொடங்கினார். மதில் - மரூஉ.

அன்போடு எரியூட்டினார்!

328. மதுவூர் குழலியும் மாடும் மனையும்
இதுவூர் ஒழிய இதணம் - அது ஏற்றி,
பொதுவூர், புறஞ் சுடுகாடு - அது நோக்கி
மது ஊர வாங்கியே வைத்து அகன்றாரே.

மதுவூர் குழலியு மாடு மனையு
மிதுவூ ரொழிய [1]விதணம தேற்றிப்[2]
பொதுவூர் புறஞ்சுடு காடது நோக்கி
[3]மதுவூர வாங்கியே வைத்தகன் றாரே[4]. (13)

வேறு பாடம்: 1. விமானம் (எ) IV. 2. தேறி (அ ஆ ஊ எ) (பா 3) II. 3. யதுவூர் (சண்) 4. றார்களே (பா 3)

கருத்து: மனைவியும் செல்வமும் வீடும் ஊரில் இருப்ப, இறந்தவனைப் பாடையில் ஏற்றி, சுடுகாட்டிற்குச் சென்று, மிக்க அன்புடன் சிதையில் வைத்து நீங்கினர்.

இதணம் - நடைப் பரண்; பாடை. ஊர்ப்பொது என மாற்றுக. ஊர்ப்பொதுவும் ஊர்ப்புறமுமாகிய சுடுகாடு என்க. மது - தேன்; இங்கு அன்பு. ஊர - மேலெழ. வாங்கி - பாடையிலிருந்து எடுத்து. அன்பு மேலெழ என்பது அங்கதம்.

உடன் வருபவன் சிவன்

329. வைச்சு அகல்வு உற்றது கண்டு மனிதர்கள்
அச்சு அகலாது என நாடும் அரும்பொருள்
விச்சு - அதுவாய்ப் பின் தொடர்வுறும், மற்று அவர்
எச்சு, அகலா நின்று, இளைக்கின்ற வாறே.

[1]வைச்சகல் வுற்றது கண்டு மனிதர்க
ளச்சக [2]லாதென நாடு மரும்பொருள்
[3]விச்சது வாய்ப்பின் [4]றொடர்வுறு மற்றவ[5]
ரெச்சக லாநின் றிளைக்கின்ற வாறே. (14)

வேறு பாடம்: 1. வைச்சகலுற்றது (ஆ இ ஊ) III. 2. லாதென்றாடு (ஊ) II நாளு (பா 3) 3. பிச்சது (திருவிக) (த) 4. றொடரறு (பா 3) 5. மாற்றவ (ஆ ஊ) I .

கருத்து: வாழ்ந்தவர் பிணமாதலையும், அன்புற்றவர் அவரைச் சுடுகாட்டில் வைத்து நீங்குவதையும் அறிஞர்கள் கண்டு, வாழ்வுக்கு அச்சு இறைவனே என்றும், அவன் உயிரை எக்காலத்தும் விட்டுப் பிரிவதில்லை என்றும் ஊகித்து அறிந்து, அவனை நாடுவர். இறைவன் இறந்த உயிரை, முத்திக்கு வித்தாகி நின்று, பின் தொடர்வான். ஆனால் இறந்தவரோ, அடுத்தடுத்துப் பிறந்து இளைத்து, இறைவனின் நினைவே இன்றி மெலிந்து இறக்கின்றனர்.

அச்சு - அச்சாணி. அரும்பொருள் - இறைவன். விச்சு - வித்து. இறைவன் தன் அன்பரை வீடுபேற்றிற்கு வித்தாய்ப் பின் தொடர்வான். எச்சு - எய்த்து என்பதன் மரூஉ.

கடனைக் கழிக்கிறார்கள்

330. ஆர்த்து எழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக் காலே ஒழிவர், ஒழிந்தபின்
வேர்த்தலைப் போக்கி விறகு இட்டு எரி மூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதி இலோரே.

ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரு மக்களு
மூர்த்துறைக் காலே [1]யொழிவ ரொழிந்தபின்
வேர்த்தலைப் போக்கி விறகிட் டெரிமூட்டி
[2]நீர்த்தலை மூழ்குவர் நீதியி லோரே. (15)

வேறு பாடம்: 1. வொழிய (ஆ) I; யொழிவா யொழிந்தபின் (ஊ) I.
2. நீர்த்துறை (அ) II.

கருத்து: உறவும் மனைவியும் பெண் மக்களும் ஊர் எல்லையிலே நிற்பர். ஆண்மக்கள் தந்தையின் உடலை எரித்துவிட்டு நீராடுவர்.

துறை - எல்லை. மக்களும் - ஊராரும். ஒழிவர் - நின்று போவர். வேர்த் தலைப் போக்கி - பாதம் முதல் தலை முடிய நெடுகிலும். உறவான பிள்ளைகள் அயலார் போல் அகன்றமையின் நீதியிலோர் என்றார்.

உதவாக்கரை

331. வளத்து இடை முற்றத்து ஓர் மாநிலம் முற்றும்
குளத்து மண் கொண்டு குயவன் வனைந்தான்;
குடம் உடைந்தால் அவை ஓடு என்று வைப்பர்
உடல் உடைந்தால் இறைப்போதும் வையாரே.

வளத்திடை முற்றத்தோர் மாநில முற்றுங்
[1]குளத்துமண் கொண்டு குயவன் வனைந்தான்
குடமுடைந் தாலவை யோடென்று வைப்ப
[2]ருடலுடைந் தாலிறைப் போதும்வை யாரே. (16)

வேறு பாடம்: 1. குளத்தின் மண்கொண்டு (இ) III. 2. ருடலிறந்தா (சண்)

கருத்து: உலகம் முழுதும் உள்ள மக்களைப் பிரமன் படைத்தான். எவ்வாறு? பிரமன் ஆகிய குயவன், மாயை என்ற குளத்தில் மண் எடுத்து, தாயின் இடையாகிய முற்றத்தில் வனைந்தான். குடம் உடைந்தால் ஒடு உதவும் என்று பாதுகாத்து வைப்பர். உடல் உடைந்தால் கணப்பொழுதும் பாதுகாக்கமாட்டார்.

மாநிலம் - உலகம். இடைமுற்றத்து - தாயின் இடையாகிய முற்றத்தில். குளம் - மாயை. மண் - கரு. குயவன் - பிரமன்.

கட்டுடல் கரியாயிற்று

332. ஐந்து தலைப்பறி, ஆறு சடை உள;
சந்து - அவை முப்பது; சார்வு பதினெட்டு;
பந்தலும் ஒன்பது; பந்தி பதினைந்து
வெந்து கிடந்தது, மேல் அறியோமே.

ஐந்து தலைப்பறி யாறு சடையுள
சந்தவை முப்பது சார்வு பதினெட்டுப்
பந்தலு மொன்பது பந்தி பதினைந்து
வெந்து கிடந்தது மேலறி யோமே. (17)

கருத்து: உடம்பு வெந்து அழிந்தது.

தலைப்பறி - சிறந்த பொறிகள்; சிறந்த கூடை எனலுமாம். அது வெந்து கிடந்தது. சடை - பின்னிக் கிடப்பனவாகிய ஆதாரங்கள். சந்து - பொருத்து; எலும்பு. சார்வு பதினெட்டு - பக்க எலும்புகள் 18. பந்தல் 9 - மேல் தோல், நிறத்தோல், உணர்ச்சி, மயிர், நிணம், நரம்புக்கட்டு, கூழ், தசைப்பொருந்துக்கள் இரண்டு வகை ஆகியன. பந்தி - எலும்பு வரிசை.

பிறந்தது; வளர்ந்தது; இறந்தது

333. அத்திப் பழமும் அறைக்கீரை நல் வித்தும்
கொத்தி உலைப்பெய்து கூழ் அட்டு வைத்தனர்;
அத்திப் பழத்தை அறைக்கீரை வித்து உண்ண,
கத்தி எடுத்தவர் காடு புக்காரே.

அத்திப் பழமு மறைக்கீரை நல்வித்துங்
கொத்தி யுலைப்பெய்து கூழட்டு வைத்தன
ரத்திப் பழத்தை யறைக்கீரை வித்துண்ணக்
கத்தி யெடுத்தவர் காடுபுக் காரே. (18)

கருத்து: சுரோணிதம், சுக்கிலம் - இரண்டும் தாயின் கருப்பையில் ஒன்று சேர்ந்தன. சுரோணிதம் சுக்கிலத்தில் கலந்தது. அதனால் கரு உண்டாகியது. அக்கரு உயிர்த்துப் பிறந்து அழுத குழந்தை, வளர்ந்து, முதுமை எய்தி இறந்தது.

அத்திப் பழம் - சுரோணிதம். அறைக்கீரை வித்து - சுக்கிலம். உலை - கருப்பை. கத்தி எடுத்தவர் - எடுக்கப்பெற்றுக் கத்தியவர் என மாற்றுக. இது பிறந்த குழந்தையைக் குறிக்கும்.

கூரை இல்லாத கோயில்

334. மேலும் முகடு இல்லை, கீழும் வடிம்பு இல்லை,
காலும் இரண்டு, முகட்டு அலகு ஒன்று உண்டு;
ஓலையால் மேய்ந்த வாய் ஊடு வரியாமை
வேலையான் மேய்ந்ததோர் வெள்ளித் தளியே.

மேலு முகடில்லை கீழும் வடிம்பில்லை
காலு மிரண்டு [1]முகட்டல கொன்றுண்டு
வோலையான் [2]மேய்ந்தவா யூடு வரியாமை[3]
வேலையான் மேய்ந்ததோர் வெள்ளித் தளியே[4]. (19)

வேறு பாடம்: 1. முகட்டலக் (ஆ இ ஊ) I. 2. மேய்ந்தவரூடு (இ எ ஒ) I. 3. வரிந்தமை (எ) II; வரிக்காமை (ஒ) I; வரிதமை (சண்) 4. தகளியே (ஈ ஊ); தளிகையே (அ எ) I.

கருத்து: பிரமன் ஒருகோயில் கட்டினான். விந்துவைக் கொண்டு அவன் உருவாக்கிய உடம்பே அது. அதற்கு மேலே கூரை, கீழே

அடித்தளம் இரண்டும் இல்லை. இரண்டு காலும், உச்சி அலகும் (மண்டையோடு) உண்டு. தோலால் போர்த்தப்பட்டுள்ளது. இடையிடையே பொத்தல்கள் உள்ள இடங்களில் வார் இட்டு வரியப்படவில்லை.

முகடு - கூரை. வடிம்பு - வரிச்சல், அடி நிலை. முகட்டு அலகு - நடு விட்டம். மண்டையோடு. ஓலை - மேல்தோல். வேலையான் - படைக்கும் தொழிலோன்; பிரமன். வெள்ளி - விந்து. தளி - கோயில்.

அரங்கம் எரிந்தது

335. கூடம் கிடந்தது, கோலங்கள் இங்கு இல்லை,
ஆடும் இலையமும் அற்றது; அறுதலும்,
பாடுகின்றார் சிலர் பண்ணில் அழுதிட்டுத்
தேடியே தீயினில் தீயவைத்தார்களே.

கூடங் கிடந்தது கோலங்க ளிங்கில்லை
யாடு மிலையமு மற்ற தறுதலும்[1]
பாடுகின் றார்சிலர் பண்ணி லழுதிட்டுத்
[2]தேடியே தீயினிற் றீயவைத் தார்களே. (20)

வேறு பாடம்: 1. தறுத்தலும் (அ ஆ இ ஈ உ ஓ) I. 2. தேடிய (அ ஆ இ எ) I.

கருத்து: நடன அரங்கம் பாழாய்க் கிடந்தது. அணிகள் இல்லை. ஆட்டமும் தாளமும் இல்லை. சிலர் ஒப்பாரி பாடி அழுது, பின் அவ்வரங்கத்தைத் தீயிட்டு எரித்தனர்.

கூடம் - அரங்கம். ஆடும் - நடனமும். இடைக்குறை; இலையம் - தாளம். இது பிறிது மொழிதல் அணி. 'ஆட்டம் நின்ற பின் பாடுகின்றார்' என்பது அங்கதம். 'பண்ணில் அழுதிட்டு' என்பதும் அது.

திடுமென்ற இடி

336. முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்,
இட்டது தான் இல்லை ஏதேனும் ஏழைகாள்
பட்டது பார்; மணம் பன்னிரண்டு ஆண்டினுள்,
கெட்டது எழுபதில், கேடு அறியீரே.

முட்டை பிறந்தது முந்நூறு நாளினி
லிட்டது தானில்லை யேதேனு மேழைகாள்
பட்டது பார்மணம் பன்னிரண் டாண்டினுட்[1]
கெட்ட தெழுபதிற் [2]கேடறி யீரே. (21)

வேறு பாடம்: 1. டாண்டினிற் (எ) IV. 2. கேட்டறியீரே (எ) IV.

கருத்து: கரு முந்நூறு நாளில் உயிர்த்தது. அது வளர்வதற்கு உணவு யாரும் அளிக்கவில்லை. உலகில் பிறந்தது. 12 ஆண்டினுள் திருமணம் செய்தது. எழுபது வயதில் இறந்தது. அறிவற்றவர்களே, இந்த இறப்பின் எதிர்பாராத் தன்மையை நீவீர் அறியவில்லையே.

முட்டை - கரு. இட்டது - வளர்வதற்காக இட்ட பொருள். இட்டது தான் ஏதேனுமில்லை எனக் கூட்டுக. நூறாண்டும் வாழவில்லை என்பதால் 'கெட்டது எழுபதில்' என்றார். 'நூறுக்கு முன் தோன்றும் பத்துக்களுள் ஒன்றில்' என்ற நயம் காண்க. இருபதிலும் இறக்கக்கூடுமன்றோ?

விடிந்த அன்றே இரவு!

337. இடிஞ்சில் இருக்க விளக்கொளி கொண்டால்
முடிஞ்சது அறியார் முழங்குவர் மூடர்;
விடிஞ்சு இருள் ஆவது அறியா உலகம்
படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே.

இடிஞ்சி லிருக்க [1]விளக்கொளி கொண்டால்[2]
முடிஞ்ச தறியார் முழங்குவர் மூடர்
விடிஞ்சிரு ளாவ தறியா வுலகம்[3]
படிஞ்சு கிடந்து [4]பதைக்கின்ற வாறே. (22)

வேறு பாடம்: 1. விளக்கெரி (அ எ) IV. 2. கொண்டு (மு) 3. துலகம் (மு) 4. பகைக்கின்றவாறே (மு)

கருத்து: அகல் இருக்கச் சுடர் அணையுமானால், எண்ணெய் தீர்ந்தது என அறியாமல் மூடர் கதறுவர். அதுபோல் உடம்பு இருக்கச் செயல் நிற்குமானால், உயிர் போயிற்று என அறிய வேண்டும். விடிந்து ஒளிவரும் நாளிலேயே இருளும் வருகின்றது. மக்கள் அதை எண்ணாமல் இறப்பைப் பார்த்து நடுங்குகின்றனர்.

குடல் சரிந்தது

338. மடல் விரி கொன்றையன் மாயன் படைத்த
உடலும் உயிரும் உருவம் தொழாமல்
இடர் படர்ந்து ஏழாம் நரகில் கிடப்பர்
குடர்பட, வெந்தமர் கூப்பிடுமாறே.

மடல்விரி கொன்றையன் மாயன் படைத்த
வுடலு முயிரு முருவந் தொழாம
லிடர்படர்ந் தேழா நரகிற் கிடப்பர்
குடர்பட வெந்தமர் கூப்பிடு மாறே. (23)

கருத்து: உடம்பைப் படைத்து உயிர் வாழ்வைத் தந்த இறைவனைச் சிவன் என்றோ, திருமால் என்றோ தொழாமல், உறவினர் கதற இறந்து, குடல் சரிய, நரகில் கிடந்து துன்புறுவர்.

படைத்த உடலும் உயிரும், கொன்றையன், மாயன் உருவம் தொழாமல் எனக் கூட்டுக. வெம் தமர் - அன்புடைய உறவினர். உடலும் உயிரும் உள்ள வாழ்வின் போதே உருவம் தொழ வேண்டும் என்பது குறிப்பு.

எதிர்பாரா இறப்பு

339. குடையும் குதிரையும் கொற்ற வாளும் கொள்
மிடையும் அக்காலம் இருந்து நடுவே
உடையும் மனிதனார் போகும் அப்போதே
அடையும் இடம் வலம் ஆருயிராமே.

குடையுங் குதிரையுங் கொற்றவா ளுங்கொண்
[1]மிடையுமக் கால மிருந்து நடுவே
[2]யுடையு [3]மனிதனார் போகுமப் போதே
யடையு மிடம்வல மாருயி ராமே. (24)

வேறு பாடம்: 1. டிடையு (அ ஆ இ ஈ ஊ ஒ) I. 2. புடையு (ஆ இ உ ஊ ஒ) I. 3. மனிதனாற் (எ) I.

கருத்து: மனிதனார் குடையும் குதிரையும் வாளும் கொண்ட காலத்திலேயே, அவரது உடலின் நடுவே இருந்து இடம் வலமாக மாறி இயங்கும் மூச்சுக்காற்று, (அவர்) உலாப் போகும் அப்போதே உடையும்.

ஆருயிர் - மூச்சுக்காற்று. இருத்தலும் அடைதலும் மூச்சுக்காற்றின் வினைகள்.

கொள் - கொள்கின்ற. கொள்கின்ற காலம், மிடையும் காலம் எனத் தனித்தனிக் கூட்டுக.

கூத்து முடிந்தது

340. காக்கை கவரில் என்? கண்டார் பழிக்கில் என்?
பால்துளி பெய்யில் என்? பல்லோர் பழிச்சில் என்?
தோல் பையினின்று தொழில் அறச் செய்து, ஊட்டும்
கூத்தன் புறப்பட்டுப் போன இக்கூட்டையே.

காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
[1]பாற்றுளி பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
[2]தோற்பையி னின்று தொழிலறச் செய்தூட்டுங்[3]
கூத்தன் புறப்பட்டுப் போனவிக் கூட்டையே. (25)

வேறு பாடம்: 1. பார்த்துழிப் (சண்) 2. தோற்பையுணின்று (எ) IV. 3. செய் திட்டுங் (த)

கருத்து: வாழ்க்கை ஆகிய கூத்தை ஆடியவன் போய்விட்டான். இதுவரை தன் வினைப் பயன்களை அனுபவித்தான். இனி அவன் பிணத்தைக் காக்கை கொத்தினால் என்ன? கண்டோர் பழித்தால் என்ன?

பழிச்சில் - புகழ்ந்தால். அற - முழுவதும். ஊட்டும் - ஊட்டப்படும்; வினைப் பயனை அனுபவித்தற்கு இடமாகிய உடம்பு, அவ்வனுபவத்தைக் கொடுக்க, அதைப் பெற்றுக் கொள்ளும். பெறுபவன் கூத்தன். கூத்தன் - உயிர். வாழ்க்கையாகிய கூத்தைப் புரிபவன்.

பட்டாடையும் கிழியும்

341. மாறு திருத்தி வரம்பு இட்ட பட்டிகை
பீறும்; அதனைப் பெரிது உணர்ந்தார் இல்லை;
கூறும் கருமயிர் வெண்மயிர் ஆவதும்;
ஈறும் பிறப்பும் ஓர் ஆண்டு எனும் நீரே.

மாறு திருத்தி வரம்பிட்ட பட்டிகை
[1]பீறு மதனைப் பெரிதுணர்ந் தாரில்லை
கூறுங் கருமயிர் வெண்மயி ராவது
மீறும் பிறப்புமொ [2]ராண்டெனு நீரே. (26)

வேறு பாடம்: 1. வீறும் (அ ஆ இ ஒ) I. 2. ராண்டினுணீரே (அ) I.

கருத்து: அழகிய பட்டாடைகூடக் கிழியும். அது போன்று ஒருவனுக்கு இளமை நீங்கும்; முதுமை வரும். ஒருவன் பிறந்த ஆண்டிலேயே இறப்பதும் உண்டு. பிறந்தவன் இறத்தல் உறுதி.

மாறு - சிக்கல். வரம்பு - கரை. பட்டிகை - பட்டாடை. பீறும் - கிழியும். ஆவதும் உணர்ந்தார் இல்லை எனப் பின்னும் கூட்டுக. 4 ஆம் அடிப்பொருள்: பிறப்பும் இறப்பும் ஒரே ஆண்டில் நிகழும் அளவில் அத்துணை விரைவாக முடிந்துவிடும் தன்மையுடையது வாழ்க்கை. நீர் - தன்மை.

குறிப்பு: இப்பாடல் அனைத்துச் சுவடிகளிலும், பதிப்புகளிலும் உயிர் நிலையாமை எனப் பெயரிட்ட அதிகாரத்தில் உள்ளது. இஃது இவ்வதிகாரத்தில் இருத்தலே பொருத்தம்.

24. செல்வ நிலையாமை

அரசு பறி போகும்

342. அருளும் அரசனும் ஆனையும் தேரும்
பொருளும் பிறர் கொள்ளப் போவதன் முன்னம்
தெருளும் உயிரொடும் செல்வனைச் சேரில்
அருளும்; பினை அவன் மாதவம் நன்றே.

அருளு [1]மரசனு மானையுந் தேரும்
பொருளும் [2]பிறர்கொள்ளப் போவதன் முன்னந்
தெருளு முயிரொடுஞ் செல்வனைச் சேரி
[3]லருளும் [4]பினையவன் மாதவ நன்றே[5]. (1)

வேறுபாடம்: 1. மரசு மியானையுந் (ஊ) II மரசரு (எ) IV மரசுந்தேரும் பிறர்கொள்ள (ஊ) IV. 2. கலங்கிடும் (இ) IV. 3. மருளும் (ஆ இ ஈ எ ஒ) II. 4. யான் (த) 5. மன்றே (சண்); மாமன்றே (ஓ) IV.

கருத்து: அருளவல்ல அரசனும் செல்வனைச் சேரின், அச்செல்வன் (இறைவன்) அருள்வான்.

நிலவும் இருளடையும்

343. இயக்குஉறு திங்கள் இருட் பிழம்பு ஒக்கும்
துயக்கு உறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா;
மயக்கு அற நாடுமின் வானவர் கோனைப்
பெயல் - கொண்டல் போலப் பெருஞ் செல்வம் ஆமே.

இயக்குறு திங்க ளிருட்பிழம் பொக்குந்
துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா
மயக்கற நாடுமின் வானவர் கோனைப்
[1]பெயற்கொண்டல் [2]போலப் பெருஞ்செல்வ மாமே. (2)

வேறு பாடம்: 1. பெயக்கற்ற கொண்டல் (இ) IV; 2. பாலப் (சண்)

கருத்து: நிறை நிலவாய்ப் பொலியும் சந்திரனும் ஒரு நாள் கறை இருளாகும். ஆதலின் செல்வம் வறுமைக்கு வழிவிட்டு நீங்கும் என்பது சொல்லாமலே பெறப்படும். தேவர் தலைவனை நாடுக. அவன் மேகம் போல நின்று அருள் தருவான்.

இயக்கு - இயங்குதல். திங்கள் - சந்திரன். அது தேய்பிறையில் ஒளிகுன்றி அமாவாசை அன்று இருட்செறிவாகும். துயக்கு - துன்பம். சந்திரன் ஒக்கும் செல்வம் என்க. பெயல் கொண்டல் - மழை மேகம்.

தன் நிழலில் ஒதுங்க முடியுமா?

344. தன்னது சாயை தனக்கு உதவாது கண்டு
என்னது மாடு என்று இருப்பர்கள் ஏழைகள்;
உன் உயிர் போம்; உடல் ஒக்கப் பிறந்தது
கண்ணது காண்-ஒளி கண்டு கொள்ளீரே.

தன்னது சாயை தனக்குத வாதுகண்
டென்னது மாடென் றிருப்பர்க ளேழைக
[1]ளுன்னுயிர் போமுட லொக்கப் பிறந்தது
கண்ணது காணொளி கண்டுகொள் ளீரே. (3)

வேறு பாடம்: 1. ளுண்ணுயிர் (ஆ இ) IV.

கருத்து: உயிர் சென்று நுழைந்த உடம்பில் அதனோடு தங்கி, அது பிறவியாகப் பிறந்த பொழுது உடன் பிறந்தது ஓர் ஒளி. அது புருவ மத்தியில் உள்ளது. உயிருணர்வை இயக்கும் இறைவன் அவ்வுணர்வு விழித்திருக்கும் (சாக்கிரம்) இடமாகிய புருவமத்தியில் ஒளியாகத் தோன்றுவான். ஏனையோர்க்கு அவ்வுணர்வில் மறைந்து நிற்பவன், யோகிக்கு ஒளியாக வெளிப்பட்டுத் தோன்றுவான்.

தேனீயின் கதி

345. ஈட்டிய தேன்பூ மணம் கண்டு இரதமும்
கூட்டிக் கொணர்ந்து ஒரு கொம்பு இடை வைத்திடும்;
ஓட்டித் துரந்திட்டு அது வலியார் கொளக்
காட்டிக் கொடுத்து, அவை கைவிட்ட வாறே.

ஈட்டிய தேன்பூ [1]மணங்கண் டிரதமுங்
கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடு
மோட்டித் துரந்திட் டதுவலி யார்கொளக்
காட்டிக் [2]கொடுத்தவை கைவிட்ட வாறே. (4)

வேறு பாடம்: 1. மணங்கொண் (அ ஆ ஒ ஓ) I. 2. கொடுத்தவர் (அ ஆ இ ஊ ஒ) I.

கருத்து: தேனீக்கள் பூவின் மணத்தைக் கொண்டு, அவற்றின் அருகில் சென்று, தேனோடு மகரந்தப் பொடியும் கொண்டு வந்து மரக்கிளையில் தேன்கூடு கட்டிச் சேர்த்து வைக்கும். வலிமையுடையோர் அத்தேனைக் கொள்ளுமாறு தாமே காட்டிக்கொடுத்துப் பிறகு நீங்கும்.

தேன் - தேனீ. இரதம் - சுவை. அவை - தேனீக்கள். அவை காட்டிக் கொடுத்துக் கைவிட்டவாறே என மாற்றுக.

பற்று வேண்டா

346. தேற்றத் தெளிமின், தெளிந்தீர் கலங்கன்மின்,
ஆற்றுப் பெருக்கின் கலக்கி மலக்காதே
மாற்றிக் களைவீர் மறுத்து உங்கள் செல்வத்தை;
கூற்றம் வருங்கால் குதிக்கலும் ஆமே.

தேற்றத் தெளிமின் றெளிந்தீர் கலங்கன்மி
னாற்றுப் [1]பெருக்கிற் கலக்கி மலக்காதே
மாற்றிக் களைவீர் [2]மறுத்துங்கள் செல்வத்தைக்
[3]கூற்றம் வருங்காற் [4]குதிக்கலு மாமே. (5)

வேறு பாடம்: பெருக்கிங் (ஆ ஊ எ) I. 2. மறித்துங்கள் (எ ஓ) I. 3. கூற்றன் (சண்) 4. குறிக்கலு (எ) I.

கருத்து: பெருவெள்ளம் கலங்கி வருவது போல மனம் குழம்பாமல், அறிந்தோர் சொல்லத் தெளிவு பெறுக. முன்னே தெளிந்தோர் குழம்பாதிருக்க. புறப்பற்றை விடுக. செல்வம் நம்முடையதன்று என எண்ணுக. இவ்வாறிருந்தால் இயமனை வெல்லலாம்.

பெருக்கின் - பெருக்குப் போல. மலக்காதே - மயங்காமல். மறுத்து - நமதல்ல என்று தள்ளி. மாற்றிக் களைவீர் - புறப்பற்றை விடுக. குதிக்கல் - வெல்லுதல்.

உயிர் காக்கும் செப்பு

347. மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லும் கலம் போல்
அவிழ்கின்ற ஆக்கைக்கு ஓர் வீடுபேறு ஆகச்
சிமிழ் ஒன்று வைத்தமை தேர்ந்து அறியாரே.

மகிழ்கின்ற செல்வமு மாடு முடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லுங் கலம்போ
லவிழ்கின்ற வாக்கைக்கோர் வீடுபே றாகச்[1]
[2]சிமிழொன்று வைத்தமை [3]தேர்ந்தறி யாரே. (6)

வேறு பாடம்: 1. வீடது போகச் (ஆ இ ஊ) III. 2. சிமிழொன்றில் (பதிப்) 3. தேர்ந்தறியீரே (இ) IV

கருத்து: இன்பமும் பொருளும் கடலில் செல்லும் கலம் போல் ஒன்றாக அழியும் தன்மையன. அவற்றை நம்புவோர், உடம்பிலிருந்து பிரிந்த உயிருக்கு வீடுபேற்றுக்குரிய வழியாகச் செப்பு ஒன்றை ஈசன் வைத்துள்ளதை அறியமாட்டார். செப்பு மூடியிருத்தலால் உள்ளிருப்பதை அறிய இயலாது. அதுபோல் நம் உடம்பினுள் உத்தமனைக் காணும் முறை ஒன்று இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

பங்கு கேட்பார்; பக்கம் நில்லார்

348. வாழ்வு மனைவியும் மக்கள் உடன்பிறந்
தாரும் "அளவு ஏது எனக்கு" என்ப ஒண்பொருள்;
மேவுமதனை விரிவு செய்வார்கட்குக்
கூவும் துணை ஒன்று கூறலும் ஆமே.

[1]வாழ்வு மனைவியு [2]மக்க ளுடன்பிறந்
தாரு மளவே [3]தெனக்கென்ப வொண்பொருண்[4]
மேவு மதனை விரிவுசெய் வார்கட்குக்
[5]கூவுந் துணையொன்று கூறலு மாமே. (7)

வேறு பாடம்: 1. வாழு (த) 2. மக்களும் பிற்பிறந் (ஆ) III. 3. தனக்கென்ப (அ எ ஒ) I; தமக்கென்ப (பதிப்) தெமக்கென்ப (பதிப்) 4. ரொண்பபொருண் (அ ஆ இ ஈ ஊ ஒ) I. 5. கூறுந் (எ) I.

கருத்து: வாழ்க்கைத் துணையாம் மனைவியும் மக்களும் உடன் பிறந்தாரும் "செல்வத்தில் எனக்குரிய பங்கு எவ்வளவு" என்றே கேட்பர். இறக்கும் போது உடன்வர மாட்டார். ஆனால் உள்ளத்தில் பரம்பொருள் எண்ணம் வருங்கால் அதைப் பயிற்சியால் வளர்த்துக் கொள்பவர்க்கு, அந்தத் துணை அழைத்தவுடன் கிடைக்கும்.

மேவுமது - வினையாலணையும் பெயர். உள்ளத்தில் பொருந்துவதாகிய கருத்து; பரம் பொருள் பற்றிய எண்ணம். " தெய்வம் என்பது ஓர் சித்தம் உண்டாகி, முனிவு இலாதது ஓர் பொருளது கருதலும்" என்ற திருவாசகம் காண்க. (திருவா. போ. திரு. அடி. 42 - 43) திருவருளால் வந்து பொருந்துவது அவ்வெண்ணம். ஒண் பொருள் அதுவே.

உள்ளபோது தான் உறவு

349. வேட்கை மிகுத்தது, மெய்கொள்வார் இங்கு இல்லை,
பூட்டும் தறி ஒன்று, போம் வழி ஒன்பது,
நாட்டிய தாய் தமர் வந்து வணங்கிப் பின்
காட்டிக்கொடுத்து, அவர் கைவிட்டவாறே.

வேட்கை மிகுத்தது மெய்கொள்வா ரிங்கில்லை
பூட்டுந் தறியொன்று போம்வழி யொன்பது
[1]நாட்டிய தாய்தமர் வந்து வணங்கிப்பின்
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே. (8)

வேறு பாடம்: 1. நாட்டியத்தார் (அ இ ஊ) II.

கருத்து: ஒருவன் உயிருடன் இருந்தபோது உறவை நிலைநாட்டிய தாயும் சுற்றத்தாரும் அவன் இறக்கும் போது கைவிடுவர். உயிர் வீடுபேறு அடைவதற்கு அதனைக் கட்டிவைக்கக் கூடிய தறி ஒன்றே; அது போகும் வழியோ ஒன்பது. ஆனால் மக்களுக்குப் பொருள் வேட்கை மிகுந்ததே அன்றி, உண்மையை அறியும் ஆர்வம் தோன்றவில்லை.

350. உடம்போ டுயிரிடைவிட் டோடும் பொழுதி
லடும்பரி சொன்றில்லை யண்ணலை யெண்ணும்
விடும்பரி சாய்நின்ற மெய்ந்நமன் றூதர்
சுடும்பரி சத்தையுஞ் சூழகில் லாரே. (ச)

25. இளமை நிலையாமை

கண் இருந்தும் குருடு

351. கிழக்கு எழுந்து ஓடிய ஞாயிறு மேற்கே
விழக் கண்டும் தேறார் விழி இலா மாந்தர்
குழக்கன்று மூத்து எருதாய்ச் சில நாளில்
விழக் கண்டும் தேறார் வியன்உலகோரே.

கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேறார் [1]விழியிலா மாந்தர்
குழக்கன்று மூத்தெரு [2]தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே. (1)

வேறு பாடம்: விளிவிலா (சண்) 2. தாஞ்சில (ஆ இ ஊ) II.

கருத்து: கிழக்கில் எழுந்த சூரியன் மேற்கில் மறைதலைக் கண்டு, ஒருநாளில் இளமை நிலையாமையை அறியலாம் எனினும் உலகில் வாழும் அறிவிலிகள் அதனை அறியார். இளங்கன்று முதிர்ந்து, எருதாய்ச் சில்லாண்டுகளில் இறப்பதைக்கண்டு, அப்பொழுதும் அறியார்.

விழி - பார்வை; அறிவு.

வயதுதான் ஆயிற்று

352. ஆண்டு பலவும் கழிந்தன, அப்பனைப்
பூண்டுகொண்டு ஆரும் புகுந்து அறிவார் இல்லை;
நீண்டன காலங்கள், நீண்டு கொடுக்கினும்
தூண்டு விளக்கின் சுடர் அறியாரே.

ஆண்டு பலவுங் [1]கழிந்தன வப்பனைப்
பூண்டுகொண் டாரும் புகுந்தறி வாரில்லை
நீண்டன காலங்க [2]ணீண்டு கொடுக்கினுந்
தூண்டு விளக்கின் சுடரறி யாரே. (2)

வேறு பாடம்: 1. கழிந்து மப்பனைப் (எ) IV. 2. ளீண்டு (திருவிக)

கருத்து: ஆண்டுகள் சென்றன. இறைவன் தம் உடம்பில் புகும் அனுபவத்தினைப் பெறுபவர் இல்லை. காலம் நீண்டாலும் தமது உடம்பினுள் இறைச் சோதியைக் காண்பார் இல்லை.

தூண்டு விளக்கு - யோக சாதனையால் உடம்பினுள்ளே தூண்டப்பட்டு விளங்கும் ஜோதி. புகுந்து - இறைவன் தமது உடம்பினுட் புகப்பெற்று.

காற்றுள்ள போதே . . .

353. தேய்ந்து அற்று ஒழிந்த இளமை; கடைமுறை
ஆய்ந்து அற்ற பின்னை அரிய கருமங்கள்;
பாய்ந்து அற்ற கங்கைப் படர்சடை நந்தியை
ஓர்ந்து உற்றுக் கொள்ளும் உணர்வு உள்ள போதே.

தேய்ந்தற் றொழிந்த விளமை கடைமுறை
யாய்ந்தற்ற பின்னை யரிய கருமங்கள்
பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை
யோர்ந்துற்றுக் கொள்ளு [1]முணர்வுள்ள போதே. (3)

வேறு பாடம்: 1. முலாவுள்ள (எ) II.

கருத்து: இளமை தேய்ந்து மறைவது. கங்கை பாயும் சடையை உடைய சிவபிரானைச் சிந்தித்து, உணர்ந்து, அடையும் உணர்வு நன்றாக உள்ளபொழுதே, முதியவயதில் முடிப்பதற்கு அரிய யோக சாதனை முதலிய அரிய செயல்களை மேற்கொண்டு, இறுதிவரை ஆய்ந்து செய்து முடிக்க.

அற்ற என்பதற்கு 'அறும்' எனக் காலவழு அமைத்துக் கொள்க.

ஓர்ந்து - சிந்தித்து. பின்னை - முதிய வயதில். அரிய கருமங்கள் கடைமுறை ஆய்ந்து அற்ற என வினைமுடிபு செய்க. கொள்ளும் - பெயரெச்சம்.

354. விரும்புவர் முன்னென்னை மெல்லியன் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போ
லரும்பொத்த மென்முலை யாயிழை யார்க்குக்
கரும்பொத்துக் காஞ்சிரங் காயுமொத் தேனே. (ஓ)

போனது போதும்

355. காலை எழுந்தவர் நித்தலும் நித்தலும்
மாலை படுவதும் வாழ்நாள் கழிவதும்
சாலும்; அவ்வீசன் சலவியன் ஆகிலும்,
ஏல நினைப்பவர்க்கு இன்பம் செய்தானே.

காலை யெழுந்தவர் நித்தலு நித்தலு
மாலை படுவதும் வாணாள் கழிவதுஞ்
[1]சாலுமவ் வீசன் சலவிய னாகிலு
மேல நினைப்பவர்க் கின்பஞ்செய் தானே. (4)

வேறு பாடம்: 1. சாலவு (அ ஆ ஊ ஒ) II

கருத்து: காலையில் எழுந்தவர்க்கு, மாலை வந்தால், வாழ்நாளில் ஒருநாள் கழியும். இதுவரை கழிந்தது போதும். சிவபிரான் கோப மூர்த்தியாயினும் அன்புடன் நினைப்பவர்க்கு இன்பம் அளிப்பான்.

மேலைப் பாடலிற் போல இங்கும் காலவழு அமைக்க.

சாலும் - போதும். சலவியன் - சினமுடையன். (சலம் - சினம்). ஏல - பொருந்துமாறு.

காலம் ஓடுகிறது

356. பாலன் இளையன் விருத்தன் என நின்ற
காலம் கழிவன கண்டும் அறிகிலார்;
ஞாலம் கடந்து அண்டம் ஊடு அறுத்தான் அடி
மேலும் கிடந்து விரும்புவன் நானே.

பால னிளையன் விருத்த னெனநின்ற
காலங் கழிவன கண்டு மறிகிலார்
ஞாலங் கடந்தண்ட மூடறுத் தானடி
மேலுங் [1]கிடந்து விரும்புவ னானே. (5)

வேறு பாடம்: 1. கடந்து (ஓ) IV.

கருத்து: காலம் மனிதரின் பருவங்களாகக் கழிகின்றது. அதைப் பலரும் அறியார். யானோ, உலகம் கடந்து உள்ள இறைவனது திருவடிக்கே பித்தானேன்.

நின்ற காலம் பாலன் இளையன் விருத்தன் எனக் கழிவன என்று கூட்டுக. ஊடு அறுத்தான் - கடந்தான். கிடந்து - பித்தாய்க் கிடந்து.

உணர்வு தப்பினால்?

357. பரு ஊசி ஐந்தும் ஓர் பையினில் வாழும்
பரு ஊசி ஐந்தும் பறக்கும் விருகம்;
பரு ஊசி ஐந்தும் பனித்தலைப் பட்டால்
பரு ஊசிப் பையும் பறக்கின்ற வாறே.

பருவூசி யைந்துமோர் பையினில் வாழும்
பருவூசி யைந்தும் [1]பறக்கும் விருகம்
பருவூசி யைந்தும் [2]பனித்தலைப் பட்டாற்
பருவூசிப் [3]பையும் பறக்கின்ற வாறே. (6)

வேறு பாடம்: 1. பறக்குமிருக்கும் (ஆ ஓ) IV. 2. பணித்தலைப் (ஆ இ ஊ ஓ) I. 3. பையைந்தும் (அ) II.

கருத்து: உடம்பில் ஐம்பொறிகள் உள்ளன. அவை பறக்கும் தன்மை உடையவை. அவை, பறந்து பறந்து தளர்ந்தால் இறப்பு நேரும்.

ஊசி ஐந்து - ஐம்பொறிகள். பை - உடம்பு. விருகம் - விலங்கு. பனித்தல் - நடுங்குதல்; தளர்தல். பொறி கலங்கினால் இறப்பு நேரும்.

கன்றாத இளமை

358. கண்ணனும் காய்கதிரோனும் உலகினை
உள் நின்று அளக்கின்றது ஒன்றும் அறிகிலார்;
விண் உறுவாரையும் வினை உறுவாரையும்
எண் உறும் முப்பதில் ஈர்ந்தொழிந்தாரே.

[1]கண்ணனுங் காய்கதி ரோனு முலகினை
யுண்ணின் [2]றளக்கின்ற தொன்று மறிகிலார்
[3]விண்ணுறு வாரையும் வினையுறு வாரையு
மெண்ணுறு முப்பதி லீர்ந்தொழிந் தாரே. (7)

வேறு பாடம்: 1. கண்ணதுங் (அ) I. 2. றளிக்கின்ற (ஒ) IV. 3. விண்ணுறுவாரும் (அ) I.

கருத்து: மூச்சுக்காற்று உடம்பின் வாழ்நாளை வரையறுக்கிறது. இதை அறியாத உலகியலார், தமது மூச்சை வயப்படுத்தி யோகம் பயின்று பரமாகாசத்தை அடைபவர்களையும், வினைவயப்பட்டு மீண்டும் பிறப்போர்களையும் ஒப்பவைத்து, அவர்களின் இளமை முப்பதாண்டு என்று வரையறை செய்கின்றனரே. இஃது எங்ஙனம் பொருந்தும்?

கண்ணன் - இங்கு இடைகலை நாடியைக் குறிக்கும். இதில் ஓடும் மூச்சின் நிறம் கறுப்பு ஆதலால் 'கண்ணன்' எனப்பட்டது. கதிரோன் - இங்குப் பிங்கலை நாடி. இதில் ஓடும் மூச்சின் நிறம் வெண்மை.

கலை நிரம்பிய பிறை

359. ஒன்றிய ஈரெண் கலையும் உடன் உற
நின்றது கண்டும் நினைக்கிலர் நீதர்கள்
கன்றிய காலன் கருங்குழி வைத்தபின்
சென்று அதில் வீழ்வர் திகைப்பு ஒழியாரே.

ஒன்றிய வீரெண் கலையு முட்னுற[1]
நின்றது கண்டு நினைக்கிலர் நீதர்கள்
கன்றிய காலன் கருங்குழி வைத்தபின்
சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே. (8)

வேறு பாடம்: 1. முடன்றன (எ) II.

கருத்து: 15 நாளில் ஒளிகுன்றும் சந்திரன், சிவனின் சடைமுடியில் அணியப் பெற்று, 16 கலைகளும் நிரம்பிய இளம்பிறையாக நின்றதை அறிந்தும், அச்சிவனைக் கீழ்மக்கள் நினைக்கவில்லை. சினங்கொண்ட இயமன் கரிய நரகமே அவர்கட்குத் தண்டனை என்று விதிக்க, அதில் வீழ்ந்து வருந்துவர். எனினும் அறிவு இல்லாமையால், "ஏன் இத்துன்பம்" எனத் திகைப்பர். சிவன்

தலையில் உள்ள சந்திரனே போல, நம் நெற்றிப் பகுதியிலும் சந்திர மண்டலம் உள்ளது. அதில் 16 கலைகளும் நிறைந்து விளங்கத் தரிசித்தால் இறப்பு இல்லை. (இந்நூல் 'சந்திரயோகம்' காண்க)

இயன்ற பொழுதெல்லாம்

360. **எய்திய நாளில் இளமை கழியாமை**
எய்திய நாளில் இசையினால் ஏத்துமின்;
எய்திய நாளில் எறிவது அறியாமல்
எய்திய நாளில் இரந்து கண்டேனே.

எய்திய நாளி லிளமை கழியாமை[1]
யெய்திய நாளி லிசையினா லேத்துமி
னெய்திய நாளி [2]லெறிவ தறியாம
லெய்திய நாளி லிரந்துகண் டேனே. (9)

வேறு பாடம். 1. கழியாமே (இ) IV. 2. லறிவ (ஆ ஊ ஓ) I.

கருத்து: இளமை என்பது முப்பது வயது வரையே. அப்பருவத்தில் இசைவான நாள்தோறும் இறைவனை வழிபடுக. எனக்கு வரையறுக்கப்பட்ட நாளின் முடிவில் மரணம் என்பதை நான் வென்றேன். அதற்கு மேலும் எனக்கு வாய்த்த நாளில் இறைவனை வேண்டி, அவனது அருட்காட்சி பெற்றேன்.

கழியாமே - கழியும்முன். எய்திய நாள் - (1 ஆம் அடி) முப்பதாண்டுக் காலத்தில் 2. இசைவான நாள் தோறும் 3. வாழ்வதற்கு வரையறுக்கப்பட்ட இறுதி நாளில் 4. அதற்கு மேல், வரமாக, நான் பெற்ற கூடுதல் வாணாளில். இரந்து - இறைவனது அருட்காட்சியை வேண்டி.

26. உயிர் நிலைபேறு

குருவின் பெருமை

361. **தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பில்**
இழைக்கின்ற எல்லாம் உயிர்க்கின்ற கண்டு
பிழைப்பு இன்றி எம்பெருமான் அடி ஏத்தார்
அழைக்கின்ற போது அறியார் அவர் தாமே.

தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பி
லிழைக்கின்ற [1]வெல்லா [2]முயிர்க்கின்ற கண்டு
பிழைப்பின்றி யெம்பெரு மானடி யேத்தா
ரழைக்கின்ற போதறி யாரவர் தாமே. (1)

வேறு பாடம்: 1. தெல்லா (சண்) 2. மிறக்கின்ற (எ) IV.

கருத்து: தழைக்கின்ற கொம்பில் படைப்புத் தொழிலால் வருவிக்கப் படுவன எல்லாம் உயிர்பெற்றுத் தழைக்கும். அதுபோல் ஆசானால் அழைக்கப்படுபவர் வீடுபேறு அடைவர். அதை அறியாதவர் பெருமானடியை ஏத்தார். தளிரின் தழைப்பும், மலர் உடைமையும், தண்மையும் ஆசானின் ஞானத்திற்கும் சிவஅனுபவத்திற்கும் கருணைக்கும் முறையே உவமை.

குறிப்பு: எல்லாச் சுவடிகளிலும் இவ் இயல் தலைப்பு ‘உயிர் நிலையாமை’ என உள்ளது. அது பொருந்தாமையால் ‘உயிர் நிலைபேறு’ என இப்பதிப்பில் தலைப்பு இடப்பட்டது.

362. ஐவர்க் கொருசெய் விளைந்து கிடந்த
தைவரு மச்செய்யைக் காத்து வருவர்க
ளைவர்க்கு நாயக னோலை வருதலா
லைவரு மச்செய்யைக் காவல்விட் டாரே. (ட, உ)

மூச்சை நெறிப்படுத்துக

363. மத்தளி ஒன்றுளே தாளம் இரண்டு உள,
அத்துளே வாழும் அரசனும் அங்கு உளன்,
அத்துளே வாழும் அரசன் புறப்பட்டால்
மத்தளி மண்ணாய் மயங்கிய வாறே.

[1]மத்தளி யொன்றுளே தாள மிரண்டுள
வத்துளே வாழு [2]மரசனு மங்குள[3]
னத்துளே வாழு மரசன் புறப்பட்டான்
மத்தளி மண்ணாய் [4]மயங்கிய வாறே. (2)

வேறு பாடம்: 1. மத்தள மொன்றுள (அ ஆ) II. 2. மரசரு (எ) IV; மமைச்சரு (ஓ) IV. 3. மைந்துள (எ) IV. 4. கிடக்கின்ற (ஓ) IV.

கருத்து: மத்தளத்தில் ஏகம், ஆதி, திரிபுட, சாபு முதலிய பல தாளங்களையும் வாசிக்கலாம் ஆதலின், உடம்பை மத்தளமாக உருவகித்த ஆசிரியர், மூச்சுக்காற்றின் இடகலை பிங்கலை இயக்கத்தை 'இரண்டு தாளம்' என உருவகித்தார். மேலும் 'மகத்தளி' (பெரிய கோயில்) 'மத்தளி' எனத் திரியுமாதலின், உயிரை அரண்மனையுள் வாழும் அரசன் என்றார். மூச்சை நெறிப் படுத்தினால் உயிர் நிலைக்கும்.

இரண்டுதாளம் என்பது 'ஆதி தாளம்'. எட்டு எண்ணிக்கைகளை இரண்டு ஒத்த பங்குகளாக வகுத்து அமைக்கப்படுதலின் இஃது இரட்டைத் தாளம் எனப்படும். இது பழங்காலந் தொட்டு வருதலின் ஆதித்தாளம். இரண்டு என்ற ஒப்புமையாலும் பழமை தொட்டு உடம்பின் இயக்கத்திற்கு அடிப்படையாக இருத்தலாலும் இடைகலை, பிங்கலைகளை ஆதித் தாளம் என்ற பொருளில் "தாளம் இரண்டுள" என உருவகித்தார்.

வேகாத காற்று

364. வேங்கட நாதனை, வேதாந்தக் கூத்தனை
வேங்கடத் துள்ளே விளையாடும் நந்தியை
வேம் கடம் என்றே விரகு அறியாதவர்
தாங்க வல்லார் உயிர் தாம் அறியாரே.

வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை
வேங்கடத் துள்ளே விளையாடு நந்தியை
வேங்கட மென்றே விரகறி யாதவர்
தாங்கவல் லாருயிர் [1]தாமறி யாரே. (3)

வேறு பாடம்: 1. தானறி (எ) IV.

கருத்து: வாழ்வின் போதே உடம்பை அணு அணுவாக வேகச் செய்யும் மூச்சுக் காற்றைச் சுழுமுனை வழியாக மேல் ஆதாரங் களுக்கு ஏற்றி, மூலக்கனலையும் அதனுடன் ஏற்றி, அக்கனலை நெற்றி மண்டலத்தில் குளிர்வித்து, மூச்சை 'வேகாக் கால்' ஆக்கும் உபாயம் அறியாதோர், உடம்பை (இறப்பின்பிறகு) வெந்தொழியும் கலம் என்று கருதுவர். பெருமயானத்தில் ஆடும் மகாசங்கார மூர்த்தியை, திருவைந்தெழுத்து நடனம் ஆடுபவனை, உடம்பினைக் குளிரச்செய்து, அதனுள்ளே ஆடும் நந்தியை, அவர் அறியார்; அவனால் நிலைநிறுத்தக் கூடிய உயிரையும் அறியார்.

முழுதும் உணர்தல்

365\. சென்று உணர்வான் திசை பத்தும் திவாகரன்
அன்று உணர்வான் அளக்கின்றது அறிகிலர்,
நின்று உணரார் இந் நிலத்தில் மனிதர்கள்;
பொன்று உணர்வாரின் புணர்க்கின்ற மாயனே.

சென்றுணர் வான்றிசை பத்துந் திவாகர
னன்றுணர் வானளக் கின்ற தறிகிலர்
நின்றுண ராரிந் நிலத்தின் மனிதர்கள்
பொன்றுணர் வாரிற் [1]புணர்க்கின்ற மாயனே[2]. (4)

வேறு பாடம்: 1. புணர்கின்ற (அ ஆ) I. 2. மாயமே (எ) IV.

கருத்து: சூரியன் பத்துத் திசைகளையும் சென்று அளக்கின்றான். தொன்மைக் காலம் முதல் இறைவன் இவற்றை, முற்றுணர்வால் அறிவதை உலக மக்கள் அறியார். மடிகின்ற உணர்வுடையதேனும் அருள் வியாபகத்தில் ஒன்றி நிற்கும் ஆன்மாவுக்கும் இம் முற்றுணர்வை நல்குகின்ற பெருங்கருணை வாய்ந்த மாயச் செயல் உடையவன் அவன் என்பதையும் அனுபவித்து அறியார்.

வாழ்நாள் நீளும்

366\. துடுப்புஇடு பானைக்கும் ஒன்றே அரிசி
அடுப்புஇடு மூன்றிற்கும் அஞ்சு எரி கொள்ளி
அடுத்து எரியாமல் கொடுமின் அரிசி
விடுத்தன நாள்களும் மேல் சென்றனவே.

[1]துடுப்பிடு பானைக்கு மொன்றே யரிசி
யடுப்பிடு மூன்றிற்கு மஞ்செரி கொள்ளி
[2]யடுத்தெரி யாமற் கொடுமின் னரிசி
விடுத்தன நாள்களு [3]மேற்சென் றனவே. (5)

வேறு பாடம்: 1. துடுப்பிடைம் (த) 2. மடுத்தெரி (ஆ) I. 3. மேற்சென்றவாறே (ஆ எ) II.

கருத்து: இடகலை, பிங்கலை என்னும் நாடிகளாகிய துடுப்பு இடப்பெற்ற பானையாகிய உடம்பில் உள்ள ஒரே உணவுப்பொருள் மதியமுதமே. அதை விளைவிக்க, அடுப்புக்களாக உள்ள சந்திர

மண்டலம், (நெற்றிப்பகுதி) சூரிய மண்டலம் (நெஞ்சப் பகுதி), அக்கினி மண்டலம் (இடுப்புப் பகுதி) என்பவற்றில் எரியும் விறகாக, ஐந்து பிரிவாக உள்ள வாயு உள்ளது. அவை வீணே எரியாமல், இறையருளால் மதியமுதம் (நெற்றிமண்டலத்தில்) ஊறப்பெற்று உண்க. வாழ்தற்கு விடுக்கப்பட்ட நாட்கள் பெருகும். உயிர் நீட்டிக்கும்.

நிலையான இன்பம்

367. இன்புஉறு வண்டு அங்கு இனமலர் நாறப்போய்
உண்பது வாசம்; அதுபோல் உயிர்நிலை
இன்புஉற நாடி நினைக்க, இது மூன்று ஒளி
கண்; புறம் நின்ற கருத்து நில்லானே.

இன்புறு வண்டங் கினமலர் நாறப்போ[1]
யுண்பது வாச மதுபோ லுயிர்நிலை
யின்புற நாடி [2]நினைக்கிது மூன்றொளி
[3]கண்புற நின்ற [4]கருத்துநில் லானே. (6)

வேறு பாடம்: 1. மேற்போய் (எ) IV; தேடிப்போய் (மு) நினைக்கிலு (அ ஆ இ ஈ எ); யினத்தமு தந்தருங் (மு) I. 2. யிளைக்கினு (பதிப்); 3. கண்பெற நின்று (மு) 4. கருத்துணில் (எ) III.

கருத்து: நாடி நினைக்க, இது கண் நின்ற கருத்துள் மூன்றொளியாய் நிற்கும்; அன்றி, புறம் நின்ற கருத்தில் இறைவன் தோன்றான். யோகிக்குக் கண்ணொளியாய் (சோம சூரிய அக்கினி ஒளியாய்) விளங்குதலைக் கூறினார். இனமலர் நாறலால் அதை உணர்ந்து வண்டுகள் சென்று வாசத்தேனை உண்டு இன்புறுதல் போல், உயிர் நிலை இன்பம் பெற நாடுக. இவ்வின்பம் மூன்று ஒளி வாயிலாக உணரப்பட்டுப் பேரின்பத்திற்கு வழிகாட்டும் என்று உவமையைப் பொருத்திக் காண்க.

பிறப்பு அறுத்தல்

368. ஆம் விதி நாடி அறம் செய்யும் அந்நிலம்
போம் விதி நாடிப் புனிதனைப் போற்றுமின்;
ஆம்விதி வேண்டும்-அது என்? சொல்லின் மானிடர்
ஆம் விதி பெற்ற அருமை வல்லார்க்கே.

ஆம்விதி [1]நாடி [2]யறஞ்செய்யு மந்நிலம்[3]
போம்விதி நாடிப் புனிதனைப் போற்றுமி
னாம்விதி வேண்டும [4]தென்சொல்லின் மானிட
ராம்விதி பெற்ற வருமைவல் லார்க்கே. (7)

வேறு பாடம்: 1. நாடின் (பதிப்) 2. யறஞ்செய்மி (எ) II. 3. மிந்நிலம் (ஓ) I. 4. தென்சொல்லி (ஊ) I.

கருத்து: அறம் செய்யும் அந்தக் காரணமும் நீங்கும் உபாயத்தை ஆய்ந்து புனிதனைப் போற்றுமின் என்க. அவ்வாறு போற்றுதற்கு மானிடராய்ப் பிறந்தமையே போதாதா? வேறு தவப்பயனும் வேண்டுமா? என்க. மானிடராய்ப் பிறந்ததின் பயன் இதுவே என்பது கருத்து.

குறிப்பு: சுவடிகளிலும் பதிப்புகளிலும் இப்பாடலை அடுத்து வரும் "அவ்வியம் பேசி" என்னும் பாடல் இவ்வியலுக்குப் பொருந்துவது அன்று. இப் போதைய பதிப்பில், அது "தானச் சிறப்பு" என்ற இயலின் முதற்பாடலாக வைக்கப்படுகிறது. அப்பாடலின் குறிப்புக் காண்க.

27. அந்தணரொழுக்கம்

யாகத்தின் பயன்

369. வசை இல் விழுப்பொருள் வானும் நிலனும்
திசையும் திசைபெறு தேவர் குழாமும்
விசையம் பெருகிய; வேதம் முதலா
அசைவு இலா அந்தணர் ஆகுதி வேட்கிலே.

வசையில் விழுப்பொருள் வானு நிலனுந்
திசையுந் திசைபெறு தேவர் குழாமும்
விசையம் பெருகிய வேத முதலா
[1]வசைவிலா வந்தண ராகுதி வேட்கிலே. (1)

வேறு பாடம்: 1. யசைவிலா (ஆ இ ஈ ஓ) மசைவிலா (எ) I.

கருத்து: அந்தணர் யாகம் செய்தால் மண்ணிலும் விண்ணிலும் வாழ்வோர் வெற்றி பெறுவர்.

விழுப்பொருள் - சிவம். விசையம் - வெற்றி. பெருகிய - பெருகின. துணிவு பற்றி இறந்தகாலத்தால் கூறினார். வேதமுதலா - வேதத்தை முதலாகக் கொண்டு. அசைவு - தளர்ச்சி.

குறிப்பு: பதிப்புகளில் இவ்வதிகாரத்திற்கு முன், 'அக்கினிகாரியம்' என்னும் அதிகாரம் உள்ளது. ஆனால், சுவடிகளுள், பிற்காலத் தனவாகக் கருதப்படும் எ, ஓ - சுவடிகளில் மட்டுமே, அது தனித்த ஓர் அதிகாரமாக உள்ளது. பிற சுவடிகளில் 'அக்கினிகாரியம்' அந்தண ரொழுக்கம் என்னும் இரண்டு அதிகாரங்களும் இப்பெயர்களுடன், ஓரதிகாரமாக இணைந்தே உள்ளன.

ஆசிரியர் அந்தணர், யாகம் என்பனவற்றைச் குறியீடுகளாகப் (symbol) பயன்படுத்தி, யோகி தன் உடம்பினுள் மூலக் கனலை வளர்த்துப் புருவ மத்தியிலும் சகஸ்ராரத்திலும் இறையனுபவம் பெறுவதை விளக்குகிறார். இந்த 'அக்கினி காரியமே' 'அந்தணர் ஒழுக்கம்' என்பது அவர் கருத்தாகத் தோன்றுகிறது. இது பற்றியும், இவ்விரண்டு அதிகாரங்களும் சேர்ந்தே பழைய சுவடிக் குடிவழிகளில் இருப்பதைக் கொண்டும், இப்பொழுதைய பதிப்பில், இவை 'அந்தணரொழுக்கம்' என்ற ஓர் அதிகாரமாக அடக்கப்படுகின்றன.

வாழ்வில் நன்மை பெற

370. ஆகுதி வேட்கும் அருமறை அந்தணர்
போகதி நாடிப் புறம்கொடுத்து உண்ணுவர்
தாம்விதி வேண்டித் தலைப்படும் மெய்ஞ்ஞெறி
தாம் அறிவாலே தலைப்பட்டவாறே.

ஆகுதி வேட்கு மருமறை யந்தணர்
போகதி நாடிப் [1]புறங்கொடுத் துண்ணுவர்
தாம்விதி [2]வேண்டித் தலைப்படு மெய்ஞ்ஞெறி[3]
தாமறி [4]வாலே [5]தலைப்பட்ட வாறே. (2)

வேறு பாடம்: 1. புறங்குடித் (எ) I. 2. வேண்டிற்றலைப் படு (ஆ இ ஈ ஓ) I. 3. மெய்நெறி (எ) I. 4. வாறே (ஆ) I. 5. தலைப்படுவாரே (எ) IV.

கருத்து: ஓம ஆகுதியால் தேவர்களை உண்பிக்கும் அந்தணர், அப்பயன் இம்மைக்கு ஆக, மறுமையின் பொருட்டு ஈகை செய்து வாழ்வர். மெய்நெறியில் ஞானத்தால் அவர் வாழும் முறை இதுவாம்.

ஆகுதி - ஆகுதி செய்யும் வேள்வி. போகதி - செல்லும் கதி. புறம் கொடுத்து - பிறர்க்குக் கொடுத்து. விதி - வேத விதி. தலைப்படுதல் - அடைதல்.

புணர்ச்சியில் உள்ளொளி

371. அணை துணை அந்தணர் அங்கியுள் அங்கி
துணை துணை வைத்ததின் உட்பொருள் ஆன
இணை துணை யாமத்து இயங்கும் பொழுது
துணை துணை ஆயது ஓர் தூய்நெறி ஆமே.

அணைதுணை யந்தண ரங்கியு ளங்கி
[1]துணைதுணை வைத்ததி னுட்பொரு ளான
விணைதுணை யாமத் தியங்கும் பொழுது
[2]துணைதுணை யாயதோர் தூய்நெறி யாமே. (3)

வேறு பாடம்: 1. அணைதுணை (த)சிவ ஞானி (த) (விசு) (தி)
2. துணையணை (ஈ எ) IV.

கருத்து: யோகியரின் மூலக்கனல் அவர்தம் புருவமத்தியிற் சென்று சுடர்விடும்போது, அதன் உள்ளொளியாய் உள்ள இறைவனே நமக்குத் துணை. உயிர்களுள் ஆண் பெண் என இரண்டு வகை படைத்து, ஒன்றுக்கு ஒன்று துணையென்று வைத்ததன் நோக்கம் ஆணும் பெண்ணும் கூடும் இணைவில் அந்த உள்ளொளியை, அவர்கள் தத்தம் உடம்பினுள் காணவேண்டும் என்பதே. அவர்கள் இரவில் கூடும் போது, இவ்வுள்ளொளியைக் காண்பதற்குத் தம்முள் துணையாவர். இவ்வாறு ஓர் யோக நெறி உண்டு. (இந் நூல் 'பரியங்க யோகம்' என்னும் இயல் காண்க)

துணைதுணை - இரண்டிரண்டு. அனைத்துயிரும் ஆண், பெண் என இரண்டாக உள்ளமை. யாமத்து இணைதுணையாக இயங்கும் போது - இரவில் கூடும் போது. இணைதுணை (2) இருவரும் தமக்குள் துணை. நெறி - யோகம். இதனைப் பரியங்க யோகம் என்பர். இங்குப் போகமே வேள்வி ஆகின்றது.

நெற்றியில் சோதி

372. நெய்நின்று எரியும் நெடுஞ்சுடரே என்று
மைநின்று அறியும்வகை அறிவார்கட்கு
மைநின்று அவிழ்தரு மந்திரம் ஆம்; என்றும்
செய்நின்ற செல்வம் மதி-அது ஆமே.

நெய்நின் றெரியு நெடுஞ்சுட ரேயென்று[1]
மைநின் [2]றறியும் வகையறி வார்கட்கு[3]
மைநின் றவிழ்தரு [4]மந்திர மாமென்றுஞ்
[5]செய்நின்ற [6]செல்வ மதியது வாமே. (4)

வேறு பாடம்: 1. ரேசென்று (ஈ எ ஒ) (பா 3) (அ) ரேதென்று (அ); ரேயொன்று (இ) I. 2. றெரியும் (எ) I. 3. வாளர்க்கு (ஈ) IV. 4. மத்தின (ஒ) மத்தினவாமென்று (ஈ உ) மத்தினவா சென்று (பா 3); மத்தினவா வென்று (ஆ இ ஊ) II; மத்தின் மரமென்றுஞ் (சண்) 5. செய்கின்ற (அ ஒ) I. 6. செல்வந்தீயது வாமே (ஒ) I செல்வமுந்தீயது வாமே (பா 3) (த)

கருத்து: அறியாமையுள் அழுந்திக் கிடப்பினும், 'அறியும் வகை' அறிந்து, சுடரைக் காண்பவர்க்கு, அது மந்திரமாக நின்று ஆணவ மலவிருளை ஓட்டும். எனவே, அச்சுடர் தோன்றும் 'சந்திரமண்டலம்' என்ற நெற்றிப் பகுதியே யோகிக்கு, இன்பம் செய்யும் செல்வம் ஆகும். சுடரே செல்வம் போன்ற ஞானம் என்றும் ஆம்.

மை - இருள்; இங்கு அறியாமை. சுடரே மந்திரமாம்; செல்வமதியும் ஆம் என்க. மதி - சந்திர மண்டலத்து ஒளி. நெற்றிப் பகுதியை யோகியர் சந்திர மண்டலம் என்பர்.

அருட் சத்தியே துணை

373. போது இரண்டு ஓதிப் புரிந்து அருள் செய்திட்டு
மாது இரண்டு ஆகி மகிழ்ந்து உடனே நிற்கும்;
தாது இரண்டு ஆகிய தண்ணம் பறவைகள்
வேதி இரண்டு ஆகி வெறிக்கின்ற வாறே.

போதிரண் டோதிப் புரிந்தருள் செய்திட்டு
மாதிரண் [1]டாகி மகிழ்ந்துட னேநிற்குந்
தாதிரண் டாகிய தண்ணம் பறவைகள்
[2]வேதிரண் டாகி வெறிக்கின்ற வாறே. (5)

வேறு பாடம்: 1. டாகிலு (ஈ) IV. 2. வேறிரண் (அ ஆ இ எ) (பா 3) I.

கருத்து: பகலும் இரவும் தன்னை வழிபட அன்பர்க்கு அருள்பவள் அருட்சத்தியே. அவளே உலகியலிலும் அருளியலிலும் இரண்டு வேறு சத்திகளாகத் துணைநின்று அருள்புரிவாள். அன்பருக்குள் ஆண் பெண் என்னும் வேறுபாடு இல்லை. இருவர்க்கும் உடல் வேற்றுமையே அன்றி, உயிர் வேற்றுமை இல்லை.

போது - வேளை. ஓதி - ஓதுவதற்கு. பறவை - இங்கு ஆண், பெண்களைக் குறிக்கும். வேதி - மாற்றம். வேதி இரண்டு ஆகி - ஆண், பெண் இரண்டும் வெவ்வேறு என்று கருதி. வெறித்தல் - மயங்குதல்.

சுடர் கண்டால் வினை ஓடும்

374. பாழி அகலுள் எரியும் திரிபோல் இட்டு
ஊழி அகழும் உறுவினை நோய் பல;
வாழி செய்து அங்கி உதிக்க அவை விழும்
வீழி செய்து அங்கி வினை சுடுமாறே.

பாழி யகலு [1]ளெரியுந் திரிபோலிட்[2]
டூழி [3]யகழு முறுவினை நோய்பல[4]
வாழிசெய் தங்கி யுதிக்க வவைவிழும்
வீழிசெய் தங்கி வினைசுடு மாறே[5]. (6)

வேறு பாடம்: 1. மெரியுந் (எ) I. 2. திரியிட் (பா 3) 3. யகலு (விசு) 4. நோய்பாலர் (பா 3) 5. மாமே (எ) IV.

கருத்து: ஆழ்ந்த அகலுள் எரியும் திரியைப் போல, ஊழிக்கால மாகச் சேர்க்கப்பட்டு, புதையல் தோண்டி எடுத்தாற்போல வந்து வருத்துகின்ற வினைத் துன்பங்கள் பல. மூலாதாரத்தில் கனல் எழுந்து, நெற்றியில் சுடராய்த் தோன்றினால் அவ்வினைத் துன்பம் நீங்கும். வினைகளும் நீங்கும்.

வீழி - வீழ்தல். வாழி - வாழ்தல். அகழும் - தோண்டும். பலபிறவிகளின் பயனாய்ப் புதைந்திருந்து, பின்பு தோண்டியெடுத்தாற் போல வந்து விளைகின்ற. அகழ்வதால் மேல்வரும் விதை முளைத்தாற்போல என்ற நயம் காண்க.

அக வழிபாடு

375. பெருஞ்செல்வம் கேடு என்று முன்னே படைத்த;
அருஞ்செல்வம் தந்த தலைவனை நாடும்
வருஞ்செல்வத்து இன்பம் வர, இருந்து எண்ணி
அருஞ்செல்வத்து ஆகுதி வேட்க நின்றாரே.

பெருஞ்செல்வங் கேடென்று முன்னே படைத்த
[1]வருஞ்செல்வந் தந்த தலைவனை நாடும்
வருஞ்செல்வத் தின்பம் வரவிருந் தெண்ணி
[2]யருஞ்செல்வத் தாகுதி வேட்கநின் றாரே[3]. (7)

வேறு பாடம்: தருஞ்செல்வம் (பா 3) (த) 2. வருஞ்செல்வத் (அ, இ) I. 3. றீரே (த).

கருத்து: செல்வமும் வறுமையும் பிறப்புத் தோன்றும் போதிருந்தே உள்ளவைதாம். பதிஞானம் என்ற அரிய செல்வத்தை நல்கிய சிவபதியை நாடிப்பெறும் பேரின்பத்தை எய்துதற்காக, ஆகுதி சொரிந்து செய்யும் வேள்வியை விரும்புவர் அந்தணர். இவ்வேள்வி அந்தணர் யாகம் என்க.

முன்னே படைத்த - பிறப்பு அளிக்கும்போதே வரையறுத்த. படைத்த தலைவன், தந்த தலைவன் என்க. வரும் செல்வத்து இன்பம் - பேரின்பம். வர - எய்த.

உயிரில் சோதி

376. ஒண் சுடரானை, உலப்பு - இலி நாதனை
ஒண்சுடர் ஆகி என் உள்ளத்து இருக்கின்ற
கண்சுடரோன், உலகு ஏழும் கடந்த அத்
தண்சுடர், ஓமத் தலைவனும் ஆமே.

ஒண்சுட ரானை யுலப்பிலி நாதனை
[1]யொண்சுட [2]ராகியென் னுள்ளத் திருக்கின்ற
கண்சுட ரோனுல கேழுங் கடந்தவத்
தண்சுட ரோமத் தலைவனு மாமே. (8)

வேறு பாடம்: 1. யெண்சுட (ஈ) I. 2. ராகியொன்றுள்ளத் (ஆ) III.

கருத்து: சோதிவடிவமாகிய இறைவன் உயிரினுள்ளும் சோதியாக விளங்குவான்.

உலப்பிலி - அழியாதவன்.

வினைக்கடல் வற்றும்

377. ஓமத்துள் அங்கியின் உள் உளன் எம் இறை
ஈமத்துள் அங்கி இரதம் கொள்வான் உளன்;
வேமத்துள் அங்கி விளைவு வினைக்கடற்கு
ஓமத்துள் அங்கி குரை கடல் தானே.

ஓமத்து எங்கியி [1]னுள்ளுள னெம்மிறை
யீமத்து எங்கி யிரதங்கொள் வானுளன்[2]
வேமத்து எங்கி விளைவு வினைக்கடற்[3]
கோமத்து எங்கி [4]குரைகட றானே[5]. (9)

வேறு பாடம்: 1. னுள்ளன னெம்மிறை (ஆ) IV. 2. வானுள (ஈ) I. 3. வினைக்கடல் (அ ஆ இ ஈ ஊ ஒ) I. 4. குணக்கட (ஈ) IV குரைகன (திரு) 5. னாதனே (ஆ) IV.

கருத்து: வினை கடல் போன்றது. ஆனால் அதை வற்றச் செய்வது யாக குண்டத்தில் வளரும் தீ. ஆதலின் அதுவும் கடல் போன்றதே.

வேமம் - வியோமம் என்பதன் மரூஉ; ஆகாயம்.

யாகமும் யோகமும்

378. அங்கி நிறுத்தும் அருந்தவர், ஆரணத்து
அங்கி இருக்கும் வகை அருள் செய்தவர்
எங்கும் நிறுத்தி விளைப்ப, பெரும்பதி
பொங்கி நிறுத்தும் புகழ் - அது ஆமே.

அங்கி நிறுத்து மருந்தவ ராரணத்[1]
தங்கி யிருக்கும் வகையருள் செய்தவ
ரெங்கு நிறுத்தி விளைப்பப் பெரும்பதி[2]
பொங்கி நிறுத்தும் புகழது வாமே[3] (10)

வேறு பாடம்: 1. வாரணத் (அ ஆ இ ஈ எ) I. 2. ராரணந் (த) 2. யிளைப்பப் (அ) (பா 3); யிமைப்ப (ஆ) I. 3. மாமே (எ) I.

கருத்து: ஓமத்தீ வளர்க்கும் தவசியரும், வேதத்தில் கூறப்பட்டவாறு, தம் உடம்பிலும் மூலக் கனலை வளர்க்கும் வண்ணம் அருள்பெற்ற வரும் எங்கும் முறையே யாகமும் யோகமும் செய்ய, அதுவே ஓர் இடம் புகழ் மிகுவதற்குக் காரணம் ஆகும்.

நிறுத்தும் - நிலையாக வளர்க்கும். ஆரணத்து அங்கி - வேதத்தில் சொல்லப்பட்ட தீ. இருக்கும் வகை - அந்தணரின் உடம்பில் இருக்கும் வண்ணம். அருள் செய்தவர் - அருள் செய்யப்பட்டவர். எங்கும் - உலகு எங்கும். நிறுத்தி விளைப்ப - யாககுண்டத்தில் தீவளர்த்து, அதே போலத் தம் உடம்பிலும் தீயை விளைவித்தால்.

அந்தணர் தவம்

379. அந்தணர் ஆவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பி, முப்போதும் நியமம் செய்
தம் தவ நற்கருமத்து நின்று ஆங்கு, இட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கு அறுப்போர்களே.

அந்தண ராவோ ரறுதொழில் பூண்டுளோர்[1]
செந்தழ லோம்பிமுப் போது நியமஞ்செய்
[2]தந்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச்
சந்தியு மோதிச் சடங்கறுப் போர்களே. (11)

வேறுபாடம்: 1. கண்டுளோர் (ஓ) IV. 2. தந்தது (சண்)

கருத்து: அந்தணர் என்போர் ஆறுதொழில் உடையோர். ஓமத்தீ பேணி, மூன்று வேளையும் நித்திய கருமம் செய்து, தமது தவத்தையும் செய்து, சந்தியா வந்தனம் செய்து வருவோர்.

நியமம் - தவறாது செய்யப்படுவது; வழிபாடு. தவமாகிய நற்கருமம். சந்தியில் ஓதுதல் - சந்தியாவந்தனம். அறுத்தல் - நிறைவாகச் செய்தல்.

கடந்தவனைக் காண்போர்

380. வேதாந்தம் கேட்க விருப்பொடு முப்பதப்
போதாந்த மான பிரணவத்துள் புக்கு
நாதாந்த வேதாந்த போதாந்த நாதனை
ஈது ஆம் எனாது கண்டு இன்புறுவோர்களே.

வேதாந்தங் கேட்க விருப்பொடு முப்பதப்[1]
போதாந்த மான பிரணவத் துட்புக்கு
நாதாந்த வேதாந்த போதாந்த நாதனை
[2]யீதாமெ னாதுகண் டின்புறு வோர்களே. (12)

வேறு பாடம்: 1. முப்பதம் (அ ஆ இ ஈ ஊ ஓ) (பா 3) I. 2. மீதாந்த மெனாது கண் (அ) I; யீதான மேது கண் (பா 3).

கருத்து: வேதத்தின் முடிவான - பயனான பொருளைப் பற்றிக் கேட்கும் விருப்பங் கொண்டு. அகர உகர மகாரமான பிரணவத்தைப் பற்றுக் கோடாகப் பற்றி, நாதம், வேதம், ஞானம்

இவற்றிற்கு அப்பால் விளங்கும் தலைவனை, சுட்டி அறியாது, உயிருணர்வால் ‘கண்டு’ இன்புறுவோர் அந்தணராவர்.

குறிப்பு: துடிசைகிழார் பதிப்பில் இப்பாடல் இல்லை. முப்பதம் - பிரணவம். ஈது ஆம் எனாது - வருணனைக்கு அப்பாற்பட்ட நிலையில்.

அசபா காயத்திரி

381. காயத்திரியே கருது சாவித்திரி
வாய்தற்கு உரிப் பரமமந்திரம் ஆங்கு உன்னி
நேயத்தேர் ஏறி நினைவுற்று நேயத்து ஆய்
மாயத்துள் தோயா மறையோர்கள் தாமே.

காயத் திரியே கருதுசா வித்திரி
[1]வாய்தற் [2]குரிப்பரம மந்திர மாங்குன்னி
நேயத்தே [3]ரேறி நினைவுற்று நேயத்தாய்
மாயத்துட் [4]டோயா மறையோர்க டாமே. (13)

வேறு பாடம்: 1. யாய்தற் (ஈ எ); பாய்தற் (உ) I யாயத்தகுப்பர (பா 3) 2. குரைப்பரம் (இ); குரைப்பர (ஊ) I ; குவப்பர் (எ) II. 3. தெரிவு (ஊ) I. 4. டோயார் (பா 3).

கருத்து: காயத்திரி என்ற சாவித்திரி மந்திரம் நற்பயன் நல்கும் மேலான மந்திரம் ஆகும். அதைத் தியானித்து அன்பு என்ற தேரில் ஏறி, ‘நினைவு’ என்ற உயிருணர்வை எய்தி, அன்பு செய்யப்படும் இறைவனோடு ஒன்றிநின்று உணர்ந்து, இதன் காரணமாக மாயையுள் அழுந்தாதோர் அந்தணர் ஆவர்.

பின்னர், திருவம்பலச் சக்கரம் என்ற இயலில், அசபா மந்திரமே அந்தணர்கள் சந்தியாவந்தனம் செய்வதற்குரிய மந்திரம் என்பார். அசபா காயத்திரி என்றும் இம் மந்திரம் வழங்கப்படும்.

நினைவு - நினைக்கப்பட்ட பொருளை. உற்று - அடைந்து. நேயத்தாய் - நேயம் என்ற அறியப்படு பொருளோடு ஒன்றி. மாயம் - உலகியல்.

பிரணவம் மூச்சில்; சிவம் உயிரில்

382. பெருநெறி யான பிரணவ மோர்ந்து
குருநெறி யாலுரை [1]கூடிநால் வேதத்
திருநெறி யான [2]திருகை யிருத்திச்[3]
சொருபம [4]தானோர் துகளில்பார்ப் பாரே[5]. (14)

வேறு பாடம்: 1. கூடினால் (விசு) (திரு) (சுவ) 2. திரிகை (ஊ ஒ) கிரிகை (அ ஆ இ ஒ) II. 3. யிருந்து (அ ஆ இ ஒ) (பா 3) II. 4. தான (ஊ) தாகத் (ஆ) II. 5. பார்ப்பானே (ஆ இ ஊ) I.

கருத்து: பிரணவ மந்திரத்தைச் சிந்தித்து, குருஉபதேசத்தின் வழி, தியானம் செய்து, பிரணவத்தின் ஒலி, தமது உயிர் மூச்சின் நாதத்துடன் இணைய, பிரணவப் பொருள் ஆகிய 'சிவம்' தம் உயிருணர்வில் 'கலக்க', வேதநெறியாகிய முறுக்காணியைப் பதிய முறுக்கி, 'உண்மை நிலையை' அடைந்தோர் மாசற்ற அந்தணராவர்.

உரை கூடுதல் - உரைக்கப்படும் மந்திரஒலி, அதன் பொருள் ஆகியவற்றுடன் ஒன்றுதல். திருகு - முறுக்காணி. இருத்தி - பதிய முறுக்கி. சொருபம் - உண்மை.

குறிப்பு: 2 ஆம் அடி 3 ஆம் சீர்க்குச் சுவடிப்பாடம் ஒன்றும் பொருந்த வில்லை. (த) பதிப்புப் பாடம் கொள்ளப்பட்டது.

பிரம வித்தை

383. சத்தியமும் தவம் தான் - 'அவன் ஆதலும்'
மெய்த்தகும் இந்தியம் ஈட்டியே வாட்டலும்
ஒத்த உயிர்கள் உண்டாய உணர்வுற்றுப்
பெத்தம் அறுத்தலும் ஆகும் பிரமமே.

சத்திய [1]முந்தவந் [2]தானவ னாதலு
மெய்த்தகு மிந்திய [3]மீட்டியே வாட்டலு[4]
மொத்த [5]வுயிர்களுண் [6]டாய வுணர்வுற்றுப்
பெத்த மறுத்தலு மாகும் பிரமமே. (15)

வேறு பாடம்: 1. முற்றவர் (ஆ) முற்றவன் (இ) I. 2. றானது வாதலு (ஊ) III. 3. மீட்டிய (ஆ ஊ) I. 4. வோட்டிலு (ஆ) I. 5. வுயிருடலுண்டா யுணர்வுற்றுப் (எ) (ஊ) I. 6. டாயுணர்வுற்றுப் (பா 3)

கருத்து: பிரம வித்தை என்பது, உண்மைப் பொருளைக் காணும் வேட்கையும், தவமும், இறைவனுடன் ஒன்றி நிற்கும் அத்துவித அனுபவமும், மெய்ஞ்ஞான வாழ்வுக்குத் துணைநிற்பனவாக மாறியமைந்த புலன்களைப் பயன்படுத்தியே, உலகின்ப உணர்வை வாட்டுதலும், இயல்பாகவே பாசத்தின் நீங்கிய சிவனை ஒத்த உயிர்கள் உண்டு என்னும் உணர்வு பெற்று, (ஆணவ மலத்தினால்) பிணிப்புண்ட நிலையிலிருந்து விடுபடுதலும் ஆகும்.

ஒத்த உயிர்கள் உண்டாய உணர்வு உற்று - சிவனை ஒத்த உயிர்கள் - சீவன் முத்தர். ஈட்டி - சேர்த்து. புலன்களை அடக்காமல், அவை சேர்த்த அறிவை மெய்யுணர்வு பெறுதற்குப் பயன்படுத்துதல். பெத்தம் - பாசத்தால் (ஆணவ மலத்தால்) பிணிப்புண்ட நிலை.

384. வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை யொழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை யொழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே. (ஆ, ஔ)

385. நூலுஞ் சிகையு நுவலிற் பிரமமோ
நூலது கார்ப்பாச நுண்சிகை கேசமா
நூலது வேதாந்த நுண்சிகை ஞானமா
நூலுடை யந்தணர் காணு நுவலிலே. (க, ங)

குறிப்பு: 'ஈ' - சுவடியில் இப்பாடலை அடுத்து எழுதப்பட்டுள்ள 'நூலுஞ்சிகையும்'; 'அரசுடனாலத்தி' என்ற இரண்டு பாடல்கள் பிற சுவடிகளில் இல்லை. பதிப்புகளில் அவை ஆறாம் தந்திரத்தில் உள்ளன.

386. சத்திய மின்றித் தனிஞானந் தானின்றி
யொத்த விடயம்விட் டோரு முணர்வின்றிப்
பத்தியு மின்றிப் பரனுண்மை யின்றியூண்
பித்தேறு மூடர் பிராமணர் தாமன்றே. (க, ண)

நியமத்தை விட்டு . . .

387. திருநெறி ஆகிய சித்து, அசித்து இன்றிக்
குருநெறியாலே குருபதம் சேர்ந்து
கரும நியமாதி கைவிட்டுக் காணும்
துரிய சமாதியாம் தூய்மறையோர்க்கே.

திருநெறி யாகிய சித்தசித் தின்றிக்
குருநெறி யாலே குருபதஞ் சேர்ந்து
கரும நியமாதி கைவிட்டுக் காணுந்
துரிய சமாதியாந் தூய்மறை யோர்க்கே. (16)

கருத்து: அறிவு இல்லாதவையாகிய உலகப் பொருள்களையும், அறிவுடைய பொருளாகிய தன்னையும் கருதாமல், திருநெறியாக விளையும் குருநெறியில் சென்று, குருவினைச் சார்ந்து, இறுதியில்

செயலையும் நியமத்தையும் கைவிட்டு, இறைவனைத் துரியநிலையில் சமாதி கூடி நின்று காண்பதே அந்தணரின் தூய நெறியாகும்.

இப்பாடலில் கூறப்பட்டது முழுவதும் திருநெறி. 'சித்' என்ற அறிவுப் பொருளாகிய தன்னையும் இறைவனையும் 'ஒன்றாய்' உணர்வதே திருநெறி. அசித்து - உலகப் பொருள்கள். பக்குவம் மிகும்போது கருமமும் நியமமும் தாமே கழலும்.

388. மறையோ ரவரே மறையவ ரானால்
மறையோர்தம் வேதாந்தம் வாய்மையிற் றூய்மை
குறையோர்தன் மற்றுள்ள கோலா கலமென்
றறிவோர் மறையவர் அந்தண ராமே. (ஔ, ண)

389. அந்தண்மை பூண்ட வருமறை யந்தத்துச்
சிந்தைசெய் யந்தணர் சேருஞ் செழும்புவி
நந்துத வில்லை நரபதி நன்றாகு
மந்தியுஞ் சந்தியு மாகுதி பண்ணுமே. (ண)

ஞானமில்லை என்றால் . . .

390. வேதாந்த ஞானம் விளங்க விதி இலோர்
நாதாந்த போதம் நணுகிய போதத்துப்
போதாந்தமாம் பரன்பால் புகப் புக்கக்கால்
நாதாந்த முத்தியும் சித்தியும் நண்ணுமே.

வேதாந்த ஞானம் [1]விளங்க விதியிலோர்
நாதாந்த போத நணுகிய போதத்துப்[2]
போதாந்த [3]மாம்பரன் பாற்புகப் புக்கக்கா[4]
னாதாந்த முத்தியுஞ் சித்தியு நண்ணுமே. (17)

வேறு பாடம்: 1. விளங்கி (அ இ எ) I. 2. போகத்து (இ எ ஓ) I; போக்கது (விசு) பேர்க்கது (த) 3. மான பரன்பாற் (ஓ) IV; மாபரன் (அ இ ஈ ஊ) I. 4. புக்கதால் (சண்) (திருவிக) (பா 3).

கருத்து: நாதாந்தம், போதாந்தம் என்ற நிலைகளை எய்தியவரும் வேதாந்த ஞானம் பெற்றால் அன்றி, முத்தியும் சித்தியும் பெற இயலாது.

குறிப்பு: துடிசைகிழார் பதிப்பில் இப்பாடல் இல்லை.

391. ஒன்று மிரண்டு மொருங்கிய காலத்து
நன்று மிருந்து நலம்பல பேசினும்
வென்று விளங்கும் விகிர்தனை நாடுவர்
சென்று வணங்குந் திருவுடை யோரே. (ஔ)

'நான்' - போய்விடும்

392. தானே விடப் பற்று இரண்டும், தரித்திட
'நானே' விடப்படும்; ஏது ஒன்றை நாடாது;
பூ மேவு நான்முகன் புண்ணிய போகனாய்
'ஓம்' மேவும் ஓம ஆகுதி அவி உண்ணவே.

தானே [1]விடப்பற் றிரண்டுந் தரித்திட[2]
நானே [3]விடப்படு மேதொன்றை நாடாது
பூமேவு நான்முகன் புண்ணிய போகனா
யோமேவு [4]மோமா குதியவி யுண்ணவே[5]. (18)

வேறு பாடம்: 1. விடும்பற் (எ) IV. 2. திரித்திட (பா 3) 3. விடைப்படு (சண்) 4. மாகுதி யாமவி (ஆ) IV மோரா (துடி) 5. யுண்ணுமே (ஆ) IV யுண்ணவோ (துடி).

கருத்து: பற்று இரண்டும் தானே விட, சிவஞானத்தைத் தரித்திட 'நான்' என்ற தற்போதமும் விடப்படும். பிரணவ ஓம ஆகுதியின் பயன் கூறப்பட்டது.

குறிப்பு: தருமை யாதீனப் பதிப்பில் இப்பாடலின் முதலீரடிகளும் பின் ஈரடிகளும் முறையே இரு வேறு பாடல்கட்கு உரியன வென்றும் அவற்றில் ஏனைய அடிகள் கிடைக்கவில்லை என்றும் குறிக்கப் பட்டுள்ளது. ஆனால் இப்பதிப்பிற்கு ஆராயப்பட்ட அனைத்துச் சுவடிகளிலும் இந்நான்கு அடிகளும் ஒரு பாடலாகவே எழுதப் பட்டுள்ள. அவை பொருளாலும் பொருந்துகின்றன. எதுகை மாறியமை நோக்கி வேறுபாடல்கட்கு உரியன என்று கருதப்பட்டன போலும்.

28. இராச தோடம்

எமன் நல்லவன்

393. கல்லா அரசனும் காலனும் நேர் ஒப்பர்;
கல்லா அரசனின் காலன் மிகநல்லன்;
கல்லா அரசன் அறம் ஓரான் 'கொல்' என்பன்;
நல்லாரைக் காலன் நணுகிநில்லானே.

கல்லா வரசனுங் காலனு நேரொப்பர்[1]
கல்லா வரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா வரச னறமோரான் கொல்லென்ப
னல்லாரைக் கால னணுகிநில் லானே. (1)

வேறு பாடம்: 1. நேரொக்குங் (அ ஆ இ ஈ எ) II. 2. ணணுக (ஆ எ) IV.

கருத்து: கல்வியில்லாத அரசன் எமனை ஒப்பான். ஒருவகையில் எமன், இவ்வரசனினும் நல்லவன் ஆவான். ஏன் எனில் இவ்வரசன் அறநெறியைச் சிந்தியாது, நல்லோரையும் கொல்விப்பான். எமனோ, நல்லோரை அணுகான்.

நல்லார் - வழிபாட்டில் சிறந்தவர்.

குறிப்பு: அனைத்துச் சுவடிகளிலும் 1 ஆம் அடி 4 ஆம் சீருக்கு 'நேரொக்கும்' எனப் பாடம் உள்ளது. அஃது இலக்கணப் பிழை யாதலின், முற்பதிப்புகளிற் கண்ட பாடமே இப் பதிப்பிற் கொள்ளப் பட்டது.

அரசன் சிந்திக்காவிட்டால்?

394. நாள்தொறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாள்தொறும் நாடி, அவநெறி நாடானேல்,
நாள்தொறும் நாடு கெடும்; மூடம் நண்ணுமால்;
நாள்தொறும் செல்வம் நரபதி குன்றுமே.

நாடொறு மன்னவ னாட்டிற் றவநெறி
நாடொறு நாடி [1]யவநெறி நாடானே
னாடொறு நாடு [2]கெடுமூட நண்ணுமா
னாடொறுஞ் செல்வ நரபதி குன்றுமே. (2)

வேறு பாடம்: 1. யறநெறி (ஆ) II யரனெறி (த); யவனெறி (சண்) (தெ) 2. கெடுமூடர் நண்ணுவர் (ஊ ஓ) III; கேடுமுடன் (எ) (பா 3) I.

கருத்து: மன்னன் நாட்டில் நாளும் தவநெறி வளரவும் வீணான நெறி வீழவும் சிந்தித்துச் செயற்படவில்லையேல், நாடு சிறிதுசிறிதாக அழியும்; அறியாமை பெருகும்; அரசனின் செல்வம் குறையும்.

மூடம் - அறியாமை. நரபதி - அரசன்

வேடத்தால் பயன் என்ன?

395. வேடநெறி நில்லார் வேடம்பூண்டு என்பயன்?
வேடநெறி நிற்போர் வேடம் மெய்வேடமே;
வேடநெறி நில்லார்தம்மை விறல் வேந்தன்
வேடநெறி செய்தால் வீடு - அது ஆமே.

வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்
வேட நெறிநிற்போர் [1]வேடமெய் வேடமே
வேட நெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்
வேட நெறிசெய்தால் வீடது வாமே[2]. (3)

வேறு பாடம்: 1. வேடமே மைய்வேடம் (ஈ எ) (பா 3) IV. 2. வாகுமே (அ இ ஈ எ ஓ) (பா 3) II.

கருத்து: தவத்திற்கு உரிய வாழ்வு மேற்கொள்ளாதவர், தவவேடம் பூண்பதால் என்ன பயன்? அத்தகையோரை மன்னன், தம் வேடத்திற்கு ஏற்ற நெறியில் வாழுமாறு செய்ய வேண்டும்.

விறல் - வெற்றி. வீடு அது ஆகும் - வீடு பெறுவதற்கு உதவியாகும்.

396. மூடங் கெடாதோர் சிகைநூன் முதற்கொள்ளில்
வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்
பீடொன் றிலனாகு மாதலாற் பேர்த்துணர்ந்
தாடம் பரநூல் சிகையறுத் தானன்றே. (ஔ ங)

397. ஞானமி லாதார் சடைசிகை நூனண்ணி
ஞானிகள் போல நடக்கின் றவர்தமை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குத னலமாகு நாட்டிற்கே. (ஔ)

அரசனின் பொறுப்பு

398. ஆவையும், பாவையும், மற்று அறவோரையும்,
தேவர்கள் போற்றும் திருவேடத்தாரையும்
காவலன் காப்பவன்; காவாது ஒழிவனேல்,
மேவும் மறுமைக்கும் மீளா நரகமே.

ஆவையும் [1]பாவையு மற்றற வோரையுந்
தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையுங்
காவலன் காப்பவன் காவா தொழிவனேன்
[2]மேவு மறுமைக்கு மீளா நரகமே. (4)

வேறு பாடம்: 1. பாரையு (ஆ எ) I. 2. மேலு (பா 3)

கருத்து: மன்னன் பசு, பெண்டிர், அறவோர், சிவனடியார் - இவர்களைக் காக்கும் பொறுப்புடையவன். அதனைச் செய்யானாயின் நரகில் வீழ்வான்.

பாவை - பெண். இங்குப் பெண்டிரைக் குறித்தது. திருவேடத்தார் - சிவனடியார்.

அறநெறியில் நிறுத்த வேண்டும்

399. திறம் தரு முத்தியும் செல்வமும் வேண்டின்
மறந்தும் அறநெறியே ஆற்றல் வேண்டும்;
சிறந்தநீர் ஞாலம் செய்தொழில் யாவையும்
அறைந்திடில், வேந்தனுக்கு ஆறில் ஒன்று ஆமே.

திறந்தரு முத்தியுஞ் செல்வமும் வேண்டின்
மறந்து மறநெறி யேயாற்றல் வேண்டுஞ்
சிறந்தநீர் ஞாலஞ் செய்தொழில் யாவையு[1]
[2]மறைந்திடில் வேந்தனுக் காறிலொன் றாமே. (5)

வேறு பாடம்: 1. பாவை (ஆ இ உ) I. 2. மறிந்திடில் (ஆ) IV.

கருத்து: சைவநெறியால் வகுக்கப்படும் முத்தியும் இம்மைக்குச் செல்வமும் பெற விரும்பினால், அறநெறியைக் கடைப்பிடித்து வாழவேண்டும். நாட்டில் பல்வகைத் தொழில்புரிவோரும் அறநெறியைக் கடைப்பிடிக்குமாறு ஆட்சிசெலுத்தும் அரசனுக்கு

மக்கள் தம் வருவாயில் ஆறில் ஒரு பங்கை இறையாகக் செலுத்துவர்.

திறம் - சைவத்திறம்; சைவதத்துவம். நீர் - கடல். தொழில் - தொழிலால் ஈட்டும் வருவாய். ஆகுபெயர்

அறவழி அரசு

400. வேந்தன் உலகை மிக நன்று காப்பது
வாய்ந்த மனிதர்கள் அவ்வழியா நிற்பர்;
பேர்ந்து இவ் உலகைப் பிறர்கொள்ள, தான் கொள்ளப்
பாய்ந்த புலி அன்ன பாவகத்தானே.

வேந்த னுலகை [1]மிகநன்று காப்பது
வாய்ந்த மனிதர்க ளவ்வழி யாநிற்பர்
[2]பேர்ந்திவ் வுலகைப் பிறர்கொள்ளத் தான்கொள்ளப்[3]
பாய்ந்த புலியன்ன [4]பாவகத் தானே. (6)

வேறு பாடம்: 1. மிக நின்று (ஈ ஊ ஒ) (பா 3) மிகை நின்று (ஆ) I. 2. ஓர்ந்திவ் (ஆ) II. 3. தாங்கொள்ளப் (அ ஆ இ ஈ எ ஒ) I; தான் கொள்ளின் (த) 4. பாவசத் (திருவிக)

கருத்து: மன்னன் நாட்டை அறநெறியில் காப்பானாயின், மக்களும் அந்நெறியில் வாழ்வர். பிறர் தன் நாட்டைக் கொள்ளை கொள்வ தினின்றும் அவன், தன் வீரத்தால் காப்பானாயின் அது மிக நல்ல அறநெறியாகும்.

பேர்ந்து - மாறி. பாவகம் - இயல்பு; வீரம்; வீரத்தால் என்க. பிறர் தன் நாட்டைக் கொள்ளை கொள்வதினின்றும் மாற்றிக் காப்பது மிக நன்று எனக் கூட்டுக.

கள் அருந்தும் யோகி

401. கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிப்
[1]பால்கொண்டு சோமன் [2]முகம்பற்றி யுண்ணாதோர்
மால்கொண்டு தேறலை யுண்ணு மருளரை[3]
மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே. (7)

வேறு பாடம்: 1. பால்கண்டு (சண்) 2. மகம்பற்றி (சண்) (தெ) 3. மருளரே (பா 3)

கருத்து: யோகநெறியில் நில்லாமல், கள் உண்போரை மன்னன் தண்டிக்கவேண்டும் (தண்டனை கள் உண்போருக்கே; யோகம் செய்யாதார்க்கு அன்று.)

கால் - மூச்சுக் காற்று. கட்டி - சுக்கிலத்தைக் (கரு நீர்) கட்டி. கனல் - சுக்கிலத்தையே மூலக் கனல் ஆக எரியச் செய்து. இதை மேலே ஏற்றுதற்குக் குண்டலி சத்தியை மந்திர தியானத்தால் செய்யும் யோக சாதனையால் எழுப்ப வேண்டும். 'சோமன் முகம் பற்றிப் பால் உண்ணாதோர்' எனக் கூட்டுக. சோமன் - சந்திரமண்டலம். பால் - அமுதம்.

திருந்த வேண்டும்

402. தத்தம் சமயத்தகுதி நில்லாதாரை
அத்தன் சிவன், சொன்ன ஆகமநூல் நெறி
எத்தண்டமும் செயும் அம்மையில்; இம்மைக்கே
மெய்த்தண்டம் செய்வது, அவ் வேந்தன் கடனே.

தத்தஞ் சமயத் தகுதிநில் லாதாரை
யத்தன் சிவன்சொன்ன வாகம நூனெறி
யெத்தண்ட முஞ்செயு [1]மம்மையி லிம்மைக்கே
மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே. (8)

வேறு பாடம்: 1. மெய்ம்மையி (அ) II; மும்மையி (இ) II.

கருத்து: ஆகம நூல்நெறிப்படி நில்லாதாரைச் சிவன் மறுமையில் தண்டிப்பான். ஆனால், அவர்களை இம்மையில் தண்டனை அளித்துத் திருத்துவது மன்னன் கடமை.

அத்தன் - எல்லோர்க்கும் தந்தை. சிவன் தான் சொன்ன ஆகமப் படி என்க. அம்மையில் - மறுபிறப்பில். இம்மையில் - இப் பிறவியில். மெய்த் தண்டம் - உடம்புக்குத் தண்டனை.

403. அமுதூறு மாமழை நீரத னாலே
யமுதூறும் பன்மரம் பார்மிசைத் தோற்றுங்
கழுகூறு தெங்கு கரும்பொடு வாழை
யமுதூறு காஞ்சிரை யாங்கது வாமே. (ஆ)

29. சிவ வானச் சிறப்பு

மழை தரும் யோகம்

404. வரை இடை நின்று இழி வான்நீர் அருவி
உரை இல்லை, உள்ளத்து - அகத்துநின்று ஊறும்;
நுரை இல்லை, மாசு இல்லை, நுண்ணிது தெள்-நீர்;
கரை இல்லை, எந்தை கழுமணி ஆறே.

வரையிடை நின்றிழி [1]வானீ ரருவி
யுரையில்லை யுள்ளத் தகத்துநின் றூறு
நுரையில்லை மாசில்லை [2]நுண்ணிது தெண்ணீர்
கரையில்லை யெந்தை கழுமணி யாறே. (1)

வேறு பாடம்: 1. வார்நீ (ஊ) I. 2. நுண்ணிய (ஆ ஊ) IV.

கருத்து: யோகியின் தலையிலிருந்து சொரியும் அமுதம் பற்றிக் கூறச் சொல் இல்லை. உள்ளத்துணர்வு காரணமாக அஃது ஊறும். அது தெளிந்தது; மாசற்றது; நுட்பமானது; சோதியாய் விளங்கும் சிவபெருமானது அருளால் உருவாவது.

வரை - மலை. யோகிக்குத் தலை, மலையாக உருவகிக்கப்படும். வான் நீர் - சிறந்த அமுதம்; பரமாகாயத்துடன் தொடர்பு கொள்ளும்போது ஊறும் அமுதம். இதன் விரிவை இந்நூல் ‘கேசரியோகம்’ என்னும் அதிகாரத்துக் காண்க. உள்ளத்து அகத்து - உணர்வு காரணமாக. கழுமணி - சிறந்த ஒளி.

30. தீர்த்தம்

யாத்திரை வேண்டுமா?

405. உள்ளத்தின்உள்ளே உள பல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்துநின்று ஆடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனம் உடைக் கல்விஇலோரே.

உள்ளத்தி னுள்ளே யுளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்துநின் றாடார் வினைகெடப்
பள்ளமு மேடும் பரந்து திரிவரே[1]
கள்ள மனமுடைக் கல்வியி லோரே[2]. (1)

வேறு பாடம்: 1. திரிவரிக் (துடி) திரிவரேற் (எ) III. 2. னாரே (ஊ) I.

கருத்து: உயிருணர்வால் உடம்பின்கண் ஊறும் அமுதம் பல உண்டு. இருவினைப் பயனும் நீங்குமாறு அதில் நீராடாது, வெளியில் பல ஊர்களிலும் யாத்திரை செய்து திரிகின்றனர். இவர் தமது மனத்தின் வஞ்சனைக் குணத்தை மாற்றுவதில்லை. ஞானநெறிக் கல்வியும் பெறுவதில்லை.

உள்ளம் - உயிர் உணர்வு.

அனுபவமா?

406. தளி அறிவாளர்க்குத் தண்ணிதாய்த் தோன்றும்;
குளி அறிவாளர்க்குக் கூடவும் ஒண்ணான்;
வளி அறிவாளர்க்கு வாய்க்கினும் வாய்க்கும்;
தெளி அறிவாளர் தம் சிந்தையுளானே.

தளியறி வாளர்க்குத் தண்ணிதாய்த் தோன்றுங்
குளியறி வாளர்க்குக் கூடவு மொண்ணான்[1]
வளியறி வாளர்க்கு வாய்க்கினும் வாய்க்குந்
[2]தெளியறி [3]வாளர்தஞ் சிந்தையு ளானே. (2)

வேறு பாடம்: 1. மொன்றான் (ஒ) I. 2. தெளிவறி (இ ஈ எ) III. 3. வாளர்க்குச் (ஆ ஊ ஒ) III.

கருத்து: உடம்பாகிய கோயிலில் இறைவனைக் காண்பவர்க்கு, அவரது நெற்றி மண்டலத்தில் குளிர்ந்து விளங்குவான். தீர்த்தம் ஆடுபவர்க்குத் தோன்றான். மூச்சுக் காற்றுப் பற்றி அறிந்தவர்க்கு ஒருகால் காணக்கிடைக்கலாம். ஞானம் உடையோரின் சிந்தையில் நீங்காமல் உள்ளான்.

நீங்குமா? தேங்குமா?

407. உள்ளத்தின் உள்ளே உணரும் ஒருவனைக்
கள்ளத்தின் ஆரும் கலந்து அறிவார் இல்லை;
வெள்ளத்தை நாடி விடும் அவர் தீவினை
பள்ளத்தில் இட்டது-ஓர் பந்தருள் ஆமே.

உள்ளத்தி னுள்ளே யுணரு மொருவனைக்
கள்ளத்தி [1]னாருங் கலந்தறி வாரில்லை
வெள்ளத்தை நாடி விடுமவர் தீவினை[2]
பள்ளத்தி விட்டதோர் [3]பந்தருள் ளாமே[4]. (3)

வேறு பாடம்: 1. னாலுங் (ஒ) I. 2. தீவினைப் (எ) I. 3. பத்தலுள் (எ) I. 4. ளானே (அ ஆ) I.

கருத்து: உயிருணர்வால், உயிரினுள்ளே உணரப்படும் இறைவனை, வெளி ஆரவாரத்தால் யாரும் கலந்து அறிய இயலாது. அவ்வாறு ஆரவாரமாகத் தீர்த்தத்தை (ஆற்றை) நாடுவதால் நீங்குவதாக அவர் நினைக்கும் அவரது தீவினை, பள்ளத்தில் இட்டுவைத்த பந்தலுக்குள் சிக்கிக்கொள்வது போலத் தங்கிவிடும்; ஆற்றோடு போகாது!

தலையில் கங்கை

408. **அறிவு ஆர் அமரர்கள் ஆதிப் பிரானைச்**
செறிவான், உறைபதம் சென்று, வலங்கொள்
மறி, வார் வளைக்கை வருபுனல் கங்கைப்
பொறி ஆர் புனல் மூழ்க, புண்ணியன் ஆமே.

அறிவா ரமரர்க ளாதிப் பிரானைச்
செறிவா னுறைபதஞ் சென்றுவ லங்கொண்
[1]மறிவார் [2]வளைக்கை [3]வருபுனற் கங்கைப்
[4]பொறியார் புனன்மூழ்கப் புண்ணிய னாமே[5]. (4)

வேறு பாடம்: 1. மறியார் (இ ஈ ஊ ஒ) II. 2. வளைக்க (த) 3. வரும் புனற் (அ ஆ) IV. 4. பொறிவார் (ஆ) I. 5. ராமே (எ) III.

கருத்து: மெய்ஞ்ஞானமாக நிறைந்த தேவர்தலைவனைக் கலந்து மகிழ விரும்புவோன், தன் உடம்பில் அவன் வாழும் இடமாகிய சகஸ்ராரத்துக்கு, யோக சாதனையால் உயிருணர்வைக் கொண்டு சென்று, அங்கே கங்கையாற்றில் மூழ்கினால், பேரின்பம் பெறுவான்.

மேலே கூறிய 'வானீரையே' இங்குக் 'கங்கை' என்றார். 'சிவபிரானின் சடை முடியில் கங்கை' - என்றே இதனைக் கூறியது, சகஸ்ராரத்தில் யோகி, சிவனை உணர்வான் ஆதலின்.

கடலில் போட்டுக் குளத்தில் எடுப்பவர்

409. கடலில் கெடுத்துக் குளத்தினில் காண்டல்
உடலுற்றுத் தேடுவார்தம்மை ஒப்பார் இல்;
திடம் உற்ற நந்தி திருவருளால் சென்று
உடலில் புகுந்தமை, ஒன்று அறியாரே.

கடலிற் [1]கெடுத்துக் குளத்தினிற் காண்ட[2]
[3]லுடலுற்றுத் தேடுவார் தம்மையொப் பாரில்[4]
திடமுற்ற நந்தி திருவரு ளாற்சென்
றுடலிற் [5]புகுந்தமை யொன்றறி யாரே. (5)

வேறு பாடம்: 1. கொடுத்துக் (தெ); கவிழ்த்துக் (ஒ) IV. 2. கண்டா (ஊ) I. 3. லுடலுற (திரு வி க); (விசு) 4. பாரிற் (அ ஆ) I பாரிலர் (எ) III. 5. புகுந்தவை (அ); புகுந்தன (ஆ) I.

கருத்து: என்றும் உள்ளவனான சிவன், தமது உடம்பில் உள்ளமையால், உலகவிடயம் ஒன்றையும் பாராமல், அவனது திருவருளால், யோக சாதனையின் மூலம், கடலில் தொலைத்து விட்டு, குளத்தில் தேடுவாரைப் போல, மூலாதாரத்தில் நீர்ப்பையில் அருகே உள்ள விந்து சத்தியை நிலை மாற்றி, குண்டலியுடன் சேர்த்து, சுழுமுனை நாடியின் வழியே மேலே ஏற்றி, புருவ மத்தியில் ஒளியாகக் காண முயலுவோருக்கு இணையானவர் இல்லை.

குணத்தோடு சுக்கிலம்

410. கலந்தது நீர் - அது உடம்பில் கறுக்கும்;
கலந்தது நீர் - அது உடம்பில் சிவக்கும்;
கலந்தது நீர் - அது உடம்பில் வெளுக்கும்
கலந்தது நீர், அனல், காற்று - அது ஆமே.

கலந்தது நீர துடம்பிற் கறுக்குங்[1]
கலந்தது நீர துடம்பிற் சிவக்குங்[2]
கலந்தது நீர துடம்பில் வெளுக்குங்
கலந்தது [3]நீரனல் காற்றது வாமே. (6)

வேறு பாடம்: 1. கலங்குங் (ஆ) I. 2. சிறுக்குங் (ஊ) IV. 3. நீரவை (இ) II; நீர் நிலங் (அ ஆ எ) II.

கருத்து: தாமத குணத்துடன் கலக்கும் விந்து கருமையாய்த் தோன்றும். இராசத குணத்துடன் கலக்கும் விந்து, வாயுவாய் அனலாய், நெற்றிக்கு வந்து சிவந்த ஒளியாய்த் தோன்றும். சத்துவ குணத்துடன் கலக்கும் விந்து நெற்றியில் வெள்ளை யொளியாய்த் தோன்றும்.

குறிப்பு. அடுத்த இயலாக, அனைத்துச் சுவடிகளிலும், பதிப்புகளிலும் "திருக்கோயிலிழிவு" என்பது இடம் பெறுகின்றது. இதில் 5 பாடல்கள் உள்ளன. அவை ஆசிரியரின் நடையினின்றும் வேறுபட்டவை யாதலின் இடைச்செருகல் ஆகும்.

இதனை யடுத்து 'அதோமுக தரிசனம்' என்னும் இயல் உள்ளது. இப் போதைய பதிப்பில், இடப் பொருத்தம் நோக்கி, 'அடிமுடி தேடல்' என்னும் இயலை யடுத்து அது வைக்கப்பட்டது.

திருக்கோயிலிழிவு

411. தாபர லிங்கம் பறித்தொன்று தாபித்தா
லாவதன் முன்னே யரசு நிலைகெடுஞ்
சாவதன் முன்னே பெருநோய் தலைப்படுங்
காவலன் பேர்நந்தி கட்டுரைத் தானே. (ஔ)

412. கட்டுவித் தார்மதிற் கல்லொன்று வாங்கிடின்
வெட்டுவிக் கும்மபி டேகத் தரசரை
முட்டுவிக் கும்முனி வேதிய ராயினும்
வெட்டுவித் தேவிடும் விண்ணவ னாணையே. (ஔ)

413. ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்றிருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைக டப்பிடிற் றானே. (ஔ)

414. முன்னவ னார்கோயிற் பூசைகண் முட்டிடின்
மன்னற்குத் தீங்குள வாரி வளங்குன்றுங்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
யென்னரு நந்தி யெடுத்துரைத் தானே. (ஔ)

415. பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றனை யர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தற்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாமென்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே. (ஔ)

31. தானச் சிறப்பு

விருந்தோம்பல்

416. அவ்வியம் பேசி அறம் கெட நில்லன்மின்;
வெவ்வியன் ஆகிப் பிறர் பொருள் வவ்வன்மின்;
செவ்வியர் ஆகிச் சிறந்து உண்ணும் போது ஒரு
தவ்வி கொடு உண்மின் தலைப்பட்ட போதே.

அவ்வியம் பேசி யறங்கெட நில்லன்மின்
வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்விய [1]ராகிச் சிறந்துண்ணும் போதொரு
[2]தவ்விகொண் டுண்மின் தலைப்பட்ட போதே (1)

வேறு பாடம்: 1. செவ்வியனாகிச் (அ) IV. 2. தவ்விகொ (உ); தவ்வி யங்கொண் (ஆ); தவ்விக்கொடுமின் (எ) I; தவ்வி கொடுமின் (த) (துடி); தவ்விக் கொடுண்மின் (விசு) (தி); தவ்விகொடுண்மின் (சண்)

கருத்து: பொறாமையால் அறம் தவறி நடவற்க. அறிவு இழந்து பிறர் பொருள் கவரற்க. சான்றோர்களைக் கண்டவுடனே, விருந்தினராக வரவேற்று, அவர்கள் கருணையுடன், இனிதாக உண்டபின், மீந்ததை, அஃது ஓர் அகப்பையாக இருப்பினும் உண்ணுக.

குறிப்பு. இப்பாடல் சுவடிகளிலும் பதிப்புகளிலும் 'உயிர்நிலையாமை' என்னும் அதிகாரத்தில் உள்ளது. பொருட்பொருத்தம் நோக்கி, இப்பதிப்பில் 'தானச் சிறப்பு' - அதிகாரத்தின் முதற்பாடலாக வைக்கப்படுகின்றது. மற்றும், பதிப்புகளில் 'தானச் சிறப்பு' என்னும் அதிகாரத்தில் 'ஆர்க்கும் இடுமின்' என்ற பாடல் மட்டுமே உள்ளது. அடுத்து, 'தாமறிவார்' என்பது முதல் 'பற்றுதுவாய்' என்னும் பாடல் வரை, 'அறஞ்செய்வான் திறம்' என்ற அதிகாரமாக அமைக்கப் பட்டுள்ளன. ஆயின், இப்பதிப்பிற்குக் கிடைத்த சுவடி ஒன்றிலும் இவ்வதிகாரம் இல்லை. "ஆர்க்கும் இடுமின்" என்பது முதல் 'பற்றதுவாய்' என்பது வரை 'தானச் சிறப்பு' என்ற அதிகாரமாகவே

அமைந்துள்ளன. அதன்படியே இப்பதிப்பில் அதிகார வைப்பும் அமைப்பும் மேற்கொள்ளப்பட்டன.

ஈகை

417. ஆர்க்கும் இடுமின், அவர் இவர் என்னன்மின்
பார்த்து இருந்து, உண்மின்; பழம்பொருள் போற்றன்மின்;
வேட்கை உடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்;
காக்கை கரைந்து உண்ணும் காலம் அறிமினே.

ஆர்க்கு மிடுமி னவரிவ ரென்னன்மின்
[1]பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை யுண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் கால மறிமினே. (2)

வேறு பாடம்: 1. பாத்திருந் (சண்) (சங்)

கருத்து: தகுதி உடையார், தகுதி இலர் என வேற்றுமை செய்யாது யார்க்கும் தானம் செய்க. விருந்தினர் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்து உண்க. பழைய உணவைப் பாதுகாத்து விருந்தாளிக்கு அளிக்க வேண்டா. உணவு விருப்பம் கொண்டு விரைந்து தமியராய் உண்ணற்க. காக்கையும் உண்ணும் காலத்தில் தன் இனத்தைக் கரைதலை அறிக.

'தன்னை' அறிந்தோர்

418. தாம் அறிவார் அண்ணல் தாள் பணிவார் - அவர்;
தாம் அறிவார் அறம் தாங்கி நின்றார் - அவர்;
தாம் அறிவார் சில தத்துவர் ஆனவர்;
தாம் அறிவார்க்குத் தமர் பரன் ஆமே.

தாமறி வாரண்ண றாள்பணி வாரவர்
தாமறி வாரறந் தாங்கிநின் றாரவர்
தாமறி [1]வார்சில தத்துவ ரானவர்[2]
தாமறி வார்க்குத் தமர்பர னாமே. (3)

வேறு பாடம்: 1. வார்சிவ (ஆ இ ஊ) III. 2. ராவர்கள் (அ எ ஓ) III.

கருத்து: தம்மை ஆன்மா எனவும் இறைவனடிமை எனவும் அறிபவர் அவனது அடி பணிவர். அறம் செய்வதை மேற்கொள்வர். 36 தத்துவங்களையும் ஆள்வர். அவருக்கு உறவு பரமசிவமே.

தாம் அறிவார் - தம்மை அறிவார். இவர் இறைவன் தாள் பணிதலோடு அறம் செய்தலையும் மேற்கொள்வார். ஏனெனில், தம்மை அறிதல் அன்பை அறிதலாகும்; அன்பே சிவம் ஆதலின் என்க. தத்துவர் - தத்துவங்களை ஆள்பவர். தமர் - உறவினர்.

எளிய அறங்கள்

419. யாவர்க்கும் ஆம் இறைவற்கு ஒரு பச்சிலை;
யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி;
யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தானே.

யாவர்க்கு மாமிறை வர்க்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை[1]
யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே. (4)

வேறு பாடம்: 1. வாயறுகு (அ இ ஈ எ) II.

கருத்து: இறைவனைப் போற்றித் தூவ யாதேனும் ஒரு பச்சிலை யாவர்க்கும் கிடைக்கும். பசுவுக்கு ஒருவாய் அறுகம்புல் யாரும் அளிக்கலாம். உண்ணும் வேளையில் ஒரு கைப்பிடி அரிசி அல்லது உணவு எடுத்து இரவலர்க்கு அளிக்க யாவர்க்கும் இயலும்.

வறியோர்க்கு ஈதல்

420. அற்றுநின்றார் உண்ணும் ஊணே அறன் என்னும்
கற்றன போதம் கழல்பவர் மானிடர்
உற்றுநின்று ஆங்கு ஒரு கூவற் குளத்தினில்
பற்றிவந்து உண்ணும் பயன் அறியாரே.

அற்றுநின் றாருண்ணு மூணே யறனென்னுங்
கற்றன போதங் [1]கழல்பவர் மானிட
ருற்றுநின் றாங்கொரு கூவற் குளத்தினிற்
பற்றிவந் துண்ணும் பயனறி யாரே. (5)

வேறு பாடம்: 1. கமழ்பவர் (எ) IV.

கருத்து: எங்கும் தண்ணீர் இல்லையாக, மக்களும் பிறவும் சிறு பள்ளமாக உள்ள இடத்தில் தேங்கியிருக்கும் தண்ணீரை, வந்து உண்பதுபோல், வறியோர் கொடைப் பண்புடையோரையே நாடி வருவர். அவர்க்கு வழங்குவதால் வரும் பயனை அறியார் சிலர். அவர் தாம் கற்ற "வறியோர்க்கு ஈதலே அறம்" என்னும் ஞானத்தை மறந்தோர் ஆவர்.

அற்றுநின்றார் - வறியோர். போதம் - அறிவு. கழல்பவர் - நீங்கப் பெற்றோர். இத்தகைய மனிதர்கள் பயனறியார் என வினை முடிவு செய்க. பின் 2 அடிகள் உவமை.

முன்னெச்சறிக்கை

421. அழுக்கினை ஓட்டி அறிவை நிறையான்
தழுக்கிய நாளில் தருமமும் செய்யான்
விழித்திருந்து என் செய்வீர் வெம்மை பரந்தது
இழிக்க அன்று என் செய்கீர் ஏழைநெஞ்சீரே.

அழுக்கினை யோட்டி யறிவை நிறையான்[1]
றழுக்கிய நாளிற் றருமமுஞ் செய்யான்[2]
விழித்திருந் தென்செய்வீர் வெம்மை பரந்த[3]
[4]திழிக்கவன் றென்செய்கீ ரேழைநெஞ் சீரே. (6)

வேறு பாடம்: 1. நிறையீர் (எ) நிறையார் (பா 3) IV. 2. செய்யீர் (எ) IV. 3. பரந்து (எ) I. 4. விழிக்க (எ) IV; திழிக்கவென் (பா 3); இழுக்கவன் (த) இழிக்க (தி).

கருத்து: ஆணவ மலத்தை நீக்கி ஞானம் நிரம்பான். செல்வம் மிகுந்தபொழுது தருமமும் செய்யான். அறியாமை உடைய நெஞ்சே, துன்பம் தோன்றி நிந்தனைக்கு ஆளாக்கும் போது என்ன செய்வாய்? இப்போது விழிப்புடன் இருந்து, அத்துன்பம் தோன்றாத வண்ணம் தடுக்க நீ செய்யும் முன்னெச்சரிக்கைச் செயல் என்ன? ஆணவ நீக்கமும் ஞானமும் தருமமுமே துன்பம் வராமல் தடுக்கவல்லவை.

அழுக்கு - ஆணவமலம். அறிவு - மெய்யுணர்வு. தழுக்கிய - தருக்கிய என்பதன் திரிபு; செருக்குக் கொள்ளுகின்ற.

இறக்குமுன் தவம் செய்க

422. தன்னை அறியாது, தாம் நல்லார் என்னாது, இங்கு
இன்மை அறியாது, இளையர் என்று ஓராது,
வன்மையில் வந்திடும் கூற்றம்; வருமுன்னம்
தன்மையும் நல்ல தவம் செய்யும் நீரே.

தன்னை யறியாது [1]தாநல்லா ரென்னாதிங்
கின்மை யறியா திளையரென் றோராது
வன்மையில் வந்திடுங் கூற்றம் வருமுன்னந்[2]
[3]தன்மையு நல்ல தவஞ்செய்யு நீரே. (7)

வேறு பாடம்: 1. தானல்ல னென்னாதிங் (ஓ); தானல்லா (அ எ) IV தான் நல்ல (துடி); தானல வென்னாதிங் (சைவ); தானல்லோ (பா 3); தாம்நல (த). 2. வருமுன்னத் (பதிப்). 3. தன்மையினல்ல (பா 3); தன்மமு (த)

கருத்து: எமன் ஓர் உயிரைப் பிடிக்க வரும்பொழுது தன் சொந்த உணர்ச்சிக்கு இடம் கொடான். எவ்வுயிர் நல்லவராக இருந்தது என எண்ணான். வறியவராய் வாழ்ந்தமையால் இன்னும் சின்னாள் செல்வம் ஈட்டி வாழ்க என விட்டுவையான். இளைய வயதாயிற்றே, நன்கு வாழ்க என விடான். கல்மனத்துடன் வந்து பிடிப்பான். அவன் வருமுன் செய்யத்தக்கது, நல்ல தவமே.

தன்னை அறியாது - தனது சொந்த உணர்ச்சி ஒன்றும் இல்லாமல். தாம் - உயிர்கள். இன்மை - வறுமை. பயனால் மட்டும் அன்றித் தன்மையாலும் நல்ல தவம் என்க. அஃது அறமும் இறையன்பும் பொருந்திய வாழ்வாகும். நீர் - தன்மை.

அறம் அறியா மூவர்

423. துறந்தான் வழி முதல் சுற்றமும் இல்லை;
இறந்தான் வழி முதல் இன்பமும் இல்லை;
மறந்தான் வழி முதல் வந்திலன் ஈசன்;
அறந்தான் அறியும் அளவு அறியாரே.

துறந்தான் வழிமுதற் சுற்றமு மில்லை
யிறந்தான் வழிமுத லின்பமு மில்லை
மறந்தான் வழிமுதல் [1]வந்தில னீச[2]
னறந்தா னறியு மளவறி யாரே[3]. (8)

வேறு பாடம்: 1. தந்தில (சண்) 2. ரீச (ஆஇ) IV. 3. வாரே (எ) IV.

கருத்து: துறவிக்கு உறவினர் இல்லை. அறத்திலிருந்து தவறிய வனுக்கு இன்பம் இல்லை. ஈசன் தன்னை மறந்தார்க்குக் காட்சி நல்கான். இம்மூவரும் ஒவ்வொரு வகையில் அறத்தை அறியாதவரே.

இறந்தான் - அறநெறியினின்று வழுவியவன். இம் மூவகையாரும் அறத்தை அறியும் அளவை அறியார் என்க. அளவு என்பது இங்குப் 'பயனைக் கொண்டு அறிதலாகிய' அளவு; வழி.

உண்மைத் தெய்வத்தை அடைய

**424. தான் தவம் செய்வது ஆம் செய் தவத்து அவ்வழி
மான் தெய்வமாக மதிக்கும் மனிதர்கள்;
ஊன் தெய்வமாக உயிர்க்கின்ற பல்லுயிர்;
நான் தெய்வம் என்று நமன் வருவானே.**

தான்றவஞ் செய்வதாஞ் செய்தவத் தவ்வழி
மான்றெய்வ [1]மாக மதிக்கு மனிதர்க
ளூன்றெய்வ மாக வுயிர்க்கின்ற பல்லுயிர்
நான்றெய்வ மென்று நமன்வரு வானே. (9)

வேறு பாடம்: 1. மன்றே (ஒ) IV.

கருத்து: பிரகிருதி மாயையைத் தெய்வமாக எண்ணும் மனிதருக்கும் ஊனுடல் உடையாரைத் தெய்வமாக எண்ணுபவருக்கும் இறுதியில் மரணம் நேரும். உண்மைத் தெய்வத்தை அறிந்து, அதை அடையத் தவம் செய்ய வேண்டும்.

மனிதர்கள் தவந்தான் செய்வதாம் எனக் கூட்டுக. மான் - மகத் என்ற தத்துவம்; பிரகிருதி மாயை. 'தவமும் தவம் உடையார்க்கு ஆகும்' ஆதலின் "செய் தவத்து அவ்வழி, தவம் தான் செய்வதாம்" என்றார். ஊன் - உடம்பு. உயிர்க்கின்ற - வாழ்கின்றன.

கடல் கடக்க

**425. திளைக்கும் வினைக்கடல் தீர்வு உறு தோணி
இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு;
கிளைக்கும் தனக்கும் அக்கேடு - இல் புகழோன்
விளைக்கும் தவம்; அறம் மேல்துணை ஆமே.**

திளைக்கும் [1]வினைக்கட றீர்வுறு தோணி
[2]யிளைப்பினை நீக்கு மிருவழி யுண்டு[3]
கிளைக்குந் தனக்குமக் கேடில் புகழோன்
விளைக்குந் தவமற [4]மேற்றுணை யாமே. (10)

வேறு பாடம்: 1. வினைக்கட் டீர்வுறு (எ) IV கடற்றீர்வுறு (திரு வி க) 2. யிளைப்பின்றி (ஈ எ) II. 3. யேயுண்டு (இ ஊ) IV. 4. போற்றுணை (இ) I.

கருத்து: அனுபவிக்கும் வினைகள் ஆகிய கடலினின்று கரையேற்றும் தோணியாவன; பிறவிக்களைப்பை மாற்றுவன ஆகிய இரு வழி உண்டு. தவமும் அறமும். அவற்றை ஆற்றினால் புகழும் அழியாது நிற்கும். உறவுக்கும் தனக்கும் மறுமையில் நற்றுணையாகும்.

426. பற்றது வாய்நின்ற பற்றினைப் பார்மிசை
யற்ற முரையா னறநெறிக் கல்லது
வுற்றுங்க ளாலொன்று மீந்தது வேதுணை
மற்றண்ணல் வைத்த வழிகொள்ளு மாறே. (ங)

32. அறஞ்செய்யான் றன்மை

கொள்ளைபோகும்

427. எட்டி பழுத்த, இருங்கனி வீழ்ந்தன,
ஒட்டிய நல்லறம் செய்யார் -அவர் செல்வம்
வட்டிகொண்டு ஈட்டியே மண்ணில் முகந்திடும்
பட்டிப் பதகர் பயன் அறியாரே.

எட்டி பழுத்த விருங்கனி வீழ்ந்தன[1]
வொட்டிய நல்லறஞ் செய்யா ரவர்செல்வம்[2]
வட்டிகொண் [3]டீட்டியே மண்ணின் முகந்திடும்
[4]பட்டிப் பதகர் பயனறி யாரே. (1)

வேறு பாடம்: 1. வீழ்ந்தன்ன (த) 2. தவர் செல்வம் (அ ஈ எ ஓ) III. 3. டாட்டியே (அ ஈ எ) I. 4. பட்டப் (எ) I; பட்டிய பாதகர் (பா 3)

கருத்து: உயிருடன் ஒட்டிச் செல்லும் நற்பயனைத் தருவதாகிய நல்லறத்தைச் செய்யாதாரின் செல்வம், எட்டி மரத்தில் பழம் பழுத்துக் கீழே விழுந்துகிடப்பனவற்றை யாரும் உண்ணாமையே

போலப் பயனற்றதாகும். ஆனால் அதைப் பட்டிமாடு போன்ற பாவிகள் வட்டியிட்டு வாரிக் கொள்வர் என்ற முடிவை அச்செல்வர் அறியார். நல்லோர்க்கு உதவாத செல்வத்தைத் தீயோர் கொள்ளையிட்டுச் செல்வர் என்க.

வீழ்ந்த அன்ன - வீழ்ந்ததைப் போன்றன. பட்டி - பட்டிமாடு போன்ற. பதகர் - சண்டாளர். செல்வத்தைப் பட்டிப் பதகர் மண்ணில் முகந்திடும் பயனை (விளைவை) நல்லறம் செய்யாதவர் அறியார் என முடிவு செய்க.

புத்தி பழுதா? மனம் கல்லா?

428. ஒழிந்தன காலங்கள்; ஊழியும் போன;
கழிந்தன கற்பனை; நாளும் குறுகிப்
பிழிந்தன போலத் தம் பேரிடர் ஆக்கை
அழிந்தது கண்டும் அறன் அறியாரே.

ஒழிந்தன காலங்க ளூழியும் போன[1]
கழிந்தன கற்பனை நாளுங் குறுகிப்
[2]பிழிந்தன போலத்தம் பேரிட ராக்கை
[3]யழிந்தது கண்டு மறனறி யாரே. (2)

வேறு பாடம். 1. போயின (எ) IV. 2. பிழிந்தது (சண்) 3. யழிந்தன (சங்)

கருத்து: தமக்கு வாழ்நாள் பெரிதும் நீங்கிற்று. உலகிற்குப் பல ஊழிகள் சென்றன. கற்பனைகள் உண்மையாகாது ஒழிந்தன. சாநாளும் நெருங்கிவிட்டது. பெருந்துன்பம் தந்த உடம்பு சக்கை போல ஆயிற்று - இவற்றைக் கண்டும் அறத்தைச் செய்யாமல் இருக்கின்றாரே!

பலர் பகை

429. அறம் அறியார், அண்ணல் பாதம் நினையும்
திறம் அறியார், சிவலோக நகர்க்குப்
புறம் அறியார் பலர் பொய்ம்மொழி கேட்டு
மறம் அறிவான், பகை மன்னி நின்றானே.

அறமறி யாரண்ணல் பாத நினையுந்
திறமறி யார்சிவ லோக நகர்க்குப்
புறமறி யார்பலர் பொய்ம்மொழி கேட்டு
மறமறி [1]வான்பகை மன்னிநின் றானே[2]. (3)

வேறு பாடம்: 1. வார்பகை (எ) IV வார்வகை (துடி) 2. நின்றாரே (எ) IV.

கருத்து: அறத்தை அறியாதவரும், இறைவனை நினையும் வகையறியாதவரும், சிவலோகத்தின் புறச்சுவர்களைக்கூட அறியாதவரும் ஆகிய பலரது பொய்களை நம்பினான் ஒருவன். அவன் மிக்க பகையைத் தேடிக்கொண்டு வாழ்கிறான். அவனுடைய குணம், செயல்களால் யாவரும் அவனுக்குப் பகையாயினர்.

புறம் அறியார் - வெளிப்புறத்தையும் நெருங்க இயலாதவர். பொய் மொழி - ஞானமொழி போலப் பேசும் சொல்.

நோய்க் கிடங்கு

430. இருமலும் சோகையும் ஈளையும் வெப்பும்
தருமம் செய்யாதவர்தம் பால ஆகும்;
உரும், இடி, நாகம், உரோணி, கழலை
தருமம் செய்வார் பக்கல் தாழகிலாவே.

இருமலுஞ் சோகையு மீளையும் வெப்புந்
தருமஞ்செய் யாதவர் தம்பால வாகு
முருமிடி நாக முரோணி கழலை
தருமஞ்செய் [1]வார்பக்க [2]றாழகி லாவே. (4)

வேறு பாடம்: 1. வாத பக்கல் சாரகி (பா 3) 2. றாழுகி (சண்) (சங்) (தெ)

கருத்து: அறம் செய்யாதோர் பல நோய்கட்கு இரையாவர் அறம் செய்தோர் நோயின்றி வாழ்வர்.

குறிப்பு: இரண்டாம் அடி நான்காம் சீர் "தாகு" என இலக்கணப் பிழையுடன் அனைத்துச் சுவடிகளிலும் காணப்பட்டது. இப்பதிப்பில் "வாகு" எனத் திருத்திக் கொள்ளப்பட்டது.

என்ன உமது விருப்பம்?

431. பரவப்படுவான் பரமனை ஏத்தார்,
இரவலர்க்கு ஈதலை ஆயினும் ஈயார்,
கரகத்தால் நீர் அட்டிக் காவை வளர்க்கார்
நரகத்தே நிற்றிரோ நன்னெஞ்சினீரே?

[1]பரவப் படுவான் பரமனை யேத்தா[2]
ரிரவலர்க் கீதலை யாயினு மீயார்[3]
கரகத்தா னீரட்டிக் காவை வளர்க்கார்[4]
நரகத்தே நிற்றிரோ [5]நன்னெஞ்சி னீரே. (5)

வேறு பாடம்: 1. பரசப் (அ) IV பரவப்படுவார் (சண்) 2. யேத்தீ (த) 3. மீயீர் (த) 4. வளவார் (பா 3); வளர்க்கீர் (த) 5. நாளெஞ்சினீரே (அ) IV.

கருத்து: இறைவனை வணங்காமலும், வறியவர்க்கு ஈயின் தலையளவு உள்ள உணவு கூட அளிக்காமலும், நீர் ஊற்றிச் சோலையை வளர்க்காமலும் இருக்கின்றீர்களே! நீவிர் நரகம் புக விரும்புவீர்களா?

கரகம் - குடம். நெஞ்சு பொதுவாதலின், அதனை விளித்தார். ஈதலை - ஈயின் தலை.

வீடு எய்துவர்

432. வழி நடப்பார்; அன்றி, வானோர் உலகம்
கழி நடப்பார்; கடந்தார் கரும்பாரும்;
அழி நடக்கும் வினை ஆசு அற ஓட்டிட்டு
ஒழி நடப்பார், வினை ஓங்கி நின்றாரே.

வழிநடப் [1]பாரன்றி வானோ ருலகங்
கழிநடப் [2]பார்கடந் தார்கரும் பாரு[3]
[4]மழிநடக் கும்வினை [5]யாசற வோட்டிட்[6]
[7]டொழிநடப் பார்வினை [8]யோங்கிநின் றாரே. (6)

வேறு பாடம்: 1. பாரின்றி (ஆ இ ஊ) I. 2. பார்நடந் (எ) I. 3. கருப்பாரு (அ இ ஊ ஒ); கருப்பாகு (ஆ) I; கருப்பாசம் (பா 3) 4. வழிநடக் (ஆ இ ஊ ஒ) (பா 3) I. 5. மாசற (இ ஒ) III. 6. வோட்டிட (சைவ); வோட்டி (த) 7. வழிநடக்குமள வீழ்ந்தொழிந்தாரே. வழி நடக்கும் மளவீழ்ந் தொழிந்தாரே (சைவ) 8. யோங்கநின் (தெ)

கருத்து: தவச் செயலால் சிறந்து நிற்போர் இம்மையில் வினைகளிலிருந்து விலகி இனிது வாழ்வர். மறுமையில் நரகம் புகாது, வானோர் உலகையும் கடந்து வீட்டுலகை எய்துவர்.

வழி - இம்மை வாழ்வு. அன்றி - மற்றும். ‘கழிய நடப்பார்’ என்பது ‘கழி நடப்பார்’ என நின்றது. கரும்பார் - கரிய நரகம். அழிநடக்கும் - கெடுக்கும். ஒழி - ஒழிந்து, விலகி. “வினை ஒழி நடப்பார்” என மாற்றுக.

துணை கிடைக்காது

433. கனிந்தவர் ஈசன் கழல்-அடி காண்பர்;
துணிந்தவர் ஈசன் துறக்கம்-அது ஆள்வர்;
மலிந்தவர் மாளும்துணையும் ஒன்று இன்றி
மெலிந்து, சினத்தினுள் வீழ்ந்து ஒழிந்தாரே.

கனிந்தவ ரீசன் கழலடி காண்பர்
துணிந்தவ ரீசன் றுறக்கம தாள்வர்
[1]மலிந்தவர் மாளுந் துணையுமொன் றின்றி
[2]மெலிந்து சினத்தினுள் வீழ்ந்தொழிந் தாரே. (7)

வேறு பாடம்: 1. மலிந்தன (பா 3) 2. மெலிந்த (சண்)

கருத்து: சிவனுக்கு அன்பு நிறைந்தவராய் வாழ்ந்தோர் அவன் திருவடியைப் பெறுவர். அது அவர்க்குச் சிவபோகம் தருவது. ஆனால், ஆசை நிறைந்தவர் சாகும்வரை துணையின்றி, வலிகுன்றி, கோபத்தினால் அழிவர்.

மலிந்தவர் - ஆசைமிக்கோர். மாளுந் துணையும் - இறக்கும் வரையும். மெலிந்து - வறுமையுற்று.

அறம் செய்யாதோர் மூடர்

434. இன்பம் இடர் என்று இரண்டுஉற வைத்தது
முன்பு அவர் செய்கையினாலே முடிவதும்;
இன்பம் - அது கண்டும் ஈகிலர் பேதைகள்
அன்பு இலார் சிந்தை; அறம் அறியாரே.

இன்ப மிடரென் றிரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையி னாலே முடிவது[1]
[2]மின்ப [3]மதுகண்டு [4]மீகிலர் பேதைக
[5]ளன்பிலார் சிந்தை யறமறி யாரே. (8)

வேறு பாடம்: 1. முடிந்தது (எ) IV. 2. வின்ப (ஊ) IV. 3. மிதுகண்டு (ஊ அ ஆ) IV. 4. மீகிலாப் (எ) III; மீய்விலர் (பா 3)

கருத்து: ஒருவர் அடையும் இன்பமும் துன்பமும், முற்பிறவியில் அவர் செயல்களின் பயன் ஆகும். அறச் செயலின் பயன் இன்பம்.

பிற செயலின் பயன் துன்பம். இன்பம் விளைவதைக் கண்டும், அன்பு இல்லாதவராய், அறம் செய்யாமல் சில பேதைகள் வாழ்கின்றனர்.

முடிவது - தீர்மானிக்கப்படுவது. இன்பமது - எண் உம்மை தொக்கது. கண்டும் - உம்மை எச்சப்பொருளில் வந்தது. சிந்தை அன்பிலார் என மாற்றுக

உயிர் நன்மை பெற

435. கெடுவதும் ஆவதும் கேடுஇல் புகழோன்
நடு அல்ல செய்து இன்பம் நாடவும் ஒட்டான்
இடுவதும் ஈவதும் எண்ணுமின், இன்பம்
படுவது செய்யின் பசு - அது ஆமே.

கெடுவது மாவதுங் கேடில் புகழோ
னடுவல்ல செய்தின்ப [1]நாடவு மொட்டா
னிடுவது மீவது மெண்ணுமி னின்பம்
படுவது [2]செய்யிற் பசுவது வாமே. (9)

வேறு பாடம்: 1. நாட்டவு (எ) II. 2. செய்யிற் (சண்)

கருத்து: செல்வமும் வறுமையும் இறைவன் தருவன. வினையின் பயன்களாக இவற்றைத் தருகின்றான். அவனது நீதி ஆட்சியில், நடுவுநிலைமை தவறி வாழ்ந்து, இன்பம்பெற இயலாது. எனவே தக்கார்க்கு விருந்திடுவதையும் வறியார்க்கு ஈதலையும் செய்க. இன்பம் எய்தற்குரிய செயல்களைச் செய்தால், உயிர் ஆக்கம் பெறும்.

கேடில் புகழோன் - இறைவன். இடுவது - விருந்துபசரிப்பு. ஈவது - வறியவற்கு அளித்தல். பசு - உயிர். ஆம் - ஆக்கம் பெறும். அது - பகுதிப்பொருள் விகுதி. கேடில்புகழோன் செயல் என, ஒரு சொல் வருவித்து உரைக்க.

அறிவற்றவரைப் புகழாதே

436. செல்வம் கருதிச் சிலர் பலர் வாழ்வு எனும்
புல்லறிவாளரைப் போற்றிப் புலராதே,
இல்லம் கருதி இறைவனை ஏத்துமின்
வில்லி இலக்கு எய்த விற்குறி ஆமே.

செல்வங் கருதிச் சிலர் பலர் வாழ்வெனும்
புல்லறி வாளரைப் போற்றிப் புலராதே
யில்லங் கருதி யிறைவனை யேத்துமின்
[1]வில்லி யிலக்கெய்த விற்குறி யாமே. (10)

வேறு பாடம்: 1. வில்லிற வெய்த (எ) II.

கருத்து: சிலரோ பலரோ வாழ்கிறார் என்று, செல்வத்தையே விரும்பி, அறிவற்றவரைப் புகழ்ந்து மெலியாமல், வீடுபேறாகிய செல்வத்தைப்பெற இறைவனைப் போற்றுக. பயன் பெறலாம்.

"சிலர் பலர் வாழ்வு" - எனும் செல்வம் கருதி எனக் கூட்டுக. புலராது - மெலியாமல். இல்லம் - வீடுபேறு. வில்லி - வில்வல்லோன். இறைவனை ஏத்துவது, வில்வல்லோன் இலக்கினை எய்ய வைத்த குறிபோலத் தவறாமல் வீடுபேற்றைத் தரும்.

33. அன்புடைமை

அன்பே சிவம்

437. [1]அன்பு [2]சிவமிரண் [3]டென்ப ரறிவிலா
ரன்பே சிவமாவ தாரு மறிகிலா
ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி
னன்பே சிவமா யமர்ந்திருந் தாரே[4]. (1)

வேறு பாடம்: 1. அன்புஞ் (எ) III. 2. சிவமு (எ) III. 3. மிரண்டெடன்ப (எ) III. 4. தானே (அ இ ஒ) (பா 3) IV.

கருத்து: அன்பு உலகியல், சிவம் இறையியல், இரண்டும் வேறு வேறு என்பவர் அறிவில்லார். அன்பே சிவம் என்பதை யாரும் அறிந்திலர். அனுபவத்தால் ஒவ்வொருவரும் அதை அறிந்தால், அவர் உள்ளத்தில் அன்பு, சிவம் இரண்டும் ஒன்றாகவே இருப்பதை - அன்பு செய்யும் ஆன்மாவும் இறைவனும் ஒன்றிநிற்பதை - அறிவர். ஆன்மா சிவமாய் நிற்கும். அதற்கு வழி அன்பு என்பது கருத்து.

உயிரின் அன்பும் இறைவனின் அருளும் ஒன்று கலத்தலைக் கூறினார். அமர்பவர் சிவமும் உயிரும். அமர்தல் - விரும்பி இன்புறுதல்.

மறவா அன்பு

438. பொன்னைக் கடந்து இலங்கும் புலித்தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி ஆடிக்குப்
பின்னிக் கிடந்தது என் பேரன்பு தானே.

பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து [1]மிளிரு மிளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே. (2)

வேறு பாடம்: 1. மிளிர்பிறை வேணியன் (பா 3)

கருத்து: பொன்னை வென்ற நிறமுடைய புலித்தோல் உடையினன். பிறைசூடி. மயானச் சாம்பலே அவன் ஆடும் அரங்கம். அவனிடம் என் நெஞ்சம் அன்பு கொண்டு, அவனை மறக்க இயலாததாயிற்று.

மின்னி - 16 கலையும் ஒளிவீசி. துன்னி - அடைக்கலமாய் அடைந்து. பிறையை ஆன்மாவாகக் கொள்ளுதல் சைவ தத்துவ மரபாதலின், ஆன்மா அருள் வியாபகத்தில் தற்போதம் அற்று இருத்தலைத் "துன்னிக் கிடந்த" என்றார். பின்னி - என்னையும் அவனையும் கலக்கச் செய்வதாய்.

அன்பு இல்லா யோகம்

439. என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன் போல் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடு உருகி அகம் குழைவார்க்கு அன்றி
என் போன்மணியினை எய்த ஒண்ணாதே.

என்பே விறகா விறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் [1]கனலிற் பொரிய வறுப்பினு
மன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
[2]யென்போன் மணியினை யெய்தவொண் ணாதே. (3)

வேறு பாடம்: 1. விறகிற் (ஆ இ ஈ ஊ ஒ) I அனலிற் (பா 3)
2. யென்பொன் (த)

கருத்து: முதலிரண்டு அடிகளில் குண்டலி யோகத்தைக் கூறினார். சிவனடிக்கு அன்புடன் அது சிவயோகமாதல் வேண்டும் என்பது கருத்து. 'என் பொன் மணி' எனற்பாலது 'என் போன் மணி' என நீண்டது.

அன்பே வழி

440. ஆர்வம் உடையவர் காண்பார் அரன் தன்னை;
ஈரம் உடையவர் காண்பார் இணை அடி;
பாரம் உடையவர் காண்பார் பவம் தன்னை;
கோர நெறி கொடு கொங்கு புக்காரே.

ஆர்வ முடையவர் காண்பா ரரன்றன்னை
யீர முடையவர் காண்பா ரிணையடி
பார முடையவர் காண்பார் பவந்தன்னைக்
கோர [1]நெறிகொடு [2]கொங்குபுக் காரே. (4)

வேறு பாடம்: 1. நெருக்கொடு (எ) IV. 2. கோங்கு (எ) I.

கருத்து: அரனிடம் அன்புடையோர் அவனைக் காண்பர். மனம் உருக நிற்பவர் அவன் திருவடி சேர்வர். ஆனால் உலகியலைப் பாரமாகச் சுமப்பவர் மீண்டும் பிறப்பர். தீ நெறியில் வாழ்ந்து அதன் பயனாகக் கொங்கு நாட்டிற் பிறப்பர்.

பாரம் - பாசத்தால், குடும்பம் தன்னுடையது என எண்ணும் எண்ணம் சுமை ஆதலின் 'பாரம்' என்றார். பவம் - பிறப்பு. கோரம் - கொடுமை. நெறிகொடு - நெறியில் வாழ்ந்து. கொங்கு - கொங்குநாடு. பழங் காலத்தில் கொங்குநாடு வளமின்றி இருந்தமையால், அங்கே சென்று துன்புறுவார் என்ற பொருளில் 'கொங்குபுகுதல்' என்னும் ஒரு வழக்கு இருந்தது.

அன்பால் அருள்

441. என் அன்பு உருக்கி இறைவனை ஏத்துமின்
முன் அன்பு உருக்கி முதல்வனை நாடுமின்
பின் அன்பு உருக்கிப் பெருந்தகை நந்தியும்
தன் அன்பு எனக்கே தலைநின்ற வாறே.

[1]என்னன் புருக்கி யிறைவனை யேத்துமின்
[2]முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின்
பின்னன் புருக்கிப் பெருந்தகை நந்தியுந்
தன்னன் பெனக்கே தலைநின்ற வாறே. (5)

வேறு பாடம்: 1. எம்மன் (ஓ) IV. 2. மும்மன் (ஓ) IV.

கருத்து: எத்தகைய அன்பு கொண்டும் நெஞ்சம் உருகி இறைவனைப் போற்றுக. அவனையே எப்பொழுதும் எண்ணி, அடைய முயல்க. நந்தி தனது அருளால் எனக்குப் பேரன்பு விளையச் செய்து, என் மனத்தை மேலும் உருகச் செய்து, தன் அருளை மிகுதியாக வழங்கினான்.

என் அன்பும் உருக்கி - எத்தகைய அன்பாலும் உள்ளத்தை நெகிழச் செய்து. உம்மை தொக்கது. முன் அன்பு - முன்னுகின்ற அன்பு; எப்பொழுதும் எண்ணும் அன்பு. தலைநிற்றல் - மிகுதியாக வழங்குதல்.

அன்பே துணை

442. தான் ஒரு காலம் சயம்பு என்று ஏத்தினும்
வான் ஒரு காலம் வழித்துணையாய் நிற்கும்
தேன் ஒரு பால் திகழ் கொன்றைச் சிவன்-அவன்
தான் ஒரு வண்ணம் என் அன்பில் நின்றானே.

தானொரு காலஞ் சயம்புவென் றேத்தினும்
வானொரு காலம் வழித்துணை யாய்நிற்குந்
தேனொரு பாற்றிகழ் கொன்றைச் சிவனவன்[1]
[2]றானொரு [3]வண்ணமென் [4]னன்பினின் றானே. (6)

வேறு பாடம்: 1. சிவன்றான் (இ ஈ ஊ) IV; சிவன்றானுந் (பா 3) யணிசிவன் (எ) IV. 2. யானொரு (த) 3. காலமென் (ஆ) IV. 4. னன்புநின் (ஆ இ ஊ) I.

கருத்து: அவனை ஒருமுறை சயம்பு எனப் பெயர் கூறி வணங்கினாலும். வானுலகம் செல்ல வழித்துணை ஆவான். என் அன்பிற்கு, ஒரே வகையாக, முன்னுக்குப்பின் முரணல்லாமல் அருள்கின்றான்.

முதல் அடி: ஒரு காலம் - ஒரு முறை. வான் ஒரு காலம் வழித்துணை யாய் நிற்கும் - உயிர்வாழ்வு முடியும் காலத்தில் வானுலகம் செல்லுதற்கு

வழித்துணையாகும். ஒரு வண்ணம் - ஒரே பாங்கில். அன்பில் நின்றான்- அன்புக்கு அருள்கின்றான்.

வாழ வைத்தவனிடம் அன்பு வேண்டாமா?

443. முன் படைத்து இன்பம் படைத்த முதலிடை
அன்பு அடைத்து எம்பெருமானை அறிகிலார்
வன்பு அடைத்த இந்த அகலிடம் வாழ்வினில்
அன்பு அடைத்தான்தன் அகலிடம் தானே.

முன்படைத் தின்பம் படைத்த முதலிடை
யன்படைத் தெம்பெரு மானை யறிகிலார்[1]
[2]வன்படைத் திந்த வகலிடம் வாழ்வினி
லன்படைத் [3]தான்ற [4]னகலிடந் தானே. (7)

வேறு பாடம்: 1. யறிகிலா (இ) IV (பா 3) 2. அன்படைத் (ஓ) IV. 3. தான்றனர் (தி) 4. னகலிடத் (அ) கழலடைந்தேனே (ஓ) IV.

கருத்து: எம்பெருமானை அறியாதார் வன்செயல்களை நிரப்பிவிட்ட இவ்வுலகம், வாழ்வில் அன்பை அடைத்துவைத்த அந்த இறைவனது உலகமாகும். இவ்வுலகில், மக்கள் தம்மைப் படைத்து இன்பங்களும் அமைத்த இறைவனுக்கு அன்பு செய்ய அறியாதவராயினர்.

முதல் - முதல்வன். இடை-இடத்தில். அன்பு அடைத்து - அன்பு செய்து.

அன்பிற்கு வசப்படுவான்

444. கருத்துஉறு செம் பொன் செய் காயத்தில் சோதி
இருத்தியும் வைத்தும் இறைவன் என்று ஏத்தி,
அருத்தியுள் ஈசனை ஆரருள் வேண்டில்
விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோவே.

கருத்துறு செம்பொன்செய் [1]காயத்திற் சோதி
யிருத்தியும் வைத்து [2]மிறைவனென் றேத்தி[3]
யருத்தியு ளீசனை யாரருள் வேண்டில்
விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோவே[4]. (8)

வேறு பாடம்: 1. காய்கதிர்ச் (விசு) 2. மிறைவளன் (துடி) 3. றேத்தியும் (இ எ) IV. 4. கோனே (பா 3)

கருத்து: அன்பிற்கு வயப்படுபவன் இறைவன். அவனைக் கருத்தில் வைத்தும், புருவ மத்தியில் தியானத்தில் வைத்தும் 'இறைவா, அருள் தருக' என்று வேண்டினால், அவன் வீடுபேற்றை நல்குவான்.

காயத்தில் - உடம்பில். உறுசெம்பொன்செய் சோதி எனக் கூட்டுக. கருத்தில் இருத்தியும் உடம்பில் புருவநடுவில் வைத்தும் என நிரல் நிறையாகக் கொள்க. அருத்தியுள் ஈசனை - அன்பிற்கு வயமாகிய ஈசனை. விருத்தி - செல்வம்; இங்கு வீடு பேறு.

அன்பு செய்யவில்லையே!

445. நித்தலும் துஞ்சும் பிறப்பையும் செய்தவன்
வைத்த பரிசு அறிந்தேயும் மனிதர்கள்
'இச்சையுளே வைப்பன் எந்தை பிரான்' என்று
நச்சியே அண்ணலை நாடகி லாரே.

நித்தலுந் துஞ்சும் பிறப்பையுஞ் செய்தவன்
வைத்த பரிசறிந் தேயு மனிதர்க
ளிச்சையு ளேவைப்ப [1]னெந்தைபி ரானென்று
நச்சியே யண்ணலை [2]நாடகி லாரே. (9)

வேறு பாடம்: 1. ரெந்தைபி (எ) I. 2. நாடுகி (சண்) (விசு)

கருத்து: நாள்தோறும் உறங்கி எழுதலையும், அது போன்றே இறப்புப் பிறப்புகளையும் உண்டாக்கிய இறைவன், அவ்வாறு நிலையாமையாக வைத்த தன்மையை மனிதர் அறிந்தும், 'அவனுக்கு அன்பு செய்தால் நமக்கு அருள்தர விரும்புவான்' என்ற எண்ணம் இல்லாது, அவனை விரும்பி நாடாதிருக்கின்றார்கள்.

நித்தலும் - நாள்தோறும் வாழும் வாழ்வையும். துஞ்சும் - முதனிலைத் தொழிற்பெயர். துஞ்சுதலையும்; இறத்தலையும். இரண்டாம் வேற்றமையுருபு தொக்கது. இச்சையுள்ளே தன்னை வைப்பன் என்று ஒரு சொல் வருவிக்க. பரிசு - இயல்பு.

அன்பு வழியில் திருப்புவான்

446. அன்பின் உளான்; புறத்தான் அடலாய் உளான்;
முன்பின் உளான்; முனிவர்க்கும் பிரான்-அவன்;
அன்பினுள் ஆக்கி அமரும் அரும் பொருள்;
அன்பினுள் ஆங்கே அணை துணை ஆமே.

அன்பினு ளான்புறத் [1]தானட லாயுளான்
முன்பினு ளான்முனி வர்க்கும் பிரானவ
னன்பினு [2]ளாக்கி யமரு மரும்பொரு
ளன்பினு [3]ளாங்கே யணைதுணை யாமே. (10)

வேறு பாடம்: 1. தாண்டகை யாயுளான் (ஊ) தானுட (எ); தாணட (ஈ) IV. 2. ளாகி (அ) I. 3. ளார்க்கே (எ) IV.

கருத்து: காணப்படாத இறைவன், நாம் அன்பு செய்தால் தோன்றுவான். அசுரரை வெற்றிகொண்டவன். ஆதியங்கடவுள். முனிவர்க்கும் அவனே இறைவன். உலகியலிற் செல்வோரையும் அன்புநெறியில் செலுத்தி, அவர்நெஞ்சத்தில் வீற்றிருப்பான். நம் அன்பு கண்டு அணுகி வந்து, அல்லற் காலத்தில் துணை ஆவான்.

அடல் - வெற்றி. முன்பு - பழங்காலம். அன்பினுள் ஆக்கி - உலகியலாரை அன்பராக்கி. அணை துணை - நெருங்கி வருகின்ற துணை.

34. அன்பு செய்வாரை அறிவன் சிவன்

அன்பு கண்டு அருள்வான்

447. இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்
உகந்து அருள் செய்திடும் உத்தம நாதன்
கொழுந்து அன்பு செய்து, அன்பு கூரவல்லார்க்கு
மகிழ்ந்து அன்பு செய்யும் அருள் - அது ஆமே.

இகழ்ந்ததும் [1]பெற்றது மீச னறியு
முகந்தருள் செய்திடு முத்தம நாதன்
கொழுந்தன்பு [2]செய்தன்பு கூரவல் லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யு மருளது வாமே. (1)

வேறு பாடம்: 1. போற்றலும் (பா 3) 2. செய்தருள் (எ) IV.

கருத்து: ஈசன் உள் நின்று அறிபவன் ஆதலின் மனிதர் புறக்கணித்தது எது, முயன்று பெற்றது எது என்று அறிவான். நாள்தோறும் பெருகும் அன்பினைத் தன்னிடம் செய்யும் அன்பர்க்கு அவ்வுத்தமத் தலைவன் உகப்புடன் அருள் நல்குவான். அன்பில் விளையும் அருள் அது!

பிறவியை நீக்குவான்

448. இன்பம் பிறவிக்கு இயல்வது செய்தவன்
துன்பப் பிறவித் தொழில் பல என்னினும்
அன்பிற் கலவிசெய்து ஆதிப்பிரான் வைத்த
முன்பிற் பிறவி முடிவது தானே.

[1]இன்பம் பிறவிக் [2]கியல்வது செய்தவன்
[3]றுன்பப் பிறவித் தொழில்பல வென்னினு[4]
[5]மன்பிற் கலவிசெய் தாதிப்பிரான் வைத்த
[6]முன்பிற் பிறவி முடிவது தானே. (2)

வேறு பாடம்: 1. இன்பப் (அ இ ஈ ஊ எ ஒ) I. 2. கியலது (அ ஒ) IV. 3. முன்பப் (அ ஆ ஊ) II. 4. வேனிது (பா 3) 5. வன்பிற் (அ ஆ இ ஈ எ ஒ) I. 6. முன்பப் (அ இ ஊ எ) II முன்பிப் (திருவிக) (சைவ) (விசு)

கருத்து: வினைக்கு ஏற்றவாறு இறைவன் உயிர்கட்கு அருளும் இன்பம் சிறிதும், துன்பம் பெரிதுமாக இருந்தாலும், அடியார் காட்டும் அன்பிற்கு அவனும் உள்ளம் நெகிழ்ந்து, அன்பு காட்டி ஒரு பெருமை தருவான். அதனால் பிறவி முடிவுறும்.

இயல்வது - வினைக்கு ஏற்ற வகையில். பிறவியில் அவன் கூட்டுவிக்கும் துன்பத் தொழில் பல என்று கூட்டுக. அன்பில் கலவி செய்து - அடியார் செலுத்தும் அன்பிற்கு உளம் நெகிழ்ந்து தானும் அன்பு செய்து. முன்பு - பெருமை. முடிவது - முடிவான பயனை எய்துவது.

அன்பில் அமர்வான்

449. அன்பு உறு சிந்தையின்மேல் எழும் அவ்ஒளி
இன்பு உறு கண்ணியொடு ஏற இசைந்தனன்
துன்புஉறு கண் இயைத்து ஓடித் தொடக்கு அறுத்து
அன்புஉறு சிந்தையை நாடுமின் நீரே.

அன்புறு சிந்தையின் மேலெழு மவ்வொளி
யின்புறு கண்ணியொ [1]டேற விசைந்தனன்[2]
துன்புறு [3]கண்ணியைத் [4]தோடித் தொடக்கறுத்[5]
[6]தன்புறு சிந்தையை நாடுமி னீரே. (3)

வேறு பாடம்: 1. டேற்க (ஆ இ ஊ) II. 2. விசைந்தன (எ) I. 3. கண்ணியைந் (ஆ இ ஈ எ) I. 4. தாடித் (இ ஈ); தாடுந் (எ) II; தோடுந் (தி) 5. துடக்கறுத் (ஆ இ ஈ); துடக்கற (ஓ); துவக்கறு (ஊ) I. 6. நண்புறு (எ); நன்புறு (ஓ) II.

கருத்து: அன்புற்ற சிந்தையில் உமா தேவியோடும் ஒளிவடிவில் எழுந்தருளத் திருவுளம் கொண்டான். ஆதலால் துன்பம் மிக்க வாழ்வில், பற்றுக்களை நீக்கி, இறைவனை நாடிச் சென்று, அன்புடைய மனத்தை அவன் திருவடியில் பொருத்தி, அவன் அருளை வேண்டுக.

அன்பால் இன்பம்

450. புணர்ச்சியுள் ஆயிழைமேல் அன்பு போல
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்க வல்லார்க்குக்
கொணர்ச்சி இலாது குலாவி உலாவி
அணைத்தலும் இன்பம் அது இது ஆமே.

புணர்ச்சியு ளாயிழை மேலன்பு போல
வுணர்ச்சியு ளாங்கே யொடுங்கவல் லார்க்குக்[1]
[2]கொணர்ச்சியி [3]லாது குலாவி யுலாவி
[4]யணைத்தலு மின்ப மதுவிது வாமே. (4)

வேறு பாடம்: 1. லாருக் (துடி) 2. குணர்ச்சி (அ ஆ ஈ ஊ) (பா 3) I. 3. லாத (அ ஆ ஈ ஊ) (பா 3) I. 4. யிணைத்தலு (அ ஊ) I; பிணைத்தலு (ஓ) I; யணைத்ததணைத்தின்ப (திருவிக) (சங்) (விசு)

கருத்து: புணர்ச்சியின்போது மனைவியின் மீது கொண்ட அன்பினால் வரும் உணர்வில் ஒன்றி நிற்பது போல் இறைவனிடம் அன்பு கொண்டு, உணர்வால் அவனோடு ஒன்றி நிற்க வல்லார்க்கு, அவர்க்குள்ளேயே இருக்கும் இறைவனுடன் கூடி மகிழும் இன்பம் வாய்த்து, இன்னதென்று சொல்ல வியலாததாக நிற்கும்.

கொணர்ச்சி - கொணர்தல். இறைவன் போக்கு வரவு அற்றவனாதலின், அவனை அழைத்துவர வேண்டுவதில்லை. அதுவிது - சொல்லுக்கு அடங்காதது ஆதலின் 'அதுவிது' என்றார்.

குறிப்பு: 3 - ஆம் அடி: ஐந்து சுவடிகளில் 'குணர்ச்சியிலாது' என்ற பாடம் உள்ளது. 'கொணர்ச்சி' என்பதே அவ்வாறு ஏடு எழுதுவோரால் எழுதப்பட்டது எனக்கருதி, 'கொணர்ச்சி' என இப்பதிப்பில் கொள்ளப்பட்டது. இது புத்தாட்சி.

அன்புடையவரே அவனை அடைவர்

451. உற்றுநின்றாரொடும் அத்தகு சோதியைச்
சித்தர்கள் என்றும் செறிந்து அறிவார் இல்லை;
பத்திமையாலே பணிந்து அடியார் தொழ
முத்தி கொடுத்து, அவர் முன்பு நின்றானே.

உற்றுநின் றாரொடு மத்தகு சோதியைச்
சித்தர்க ளென்றுஞ் [1]செறிந்தறி வாரில்லை
பத்திமை யாலே பணிந்தடி யார்தொழ
முத்தி கொடுத்தவர் முன்புநின் றானே. (5)

வேறு பாடம்: 1. தெரிந்தறி (அ இ ஈ ஊ எ) (பா 3) I.

கருத்து: இறையனுபவத்தில் அடியாரின் 'உணர்வு - வெளியே' சோதியாகும். அச்சோதியுள் சோதியாய் விளங்குவான் இறைவன். வாசியோகச் சித்தர்கள் இதை அறியார். அடியார்கள் அன்பு செய்து வழிபட, அவர்க்குக் காட்சி கொடுத்து, வீடுபேறும் அளிப்பான். யோகம் செய்தாலும் பத்தராயுள்ளவரே இறைவனை அடைவார் என்றார்.

அத்தகு - தானும் அத்தகையதான. செறிந்து - அழுந்தி. சில சித்தர்கள் வாசியோகத்தைக் கைக்கொண்டு பக்திநெறியை இகழ்பவர்கள் ஆதலின் இவ்வாறு கூறினார். "என்பே விறகா" என்னும் பாடற்கருத்தும் காண்க.

அன்பால் இறைக்காட்சி

452. கண்டேன் கழல்தரு கொன்றையினான் அடி,
கண்டேன் கரி உரியான்தன் கழல் இணை,
கண்டேன் கமல மலர் உறைவான் அடி,
கண்டேன் கழல்-அது; என் அன்பின் உளானே.

கண்டேன் [1]கழல்தரு கொன்றையி னானடி
கண்டேன் கரியுரி யான்றன் கழலிணை
கண்டேன் கமல மலருறை வானடி
கண்டேன் [2]கழலதென் [3]னன்பினு ளானே. (6)

வேறு பாடம்: 1. கமழ்தரு (எ) (பா 3) I. 2. கமலத்தென் (ஒ) IV.
3. னன்பினுள் யானே (திருவிக) (த) (விசு) (சங்)

கருத்து: கொன்றைசூடியின் கழலணிந்த திருவடியை - தலையுச்சிச் சகஸ்ராரத் தாமரையில் உறைபவனது திருவடியைக் கண்டேன். அவன் என் அன்பின் காரணமாகக் காட்சியளித்தான்.

கழல்தரு அடி எனக் கூட்டுக. கரி உரி - யானைத்தோல். கமல மலர் - சகஸ்ராரம்.

அன்பனை அறியவில்லையே!

453. நம்பனை நானாவிதப் பொருள் ஆகும் என்று
உம்பரில் வானவர் ஓதும் தலைவனை
இன்பனை இன்பத்து இடைநின்ற இரதிக்கும்
அன்பனை யாரும் அறியகிலாரே.

நம்பனை நானா விதப்பொரு ளாகுமென்
றும்பரில் வானவ ரோதுந் தலைவனை
யின்பனை யின்பத் திடைநின் றிரதிக்கு
மன்பனை யாரு மறியகி லாரே. (7)

கருத்து: யாவராலும் விரும்பப்படுபவன்; பல்வகைப் பொருளிலும் உள்ளவன் என்று தேவர்களாலும் கூறப்படுப்வன்; இன்பமாக நிற்பவன்; இன்பமே அனுபவிக்கும் இரதியாலும் அன்புடன் வணங்கப்படுபவன்-இத்தகைய இறைவனை யாரும் அறியாதிருக் கின்றனரே!

சிவனோடு . . .

454. ஈசன் அறியும் இராப்பகலும் தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவு செய்வார்களை;
தேசு உற்று இருந்து செயல் அற்று இருந்திடில்,
ஈசன் வந்து என் இடை ஈட்டி நின்றானே.

ஈச னறியு மிராப்பக லுந்தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவுசெய் வார்களைத்[1]
தேசுற் [2]றிருந்து செயலற் றிருந்திடி[3]
லீசன்வந் [4]தென்னிடை [5]யீட்டிநின் றானே. (8)

வேறு பாடம்: 1. வார்கட்கு (அ ஆ இ ஈ ஊ) (பா 3) II. 2. றறிந்து (திருவிக) 3. றிருந்திட (த) 4. தெம்மிடை (எ) IV. 5. யீண்டிநின் (தி)

கருத்து: தன்னிடம் அன்பு வைப்பவர்களை இறைவன் அறிவான். ஞான வொளியைப் பெற்று, "நம்செயல்" என்ற உணர்வு இன்றிச் செயலாற்றினால் அவன் என்னைத் தன்னோடு கலக்கச் செய்வான் என்பதை அறிந்தேன்.

பாசம் - அன்பு. தேசு - ஒளி. ஈட்டி - கலந்து.

அன்பால் ஞானம்

455. முன்பு பிறப்பும் இறப்பும் அறியாதார்
அன்பு இல் இறைவனை யாம் அறியோம் என்பர்;
இன்பப் பிறப்பும் இறப்பும் இல்லான் நந்தி
அன்பில் அவனை அறியகிலாரே.

முன்பு பிறப்பு மிறப்பு மறியாதா[1]
[2]ரன்பி லிறைவனை யாமறி யோமென்ப[3]
ரின்பப் பிறப்பு [4]மிறப்புமில் லானந்தி
யன்பி [5]லவனை யறியகி லாரே. (9)

வேறு பாடம்: 1. மறிவர்தா (ஆ) I. 2. னன்பி (ஆ ஊ) I (பா 3) 3. வோமென்ப (இ) I. 4. மிலார் நந்தி (த) மிலாநந்தி (விசு) 5. லதனை (ஆ) I.

கருத்து: பிறப்பு இறப்புக்கான காரணம் அறியாதார், "எம்மிடம் அன்பில்லாத இறைவனை யாம் அறிய வேண்டியதில்லை" என்பர். நம்மைப் போல் பிறந்து இறவாமல், என்றும் உள்ளவன் நந்தி. நம் பிறப்புக்கும் காரணன். அவனை அன்பு செய்து அறிய மாட்டாமலிருக்கின்றாரே!

ஒன்றி நிற்பதே அபிடேகம்

456. விட்டுப் பிடிப்பது மேதகு சோதியைத்;
தொட்டுத் தொடர்வன் தொலையாப் பெருமையை;
எட்டும் என் ஆருயிராய் நின்ற ஈசனை
மட்டுக் கலப்பது மஞ்சனம் ஆமே.

விட்டுப் [1]பிடிப்பது மேதகு சோதியைத்
தொட்டுத் [2]தொடர்வன் [3]றொலையாப் பெருமையை
யெட்டுமென் னாருயி ராய்நின்ற வீசனை
மட்டுக் கலப்பது மஞ்சன மாமே. (10)

வேறு பாடம்: 1.பிடிப்பதென் (ஓ) IV. 2. தொடர்மின் (இ) IV. 3. றுலையாப் (அ ஆ எ) I.

கருத்து: சோதியுருவம் தொடர்ந்து தோன்றாது ஆயினும் இறைவனது பெருமையை நினைவில் வைத்து, யோக சாதனையைத் தொடர்வேன். என் உயிராக உள்ள அவனைக் கலந்து தேன் போலும் இன்பத்தை அனுபவித்தலே அவனுக்குச் செய்யும் அபிடேகம் ஆகும்.

35. கல்வி

கற்றதும் உன்னிடமே

457. குறிப்பு அறிந்தேன் உடல் உயிர் - அது கூடிச்
செறிப்பு அறிந்தேன்; மிகு தேவர் பிரானும்
மறிப்பு அறியாது வந்து உள்ளம்புகுந்தான்
கறிப்பு அறியா மிகும் கல்வி கற்றேனே.

குறிப்பறிந் தேனுட [1]லுயிரது கூடிச்
செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானு[2]
மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்
கறிப்பறி யாமிகுங் கல்விகற் றேனே[3]. (1)

வேறு பாடம்: 1. லோடுயிர் (ஓ) III. 2. பிரானை (பதிப்) 3. றானே (ஊ) I.

கருத்து: உடலும், உயிரும் கூடிப் பிறவியை அமைத்த காரணத்தை அறிந்தேன். இறைவனும் என் உள்ளம் புகுந்தான். பதிஞானம் பெற்றேன்.

கறிப்பு - உமிழ்தல்; எனவே மாசு எனப் பொருள்படும்.

வழி காட்டும் அறிவு

458. கற்றறிவாளர் கருதிய காலத்துக்
கற்றறிவாளர் கருத்தில் ஓர் கண் உண்டு;
கற்றறிவாளர் கருதி உரைசெய்யும்
கற்றறி காட்டக் கயல் உள ஆகுமே.

கற்றறி வாளர் கருதிய காலத்துக்[1]
கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு
கற்றறி வாளர் கருதி யுரைசெய்யுங்
கற்றறி காட்டக் [2]கயலுள வாகுமே[3]. (2)

வேறு பாடம்: 1. காலத்திற் (ஈ) IV. 2. கனலுள (சண்) 3. வாக்குமே (எ) IV.

கருத்து: கல்வியறிவாகிய பாசஞானம் உடையோர் தியானத்தில் நின்றால், அகக்கண் திறக்கும். அந்த 'உயிருணர்வால்' பெற்று, அவர் போற்றி உரைக்கும் பதிஞானம் வழிகாட்ட, அதற்கு ஏற்பவே அவர்தம் புறக்கண் காணும்.

(புறத்தே) உள கயல், கற்றறிவு காட்ட, (காணல்) ஆகும் எனக் கூட்டுக. கருத்தில் உள்ள கண் பதிஞானம் என்க.

உள்ளத்தில் ஒளிவிளக்கு

459. நிற்கின்ற போதே நிலை உடையான் கழல்
கற்கின்ற செய்ம்மின்; கழிந்து அறும் பாவங்கள்;
சொல் குன்றல் இன்றித் தொழுமின்; தொழுத பின்
மற்று ஒன்று இலாத மன விளக்கு ஆமே.

நிற்கின்ற [1]போதே நிலையுடை யான்கழல்[2]
கற்கின்ற செய்ம்மின் கழிந்தறும் பாவங்கள்
சொற்குன்ற [3]லின்றித் தொழுமின் றொழுதபின்
மற்றொன்றி லாத [4]மனவிளக் காமே. (3)

வேறு பாடம்: 1. போத (சைவ) 2. யான்கழற் (எ) I. 3. லன்றித் (இ) I. 4. மணி விளக்காமே (ஆ இ எ) II.

கருத்து: உயிர் உள்ள பொழுதே, என்றும் ஒரு தன்மையானாகிய இறைவனை அறியும் பதி ஞானத்தைப் பெறுதற்குரியனவற்றை முயல்க. உங்கள் பாவங்கள் நீங்கும். அவனை ஏத்துக. இவற்றின் பயனாக, மனம் வேறொன்றையும் சாராமல், உயிரையே சாரும். ஞானவொளியாக இறைவன் விளங்குவான். "மனத்து விளக்கது மாயா விளக்கே" என்ற ஆசிரியர் வாக்கையும் நோக்குக.

ஒளியுடம்பாகும்

460. கல்வி உடையார் கலந்து ஓடிப் போகின்றார்
பல்லி யுடையார் அப்பாம்பு அரிந்து உண்கின்றார்
எல்லியும் காலையும் ஏத்த இறைவனை
வல்லியுள் ஆதித்த காயமும் ஆமே.

கல்வி யுடையார் [1]கலந்தோடிப் போகின்றார்[2]
பல்லி யுடையாரப் [3]பாம்பரிந் துண்கின்றா
ரெல்லியுங் காலையு [4]மேத்த விறைவனை
[5]வல்லியு [6]ளாதித்த காயமு மாமே. (4)

வேறு பாடம்: 1. கழிந்தோடிப் (ஈ எ) IV. 2. புக்கின்றார் (ஆ) IV. 3. பரம்பரிந் (த) 4. மேத்து (ஆ இ ஈ ஊ ஒ) V. 5. யல்லியு (இ) III. 6. வாதித்த (உ எ) (பா 3) I.

கருத்து: கற்றோர் தம்முள் வாதிட்டு மடிந்தனர். சில யோகியர் பலவகை உலகியல் நாட்டம் கொண்டு, குண்டலி சத்தியை எழுப்பி, சில பயன் கொண்டனர். இறைவனை எல்லாப் பொழுதும் ஏத்தினால், ஒரு கொடியில் சூரியனின் உடம்பு தோன்றினாற் போல நம் உடம்பே ஒளியுடலாக மாறப் பெறலாம்.

'அல்லி' எனப் பாடம் கொண்டு, தாமரையைச் சூரியன் மலரச் செய்வது போல, அடியவர் உள்ளத்தை இறைவன் மலரச் செய்வான் என்றும் பொருள் செய்யலாம்.

பல்லி - இக்காலத்தில் 'பலுகு' என வழங்கும் உழவுக் கருவி. பயிர்கள் நெருக்கமாக இருந்தால் பலுகுக் கட்டையால் நெருக்கத்தைக் குறைப்பர். இதில் பற்கள் நிறைந்திருக்கும்.

குறிப்பு: 2 ஆம் அடியில் தளை சிதைகின்றமையால், பாம்பு என்பது அப்பாம்பு எனத் திருத்தப்பட்டது. 3 ஆம் அடியில், 'ஏத்தும்' எனச் எல்லாச் சுவடிகளிலும் உள்ள பாடம் இலக்கணப் பிழை யாதலின் 'ஏத்த' எனத் திருத்தப்பட்டது.

உயிருக்குத் துணை

461. துணை-அதுவாய் வரும் தூய நல் சோதி;
துணை-அதுவாய் வரும் தூய நல் சொல்லாம்;
துணை-அதுவாய் வரும் தூய நல் கந்தம்;
துணை-அதுவாய் வரும் தூய நல் கல்வியே.

துணையது வாய்வருந் தூயநற் சோதி
துணையது வாய்வருந் தூயநற் சொல்லாந்
துணையது வாய்வருந் [1]தூயநற் கந்தந்
துணையது வாய்வருந் தூயநற் கல்வியே. (5)

வேறு பாடம்: 1. தூய் மலர்க் (ஊ எ ஓ) (பா 3) II.

கருத்து: பதிஞானம் பெறின், அஃது உயிர்த்துணையாய் நிற்கும். உடன் சோதிக்காட்சி தோன்றும்; உடன் சுத்த மாயையில் எழும் மந்திர ஒலி கேட்கும்; உடன் உடலில் நறுமணம் பரவும்.

"கற்பூரம் மணக்கின்றது என் உடம்பு" என வள்ளலார் கூறுவதும் நோக்குக. (திருவருட்பா : 6 ஆம். திரு. அனுபவ மாலை: 10)

அறிவின் பயன்

462. நூல் ஒன்று பற்றி நுனி ஏற மாட்டாதார்
பால் ஒன்று பற்றினால் பண்பின் பயன்கெடும்;
கோல் ஒன்று பற்றினால் கூடா பறவைகள்
மால் ஒன்று பற்றி மயங்குகின்றாரே.

நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார்
பாலொன்று [1]பற்றினாற் பண்பின் பயன்கெடுங்
கோலொன்று [2]பற்றினாற் [3]கூடா பறவைகள்
மாலொன்று பற்றி மயங்குகின் றாரே[4]. (6)

வேறு பாடம்: 1. பற்றினார் (ஆ ஊ) I. 2. பற்றினார் (ஆ ஊ) I. 3. கூடிப் (அ); கூடாப் (இ ஈ ஊ எ ஓ) I. 4. றார்களே (ஆ இ ஈ ஊ ஓ) II.

கருத்து: சுழுமுனை நாடி வழியே குண்டலி சத்தியைப் பிரமரந்திரம் என்ற சகஸ்ராரத்திற்கு (தலையுச்சி) ஏற்ற வியலாதார், அயலே வேறு வழியைப் பின்பற்றினால், உயிரின் பண்பிற்குரிய பயனை அடைய வியலாது. உயிரின் பண்பு அறிவு. அதன் பயன் இறைவனைக் கலத்தல். கோலை எடுத்தால் பறவைகள் ஓடுவது போலத் திருவைந் தெழுத்தைச் செபித்தால் புலன்கள் அடங்கும். அதைவிட்டு, மயக்கம் தரும் வழி ஒன்றே கொண்டு மயங்குகின்றார்களே!

உயிரில் சிவனது பேரொளி

463. ஆய்ந்து கொள்வார்க்கு அரன் அங்கே வெளிப்படும்
தோய்ந்த நெருப்பு-அது தூமணி சிந்திடும்
ஏய்ந்த இளமதி எட்ட வல்லார்கட்கு
வாய்ந்த மனம் மல்கு நூலேணியாமே.

ஆய்ந்துகொள் [1]வார்க்கர னங்கே வெளிப்படுந்
தோய்ந்த நெருப்பது [2]தூமணி சிந்திடு
மேய்ந்த விளமதி யெட்டவல் லார்கட்கு[3]
வாய்ந்த [4]மனமல்கு நூலேணி யாமே. (7)

வேறு பாடம்: 1. வார்காண வங்கே (இ) IV. 2. தூய்மணி (அ ஆ இ ஈ ஊ எ) I. 3. லார்க்கு (ஒ) II. 4. மலம்வல மாநூலேணி (ஊ) I.

கருத்து: பதி ஞானம் பெற்று, அதனை உணர்வில் கொள்பவர்க்குச் சிவன் வெளிப்பட்டுத் தோன்றுகின்றான். சூரியனிடம் தோய்ந்த நெருப்பைச் சூரிய காந்தக் கல் எதிரொளிப்பது போலே, சிவனது பேரொளியை உயிர் எதிரொளிக்கும் (சிவனது சன்னிதியில் உயிர் ஒளிபெறும்.) நெற்றியில், சந்திர மண்டலத்தைக் குண்டலினி சத்தியோடு தம் உயிர் உணர்வால் அடைய வல்லவர்களுக்கு, அவ்வாறு அடையும் நெறியில், மூலாதாரத்திலிருந்து குண்டலினி சத்தி ஏறும் வழியாக - மனம் ஒருங்கி நிற்கச் செய்யும் வழியாக, சுழுமுனை நாடி அமையும்.

வழித்துணை

464. வழித்துணையாய், மருந்தாய்; இருந்தார் முன்
கழித்துணையாம் கற்றிலாதவர் சிந்தை
ஒழித்துணையாய், உம்பராம் உலகு ஏழும்
வழித்துணையாம் பெருந்தண்மை வல்லானே.

வழித்துணை யாய்மருந் தாயிருந் தார்முன்
கழித்துணை [1]யாங்கற் றிலாதவர் சிந்தை
யொழித்துணை [2]யாயும்ப் [3]ராமுல கேழும்
[4]வழித்துணை யாம்பெருந் [5]தண்மைவல் லானே. (8)

வேறு பாடம்: 1. யாயங் (அ) I. 2. யாமும்ப (அ ஆ எ ஒ) (பா 3) I. 3. ராருல (ஆ) I; ராயுல (இ ஈ) I. 4. விழித்துணை (ஒ) IV. 5. தன்மைவல் (இ ஊ எ) I.

கருத்து: பதி ஞானம் பெறாதவரின் நட்பைச் சிந்தையாலும் நாடாமல் இருப்பவருக்குத் தோன்றாத் துணையாயும், மருந்தாயும் விண்ணுலகம் ஏழினையும் கடப்பதற்கு வழித்துணையாயும் இருக்கும் அருட்டன்மை வல்லவன் (சிவன்).

கொண்டு கூட்டு: முன் கழித்துணையாம் கற்றிலாதவர் சிந்தை ஒழித்துணையாய் இருந்தார் வழித்துணையாய், மருந்தாய், உம்பராம் உலகு ஏழும் வழித் துணையாம் பெருந்தண்மை வல்லானே.

அருளால் எல்லாம் முடியும்

465. பற்று-அது பற்றின் பரமனைப் பற்றுமின்,
முற்று-அது எல்லாம் முதல்வன் அருள்பெறின்,
கிற்ற விரகின் கிளர்ஒளி வானவர்
கற்றவர் பேரின்பம் உற்று நின்றாரே.

பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்
முற்றது [1]வெல்லா முதல்வ னருள்பெறிற்
[2]கிற்ற விரகிற் கிளரொளி வானவர்
கற்றவர் பேரின்ப முற்றுநின் றாரே. (9)

வேறு பாடம்: 1. வெல்ல (ஓ) I வல்லா (சண்) 2. கிற்று வுலகிற் (இ) IV.

கருத்து: வானவர் உபாயங்களில் வல்லவராய் நிற்க, கற்றவர் பேரின்பம் பெற்றார்.

எல்லாம் முற்றது என மாற்றுக. முற்றது - முடியும். விரகு - உபாயம். விரகில் கிற்ற - உபாயங்களில் வல்ல. கற்றவர் - பதிஞானம் கற்றவர்.

நெஞ்சக் கோயில்

466. கடல் இடையான், மலையான், ஐந்து பூதத்து
உடல் உடையான், பல ஊழிதொறு ஊழி
அடல்விடை ஏறும் அமரர்கள் நாதன்
இடம் உடையார் நெஞ்சத்து இல் இருந்தானே.

[1]கடலிடை யான்மலை யானைந்து பூதத்
[2]துடலுடை யான்பல வூழிதொ றூழி
யடல்விடை யேறு மமரர்க ணாத
னிடமுடை யார்நெஞ்சத் [3]தில்லிருந் தானே[4]. (10)

வேறு பாடம்: 1. கடலிசை (ஈ); கடலுடை (இ) I. 2. துடலிடை (அ ஊ எ) I. 3. துள்ளிருந் (ஈ) IV. 4. தில்லிருந் தேனே. (ஒ) IV.

கருத்து: கடல், மலை முதலிய இடங்களில் உறைபவன்; ஐம்பூதங்களை உடம்பாக உடையவன்: எருது வாகனம் உடையவன். ஊழி தோறும் புதியவராய்ப் பிறக்கும் தேவர்கட்குத் தலைவன். கனிந்தவர் நெஞ்சில் இருப்பவன் (சிவன்).

நெஞ்சத்து இல் - மனக் கோயில்.

36. கேள்வி கேட்டமைதல்

சிவகதி கிடைக்கும்

467. அறம் கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்
மறம் கேட்டும் வானவர் மந்திரம் கேட்டும்
புறம் கேட்டும் பொன் உரை மேனி எம் ஈசன்
திறம் கேட்டும் பெற்ற சிவகதி தானே.

அறங்கேட்டு [1]மந்தணர் வாய்மொழி கேட்டு
மறங்கேட்டும் வானவர் மந்திரங் கேட்டும்
புறங்கேட்டும் பொன்னுரை மேனியெம் மீசன்
றிறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே. (1)

வேறு பாடம்: 1. மந்தண ராய்மொழி (சண்)

கருத்து: அறநூல் கூறும் பாவங்கள் எவை என்பது, பொருள் இன்பங்களைப் பற்றிய நூல் ஆகியவற்றைக் கேட்டும், அந்தணரின் அருளுரையும் மந்திரங்களும் கேட்டும் பதிஞானம் உபதேசிக்கப் பெற்றும் பெறக் கூடியது சிவகதியாகும்.

உணர்ந்தோர் உயர்ந்தனர்

468. தேவர் பிரான்தனை, திவ்விய மூர்த்தியை
யாவர் ஒருவர் அறிவார் - அறிந்த பின்
ஓதுமின்; கேண்மின்; உணர்மின்; உணர்ந்தபின்
ஓதி உணர்ந்தவர் ஓங்கிநின்றாரே.

தேவர் பிரான்றனைத் திவ்விய மூர்த்தியை
யாவ ரொருவ [1]ரறிவா ரறிந்தபி
னோதுமின் கேண்மி னுணர்மி னுணர்ந்தபி
னோதி யுணர்ந்தவ ரோங்கிநின் றாரே. (2)

வேறு பாடம்: 1. ரறிந்தா (ஒ) IV.

கருத்து: இறைவன் தேவதேவன். ஒளிமிகு உருவினன். அவனைப் பற்றி ஒரு சிறிதே அறிந்தாலும், அறிந்தோர் பாடலை ஓதுக. கேட்க. அவனை உணர்க. உணர்ந்தோர் உயர்ந்தனர்.

தெய்வங்களுக்குப் பணி

469. மயன் பணி கேட்பது மாநந்தி வேண்டில்;
அயன் பணி கேட்பது அரன் பணியாலே;
சிவன் பணி கேட்ப, அத் தேவரும் ஆவர்
பயன்பணி கேட்பது பற்று -அது ஆமே.

மயன்பணி கேட்பது மாநந்தி வேண்டி[1]
[2]லயன்பணி கேட்ப [3]தரன்பணி யாலே
சிவன்பணி [4]கேட்பவத் தேவரு மாவர்
பயன்பணி கேட்பது பற்றது வாமே. (3)

வேறு பாடம்: 1. கேட்பி (எ) IV. 2. னயன்பணி (எ) IV. 3. வரன்பணி (ஊ) I. 4. கேட்பவர் (த).

கருத்து: சிவன் திருவுள்ளம் அதுவானால் திருமால் பணியைப் பற்றியும் கேட்கலாம். அரன் பணி என்றே கருதிப் பிரமனின் பணியையும் கேட்கலாம். சிவப் பணியைப் பற்றிக் கேட்போர், திருமால், பிரமன் பதவிகளும் எய்துவர். தமக்குப் பயன் என்று ஒரு பணி பற்றிக் கேட்டல் பற்றை விளைவிக்கும்.

மாயன் - மயன் : குறுக்கல் விகாரம். கேட்டல், செய்தற் பொருட்டு.

மனிதர் தேவர் ஆகலாம்

470. 'பெருமான் இவன்' என்று பேசி இருக்கும்
திருமானிடர் பின்னைத் தேவரும் ஆவர்;
வருமாதவர்க்கு மகிழ்ந்து அருள் செய்யும்
அருமாதவத்து எங்கள் ஆதிப்பிரானே.

பெருமா னிவனென்று பேசி யிருக்குந்
[1]திருமா னிடர் பின்னைத் தேவரு மாவர்
[2]வருமா தவர்க்கு மகிழ்ந்தருள் செய்யு
மருமா தவத்தெங்க ளாதிப் பிரானே. (4)

வேறு பாடம்: 1. தெருமா (ஆ) I. 2. அருமா (எ) I.

கருத்து: தன்னை அடையும் முனிவர்க்கு அருள் செய்பவனும், அருந்தவப்பயனும் ஆகிய சிவனைக் குறித்து, "இவனே மாதேவன்" என்று, அவன் புகழ் பேசி, அவன் நெறியில் வாழும் மனிதர் தேவகதி அடைவர்.

அன்பர் உடலில் நறுமணம்

471. ஈசன் அருளும் இறப்பும் பிறப்பையும்;
பேசி இருந்து பிதற்றி மகிழ்வு எய்தி
நேசமும் ஆகும் திகழ் ஒளியாய் நின்று
வாச மலர்க் கந்தம் மன்னி நின்றானே.

ஈச னருளு மிறப்பும் பிறப்பையும்
பேசி யிருந்து பிதற்றி மகிழ்வெய்தி[1]
நேசமு [2]மாகுந் திகழொளி யாய்நின்று
[3]வாச [4]மலர்க்கந்த மன்னிநின் றானே. (5)

வேறு பாடம்: 1. மகிழ்வெய்தின் (த) 2. மாகுநிக ழொளி (எ) (பா 3) IV. 3. பாச (உ) I. 4. மலர்நந்தி (உ) IV.

கருத்து: பிறப்பும் இறப்பும் தரும் சிவன், (தன்னைச் சார்ந்த அன்பர்) பேசி, வாழ்ந்து, பிதற்றி, மகிழ்ந்து அன்பு செய்யும் பேரொளியாய் நின்று (காட்சியளித்து), அவர்தம் உடம்பில் நறுமணம் நிலை பெற்று நிலவுமாறு நிற்பவனாவான்.

3 ஆம் அடியில், 'நின்று' என்பது அன்பர் மரணம் இல்லா வாழ்வு பெறுவர் என்றலைக் குறித்தது. மன்னி என்ற வினையெச்சத்தை, 'மன்ன' என மாற்றிப் பொருள் கொள்க. "துணையதுவாய் வரும் தூயநற் கந்தம்" என ஆசிரியர் கூறிப் போந்ததை (பாடல்: 461) நினைவு கூர்க.

மரணம் வராது

472. விழுப்பமும், கேள்வியும், மெய்நின்ற ஞானத்து
ஒழுக்கமும் சிந்தை உணர்கின்ற போது,
வழுக்கிவிடாவிடில், வானவர் கோனும்
இழுக்கு இன்றி, எண்-இலி காலம்-அது ஆமே.

[1]விழுப்பமுங் கேள்வியு மெய்ந்நின்ற ஞானத்
தொழுக்கமுஞ் சிந்தை யுணர்கின்ற போது
வழுக்கி [2]விடாவிடில் வானவர் கோனு
[3]மிழுக்கின்றி யெண்ணிலி [4]காலம தாமே. (6)

வேறு பாடம்: 1. விழுப்பங் கெழுமியு (எ) IV. 2. விழாவிடில் (த) 3. மிழுக்கினி (ஆ ஊ) I. 4. கோல (இ) II.

கருத்து: பெருமை, கேள்வியறிவு ஆகியவையும், பதிஞானத்தின்படி பழகும் சாதனையும் ஒருவனுக்கு வாய்த்திட, அவன் இறைவனை உயிருணர்வால் உணரும் போது, வேறு தடை எதனாலும் வழுக்கிவிடப்படாமல் இருந்தால், அவன் இறவாமல் வாழ இறைவன் அருள் புரிவான்.

கூட்டத்தில் இல்லை ஆன்மிகம்

473. 'சிறியார் மணல் - சோற்றில் தேக்கிடுமா போல்
செறிவால் அனுபோகம் சித்திக்கும்' - என்னில்
குறியாதது ஒன்றைக் குறியாதார்; தம்மை
அறியாது இருந்தார் அவர் அவர் அன்றே.

சிறியார் மணற்சோற்றிற் [1]றேக்கிடு மாபோற்
[2]செறிவா லனுபோகஞ் [3]சித்திக்கு மென்னிற்[4]
குறியாத [5]தொன்றைக் [6]குறியாதார் தம்மை
யறியா திருந்தா [7]ரவரவ ரன்றே. (7)

வேறு பாடம்: 1. றேக்கிடல் போனூற் (பா 4) 2. செறியா (அ) I. 3. சிந்திக்கு (இ ஈ ஒ) I. 4. மென்பர் (பா 4) 5. வொன்றைக் (ஓ) III. 6. குறியாது (பா 4) 7. ரவராவ (துடி) (த).

கருத்து: சிறுவர் மணலால் சோறாக்கி, அதை உண்டதுபோலப் பாவித்து மனநிறைவடைதல் போல, மக்களுடன் சேர்ந்திருப்பதால்

ஆன்மிக அனுபவம் கிடைக்கும் என்று சிலர் சொல்வரானால், அவர் சுட்டியறியாப் பொருளை அறிய முயலாதிருப்பவர்; மேலும், தம்மை அறியாமல் இருப்பவர். இவருள், முன்னவர் பாசஞானம் உடையோர்; பின்னவர் பசுஞானம் உடையோர். பதிஞானம் பெற்றோரே இறைவனையும் அறிந்து, தம்மையும் அறிவார்.

கேட்பதன் பெருமை

474. உறுதுணை ஆவ உயிரும் உடம்பும்;
உறுதுணை ஆவது உலகு உறு கேள்வி;
செறி துணை ஆய சிவனடி சிந்தை
பெறுதுணை கேட்கின் பிறப்பு இல்லை தானே.

உறுதுணை யாவ [1]வுயிரு முடம்பு
முறுதுணை யாவ துலகுறு கேள்வி
செறிதுணை [2]யாய [3]சிவனடி சிந்தை
பெறுதுணை கேட்கிற் பிறப்பில்லை தானே. (8)

வேறு பாடம்: 1. துயிரு (அ ஆ இ எ) II. 2. யாவது (எ) II. 3. சிவனடிச் (எ) I.

கருத்து: உயிரும் உடம்பும் ஒன்றுக்கு ஒன்று மிக்க துணை. உலகில் மிக்க கேள்வியறிவு நல்ல துணை. உயிருக்கு நெருங்கிய துணையாகிய சிவபெருமானின் திருவடிகளைப் பெறும் வழியைச் சிந்தையுறக் கேட்டால் பிறப்பு இல்லை.

ஓதியும் கேட்டும் உணர்க

475. புகழ நின்றார்க்குப் புராணன் எம் ஈசன்
இகழ நின்றார்க்கும் இடும்பைக்கு இடமாம்,
மகிழ நின்று ஆதியை ஓதி உணரார்
கழியநின்றார்க்கு ஒரு கற்பசு ஆமே.

புகழநின் [1]றார்க்குப் புராணனெம் மீச
னிகழநின் றார்க்கு [2]மிடும்பைக் கிடமா
மகிழநின் றாதியை யோதி [3]யுணரார்
கழியநின் [4]றார்க்கொரு கற்பசு வாமே. (9)

வேறு பாடம்: 1. றார்க்கும் (ஊ எ) IV. 2. மிடுபினு (ஒ) I. 3. யுணராக் (அ ஊ) I. 4. றார்க்கே (ஒ ஆ இ) II.

கருத்து: இறைவனைப் புகழ விரும்பு வாருக்கு, அவர் அறிந்ததினும் பழமையானவன். இகழ்பவர்க்குத் துன்பம் செய்பவன். மகிழ்ச்சி கொள்ளுமாறு நின்ற அந்த ஆதிப்பொருளை ஓதியும் (கேட்டும்) உணராமல் காலம் கழிப்போருக்கு அவன் கற்பசுவைப் போலப் பயன்தரான்.

உணர்வால் அவனைப் பற்றுக

476. வைச்சு உணர்ந்தான் மனத்தோடும் வாய்பேசி
ஒத்து உணர்ந்தான் உரு ஒன்றொடு ஒன்று ஒவ்வா;
மெய்ச் சுழன்று ஆணி கலங்கினும், ஆதியை
நச்சி உணர்ந்தார்க்கே நணுகலும் ஆமே.

[1]வைச்சுணர்ந் தான்மனத் [2]தோடும் வாய்பேசி
யொத்துணர்ந் தானுரு வொன்றொடொன் றொவ்வா
[3]மெய்ச்சுழன் றாணி கலங்கினு மாதியை
நச்சுணர்ந் [4]தார்க்கே நணுகலு மாமே. (10)

வேறு பாடம்: 1. வைத்துணர்ந் (எ) IV. 2. தொடு (அ ஆ இ ஈ ஊ ஒ) II. 3. தச்சுழன் (எ) IV; வச்சுழன் (பா 3) 4. தாங்கே (இ) IV.

கருத்து: மனத்தால் தியானப் பொருளாக உணரப்பட்டது போலவே கேள்வியால் உணரப்படுபவன் ஆகிய இறைவனின் உருவங்கள் பலவகை. உடம்பில் ஆணியாக உள்ள பொறிகள் நிலை குலைந்து தளர்ந்தாலும் அவ்விறைவனை விரும்புதலைக் கைவிடாமல், உயிர் உணர்வால் பற்றுபவர்க்கே அவனை அடைதல் இயலும்.

நச்சுணர்ந்தார் - இகரம் தொக்கது; செய்யுள் விகாரம்.

37. கல்லாமை

அருளே கண்ணாக

477. கல்லாதவரும் கருத்து அறி காட்சியை
வல்லார் எனில், அருட்கண்ணால் மதித்துளோர்
கல்லாதார் உண்மை பற்றாநிற்பர், கற்றோரும்
கல்லாதார் பேரின்பம் காணகிலாரே.

கல்லா தவருங் கருத்தறி காட்சியை
வல்லா ரெனிலருட் கண்ணான் மதித்துளோர்
கல்லாதா ருண்மைபற் றாநிற்பர் கற்றோருங்
கல்லாதார் பேரின்பங் காணகி லாரே. (1)

வேறு பாடம்: 1. கல்லாதவரின்பங் (த)

கருத்து: உயிருணர்வால் காணும் காட்சியைக் கல்லாதாரும் காணமுடியும். அருட்கண்ணால் காணும் காட்சியும் உண்டு என அறிந்தோர், கல்லாதாரைப் பற்றிய உண்மையை அறிவர். கல்வி இல்லாத அவர் பெறும் பேரின்பத்தைக் கற்றோரும் பெற வியலாது.

ஒருமையில் ஒன்றுக

478. வல்லார்கள் என்றும் வழி ஒன்றி வாழ்கின்றார்,
அல்லாதவர்கள் அறிவு பல என்பார்;
எல்லா இடத்தும் உளன் எங்கள்தம்இறை
கல்லாதவர்கள் கலப்பு அறியாரே.

வல்லார்க ளென்றும் வழியொன்றி வாழ்கின்றா
ரல்லா தவர்க ளறிவு [1]பலவென்பா
ரெல்லா விடத்து முளனெங்க டம்மிறை[2]
கல்லா தவர்கள் கலப்பறி யாரே. (2)

வேறு பாடம்: 1. பலரென்பா (ஆ ஊ) I. 2. ளெம்மிறை (ஓ) I

கருத்து: கற்று வல்லார் ஒரு நெறியில் மனம் ஒன்றி வாழ்கின்றார். மற்றையோர் பலநெறியிலும் சென்று திகைப்பர். எங்கள் தலைவன் எல்லாப் பொருளிலும் உள்ளான். யாதாயினும் ஒரு பொருளில் அவனைக் கண்டுகொள்ள வேண்டும் என்ற அறிவு கல்லாதார்க்கு இல்லை.

கல்லார் நெஞ்சில் நில்லான்

479. நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்துள்
நில்லாக் குரம்பை நிலை என்று உணர்வீர்காள்!
எல்லா உயிர்க்கும் இறைவனே ஆயினும்
கல்லாதார் நெஞ்சத்துக் காண ஒண்ணாதே.

நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
[1]ணில்லாக் குரம்பை நிலையென் றுணர்வீர்கா
ளெல்லா வுயிர்க்கு மிறைவனே யாயினுங்
கல்லாதார் [2]நெஞ்சத்துக் காணவொண் ணாதே. (3)

வேறு பாடம்: 1. நில்லாக் (உ எ) IV. 2. நெஞ்சத்துட் (இ) I.

கருத்து: நில்லாத உலகையும், உடம்பையும் நிலை எனக் கருதுவோரே, கல்வியால் நிலையானது எது, நிலையில்லாதது எது என்று நீவிர் அறியவில்லையே! இறைவன் எல்லாரது அறிவிலும் இருக்கிறான். ஆயினும் கல்லாதார் எண்ணத்தில் அவனைக் காண இயலாது.

துன்பம் இல்லை

480. கில்லேன் வினைக்கும்; துயர்க்கும் அயல் ஆனேன்
கல்லேன் நரகநெறி அறியாமையின்;
வல்லேன் வழங்கும் பொருளே; மனத்து இடை
கல்லேன், கழிய நின்று ஆடவல்லேனே.

கில்லேன் [1]வினைக்குந் துயர்க்கு மயலானேன்
கல்லே [2]னரக [3]நெறியறி யாமையின்
வல்லேன் வழங்கும் பொருளே [4]மனத்திடை
கல்லேன் கழியநின் றாடவல் லேனே. (4)

வேறு பாடம்: 1. வினைத்துயராக்கு (எ) II; துயரார்க்கு (த) 2. னரநெறி (எ) IV; நோக (ஊ) I. 3. யறியாத் தகைமையின் (எ) IV; கல்லாத் தகைமையின் (த) 4. பொருளெம் (ஆ) II; பொருளென் (பா 3) 5. மனத்தினுட் (எ) IV.

கருத்து: வினைப்பயன் ஈட்டமாட்டேன். துன்பமும் என்னை அணுகாது. அறியாமையால் நரகம் செல்லும் பாவநெறியைக் கல்லேன். என் உயிரினுள் உள்ள பேரறிவாகிய இறைவனை உணரவல்லேன். மனத்தில் வருந்தேன். உலகியலிலிருந்து விலகி நின்று ஆடுகின்றேன்.

இடைதல் - வருந்துதல்.

உலகை வெல்லலாம்

481. நில்லாது சீவன் நிலை அன்று என எண்ணி
வல்லார் அறத்தும் தவத்துளும் ஆயினார்,
கல்லா மனிதர் கயவர் உலகினில்
பொல்லா வினைத் துயர்ப் போதம் செய்வாரே.

நில்லாது சீவ னிலையன் றெனவெண்ணி[1]
வல்லா ரறத்துந் தவத்துளு மாயினார்
கல்லா மனிதர் கயவ ருலகினிற்
பொல்லா [2]வினைத்துயர்ப் [3]போதஞ்செய் வாரே. (5)

வேறு பாடம்: 1. வுளத்துயர்ப் (இ) IV. 2.வினை துயர்(ஒ) I. 3. போகஞ்செய் (அ எ ஒ) II.

கருத்து: உயிர் நிலையாதது என்று எண்ணி, கல்வி வல்லார் அறமும் தவமும் செய்தலை மேற்கொண்டார். கல்லாதாரோ உலகில் கயவராய்த் திரிந்து, பொல்லாத் துயரம் தரும் வினைகளைச் செய்ய மனம் கொண்டார்.

போதம் - அறிவு. இங்கு, எண்ணம்.

இளைப்பது ஏன்?

482. விண்ணினின் உள்ளே விளைந்த விளங்கனி
கண்ணினின் உள்ளே கலந்து அங்கு இருந்தது;
மண்ணினின் உள்ளே மதித்து மதித்து நின்று
எண்ணி, எழுதி, இளைத்துவிட்டாரே.

விண்ணினி னுள்ளே விளைந்த விளங்கனி
கண்ணினி னுள்ளே கலந்தங் கிருந்தது
மண்ணினி னுள்ளே மதித்து மதித்துநின்
றெண்ணி யெழுதி யிளைத்துவிட் டாரே. (6)

கருத்து: பரமாகாயத்தில் விளைந்த விளங்கனி (சிவம்) சிதாகாசத்திலும் (உயிர் அறிவு) கலந்துள்ளது. யோகசாதனையால் அதை அனுபவியாமல் உலகச் செய்திகளைச் (பாச ஞானத்தை) சிந்தித்தும், எழுதியும் இளைத்தனரே! (இது காலக் கழிவன்றோ?)

அண்டம் நிறைந்தவன்

483. கணக்கு அறிந்தார்க்கு அன்றிக் காண ஒண்ணாது;
கணக்கு அறிந்தார்க்கு அன்றிக் கைகூடா காட்சி,
கணக்கு அறிந்தார் உண்மையைக் கண்டு அண்டம் நிற்கும்
கணக்கு அறிந்தார் கல்வி கற்று அறிந்தாரே.

கணக்கறிந் [1]தார்க்கன்றிக் காணவொண் ணாது
கணக்கறிந் தார்க்கன்றிக் [2]கைகூடா காட்சி
கணக்கறிந் துண்மையைக் கண்டண்ட நிற்குங்
கணக்கறிந் தார்கல்வி [3]கற்றறிந் தாரே. (7)

வேறு பாடம்: 1. தார்கண்ணிற் (ஒ) IV; தார்க்கன்று (ஊ) I. 2. கை கூடாக் (ஆ இ உ ஒ) I. 3. கற்றிருந்தாரே (பா 3).

கருத்து: உபாயம், உண்மை என்னும் இருவகை நெறிகளுள் உண்மை நெறியில், சூழ்ச்சி அறிந்தவர்க்கு அன்றித் தன்னை அறியும் அறிவு தோன்றாது; இறைக் காட்சிகள் தோன்றா. இவ்வாறு உண்மையைக் கண்டு பரமாகாயத்தைத் தரிசித்தவரே கல்வியுடையோர் ஆவர்.

மூடனை விலக்கு

484. கல்லாத மூடரைக் காணவும் ஆகாது;
கல்லாத மூடர் சொல் கேட்கக் கடன் அன்று;
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்து அறியாரே.

கல்லாத மூடரைக் காணவு மாகாது
கல்லாத மூடர்சொற் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராங்
கல்லாத மூடர் கருத்தறி யாரே. (8)

கருத்து: மூன்றாம் அடிக்கு: கல்வி கல்லாமலும் அறியாமையுடனும் உள்ளவரைக் காட்டிலும் கல்லாதார் நல்லர். ஏனெனில், அவர் கேட்டாயினும், அறிவன அறிந்திருப்பர்.

வெற்றுக் கல்வி

485. கற்றும் சிவஞானம் இல்லாக் கலதிகள்
சுற்றமும் வீடார் துரிசு அறார் மூடர்கள்
மற்றும் பலதிசை காணார் மதியிலோர்
கற்று அன்பில் நிற்போர் கணக்கு அறிந்தார்களே.

கற்றுஞ் சிவஞான [1]மில்லாக் கலதிகள்[2]
சுற்றமும் வீடார் [3]துரிசறார் மூடர்கள்
மற்றும் பலதிசை காணார் மதியிலோர்
கற்றன்பி னிற்போர் கணக்கறிந் தார்களே. (9)

வேறு பாடம்: 1. மிலாத (ஊ) II. 2. கலாதிகள் (அ இ) I. 3. துரிசற்றார் (ஆ ஊ) II.

கருத்து: கல்வி கற்றும் சிவஞானம் பெறாத மூதேவிகள் பாசத்தை விடார். மலம் நீங்க முயற்சி மேற்கொள்ளார். உலகை உள்ளவாறு உணரார். (ஆனால்) பதிஞானம் பெற்று அன்பு நெறியில் வாழ்வோர் உண்மை அறிந்தவராவர்.

அவனே ஆசான்

486. ஆதிப்பிரான் அமரர்க்கும் பரஞ்சுடர்
சோதி அடியார் தொடரும் பெருந்தெய்வம்
ஓதி உணரவல்லோம் என்பர், உள் நின்ற
சோதி நடத்தும் தொடர்வு அறியாரே.

ஆதிப்பி ரானம ரர்க்கும் பரஞ்சுடர்[1]
சோதி யடியார் [2]தொடரும் பெருந்தெய்வ
மோதி யுணரவல் லோமென்ப ருண்ணின்ற
சோதி [3]நடத்துந் [4]தொடர்வறி யாரே. (10)

வேறு பாடம்: 1. மருஞ்சுடர் (பா 3); மரும்பொருள் (இ) IV. 2. துடரும் (அ ஆ எ ஒ) I. 3. நடந்த (ஆ ஒ); நடந்துந் (எ) IV. 4. துடர்வறி (அ ஆ எ) I.

கருத்து: உலகத்திற்கு ஆதியாகிய தலைவன்; தேவர்க்கும் மேலான சுடர் உருவினன்; அடியார்க்குச் சோதியாய்க் காட்சி வழங்கி, அவரால் தொடர்ந்து சாரப்படும் பெருந்தெய்வம். கல்வியால் அவனை உணரவல்லோம் என்பவர், அவன் அறிவித்தால் தான், தாம் அறிய முடியும் என்பதை உணரவில்லை.

38. கொல்லாமை

பூசைக்குப் பூ

487. பற்று ஆய நற்குரு பூசைக்கும் பன்மலர்;
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை யெண்மலர்;
நல்தார் நடுக்கற்ற தீபமும், சித்தமும்;
உற்று ஆரும் ஆவி அமிர்து; இடம் உச்சியே.

பற்றாய நற்குரு [1]பூசைக்கும் பன்மலர்[2]
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை யெண்மலர்[3]
நற்றார் நடுக்கற்ற தீபமுஞ் சித்தமு
[4]முற்றாரு மாவி [5]யமிர்திட முச்சியே. (1)

வேறு பாடம்: 1. பூசிக்கும் (ஆ இ ஈ ஊ) II; பூசைக்குப் (பா 3) 2. நன்மலர் (அ) I. 3. யென்மலர் (அ) I; யொண்மலர் (ஊ எ ஒ) III. 4. முற்றாறு (சைவ) 5. யமர்ந்திட (எ) I; யமர்திட (ஊ) I.

கருத்து: ஆதாரமாகிய சிவனை வழிபடும் பூசை இரண்டு வகை. ஒன்று, புறப் பூசை. ஒன்று அகப்பூசை. இவ்விரண்டுக்கும் பல்வகைச் சாதனங்கள் வேண்டும். அகப்பூசைக்கு வேண்டுவன: பிற உயிர்களைக் கொல்லாமைஅட்ட புட்பமாகும். ஒருமையுடன் தியானம் செய்யும் சித்தம் தீபமும் மாலையும் ஆகும். உயிரே படையற் பொருளாகிய அமுதமாகும். வழிபடும் இடம் தலையுச்சியாகிய பிரமரந்திரம் ஆகும்.

அந்தக்கரணங்கள் நான்கு ஆதலின், அவற்றை மாலைகளும் விளக்குமாகக் கூறினார். உற்று ஆரும் - இறைவனைக்கூடிப் போகம் நுகர்கின்ற.

488. கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லிடிக் காரர் வலிகயிற் றாற்கிட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடு மென்று நிறுத்துவர் தாமே. (ங, க)

489. பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
யெல்லாருங் காண வியமன்றன் றூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தின்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே. (ங, க)

பாவம் செய்யாதே

490. கொலையே களவு கள் காமம் பொய்கூறல்
மலைவான பாதகமாம்; அவை நீக்கித்
தலையாம் சிவனடி சார்ந்து, இன்பம் சார்ந்தோர்க்கு
இலையாம்; இவை ஞானானந்தத்து இருத்தலே.

கொலையே களவுகட் காமம்பொய் கூறன்[1]
[2]மலைவான பாதக மாமவை நீக்கித்[3]
தலையாஞ் சிவனடி [4]சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்
கிலையா மிவைஞானா னந்தத் திருத்தலே[5]. (2)

வேறு பாடம்: 1. கூற (ஆ) I; கோப (பா 4) 2. லலைவான் (ஆ) IV. 3. நீங்கத் (பா 4) 4. சாரவல்லோர்கட் (பா 4) 5. திருக்கவே (அ ஆ இ ஈ ஒ) (பா 4) II.

கருத்து: கொலை முதலிய ஐந்தும் பாதகம். அவற்றை நீக்கிச் சிவபெருமான் திருவடியைச் சார்ந்து இன்பம் உற்றோர்க்குத் துன்பம் இல்லை. இவை ஞானானந்தம் பெறுதற்குரிய வழியாம்.

குறிப்பு: இப்பாடல் எ, ஒ - சுவடிகளில் மட்டுமே 'புலால் மறுத்தல்' என்னும் தனியியலாக மற்றொரு பாடலுடன் சேர்ந்து காணப் படுகின்றது. பொருட் பொருத்தம் நோக்கியும், சுவடிப் பெரும் பான்மையை வைத்தும், இப்பாடல், இப்பொழுதைய பதிப்பில், முன் உள்ள 'கொல்லாமை' இயலில் அடக்கப்பட்டது.

"பொல்லாப் புலாலை" எனத் தொடங்கும் பிறிதொரு பாடல் இடைச்செருகலாகக் கருதப்படுகிறது. ஆகவே, 'புலால் மறுத்தல்' என்னும் இயல் இப்பதிப்பில் நீக்கப்படுகிறது.

39. பிறர்மனை நயவாமை

காய் தின்ன முயற்சியா?

491. ஆத்த மனையாள் அகத்தே இருக்கவே
காத்த மனையாளைக் காமுறு காளையர்
காய்த்த பலாவின் கனி உண்ண மாட்டாமல்
ஈத்தம் பழத்துக்கு இடர் உற்ற வாறே.

ஆத்த மனையா [1]ளகத்தே யிருக்கவே
காத்த மனையாளைக் காமுறு காளையர்
[2]காய்த்த பலாவின் கனியுண்ண மாட்டாம
[3]லீத்தம் பழத்துக் கிடருற்றவாறே. (1)

வேறு பாடம்: 1. ளகத்திலிருக்கவே (எ) IV. 2. காத்த (ஆ இ உ) I காய்ச்ச (எ) I. 3. லீச்சம் (எ) I; லீற்றம் (ஒ) I.

கருத்து: கொண்ட மனைவி வீட்டில் இருக்க, மற்றொருவன் காக்கும் அவனுடைய மனைவியை விரும்பும் இளைஞர், பலாப்பழம் இருக்கவும் அதை உண்ணாமல், ஈச்சம் பழத்தை உண்ணவிரும்பித் துன்புறுவார் போன்றவர்.

மதிப்புப் போய்விடும்

492. தருக்கி வளர்த்தது - ஓர் தேமாங்கனியை
அருத்தம் என்று எண்ணி அறையில் புதைத்து,
பொருத்தம் இலாத புளிமாங்கொம்பு ஏறிச்
கருத்து அறியாதவர் கால் அற்றவாறே.

[1]தருக்கி வளர்த்ததோர் தேமாங் கனியை
யருத்தமென் றெண்ணி [2]யறையிற் புதைத்துப்
பொருத்த மிலாத புளிமாங்கொம் பேறிக்
கருத்தறி யாதவர் காலற்ற வாறே. (2)

வேறு பாடம்: 1. திருத்தி (ஆ இ ஈ) IV; தரித்து (தெ) 2. தரையிற் (பா 3) 3. மில்லாப் (ஆ); மில்லாத (இ); மல்லாத (ஊ) I.

கருத்து: களித்து வளர்த்த தேமா மரத்திற் பழுத்த கனியைச் சேமப் பொருளாகப் புதைத்துவிட்டு, புளிமா மரத்தின் உச்சிக்கொம்பில் ஏறிக் கருத்தறியாதோர் காலிழந்தனரே.

மனைவி என்ற உரிமையால் களிப்பும், மற்றது அறமன்மையால் பொருத்த மின்மையும் கூறப்பட்டன. பிறிது மொழிதலணி.

அறிவு மயங்கி. . .

493. பொருள் கொண்ட கண்டனும் போதத்தை ஆளும்
இருள் கொண்ட மின் வெளி கொண்டு நின்றோரும்
மருள் கொண்ட மாதர் மயல் உறுவார்கள்
மருள் கொண்ட சிந்தையை மாற்றகிலாரே.

பொருள்கொண்ட கண்டனும் [1]போதத்தை யாளு
மிருள்கொண்ட [2]மின்வெளி கொண்டுநின் றோரு
மருள்கொண்ட மாதர் [3]மயலுறு வார்கள்
மருள்கொண்ட சிந்தையை மாற்றகி லாரே. (3)

வேறு பாடம்: 1. போதகை யாளும் (ஆ இ ஈ ஊ எ) II. 2. பின்வெளி (அ ஆ) I. 3. மயமுறு (பா 3)

கருத்து: பொருளை விரும்பும் உலோபியும், ஆணவ இருளின் இடையே, உடற் கருவிகளால் சிறிதே அறிவு பெற்றோரும், முறையே உபோபத்தையும் அறிவையும் மறந்து, மாதர்மேல் விருப்பம் கொள்வர். அந்த மயக்கத்தை மாற்ற இயலாமல் துன்புறுவர்.

40. மகளிர் இழிவு

எட்டி பழுத்தென்ன?

494. இலை நல ஆயினும் எட்டி பழுத்தால்
குலை நல ஆம் கனி கொண்டு உணல் ஆகா;
முலை நலம் கொண்டு முறுவல் செய்வார்மேல்
விலகுறும் நெஞ்சினை வெய்து கொள்ளீரே.

[1]இலைநல வாயினு மெட்டி பழுத்தாற்
குலைநல வாங்கனி கொண்டுண லாகா[2]
முலைநலங் கொண்டு முறுவல்செய் வார்மேல்
விலகுறு நெஞ்சினை வெய்துகொள் ளீரே. (1)

வேறு பாடம்: 1. இலை நல்ல (எ) III. 2. வாகா (அ இ ஊ) I. 3. விலைகுறு (அ ஆ இ ஈ) I.

கருத்து: எட்டி மரத்தின் இலைகள் அழகியவை. ஆயினும் அது பழுத்தால், பழத்தை யாரும் தின்னார். அதுபோல் உடலழகால் மயக்கும் மாதரிடம் மனம் வைக்க வேண்டா.

இவ்வியல் பொதுமகளிரைப் பற்றியது.

வறண்ட நிலம்

495. மனைபுகு வார்கண் மனைவியை நாடிற்[1]
சுனைபுகு நீர்போற் சுழித்துடன் வாங்குங்
கனவது போலக் கசிந்தெழு மன்பை[2]
[3]நனவது போலவு நாடவொண் ணாதே. (2)

வேறு பாடம்: 1. நாடிச் (இ) (பா 3) I. 2. மின்ப (இ ஊ) IV. 3. நனைவது (அ) I.

கருத்த: தம் மனைவியிடம் இன்பம் நுகர்வார்க்கு, அவ்விருவரது அன்பும் சுனைநீர் போல நிறைந்து, ஒன்றை ஒன்று ஈர்க்கும். பிற மகளிரிடம் இன்பம் நுகர்வார்க்குத் தோன்றும் அன்பு உண்மை அன்று, கனவு.

நாட்டம் எங்கோ?

496. இயலுறும் வாழ்க்கை இளம்படி மாதர்
புயல் உறும் புல்லின் புணர்ந்தவர், எய்தும்
மயல் உறும் வானவர் சார்வு இது என்பார்
அயல் உறப் பேசி, அகன்று ஒழிந்தாரே.

இயலுறும் [1]வாழ்க்கை [2]யிளம்படி மாதர்
[3]புயலுறும் [4]புல்லிற் புணர்ந்தவ ரெய்தும்[5]
மயலுறும் வானவர் [6]சார்விது வென்பா
ரயலுறப் பேசி யகன்றொழிந் தாரே. (3)

வேறு பாடம்: 1. வாட்கை (அ இ ஈ ஊ) I. 2. யிள பிடி (இ ஈ எ) I. 3. புயலுற (இ) IV. 4. புல்லிப் (இ ஊ) IV (பா 3); பல்லி (ஆ) I. 5. ரேயினு (எ) V. 6. சாரவிருமென்பா (விசு)

கருத்து: இளமைத் தன்மையால் நடைபெறும் வாழ்க்கையை உடைய மாதரை, பயிரை மழைநீர் கலந்தது போலக் கூடியவர், மயங்கி 'இதுவே வானுலக இன்பம்' என்பர். அம் மாதரோ, பொருளோடு பிறர் வரக் கண்டு, இவரைத் தக்கவாறு பேசி, நீங்குவர்.

கரும் பாம்பு

497. வையகத்தே மடவாரொடும் கூடி என்?
மெய்யகத்தோர் உளம் வைத்த விதி - அது
கையகத்தே கரும்பாலையின் சாறு; கொள்
மெய் -அகத்தே பொரும் பாம்பு -அது ஆகுமே.

வையகத் தேமட [1]வாரொடுங் கூடியென்
மெய்யகத் [2]தோருளம் வைத்த விதியது
கையகத் தேகரும் பாலையின் சாறு கொண்
மெய்யகத் [3]தேபொரும் [4]பாம்பது வாமே[5]. (4)

வேறு பாடம்: 1. வாரொடு (ஆ) I. 2. தோருழை (பா 3) தோருழ (தெ) 3. தேபெரும் (இ ஈ) (பா 3) I; தேபெறு (திருவிக) 4. வேம்பது (இ) IV. 5. வாகுமே. (இ ஈ ஒ) I.

கருத்து: பெண்களுடன் கூடி இன்புறுதலால் பயன் என்ன? உண்மை ஞானம் உடையோர், மக்களின் உள்ளத்திற் பதியுமாறு போதித்த வாழ்க்கை நெறி, கையில் உள்ள கருப்பஞ் சாறு போன்றது. ஆனால் மகளிரிடம் கொண்ட நேயம், உடம்பினுள் சென்று தீண்டும் பாம்பு போன்றது. அதனிடமிருந்து தப்ப முடியாது. ஆதலால், அந்நேயத்துடன் கருப்பஞ் சாற்றை ஏந்துவதால் பயன் இல்லை.

பாசிக் குளம்

498. கோழை ஒழுக்கம் குடம் மூடு பாசியில்
ஆழ நடுவார் அளப்பு உறுவார்களைத்
தாழத் துடக்கித் தடுக்ககிலாவிடில்
பூழை நுழைந்து அவர் போகின்ற வாறே.

கோழை யொழுக்கங் [1]குடமூடு பாசியி
[2]லாழ நடுவா ரளப்புறு வார்களைத்
[3]தாழத் துடக்கித் தடுக்ககி லாவிடிற்
[4]பூழை நுழைந்தவர் போகின்ற வாறே. (5)

வேறு பாடம்: 1. குளமூடு (எ) I. 2. லாழி (ஊ) I. 3. தாழைத் (அ இ ஈ); தாளைத் (ஊ) I. 4. பூளை (ஈ) I.

கருத்து: குற்றம் உள்ளதாகிய பரத்தை ஒழுக்கம் என்ற குடத்தை மூடி மறைத்துக் கொள்ளும்படி கிடக்கும் பாசி உள்ள குளத்தில், அக்குடத்தை அமிழ்த்தி, நல்ல தண்ணீர் உள்ளதா என ஆராய்பவர்களை, அவ்வாறு செய்யாதபடி தடுக்காவிட்டால், அவர் துன்பத்தில் சிக்கியழிவர்.

அளப்பு - ஆய்வு. பீழை, பூழை என மருவிற்று.

41. நல்குரவு

ஒழுக்கம் குன்றும்

499. **புடைவை கிழிந்தது; போயிற்று வாழ்க்கை;**
அடையப்பட்டார்களும் அன்பு-இலர் ஆனார்;
கொடை இல்லை; கோள் இல்லை; கொண்டாடல் இல்லை;
நடை இல்லை நாட்டில் இயங்குகின்றார்க்கே.

புடைவை [1]கிழிந்தது போயிற்று வாழ்க்கை
[2]யடையப்பட் டார்களு மன்பில ரானார்
கொடையில்லை கோளில்லை [3]கொண்டாட லில்லை
நடையில்லை நாட்டி லியங்குகின் றார்க்கே. (1)

வேறு பாடம்: 1. யழிந்தது (ஆ ஊ) II. 2. யடையப்படார்களு (பா 3) 3. கொண்டநட் பில்லை (அ) IV; கொண்டாட்ட மில்லை (எ) IV

கருத்து: மாற்றுடை இல்லை. வாழ்க்கை பயனற்றுப் போயிற்று. மனைவி மக்கள் அன்பிழந்தார். பெண் கொடுத்தல், கொள்ளல் நின்று போயிற்று. பிற விழாக்களும் இல்லை. நடைப் பிணமாக இருக்கும் இவர்கட்கு இதனால் ஒழுக்கமும் குன்றும்.

இரையை அல்ல, இறையைத் தேடு

500. **பொய்க்குழி தூர்ப்பான் புலரி புலருக என்று**
அக்குழி தூர்க்கும் அரும்பண்டம் தேடுவீர்!
எக்குழி தூர்த்தும் இறைவனை ஏத்துமின்
அக்குழி தூரும் அழுக்கு அற்ற போதே.

பொய்க்குழி தூர்ப்பான் புலரி புலருகென்[1]
றக்குழி தூர்க்கு மரும்பண்டந் தேடுவீ
ரெக்குழி தூர்த்து மிறைவனை யேத்துமி
னக்குழி தூரு மழுக்கற்ற போதே. (2)

வேறு பாடம்: 1. புலரு தென் (ஆ இ ஈ உ எ) I.

கருத்து: நிரம்பியது போல் தோன்றி, நிரம்பாமல் இருக்கும் வயிற்றை நிரப்பும் பொருட்டே 'பொழுது விடிக' என்று இருந்து, விடிந்ததும் உணவைத் தேடுவீர்! எதை எதை நிரப்பினாலும், இறைவனைத் தேடுக; வழிபடுக. உங்கள் வினை குறைந்தால் குறைகள் எல்லாம் நிரம்பும்.

501. கற்குழி தூரக் கனகமுந் தேடுவர்
அக்குழி தூர்க்கை யாவர்க்கு மரியது
அக்குழி தூர்க்கு மறிவை யறிந்தபின்
அக்குழி தூரு மழுக்கற்ற வாறே. (அ, ஔ)

உணர்வு விளக்கு ஏற்று

502. தொடர்ந்து எழும் சுற்றம் வினையினும் தீய,
கடந்தது ஓர் ஆவி கழிவதன் முன்னே
உடந்து ஒரு காலத்து உணர் விளக்கு ஏற்றித்
தொடர்ந்துநின்று அவ்வழி தூர்க்கலும் ஆமே.

தொடர்ந்தெழுஞ் சுற்றம் [1]வினையினுந் தீய
கடந்ததோ ராவி கழிவதன் முன்னே
[2]யுடந்தொரு காலத் துணர்விளக் கேற்றித்
தொடர்ந்துநின் றவ்வழி தூர்க்கலு மாமே. (3)

வேறு பாடம்: 1. வினையிலுந் (ஆ இ) I. 2. முடைந்தொரு (ஈ) I.

கருத்து: சங்கிலித் தொடர் போல் ஒன்றிலிருந்து ஒன்றாகக் கிளைக்கும் சுற்றத்தின் மேல் வைக்கும் பாசம் வினையை விடத் தீயது. இப்பாச வாழ்விலே, பல காலங்களைக் கடந்த உயிர், பிரிவதற்கு முன்பு, பாசத்தைக் கைவிட்டு, உயிருணர்வு என்ற விளக்கை ஏந்தி, தொடர்ந்து சாதனை செய்து, பாசநெறியை அடைத்தல் கூடும்.

உடன்று, உடந்து என மருவியது.

வாழ்க்கையில் வெறுப்பு

503. அறுத்தனவா இனும் மானினம் மேவி;
அறுத்தனர் ஐவரும்; எண்ணிலி துன்பம்
ஒறுத்தன வல்வினை ஒன்று அல்ல; வாழ்வை
வெறுத்தன ஈசனை வேண்டிநின்றானே.

[1]அறுத்தன [2]வாவினு மானின மேவி
[3]யறுத்தன [4]ரைவரு மெண்ணிலி துன்ப
[5]மொறுத்தன வல்வினை யொன்றல்ல வாழ்வை
[6]வெறுத்தன [7]வீசனை வேண்டிநின் றானே[8]. (4)

வேறு பாடம்: 1. அரித்தன (ஆ) IV. 2. வாறினு (அ ஆ ஈ எ ஒ) I. 3.யிறுத்தன (த) 4. வைவரு (ஆ இ ஈ ஊ) I. 5. பொறுத்தன (ஈ) I; மொறுத்தனன் (ஆ) I. 6. வெறுத்தனன் (த) 7. னீசனை (ஒ) IV. 8. றேனே (த).

கருத்து: "இன்னும் மகளிர் கூட்டம் வந்து, ஆசை நோய் தந்து துன்புறுத்துகின்றதே! ஐம்புலன்கள் துன்பம் தருகின்றனவே! எண்ணற்ற துன்பங்கள் விளையுமாறு பல வினைகள் தண்டித்து விட்டன" - இவ்வாறு வாழ்வை வெறுத்த மொழிகளைக் கூறி இறைவனை (வறிஞன்) வேண்டுகிறான்.

42. கள்ளுண்ணாமை

பழக்க வாசனை

504. கழுநீர் பசுப்பெறில் கயந்தொறும் தேரா;
கழுநீர் விடாய்த்துத் தம் காயம் சுருக்கும்;
முழுநீர்க் கள் உண்போர் முறைமையது அற்றோர்,
செழுநீர் சிவன்-தன் சிவானந்தத் தேறலே.

கழுநீர் பசுப்பெறிற் கயந்தொறுந் தேரா[1]
கழுநீர் விடாய்த்துத்தங் காயஞ் சுருக்கு[2]
முழுநீர்க் கள்ளுண்போர் முறைமைய தற்றோர்[3]
செழுநீர் சிவன்றன் சிவானந்தத் தேறலே. (1)

வேறு பாடம்: 1. தேரார் (அ ஆ ஊ) தேனார் (ஒ) I. 2. சுருங்கு (ப ா 3) 3. கன்றோர் (எ) IV.

கருத்து: பசு கழுநீர் உண்டால், பின்பு குளங்களில் நீர் பருகாது. மீண்டும் கழுநீரையே விரும்பி, அது கிடைக்கும் வரை வேறு எதையும் பருகாமல், உடல் மெலியப் பெறும். அதுபோல் மயக்கம் செய்யும் கள்ளை உண்டோர் மீண்டும் அதனையே விரும்புவர். நன்னீரை விரும்பார். செழுமையான நீர் தேன் போன்ற சிவானந்தமே.

சிவானந்தக் கள்

505. சித்தம் உருக்கிச் சிவம் ஆம் சமாதியில்
ஒத்த சிவானந்தத்து ஓவாத தேறலைச்
சுத்தம்-அது உண்ணச் சுவானந்தம் விட்டிடா,
நித்தல் இருத்தல் கிடத்தல் கீழ்க்காலே.

சித்த முருக்கிச் சிவமாஞ் சமாதியி
[1]லொத்த சிவானந்தத் [2]தோவாத தேறலைச்
சுத்த மதுவுண்ணச் [3]சுவானந்தம் விட்டிடா[4]
நித்த லிருத்தல் [5]கிடத்தல்கீழ்க் காலே. (2)

வேறு பாடம்: 1. லொத்துச் (சண்) 2. தொவ்வாத (ஆ இ ஊ ஓ) I சிவானந்த மோவாத (எ) IV. 3. சுகானந்தம் (இ) சுராபானம் (ஊ) I சிவானந்தம் (எ) I. 4. தான்விடா (ஆ) IV. 5. கிடத்தலின் கீழ்க்காலே (அ ஆ இ ஒ) (பா 3) II.

கருத்து: அன்பினால் உள்ளம் உருகி, சமாதியில் சிவத்துடன் ஒத்துணர்ந்து, சுத்தநிலையில் இருந்து, சிவானந்தம் என்னும் தேனை இடையறாது உண்டிட, அதுவே ஆன்மா அனுபவிக்கும் பேரின்பமாகும். அதற்கு முன்னர் சகல நிலையில், ஆன்மா உடம்பில் இருந்து, நாள்தோறும் பகலும் இரவும் முறையே விழித்திருந்ததும், உறங்கியதும் கீழ்ப்பட்டவையே.

அறிவை இழக்காதே

506. காமமும் கள்ளும் கலதிகட்கே ஆகும்;
மாமலமும் சமையத்துள் மயல் உறும்
போமதி ஆகும்; புனிதன் இணையடி
ஓமய ஆனந்தத் தேறல் உணர்வு உண்டே.

காமமுங் கள்ளுங் [1]கலதிகட் கேயாகு
மாமல முஞ்சமை [2]யத்துண் மயலுறும்[3]
போமதி யாகும் புனித னிணையடி
[4]யோமய வானந்தத் தேற லுணர்வுண்டே. (3)

வேறு பாடம்: 1. கலாதிகட் (அ ஓ) I; 2. யத்துள்ள (ஊ) I; 3. மயலும் (ஊ) I; 4. தேமைய (ஊ) IV போமய (திருவிக)

கருத்து: காமமும் கள்ளும் கீழ்மக்களுக்கு உரியவை. அவற்றின் வசப்பட்டால், அறிவு மூலமலத்தின் காரியமாகிய அறியாமையில் மூழ்கும். பிற சமயங்களில் சென்று மயங்கும். இறுதியாக நீங்கும். சிவபிரான் திருவடியில் ஊன்றி நிற்றலால் பெறும் நாதவெளி இன்பமாகிய, தேன் போன்ற உணர்வை உண்டால், நன்மை எய்தும்.

கொண்டு கூட்டு: மதி மாமலமும் சமையத்துள் மயல்உறும்; போம்; புனிதன் இணையடி ஓம் மய ஆனந்தத் தேறல் உணர்வு உண்டு, ஆகும்.

உள்ளொளி

507. வாமத்தோர் தாமும் மது உண்டு மாளுவர்;
காமத்தோர் காமக்கள் உண்டே கலங்குவர்;
ஓமத்தோர் உள்ளொளிக்குள்ளே உணர்வர்கள்;
நாமத்தோர் அன்றே நணுகுவர் தாமே.

வாமத்தோர் [1]தாமு மதுவுண்டு மாளுவர்[1]
காமத்தோர் [2]காமக்க ளுண்டே கலங்குவ
ரோமத்தோ ருள்ளொளிக் குள்ளே யுணர்வர்க
[2]ணாமத்தோ ரன்றே நணுகுவர் தாமே. (4)

வேறு பாடம்: 1. மாள்பவர் (சண்) 2. நாமற்றோ (பா 3)

கருத்து: வாம நெறியினரும் கள் உண்டு இறப்பர். காம நூலினர் காமத்தில் ஆழ்ந்து பொறிகலங்குவர். யோகிகள் உடம்பினுள்ளே ஓமம் வளர்த்து, உள்ளொளி கண்டு, இறைவனை உணர்வார்கள். சமாதியில் சிவநிலையை எய்துபவரே, இறுதியில், விதேக முத்தியில் சிவனை அடைவர். நாமத்தோர் - சிவம் என்னும் பெயருக்குரிய நிலையை அடைவோர்.

வாழ்வின் பொருள் என்ன?

508. உள்- உண்மை ஓரார்; உணரார் பசுபாசம்;
வள்ளன்மை நாதன் அருளினின் வாழ்வுறார்;
தெள் - உண்மை ஞானச் சிவயோகம் சேர்வுறார்;
கள் உண்ணும் மாந்தர் கருத்து அறியாரே.

உள்ளுண்மை யோரா ருணரார் பசுபாசம்
வள்ளன்மை நாத னருளினின் வாழ்வுறார்
தெள்ளுண்மை [1]ஞானச் சிவயோகஞ் சேர்வுறார்
கள்ளுண்ணு மாந்தர் கருத்தறி யாரே[2]. (5)

வேறு பாடம்: 1. யான (ஆ ஊ ஓ) I. 2. யார்களே (அ ஆ இ ஊ ஓ) II.

கருத்து: கள்ளுண்போர் தம் உயிருக்கு உயிரான இறைவனைப் பற்றிச் சிந்தியார். தம்மையும் உலகத்தையும் உணரார். இறைவன் வழங்கும் அருளால் வாழ்வு பெறார். தெளிந்த உண்மையை அறிவதாகிய ஞானத்தைத் தரும் சிவயோகம் பயிலார். எனவே வாழ்வின் கருத்தை அறியார்.

பற்று நீங்குமா?

509. மயக்கும் சமய மலம் மன்னும் மூடர்,
மயக்கும் மது உண்ணும் மாமூடர் தேரார்;
மயக்குஉறு மாயையின் மாமாயை வீடும்;
மயக்கின் தெளியின் மயக்குறும் அன்றே.

மயக்குஞ் சமய [1]மலமன்னு மூடர்
மயக்கு மதுவுண்ணு மாமூடர் தேரார்[2]
மயக்குறு [3]மாயையின் [4]மாமாயை வீடு
[5]மயக்கிற் [6]றெளியின் [7]மயக்குறு மன்றே. (6)

வேறு பாடம்: 1. மலமென்னு (ஓ) I; 2. தேறார் (பதிப்) 3. மாமாயை (துடி) 4. மாயையின் (துடி) 5. மயக்குத் (ஓ) IV மயக்கித் (ஊ) I; 6. தெளிவில் (அ) I; 7. மயங்குறு (அ) I.

கருத்து: சமயத்தால் மலம் நீங்க வேண்டியிருப்பவும், வாமநெறியில் நின்று மலத்தில் அழுந்தும் மூடர், கள்ளையும் உண்டு மாமூடர் ஆகின்றனர். அவர்கள் பற்றினால் வரும் மயக்கம் கள்ளினால்

நீங்கும் என்பார்கள். கள் மயக்கம் தீர்ந்தபிறகு, பற்று மீண்டும் மயக்கும். உண்மையில் அசுத்த மாயை, சுத்த மாயை என்பவையும் அவற்றால் விளையும் பற்றும் இறைவனைப் பற்றுவதால் நீங்கும். அவர் இதனை ஆய்ந்து அறியார்.

புலன் இன்பமே நாடுவான்

510. மயங்கும், தியங்கும், கள் வாய்மை அழிக்கும்,
இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தி
முயங்கும்; நயம் கொண்ட ஞானத்து முந்தாது,
இயங்கும் இடை அறா ஆனந்தம் எய்துமே?

மயங்குந் தியங்குங்கள் வாய்மை யழிக்கு
மியங்கு மடவார்த மின்பமே யெய்தி
முயங்கு [1]நயங்கொண்ட ஞானத்து முந்தா[2]
[3]தியங்கு மிடையறா வானந்த மெய்துமே. (7)

வேறு பாடம்: 1. மாயங்கொண்ட (ஊ) II. 2. முந்த (தி); 3. ரியங்கு (எல்லாச் சுவடிகளும்) V.

கருத்து: கள் உண்பான் மயங்குவான். கவலை கொள்வான். கள்ளினால் தனது வாய்மை அழிக்கப்பெறுவான். பெண்டிரின்பமே பெற்று அணைவான்; நீதியோடு சேர்ந்த ஞானநெறியை அடைய முயலாமல், அவன் இடையறா ஆனந்தம் பெறுவானோ?

குறிப்பு: 'முந்தார்' என்றே எல்லாச் சுவடியிலும் உள்ளது. இலக்கணம் பிழைபடுதல் நோக்கி 'முந்தாது' என இப்பதிப்பில் திருத்தப்பட்டது.

திருவடி இன்பம்

511. இராப்பகல் அற்ற இடத்தே இருந்து
பராக்கு அற ஆனந்தத் தேறல் பருகார்;
இராப்பகல் அற்ற இறையடி இன்பத்து
இராப்பகல், மாயை இரண்டு அடித்தேனே.

இராப்பக லற்ற விடத்தே யிருந்து
பராக்கற வானந்தத் தேறல் பருகா
ரிராப்பக லற்ற [1]விறையடி யின்பத்
திராப்பகன் மாயை [2]யிரண்டடித் தேனே. (8)

வேறு பாடம்: 1. விடையறா (ஆ) IV. 2. யிரண்டிடத் (அ) I.

கருத்து: பலரும் இரவையும், பகலையும் வேறுபாடு உணராத துரியநிலையில் இருந்து, வேறு கருத்தின்றி, ஆனந்தத் தேனைப் பருகார். யானோ என்றும் ஒருதன்மையாய் உள்ள, இறைவன் திருவடிகளில் விளையும் இன்பத்தைப் பருகி, இரவு பகல் வேறு பாட்டு உணர்ச்சியையும் மாயையையும் வென்றேன்.

அருளும் இல்லை; அறிவும் போயிற்று

512. சத்தியை வேண்டிச் சமயத்துக் கள் உண்பர்
சத்தி அழிந்தது தம்மை மறத்தலால்;
சத்தி, சிவஞானம் தன்னில் தலைப்பட்டுச்
சத்திய ஞான ஆனந்தத்தில் சார்தலே.

சத்தியை வேண்டிச் [1]சமயத்துக் கள்ளுண்பர்[2]
சத்தி [3]யழிந்தது தம்மை மறத்தலாற்
சத்தி சிவஞானந் தன்னிற் றலைப்பட்டுச்
[4]சத்திய ஞானவா னந்தத்திற் சார்தலே. (9)

வேறு பாடம்: 1. சமயத்தோர் (எ) IV. 2. கள்ளுண்போர் (எ); கள்ளுண்பவர் (அ) I. 3. யளித்தது (இ) I. 4. சத்தியை (ஊ) I.

கருத்து: வாமநெறியினர் சத்தி தேவியை வழிபட்டு, யோகத்தில் ஒருமை பெறுவதற்காகக் கள் உண்பர். ஆனால், அவள் அருள் கிடைக்கப் பெறாமையுடன், கள் உண்டது காரணமாகத் தம் அறிவை இழந்தமையால், அந்த வலிமையும் நீங்கிற்று. சிவஞானத்தினை எய்தும் முறையில் சிவயோகம் செய்து உண்மை யறிவானந்தம் எய்தும் நெறியில் சார்தலே சத்தியைப் (அருட் சத்தியை) பெறும் வழியாகும்.

சத்தி - சிவத்தை உணர்க

513. சத்தன் அருள்தரின் சத்தி அருள் உண்டாம்;
சத்தி அருள்தரின் சத்தன் அருள் உண்டாம்;
சத்தி சிவம் ஆம் இரண்டும் தன் உள் வைக்கச்
சத்தியும் எண் சித்தித் தன்மையும் ஆமே.

சத்த னருடரிற் சத்தி யருளுண்டாஞ்
சத்தி யருடரிற் சத்த னருளுண்டாஞ்
சத்தி சிவமா [1]மிரண்டுந்த னுள்வைக்கச்
[2]சத்தியு மெண்சித்தித் [3]தன்மையு மாமே. (10)

வேறு பாடம்: 1. யிரண்டுந்த (சங்) 2. சத்திய (இ) IV; 3. தண்மையு (அ ஊ ஒ) I.

கருத்து: சத்திமான் ஆகிய சிவன் அருள் வழங்கினால், சத்தியின் அருள் தானே எய்தும். அதனைப் பெற்றால் சிவனது அருள் மேலும் மிகுதியாக எய்தும். தம்முள் வேறாகாத சத்தி சிவத்தை யோகி, தன் புத்தியில் நிறுத்தினால், வலிமையும் அட்டமா சித்திகளும் எய்தும்.

சத்தி - இறையின் இயக்கம். சிவம் - இறையின் உண்மைச் சொரூபம் .

உண்மையான இன்பம்

514. தத்துவம் நீக்கி மருள் நீக்கித் தான் ஆகிப்
பொய்த் தவம் நீக்கி, மெய்ப் போகத்துள் போகியே
மெய்த்த சகம் உண்டு, விட்டு, பரானந்தச்
சித்தி -அது ஆக்கும் சிவானந்தத் தேறலே.

தத்துவ நீக்கி மருணீக்கித் தானாகிப்[1]
பொய்த்தவ நீக்கிமெய்ப் போகத்துட் போகியே[2]
[3]மெய்த்த [4]சகமுண்டு விட்டுப் பரானந்தச்[5]
[6]சித்திய [7]தாக்குஞ் சிவானந்தத் தேறலே. (11)

வேறு பாடம்: 1. தானாக்கிப் (த) 2. போக்கியே (எ) IV; போ தியே (ஆ) I. 3. மெத்த (ஊ) I. 4. சுகமுண்டு (த) 5. விட்டுப்பேரானந்தச் (இ) IV. 6. சத்திய (ஓ) IV. 7. தாகுஞ் (ஒ) I.

கருத்து: ஆன்மா முப்பத்தாறு தத்துவங்களையும் நீக்கி, மலத்தால் விளைந்த மயக்கத்தை நீக்கி, தனியேநின்று, பொய்யான தவமாகிய வேறு யோக நெறிகளைத் தள்ளி, உண்மையான இன்பத்தைத் தரும் சிவயோகத்தைப் பயின்று, உண்மை போலத் தோன்றும் உலகியலைக் கடந்து, பரவெளியில் கிடைக்கும் ஆனந்தத்தை உடையதாகும்படி செய்வது சிவானந்தம் ஆகிய தேனாகும்.

மதி அமுதம்

515. யோகிகள் கால்கட்டி ஒண்மதி ஆனந்தப்
போத அமுதைப் பொசித்தவர்; எண் சித்தி
மோகியர் கள் உண்டு மூடராய், மோகம் உற்று
ஆகும் மதத்தால் அறிவழிந்தோரே.

யோகிகள் [1]கால்கட்டி யொண்மதி யானந்தப்[2]
போத வமுதைப் பொசித்தவ ரெண்சித்தி[3]
மோகியர் கள்ளுண்டு மூடராய் மோகமுற்
[4]றாகு மதத்தா லறிவழிந் தோரே[5]. (12)

வேறு பாடம்: 1. கால் காட்டி (அ) IV. 2. யானந்தம் (ஊஒ) I. 3. ரொண்சித்தி (அ) IV: 4. றாரு (ஒ ஓ) I றாக (ஆ) I றாறு (திருவிக) (விசு) (சங்) 5. லறிவறந்தாரே (ஓ) I; தார்களே (இ) II.

கருத்து: யோகியர் மூச்சைக் கணக்குப்படி நடுநாடியில் செலுத்தி, நெற்றியில் உள்ள சந்திரமண்டலத்தில் ஊறும், ஆனந்தம் தருவதும், ஞானத்தின் அடையாளமுமாகிய அமுதத்தை உண்டவர். ஆனால், அட்டமா சித்திகளில் மோகம் கொண்டோர், வாமநெறியில், கள் உண்டு, அறியாமை வயப்பட்டு, உலகியலில் மோகங் கொண்டு, கள்ளால் விளையும் வெறியால் அறிவு நீங்கப் பெற்றோர் ஆவர்.

ஒளித்தடம்

516. உண்ணீர் அமுதம் உறும் ஊறலைத் திறந்து;
எண்ணீர் குரவன் இணையடித் தாமரை;
நண்ணீர் சமாதியின் நாடி நீரால் நலம்
கண்-ஆற்றொடே சென்று கால்வழி காணுமே.

உண்ணீ ரமுத முறுமூற லைத்திறந்
தெண்ணீர் [1]குரவ னிணையடித் தாமரை
[2]நண்ணீர் சமாதியி [3]னாடிநீ ரானலங்
[4]கண்ணாற்றொ டேசென்று கால்வழி காணுமே[5]. (13)

வேறு பாடம்: 1. இணையடித் தாமரைக்கே செல (துடி) 2. தெண்ணீர் சமாதியமர்ந்து நீரா நலம் (துடி) 3. நாடுண (அ) IV நாடிநீ ரார்ந்த (ஓ) IV நாடினிரானலங் (சண்) (விசு) 4. கண்ணாரொ (எ) கண்ணாறொ (ஓ) IV. 5. மாறுமே (துடி).

கருத்து: ஞானாசாரியனின் திருவடிகளைத் தியானியுங்கள். காற்றின் வழியை ஆய்ந்து, சுழுமுனை வழியே செலுத்தி, முறையாகச் சமாதி நிலையை அடையுங்கள். மூன்று கண்களாகிய சந்திர, சூரிய, அக்கினி என்பவற்றின் கூட்டு ஒளியைத் தரிசித்து, அதன் வழியே செல்ல, அதன் தொடர்ச்சியாகிய அனுபவம் காணப்படும். அந்நிலையில், அமுதம் ஊறும் ஊற்றைத் திறந்து உண்ணுங்கள்.

கால்வழி - தொடர்ச்சி; கால்வாய். காணும் - காணப்படும். நலம் - நன்கு.

43. சிவ நிந்தை

இகழ்ந்தால் அழிவீர்

517. தெளிவுறு ஞானத்துச் சிந்தையின் உள்ளே
அளிவு உறுவார் அமரர் பதி நாடி;
எளியன் என்று ஈசனை நீசர் இகழின்,
கிளி ஒன்று பூனையால் கீழது ஆகுமே.

தெளிவுறு ஞானத்துச் சிந்தையி னுள்ளே
[1]யளிவுறு வாரம [2]ர்பதி நாடி
[3]யெளியனென் றீசனை நீச ரிகழிற்
கிளியொன்று [4]பூஞையாற் கீழது வாகுமே. (1)

வேறு பாடம்: 1.பளிவுறு (விசு) (திருவிக); 2. ராபதி (துடி) (சங்) 3. வெளியனென் (விசு) 4. பூஞையாய் (ஆ); பூனையாய் (அ) I; பூஞையிற் (வ) (துடி); பூசையின் (த)

கருத்து: தெளிவுடைய ஞானம் தங்கிய சிந்தையில் தலைவனை நாடி அன்பு கொள்பவர் அமரர் ஆவர். ஆனால் ஈசனை எளியன் என்று யாரேனும் இகழ்வாராயின் அவர் இழிந்தவராவர். மற்றும் அவர் செயல், கிளி பூனையால் கிழிக்கப்படுதல் போல, அவர் அழிதற்கு ஏதுவாகும்.

அன்புடையோரே அடைவர்

518. முளிந்தவர், வானவர், தானவர் எல்லாம்
விளிந்தவர் மெய்நின்ற ஞானம் உணரார்;
அளிந்து அமுது ஊறிய ஆதிப் பிரானைத்
தளிந்தவர்க்கு அல்லது தாங்க ஒண்ணாதே.

[1]முளிந்தவர் வானவர் தானவ ரெல்லாம்
விளிந்தவர் மெய்ந்நின்ற ஞான முணரா
[2]ரளிந்தமு தூறிய வாதிப் பிரானைத்
[3]தளிந்தவர்க் கல்லது [4]தாங்கவொண் ணாதே. (2)

வேறு பாடம்: 1. முனிந்தவர் (அ ஆ) I. 2. ரணிந்தமு (அ ஆ எ) I. 3. தனிந்தவர்க் (ஆ), தணிந்தவர்க் (இ ஒ) I. 4. தாங்கவொன்றாதே (ஒ) I.

கருத்து: விரதங்களால் உடம்பு உலர்ந்தோர், தேவர், அசுரர் - இவர்களுள், உண்மை ஞானத்தை உணராதோர் இறந்தோரே. சிவபிரான் அருளால் கனிந்து அமுதூறி நிற்கும் அனுபவத்தை, அன்புடையோர் அன்றிப் பிறரால் பெற இயலாது.

பகைத்து அழிந்தனர்

519. அப் பகையாலே அசுரரும் தேவரும்
நற்பகை செய்து நடுவே முடிந்தனர்;
எப்பகை ஆகிலும், எய்தார் இறைவனைப்
பொய்ப்பகை செய்யினும் ஒன்று பத்து ஆமே.

அப்பகை யாலே யசுரருந் தேவரு
நற்பகை செய்து நடுவே முடிந்தன
ரெப்பகை யாகிலு மெய்தா ரிறைவனைப்
[1]பொய்ப்பகை செய்யினு [2]மொன்றுபத் தாமே. (3)

வேறு பாடம்: 1. பொய்ப்பரிசேயினு (ஊ); பொய்ப்பரிசாயினு (ஆ) II. 2. பொன்றுவதாமே (த); மொன்று பத்தாயே (சங்)

கருத்து: ஒருவர் இறைவனைப் பொய்யாகப் பகைத்து அவனை எண்ணாமல் இருப்பினும், அவர்க்குப் பிறரோடு பகை நேரும் பொழுது, அது பத்துப் பங்காகப் பெருகும். அசுரரும் தேவரும் இறைவனைப் பகைத்தமையாலே, தமக்குள் பன்முறை பகைத்துப் பொருது மாண்டனர்.

துன்பத்தால் வெறுக்காதீர்

520. போகமும், மாதர் புலவி - அது நினைந்த
ஆகமும் உள் கலந்து அங்கு உளன் ஆதலின்
வேதியர் ஆயும் விகிர்தன் ஆம் என்கின்ற
நீதியுள் ஈசன் நினைப்பு ஒழிவாரே.

போகமு மாதர் [1]புலவி யதுநினைந்
தாகமு முட்கலந் தங்குள னாதலின்[2]
வேதிய [3]ராயும் விகிர்தனா மென்கின்ற
நீதியு ளீச [4]னினைப்பொழி வாரே[5]. (4)

வேறு பாடம்: 1. கலவி (ஈ) IV. 2. ராதலின் (த) 3. ரேனும் (ஆ); ராயினும் (ஊ ஒ) II. 4. நினைவை யொழிவரே. (ஆ ஊ) II. 5. யாரே (பா 3).

கருத்து: இன்ப நுகர்ச்சியிலும், மாதர் கொள்ளும் ஊடலை எண்ணி வருந்தும் துன்ப உணர்வை உடைய உடம்பிலும் இறைவன் கலந்து நிற்கின்றான். ஆதலின் அவன் வேதியர்கள் ஆராய்ச்சி செய்கின்ற, தம்முள் மாறுபடும் இயல்புகளை உடையவன். கலவி, புலவி என்பன இன்ப துன்பங்களுக்கு எடுத்துக் காட்டே ஆதலின் இன்பம், துன்பம் என்ற இரண்டிலும் கலந்து உறைகின்றதான மாறுபட்ட இயல்புகளின் உறைவிடம் இறைவன். இந்த நினைவு இல்லாதோர் தமது கலவியிலும் புலவியிலும் அவனை நினையாது இருக்கின்றனர்.

குறிப்பு: இவ்வியலை அடுத்துக் 'குருநிந்தை', 'மயேசுர நிந்தை' என்னும் இரண்டு இயல்கள் அனைத்துச் சுவடிகளிலும். பதிப்புகளிலும் உள்ளன. அவற்றின் பாடல்கள் யாப்புப் பிழையுடைமை, இலக்கணப் பிழையுடைமை, ஆசிரியரின் நடையினின்றும் வேறுபடுதல் என்னும் காரணங்களால் இடைச் செருகல் ஆகும்.

521. பெற்றிருந் தாரையும் பேணார் கயவர்க
ளுற்றிருந் தாரை யுளைவன சொல்லுவர்
கற்றிருந் தார்வழி யுற்றிருந் தாரவர்ப்
பெற்றிருந் தார்கன்னி யர்பெறும் பேறே. (ஞ)

522. ஓரெழுத் தோர்பொரு ளுணரக் கூறிய
சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோ
ரூரிடைச் கணங்கனாய்ப் பிறந்திங் கோருகம்
பாரிடைக் கிருமியாய் மாய்வர் மண்ணிலே. (ட)

523. பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவ
ரத்தமு மாவியு மாண்டொன்றின் மாய்ந்திடுஞ்
சத்திய மீது சதாநந்தி யாணையே. (க)

524. மந்திர மோரெழுத் துரைத்த மாதவர்
சிந்தையி னொந்திடத் தீமைகள் செய்தவர்
நுந்திய சுணங்கனாய்ப் பிறந்து நூறுரு
வந்திடும் புலையராய் மாய்வர் மண்ணிலே. (ட, ஔ)

525. ஈச னடியா ரிதயங் கலங்கிடத்
தேசமு நாடுஞ் சிறப்பு மழிந்திடும்
வாசவன் பீடமு மாமன்னர் பீடமு
நாசம தாகுமே நந்நந்தி யாணையே[1]. (உ, ஔ, ப)

526. சன்மார்க்க சற்குரு சன்னிதி பொய்வரி
னன்மார்க்க முங்குன்று ஞானமுந் தங்காது
தொன்மார்க்க மாய துறையு மறந்திட்டுப்
பன்மார்க்க முங்கெட்டுப் பஞ்சமு மாமே. (ஔ, ண)

527. கைப்பட்ட மாமணி தானிடை கைவிட்டு
மெய்ப்பட்ட கல்லைச் சுமப்போன் விதிபோன்றுங்
கைப்பட்ட நெய்பா றயிர்நிற்கத் தானறக்
கைப்பிட்டுண் பான்போன்றுங் கன்மிஞா னிக்கொப்பே. (க)

528. ஆண்டா னடியா ரார்க்கும் விரோதிக
ளாண்டா னடியவ ரையமேற் றுண்பவ
ராண்டா னடியாரை வேண்டாது பேசினோர்
தாந்தாம் விழுவது தாழ்ந்த நரகமே. (ஔ)

529. ஞானியை நிந்திப் பவனு நலனென்றே
ஞானியை வந்திப் பவனுமெய் நல்வினை
யான கொடுவினை தீர்வா ரவன்வயம்
போன பொழுதே புகுஞ்சிவ போகமே. (ஔ)

1. *இப்பாடல் ஒரு சுவடியில் மட்டுமே உள்ளது.*

44. பொறையுடைமை

எண்ணவலை

530. பற்றிநின்றார் நெஞ்சில் பல்லிதான் ஒன்று உண்டு
முற்றிக் கிடந்தது மூக்கையும் நாவியும்;
தெற்றிக் கிடந்து சிதைக்கின்ற சிந்தையுள்
வற்றாது ஒழிவது மாகமை ஆமே.

பற்றிநின் றார்நெஞ்சிற் பல்லிதா னொன்றுண்டு
முற்றிக் கிடந்தது [1]மூக்கையு நாவியுந்[2]
தெற்றிக் [3]கிடந்து சிதைக்கின்ற சிந்தையுள்
வற்றா தொழிவது [4]மாகமை யாமே. (1)

வேறு பாடம்: 1. மூகையு (ஆ) 2. நாவையுந் (இ உ எ) நாக்கையுந் (ஈ ஒ) II. 3. கிடந்தது (அ இ) I. 4. மாதலு மாமே (ஓ) I.

கருத்து: யோக நெறியில் சாதனை செய்வோரின் நெஞ்சின் இடமாக உள்ள அனாகதச் சக்கரத்தில் குண்டலிசத்தி பொருந்தி நிற்கும். அப்பொழுது அது மணிபூரகத்தையும் (நாபி) ஆக்ஞையையும் (மூக்கு நுனிக்கு நேரே நெற்றியில் உள்ள புருவமத்தி) தொட்டுக் கொண்டிருக்கும். அவ்வேளையில் மனம் பலவாறு எண்ணங்களில் பின்னிக்கொள்ளாமல், பொறுமை காக்க வேண்டும்.

பல்லி - உடும்பு; இங்குக் குண்டலி. நாபி - நாவி என மருவிற்று. இது யோக நூலாதலின் பொறையுடைமையை இச்சூழ்நிலையில் விளக்குகின்றார்.

குறிப்பு: பதிப்புகளில் இப்பாடலை அடுத்து வரும் "ஓலக்கஞ் சூழ்ந்த" என்ற பாடல், சிறு மாற்றத்துடன் 'திரி மூர்த்தி' என்னும் இயலில் வந்தது. எனவே இங்கு விடப்படுகின்றது.

531. ஞானம் விளைந்தவர் நம்மிட மன்னவர்
சேனை விளைந்து திகைதொறுங் கைதொழ
வூனை விளைத்திடு மும்பர்தம் மாதியை
யேனை விளைந்தரு ளெட்டலு மாமே. (க)

ஏற்றுக்கொள்ளும் பொறுமை

532. வல்வகையாலும் மனையிலும் மன்றிலும்
பல்வகையாலும் பயிற்றிப் பதம்செயும்
கொல்லையுள் நின்று குதிகொள்ளும் கூத்தனுக்கு
எல்லை இலாத இலயம் உண்டாமே.

வல்வகை யாலு மனையிலு மன்றிலும்
பல்வகை யாலும் பயிற்றிப் பதஞ்செயுங்
கொல்லையு ணின்று குதிகொள்ளுங் கூத்தனுக்
கெல்லையி லாத விலயமுண் டாமே. (2)

கருத்து: குடும்ப வாழ்விலும் புறத்திலும் வல்ல வகையாலும், பலவகைச் சோதனைகளாலும் ஆன்மாவிற்குப் பயிற்சி அளித்து முத்திக்குப் பக்குவப்படுத்துபவனும் மகாசங்கார காலத்தில் புறங்காட்டில் நின்று ஊழித்தாண்டவம் புரிபவனும் ஆகிய கூத்தப் பெருமானது அருட் செயலை, 'இது நம்மை உய்விப்பது' என்று ஏற்றுக் கொள்ள அளவற்ற பொறுமை வேண்டும். அஃது 'ஏகன்' ஆவதால் தோன்றும் பொறுமை.

இலயம் - ஒருமை.

45. பெரியாரைத் துணைக் கோடல்

அடியார் நடுவில்

533. ஓடவல்லார் தமரோடு நடாவுவன்;
பாடவல்லார் ஒலி பார்மிசை வாழ்குவன்;
தேடவல்லார் ஒலி தேவர் பிரானொடும்
கூடவல்லார் அடி கூடுவன் யானே.

ஓடவல் லார்தம ரோடுந டாவுவன்
பாடவல் லாரொலி பார்மிசை வாழ்குவன்
தேடவல் [1]லாரொலி தேவர் பிரானொடுங்
கூடவல் லாரடி கூடுவன் யானே. (1)

வேறு பாடம்: 1. லார்க்கருள் (எ) IV லார்க்குள் (பா 3)

கருத்து: ஞானநெறியில் விரைந்து செல்லவல்லாரின் மாணவருடன் நடப்பேன்; பாடவல்லாரின் ஒலி கேட்டு வாழ்வேன்; இறைவனை யோக நெறியில் நாடும் யோகியர்க்கு நர்தமாக விளங்கும் மகா தேவனோடு கூட வல்லாரது திருவடியில் பணிவேன்.

"அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" என்றார் மணிவாசகரும் (திருவா. கோ. மூ. திரு.1).

534. தாமிடர்ப் பட்டுத் தளிர்போற் றயங்கினு
மாமனத் தங்கன்பு வைத்த திலையாகு
நீயிடர்ப் பட்டிருந் தென்செய்வாய் நெஞ்சமே
போமிடத் தென்னொடும் போதுகண் டாயே. (ஊ, ச)

535. அறிவா ரமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிவதத்து வத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியா ருடன்கூடல் பேரின்ப மாமே. (ஔ)

அடியார் துணை

536. தாழ்சடையான் தன் தமராய் உலகினில்
போர்புகழான் எந்தை பொன்னடி சேருவர்;
வாய் அடையா, உள்ளம் தேர்வார்க்கு அருள்செய்யும்
கோ அடைந்து அந்நெறி கூடலும் ஆமே.

[1]தாழ்சடை யான்றன் றமரா யுலகினிற்
போர்புக [2]ழானெந்தை பொன்னடி சேருவர்
[3]வாயடை யாவுள்ளந் தேர்வார்க் கருள்செய்யுங்
கோவடைந் தந்நெறி கூடலு மாமே. (2)

வேறு பாடம்: 1. தார்சடை (அ ஆ இ எ) I. 2. ழாவெந்தை (சண்) 3. ராயடையா (பா 3)

கருத்து: நீண்ட சடையை உடைய சிவனின் அடியாராய், உலகில் பரவிய புகழை உடையவனாகிய எம்பிரானது திருவடிகளைச் சார்பவரும், மௌனமாகி, உள்ளுணர்வால் உண்மையை நாடுபவரும் ஆகிய அன்பர்களுக்கு அருள் செய்யும் தலைவனை, அவ்வடியாரின் துணையால் அடைந்து, அவனைக் கூடிப் பேரின்பம் பெறலாம்.

537. உடையா னடியா ரடியா ருடன்போய்ப்
படையா ரழன்மேனிப் பதிசென்று புக்கேன்
கடையார நின்றவர் கண்டறி விப்ப
வுடையான் வருகென வோலமென் றாரே. (ஓ)

அடியார்

538. அருமை வல்லான் கலைஞானத்துள் தோன்றும்;
பெருமை வல்லோன் பிறவிச்சுழி நீந்தும்;
உரிமை வல்லான் உணர்ந்து ஊழி இருக்கும்;
திருமை வல்லாரொடு சேர்ந்தனன் யானே.

அருமைவல் லான்கலை [1]ஞானத்துட் டோன்றும்
பெருமைவல் லோன்பிற விச்சுழி நீந்து
முரிமைவல் லானுணர்ந் தூழி யிருக்குந்
திருமைவல் லாரொடு சேர்ந்தனன் யானே. (3)

வேறு பாடம்: 1. ஞாலத்துட் (விசு) (சண்) (சங்)

கருத்து: கலைஞானம் ஆகிய அபர ஞானம் இறைவனை அடைவியாது. அதன் துணையால் பரஞானத்தின் அருமையை உணர்ந்து அதனைப் பெற்று, பிறவிச்சுழியிலிருந்து விடுதலை பெற்றவன்; ஆணவமலத்தை வென்ற பெருமை உடையவன்; தன்னையும் சிவத்தையும் உயிருணர்வால் உணர்ந்து அதனால் அழியாமைக்கு உரிமையுடையவன் என்ற இந்த மூவகைப் பெரியாரோடு நான் சேர்ந்தேன்.

திரிமை, திருமை எனத் திரிந்தது.

46. நடுவு நிலைமை

நடுநாடி

539. நடுவுநின் றார்க்கன்றி ஞானமு மில்லை
நடுவுநின் றார்க்கு நரகமு மில்லை
நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றார்வழி நானுநின் றேனே. (1)

கருத்து: இடைகலை, பிங்கலை, சுழுமுனை என்ற நாடிகளுள் 'நடுநாடி' எனப்படும் சுழுமுனையில் மூச்சினை இயக்குபவர்க்கு அன்றி யோகம் வாய்த்து, ஞானம் பிறவாது. அந்நாடியில் மூச்சு இயக்குவோர்க்கு நரகம் இல்லை; அவர்கள் தேவராவர். அவர் வழியில் நானும் நின்றேன்.

சிவயோகத்தின் பேறு

540. நடுவுநின்றான் நல்ல கார் முகில் வண்ணன்,
நடுவுநின்றான் நல்ல நான்மறை ஓதி,
நடுவு நின்றார் சிவ ஞானிகள் ஆவோர்
நடுவு நின்றான் நல்ல நம்பனும் ஆமே.

நடுவுநின் [1]றானல்ல கார்முகில் வண்ண
னடுவுநின் றானல்ல நான்மறை யோதி[2]
நடுவுநின் [3]றார்சிவ ஞானிக ளாவோர்
நடுவுநின் [4]றானல்ல நம்பனு மாமே[5]. (2)

வேறு பாடம்: 1. றார் நல்ல (அ) IV. 2. யோகி (ஆ இ ஊ) II. 3. றார் சிலர் (அ) III; றார் சில (ஆ இ ஒ) III. 4. றார் நல்ல (அ ஆ இ எ) I. 5. மாவரே (சண்).

கருத்து: சுழுமுனையில் மூச்சைச் செலுத்தி ஞானம் எய்தினோர் திருமால், பிரமன் முதலியோரின் பதவிகளை எய்துவர். சிலர் அவர்களினும் உயர்ந்த ஞானிகள் ஆவர். அவர்களுள் சிலர் சிவனே ஆகும் பேறு (வீடு) பெறுவர்.

541. நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவர்
நடுவுநின் றார்சிலர் தேவரு மாவர்
நடுவுநின் றார்சிலர் நம்பனு மாவர்
நடுவுநின் றாரொடு நானுநின் றேனே. (அ)

542. தோன்றிய வெல்லாந் துடைப்பன நின்றிவ
ரேன்றுநின் றாரென்று மீச னிணையடி
மூன்றுநின் றார்முதல் வன்றிரு நாமத்தை
நான்றுநின் றார்நடு வாகிநின் றாரே. (ங)

47. அட்டாங்க யோகம்

மூச்சே அடிப்படை

543. உரைத்தன வற்கு அரி ஒன்று முடிய
நிரைத்த இராசி நிறைமுறை எண்ணி,
பிரச்சதம் எட்டும் பேசிய நந்தி
நிரைத்த இயம நியமம் செய்தானே.

[1]உரைத்தன வற்கரி யொன்று முடிய[2]
நிரைத்த விராசி [3]நிறைமுறை யெண்ணிப்
பிரச்சத மெட்டுமுன் [4]பேசிய நந்தி
நிரைத்த வியம நியமஞ்செய் தானே. (1)

வேறு பாடம்: 1. நவக்கரி (உ); நவாக்கரி (இ), (பா 3) I. 2. மூடிய (அ ஆ இ ஒ) I. 3. நிரைமுறை (பா 3) 4. பேசியே (துடி) (சைவ)

கருத்து: மேடம் அல்லது சிம்மத்தில் முடியும் பன்னிரண்டு இராசிகள் நிறைந்துள்ள முறையைப் போல, 12 அங்குலகனம் உள்ள மூச்சுக் காற்றை அடிப்படையாக வைத்து, யோகத்தின் உறுப்புகள் எட்டையும் விளக்கி நந்தி யோக வாழ்வில் விதி எவை, விலக்கு எவை என்பதை வகுத்தான்.

ஓர் அங்குலம் என்பது ஒரு விரலின் கனம். விரலை 'அங்குலி' என்றல் வடமொழி வழக்கு. வற்கு - ஆடு; மேடம். அரி - சிம்மம்.

குறிப்பு: நான்கு குடும்பத்துச் சுவடிகளில் 'வக்கரி' என்று இருந்த பாடம் 'வற்கரி' என்பதன் எழுத்துமுறை மாற்றம் எனக்கருதிப் பின்னது மேற்கொள்ளப்பட்டது. பதிப்புகளிலும் இப்பாடமே உள்ளது.

புறவழிபாடு போல

544. செய்த வியம [1]நியமஞ் சமாதிசென்
[2]றுய்யப் பராசத்தி யுத்தர பூருவ
[3]மெய்த்த கவச நியாசங்கண் முத்திரை
யெய்த [4]வுரைசெய்த விந்நிலை தானே[5].

வேறு பாடம்: 1. சமாதிகள் சென்று (அ) (பா 3) IV. 2. பைய (அ) IV. 3. நெய்த (ஆ) IV மெய்த (சங்) (சைவ) 4. வுரைசெய்ய (ஆ எ ஈ ஊ) (பா 3) II வுரைசெய்வ னிந்நிலை (சண்) (சைவ) 5. காணே (இ ஊ ஈ) III.

கருத்து: தலையுச்சிச் சகஸ்ராரத்தில் எழுந்தருளும் பராசத்தியைத் தரிசிப்பதற்கும், உய்தியடைவதற்கும். இயமம் முதல் சமாதி வரை பூர்வ கிரியைகளாகவும் உத்தர கிரியைகளாகவும் உரைத்த கவசங்களும், நியாசங்களும், முத்திரைகளும் பல.

புறப் பூசையின் உறுப்புகளாகிய கவசம், நியாசம், முத்திரைகள் போல, அகவழிபாடாகிய யோகத்தில் இயமம் முதலிய எட்டு உறுப்புகள் உள.

யோகமே நன்னெறி

545. அந்நெறி, இந்நெறி என்னாதே, அட்டாங்கத்
தன்நெறி சென்று, சமாதியிலே நின்மின்;
நன்னெறி செல்வார்க்கு ஞானத்தில் ஏகலாம்;
புல்நெறி ஆகத்தில் போக்கு இல்லை ஆகுமே.

அந்நெறி இந்நெறி யென்னாதே யட்டாங்கத்
தன்னெறி சென்று சமாதியி லேநின்மி
னன்னெறி செல்வார்க்கு ஞானத்தி லேகலாம்
புன்னெறி யாகத்திற் போக்கில்லை யாகுமே[2]. (3)

வேறு பாடம்: 1. யெண்ணாதே (அ ஐ ஈ) I. 2. தானே (பா 3)

கருத்து: பலநெறிகளை எண்ணாமல், நம் சொந்த உடம்பைப் கொண்டு சாதனை செய்யும் நெறியாகிய அட்டாங்க யோக நெறியைப் பயிலுக. நல்லநெறியில் செல்பவரே மெய்ஞ்ஞானம் எய்துவர்; அற்பமான பிறவியில் புகும் கதி அவர்க்கு இல்லை.

சிவாகமங்களில் கூறிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு முக நெறியில், ஒரு முகம் யோகம்.

546. இயம நியமமே யெண்ணிலா வாதன
நயமுறு பிராணாயா மம்பிரத்தி யாகாரஞ்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
யயமுறு மட்டாங்க மாவது மாமே. (அ, ஔ)

இயமம்

விலக்குவன

547. கொல்லான், பொய்கூறான், களவு இலான், எக் குணத்தும்
நல்லான், அடக்கம் உடையான், நடுச் செய்ய
வல்லான், பகுத்து உண்பான், மாசு இலான், கள் காமம்
இல்லான் இயமத்து - இடையில் நின்றானே.

கொல்லான்பொய் கூறான் களவிலா னெக்குணத்து[1]
நல்லா னடக்க முடையா னடுச்செய்ய
வல்லான் [2]பகுத்துண்பான் மாசிலான் கட்காம
மில்லா னியமத் திடையினின் றானே. (1)

வேறு பாடம்: 1. னெண்ருணத்து (அ இ ஒ) (பா 3) II னெண்குணன் (சைவ) 2. பகுந்துண்பான் (சண்)

கருத்து: விலக்கத்தக்க செய்கைகள் கூறப்பட்டன.

நடுச்செய்ய - சுழுமுனையில் இயக்க. இயமம் - விலக்குவன.

நியமம்

வளர்க்கும் செயல்கள்

548. ஆதியை வேதத்தின் அப்பொருளாளனை,
சோதியை, அங்கே சுடுகின்ற அங்கியைப்
பாதியுள் மன்னு பராசத்தியோடு உடன்
நீதி யுணர்ந்து நியமத்த னாமே.

ஆதியை வேதத்தி னப்பொரு ளாளனைச்[1]
சோதியை யங்கே சுடுகின்ற வங்கியைப்
பாதியுண் மன்னு பராசத்தி யோடுட[2]
னீதி [3]யுணர்ந்து நியமத்த னாமே. (1)

வேறு பாடம்: 1. ளானைச் (அ ஆ) II. 2. யோடே (ஆ) II. 3. யுணர்ந்தோ (பா 3); யுணர்ந்த (சண்)

கருத்து: உலகைப் படைத்தவனும், வேதத்தின் பொருளாயுள்ளவனும், சோதியுருவமானவனும் ஆகிய சிவனை, மூலக்கனலினைத் தலையுச்சிச் சகஸ்ராரத்திற்கு ஏற்றி அங்குப் பராசத்தியோடு உடனாகக் கண்டு மகிழுவதே நியமம்.

அங்கி - மூலக் கனல். பாதி - இடப்பாகம். உடன் நீதி - உடனாக இருக்கும் நீதி. நியமம் - மேற்கொள்ளப்படுவன.

549. தூய்மை யருளுண் சுருக்கம் பொறைசெம்மை
வாய்மை நிலைமை வரைதலே மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
நேமியீ ரைந்து நியமத்த னாமே. (ஈ)

550. தவஞ்செபஞ் சந்தோட மாத்திகந் தானஞ்
சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசையொண் மதிதொல்லீ ரைந்து
நிவம்பல செய்யி னியமத்த னாமே. (ஔ)

ஆதனம்

யோக இருக்கைகள்

551. பங்கயம் ஆதி பரந்த பல் ஆதனம்
இங்குளவாறு ஒருநாலும் அவற்றினுள்
சொங்கு இலை ஆகச் சுவத்திகம் என மிகத்
தங்க இருப்பத் தலைவனும் ஆமே.

பங்கய மாதி [1]பரந்தபல் லாதன
மிங்குள [2]வாறொரு நாலு மவற்றினுட்
சொங்கிலை யாகச் சுவத்திக மெனமிகத்
தங்க [3]விருப்பத் தலைவனு மாமே. (1)

வேறு பாடம். 1. பகர்ந்தபல் (இ) IV. 2. வாமிரு (எ) II. 3. விருப்பத் (ஆ) IV.

கருத்து: ஆதனம்பல. அவற்றுள் நான்கு ஆதனங்கள் சிறந்தவை.

552. ஓரணை யப்பத மூருவின் மேலேறிட்
டார வலித்ததன் மேல்வைத் தழகுறச்
சீர்திகழ் கைக ளதனைத்தன் மேல்வைக்கப்
பார்திகழ் பத்மா சனமென லாகுமே. (ஔ, ண)

இலையிருக்கை

553. துரிசு இல் வலக்காலைத் தோன்றவே மேல் வைத்து
அரிய முழந்தாளில் அங்கையை நீட்டி
உருசியொடும் உடல் செவ்வே இருத்திப்
பரிசு பெறும் - அது பத்திராசனமே.

துரிசில் வலக்காலைத் தோன்றவே மேல்வைத்
தரிய முழந்தாளி லங்கையை நீட்டி
[1]யுருசி யொடுமுடல் செவ்வே யிருத்திப்
பரிசு [2]பெறுமது பத்திரா சனமே. (2)

வேறு பாடம்: 1. யுருகி யிடுமுடல் (எ) IV; 2. பெறுவது (ஆ இ ஈ ஊ) I.

கருத்து: பத்திராசன விளக்கம்.

துரிசு - குற்றம்.

மயில் இருக்கை

554. ஒக்க அடி இணை ஊருவில் ஏறிட்டு
முக்கி உடலை முழங்கைகளில் ஏற்றித்
தொக்க அறிந்து துளங்காது இருந்திடில்
குக்குட ஆசனம் கொள்ளலும் ஆமே.

ஒக்க [1]வடியிணை யூருவி லேறிட்டு
முக்கி யுடலை முழங்கை களிலேற்றித்[2]
[3]தொக்க வறிந்து துளங்கா திருந்திடிற்
குக்குட வாசனங் கொள்ளலு மாமே. (3)

வேறு பாடம்: வடியினை (அ) I; 2. தனிலேற்றி (அ) IV; 3. தொக்கத் திறந்து (அ) IV.

கருத்து: மயூராசன விளக்கம்

ஊரு - தொடை. துளங்காது - அசையாமல். குக்குடம் - கோழி; மயில்.

சிங்க இருக்கை

555. பாதம் முழந்தாளில் பாணிகளை நீட்டி
ஆதரவோடும் வாய் அங்காந்து அழகுறக்
கோது இல் நயனம் கொடி மூக்கிலே உறச்
சீர்திகழ் சிங்காதனம் எனச் செப்புமே.

பாத முழந்தாளிற் பாணி களைநீட்டி
யாதர வோடும்வா யங்காந் தழகுறக்
கோதி னயனங் கொடிமூக்கி லேயுறச்
சீர்திகழ் சிங்கா தனமெனச் செப்புமே' (4)

வேறு பாடம்: செய்யுமே (ஆ) IV; தனமெனலாகுமே (ஈ இ) IV.

கருத்து: சிங்க வாசன விளக்கம்.

பாணிகள் - கைகள். கொடி மூக்கு - மூக்கு நுனி.

556. பத்திரங் கோமுகம் பங்கயங் கேசரி
சொத்திகம் வீரம் சுகாதன மோரேழு
முத்தம மாமுது வாசன மெட்டெட்டுப்
பத்தொடு நூறு பல்லா சனங்களே. (அ, ஊ)

பிராணாயாமம்

உயிரின் வாகனம்

557. ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக் கொண்டு ஏறும் புரவி மற்று ஒன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்கும்; கொடாது போய்ப்
பொய்யரைத் துள்ளி விழுத்திடும் தானே.

ஐவர்க்கு நாயக னவ்வூர்த் தலைமக
னுய்யக்கொண் டேறும் [1]புரவிமற் றொன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்குங் கொடாது போய்ப்[2]
பொய்யரைத் துள்ளி [3]விழுத்திடுந் தானே. (1)

வேறு பாடம்: 1. குதிரைமற் (சண்) 2. கொடாதே (அ ஒ) I கொடாதது (ஈ) III. 3. விழுக்கிடுந் (ஈ ஒ) விழுகடுந் (அ ஒ) விழுந்திடுந் (ஊ) I.

கருத்து: ஐம்பொறிகளுக்கு நாயகனும் உடம்பில் இருப்பவனுமாகிய உயிர் செலுத்தும் மூச்சாகிய குதிரை உண்டு. அஃது உண்மையான வரை ஏற்றிக் கொள்ளும். பொய்யரைத் தள்ளும்.

ஐவர் - ஐம் பொறிகள். நாயகன் - தலைவன்; உயிர். புரவி - குதிரை. மூச்சைக் குதிரை என்றல் யோகநூல் மரபு. மெய்யர் - உண்மையிலே நாட்டம் வைத்தவர்.

குதிரை செலுத்துவீரா?

558. ஆரியன் நல்ல குதிரை இரண்டு உண்டு,
வீசிப் பிடிக்கும் விரகு அறிவார் இல்லை
கூரிய நாதன் குருவின் அருள் பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படும் தானே.

ஆரிய [1]னல்ல குதிரை யிரண்டுண்டு
வீசிப் பிடிக்கும் விரகறி வாரில்லை
கூரிய நாதன் குருவி னருள் பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படுந் தானே. (2)

வேறு பாடம்: 1. னல்லன் (எ) I இதனை அல்லன் என்றும் நல்லன் என்றும் பிரித்துப் பொருள் கொள்கின்றனர். அவ்விரண்டு உரையும் பொருந்தா.

கருத்து: உயிரின் நல்ல குதிரை இரண்டு. அதைப் பிடிக்கும் தந்திரம் அறிந்தவர் இல்லை. குருவின் அருள் பெற்றால் வசப்படுத்தலாம்.

ஆரியன் - மேலோன்; உயிர். அவனுக்கு உரிமையான நல்ல குதிரை என்க. விரகு - தந்திரம்.

559. புள்ளினு மிக்க புரவியை மேல்கொண்டாற்
கள்ளுண்ண வேண்டா தானே களிதருந்
துள்ளி நடப்பிக்குஞ் சோம்பு தவிர்ப்பிக்கு
முள்ளது சொன்னோ முணர்வுடை யோர்க்கே. (க, ட)

மூச்சும் மனமும்

560. பிராணன் மனத்தொடும் பேராது அடங்கிப்
பிராணன் இருக்கின் பிறப்பு இறப்பு இல்லை;
பிராணன் மடைமாறிப் பேச்சு அறுவித்துப்
பிராணன் அடைவே பேறு உண்டிடீரே.

பிராணன் மனத்தொடும் பேரா தடங்கிப்[1]
பிராண னிருக்கிற் பிறப்பிறப் பில்லை
பிராணன் மடைமாறிப் [2]பேச்சறு வித்துப்
பிராண [3]னடைவே பேறுண்டி டீரே. (4)

வேறு பாடம்: 1. தடக்கிப் (ஆ இ எ) I. 2. பேச்சறிவித்துப் (அ. சுவ) (பா 3) (சண்) V. 3. னடைபேறு பெற்றுண்டி ரீரே (இ ஈ) I (பா 3) னடை பேறும் பெற்றுண்டி நீரே (அ) I; னடை பேறு பெற்றுண்டிடீரே (ஓ) I; னடைபேறு பெற்றுண்டீரே (சண்) (சங்); பெற்றுண்டீர் நீரே (துடி).

கருத்து: உயிராற்றல் மூச்சுக் காற்றுடனும் மனத்துடனும் பல வழியில் செல்லாமல் அடங்கினால் நிலைபேற்றை அடையும். பின் பிறப்பு இறப்புக்கள் இல்லை. ஆகவே மூச்சுக் காற்றை வழிமாற்றிச் சுழுமுனை நாடியில் செலுத்தி மௌன நிலையை எய்தி, உயிர் முறையாகப் பெறும் பேற்றினைப் பெற்று நுகர்வீராக.

குறிப்பு: எல்லாச் சுவடிகளிலும் 3 ஆம் அடியில் "பேச்சறிவித்து" என உள்ள பாடம் இப்பதிப்பில் பொருட்பொருத்தம் நோக்கிப் "பேச்சறுவித்து" எனத் திருத்தப்பட்டது. தருமபுரப் பதிப்பு உரையும் இப்பொருளே கொள்கின்றது.

561. ஏறுதல் பூரக மீரெட்டு வாமத்தா
லாறுதல் கும்பக மறுபத்து நாலதி
லூறுதன் முப்பத் திரண்டதி ரேசக
மாறுத லொன்றின்கண் வஞ்சக மாமே. (ட, ஔ)

இளமை நிலைக்கும்

562. வளியினை வாங்கி [1]வயத்தி லடக்கிற்
[2]பளிங்கொத்த காயம் பழுக்கினும் பிஞ்சாந்
தெளியக் குருவின் றிருவருள் பெற்றால்
[3]வளியனும் [4]வெட்ட [5]வெளியனு மாமே. (6)

வேறு பாடம்: 1. வயிற்றி (ஈ ஊ ஓ) (பா 3) III. 2. பளிங்கொத்துக் (எ) (பா 3) IV. 3. வளியதும் (அ); வளியினும் (எ); வளியெனும் (ஓ) (பா 3) I. 4. வேட்டு (அ ஈ எ ஓ) (பா 3) 5. வளியது (அ); வளியனு (ஆ இ ஈ எ ஓ) I.

கருத்து: மூச்சை இழுத்து வலிமையால் கும்பகம் செய்தால் (உள்ளே நிறுத்தினால்) உடல் முதுமையிலும் இளமையாய், பளிங்கு போல்

இருக்கும். குருவின் மூலம் கற்று இப்பிராணாயாமத்தைச் செய்தால், உயிர் பரமாகாயத்தின் அனுபவத்தையும் பெறும். (இந்நூலில் கேசரி யோகம் என்னும் இயல் காண்க.)

குறிப்பு: 4 ஆம் அடியில் 2, 3 ஆம் சீர்களுக்குச் சுவடிகளில் கண்ட பாடம் பொருந்தவில்லை. ஆதலின் (விசு) பதிப்பில் பாடவேறுபாடாகக் காட்டப்பட்டுள்ளதும், தருமபுரப்பதிப்பில் கொள்ளப்பட்டதுமான பாடம் இப்பதிப்பிலும் கொள்ளப்பட்டது.

வளி - காற்று. வயத்தில் அடக்கில் - வலிமையால் வசப்படுத்தினால். பழுக்கினும் பிஞ்சாம் - முதுமையடையினும் இளமையாக இருக்கும். வளியன் - உயிர். வெட்டவெளி - பரமாகாயம்.

மூச்சு விடும் முறை

563. எங்கே இருக்கினும் பூரி இடத்திலே
அங்கே அது செய்ய ஆக்கைக்கு அழிவு இல்லை;
அங்கே பிடித்து, அதுவிட்டு, அளவும் செல்ல,
சங்கே குறிக்கத் தலைவனும் ஆமே.

எங்கே [1]யிருக்கினும் பூரி யிடத்திலே
யங்கே [2]யதுசெய்ய வாக்கைக் கழிவில்லை
யங்கே பிடித்தது [3]விட்டள வுஞ்செல்லச்
சங்கே குறிக்கத் தலைவனு மாமே. (7)

வேறு பாடம்: 1. யியங்கினும் (மு) 2. யிது செய்ய (ஆ) I; யதுசெய்கை யார்க்குமரிதன்று (மு) 3. வீட்டள (அ ஆ இ ஈ) (பா 3); வீடள (ஓ) I; பிடித்திட்டி லாடத்திலே செல (மு).

கருத்து: எங்கே எந்நிலையில் (எந்த ஆசனத்தில்) இருந்தாலும், இட மூக்கின் வழியே மூச்சை இழுத்தால் உடம்பு கேடுறாது. மூச்சை இழுப்பதும், உள்ளே நிறுத்துவதும், வெளியே விடுவதும் அளவறிந்து செய்தால், தொண்டையில் சங்கின் ஓசை கேட்கும்.

சங்கு, வெற்றிச் சங்குமாகும். அது யோகத்தின் வெற்றியைக் காட்டும். வெற்றியாவது, குண்டலிசத்தி அருட்சத்தியாதல்.

எவ்வளவு நேரம்?

564. ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரிக்குங்[1]
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை [2]யுதைக்குங் குறியது வாமே. (8)

வேறு பாடம்: 1. பூரித்துக் (இஓ) IV; 2. யுதைத்ததோர் கோலமதாகுமே (ஆ ஊ) IV.

கருத்து: இழுப்பதும் விடுவதுமாக இரண்டு முறை இயக்கும் மூச்சை உள்ளே நிறுத்தும் கால அளவைப் பலர் அறியார். அதையறிந்தோர் இயமனை வெல்லலாம்.

இருகால்-இரண்டுமுறை; பூரிக்கும் - இயக்கும்; பிடித்தல்-வசப் படுத்துதல்; கூற்று - இயமன். உதைக்கும் குறி. வெல்வதற்கான அடையாளம்.

எந்த முறையில்?

565. மேல், கீழ், நடுப்பக்கம் மிக்கு உறப் பூரித்துப்
பாலாம் இரேசகத்தால் உட்பதிவித்து
மாலாகி உந்தியுள் கும்பித்து வாங்கவே
ஆலாலம் உண்டான் அருள்பெறலாமே.

மேல்கீழ் நடுப்பக்க மிக்குறப் பூரித்துப்
பாலாமி ரேசகத் தாலுட் பதிவித்து
மாலாகி யுந்தியுட் கும்பித்து வாங்கவே
யாலால முண்டா னருள்பெற லாமே. (9)

கருத்து: மூச்சை இழுக்கும் பொழுது தொண்டை, இருதயம், வயிறு ஆகியவை பருக்க வேண்டும். அதை விடும்பொழுது இவை உள்ளடங்கியிருக்க வேண்டும். இரண்டுக்கும் இடையில் மூச்சை உள்ளே நிறுத்த வேண்டும். இங்ஙனம் செய்தால் சிவனது அருளைப் பெறலாம்.

பாலாம் - பகுதி யாகிய; கும்பித்து - அடக்கி. ஆலாலம் - பாற்கடலில் எழுந்த நஞ்சு.

கணக்கு அறிக

566. வாமத்தில் ஈரெட்டு மாத்திரை பூரித்தே
ஏம்-உற்ற முப்பத்திரண்டும் இரேசித்துக்
காமுற்ற பிங்கலை கண்ணாக இவ்விரண்டு
ஓமத்தால் எட்டெட்டுக் கும்பிக்க உண்மையே.

வாமத்தி லீரெட்டு மாத்திரை பூரித்தே
யேமுற்ற முப்பத் திரண்டு மிரேசித்துக்
காமுற்ற [1]பிங்கலை கண்ணாக வ்விரண்[2]
டோமத்தா லெட்டெட்டுக் கும்பிக்க வுண்மையே[3]. (10)

வேறு பாடம்: 1. பிங்கலைக் கண்ணாக (ஒ) I. 2. வவ்விரண்டு (ஒ) I. 3. கும்பிப்ப துண்மையே (ஆ) IV.

கருத்து: இடமூக்கில் 16 மாத்திரை நேரம் உள்ளிழுத்து, மூலக் கனலை எழுப்பும் வகையாக, 64 மாத்திரை உள்ளே நிறுத்தி, வலமூக்கின் வழியாக 32 மாத்திரை வெளிவிட்டால், இது சிறந்த பிராணாயாமம் ஆகும்.

வாமம் - இட மூக்கு, பிங்கலை - வலப்பக்கத்து நாடி; வலமூக்கு. கண் ஆக - வழியாக. இவ்விரண்டு - பூரகம், இரேசகம். ஓமம் - மூலாக்கினி.

மூச்சு இயக்கத்தின் தன்மை

567. இட்ட தவிடு இளகாதே இரேசித்து,
புட்டிபடத் தச நாடியும் பூரித்து,
கொட்டிப் பிராணன் அபானனும் கும்பித்து
நட்டம் இருக்க நமன் இல்லை தானே.

இட்ட [1]தவிடிள காதே யிரேசித்துப்
புட்டி படத்தச நாடியும் பூரித்துக்
[2]கொட்டிப் பிராண னபானனுங் கும்பித்து
நட்ட மிருக்க நமனில்லை தானே. (11)

வேறு பாடம்: 1. இட்ட தவிடு இளகாதிரேசித்து (அ ஊ ஒ); இட்டதவ் வீடிளகா (எ) I; இட்ட தவிசோடிளகா (இ) II. 2. கொட்டிய (எ) II

கருத்து: மூச்சை உள்ளிழுக்கும் பொழுது உடம்பில் உள்ள 10 நாடிகளும் நிறைவாகக் கிளர்ச்சி பெற வேண்டும். வெளிவிடும்

பொழுது, மூக்கருகே கையில் ஒரு தவிடு வைத்தால், அது ஆடாமல் உள்ள அத்துணை மெதுவாக வெளிவிட வேண்டும். மூச்சினை நிறுத்தும் பொழுது, மேற்பக்கமாகவோ, கீழ்ப்பக்க மாகவோ அது சிறிதும் வெளியேறலாகாது. நிமிர்ந்திருந்து இவ்வாறு செய்ய இயமனை வெல்லலாம் .

இளகாது - அசையாமல். புட்டி - நிறைவு. கொட்டி - உள்ளே நிறைத்து, நட்டம் - நிமிர்ந்து. தசநாடி - பத்து நாடிகள்.

மூச்சு அடக்கினால் . . .

568. புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கினா[1]
லுறுப்புச் சிவக்கு முரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே. (12)

வேறு பாடம்: 1. மாக்கி (சண்)

கருத்து: உடம்பினுள் சென்று வெளிப்படும் மூச்சை, உள்ளே நிறுத்தித் தூயதாக்கினால் உடம்பு சிவக்கும். மயிர் கறுக்கும். உயிர் உடலைவிட்டுச் செல்லாது.

புறப்பட்டு - வெளியேறி. புக்கு - உள்ளே புகுந்து. நெறிப்பட-சுழுமுனை நாடியிலே செல்ல. புரிசடையோன் - உயிரின் உள் உறையும் சிவன். சீவனோடு சிவனும் செல்லான் என்க.

கனம் குறையாமல் இருந்தால்

569. கூடம் எடுத்துக் குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண்டு அங்குலம்;
நீடுவர் எண்விரல், கண்டிப்பர் நால் விரல்,
கூடிக் கொள்ளில் கோல அஞ்செழுத்து ஆமே.

கூட மெடுத்துக் குடிபுக்க மங்கைய
ரோடுவர் மீளுவர் பன்னிரண் டங்குல
நீடுவ ரெண்விரற் கண்டிப்பர் நால்விரற்
[1]கூடிக்கொள் ளிற்கோல வஞ்செழுத் தாமே[2]. (13)

வேறு பாடம்: 1. கூடிக் கொள்ளீர் (ஈ ஊ); கூடிக் கொள்வீர் (ஆ) I.
2. தாலே (ஓ); தானே (ஊ) II.

கருத்து: குழந்தை பிறந்த போது மூச்சின் கனம் 12 அங்குலமாக இருக்கும். பின்னர் அது 8 அங்குலமாகக் குறையும். இவ்வாறு குறையாமலிருப்பின், உடம்பு திருவைந்தெழுத்தின் வடிவமாகும்.

கூடம் - ஆட்டம் நிகழும் அரங்கம். மூச்சுக் காற்றின் கனம் 12 அங்குலம். நீடுவர் - முன்னே செல்வர். கண்டிப்பர் - குறைப்பர். கூடிக் கொள்ளின்- நான்கு அங்குலமும் குறைக்காமல் உடம்பில் சேருமாயின். திருவைந் தெழுத்தின் வடிவம் என்பது உடம்பே இறைவன் நடனமிட்டருளும் மன்றமாதல். "திருவம்பலச்சக்கரம்" என்னும் அதிகாரம் காண்க.

எப்பொழுதும் சுழுமுனையில்

570. பன்னிரண் [1]டானை பகலிர வுள்ளது
பன்னிரண் டானையைப் பாக னறிகிலன்[2]
பன்னிரண் டானையைப் பாக னறிந்தபின்
பன்னிரண் டானைக்குப் பகலிர வில்லையே. (14)

வேறு பாடம்: 1. டானைக்குப் (எ) IV. 2. அறிந்திலன் (அ ஆ ஊ) II.

கருத்து: பன்னிரண்டு அங்குலம் கனம் உள்ள மூச்சு, பகல், இரவு இருவேளையிலும் இடகலை, பிங்கலை நாடிகளில் மாறி மாறி இயங்கும். உயிர் அதையறியாது. அது மூச்சின் தன்மையை அறிந்து அதை வசப்படுத்திய பிறகு, அது சுழுமுனை நாடியில் இயங்கும்.

இடகலை பிங்கலை நாடிகள் இடமூக்கு, வலமூக்கு அல்ல. பாகன் - சீவன், உயிர். பன்னிரண்டு என்று மூச்சுக் காற்றின் கனத்தைக் குறிப்பிட்டாராதலின் 'உள்ளது' என ஒருமை கூறினார். அங்குலம் - ஒரு விரலின் கனம்.

பிரத்தியாகாரம்

இங்கே, இப்போதே!

571. கண்டு கண்டு உள்ளே கருத்து உற ஓங்கிடில்
கொண்டு கொண்டு உள்ளே குணம் பல காணலாம்;
பண்டு உகந்து எங்கும் பழமறை தேடியை
இன்று கண்டு இங்கே இருக்கலும் ஆமே.

கண்டுகண் டுள்ளே கருத்துற வோங்கிடிற்[1]
கொண்டுகொண் டுள்ளே குணம்பல காணலாம்
பண்டுகந் தெங்கும் பழமறை தேடியை
யின்றுகண் டிங்கே யிருக்கலு மாமே. (1)

வேறு பாடம்: 1. வாங்கிடிற் (இ) I; நோக்கிடிற் (ஆ) II வோங்கிட (ஊ) III.

கருத்து: சிந்தையின் மிக்க ஆழத்திலே, பின்னும் ஆழத்திலே இறையுணர்வை உணர்ந்து, (அதாவது) உணர்வு நிலைகளில் வளர்ந்து சென்றால், இறைவனைச் சோதியாகவே நமக்குள்ளே தாங்கி, நன்மை பலவும் பெறலாம். வேதம் பண்டுதொட்டுத் தேடும் அவனை இன்றே, இங்கே காணலாம். இறவாமல் இருக்கலாம்.

உள்ளே உள்ளே கண்டு என அடுக்கை மாற்றுக. கருத்து - உயிர் உணர்வு. ஓங்கிடில் - உயர்ந்தால்; சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பவை மேனிலைகளாக உயர்ந்தால். கொண்டு - இறை சோதியை உயிர் உணர்வில் தாங்கி. குணம் - அனுபூதி. தேடி - தேடப்பட்டவன்.

இறைவன் குடிவர

572. நாபிக்குக் கீழே பன்னிரண்டு அங்குலம்
தாபிக்கும் மந்திரம் தன்னை அறிகிலர்
தாபிக்கும் மந்திரம் தன்னை அறிந்தபின்
கூவிக்கொண்டு ஈசன் குடிபுகுந்தானே.

நாபிக்குக் கீழே பன்னிரண் டங்குலந்
தாபிக்கு மந்திரந் [1]தன்னை யறிகிலர்
தாபிக்கு மந்திரந் தன்னை யறிந்தபின்
கூவிக்கொண் டீசன் குடிபுகுந் தானே[2]. (2)

வேறு பாடம்: 1. தனையறி வாரிலை (இ) IV. 2. குடியிருந்தானே (அ) IV.

கருத்து: உந்திக்குக் கீழே 12 அங்குலத் தொலைவில் உள்ளது மூலாதாரம். அங்கு நிறுத்தித் தியானிக்கும் மந்திரத்தை மக்கள் அறியார். அதை அறிந்தால், இறைவன் நம் உடம்பினுள் குடிபுகுவான்.

நாபி - தொப்பூள். மூலாதாரத்தில் அதற்குரிய அதிதேவதையைத் தாபிக்க என்க. மந்திரம் என்றது பிராசாத மந்திரத்தை. (இம்மந்திரத் தைப் பின்னர் விளக்குவார்.)

குண்டலி சத்தி

573. மூலத்து இருவிரல் மேலுக்கு முன் நின்ற
பாலித்த யோனிக்கு இருவிரல் கீழ்நின்ற
கோலித்த குண்டலி; உள் எழு செஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால்விரல் கீழதே.

மூலத் திருவிரல் மேலுக்கு முன்னின்ற
பாலித்த யோனிக் கிருவிரற் கீழ்நின்ற
கோலித்த குண்டலி யுள்ளெழு செஞ்சுடர்[1]
ஞாலத்து நாபிக்கு நால்விரற் கீழதே[2]. (3)

வேறு பாடம்: 1. யுள்ளே யெழுஞ்சுடர் (ஆ ஊ); யுள்ளே செழுஞ்சுடர் (எ) II. 2. கீழே (திரு) (சண்)

கருத்து: மூலாதாரத்திற்கு இரண்டு விரற்கடை மேலும் குறிக்கு இரண்டு விரற்கடை கீழுமாக, சுருண்ட வடிவத்தில் ஒரு சுடர் உள்ளது. அது குண்டலி ஆகும். அஃது உந்திக்கு நான்கு விரற்கடை கீழ் உள்ளது.

மூலம் - மூலாதாரம். யோனி - பிறப்புக் குறி. கோலித்த - வட்டமான. குண்டலி என்ற பெயர் கொண்டு உள்ளே எழும் செஞ்சுடர் என்க.

பெரிய யோகம்

574. நாசிக்கு அதோமுகம் பன்னிரண்டு அங்குலம்
நீ சித்தம் வைத்து நினையவும் வல்லையேல்
மாசித்த மாயோகம் வந்து தலைப்பெய்யும்
தேகத்துக்கு என்றும் சிதைவு இல்லையாமே.

நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குல
[1]நீசித்தம் வைத்து [2]நினையவும் வல்லையேன்
[3]மாசித்த மாயோகம் வந்து தலைப்பெய்யுந்[4]
தேகத்துக் கென்றுஞ் சிதைவில்லை யாமே[5]. (4)

வேறு பாடம்: 1. நீர் சித்தம் (ஒ) I. 2. நினைவால் நினைந்திரு (இ); நினையவும் வல்லிரேன் (ஒ) IV நினைத்திரு நித்தலும் (சங்) 3. மாசித்தி (எ) IV; மாசற்ற (ஆ) II. 4. தலைப்பெய்துந் (சண்); வெளிப்படும் (சங்) 5. யாகுமே (அ ஆ ஈ ஊ எ) II; தானே (சங்)

கருத்து: மூக்கிற்குக் கீழ் 12 அங்குலத் தொலைவில் உள்ள நெஞ்சப் பகுதியில் 'அநாகதம்' என்னும் ஆதாரம் உள்ளது. அதில் சிந்தையை நிறுத்தினால், பெரிய யோக நிலை கை கூடும். உடம்பு அழியாது.

அதோமுகம் - கீழ்ப்பக்கம். தலைப் பெய்யும் - கை கூடும்.

ஒளிக்காட்சி

575. சோதி இரேகைச் சுடர்ஒளி தோன்றிடின்
கோதுஇல் பரானந்தம் என்றே குறிக்கொண்மின்;
நேர்திகழ் கண்டத்தே நீலஒளி எய்தில்
ஓதிய தன் உடல் உன்மத்தம் ஆமே.

சோதி யிரேகைச் சுடரொளி தோன்றிடிற்
கோதில் பரானந்த மென்றே குறிக்கொண்மின்
னேர்திகழ் கண்டத்தே [1]நீல வொளியெய்தி
[2]லோதிய தன்னுட லுன்மத்த மாமே. (5)

வேறு பாடம்: 1. நிலவொளி யெய்தினா (எ); நிலை வெளி சேயனா (ஆ) (ஈ) II; 2. லோதுவ துன்னுட (சண்)

கருத்து: மின்னற்கொடி போன்ற ஒளி யோகிக்குத் தோன்றினால் மேலான ஆனந்தம் விளையும். கழுத்தில் உள்ளதாகிய விசுத்தி என்ற ஆதாரத்தில் நீல ஒளி தோன்றினால் உடம்பு பெருங்களிப்புக்கு இடமாகும்.

இரேகை - மின்னற்கொடி. கண்டம் - கழுத்து; விசுத்தி என்ற ஆதாரம். இதனைச் சோதி என்பதன் முன்னும் கூட்டுக. உன்மத்தம் - வெறி; மகிழ்ச்சி மிகுதியால் உண்டாவது.

காலத்தை வெல்ல

576. மூலத் துவாரத்தை முக்காரம் இட்டிரு;
மேலைத் துவாரத்தின் மேல் மனம் வைத்திரு;
வேல் ஒத்த கண்ணை வெளியில் விழித்திரு;
காலத்தை வெல்லும் கருத்து-அது தானே.

மூலத் துவாரத்தை [1]முக்கார மிட்டிரு
மேலைத் துவாரத்தின் மேன்மனம் வைத்திரு
[2]வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லுங் கருத்தது தானே. (6)

வேறு பாடம்: 1. மொக்கார (சைவ) 2. மேலொத்த (அ) I.

கருத்து: அபான வாயு வெளியேறும் மலவழியை அடைக்க. தலையில் உள்ள பிரமரந்திரம் என்னும் வாயிலை நினைக்க. அகவெளியில் உணர்வைச் செலுத்துக. நீ காலத்தை வெல்லலாம்.

மூலத் துவாரம் - மூலாதாரத்தின் துவாரம். முக்காரம் இடுதல் - அடைத்தல். மேலைத்துவாரம் - உச்சந்தலையில் உள்ள பிரமரந்திரம். வெளி - ஆன்மஉணர்வு என்னும் வெளி; சிதாகாயம்.

குண்டலியை நினைக்க

577. எரு விடு வாசற்கு இருவிரல் மேலே,
கரு விடு வாசற்கு இருவிரல் கீழே
உரு இடும் சோதியை உள்க வல்லார்க்குக்
கரு இடும் சோதி கலந்து நின்றானே.

எருவிடு [1]வாசற் கிருவிரன் மேலே
கருவிடு [2]வாசற் கிருவிறற் கீழே
யுருவிடுஞ் சோதியை யுள்கவல் லார்க்குக்
கருவிடுஞ் சோதி கலந்துநின் றானே. (7)

வேறு பாடம்: 1. வாச லிருவிரன் (சண்) 2. வாசலிருவிரற் (சண்)

கருத்து: மூலாதாரத்தின் அருகில் உள்ள குண்டலி சத்தியைத் தியானிப்பவர்க்கு, இறைவன் அவர்தம் உணர்வில், உடம்பில் கலந்து காட்சியளிப்பான்.

எரு - மலம். கருவிடு வாசல் - குறி. இங்குக் குறிக்கப்பட்ட இடம் மூலாதாரம்.

உனக்குள்ளே பார்

578. ஒருக்கல் உபாதியை, ஒண்சோதி தன்னை,
பிரித்துணர் வந்த உபாதிப் பிரிவைக்
கரைத்து, உணர்வு உன்னல், கரைதல், உள் நோக்கல்
பிரத்தியாகாரப் பெருமையது ஆமே.

[1]ஒருக்க லுபாதியை யொண்சோதி தன்னைப்
பிரித்துணர் வந்த வுபாதிப் பிரிவைக்
கரைத்துணர் [2]வுன்னல் கரைதலுண் ணோக்கல்
பிரத்தியா காரப் பெருமைய தாமே. (8)

வேறு பாடம்: 1. ஒருக்கா (இ ஈ எ ஒ); ஒருக்காலும் பாதியை (ஆ); ஒருக்கலும் பாதியை (அ) I. 2. வுன்னலக் கண்ணினுண் (ஆ) IV.

கருத்து: மாயையின் வலிமையை ஒடுக்குதலும், சிவத்திலிருந்து உன்னைப் பிரித்துக் காணுமாறு செய்யும் தற்போதத்தைக் கரைப்பதும், அவனையே உணர்தலும், புலன்வழி நோக்காமல், உள்முகமாக நோக்குதலும் பிரத்தியாகாரமாகும்.

ஒருக்கல் - ஒடுக்குதல்; உபாதி - குற்றம்; இங்கு மாயை. சோதி - இறைவன்.

ஒரு வகைக் கும்பகம்

579. புறப்பட்ட வாயுப் புகா விடா வண்ணம்
திறப்பட்ட நிச்சயம் சேர்ந்து, உடன் நின்றால்;
உறப்பட்டு நின்றது உள்ளமும்; அங்கே
புறப்பட்டுப் போகான் பெருந்தகையோனே.

புறப்பட்ட வாயுப் [1]புகாவிடா வண்ணந்
[2]திறப்பட்ட நிச்சயஞ் சேர்ந்துட னின்றா
லுறப்பட்டு நின்றது வுள்ளமு மங்கே
புறப்பட்டுப் போகான் பெருந்தகை யோனே[3]. (9)

வேறு பாடம்: 1. புகவிடா (எ) IV. 2. திறப்பட (மு); திறப்பட்டு (சைவ) 3. யானே (சண்)

கருத்து: நிலையானதாகிய பரம்பொருளை உறுதியாகப் பற்றி, விடாமல் நின்றால் வெளியேறிய மூச்சுக் காற்று மீண்டும் உடம்பினுள் புகாது. (இது ஒரு வகைக் கும்பகம்) உயிருணர்வை எய்தலாம். இறைவன் இவ்வுணர்வில் என்றும் இருப்பான்.

கொண்டு கூட்டு: விடா வண்ணம் திறப்பட்ட நிச்சயம் சேர்ந்து உடன் நின்றால் புறப்பட்ட வாயுப் புகா எனக் கூட்டுக.

திரப்பட்ட என்பது எதுகை நோக்கித் திரிந்தது. திரம் - நிலை. வடசொல். நிச்சயம் - சத் என்ற பொருள். உறப்பட்டு - அடையப்பட்டு.

விருப்பும் இல்லை; வெறுப்பும் இல்லை

580. குறிப்பினின் உள்ளே குவலயம் தோன்றும்
வெறிப்பு இருள் நீங்கி விகிர்தனை நாடும்
சிறப்புஉறு சிந்தையைச் சிக்கென்று உணரில்
அறிப்பு உறு காட்சி அமரலும் ஆமே.

குறிப்பினி னுள்ளே குவலயந் தோன்றும்
[1]வெறுப்பிரு [2]ணீங்கி [3]விகிர்தனை நாடுஞ்
சிறப்புறு சிந்தையைச் [4]சிக்கென் றுணரி
லறிப்புறு காட்சி [5]யமரலு மாமே. (10)

வேறு பாடம்: 1. வெறுப்பட்டு (அ) IV. 2. னீக்கின் (பா 4) 3. விகிர்தனு நிற்குஞ் (பா 4) 4. சிக்கென நாட்டி (பா 4) 5. யமரரு (அ ஆ இ ஊ எ ஒ (பா 4) I.

கருத்து: நம் சிந்தையில் உலகம் - உலகு பற்றிய உண்மை-புலப்படும். வேண்டுதல், வேண்டாமை என்ற அறியாமை நீங்கப் பெற்று, இறைவனை ஆராயும் சிந்தையைப் பெறலாம். பதிஞானம் பெறலும் கூடும்.

குறிப்பு - சிந்தை. இருள் - அறியாமை. அறிப்பு - அறிதல். அமரல் - விரும்புதல்; தங்குதல்.

தாரணை

அகவொளி காண்க

581. கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணாத்தண்டு ஊடே வெளியுறத் தான் நோக்கி,
காணாக்கண், கேளாச் செவி என்று இருப்பார்க்கு
வாழ்நாள் அடைக்கும் வழி அதுவாமே.

கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணாத்தண் டூடே [1]வெளியுறத் தானோக்கிக்
காணாக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு
வாணா ளடைக்கும் வழியது வாமே. (1)

வேறு பாடம்: 1. வெறியுறத் (அ) I.

கருத்து: அபான வாயு வெளியேறாமல் தடுத்து, சிந்தையைச் சுழுமுனைப் பகுதியில் அமைந்த ஆதாரங்களில் நிறுத்தி, புருவமத்தியில், அகவெளியை நோக்கி, ஐம்புலன்கள் தாமாகவே அடங்கச் செய்தால், அது வாழ்நாள் இறப்பை நோக்கிச் செல்லாமல் தடுக்கும் வழியாகும்.

வீணாத்தண்டு - முதுகுத் தண்டு; சுழுமுனை நாடி. சுழுமுனை வழியாகப் புருவமத்திக்கு ஏறும் குண்டலி சத்தியால் தூண்டப்பெறும் உயிர் உணர்வால் சிதாகாயவெளியை உற்று நோக்க வேண்டும் என்க.

தலையில் நடனம்

582. மலை ஆர் சிரத்து இடை வான்நீர் அருவி
நிலை ஆரப் பாயும்; நெடுநாடி ஊடு போய்ச்
சிலைஆர் பொதுவில் திருநடம் ஆடும்
தொலையாத ஆனந்தச் சோதி கண்டேனே.

மலையார் சிரத்திடை [1]வானீ ரருவி
நிலையாரப் பாயு நெடுநாடி யூடுபோய்ச்
சிலையார் [2]பொதுவிற் றிருநட மாடுந்
தொலையாத வானந்தச் சோதிகண் டேனே. (2)

வேறு பாடம்: 1. வாய்நீ (ஆ) I. 2. பொதும்பில் (ஓ) IV.

கருத்து: மூலக் கனலைச் சுழுமுனை நாடியில் செலுத்தி, புருவ மத்தியில் நனவு நிலையில் உள்ள உணர்வை வலிமையுடையதாக்கி, சகஸ்ராரத்தில் நடனமாடும் இறைச் சோதியைக் கண்டேன்.

"நெடுநாடி ஊடுபோய்ச் சோதி கண்டேன்; சிரத்திடை வானீரருவி பாயும்" எனக் கொண்டுகூட்டுக. மலை - மேருமலை; உடம்பு. சிரம் - தலை. வான்நீர் - கங்கை; அமுதநீர். நெடு நாடி - சுழுமுனை. சிலை - ஒலி நாதம். பொது - சகஸ்ராரம்.

சிவ-சத்தி பீடம்

583. மேலை நிலத்தினாள் வேதகப் பெண்பிள்ளை;
மூல நிலத்தில் எழுகின்ற மூர்த்தியை
ஏல எழுப்பி இவளுடன் சந்திக்கப்
பாலனும் ஆவன் பராநந்தி ஆணையே.

மேலை நிலத்தினாள் வேதகப் பெண்பிள்ளை
மூல நிலத்தி லெழுகின்ற மூர்த்தியை
யேல வெழுப்பி [1]யிவளுடன் சந்திக்கப்
பாலனு மாவன் [2]பராநந்தி யாணையே. (3)

வேறு பாடம்: 1. யிருவருஞ் (ஆ) IV. 2. பார்நந்தி (சண்)

கருத்து: உடம்பைச் சாவாத உடம்பாக மாற்றும் பராசத்தி சகஸ்ராரத்தில் உள்ளாள். மூலாதாரத்தில் திருவைந்தெழுத்து மந்திரத்தால் சிவமூர்த்தியைத் தியானித்து, மூலக் கனலை எழுப்பி, உயிருணர்வால், சிவத்தையும் சத்தியையும் சகஸ்ராரத்தில் ஒருசேரக் கண்டால், இளமை பெறலாம். இது மேலான நந்தியின் ஆணை.

மேலைநிலம் - உடம்பின் மேல் புறம்; தலை. வேதகப் பெண்பிள்ளை - மாற்றத்தைச் செய்கின்ற சிற்சத்தி. மூலநிலம் - மூலாதாரம். மூர்த்தி - உயிராற்றல். குண்டலியுடன் சேரும் போது மூர்த்தி ஆகிறது. சந்திக்க - சந்திக்கச் செய்தால். செய்பவன் பாலனாவான் என்க.

இறங்காதே, ஏறு

584. கடைவாசலைக் கட்டிக் காலால் எழுப்பி
இடைவாசல் நோக்கி இனிது உள் இருத்தி
மடைவாயில் கொக்குப் போல் வந்து இருப்பார்க்கே
உடையாமல் ஊழி இருக்கலும் ஆமே.

கடைவாச லைக்கட்டிக் [1]காலா லெழுப்பி
யிடைவாச னோக்கி யினிதுள் ளிருத்தி
மடைவாயிற் கொக்குப்போல் [2]வந்திருப் பார்க்கே
[3]யுடையாம லூழி யிருக்கலு மாமே. (4)

வேறு பாடம்: 1. காலை (அ. எ ஒ) III. 2. வந்தித்திருப் பார்க் (ஆ ஊ எ ஒ) II; வந்தித்திருப்பா (சண்) 3. குடையாம (ஊ எ ஒ) II; கிடைவாரா தூழி (ஒ) IV; ருடையாம (சண்)

கருத்து: மலவழி அபான வாயு வெளியேறாது அடைத்து, பிராண வாயுவால் மூலக் கனலை மேலே ஏற்றி, புருவ மத்தியை நோக்கிச் செலுத்தி, தியானத்தில் ஆழ்ந்து, உயிருணர்வால் உணர்ந்து, இறைக் காட்சியைக் காண்பதற்குக் குளக்கரைக் கொக்குப் போல் காத்திருப்பவர்க்கு, இறவாமல் ஊழிக்காலம் இருத்தலும் கூடும்.

கடைவாசல் - மலவழி. காலால் - மூச்சுக் காற்றால்; எழுப்பி - மூலாக்கினியை மேலே எழுச் செய்து. இடை வாசல் - புருவமத்தி. இருத்தி - உயிர் உணர்வை இருத்தி.

மோனச் செல்வம்

585. வாய் திறவாதார் மனத்தில் ஓர் மாடு உண்டு;
வாய் திறப்பாரே வளி இட்டுப் பாய்ச்சுவர்;
வாய் திறவாதார் மதி இட்டு மூடுவர்
கோய் திறவாவிடில் கோழையும் ஆமே.

வாய்திற வாதார் மனத்திலோர் மாடுண்டு[1]
வாய்திறப் பாரே [2]வளியிட்டுப் பாய்ச்சுவர்
வாய்திற வாதார் மதியிட்டு மூடுவர்[3]
கோய்திற வாவிடிற் கோழையு மாமே. (5)

வேறு பாடம்: 1. பாடுண்டு (அ) I மாண்புண்டு (ஆ) IV. 2. வழியிட்டு (ஆ) I. 3. மூட்டுவர் (சண்) (விசு) (சைவ) (திரு) (த) (வ)

கருத்து: மோனம் காப்பவர் சிந்தையில் ஒரு செல்வம் உண்டு. ஆனால் பேசுபவர் தமது மூச்சை வீணாக்குவர். உயிரையும் சிறிது சிறிதாகப் போக்குவர். மோனம் காக்கும் யோகியர் தமது உடம்பின் சந்திர மண்டலத்தில் அமுதம் ஊறப்பெற்று, உயிரைப் பாதுகாப்பர். அவர்க்குச் சகஸ்ராரம் ஆகிய பேழை திறந்து அனுபவம் கிடைக்காது போதல் இல்லை.

மாடு - செல்வம். வளி - மூச்சுக் காற்று. இட்டு - வெளியே விட்டு. பாய்ச்சுவர் - உயிரை வெளியேற்றுவர். மதி இட்டு - சந்திர மண்டலத்து அமுதத்தை உணவாக அளித்து. மூடுவர் - பாதுகாப்பர். கோய் - செப்பு; சகஸ்ராரம். திறத்தல் - அனுபவம் வாய்த்தலுக்குக் குறியீடு.

வேகத்தைக் குறை; வாழ்நாள் நீளும்

586. கலந்த உயிருடன் காலம் அறியின்
கலந்த உயிர்-அது காலின் நெருக்கம்
கலந்த உயிர்-அது கால்-அது கட்டிக்
கலந்த உயிருடன் காலமும் நிற்குமே.

கலந்த வுயிருடன் கால மறியிற்
[1]கலந்த வுயிரது காலி னெருக்கங்[2]
கலந்த வுயிரது காலது கட்டிக்[3]
கலந்த [4]வுயிருடன் காலமு நிற்குமே. (6)

வேறு பாடம்: 1. கலந்தலையாது (திரு) (விசு) (சங்) 2. னருக்கங் (ஒ) IV. 3. காட்டிக் (அ ஈ ஊ ஒ) I; கட்டிற் (சைவ) 4. வுயிருடல் (சைவ) (வ) (த).

கருத்து: உயிருடன் வாழும் காலம் என்பதை ஆராய்ந்தால், அது மூச்சு இடைவிடாமல் இயங்குவதே ஆகும். மூச்சு இயக்கத்தின் வேகத்திற்கு ஏற்ப உயிர்வாழும் காலம் அமையும். காற்றைக் கும்பகம் செய்தால் வாழ்நாள் நீளும்.

உயிருடன் கலந்த காலம் என மாற்றுக. உடம்பில் உயிர் இருக்கும் காலம். கால் - மூச்சுக் காற்று. நெருக்கம் - மூச்சு இடைவிடாது இயங்குதல். கட்டி - கும்பகம் செய்து. கலந்த (நான்காம் அடி) - சிவானுபவம் பெற்ற.

சத்தி - சிவம் தங்கியிருப்பர்

587. **வாழலும் ஆம் பலகாலும்; மனத்திடைப்**
போழ்கின்ற வாயுப் புறம்படாப் பாய்ச்சு ஊறில்
ஏழு சாலேகம் இரண்டு பெருவாய்தல்
வாழி பெரியது ஓர் பள்ளியறையே.

வாழலு மாம்பல காலு மனத்திடைப்
[1]போழ்கின்ற வாயுப் [2]புறம்படாப் பாய்ச்சுறி
லேழுசா லேக மிரண்டு பெருவாய்தற்
பாழி பெரியதோர் பள்ளி யறையே[3]. (7)

வேறு பாடம்: 1. போகின்ற (அ ஆ ஈ) I. 2. புறப்பட்டு (ஆ) II புறம்படப் (அ ஈ ஊ) I. 3. யறையிலே (சண்)

கருத்து: எண்ணங்களை அலையச் செய்கின்ற மூச்சுக்காற்றை வெளியேற்றாமல், சுழுமுனைநாடி வழியே உடம்பின் உள்ளே இயக்கினால், ஏழு சாளரங்களும் இரண்டு வாயில்களும் கொண்ட, பாழாகும் உடம்பானது சத்தி சிவத்தின் பெரிய பன்னியறையாக மாறும். அதில் பல காலம் இன்பமாக வாழலாம்.

மனத்தை அடக்க

588. நிரம்பிய ஈரைந்தில் ஐந்து இவை போனால்
இரங்கி விழித்திருந்து என் செய்வை பேதாய்?
வரம்பினைக் கோலி வழி செய்குவார்க்குக்
குரங்கினைக் கோட்டைப் பொதியலும் ஆமே.

நிரம்பிய வீரைந்தி லைந்திவை போனா
லிரங்கி விழித்திருந் தென்செய்வை பேதாய்
[1]வரம்பினைக் கோலி வழிசெய்கு வார்க்குக்
குரங்கினைக் [2]கோட்டைப் பொதியலு மாமே. (8)

வேறுபாடல்: 1. வரம்பினுட் (எ) IV. 2. கொட்டை (சைவ) (வ)

கருத்து: ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5 ஆகப் பத்தினுள் ஞானேந்திரியம் ஐந்தும் செயலற்றால் யாது செய்வாய்? மூச்சுக் காற்று வீணானால் மனம் அலையும். அதனால் இந்திரியங்களும் வீணாகும். ஆகவே மூச்சு வேகத்திற்கு அளவு செய்தால் மனத்தை அடக்கலாம்.

589. முன்னை யிருந்தவ ரெல்லா முடிந்தனர்
பின்னை யிருந்தவர்க் கென்ன பிரமாண
முந்நூறு கோடி யுறுகதி பேசிடி
லென்ன மாயமிங் கிடிகரை நிற்குமே (உ, க, ட)

புலனடக்கம்

590. அரித்த உடலை ஐம்பூதத்தில் வைத்துப்
பொருத்த ஐம்பூதம் சத்தாதியில் போந்து
தெரித்த மனாதி சித்தாதியிற் செல்லத்
தரித்தது தாரணை தற்பரத்தோடே.

அரித்த வுடலையைம் பூதத்தில் வைத்துப்
பொருத்தவைம் [1]பூதஞ்சத் தாதியிற் போந்து
தெரித்த [2]மனாதிசித் தாதியிற் செல்லத்
தரித்தது தாரணை தற்பரத் தோடே. (9)

வேறு பாடம்: 1. பூதஞ்சித் (சண்) (சங்) 2. மனாதிசத் (சண்) (சங்)

கருத்து: புலன் இச்சை அரித்த உடலை ஐம்பூதங்களில் ஒடுக்கி, ஐம் பூதங்களை அவற்றின் தன் மாத்திரைகளான சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவற்றில் ஒடுக்கி, மனம் முதலிய அந்தக் கரணங்கள், சத்சித்ஆனந்தத்தில் ஒடுங்கத் தாரணை செய்தால், தற்பரத்தில் அனுபவம் பெறலாம்.

குறிப்பு: மூன்றாம் அடியில் 'சத்தாதியிற்' - என்றே எல்லாச் சுவடிகளிலும் பாடம் உள்ளது. தருமபுரப் பதிப்பில் 'சித்தாதி' என்று பாடம் கொள்ளப்பட்டுள்ளது. பொருள் நோக்கி இப்பதிப்பிலும் அப்பாடமே கொள்ளப்படுகிறது.

சத்த ஆதி - சத்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம்; சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புலன்கள்; தன் மாத்திரைகள். மனாதி - மனம், புத்தி, சித்தம், அகங்காரம். சித் ஆதி - சித்தும் சத்தும்; அறிவும் உண்மையும், உயிருணர்வும் இறைவனும் ஆக 15. இவற்றுடன் புருடன் சேர மொத்தம் 16.

தியானம்

சத்தி - சிவத் தியானம்

591. வரும் ஆதி ஈரெட்டுள் வந்த தியானம்
பொருவாத புந்தி புலன் போக மேவல்;
உருவாய சத்தி பரத்தியானம்; முன்னும்
குரு ஆர் சிவத்தியானம் யோகத்தில் கூறே.

வருமாதி யீரெட்டுள் வந்த தியானம்
பொருவாத புந்தி புலன் போக மேவ
லுருவாய சத்தி பரத்தியான முன்னுங்
[1]குருவார் சிவத்தியான [2]மியோகத்திற் கூறே. (1)

வேறு பாடம்: 1. குருவாய் (சண்) 2. யோகத்தின் (த)

கருத்து: 'அரித்த வுடல்' என்ற பாடலுள் (தாரணை 9) கூறப்பட்ட 16 தத்துவங்களின் அமைதியில் தியானம் அமையும். புத்தி, ஐம்புலன்கள் - இவற்றினை ஒடுக்கி இத்தியானத்தைச் செய்க. சத்தியையும் சிவத்தையும் தியானத்தில் நிறுத்துக.

வரும் - சொல்லப்பட்டு வரும் ஆதி - தத்துவம் 16. பொருவாத - நிகர் ஆகாத. புந்தி - புத்தி தத்துவம். மேவல் - உயிருணர்வினால் ஒன்றை

உணர்ந்து அந்த நிலையிலேயே நிற்றல். சத்தி தியானமும் சிவத்தியானமும் யோகத்தின் பகுதிகள் ஆகும்.

592. கண்ணாக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துட்
பண்ணாக்கி நின்ற பழம்பொரு ளொன்றுண்
டண்ணாக்கி னுள்ளே யகண்ட வொளிகாட்டிப்
பிண்ணாக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே. (ஞ)

உருவம் அற்ற தியானம்

593. ஒண்ணா நயனத்தில் உற்ற ஒளிதன்னைக்
கண் ஆரப் பார்த்துக் கலந்து அங்கு இருந்திடில்,
விண் ஆறு வந்து வெளி கண்டிட ஓடில்,
பண்ணாமல் நின்றது பார்க்கலும் ஆமே.

ஒண்ணா நயனத்தி லுற்ற வொளிதன்னைக்
கண்ணாரப் பார்த்துக் கலந்தங் கிருந்திடில்
விண்ணாறு வந்து வெளிகண் டிடவோடிற்[1]
பண்ணாம னின்றது பார்க்கலு மாமே. (2)

வேறு பாடம்: 1. டிடவோடிப் (அ எ) I.

கருத்து: புருவமத்தியில் தோன்றும் ஒளியை நன்கு பார்த்து, அதில் இலயித்து அந்த நிலையிலே இருந்தால்; ஆகாய கங்கை போன்ற அமுதம் தோன்றி, பரமாகாசக் காட்சி அனுபவத்துடன் கிடைக்கு மானால்; நிர்க்குண, அருவமாகிய சிவத்தைத் தரிசிக்கவும் கூடும்.

594. ஒருபொழு துன்னா ருடலோ டுயிரை
யொருபொழு துன்னா ருயிருட் சிவனை
யொருபொழு துன்னார் சிவனுறை சிந்தையை
யொருபொழு துன்னார் சந்திரப் பூவே. (ட)

மன விளக்கு

595. மனத்து விளக்கினை [1]மாண்பட வேற்றிச்
சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி[2]
யனைத்து விளக்குந் திரியொக்கத் தூண்ட
மனத்து விளக்கது மாயா விளக்கே. (3)

வேறு பாடம்: 1. மான்பட (எ) IV. 2. எருக்கி (த)

கருத்து: உயிருணர்வாகிய விளக்கை ஏற்றி, பிற உணர்ச்சிகளை எல்லாம் ஒடுக்கி, உட்புலன் ஐந்தும் ஆகிய விளக்குகளைத் தூண்டினால், உயிருணர்வு மேலும் சிறந்து நிலைபெறும்.

மாண் - சிறப்பு. நெருக்கி - தளர்வித்து. அனைத்து விளக்கும் - உட்புலன் அறிவு என்ற ஒளி. "ஒடுங்கா ஐம்புலன் உளத்தினும் உளவே" (பண்டார மும்மணிக்கோவை: 26) என்ற குமர குருபரர் வாக்குக் காண்க.

உணர்வு ஒன்ற வேண்டும்

596. எண்ணாயிரத் தாண்டு யோகம் இருப்பினும்
கண் ஆர் அமுதினைக் கண்டு அறிவார் இல்லை;
உள்நாடி, உள்ளே ஒளிபெற நோக்கினால்
கண்ணாடி போலக் கலந்து நின்றானே.

எண்ணா யிரத்தாண்டு யோக மிருப்பினுங்[1]
கண்ணா [2]ரமுதினைக் கண்டறி வாரில்லை
யுண்ணாடி யுள்ளே யொளிபெற நோக்கினாற்[3]
கண்ணாடி [4]போலக் கலந்துநின் றானே[5] (4)

வேறு பாடம்: 1. மிருக்கினுங் (எ) IV. 2. ரமுதனை (எ) IV. 3. நோக்கிடிற் (ஒ) IV நோக்கிற் (சண்) 4. போலே (சண்) 5. கலந்து நிற்பானே (இ) IV; கலந்திருந்தானே (சண்)

கருத்து: வெற்று யோகத்தால் பயனில்லை. உயிருணர்வு பெற்று, அதில் ஒளியேற்றினால் கண்ணாடியில் தெரியும் சாயை போல, இறைவன் சோதியாக நமது புருவமத்தியில் இருப்பதைக் காணலாம். அதுபோல நம் உணர்வும் அவனிடம் கலந்து, வேறின்றி உணரும். அதாவது 'நான் சிவம்' என்று உணரும்.

கண் ஆர் அமுது - கண்ணுக்கு நிறைந்த விருந்து. உள்ளே - புருவ மத்தி யில். கண்ணாடியில் தோன்றும் நிழல், உருவத்தினின்றும் வேறாகாதது போல, சிவன் உயிரினின்றும் வேறாகாமற் கலந்து நிற்பான்.

சிவமாதல்

597. நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை; மனைக்கும் அழிவுஇல்லை;
ஓட்டமும் இல்லை; உணர்வு இல்லை; தான் இல்லை;
தேட்டமும் இல்லை; சிவன் - அவன் ஆமே.

நாட்ட மிரண்டு நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமு மில்லை மனைக்கு மழிவில்லை
யோட்டமு மில்லை யுணர்வில்லை தானில்லை
தேட்டமு மில்லை சிவனவ னாமே. (5)

கருத்து: கண்பார்வையைப் புருவ மத்தியில் வைத்தால் உடல் தளராது. இறவாது. உண்மை காண எங்கும் போக வேண்டாம். மனவுணர்வு ஒடுங்கும். தற்போதம் கரையும். இறைவனைத் தேட வேண்டாம். உயிரே சிவம் ஆகும்.

நாட்டம் - பார்வை. நடு மூக்கு என்பதால் புருவ மத்தியைக் குறிப்பித்தார். உணர்வு - மன உணர்வு. தான் - ஆன்ம போதம். தேட்டம் - தேட வேண்டிய வேறு பொருள். அகமுக நாட்டம் அன்றிப் புறமுகச் சிந்தனை இல்லை என்றார்.

598. நயன மிரண்டு நாசிமேல் வைத்திட்
டுயர்வெழா வாயுவை யுள்ளே யடக்கித்
துயரற நாடியே தூங்கவல் லார்க்குப்
பயனிது காயம் பயமில்லை தானே. (அ, ஆ)

உள்ளோசை

599. மணிகடல் யானை வளர்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபேரிகை யாழ்
தணிந்தெழு நாதங்கள் தாம் இவை பத்தும்
பணிந்தவர்க்கு அல்லது பார்க்க ஒண்ணாதே.

மணிகடல் யானை [1]வளர்குழன் மேக
மணிவண்டு தும்பி [2]வளைபே ரிகையாழ்
தணிந்தெழு நாதங்க டாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்கவொண் ணாதே. (6)

வேறு பாடம்: 1. வார்குழன் (அ) II. 2. யாழோசை பேரிகை (ஆ) IV.
கருத்து: இவை யோகி தன்னுள் கேட்கும் நாதம்.
குழல் - புல்லாங்குழல். பார்க்க - அறிய.

600. கடலொடு மேகங் களிறொடு மோசை
யடலொடு மவ்வினை யண்டரண் டத்துச்
சுடர்மணி வேணுச் சுரிசங்கி னோசை
திடமறி யோகிக்கல் லாற்றெரி யாதே. (அ, க)

ஓசை எல்லாம் ஓங்காரமே

601. ஈசன் இயல்பும் இமையவர் ஈட்டமும்
பாசம் இயங்கப் பரிந்து உயிராய் நிற்கும்
ஓசை; அதன்மணம் போல விடுவது ஓர்
ஓசையாம், ஈசன் உணர வல்லார்க்கே.

ஈச னியல்பு மிமையவ ரீட்டமும்
பாச [1]மியங்கப் பரிந்துயி ராய்நிற்கு
மோசை யதன்மணம் போல விடுவதோ
[2]ரோசையா மீச னுணரவல் லார்க்கே[3]. (7)

வேறு பாடம்: 1.மிரங்கப் (எ) IV; மியங்கும் (அ ஆ இ ஊ ஒ) II; மிறங்கப் (துடி) 2. ரோசையு (சண்) 3. லாருக்கே (சண்) (சங்)

கருத்து: தியான யோகத்தால் இறைவனை உணரவல்லவர்க்கு, ஆணவ மலம் இயங்கிக் கொண்டுள்ள நிலையில், உயிர் வாழ்க்கை வாழும் பொழுது கேட்கும் ஓசைகள், சொல்லொலி, வெற்றோசைகள் முதலியவை மட்டும் அல்ல. இறைவனது திருமேனியும் தேவர்களின் கூட்டங்களும் நாததத்துவத்தில் அடங்கும். பூவின் மணம் போல ஓசைகளில் நாதம் (பிரணவம்) உள்ளது. "ஈசன் இயல்பாயும் இமையவர் கூட்டமாயும் உயிராயும் நிற்கும் ஓசையாம்," எனக் கூட்டுக. அவ்வோசையை யோகி கேட்பான்.

ஓங்கார முடிவில்

602. நாத முடிவிலே நல்லாள் இருப்பது;
நாத முடிவில் நல் யோகம் இருப்பது;
நாத முடிவிலே நாட்டம் இருப்பது;
நாத முடிவிலே நஞ்சு உண்ட கண்டனே.

நாத [1]முடிவிலே நல்லா ளிருப்பது
நாத [2]முடிவினல் [3]யோக மிருப்பது
நாத முடிவிலே நாட்ட மிருப்பது
நாத முடிவிலே நஞ்சுண்ட கண்டனே. (8)

வேறு பாடம்: 1. முடியிலே (சண்) 2. முடிவிலே (சண்) 3. யோகி;(ஆ) IV.

கருத்து: நாததத்துவம் முடியும் இடம் பரம். அங்கு பராசத்தியும் பரசிவமும் உள்ளனர். அவரைக் காண்பதே யோகியின் குறிக்கோள். அவரை அடையும் சாதனமே யோகம்.

நல்லாள் - பராசத்தி. நாதம் - சுத்த தத்துவம் ஐந்தனுள் முடிவானது. நாட்டம் - நோக்கம்.

கனல் குளிரும்

603. உதிக்கின்ற ஆறினும் உள் அங்கி ஐந்தும்
துதிக்கின்ற தேசு உடைத் தூங்கு இருள் நீங்கி
அதிக்கின்ற ஐவருள் நாதம் ஒடுங்கக்
கதிக்கொன்றை ஈசன் கழல் சேரல் ஆமே.

உதிக்கின்ற வாறினு முள்ளங்கி யைந்துந்
துதிக்கின்ற தேசுடைத் தூங்கிரு ணீங்கி
யதிக்கின்ற வைவரு ணாத மொடுங்கக்
கதிக்கொன்றை யீசன் கழல்சேர லாமே. (9)

கருத்து: ஆறு ஆதாரங்களுள் முதல் ஐந்தில் மூல அக்கினி பொருந்தி, தீயாகவே இருக்கும்; ஆறாவது ஆதாரமாகிய ஆக்ஞையில் குளிரும். ஒளி மயமாய் விளங்கும். சுத்த மாயா தத்துவ இறைவடிவங்கள் ஐந்தனுள் இறுதியாகிய நாதம் பராசத்தியுள் ஒடுங்க, உயிர் சிவனோடு கூடும்.

அதித்தல் - மேலாதல்.

எப்போதும் ஒளி

604. பள்ளி யறையில் பகலே, இருள் இல்லை;
கொள்ளி அறையில் கொளுந்தாமல் காக்கலாம்;
ஒள்ளிது அறியில் ஓர் ஓசனை நீளிது
வெள்ளி அறையில் விடிவு இல்லை தானே.

பள்ளி யறையிற் பகலே யிருளில்லை
கொள்ளி யறையிற் [1]கொளுந்தாமற் காக்கலா
மொள்ளி [2]தறியிலோ ரோசனை நீளிது
வெள்ளி யறையில் விடிவில்லை தானே. (10)

வேறு பாடம்: 1. கொளுத்தாமற் (ஆ) I. 2. தறையி (இ ஈ ஓ) III.

கருத்து: முழுத்தியான நிலையை எய்திய இடத்தில் ஒளி தரிசனம் ஆவதால் பகலே; இருள்இல்லை. மரணம் உறுதலும், கொள்ளி கொளுத்துதலும் செய்யாமல் உடம்பைச் காக்கலாம். இதனை மெய்யுணர்வுடன் நோக்கினால் அக்காட்சி நீண்டு நிற்கும். அது பரவெளி. அங்கு இரவும் இல்லை; விடிவும் இல்லை.

அறையில் வெள்ளி என மாற்றுக. வெளி, வெள்ளி என விரிந்தது. அறையில் வெளி - உடம்பில் இருந்தவாறே காணும் வெளி. உண்மையைக் கூறினால், இது பரவெளி யாகும் எனவும் பொருள்படும்.

இரவு - இருள்; ஆணவ மலம். விடிவு - முடிவு.

மூன்று மண்டலம்

605. கொண்ட விரதம் குறையாமல் தான் ஒன்றி,
தண்டுடன் ஓடித் தலைப்பட்ட யோகிக்கு
மண்டலம் மூன்றினும் ஒக்க அளந்தபின்
பிண்டமும் ஊழி பிரியாது இருக்குமே.

கொண்ட விரதங் குறையாமற் றானொன்றித்[1]
தண்டுட னோடித் தலைப்பட்ட யோகிக்கு
மண்டல மூன்றினு மொக்க வளந்தபின்[2]
பிண்டமு மூழி பிரியா திருக்குமே. (11)

வேறு பாடம்: 1. றான் றோன்றித் (அ ஆ) II; றானேறி (ஊ) I. 2. வளர்ந்த பின் (ஆ எ) I.

கருத்து: தியானத்தில் மனம் ஒன்றி, சுழுமுனையில் மூலக்கனலைச் செலுத்தி, புருவமத்தியில் உயிருணர்வை விழித்தெழச் செய்த யோகி, தன் உடம்பில் அக்கினி மண்டலம், சூரியமண்டலம், சந்திர மண்டலம் என்ற மூன்றிலும் அனுபவம் பெறுவான். அவன் ஓர் ஊழிக்காலம் இறவாமல் இருப்பான்.

'தண்டுடன் ஓடி மண்டலம் மூன்றிலும் ஒக்க அளந்தபின் தலைப்பட்ட யோகிக்கு' எனக்கூட்டுக. பிண்டம் - உடம்பு.

மும்மூர்த்திகளும் கூடுவர்

606. அவ்வவர் மண்டலம் ஆம் பரிசு ஒன்று உண்டு;
அவ்வவர் மண்டலத்து அவ்வவர் தேவராம்;
அவ்வவர் மண்டலம் அவ்வவர்க்கே வரில்
அவ்வவர் மண்டலம் ஆயம் மற்றோர்க்கே.

அவ்வவர் மண்டல மாம்பரி சொன்றுண்டு
வவ்வவர் மண்டலத் தவ்வவர் தேவரா
மவ்வவர் மண்டல மவ்வவர்க் கேவரி
லவ்வவர் மண்டல மாயமற் றோர்க்கே. (12)

கருத்து: மூலக்கனல் மேலேறும் பொழுது, உடம்பில் உள்ள அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம் என்பவற்றில் அம்மண்டலங்களின் ஆற்றல் அக்கனலுடன் சேரும். இம்மண்டலங்கட்கு முறையே உருத்திரன், திருமால், பிரமன் ஆகியோர் தலைவர். இவரது ஆட்சி தத்தம் மண்டலத்தில் வந்தால், இவருள் ஒருவர் மற்றவர்க்குத் துணையாவார்.

ஆயம் - கூட்டம்; துணை.

புதிய நாள்

607. இளைக்கின்ற நெஞ்சத்து இருட்டறை யுள்ளே
முளைக்கின்ற மண்டலம் மூன்றினும் ஒன்றித்
துளைப் பெரும்பாசத்து உருவிடு மாகில்
இளைப்பு இன்றி மார்கழி ஏற்றம் - அது ஆமே.

இளைக்கின்ற நெஞ்சத் திருட்டறை யுள்ளே
முளைக்கின்ற மண்டல மூன்றினு மொன்றித்
துளைப்பெரும் [1]பாசத் துருவிடு மாகி
[2]லிளைப்பின்றி மார்கழி யேற்றம தாமே. (13)

வேறு பாடம்: 1. பாசந் (சைவ) 2. யிளைப்பின்றி (ஊ ஒ) I.

கருத்து: ஆசிரியர் யோகி உடம்பால் நன்மை பெறுதலையும் ஆணவ மலத்தை வெல்லுதலையும் ஒருங்கே கூறுகின்றார். மூலக்கனலாகிய உயிராற்றல் (Life - force) அக்கினி முதலிய மூன்று மண்டலங்களிலும் ஒன்றி, மேலேறி, அதே சமயம் உயிருணர்வு ஆணவ மலத்தை வென்று நிற்க, அதுவரை ஆணவமலத்தின் பிணிப்பால், உலகியலில் வந்த இன்ப துன்பங்களால் தளர்ந்துள்ள சிந்தை, அத்தளர்ச்சி நீங்கி, ஒரு புதிய நாளின் அருணோதயத்தைக் காணும்.

"அருணன் இந்திரன் திசை அணுகினன், இருள் போய் அகன்றது உதயம்" எனப்பாடுவர் மணிவாசகரும் (திருவா. திருப்பள்ளி. 2)

மனம் ஆணவமலத்தின் பிடிப்பில் நிற்றலால் அதை இருட்டறை என்றார். மண்டலம் மூன்று - அக்கினி, சூரியன், சந்திரன் என்ற மண்டலங்கள். பாசம் - ஆணவம். பாசத்தைத் துளையிட்டு உருவிடுமாகில் என்க. உயிர் உணர்வு அவ்வாறு உருவிச் செல்ல வேண்டும். மார்கழி மாதம் ஆணவ இருளின் நீக்கத்தைக் குறிப்பது.

சூரியன் சந்திரனோடு

608. முக்கணின் ஊடு உற வாயுவை மூலத்தே
சிக்கென மூடித் திரித்துப் பிடித்திட்டுத்
தக்க வலம் இடம் நாழிகை சாதிக்க,
வைக்கும் உயிர்நிலை வானவர் கோனே.

[1]முக்கணி னூடுற வாயுவை மூலத்தே
சிக்கென மூடித் [2]திரித்துப் பிடித்திட்டுத்[3]
தக்க வலமிட நாழிகை சாதிக்க
வைக்கு முயிர்நிலை வானவர் கோனே. (14)

வேறு பாடம்: 1. முக்கண்ண (ஆ); முக்கண்ணூடுற (ஊ ஒ) I; முக்குணமூடு (எ) II முக்கனலூடுற (அ) II முக்குண மூடற (சண்) (துடி) (சைவ)

குறிப்பு: அனைத்துச் சுவடிகளிலும் உள்ள பாடங்களும் பொருந்தில வாதலின் 'ஆ' - சுவடியைத் தழுவி "முக்கணினூடுற" என இப்பதிப்பில் திருத்தப்பட்டது. 2. திருத்திப் (ஆ) I. 3. பிரித்திட்டு (அஇ) I.

கருத்து: மலவழியை அபானன் வெளியேறாதபடி அடைத்து, மூச்சுக்காற்றைச் சுழுமுனை வழியாகச் செலுத்தி, ஒரு நாழிகை நேரம் சூரிய கலையைச் சந்திர கலையின் இடத்திற்குக் கொண்டுவந்தால் (இது தியானத்தால் இயலும்) சிவன் உயிரை அழியாமல் காப்பான்.

முக்கண் - வலக்கண், இடக்கண், புருவமத்தி. திரித்து - மாற்றி. பிடித்திட்டு - கும்பகம் செய்து. வைக்கும் - இறப்பு இல்லாமல் காப்பான். உயிர்நிலை - உடம்பு. மூலத்தே மூடி - கீழ்வழியை மூடி. சாதிக்க - மூச்சுவிடுதலைச் செய்ய.

தலைக்குள் செல்லும் உணர்வு

609. நடலித்த நாவுக்கு நால்விரல் மேலே
மடலித்த வாணிக்கு இருவிரல் உள்ளே
கடலித்து இருந்து கருதவல்லார்கள்
சடிலத் தலைவனைத் தாம் அறிந்தாரே.

[1]நடலித்த [2]நாவுக்கு நால்விரன் மேலே
மடலித்த வாணிக் கிருவிர லுள்ளே
[3]கடலித் திருந்து கருதவல் லார்கள்
[4]சடிலத் தலைவனைத் தாமறிந் தாரே. (15)

வேறு பாடம்: 1. நடலுற்ற (ஒ) III. 2. நாபிக்கு (ஆ இ ஈ எ) I. 3. கடலித்திருந்து (ஊ எ ஒ) I. 4. சடலத் (எ) I சடலைத் (இ ஈ உ ஊ) I; சுடலைத் (ஆ) III.

கருத்து: கேசரி யோகம் கூறுகிறார். நாக்கிற்கு நான்கு விரற்கடை மேலே, தொண்டைக்கு இரண்டு விரற்கடை உள்ளே இருக்கும் அண்ணாக்குத் துவாரம் வழியாக மூச்சுக் காற்றையும் உணர்வையும் செலுத்துவோர், சடைமுடியணிந்த சிவனைத் தரிசிப்பர்.

நடலித்த - நடலிட்ட என்பதன் மரூஉ. நடுதல் செய்த. சீர்பெற்ற எனலுமாம். இதனைச் செய்வது நாக்கு. வாணி - வாக்கு. இது தொண்டையைக் குறித்தது. இருவிரல் உள்ளே - அண்ணாக்கு. கடலித்து - செலுத்துவித்து; மூச்சுக் காற்றைச் செலுத்தி, அதன் மூலம் குண்டலி சத்தியைச் செலுத்தச் செய்து. சடிலம் - சடைமுடி. தொனியால் நமது தலையுச்சியையும் குறிக்கும்.

அருளின் வழியில்

610. அறிவாய், அசத்து என்னும் ஆறாறு அகன்று,
செறிவான மாயை சிதைத்து, அருளாலே
பிறியாத பேரருள் ஆயிடும் பெற்றி
நெறியான அன்பர் நிலையறிந்தாரே.

அறிவா யசத்தென்னு மாறா றகன்று
செறிவான மாயை சிதைத்தரு ளாலே
பிறியாத பேரரு ளாயிடும் பெற்றி
நெறியான [1]வன்பர் நிலையறிந் தாரே. (16)

வேறு பாடம்: 1. சீவன் பரநிலை தானே (ஆ) IV.

கருத்து: நெறிப்படி வாழும் அன்பர் அறிவு மயமாகி, சடப்பொருளாகிய 36 தத்துவங்களையும் கடந்து, மாயையை நீக்கி, அருள்வழிப்படும் தன்மையைப் பெறுவர்.

நெறியான அன்பர் பெற்றிநிலை அறிந்தாரே எனக் கூட்டுக.

சமாதி

அதுவாதல் எப்போது?

611. சமாதி யமாதியில் தான் செல்லக் கூடும்
சமாதி யமாதியில் தான் எட்டும் சித்தி
சமாதி யமாதியில் தங்கினார்க்கு அன்றோ
சமாதி யமாதி தலைப்படும் தானே.

சமாதி யமாதியிற் [1]றான்செல்லக் கூடுஞ்[2]
சமாதி யமாதியிற் [3]றானெட்டுஞ் சித்தி
சமாதி யமாதியிற் றங்கினார்க் கன்றோ[4]
சமாதி யமாதி தலைப்படுந் தானே. (1)

வேறு பாடம்: 1. றான் சொல்லக் (அ ஆ இ ஈ ஊ, எ ஒ) I. 2. கேட்கிற் (எ) IV. 3. தானெட்டுச் (சைவ) (துடி) 4. கன்றே (துடி)

கருத்து: இயமம் முதலிய ஏழையும் கடைப்பிடிப்பவர்க்கே சமாதி கைகூடும். அவரே அட்டமாசித்திகள் பெறுவர். சமாதியில் நெடிது நிற்பவர்க்கே அதன் முழுப் பயனும் எய்தும்.

விந்து- நாத ஒன்றிப்பு

612. விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடின்
சந்தியில் ஆன சமாதியில் கூடிடும்;
அந்தம் இலாத அறிவின் அரும்பொருட்
சுந்தரச் சோதியும் தோன்றிடும் தானே.

விந்துவு நாதமு மேருவி லோங்கிடிற்[1]
சந்தியி [2]லான சமாதியிற் கூடிடு
மந்த மிலாத வறிவி னரும்பொருட்[3]
சுந்தரச் சோதியுந் தோன்றிடுந் தானே. (2)

வேறு பாடம்: 1. பொங்கிடிற் (ஆ) IV. 2. லாத (ஆ) I. 3. னரும்பொருள் (சண்)

கருத்து: கேசரி யோகத்தில், விந்துவும் (ஒளியும்) நாதமும் (ஒலியும்) ஒன்றாகச் சகஸ்ராரத்தில் சிறப்புற்று நின்றால், சமாதி கைகூடும். இறைச்சோதி தோன்றும்.

மேரு - சகஸ்ராரம். சமாதியில் உயிர் கூடும் என்க. அரும்பொருள் - இறைவன். அறிவின் - ஞான வடிவான.

உச்சிக்கு மூச்சு

613. மன்மனம் எங்கு உண்டு, வாயுவும் அங்கு உண்டு;
மன்மனம் எங்கு இல்லை, வாயுவும் அங்கு இல்லை;
மன்மனத்துள்ளே மகிழ்ந்திருப் பாருக்கு
மன்மனத்துள்ளே மனோலயம் ஆமே.

மன்மன மெங்குண்டு வாயுவு மங்குண்டு
மன்மன மெங்கில்லை வாயுவு மங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பாருக்கு
மன்மனத் துள்ளே [1]மனோலய மாமே. (3)

வேறு பாடம்: 1. மனோமயமாமே (ஊ ஒ) III; மனோ மயனாமே (எ) I.

கருத்து: உயிருணர்வு எங்கெங்கு எட்டுமோ, அங்கெல்லாம் மூச்சுக் காற்றும் செல்லும். ஆகவே, அவ்வுணர்வினால் சகஸ்ராரத்தைத் தியானித்தால், கேசரியோகம் கைகூடி, மூச்சுக்காற்றும் உயிராற்றலும் அண்ணாக்கின் வழியே தலையுச்சிக்குச் செல்லும். இவ்வுணர்வால் மகிழ்ந்திருப்பவர்க்கு, மனம் இதனுடன் ஒன்றிவிடும்.

மனத்து உள்ளே - மனத்தை உயிர் உணர்வோடு ஒன்றவைத்து. எல்லா இடத்திலும் 'மன்மனம்' உயிருணர்வைக் குறிக்கும். மனோலயம் - மனம் ஒருங்குதல். மனத்தின் வழியே வாயு இயங்குதலைக் கூறினார்.

பரவெளி அனுபவம்

614. விண்டு அலர் கூபமும் விஞ்சத்து அடவியும்
கண்டு உணர்வாகக் கருதி இருப்பார்கள்;
செண்டு வெளியில் செழுங்கிரியத்திடைக்
கொண்டு குதிரைக் குசை செறுத்தானே.

விண்டலர் கூபமும் விஞ்சத் தடவியுங்
கண்டுணர் வாகக் கருதி யிருப்பார்கள்
[1]செண்டு வெளியிற் செழுங்கிரி யத்திடைக்
கொண்டு குதிரைக் [2]குசைசெறுத் தானே[3]. (4)

வேறு பாடம்: 1. சென்று (சண்) 2. குசை செகுத் (இ ஈ) I குசைச் செறுத் (சண்) 3. தாரே (திரு) (வ) (துடி).

கருத்து: உலகில் பிறர், மனம் என்ற குதிரையைப் பல இடங்களிலும் செலுத்தி, பாழ்கிணற்றையும் விந்திய மலையைச் சார்ந்த காட்டையும் கண்டு, அந்தக் காட்சி அனுபவமே உணர்வு எனக் கருதியிருப்பர். ஆனால் யோகியோ, நன்றாகக் குதிரை ஏற்றம் கற்ற வித்தகன் போல - மனம் என்ற குதிரையைத் தன் விருப்பப்படி தாக்கி, வித்தை காட்டும் செண்டுவெளியில் செலுத்தி ஓர் மலையின் உச்சிக்குச் சென்று, கயிற்றை இழுத்துப் பிடித்து, அக்குதிரையை நிறுத்தினான்.

செண்டுவெளி - நாதம் கடந்த வெளி. கிரி - சகஸ்ராரம். குசை - கயிறு.

ஆதாரந்தோறும் சமாதி

616. மண்டலம் ஐந்து, வரைகளும் ஈராறு,
கொண்டிட நிற்கும் குடிகளும் ஆறெண்மர்,
கண்டிட நிற்கும் கருத்து நடுவாக
உண்டு நிலாவிடும் ஓடும் பதத்தையே.

மண்டல மைந்து வரைகளு மீராறு
கொண்டிட நிற்குங் குடிகளு மாறெண்மர்[1]
கண்டிட நிற்குங் கருத்து நடுவாக
வுண்டு நிலாவிடு மோடும் பதத்தையே. (5)

வேறு பாடம்: 1. மற்றெண்மர் (ஆ) II.

கருத்து: உயிராகிய மன்னன் ஆளும் மண்டலங்கள் ஆகிய நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐந்தும் உடம்பில் உள்ளன. இவற்றில் உள்ள 12 கலைகள் ஆகிய மலைகளில் உயிராகிய மன்னன் அனுபவம் பெறலாம். உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களில் 48 அட்சர தேவதைகள் வாழ்கின்றனர். அவர்களே குடிகள். உயிராகிய மன்னன் அவர்களை வழிபட்டு, பின்பு எங்கும் வியாபகமாக உள்ள சிவத்தை அனுபவிப்பான்.

ஆதாரம் ஒவ்வொன்றிலும் சமாதி கூடுதல் இன்றியமையாதது என்கிறது இப்பாடல்.

வரைகள் ஈராறு - அகரம் முதல் உன்மனி வரை உள்ள சந்திர கலைகள் பன்னிரண்டு. ஓடும் பதத்தைக் கண்டிட நிற்கும் (ஆன்மா) என்க. ஓடும் பதம் - மேற்கூறிய வற்றில் உயிர்நாடியாக இழையும் பதம். இறைவன் திருவடி. இப்பாடலில், உயிர் என்பது தோன்றா எழுவாய்.

சகஸ்ரார சமாதி

617. பூட்டு ஒத்த மெய்யில் பொறிப்பட்ட வாயுவைத்
தேட்டு அற்ற அந்நிலம் சேரும்படி வைத்து
நாட்டத்தை மீட்டு நயனத்து இருப்பார்க்குத்
தோட்டத்து மாம்பழம் தூங்கலும் ஆமே.

[1]பூட்டொத்த மெய்யிற் [2]பொறிப்பட்ட வாயுவைத்
[3]தேட்டற்ற வந்நிலஞ் சேரும் படிவைத்து
நாட்டத்தை மீட்டு நயனத் திருப்பார்க்குத்
தோட்டத்து மாம்பழம் தூங்கலு மாமே. (6)

வேறு பாடம். 1. பூட்டற்ற (அ) IV; பூட்டொத்து (எ) I. 2. பொறிப்படா (இ) IV. 3. தேட்டுற்ற (அ) I.

கருத்து: கிணற்றில் தண்ணீர் இறைக்கும் ஏற்றத்தில் கயிறு மேலும் கீழுமாக இயங்குவது போல் உடம்பில் இயங்கும் மூச்சை, சகஸ்ராரத்தை எய்தும்படி செய்து, அலையும் பார்வையைப் புருவமத்தியில் நிறுத்துவோர்க்குச் சமாதி கைகூடி, சிவத்துடன் ஒன்றி நிற்கக் கூடும்.

பூட்டை - ஏற்றம். பொறிப்பட்ட - அடைபட்ட. தேட்டு - தேடுதல். அந்நிலம் - சகஸ்ராரம். மாம்பழம் சிவானுபவத்தைக் குறித்தது. நயனத்து இருத்தல் - உயிர் உணர்வை வலக்கண், இடக்கண், புருவ

மத்தி என்பவை கூடும் இடத்தில் இருத்துதல்; பின்பு அதன் வழியே சகஸ்ராரத்தில் இருத்துதல்.

பிறவி நீங்க

618. உரு அறியும் பரிசு ஒன்று உண்டு; வானோர்
கருவரை பற்றிக் கடைந்து அமுது உண்டார்;
அருவரை ஏறி அமுது உண்ணமாட்டார்
திரு வரையா மனம் தீர்ந்து அற்றவாறே.

உருவறி [1]யும்பரி சொன்றுண்டு வானோர்
கருவரை பற்றிக் கடைந்தமு துண்டா
ரருவரை யேறி யமுதுண்ண மாட்டார்
திருவரை யாமனந் [2]தீர்ந்தற்ற வாறே. (7)

வேறு பாடம்: 1. யும்படி (ஆ) I. 2. தீதற்ற (ஆ இ) II.

கருத்து: சிவபோகத்தை இலட்சியமாகக் கொள்ளுதலே மன ஒடுக்கத்திற்கும், மலத்தீர்வுக்கும், பிறவி அறுதலுக்கும் வழி. வானோர் அதைவிட்டுப் பாற்கடல் அமுது உண்டனர். ஆயினும் இறந்து போயினர்.

உரு - இறைவனது படிவம். பரிசு - தன்மை; வழி. கருவரை - மந்தரமலை. அருவரை - சகஸ்ராரம். மனம் திருவரையா தீர்ந்து அற்றவாறே எனக் கூட்டுக. திரு - சிவபோகம். வரையா - வரையாது; இலட்சியமாகக் கொள்ளாது.

உடம்பில் பொன்னம்பலம்

619. நம்பனை, ஆதியை, நான்மறை ஓதியைச்
செம்பொனின் உள்ளே திகழ்கின்ற சோதியை
அன்பினை ஆக்கி, அருத்தி ஒடுக்கிப் போய்க்
கொம்பு ஏறிக் கும்பிட்டுக் கூட்டம் இட்டாரே.

நம்பனை யாதியை நான்மறை யோதியைச்[1]
செம்பொனி னுள்ளே திகழ்கின்ற சோதியை
யன்பினை யாக்கி யருத்தியொ டுக்கிப்போய்க்
கொம்பேறிக் கும்பிட்டுக் கூட்டமிட் டாரே[2]. (8)

வேறு பாடம்: 1. யோகியை (ஆ) IV. 2. டானே (ஆ) II.

கருத்து: அன்பர் விரும்பத் தக்கவனும், படைப்பு முதல்வனும், வேதங்களால் புகழப்படுபவனும், உடம்பில் பொன்னம்பலம் எனப் படும் சகஸ்ராரத்தில் விளங்கும் சோதிவடிவனும் ஆகிய சிவபெரு மானைக் காண்பதற்காக, அவனுக்கு அன்பு செய்து, உலக ஆசையை ஒடுக்கி , தலையுச்சிக்கு ஏறி, தரிசித்து, அவனோடு கலந்தனர்.

செம்பொன் - பொன்னம்பலம். அருத்தி - ஆசை. கொம்பு - சகஸ்ராரம். கூட்டம் - நிட்டை கூடுதல். வானவர் செயலுக்கு மாறாக யோகியர் செயல் இருத்தலைக் கூறினார்.

நெற்றியில் சோதி

620. மூலத்து மேலது, முச்சதுரத்தது,
கால் அத்திசையில் கலக்கின்ற சந்தினில்
மேலைப் பிறையின் நிலநெற்றி நேர்நின்ற
கோலத்தின் கோலங்கள் வெவ்வேறு கொண்டதே.

மூலத்து மேலது முச்சது ரத்தது
[1]காலத் திசையிற் கலக்கின்ற சந்தினின்[2]
மேலைப் [3]பிறையின் [4]னிலநெற்றி நேர்நின்ற
கோலத்தின் கோலங்கள் வெவ்வேறு கொண்டதே. (9)

வேறு பாடம்: 1. காலொத் (விசு) 2. சந்தியின் (ஆ இ) IV சந்தினில் (சண்) 3. பிறையினின் (ஆ) I பிறையினுள் (எ) II. 4. நெற்றிநேர் (எ) II; நெற்றியின் (ஆ) II நிலாநெற்றி (ஓ) I; நெற்றிக்கு (த).

கருத்து: குண்டலிசத்தியின் உதவியால் மூலக்கனல், புருவமத்திக்குச் சென்று சோதி வீசுதலைக் கூறினார்.

மூலம் - மூலாதாரம். முச்சதுரம் - முக்கோணம்; இங்கு உள்ள குண்டலி சத்தி. கால் - மூச்சுக் காற்று. அத்திசை - மேல். சந்து - புழை; சுழுமுனை. பிறையின் நிலம் - சந்திர மண்டலம். கோலத்தின் - ஒளியின்.

சிவமயமாதல்

621. கற்பனை அற்றுக் கனல் வழியே சென்று
சிற்பனை, எல்லாம் சிருட்டித்த பேரொளிப்
பொற்பினை நாடிப் புணர்மதியோடு உற்றுத்
தற்பரமாகத் தகும் தண்சமாதியே.

கற்பனை யற்றுக் கனல்வழி யேசென்று
சிற்பனை யெல்லாஞ் சிருட்டித்த பேரொளிப்
பொற்பினை நாடிப் புணர்மதி யோடுற்றுத்
தற்பர மாகத் [1]தகுந்தண் சமாதியே. (10)

வேறு பாடம்: 1. தருதெண் (ஆ) IV.

கருத்து: எண்ண ஓட்டத்தை நிறுத்தி, மூலக்கனலின் வழியே (அதனுடன்) உயிருணர்வைச் சேர்த்துச் செலுத்தி, படைப்புத் தொழில் வல்லவனும், எல்லாவற்றையும் படைத்த பேரறிவு உடையவனும் ஆகிய சிவனைக் காண முயன்று, சந்திர மண்டலத்தில் (நெற்றி, தலைப் பகுதி) தானே பரம் என்ற நிலையில் உள்ள அவனோடு, அவன் மயமாய்க் கலந்து நிற்பதே சமாதி.

சிற்பன் - சிருட்டித்தொழில் வல்லவன். மதி - சந்திர மண்டலம். மதியோடு - சந்திரனின் கலைகளோடு. உற்று - உணர்ந்து, தரிசித்து. தற்பரமாக - ஆன்மா சிவமாம் தன்மை எய்துமாறு.

அருளறிவு

622. தலைப்பட்டு இருந்திடத் தத்துவம் கூடும்;
வலைப்பட்டு இருந்திடும் மாதுநல் லாளும்;
கொலைப்பட்டு இருந்திடும் கோபம் அகலும்;
துலைப்பட்டு இருந்தனர் தூங்க வல்லார்க்கே.

தலைப்பட் டிருந்திடத் தத்துவங் கூடும்
வலைப்பட் டிருந்திடு மாதுநல் லாளுங்
[1]கொலைப்பட் டிருந்திடுங் கோப மகலுந்
துலைப்பட் [2]டிருந்தனர் தூங்கவல் லார்க்கே. (11)

வேறு பாடம்: 1. குலைப்பட் (ஊ ஓ) I. 2. டிருந்திடுந் (எ) I டிருந்திடந் (த).

கருத்து: நடுநாடியில் மூச்சுச்செலுத்திச் சமாதி நிலையில் தூங்குவோர்க்கு (துரியாதீத உணர்வை அடைந்தவர்க்கு) மெய்ப்பொருட் காட்சி கைகூடும். சத்தியும் அருளறிவாக அவரிடம் அகலாது வீற்றிருப்பாள்.

தலைப்பட்டு - எய்தி; சமாதி நிலையை எய்தி. துலைப் பட்டிருந்தனர் - முற்றெச்சம். துலை - சுழுமுனை. கொலைப்பட்டு இருந்திடும் - உயிருணர்வைக் கொல்லும் தன்மையுடைய.

வேறு; அதே சமயம் ஒன்று

623. சாதித் தனிச்சுடராய் நின்ற தேவனும்
ஆதியும் உள் நின்ற சீவனும் ஆகுமால்;
ஆதிப் பிரமன் பெருங்கடல் வண்ணனும்
ஆதி அடி பணிந்து அன்பு உறுவாரே.

[1]சாதித் தனிச்சுட ராய்நின்ற தேவனு
மாதியு முண்ணின்ற சீவனு மாகுமா
லாதிப் பிரமன் பெருங்கடல் வண்ணனு
மாதி யடிபணிந் தன்புறு வாரே. (12)

வேறு பாடம்: 1. சோதித் (சண்) (சங்) (விசு), (த) (திரு) (வ) (துடி)

கருத்து: ஒப்பற்ற, சிறந்த சோதியாய் அனுபவப்படும் சிவபரம் பொருள், 'வேறாய்' நின்று படைக்கும் காரணனும், சீவனாகவே 'ஒன்றாய்' நிற்பவனும் ஆவான். பிரமனும் திருமாலும் முறையே படைத்தலையும் காத்தலையும் செய்பவராயினும் அவர்களைப் படைத்துக் காப்பவன் சிவனே யாதலின் அவனுக்கு அன்பு மிகுந்து அடிபணிவார்.

சுடர் தனிச் சிறப்புடையது ஆதலின் 'சாதி' என்னும் அடை பெற்றது. ஆதி - படைப்பு முதல்வன்.

உணர்வு ஒருமை

624. சமாதி செய்வார்க்குத் தகும்பல யோகம்;
சமாதிகள் வேண்டா இறையுடன் ஏகில்;
சமாதிதான் இல்லை தான் அவன் ஆகில்;
சமாதியில் எட்டெட்டுச் சித்தியும் எய்துமே.

சமாதிசெய் வார்க்குத் தகும்பல யோகஞ்
சமாதிகள் வேண்டா விறையுட னேகிற்
சமாதிதா னில்லைத் தானவ னாகிற்
சமாதியி லெட்டெட்டுச் சித்தியு மெய்துமே[1] (13)

வேறு பாடம்: 1. மாமே (ஒ) IV.

கருத்து: சமாதி கை கூடினால், அதுகாறும் யோகத்தின் பல முயற்சிகளும் பயன் தந்தனவாகும். சமாதிக்கும் மேற்படி இறைவழி

நடத்தல். உயிர், தானே (உணர்வால்) சிவனாயினால் சமாதி வேண்டா. சமாதியில் நிறைவுறும் யோகத்தால் 64 சித்திகளும் எய்தும்.

எண்வகைச் சித்திகளுள் ஒவ்வொன்றும் எட்டு உள்வகைகளை உடையது.

குறிப்பு: இவ்வியலை அடுத்துச் சுவடிகள் அனைத்திலும், பதிப்புகளிலும் 'அட்டாங்க யோகப் பேறு' என்னும் இயல் உள்ளது. அதில் உள்ள 8 பாடல்களும் ஆசிரியரின் கருத்தோடு முரணுதல், இயலின் பெயர்க்குப் பொருத்தமின்மை, கூறியது கூறல், ஆசிரியரின் நடையினின்றும் வேறுபடுதல், பிற்காலச் சொல்லாட்சி உடைமை ஆகிய காரணங்களால் இடைச்செருகல் ஆகும்.

625. போதுகந் தேறும் புரிசடை யானடி
யாதுகந் தாரம ராபதிக் கேசெல்வ
ரேதுகந் தானிவ னென்றருள் செய்திடு
மாதுகந் தாடிடு மால்விடை யோனே. (ஏ)

626. பற்றிப் பதைத்தன்பு வைத்துப் பரன்புகழ்
கற்றிருந் தாங்கே கருது மவர்கட்கு
முற்றெழுந் தாங்கே முனிவ ரெதிர்வரத்
தெற்றுஞ் சிவபதஞ் சேரலு மாமே. (உ)

627. வருந்தித் தவஞ்செய்து வானவர் கோவாய்த்
திருந்தம ராபதிச் செல்வனிவ னென்னத்
தருந்தண் முழவங் குழலு மியம்ப
விருந்தின்ப மெய்துவ ரீச னருளே. (ஔ, அ)

628. செம்பொற் சிவகதி சென்றெய்துங் காலத்துக்
கும்பத் தமரர் குழாம்வந் தெதிர்கொள்ள
வெம்பொற் றலைவ னிவனா மெனச்சொல்ல
வின்பக் கலவி யிருக்கலு மாமே. (ஔ)

629. சேருறு காலந் திசைநின்ற தேவர்க
ளாரிவ னென்ன வரனா மிவனென்னப்
பேருறு தேவர்க ளெல்லா மெதிர்கொள்ளக்
காருறு கண்டனை மெய்கண்ட வாறே. (ஔ, அ)

630. நல்வழி நாடி நமன்வழி மாற்றிடுஞ்
சொல்வழி யாளர் சுருங்காப் பெருங்கொடை
யில்வழி யாள ரிமையவ ரெண்டிசைப்
பல்வழி யெய்தினும் பார்வழி யாகுமே. (ஔ)

631. தூங்கவல் லார்க்குத் துணையேழ் புவனமும்
வாங்கவல் லார்க்கு வலிசெய்து நின்றிடுந்
தேங்கவல் லார்க்குத் திளைக்கு மமுதமுந்
தாங்கவல் லார்கட்குத் தன்னிட மாமே. (க)

632. காரிய மான வுபாதியைத் தான்கடந்
தாரிய காரண மேழுந்தன் பாலுற
வாரிய காரண மாயத் தவத்திடைத்
தாரியல் தற்பரஞ் சேர்தல் சமாதியே. (ச)

48. அட்டமாசித்தி

சித்திப்பேறு

633. பணிந்து எண்-திசையும் பரமனை நாடித்
துணிந்து எண்-திசையும் தொழுத எம்பிரானை
அணிந்து எண்-திசையினும் அட்டமாசித்தி
தணிந்து எண்-திசைச்சென்று தாபித்தவாறே.

பணிந்தெண் டிசையும் பரமனை நாடித்
துணிந்தெண் டிசையுந் தொழுதெம் பிரானை
யணிந்தெண் [1]டிசையினு மட்டமா சித்தி
தணிந்தெண் டிசைச்சென்று தாபித்த வாறே. (1)

வேறு பாடம்: 1. டிசையு (சண்)

கருத்து: இறைவனை எங்கும் தேடி, இறுதியில் தம்முன்ளே அவன் உள்ளான் எனத் துணிந்து, எங்கெங்கு உள்ளோரும் வணங்கிய எம் இறைவனை, எமது தலையிலேயே உள்ள எட்டுத் திசைகளிலும் (பக்கம்) தரிசித்து, அகமுகமாகவே அவனுக்கு அணிகள் சூட்டி மகிழ்ந்து, அடக்கத்துடன், அவனது அருள் தந்தது என்று கருதி, எட்டுச் சித்திகளையும் எய்தி, எங்கும் சென்று அவ்வல்லமையை நிலைநாட்டினேன்.

திருமூலர் தாம் சித்தர் என இப்பாட்டலிற் கூறினார்.

அணிந்து - அணிகள் சூட்டி. தணிந்து - அடக்கத்துடன்.

வெளி கண்டேன்

634. பரிசு அறி வானவர் பண்பன் அடியேன்
துரிசுஅற நாடியே தூவெளி கண்டேன்;
அரியது எனக்கு இல்லை; அட்டமாசித்தி
பெரிது அருள் செய்து பிறப்பு அறுத்தானே.

பரிசறி வானவர் பண்ப னடியேன்[1]
றுரிசற நாடியே தூவெளி கண்டே
னரிய தெனக்கில்லை யட்டமா சித்தி
பெரிதருள் செய்து பிறப்பறுத் தானே. (2)

வேறு பாடம்: 1. னடியெனத் (அ இ எ ஒ) I.

கருத்து: வணங்கும் இயல்பறிந்த வானவர்க்கு (பிறர்க்கு அன்று என்றபடி) வழங்கும் பண்பறிந்த இறைவனின் அடியானாகிய யான், குற்றமற அவனை ஆய்ந்து, தூய வெளியைக் கண்டேன். எனக்கு எண்வகைச் சித்திகளை முழுமையாக அருளி என் பிறவித் தொடரை அறுத்தான். இனி யாவை எனக்கு அரியவை? ஒன்றுமில்லை என்க.

வானவர் பண்பன் - வானவர்க்குப் பண்புடன் அருள்புரிவோன். துரிசு - குற்றம்.

சிவகதியோடு சித்தி

635. குரவன் அருளின் குறிவழி மூலன்
பரையின் மணம்மிகு சம்கட்டம் பார்த்துத்
தெரிதரு சாம்பவி கேசரி சேரப்
பெரிய சிவகதி பேறு எட்டாம் சித்தியே.

குரவ னருளிற் குறிவழி மூலன்[1]
பரையின் [2]மணமிகு சங்கட்டம் பார்த்துத்[3]
தெரிதரு சாம்பவி கேசரி சேரப்[4]
பெரிய சிவகதி பேறெட்டாஞ் சித்தியே. (3)

வேறு பாடம்: 1. மூலப் (எ) I; மூலம் (த) 2. மனமிகு (இ ஈ ஆ) I; மனுமிகு (ஊ ஒ) I. 3. மார்த்துத் (அ) I. 4. சேவை (இ) I.

கருத்து: குருவின் அருளினால், சகஸ்ராரத்தில் சிவனும் சத்தியும் கலக்கும் தருணம் அறிந்து சாம்பவி, கேசரி என்னும் இரண்டு முத்திரைகளைப் பயன்படுத்திக் 'கேசரி யோகம்' செய்து யோகி பெறுவது சிவகதியாகும். அதனோடு எண்வகைச் சித்திகளையும் எய்துவான்.

குரவன் - ஆசிரியன். மூலன் பரையின் மணம் - சிவனும் சத்தியும் கலத்தல். சம் கட்டம் - நல்ல தருணம்.

ஞானவுடம்பு

636. காய ஆதி பூதம், கலை, காலம், மாயையில்
ஆயாது அகல, அறிவு ஒன்று; அனாதியே;
ஓயாப் பதி - அதன் உண்மையைக் கூடினால்
வீயாப் பரகாயம் மேவலும் ஆமே.

காயாதி பூதங் கலைகால மாயையி[1]
[2]லாயா [3]தகல [4]வறிவொன்ற னாதியே
யோயாப் பதியத னுண்மையைக் கூடினால்[5]
வீயாப் பரகாய மேவலு மாமே. (4)

வேறு பாடம்: 1. மாயை (ஆ) IV. 2. யாயா (ஆ) IV. 3. தகல்வழி (ஆ) IV. 4. யொன்றரனாகியே (ஆ) IV. 5. கூட்டினால் (ஊ) IV.

கருத்து: ஆன்மா 36 தத்துவங்களிலும் தங்கிச் சிந்திக்காமல், தனித்து நின்று சிந்தித்து, பேரறிவுப் பொருளும், அனாதியும், பதியும் ஆகிய சிவத்தைக் கூடினால், ஞான உடம்பு பெறலாம்.

காய ஆதி பூதம் - உடம்பு முதலாக ஐம்பூதம் வரை எண்ணப்படும் தத்துவங்கள். இவற்றால் ஆன்ம தத்துவம் இருபத்துநான்கையும் சுட்டினார். கலை, காலம் என்பவை வித்தியா தத்துவங்கள். மற்ற ஐந்து வித்தியாதத்துவங்களையும் இவற்றால் சுட்டினார். மாயை - சுத்தமாயை. சிவதத்துவம் ஐந்தினையும் இதனால் சுட்டினார். அறிவு, அனாதி, பதி என்று கூறப்பட்டவை சிவம். வீயா - அழியாத. பர காயம் - மேலாம் உடம்பு; ஞான உடம்பு.

துணைப்பயன்

637. இருபதி னாயிரத் தெண்ணூறு பேதம்
மருவிய கன்மமாம் மாமக யோகம்
தரும் இவை காய உழைப்பு ஆகும் தானே
வரும் இருநான்காய் அடங்கும் மாசித்திக்கே.

இருபதி னாயிரத் [1]தெண்ணூறு பேத
மருவிய [2]கன்மமா மாமக யோகந்
தருமிவை காய வுழைப்பாகுந் தானே
[3]வருமிரு நான்கா யடங்குமா சித்திக்கே. (5)

வேறு பாடம்: 1. தெண்ணிலி (அ இ ஈ ஆ) II; தேழ்நூறு (த) 2. கன்ம மாமந்த (எ) II; கன்ம மாமதன் (ஆ) (ஊ ஒ) II; மாபந்த (த) 3. யருமிரு (துடி)

கருத்து: பெரிய வேள்வி போன்ற யோகத்தால் சித்திகள் மட்டுமோ? 20800 வரை கன்மயோகங்களும் வந்து அடையும். உணர்வால் அடைபவை அல்ல; உடலால் அடைபவை. இவையும் எண்வகைச் சித்திகளுக்கு உட்பிரிவாய், துணைப் பயனாய் அமையும்.

கர்மம் ஆம் - செயலாகும். மா மக யோகம் - பெரிய யாகம் போன்ற யோகம். மூலவனலை மேல்நோக்கி எழச்செய்தலால் யோகமும் யாகம் எனப்பட்டது. கன்மயோகம் 20800. உழப்பு என்பதே பழைய வழக்கு. எனினும் சுவடிகள் அனைத்திலும் உள்ளவாறே பதிப்பிக்கப்பட்டது.

பன்னிரண்டு சித்திகள்

638. மதிதனில் ஈராறா மன்னும் கலையில்
உதயம் - அது நால் ஒழிய ஓர் எட்டுப்
பதியும்; ஈராறு ஆண்டு பற்று அறப் பார்க்கின்
திதமான ஈராறு சித்திகள் ஆமே.

மதிதனி லீராறா மன்னுங் கலையி
லுதய மதுநா லொழியவோ ரெட்டுப்
பதியுமீ [1]ராறாண்டு பற்றறப் பார்க்கிற்
றிதமான வீராறு சித்திக ளாமே. (6)

வேறு பாடம்: 1. ராண்டுறப் (உ) I; ராண்டு (ஆ ஈ) II.

கருத்து: சந்திர மண்டலத்திற்குரிய 12 கலைகளுள் உன்மனை, சமனை, அநாசிருதை, அனாதை என்ற நான்கும் தவிர, எட்டுக் கலைகள் உயிருணர்வில் பதியும். இவ்வனுபவத்தை 12 ஆண்டு எய்தினால் 12 சித்திகளை அடையலாம்.

மதி - சந்திரகலை. ஈராறு - சந்திரகலை பதினாறு. இவற்றைப் பன்னிரண்டாகக் கொள்வர். பதியும் - உள்ளே தங்கும். திதம் - உறுதி. ஸ்திதம் என்ற வடசொல் திரிபு.

கருணை இல்லையேல். . .?

639. நாடும் பிணியினால் நம் சனம் சூழ்ந்தக்கால்
நீடும் கலை, கல்வி, நீள் மேதை, கூர் ஞானம்
வீடு ஒன்று இலன் ஆகில், வாய்சித்தி பேதத்தின்
நீடும் தூரம் கேட்டால், நீள் முடிவு ஈராறே.

நாடும் [1]பிணியினா னஞ்சனஞ் சூழ்ந்தக்கா[2]
னீடுங் கலைகல்வி [3]நீண்மேதை கூர்ஞானம்
[4]வீடொன் [5]றிலனாகில் [6]வாய்சித்தி பேதத்தி
[7]னீடுந்தூ [8]ரங்கேட்டா னீண்முடி வீராறே. (7)

வேறு பாடம்: 1. பிணியான (ஆ) II; பிணியாகு (வ) (விசு) (த); பிணியால் (சண்) பிணியாம் (திரு) 2. சூழ்ந்ததால் (ஈ ஓ) I. 3. நின் பேதை (எல்லாச் சுவடிகளிலும்) 4. பீடொன் (எ) I. 5. றில்நாலில் (ஆ ஊ) I; றிலா நாலில் (ஓ) I; றினால் வாயாச் (துடி) 6. வாயாச்சித்தி (ஆ எ ஓ) I. 7. நீடுந்து (சண்) 8. ரங்கேட்டல் (எ ஓ) I.

கருத்து: நம் மக்கள் மருந்தை எதிர்நோக்கும் பினியினால் வந்து சூழ்ந்தபோது, யோகி தனது கலையறிவு, கல்வி, மதிநுட்பம், ஞானம் ஆகிய ஒன்றினாலும் அதைத் தீர்க்க மாட்டானாயின், உண்மையான சித்திவகைகட்கும் அவனுக்கும் நெடுந்தூரம் உண்டாகிவிடும். எத்துணை தூரம் என்றால், அவன் விடும் மூச்சுக்காற்றின் கனமாகிய 12 அங்குலமாகும். அதாவது மூச்சுக் காற்றை உள்ளே இழுத்து, கும்பகம் செய்து யோகசாதனை செய்தல் அவனுக்குப் பயன்தராது. 12 அங்குல மூச்சுக்காற்றை உள்ளே அடக்குவதாலேயே யோக சித்திகளை எய்தவியலும் என எண்ணலாகாது. பரோபகாரம் இன்றி யோக சித்தி கைகூடாது.

குறிப்பு: 2ஆம் அடியில் 'நின் பேதை' என்றே எல்லாச் சுவடிகளிலும் பாடம் உள்ளது. பொருட் பொருத்தம் நோக்கிப் பதிப்புகளிற் கண்ட பாடம் மேற்கொள்ளப்பட்டது.

வலிமை, இளமை, புதுமை

640. ஏழானதில் சண்டவாயுவின் வேகியாம்;
தாழா நடைபல யோசனை சார்ந்திடும்;
சூழான ஓர் எட்டில் தோன்றா நரை திரை;
தாழான ஒன்பதில் தான்பர காயமே.

ஏழான திற்சண்ட வாயுவின் வேகியாந்
தாழா நடைபல யோசனை சார்ந்திடுஞ்
சூழான வோரெட்டிற் றோன்றா நரைதிரை
தாழான வொன்பதிற் றான்பர காயமே. **(8)**

கருத்து: மேற்கூறிய யோகானுபவத்தை 7 ஆண்டு எய்தினால் சூறாவளியைவிட விரைந்து இயங்கலாம். நடை தாமதமாகாது. பல யோசனை தொலைவு நடக்கலாம். எட்டு ஆண்டுகள் அதனை எய்தினால் முதுமை வராது. ஒன்பது ஆண்டுகள் எய்தினால் உடம்பு மேலான உடம்பாக மாறும்.

வேகி - வேகமுடையவன். தாழா - தளராத. யோசனை - தூரத்தின் அளவு.

ஈசத்துவம்; வசித்துவம்

641. ஈரைந்து எல்பூசமத்தி ஆய உருத்திரன்
நேர்வு ஒன்று பன்னொன்றில்; ஈறு ஆகும் எண் சித்தி
சீர் ஒன்று மேல்ஏழ், அக்கீழ் ஏழ் புவியில் சென்று
ஓர் ஒன்று வியாபியாய் நிற்றல் ஈராறே.

[1]ஈரைந்தெற் [2]பூசமத்தி [3]யாய வுருத்திர
[4]னேர்வொன்று பன்னொன்றி [5]லீறாகு மெண்சித்தி
சீரொன்று [6]மேலேழக் கீழேழ் புவியிற்சென்[7]
[8]றோரொன்று வியாபியாய் நிற்றலீ ராறே. **(9)**

வேறு பாடம்: 1. ஈரைந்திற் (எ) IV. 2. பூமித் தியாக (இ) II பூசமித்தி (ஆ ஈ ஊ ஒ) I; பூரித்தியான (எ) II; பூரித்துத் தியான (விசு) (திரு) (த) (வ)

3. யாயுருத்திரன் (அ ஆ ஒ ஓ) I. 4. நேர்வென்று (அ) I; நேர்வொன்றி (ஓ) I; நேரொன்று (எ) I; நேரொன்றும் (த) 5. ஈராறா (அனைத்துச் சுவடிகளும்) V. 6. மேலேழ் (எ) II; மேலேழு (த) 7. புவிச்சென் (அ இ ஈ ஊ எ ஓ) II; புவிச்சென்றவ் (த) II. 8. றேரொன்று (துடி).

கருத்து: பத்து ஆண்டுகளில் உருத்திரன், யோகியின் நெற்றியில் புருவமத்தியில் (பூசம் எனக்கூறப்படும் இடம்) தோன்றுவான். பதினோராண்டில் அவ்வுருத்திரனுக்குச் சமமாதல் ஆகிய 'ஈசத்துவம்' என்னும் சித்தி கைகூடும். எண் சித்திகளுள், மேலேழு, கீழேழு ஆகப் பதினான்கு உலகங்களிலும் வியாபியாய் நிற்றல் ஆகிய 'வசித்துவம்' பன்னிரண்டு ஆண்டுகளில் எய்தப்பெறும்.

குறிப்பு: இரண்டாவதடியில் 'ஈராறா' என்றே அனைத்துச் சுவடி களிலும் பாடம் உள்ளது. பொருட் பொருத்தம் நோக்கியும், கூறியது கூறலைத் தவிர்க்கவும் பதிப்புகளிற் கண்ட 'ஈறாகு' என்ற பாடமே கொள்ளப்பட்டது.

எட்டுச் சித்திகள்

642. தானே அணுவும், சகத்தும், தன்நோன்மையும்
ஆனாக் ககனமும், பரகாயத் தேகமும்,
தான் ஆவது பரகாயம் சேர்தன்மையும்,
ஆனாத உண்மையும், வியாபியும் ஆம் எட்டே.

தானே யணுவுஞ் [1]சகத்துந்தன் னோன்மையு[2]
மானாக் [3]ககனமும் பரகாயத் தேகமுந்[4]
தானா [5]வதுபர காயஞ்சேர் தன்மையு
மானாத வுண்மையும் [6]வியாபியு மாமெட்டே. (10)

வேறு பாடம்: 1. சகத்துத் தன் (அ இ ஈ ஊ ஓ) I. 2. னோய்மையுந் (அ ஈ ஊ ஓ) I; னொண்மையுந் (ஆ) II; னொய்மையுந் (துடி) 3. கன்மமும் (இஈ) II; கனமும் (துடி) (சைவ) 4. தேகலுந் (த) 5. லதுபர (ஓ) I; வதும்பர (எ) I. 6. வியாப்பியு (சண்).

கருத்து: அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்ற எட்டுச் சித்திகள் கூறப்பட்டன.

சித்திகளில் நாட்டம் வேண்டா

643. தாங்கிய தன்மையும் தான் அவை பல்லுயிர்
வாங்கிய காலத்தும் மற்று ஓர் குறை இல்லை,
ஆங்கே எழுந்து ஓம் அவற்றுள் அழுந்தும்; மிக்கு
ஓங்கியவா முத்தி முந்திய வாறே.

தாங்கிய [1]தன்மையுந் [2]தானவை பல்லுயிர்
வாங்கிய காலத்து மற்றோர் குறையில்லை
யாங்கே [3]யெழுந்தோ மவற்று ளழுந்துமிக்[4]
[5]கோங்கிய வாமுத்தி முந்திய வாறே. (11)

வேறு பாடம்: 1. தண்மையுந் (ஆ) IV. 2. தானணுப் (எ) III தானவர் (ஆ) IV. 3. யெழுந்தே (ஆ இ); யெழுந்தெம் (ஊ) I; யெழுந்தெம் (ஒ) I. 4. ளெழுந்துமிக் (அ ஆ ஈ எ ஒ) I. 5. கோங்கி வர (உ) I.

கருத்து: பிரணவமந்திர யோகத்தால் உண்டாகும் சத்தி, சித்திகளில் அழுந்தி விட்டால் முத்தி இல்லை. சித்திகளில் மனம் வையாமல் சகஸ்ராரத்திற்கு ஏறவேண்டும்.

தானவை வாங்கிய காலத்தும் எனக் கூட்டுக. அவற்றுள் - சித்தி செய்வதாகிய அச்செயல்களுள். ஆங்கே 'ஓம்' எழுந்து அவற்றுள் அழுந்தும் எனக் கூட்டுக. மிக்கு ஓங்குதல் - மிகுந்த சகஸ்ராரத்திற்குச் செல்லுதல்.

யோகத்திற்குரிய காலம்

644. முந்திய முந்நூற்று அறுபது காலமும்
வந்தது நாழிகை வான்முதலாயிடச்
சிந்தை செயச் செய மண்முதல் தேர்ந்து அறிந்து
உந்தியுள் நின்றே உதித்து எழுமாறே.

முந்திய முந்நூற் றறுபது காலமும்
வந்தது நாழிகை [1]வான்முத லாயிடச்
சிந்தை [2]செயச்செய மண்முதற் றேர்ந்தறிந்
[3]துந்தியு [4]ணின்றே யுதித்தெழு மாறே. (12)

வேறு பாடம்: 1. வாமுத (அ ஆ இ ஈ ஊ ஒ)I. 2. சிந்தைசெய் மண்முதற்றேர்ந்தறிவார் வல (எ) IV; சிந்தைசெய் மண்முதற்

றேர்ந்தறிவாய் வல (த) 3. முந்தியு (எ) IV; ருந்தியு (விசு) 4. ணின்று (அ இ ஊ ஒ) II.

கருத்து: முந்நூற்றறுபது நொடி கொண்டவை ஆறுநாழிகை. சூரியோதயத்திலிருந்து அத்தமனம் வரை முப்பது நாழிகையும் 5 கூறுகளாகக் பிரிந்து முறையே ஆகாயம், காற்று, தீ, நீர், நிலம் என்ற பூதங்கட்கு உரியவையாகும். அத்தமனம் முதல் மறு நாள் உதயம் வரை உள்ள 30 நாழிகையும் நிலம் முதல் ஆகாயம் வரையான அப் பூதங்கட்குரியவையாகும். ஆகாயத்திற்குரிய 12 நாழிகையும் யோகத்திற்குரிய காலம். அப்போது யோகிக்கு மணிபூரகத்தி லிருந்து சூரியகலை உதித்து எழும்.

மண்முதல் தேர்ந்தறிந்து சிந்தை செயச் செய என மாற்றிக் கூட்டுக.

திருநடம் காண்பர்

645. சித்தம் திரிந்து சிவமயம் ஆகியே
முத்தம் தெரிந்து உற்ற மோனர் சிவமுத்தர்
சுத்தம் பெறலாகும் ஐந்தில் தொடக்கு அற்றோர்
சித்தம் பரத்தில் திருநடத்தோரே.

சித்தந் [1]திரிந்து [2]சிவமய மாகியே[3]
முத்தந் தெரிந்துற்ற மோனர் சிவமுத்தர்
[4]சுத்தம் [5]பெறலாகு [6]மைந்திற் றொடக்கற்றோர்
[7]சித்தம் பரத்திற் றிருநடத் தோரே. (13)

வேறு பாடம்: 1. தெரிந்து (இ ஈ) I. 2. சிவமிக (அ) I; சிவமக (ஆ இ ஊ ஒ) II. 3. மாக்கியே (இ ஒ) II. 4. கற்றம் (ஈ) I. 5. பெறலாக (எ) IV; பெறலா (அ ஊ ஒ) I. 6. வைந்திற் (எ) IV. 7. சிற்றம் (ஊ) I.

கருத்து: சிந்தை புற நோக்கை விடுத்து அகநோக்குப்பெற்று, உணர்வால் சிவம் ஆகி, முத்திநிலை பெற்றோர் ‘சிவமுத்தர்’ ஆவர். ஐம்பெரும்பூதங்களாலான உடம்பின் பந்தம் நீங்கப் பெற்றோர் 36 தத்துவங்களையும் சுத்தி செய்து கொள்வர். (இது தத்துவ சுத்தி) அவர், தமது அறிவு - ஆகாயத்தில் சிவனது திருநடத்தைக் காண்பர்.

முத்தம் - முத்தி. ஐந்து - ஐம்புலன்கள். சிதம்பரம், சித்தம்பரம் என விகாரமாயிற்று. தேவாரத்தில் ‘சிதம்பரம்’ என்னும் வழக்கு இல்லை.

பல்லாண்டு வாழலாம்

646. ஒத்து அவி ஒன்பது வாயுவும் ஒத்தபின்
ஒத்து அவி ஒன்பதின் மிக்க தனஞ்சயன்
ஒத்துஅவி ஒன்பதில் ஒக்க இருந்திட
ஒத்த உடலும் உயிரும் இருந்ததே.

[1]ஒத்தவி யொன்பது வாயுவு மொத்தபி[2]
[3]னொத்தவி யொன்பதின் மிக்க தனஞ்சய
[4]னொத்தவி யொன்பதி லொக்க விருந்திட
வொத்த வுடலு முயிரு மிருந்ததே[5]. (14)

வேறு பாடம்: 1. ஒத்தவிவ் வொன்பது (எ) IV. 2. மொத்தென (அ எ); III மொத்தன (ஒ) II. 3. ஒத்தவிவ்வொன்பது (எ) 5. மிருந்தவே (துடி)

கருத்து: ஒரே சமயத்தில் உடம்பை விட்டு நீங்கும் தன்மையுடைய ஒன்பது வாயுக்கள் தம்முள் மிகாமலும் குறையாமலும் ஒத்திருக்க, அவற்றைவிடச் சிறந்ததாகிய தனஞ்சயன் என்னும் வாயு, அந்த ஒன்பதிலும் கூடியிருந்தால், உடலும் உயிரும் பல்லாண்டு கூடியிருக்கும்.

வாயுக்கள்பத்து. அவை பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருதானன், தேவதத்தன், தனஞ்சயன் என்பவை. (விளக்கம் பின்னிணைப்பில் காண்க)

தனஞ்சயன்

647. இருக்கும் தனஞ்சயன் ஒன்பது காலில்;
இருக்கும் இருநூற்று இருபத்து மூன்றாய்;
இருக்கும் உடல் - அது இருந்தில ஆகில்,
இருக்கும் உடல் - அது வீங்கி, வெடித்தே.

இருக்குந் தனஞ்சய னொன்பது காலி
லிருக்கு மிருநூற் றிருபத்து மூன்றா[1]
யிருக்கு [2]முடல திருந்தில வாகி
லிருக்கு முடலது வீங்கி வெடித்தே[3]. (15)

வேறு பாடம்: 1. நான்கின் (விசு) (திரு) (த) (துடி) 2. முடலீ (சண்); முடலி லிருந்தில (துடி) 3. வெடித்ததே (ஆ உ எ) II.

கருத்து: ஒன்பது வாயுக்களுடனும் தனஞ்சயன் கலந்து, 223-ஆவது புவனமாகிய அநந்தையில் பொருந்தியிருக்கும். அஃது உடம்பில் இல்லையெனில், உடம்பு வெடிக்கும். இறப்பு நேரும்.

தனஞ்சயனுக்கு வீங்கும் காற்று என்றும் பெயர் உண்டு. வீங்குதல் - பருத்தல். தனஞ்செயன் உடலில் உள்ளவரை அவ்வுடல் பருத்தும், அஃது இல்லாதபொழுது உடல் வெடித்தும் இருக்கும் என்க. வீங்கி, வெடித்து என்ற வினையெச்சங்கள், நான்காம் அடியில் உள்ள 'இருக்கும்' என்ற முற்றுக்கொண்டு முடிந்தன. வீங்கியிருக்கும், வெடித்து இருக்கும் எனத் தனித்தனி கூட்டுக.

648. வீங்குங் கழலை சிரங்கொடு குட்டமும்
வீங்கும் வியாதிகள் சோகை பலவதாய்
வீங்கிய வாதமும் கூனு முடமதாய்
வீங்கும் வியாதிகள் கண்ணின் மருவியே. (க)

கண்ணொளி எதனால்?

649. கண்ணில் வியாதி, உரோகம் தனஞ்சயன்:
கண்ணில் இவ்-ஆணிகள், காசம் அவன் அல்லன்;
கண்ணினில் கூர்மன் கலந்தில ஆதலால்
கண்ணினில் சோதி கலந்ததும் இல்லையே.

கண்ணில் வியாதி யுரோகந் தனஞ்சயன்
கண்ணிலிவ் வாணிகள் காச மவனல்லன்
கண்ணினிற் கூர்மன் கலந்தில வாதலாற்'
கண்ணினிற் சோதி கலந்தது மில்லையே. (16)

வேறு பாடம்: 1. னாதலாற் (எ) IV.

கருத்து: கண் நோய்களுக்குத் தனஞ்சயன் இல்லாமை காரணம் அன்று. கூர்மன் என்ற வாயு கண்ணில் கலக்கவில்லையேல் கண்ணில் ஒளி இராது.

ஆணிகள் - நரம்புகள். காசம் - ஒளி; நரம்புகளால் உண்டாகும் ஒளி என்க. இதற்குக் காரணமாக உள்ள வாயு கூர்மன் என்பது. கூர் மனுக்கு 'விழிக்காற்று' என்றும் பெயர் உண்டு.

650. நாடியி னோசை நயன மிருதயந்
தூாடி யளவுஞ் சுடர்விடு சோதியைத்
தேவரு ளீசன் றிருமால் பிரமனு
மோதகு நின்றங் குணர்ந்திருந் தாரே. (ண, ட)

ஒன்றாய்க் காணுதல்

651. ஒன்பது வாசல் உடையது ஓர் பிண்டத்துள்
ஒன்பது நாடி உடையது ஓர் ஓடு-இடம்;
ஒன்பது நாடி ஒடுங்க வல்லார்கட்கே
ஒன்பது காட்சி இலை; நல ஆமே.

ஒன்பது வாச லுடையதோர் பிண்டத்து
ளொன்பது நாடி யுடையதோ [1]ரோடிட
மொன்பது நாடி யொடுங்கவல் வார்கட்கே
யொன்பது [2]காட்சி [3]யிலைநல வாமே. (18)

வேறு பாடம்: 1. ரோரிட (அ ஆ இ ஊ) I. 2. வாசலுலை நலவாமே (எ) IV. 3. யிலை பல (சைவ) (துடி)

கருத்து: ஒன்பது துவாரங்களை உடைய உடம்பில், ஒன்பது நாடிகளும் ஒடுங்கும் இடம் ஒன்று உண்டு. அது சுழுமுனை. அவ்வாறு ஒடுங்கப் பெறுவார்க்குப் "பலவாய்க்காணும் காட்சி" மாறி, "ஒன்றாய்க் காணும் காட்சி" வாய்க்கும்.

பிண்டம் -உடம்பு. ஓடு இடம் - மூச்சு இயங்கும் நாடி; சுழுமுனை. ஒன்பது காட்சி - பலவாய்க்காணும் காட்சி.

ஒன்பது நாடிகள்: இடைகலை, பிங்கலை, சிங்குவை, புருடன், காந்தாரி, அக்கினி, அலம்புலி, சங்குனி, குணா (இவற்றுடன் சுழுமுனையைச் சேர்த்துத் தசநாடிகள் என்பது வழக்கு)

ஏழு உலகங்களையும் தாங்குதல்

652. ஓங்கிய அங்கிகீழ் ஒண் சுழுனைச் செல்ல,
வாங்கி இரவி, மதி வழி ஓடிட,
தாங்கி உலகங்கள் ஏழும் தரித்திட,
ஆங்கு அது சொன்னோம் அருவழியோர்க்கே.

ஓங்கிய [1]வங்கிகீ ழொண்சுழு னைச்செல்ல
வாங்கி யிரவி மதிவழி யோடிடத்
தாங்கி யுலகங்க ளேழுந் தரித்திட
வாங்கது சொன்னோ [2]மருவழி யோர்க்கே. (19)

வேறு பாடம்: 1. வங்கிக் கீழ், (எ) II. 2. மருள் வழி (ஒ) III; மறிவுடை (எ) IV.

கருத்து: மூலாதாரத்தில் உள்ளதாகிய தீயானது எழுந்து சுழுமுனை நாடியின் வழியே மேல் நோக்கி உச்சந்தலை வரை செல்ல, வழியில் சூரிய மண்டலம், சந்திரமண்டலங்களைக் கடந்து செல்ல, அதன் விளைவாக, ஏழு உலகங்களையும் தாங்கி நிற்கும் சித்தி எய்தும்.

விதை நெல்

653. தலைப்பட்டவாறு அண்ணல் தையலை நாடி
வலைப்பட்ட பாசத்து வன்பிணை மான்போல்
துலைப்பட்ட நாடியைத் தூவழி செய்தால்
விலைக்கு உண்ணான் வைத்ததோர் வித்து-அது ஆமே.

தலைப்பட்ட வாறண்ண றையலை நாடி
வலைப்பட்ட பாசத்து வன்பிணை மான்போற்
றுலைப்பட்ட நாடியைத் தூவழி செய்தால்
[1]விலைக்குண்ணான் வைத்ததோர் வித்தது வாமே. (20)

வேறு பாடம்: 1. விலைக்குண்ண (ஆ ஈ ஊ எ) II.

கருத்து: சுழுமுனை நாடியை மூச்சுக் காற்றுக்கும் மூலக்கனலுக்கும் வழியாகச் செய்தால், சிவபெருமான் யோகியின் தலையுச்சியில் உள்ள சத்தியை நாடி வலைப்பட்ட மான் போல் நிற்பார். அதனால், விலைக்கு விற்று உண்ணாமல், விதைக்கு என வைத்த நெல் போல உயிர் வாழ்க்கை பெருகும்.

கொண்டு கூட்டு: "தூவழிசெய்தால் தலைப்பட்டவாறு அண்ணல், தையலை நாடி, மான்போல் (நிற்பின்) வித்து ஆமே" எனக் கூட்டுக. துலை - நடு என்ற பொருள் அளவாக நின்றது. நாடி - சுழுமுனை. வழி - மூச்சுக்காற்றுக்கும் உயிர்ச் சத்திக்கும் வழியாக. விலைக்கு உண்ணான் - முற்றெச்சம்.

சுழுமுனையில் நாட்டம்

654. ஓடிச்சென்று அங்கே ஒருபொருள் கண்டவர்
நாடியின் உள்ளாக நாதம் எழுப்புவர்;
தேடிச்சென்று அங்கே தேனை முகந்து உண்டு
பாடியுள் நின்ற பகைவரைக் கட்டுமே.

ஓடிச்சென் றங்கே யொருபொருள் கண்டவர்
நாடியி னுள்ளாக நாத மெழுப்புவர்
தேடிச்சென் [1]றங்கே தேனை முகந்துண்டு[2]
பாடியுண் ணின்ற பகைவரைக் கட்டுமே[3]. (21)

வேறு பாடம்: 1. றங்கேயுந் (த) (தளை சிதையினும் சுவடிகளில் உள்ளவாறு பதிப்பிக்கப்பட்டது.) 2. முகந்துண்டு (இ) I. 3. காட்டுமே (ஈ) I.

கருத்து: தலையுச்சிக்கு உயிருணர்வைச் செலுத்தி, அங்கே இறையனுபவம் பெற்ற யோகியர் சுழுமுனையில் நாதம் எழுப்புவர். சுவானந்தம் அனுபவிப்பர். மனத்தில் நீங்காது நின்ற பகையாகிய தமோ, ரசோ குணங்களை நாதம் அடக்கும்.

ஓடிச்செல்லுதலும் தேடிச் செல்லுதலும் ஒரு செயலே. 'முகந்துண்ண' என வினையெச்ச வாய்பாட்டை மாற்றுக. பாடி - பாசறை. இங்கு மனம். பகைவர் - தமோ, ரசோ குணங்கள். கட்டும் - நாதம் அடக்கும்.

சத்திகளின் துணை

655. கட்டிட்ட தாமரை நாளத்தில் ஒன்பது
மட்டிட்ட கண்ணியர் மாதுடன் சேர்ந்தனர்
கட்டிட்டு நின்று களங்கனி ஊடுபோய்ப்
பொட்டு இட்டு நின்றது பூரணம் ஆனதே.

கட்டிட்ட தாமரை நாளத்தி லொன்பது
மட்டிட்ட [1]கண்ணியர் மாதுடன் சேர்ந்தனர்
[2]கட்டிட்டு நின்று [3]களங்கனி யூடுபோய்ப்
பொட்டிட்டு [4]நின்றது பூரண மானதே. (22)

வேறு பாடம்: 1. கன்னியர் (எஓ) IV. 2. தட்டிட்டு (அ ஆ ஈ ஊ ஒ) II. 3. தளங்கனி (அ ஆ ஈ ஒ) II; தளங்களினூடு (விசு) (திரு) (துடி) (த) 4. நின்று (அ) IV.

கருத்து: சுழுமுனை நாடியில், உலகப் படைப்புடன் தொடர்புடைய ஒன்பது சத்திகள் நின்று, சகஸ்ராரத்தில் உள்ள பராசத்தியுடன் சேர்ந்தனர். உயிராற்றல் முதலில் மூலாதாரத்தில் கட்டுண்டு நின்று, பின்பு தொண்டையின் வழியாகச் சென்று புருவமத்தியில் நின்றது. அந்த நிலையில் அது முழுமை அடைந்தது.

தாமரை நாளம் - தாமரைத் தண்டு; சுழுமுனை நாடி. கண்ணி - தலைமாலை. இங்கு உலகசிருட்டியுடன் தொடர்பு உடைய நவசத்திகள் குறிக்கப்பட்டனர். மாது - பராசத்தி. களங்கனி - தொண்டை. பொட்டு - புருவ மத்தி. நின்றது - உயிர்ச்சத்தி; வினையாலணையும் பெயர்.

ஐவர்க்கும் வரும் ஆற்றல்

656. பூரண சத்தி எழு மூன்று அறை ஆக
ஏர் அணி கன்னிகள் எழு நூற்றஞ்சு ஆக்கினார்
நாரணன் நான்முகன் ஆதிய ஐந்துக்கும்
காரணம் ஆகிக் கலந்து விரிந்ததே.

பூரண சத்தி யெழுமூன் றறையாக[1]
வேரணி கன்னிக ளெழுநூற்றஞ் சாக்கினார்[2]
நாரண னான்முக னாதிய வைந்துக்குங்[3]
[4]காரண மாகிக் கலந்து விரிந்ததே[5]. (23)

வேறு பாடம்: 1. றசையாக (அ) I. 2. சாயினார் (எ) IV. 3. வைவர்க்குங் (விசு) (சைவ) (திரு) (த) (வ) 4. காரணியாகிக் (இ) IV காரணனாகிக் (அ ஈ எ ஒ) II. 5. விரிந்தே (அ இ ஈ) I.

கருத்து: பூரணசத்தி இச்சை, ஞானம் கிரியை என மூன்றாகி, அகாரம் உகாரம், மகாரம், அபரவிந்து, அபரநாதம், பரவிந்து, பரநாதம் என்ற ஏழு கலைகளிலும் பொருந்தி 21 கூறு ஆகும். ஐவர்க்கும் இவை சேர, 105 ஆகும். இவ்வாறு ஆக்கியவர் பூரணசத்தி.

அறை - கூறு.

சத்தியிடம் ஒடுங்கு

657. விரிந்து குவிந்து விளைந்த இம் மங்கை
கரந்து உள் எழுந்து, கரந்து அங்கு இருக்கின்
பரந்து குவிந்தது பார்முதல் பூதம்
இரைந்து எழு வாயு இடத்தில் ஒடுங்கே.

விரிந்து குவிந்து விளைந்தவிம் மங்கை
கரந்துள் ளெழுந்து கரந்தங் கிருக்கிற்
பரந்து குவிந்தது பார்முதற் பூத
மிரைந்தெழு வாயு [1]விடத்தி லொடுங்கே. (24)

வேறு பாடம்: 1. விடத்தினிலோங்கே (அ) IV விடத்திலொடுங்குமே (ஆ ஈ) II.

கருத்து: பல சத்திகளாக விரிந்தும், பூரண சத்தியாக நின்றும் செயலாற்றும் பராசத்தி, சிவத்தினுள் மறைந்து, பின்பு வெளிப்பட்டு, மீண்டும் மறையும். அதன் விளைவாக நிலம் முதலிய ஐம்பூதங்களும் தோன்றும். மீண்டும் ஒடுங்கும். ஆதலால், நீ மூச்சுக்காற்றின் உதவியால் அவளிடம் ஒடுங்குவாயாக.

மங்கை - பூரண சத்தி. உள் கரந்து எழுந்து - சிவத்தினுள் மறைந்து பின் எழுந்து. கரந்து - மீண்டும் சிவத்தில் மறைந்து. வாயு - மூச்சுக்காற்று. ஒடுங்கு - முன்னிலை ஒருமை ஏவல். வாயுவின் உதவியால் நாதம் என்ற தத்துவத்தில் ஒடுங்கு. “இரைந்து எழு இடம்” என்பதால் ‘நாதம்’ பெறப்பட்டது.

சத்தி தரிசனம்

658. இடையொடு பிங்கலை என்னும் இரண்டு
மடைபடு வாயுவும் மாறியே நிற்கும்;
தடை-அவை ஆறு எழும்; தண்சுடர் உள்ளே
மிடை வளர் மின் கொடி தன்னில் ஒடுங்கே.

இடையொடு பிங்கலை யென்னு மிரண்டு
மடைபடு [1]வாயுவு மாறியே நிற்குந்
தடையவை யாறெழுந் தண்சுட ருள்ளே
மிடைவளர் மின்கொடி தன்னி லொடுங்கே[2]. (25)

வேறு பாடம்: 1. வாயு மடைமாறி (ஆ) IV. 2. லொடுங்குமே (ஆ) II.

கருத்து: இயல்பாக இடைகலை, பிங்கலை நாடிகளில் இயங்கும் மூச்சு, மாறிச் சுழுமுனை வழியாக இயங்கும். ஆறு ஆதாரங்களும் முதலில் தடையாகிப் பின்பு அனுபவத் தானமாகும். சகஸ்ராரத்தில் தோன்றும் குளிர்ந்த சோதியாக இறைவன் விளங்குவான். அவனோடு சக்தி விளங்குவாள். அவளது அருளில் தற்போதம் ஒடுங்கி நிற்பாயாக.

மடை - வழி. மின்கொடி - சத்தி.

சோதி காணலாம்

659. ஒடுங்கி ஒருங்கி உணர்ந்து அங்கு இருக்கில்
அடங்கி அடங்கிடும் வாயு; அதனுள்
மடங்கி, மடங்கிடும் மன் உயிருள்ளே
நடங்கொண்ட கூத்தனும் நாடுகின்றானே.

ஒடுங்கி [1]யொருங்கி யுணர்ந்தங் கிருக்கி[2]
[3]லடங்கி யடங்கிடும் வாயு வதனுண்
[4]மடங்கி மடங்கிடு மன்னுயி ருள்ளே
நடங்கொண்ட [5]கூத்தனு நாடுகின் றானே. (26)

வேறு பாடம்: 1. யொதுங்கி (ஆ) IV. 2. யிருக்கின் (எ) IV. 3. மடங்கி மடங்கிடும் (எ) IV; 3 - 4 மடங்கி யடங்கிடும் (துடி) (த) 5. கூத்தனை நாடுகின்றேனே (எ) IV.

கருத்து: சகஸ்ராரத்தில் பராசத்தியில் ஒடுங்கி, ஒன்றுபட்டு, அருளை உணர்ந்து நின்றால் மூச்சு அடங்கும். அதனால் சிந்தனை உள் முகமாகும். நடமாடும் கூத்தப்பெருமான் உடம்பில் சோதியாய்த் தோன்றுவான்.

ஒடுங்கி - பராசத்தியில் ஒடுங்கி. ஒருங்கி - ஒன்றுபட்டு. அங்கு - சகஸ்ராரத் தில். அடங்கி யடங்கிடும் - படிப்படியே அடங்கும். மடங்கி - கட்டுப்பட்டு. மடங்கிடும் - உள் முகமாகத் திரும்பும்.

உட்பகையை வெல்வான்

660. நாடியின் உள்ளே நாதத்து ஒலியுடன்
தேடி, உட்சென்று, திருவினைக் கைக்கொண்டு
பாடியுள் நின்ற பகைவரைக் கட்டிடும்
ஆடி, ஒரு கை மணி விளக்கு ஆனதே.

நாடியி [1]னுள்ளே நாதத் தொலியுடன்
[2]றேடியுட் சென்று திருவினைக் கைக்கொண்டு
பாடியு [3]ணின்ற பகைவரைக் கட்டிடு[4]
[5]மாடி யொருகை [6]மணிவிளக் கானதே. (27)

வேறு பாடம்: 1. னுள்ளெழு (த) 2. றேடியுஞ்சென்ற (ஆ) I; றேடியு டனே (ஓ) IV; றேடியுடன் சென்ற (இ ஈ ஊ எ) II; சென்றத் (சண்) 3. ணின்று

(ஆ) IV. 4.கட்டிட்டு (ஆ இ ஈ ஊ எ ஒ) II. 5. மாடி லொருகை (எ) I; 6. மாமணிக் (இ ஈ) IV மாணிக்கமானதே (ஓ) IV.

கருத்து: யோகி மூச்சுக் காற்றைச் சுழுமுனையில் செலுத்தி, நாதவொலி கேட்டு, அகமுகமாக நாடி, சக்தியின் அருளைப்பெற்று, மனம் ஆகிய பாசறையுள் இருக்கும் காம, குரோத, லோப, மோக, மத, மாற்சரியம் என்னும் பகைக் குணங்களை வெல்வான். அந்த அருள், அவனுக்குத் தனது அகத்தைக்காட்டும் கண்ணாடி யாகவும், இருளில் ஒளி காட்ட ஒரு கையில் ஏந்திய விளக்காகவும் உதவும்.

திரு - செல்வம்; அருட் செல்வம்.

661. அணிமாதி சித்திக ளானவை கூறி
லணுவி லணுவின் பெருமையி னேர்மை
யிணுகாத வேகார் பரகாய மேவ
லணுவத் தனையெங்குந் தானாத லென்றெட்டே. (க)

662. எட்டா கியசித்தி யோரெட்டி யோகத்தாற்
கிட்டாப் பிராணனே செய்தாற் கிடைத்திடு
மொட்டா நடுநாடி மூலத்த னல்பானு
விட்டால் மதியுண்ண வும்வரு மேலதே. (ஔ, ஆ)

663. சித்திக ளெட்டன்றிச் சேரெட்டி யோகத்தாற்
புத்திக ளானவை எல்லாம் புலப்படுஞ்
சித்திக ளெண்சித்தி தானாந் திரிபுரைச்
சத்தி யருடரத் தானுள வாகுமே. (க, ஆ)

எட்டுச் சித்திகளும் தராதபேறு

664. எட்டு இவை தன்னோடு எழிற்பரம் கைகூடப்
பட்டவர் சித்தர்; பரலோகம் சேர்தலால்
இட்டம்-அது உள்ளே இறுக்கல் பரகாட்சி;
எட்டு வரப்பும் இடம் தான் நின்று எட்டுமே?

எட்டிவை தன்னோ டெழிற்பரங் கைகூடப்
பட்டவர் சித்தர் பரலோகஞ் சேர்தலா
லிட்டம துள்ளே [1]யிறுக்கல் பரகாட்சி[2]
யெட்டு வரப்பு மிடந்தானின் றெட்டுமே. (28)

வேறு பாடம்: 1. யிருக்கல் (ஈ எ) I. 2. பலகாட்சி (இ) I; மாகாட்சி (ஓ) IV.

கருத்து: சித்தர் எண் சித்தியோடு பரவுணர்வும் எய்தியோர். அவர் பரலோகம் சேர்தலோடு அங்கேயே சிவானந்தம் பெற்றுத் தங்குவர். வெற்று எண் சித்திகள் வீடுபேறு தருமா?

அட்டமா சித்திகளை ஒரு தொகுதியாக வைத்துத் 'தன்னோடு' என ஒருமையிற் கூறினார். பரம் - பர உணர்வு; அருள் உணர்வு. சித்திகளை விடப் பர உணர்வே சிறந்தது என்பார், அடை கொடுத்துக் கூறினார். சேர்தலால் - சேருவதோடு. இட்டம் - விருப்பம்; சிவபோகம். உள்ளே - தம் உள்ளே. இறுக்கல் - தங்கல்; பிரியாமல் உறைதல். அதுவே பரகாட்சி ஆகும். இதனை இங்கேயே பெறுதலோடு சித்தர் பரலோகமும் (வீடுபேறும்) எய்துவர். இடம் - இகலோக நினைவு.

அணிமா

ஈசல் போன்ற உடம்பு

665. மந்திரம் வேறு மதிபானுவை மாற்றிக்
கந்தாய்க் கழியில் கசடு அற வல்லோர்க்குத்
தந்து இன்றி நற்காயம் ஈயல் ஒக்கும் சார்வாகும்
அந்த உலகம்; அணுமாதி ஆமே.

[1]மந்திரம் [2]வேறு மதிபானு வைமாற்றிக்[3]
கந்தாய்க் [4]கழியிற் கசடற வல்லோர்க்குத்
தந்தின்றி [5]நற்காய மீயலொக்குஞ் சார்வாகு
மந்த வுலக [6]மணுமாதி யாமே. (29)

வேறு பாடம்: 1. மந்தர (அ இ ஊ எ) II. 2. மேறு (எ) IV; பேறு (ஈ) IV. 3. வைமாற்ற (எ) IV. 4. குழியிற் (எ) I. 5. நற்காமிய லோகஞ்சார்வார்க்கு (எ) IV; நற்காய மியலோகஞ் சார்வாகு (ஆ ஊ) I. 6. மணிமாதி (சண்) (துடி). சுவடிகளில் 3 ஆம் அடியில் 13 எழுத்து உள்ளன.

கருத்து: வேறு மந்திரத்தால் மூச்சுக்காற்று இடைகலை, பிங்கலை வழியாகச் செல்லுவதை மாற்றிக் கம்பம் போலே நிமிர்ந்து, அசையாது இருந்து, சுழுமுனை நாடியாகிய வழியினால் குற்றம் அனைத்தும் நீங்க வல்லவர்க்கு, உடம்பு சந்ததி வழியாக அன்றி, ஈசலைப் போன்று சிறிதாகும். இச்சித்தி கைவரினும் அவர்களின் சார்பு, அந்த உலகமாகிய அருளுலகமாகவே இருத்தல் வேண்டும்.

இச்சித்தி 'அணுமா' எனப்படும். தந்து - சந்ததி; தந்தது என்ற சொல்லின் மருவிய வடிவும் ஆம். புற்றில் எறும்பு இறகு பெற்று உடல் இலேசாகி, ஈசல் ஆகிப் பறப்பதைப் போல, யோகியின் உடம்பும் இலேசாகும்; அணுவைப் போலாகும். அணுவைப் போல் ஆதல் அணுமா. இஃது அணிமா எனத்திரிந்து வழங்கும்.

குறிப்பு: 3-ஆவது அடியில் 'மியலொக்கும்' என்ற பாடம் 5 சுவடிகளில் உள்ளது. பிற சுவடிகளில் உள்ள பாடம் மேலே காட்டப்பட்டுள்ளன. அவை பொருளுக்குப் பொருந்தில. மியலொக்கும் எனப் பாடங்கொள்ளின் தளை சிதைகின்றது. ஆதலின் யாப்பும் பொருளும் நோக்கி 'மீயலொக்கும்' என இப்பதிப்பில் திருத்தப்படுகின்றது. முன்னைப் பதிப்பாசிரியர் எல்லாம் (எ) சுவடிப் பாடமே கொண்டனர். அவர் கொண்ட உரை ஈண்டைக்குப் பொருத்தமின்று.

பஞ்சைவிட மென்மை

666. முடிந்திட்டு வைத்து முயங்கில், ஓராண்டில்
அணிந்த அணுமா கைதானாம்; இவனும்
தணிந்த அப்பஞ்சினும் தான் நொய்யது ஆகி
மெலிந்து, அங்கு இருந்திடும்; வெல்ல ஒண்ணாதே.

முடிந்திட்டு வைத்து முயங்கிலோ ராண்டி
லணிந்த [1]வணுமாகை தானா மிவனுந்[2]
தணிந்தவப் பஞ்சினுந் தானொய்ய தாகி
மெலிந்தங் கிருந்திடும் வெல்லவொண் ணாதே. (30)

வேறு பாடம்: 1. வணிமாகை (எ) IV; வணுமாயை (ஆ இ ஈ ஊ) I.
2. வேனுந் (ஆ) I.

கருத்து: யோகி, தனது சாதனையை முழுமையாக ஓர் ஆண்டு பயின்றால் 'அணிமா' என்னும் சித்தி எய்தும். அவன் பஞ்சினும் மெல்லியன் ஆவான்.

முடிந்திட்டு வைத்து - யோக சாதனையை முழுமையாக வைத்து. முயங்கில் - பயின்றால். ஓராண்டு - வியாழ வட்டம் என்ற, 12 ஆண்டு கொண்ட ஒரு வட்டம். கைதானாம் - கைவரும்; சித்திக்கும். நொய்யது - இலேசானது. இவனும் - யோகியின் உடம்பும். உடம்போடு உயிர்க்கு ஒற்றுமை நோக்கி, நொய்யது எனவும், வெல்லவொண்ணாதே எனவும் அஃறிணையிற் கூறினார்.

லகிமா

எங்கும் செல்லலாம்

667. ஆகின்ற அத்தனி நாயகி தன்னுடன்
போகின்ற தத்துவம் எங்கும் புகலதாய்ச்
சாகின்ற காலங்கள் தன்வழி நின்றிடில்
மாய்கின்றது ஐயாண்டில்; மாலகு ஆகுமே.

ஆகின்ற வத்தனி நாயகி தன்னுடன்
போகின்ற தத்துவ மெங்கும் புகலதாய்ச்
[1]சாகின்ற காலங்க டன்வழி நின்றிடின்
மாய்கின்ற [2]தையாண்டின் மாலகு வாகுமே. (31)

வேறு பாடம்: சாய்கின்ற (எ) IV. 2. வையாண்டின் (சண்)

கருத்து: பராசத்தியின் அருள்பெற்றால் எங்கும் செல்லலாம். கழிகின்ற இயல்புடைய காலம், யோகியின் வழியே நின்றால் லகிமா என்னும் சித்தி ஐந்தாண்டில் எய்தும். இங்கு ஐந்து ஆண்டு என்பது இயல்பான ஆண்டுகளே.

நாயகி - திருவருட்சத்தி. புகலதாய் - அவளே புகலாய். சாகின்ற - கழிகின்ற. தன் - யோகியின். மாய்தல் ஐ ஆண்டில் - பொதுவான மானுடத்தன்மை நீங்குவது ஐந்து ஆண்டுகளில்.

ஒளியாவான்

668. மாலகு ஆகிய மாயனைக் கண்டபின்
தான் ஒளி ஆகித் தழைத்து அங்கு இருந்திடும்
பால் ஒளி ஆகிப் பரந்து அங்கு நின்றது
மேல் ஒளி ஆகிய மெய்ப்பொருள் காணுமே.

மாலகு வாகிய [1]மாயனைக் கண்டபின்
[2]றானொளி யாகித் தழைத்தங் கிருந்திடும்
பாலொளி யாகிப் [3]பரந்தங்கு நின்றது
மேலொளி யாகிய மெய்ப்பொருள் காணுமே. (32)

வேறு பாடம்: 1. மாய்வினைக் (த) 2. சாலொளி (த) 3. படர்ந்தெங்கு (சண்)

கருத்து: யோகி லகிமா என்னும் சித்தியைப் பெற்றபின், தானே ஒளியாவான். பால் போல் நிலா வீசுவதும், சிறந்த ஒளியும் ஆகிய மெய்ப்பொருளைத் காண்பான்.

தான் - உயிர். மேல் ஒளி - பரஞ்சோதி. பால் ஒளி என்று கூறியதும் பரஞ்சோதியையே. உயிரின்பால் உள் ஒளியாகி, அண்டம் முழுதும் பரவி நின்றதும் மேலொளி ஆகியதுமான மெய்ப்பொருள் என்க. மாயனை - சித்தியை உடையனாந் தன்மையை.

மகிமா

புது ஆற்றல்

669. மெய்ப்பொருள் சொல்லிய மெல்லியலாளுடன்
தற்பொருள் ஆகிய தத்துவம் கூடிட,
கைப்பொருள் ஆகக் கலந்திடும் ஓர் ஆண்டின்
மைப்பொருள் ஆகும் மகிமா - அது ஆகுமே.

மெய்ப்பொருள் சொல்லிய மெல்லிய லாளுடன்
றற்பொரு ளாகிய தத்துவங் கூடிடக்[1]
கைப்பொரு ளாகக் கலந்திடு மோராண்டின்
மைப்பொரு ளாகு [2]மகிமாவ தாகுமே. (33)

வேறு பாடம்: 1. கூட்டிடக் (அ) I. 2. மாதவத் (இ) IV; மகாதவசாகுமே (ஈ) IV.

கருத்து: அருட்சத்தியுடன் இறைவன் கலந்து நிற்கும் காட்சியை ஓர் ஆண்டு கண்டால் மறைந்துநிற்கும் ஆற்றல் வெளிப்பட, மகிமா என்னும் சித்தி எய்தும்.

மெல்லியலாள் - அருட் சத்தி. தற்பொருள் - அது என்னும் பொருள்; இறைவன். மைப் பொருள் - மறைந்து நிற்கும் ஆற்றல்.

காலத்தை வெல்லலாம்

670. ஆகின்ற கால் ஒளியாவது கண்டபின்
போகின்ற காலங்கள் போவதும் இல்லையால்;
மேகின்ற காலங்கள் வெளியுற நின்றன;
தாழ்கின்ற காலங்கள் தன்வழி ஆகுமே.

ஆகின்ற [1]காலொளி யாவது கண்டபின்
போகின்ற காலங்கள் போவது மில்லையான்
[2]மேகின்ற [3]காலம் வெளியுற நின்றன[4]
[5]தாழ்கின்ற காலங்கள் தன்வழி யாகுமே. (34)

வேறு பாடம்: 1. தாலொளி (அ) I. 2. மேனின்ற (அ இ ஈ எ ஒ) I; மேல்கின்ற (ஆ ஊ) I. 3. காலம் (சண்) 4. நின்றபின் (எ) IV. 5. தானின்ற (எ) II.

கருத்து: யோகத்தில் ஒளியைக் கண்டபிறகு காலத்தை வெல்லும் ஆற்றல் கைவரும். காலம் எல்லாம் இறையனுபவம் வாய்க்கும். பிறர் வகையில் தாழ்வை உண்டாக்கும் காலம், யோகிக்கு, அவன் சித்தத்தில் நிற்பதாக அமையும். "நும் சித்தத்து நின்றே நிலைபெற நீர் நினைந்துய்ம்மினே" என்று ஆசிரியர் பின்னும் கூறுவார்.

ஆகின்ற கால் - உயிராற்றல் ஆகின்ற காற்று என்க. அம்மூச்சுக் காற்றால் ஒளியைக் கண்டபிறகு என்க. காலங்கள் போவதில்லை - காலத்தை வெல்லலாம். மேகின்ற - மேவுகின்ற என்பதன் திரிபு. வெளி - அனுபவம். தாழ்கின்ற - தங்குகின்ற; கட்டுப்பட்டு நிற்கின்ற.

உலகம் தழைக்கும்

671. தன்வழி யாகத் தழைத்திடு ஞானமுந்
தன்வழி யாகத் தழைத்திடும் வையகந்
தன்வழி யாகத் தழைத்த பொருளெல்லாந்
தன்வழித் தன்னரு ளாகிநின் றானே. (35)

கருத்து: யோகி தன் சித்தத்தில் நிலைத்து நின்று இறையொளியைக் கண்டால், ஞானம் தழைக்கும். இவ் யோகியின் செயலால் உலகம் தழைக்கும். செல்வம் தழைக்கும். இவ் யோகி அருளினால் இயக்கப்படுவான்.

தன் - எல்லா இடங்களிலும் இறைவனைக் குறிக்கும். மகிமா என்ற சித்தியை எய்திய யோகி நின்றான் - என எழுவாய் வருவிக்க.

பிராத்தி

எண்ணியவாறே

672. நின்றன தத்துவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப்படையானவை எல்லாம்;
கொண்டவை ஓராண்டு கூட இருந்திடில்
விண்டது சத்தியகாரம் - அது ஆமே.

நின்றன தத்துவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படையா னவையெல்லாங்
கொண்டவை யோராண்டு [1]கூட விருந்திடில்
விண்டது [2]சத்திய காரம தாமே. (36)

வேறு பாடம்: 1. கூடி (ஆ ஊ) IV. 2. வேநல்ல பிராத்தியதாகுமே (எ) IV.

கருத்து: பிராத்தி என்ற சித்தியை ஆசிரியர் இவ்வாறு விளக்குகின்றார். இஃது எண்ணியவற்றை எண்ணியவாறு எய்துதலாகும். யோகி அருள் ஆகிய சத்தியின் வழிநின்று, பொருள்களை எல்லாம் அருள்மயமாகப் பார்த்து ஓர் ஆண்டு பழகினால், எண்ணியவற்றை எண்ணியவாறு எய்தலாம்.

'கண்டனவாகிய பூதப்படை, தத்துவ நாயகியுடன் நின்றன' எனக் கூட்டுக. கூட - சத்தி தம்மோடு பொருந்தி நிற்க. பூதப்படை - ஆன்ம தத்துவங்கள். விண்டது - வெளிப்படுவது. சத்தியகாரம் - சத்தியாகாரம் என்பதன் திரிபு; சத்தியின் வடிவம்.

கரிமா

உலகம் முழுதும் காணலாம்

673. ஆகின்ற மின் ஒளி ஆவது கண்டபின்
பாகின்ற பூவில் பரப்பு-அவை காணலாம்
மேகின்ற காலம் வெளியுற நின்றது
போகின்ற காலங்கள் போவதும் இல்லையே.

ஆகின்ற [1]மின்னொளி யாவது கண்டபின்
பாகின்ற பூவிற் பரப்பவை காணலா
[2]மேகின்ற காலம் வெளியுற நின்றது
போகின்ற காலங்கள் போவது மில்லையே. (37)

வேறு பாடம்: 1. பின்னொளி (அ ஆ) I. 2. மேனின்ற (அ ஆ இ) II.

கருத்து: யோகி அருட்சத்தியின் ஒளியைக் கண்டால், பூமியின் பரப்பு முழுவதையும் இருந்த இடத்திலிருந்தே காணலாம். பின்பு எப்போதும் சிவானுபவம் வாய்க்கும். பிறர் வகையில் கழிந்து கொண்டே யிருக்கும் காலம், இவன் வகையில் நிற்கும்.

மின் - சத்தி. அருட்சத்தியின் ஒளி என்க. பாகின்ற - பல வகையான. பல்குகின்ற என்பதன் மரூஉ. பூ - புவனம்.

இருந்தபடியே

674. போவதொன்று இல்லை; வருவதுதான் இல்லை;
சாவது ஒன்று இல்லை; தழைப்பதுதான் இல்லை;
தாமதம் இல்லை; தமர்-அகத்து இன்னொளி
ஆவதும் இல்லை அறிந்து கொள்வார்க்கே.

போவதொன் றில்லை வருவது தானில்லை
சாவதொன் றில்லை தழைப்பது தானில்லை
தாமத மில்லை தமரகத் தின்னொளி[1]
யாவது மில்லை யறிந்துகொள் வார்க்கே. (38)

வேறு பாடம்: 1. தின்னொலி (ஆ ஊ) IV.

கருத்து: துளையுள்ளதாகிய சுழுமுனை நாடியில் மூச்சைச் செலுத்தி, உச்சந்தலையில் பேரொளியைக் கண்டோர், எதையும் காணவோ, பெறவோ எங்கும் சென்று வரவேண்டுவதில்லை. அவர் இருந்த படியே இருப்பர். முதுமையோ சாவோ அவர்க்கு இல்லை. அவர் புதிய மலர்ச்சி பெறுவதும் இல்லை. அவர் தமோ குண வயப்படுதல் இல்லை.

போவது ஆகிய செயல் ஒன்று இல்லை என்க. தழைப்பது - பிறப்பது. இறப்பொடு பிறப்பு இல்லை. தாமதம் - தமோகுணம். தமர் அகம் - துளை உள்ள சுழுமுனைநாடி. அறிந்து கொள்வார் - தலையுச்சியில் மின் ஒளி கண்டோர்.

மற்றோர் உடம்பில் புகலாம்

675. அறிந்த பராசத்தி உள்ளே அமரில்
அறிந்தது பூதப்படை-அவை எல்லாம்
குவிந்தவை ஓர் ஆண்டு கூட இருக்கில்
விரிந்த பரகாயம் மேவலும் ஆமே.

அறிந்த பராசத்தி யுள்ளே யமரி[1]
[2]லறிந்தது பூதப் படையவை யெல்லாங்
[3]குவிந்தவை யோராண்டு கூட விருக்கில்
[4]விரிந்த பரகாய மேவலு மாமே. (39)

வேறு பாடம்: 1. யமரிற் (அ எ) IV. 2. பறிந்தது (அ எ) IV; பிறிந்தது (ஓ) IV. 3.குறிந்தவை (எ) I. 4. விரிந்தது (சண்)

கருத்து: பராசத்தி நம் உடலினுள் எழுந்தருளினால், தத்துவங்கள் அருள்மயமாகும். அவை தொகுதியாகப் பராசத்தியின் வழியிலேயே ஓர் ஆண்டு இருந்தால் யோகி பிற உடம்பில் புகலாம்.

உள்ளே - உடலில். பூதப்படை - தத்துவங்கள். அறிந்தது - அந்தச் சத்தியால் காணப்பட்டு அருள்மயம் ஆகும். குவிந்தவை - அவை தொகுதியாக நின்று. கூட இருக்கில் - அருட்சத்தியுடன். விரிந்த பரகாயம் - எண்ணற்ற உயிர்களுள் ஏதேனும் ஒன்றின் உடலில்.

பிராக்ாமியம்

பேரொளிக் காட்சி

676. ஆன விளக்கொளி யாவது அறிகிலர்
மூல விளக்கொளி முன்னே உடையவர்
கால விளக்கொளி கண்டு கொள்வார்கட்கு
மேலை விளக்கொளி வீடு எளிதாம் நின்றே.

ஆன விளக்கொளி யாவ தறிகிலர்
மூல விளக்கொளி முன்னே யுடையவர்
[1]கால விளக்கொளி கண்டுகொள் வார்கட்கு
மேலை விளக்கொளி வீடெளி தாநின்றே[2]. (40)

வேறு பாடம்: 1. கான (எ) IV; கானல் (ஓ) IV; காலன் (ஊ) IV. 2. தாயதே (ஓ) IV.

கருத்து: ஒவ்வொருவரது உடம்பிலும் மூலாதாரத்தில் செஞ்சுடராகக் குண்டலிசத்தி இருக்கிறாள். அச்சுடரைத் தியானித்து, உயிராற்றலை வளர்த்தால், ஆக்கம் தரும் பெருஞ்சோதியைப் புருவமத்தியில் காணலாம் என்பதை யாரும் அறியார். இது மூச்சினைப் பாதமாக உடைய ஒளி. இது பிறகு கால தத்துவத்தைக் கடந்து

பரமாகாயத்தில் விளங்கும். அப்பேரொளியையும் தலையுச்சியில் காணலாம். அதைக்காணும் யோகி வீடுபெறுதல் எளிதாகும்.

மூலவிள்க்கு - மூலாதாரத்தில் உள்ள கனல். உடையவர் அறிகிலர் என்க. கால விளக்கொளி - மூச்சுக் காற்றினை இரண்டு பாதங்களாக உடைய ஒளி. இது நெற்றியில் புருவமத்தியில் காண்பது. மேலை - தலையுச்சி. வீடு - விளக்கொளி காண்டலாகிய வீடு. இதுவே முத்தி.

ஈசத்துவம்

ஈசனாதல்

677. நின்ற சதாசிவநாயகி தன்னுடன்
க்ண்டன பூதப் படையவை எல்லாம்
கொண்டவை ஓராண்டு கூடி இருந்திடில்
பண்டைய, ஈசன் தத்துவம் ஆகியே.

நின்ற சதாசிவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படையவை யெல்லாங்
கொண்டவை யோராண்டு [1]கூடி யிருந்திடிற்
[2]பண்டைய வீசன் [3]றத்துவ மாகியே[4]. (41)

வேறு பாடம்: 1. கூட (ஈஓ) I. 2. பண்டையப் (சண்) 3. பரத்துவ (ஆ) IV. 4. மாகுமே (எ) IV.

கருத்து: பராசத்தியால் அருள்மயமாக்கப்பட்ட தத்துவங்கள் யாவும், அவள் வழியே ஓர் ஆண்டு நடைபெற்றால் ஈசத்துவம் என்னும் சித்தி எய்தும். பிறகு, முன்பு போல இயங்கும்.

கண்டன - அவளால் அருள் மயம் ஆக்கப்பட்டவையான. ஈசன் தத்துவம் ஆகிப் பண்டைய எனக் கூட்டுக. ஈசத்துவம் ஆகிப் பின்பு முன்போல ஆகும்.

சிவமாதல்

678. ஆகின்ற சந்திரன் தன் ஒளியாயவன்
ஆகின்ற சந்திரன் தட்பமும் ஆயிடும்;
ஆகின்ற சந்திரன் தன்கலை கூடிடில்
ஆகின்ற சந்திரன் தான் அவன் ஆகுமே.

ஆகின்ற சந்திரன் [1]றன்னொளி யாயவ
னாகின்ற சந்திரன் றட்பமு மாயிடு
மாகின்ற சந்திரன் [2]றன்கலை கூடிடி[3]
லாகின்ற சந்திரன் றானவ னாகுமே. (42)

வேறு பாடம்: 1. றண்ணளி (சண்); றண்ணொளி (திரு) 2. நற்கலை (ஈ) IV; றண்கலை (ஒ) IV. 3. கூட்டிடி (இ ஈ) IV.

கருத்து: நெற்றியும் தலையும் உடம்பின் சந்திர மண்டலம் ஆகும். புருவமத்தியில் பேரொளி காணும் யோகி, தனது உயிராற்றலில் சந்திரனின் கலைகள் கலக்கப்பெறுகின்றான். அதனால் மூலாதாரத்திலிருந்து எழுந்து நெற்றிக்கு வந்த மூலக்கனல் குளிர்ந்துவிடும் (ஆனால் ஆற்றல் நீங்காது.) சந்திரனின் கலைகள் 16 ஆகும். அவை உயிராற்றலுடன் கூடியுள்ள நிலையில் வளர, வளர, உயிரே சிவமாகிவிடும். (ஆயினும், இவன் ஆன்மா என்ற பொருள் தன்மை மாறாது என்பதை அடுத்த பாடல் கூறும்).

ஆகின்ற - உடலில் நெற்றி மண்டலம் ஆகின்ற. ஆயவன் - இங்குப் பெற்றவன் எனப் பொருள்படும். தட்பம் - குளிர்ச்சி. 4 ஆம் அடியில் சந்திரன் - சிவன்.

முத்தொழில் செய்யலாம்

679. தானே படைத்திட வல்லவன் ஆயிடும்;
தானே அளித்திட வல்லவன் ஆயிடும்;
தானே சங்காரத் தலைவனும் ஆயிடும்;
தானே இவன் என்னும் தன்மையன் ஆமே.

தானே படைத்திட வல்லவ னாயிடுந்
தானே யளித்திட [1]வல்லவ னாயிடுந்
தானே சங்காரத் தலைவனு மாயிடுந்
தானே யிவனென்னுந் [2]தன்மைய னாமே. (43)

வேறு பாடம்: 1. வல்லமை தானாகுந் (ஒ) IV. 2. தண்மைய (ஊ) IV.

கருத்து: ஈசத்துவம் பெற்ற யோகி முத்தொழிற் கடவுளர் மூவரையும் ஒப்பான். ஒப்பான் எனினும் ஆன்மா என்னும் தன்மையில் மாறுபடான்.

இவன் - ஆன்மா.

பரம்பொருட்காட்சி

680. தன்மையன் ஆகித் தழைத்த கலையினுள்
பன்மையது ஆகப் பரந்த ஐம்பூதத்தை
வன்மையதாக மறித்திடில், ஓராண்டில்
மென்மையது ஆகிய மெய்ப்பொருள் காணுமே.

[1]தன்மைய னாகித் தழைத்த கலையினுள்
[2]பன்மைய தாகப் பரந்தவைம் பூதத்தை
[3]வன்மைய தாக மறித்திடி லோராண்டின்
[4]மென்மைய தாகிய மெய்ப்பொருள் காணுமே. (44)

வேறு பாடம்: 1. தண்மையதாகத் (எ) IV; தன்மையனாகத் (இ ஈ ஒ) I; தன்மையதாகத் (சைவ) 2. பண்மைய (எ) I; வண்மைய (அ ஊ ஒ) I. 3. வண்மைய (அ ஊ எ ஒ) I. 4. மெய்மை (இ ஈ ஊ ஒ) I.

கருத்து: வளர்கின்ற சந்திர கலைகளின் அனுபவத்தைப் பெறுவதோடு, கலாதத்துவம் ஆகிய ஐந்து கலைகளின் தொடர்பினைப் பெற்று, அவற்றின் உதவியால் (உடம்பையும் உலகையும் ஆக்குவனவாகிய) ஐந்து பூதங்களையும் வெவ்வேறாகக் காணாமல், சிவமாகவே கண்டால், மேலான பரம்பொருளின் காட்சியைத் தலையுச்சியில் பெறலாம்.

'யோகி தன்மையனாகி மறித்திடில்' என்க. கலை - நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாத்தியதீதை என்ற ஐந்து. மென்மை - மேன்மை என்பதன் குறுக்கம்.

வசித்துவம்

பிறரை வசப்படுத்த

681. மெய்ப்பொருளாக விளைந்தது ஏதெனில்
நற்பொருளாகிய நல்ல வசித்துவம்;
கைப்பொருள் ஆக, கலந்த உயிர்க்கு எல்லாம்
தற்பொருள் ஆகிய தன்மையன் ஆகுமே.

மெய்ப்பொரு ளாக விளைந்தது வேதெனி
னற்பொரு ளாகிய நல்ல வசித்துவங்
கைப்பொரு ளாகக் கலந்த வுயிர்க்கெல்லாந்
தற்பொரு [1]ளாகிய தன்மைய னாகுமே. (45)

வேறு பாடம்: 1. ளாகித் (அ) IV.

கருத்து: வசித்துவம் என்னும் சித்தி, அனைவரையும் தன்வயப் படுத்தல் ஆகும். அது யாது என்றால், உயிர் சிவமேயாதல் தான். (ஆட்டும் பம்பரம் போல்) உயிர்களை நியதி என்னும் விதிப்படியும், பிறகு அருள் வழியிலும் இயக்குபவன் ஆகிய சிவனே தன் எண்ணப்படி இயங்குபவன். உயிர் சிவனாகிவிட்டால், பிற உயிர்கள் அதன் வயப்படும்.

கைப் பொருள் - உரிமை உடைய பொருள். உயிர்க்கு எல்லாம் தற்பொருள் - சிவம்.

புலன்கள் நல்லனவாகும்

682. தன்மையதாகத் தழைத்த பகல், அவன்
மென்மையது ஆகிய மெய்ப்பொருள் கண்டிடில்
பொன்மையது ஆகப் புலன்களும் போயிட,
நன்மையது ஆகிய நற்கொடி காணுமே.

தன்மைய [1]தாகத் தழைத்த பகலவன்
மென்மைய தாகிய மெய்ப்பொருள் கண்டிடிற்
[2]பொன்மைய தாகப் புலன்களும் போயிட
நன்மைய தாகிய நற்கொடி காணுமே. (46)

வேறு பாடம்: 1. னாகத் (ஒ) IV. 2. புன்மைய (த)

கருத்து: சிவமாம் தன்மை பெற்று, வளர்கின்ற சிவானுபவத்தை யோகி அனுபவிக்கும் நாட்களில், போகப் போக நுணுக்கமாகும் மெய்ப்பொருளை (ஞானக்காட்சி) அவன் கண்டால், அவனது உடம்பில் ஐந்து பொறிகளும் பொன் ஆகும். புலன்கள் திருந்தும். திருவருட் சத்தி காட்சி நல்குவாள்.

தன்மை - சிவமாம் தன்மை. பகல் - நாள். புலன்களும் - எல்லாப் புலன்களும். பொன்மையதாக - பொன்மயமாக. போயிட - மாறிவிட நற்கொடி - திருவருட்சத்தி.

புவனங்களுக்கும் போய்வர

683. நற்கொடி ஆகிய நாயகி தன்னுடன்
அக்கொடியாக மறிந்திடில் ஓர் ஆண்டு
பொற்கொடி ஆகிய புவனங்கள் போய்வரும்;
கற்கொடி ஆகிய காமுகன் ஆமே.

நற்கொடி யாகிய நாயகி தன்னுட
[1]னக்கொடி யாக மறிந்திடி லோராண்டு
பொற்கொடி யாகிய புவனங்கள் போய்வருங்
கற்கொடி யாகிய காமுக னாமே. (47)

வேறு பாடம்: 1. மற்கொடி (ஆ இ ஈ ஊ) II.

கருத்து: திருவருட்சத்தியைத் தரிசித்து, அவள் தனது உடம்பில் விளங்கும் அனுபவத்தை ஓர் ஆண்டு பெற்ற யோகி எல்லாப் புவனங்களுக்கும் சென்றுதிரும்பும் சித்தியைப் பெறுவான். ஆனால் அதைப் பயன்படுத்த ஆசைப்படமாட்டான்.

தன்னுடன் - தன் அருளால். மறிந்திடில் - மாறினால். கல்கொடி - கல்லில் கொடி. இது இல்லாதது போல உண்மை யோகிக்கு இச்சித்தியினைச் செயலாக்கும் ஆசை இராது. ஆமே - ஈற்று ஏகாரம் தேற்றம்.

அருளறிவு

684. காமரு தத்துவ மானது வந்தபின்
பூமரு கந்தம் புவனம்-அது ஆயிடும்;
மாமரு உன் இடை மெய்த்திடும் மானன்-ஆய்
நா மருவும் ஒளி நாயகம் ஆனதே.

காமரு தத்துவ மானது வந்தபின்[1]
பூமரு கந்தம் புவனம தாயிடு[2]
மாமரு [3]வுன்னிடை மெய்த்திடு மானனாய்
நாமரு [4]வும்மொளி நாயக மானதே. (48)

வேறு பாடம்: 1.கண்டபின் (த) 2. தாகியே (அ) IV. 3. வுன்னிடமெய்திடு (எ) I; வுன்னிடை மெய்த்திய மானனாம் (த) 4. வும்மொழி (இ) I.

கருத்து: இப்பாடல் முதல் மேனிலைச் சித்திகளைக் கூறுகின்றார். வசித்துவம் என்னும் சித்தி கைவந்தபின், எல்லா உலகமும் பூவினுள்

அடங்கித் தோன்றும் மணம்போல, யோகியின் அறிவில் அடங்கும். அருளே உயிரின் அறிவாகி, அவ்வறிவும் எண்ணிய இடத்தில் செயலாக மலரும். நாதமும் விந்துவும் தலைமையாக நிற்கும்.

இஃது எண்சித்திக்கும் உயர்ந்த பேறாகும்.

தத்துவம் - வசித்துவம். மா - அருட் சத்தி. மரு - பொருந்திய. மாமரு - சிறந்த மணம் எனலுமாம். உன் இடை - நினைத்த இடம்; நினைத்த சமயம். மெய்த்திடும் - உண்மையாக அடையும். மானன் - ஆன்மா; இயமானன் என்பது முதற்குறைந்தது. அருட்சத்தி இவனிடம் நினைத்த மாத்திரையில் தொழிற்படுவாள். நா மருவும் ஒளி - நாதம், விந்து என்னும் இரண்டும். நாயகம் - சிவன்.

சோதியுட் சோதி

685. நாயகம் ஆகிய நல்லொளி கண்டபின்
தாயகம் ஆக, தழைத்து அங்கு இருந்திடும்
போய், அகம் ஆன புவனங்கள் கண்டபின்
பேய்-அகம் ஆகிய பேரொளி காணுமே.

நாயக மாகிய [1]நல்லொளி கண்டபின்
தாயக மாகத் தழைத்தங் கிருந்திடும்
போயக மான புவனங்கள் கண்டபின்[2]
பேயக மாகிய பேரொளி காணுமே. (49)

வேறு பாடம்: 1. நலனொளி (சண்) 2. கண்டு பின் (த)

கருத்து: யோகி ஒளிக்குள் ஒளி காண்பதைக் கூறுகின்றார். மேற்பாடலில் கூறியாங்கு, விந்துவும் நாதமும் இணைந்த ஒளி, உயிரொளியாகும். அதைக் காண்பது புருவ மத்தியில். பின்பு, அதற்குத் தாயகமான அருள் - ஒளி அதனுள் தோன்றும். அவ்வொளியில் சத்தியின் புவனங்களை எல்லாம் காணலாம். பின்பு, அவ்வருளொளியின் உள்ளே சிவ - ஒளி தோன்றும்.

அகம் ஆன புவனங்கள் - சத்தியின் புவனங்கள். பே - அச்சம். அணுகுதற்கு அருமையால் அச்சம் தருகின்ற. பேரொளி - சிவவொளி. நாயக ஒளியை உயிரொளி எனவும், அகமான புவனங்களைக் காண்பதற்கு உதவும் ஒளியை அருளொளி எனவும் அதையும் கடந்து விளங்கும் ஒளியைச் சிவவொளி எனவும் கொள்க. இதுவே “சோதியுட் சோதியுட் சோதி” என வள்ளலார் கூறுவது.

நாதம் கேட்கும்

686. பேரொளி ஆகிய பெரிய அவ் எட்டையும்
பார் ஒளியாகப் பதைப்பு அறக் கண்டவன்
தார் ஒளியாகத் தரணி முழுதும் ஆம்
ஓர் ஒளி ஆகிய கால்ஒளி காணுமே.

பேரொளி [1]யாகிய பெரியவவ் வெட்டையும்[2]
பாரொளி யாகப் பதைப்பறக் கண்டவன்[3]
றாரொளி யாகத் தரணி முழுதுமா
மோரொளி யாகிய காலொளி காணுமே. (50)

வேறு பாடம்: 1. யாகிப் (த) 2. வேட்டையும் (எ) I. 3. கண்டபின் (ஆ இ ஊ) II.

கருத்து: அருளாகிய பேரொளியில் விளங்கித் தோன்றும் சத்தி புவனங்கள் எட்டினையும் பூமியைக் காண்பது போலவே எவ்வித ஆசையும் இன்றிக் கண்ட யோகி, இயக்கும் ஒளியாக உலகம் முழுதும் உள்ள பிரணவ நாதத்தைக் கேட்பான். முதலில் பிரணவத்தின் பிரசாதமாகிய விந்து ஒளி தோன்றும். பின்பு அதுவே நாதமாகக் கேட்கும்.

அவ் எட்டு - சத்தி புவனங்கள் எட்டு. தார் - நேரான. கால் ஒளி - பிரணவத்தின் ஒளி. பிரணவத்திலிருந்து படைப்புத் தொடங்குதலின் அதனைத் தரணி முழுதுமாம் ஓரொளி என்றார். யோகியின் உச்சக் காட்சியில் ஒலியும் ஒளியும் ஒன்றே. இதனை வள்ளலார் "மயில் குயிலாச் சுதடி" என்பர். (திருவருட்பா, 6 ஆம் திருமுறை, ஊரன் அடிகள் இரண்டாம் பதிப்பு, 1981. பக்கம் 932).

அருள் - அனுபவம்

687. காலோடு உயிரும் கலக்கும் வகை சொல்லின்,
கால் - அது அக்கொடி நாயகி தன்னுடன்
கால் - அது ஐஞ்ஞூற்று ஒருபத்து மூன்றையும்
கால் - அது எண்மடி கொண்ட இவ்வாறே.

காலோ டுயிருங் கலக்கும் வகைசொல்லிற்
காலது வக்கொடி நாயகி தன்னுடன்
காலது வைஞ்ஞூற் றொருபத்து மூன்றையுங்
காலது [1]வெண்மடி கொண்டவிவ் வாறே. (51)

வேறு பாடம்: 1. வேண்டிக் (இ ஈ) I; பெண்மண்டிக் (எ) I; வெண் மண்டி (ஒ) I; யெண்மண்டி (அ) I; யென்மண்டி (ஊ) I; வே மண்டிக் (த)

கருத்து: அருட்சத்தியோடு ஆன்மா கலக்கும் வகையைக் கூறினால், அது எட்டு வகையாகும். அது எட்டுவகைச் சித்திகளை எய்தும் அனுபவம் ஆகும். தத்துவங்கள் அருட்சத்தியால் அருள்மயமாக்கப் பட்டு நிற்க, ஐந்நூறு, பத்து, மூன்று என முறையே சிறந்த நாடிகளில் மூச்சுக்காற்று இயங்கி, நெற்றியிலும் தலையுச்சியிலும் ஒளியைக் காணுதலில் அருட்சத்தியனுபவம் கிடைக்கின்றது.

குறிப்பு: பதிப்புகளில் 4 ஆம் அடி 'எண்மடி' என்பதற்கு மாறாகப் 'பெண்மண்டி' எனப் பாடங்கொண்டு எழுதும் உரை பொருந்தாது.

முதல்அடி: கால் - 1/4 என்ற எண்ணைக் குறிப்பது 'வ' என்ற எழுத்து. அதனால் குறிக்கப்படுபவள் அருட்சத்தி. உயிர் - ஆன்மா. *இரண்டாம் அடி*: கால் - முதனிலைத் தொழிற்பெயர். காலப்படும் பொருள்கட்கு ஆகியது; மாயையிலிருந்து வெளிப்படுத்தப்படும் தத்துவங்கள். கொடி நாயகி - அருட்சத்தி. *மூன்றாம் அடி*: கால் - நாடிகள். அவை 72000 எனினும் முக்கியமானவை 500. அவற்றுள் சிறந்தவை 10. அவற்றுள்: சிறந்தவை 3. *நான்காம் அடி* : கால் - பிராணவாயு. எண்மடி - எட்டு முறை.

அமுதக் கடல்

688. ஆறு-அது ஆகும் அமிர்தத் தலையினுள்
ஆறு-அது ஆயிரம் முந்நூற்றொடு ஐஞ்சு உள;
ஆறு-அது ஆயிரம் ஆகும்; வரும் வழி
ஆறு-அது ஆக, வளர்ப்பது இரண்டே.

ஆறது வாகு மமிர்தத் தலையினு[1]
ளாறது வாயிர முந்நூற்றொ டைஞ்சுள
வாறது வாயிர [2]மாகும் வரும்வழி[3]
யாறது வாக வளர்ப்ப திரண்டே. (52)

வேறு பாடம்: 1. கலையினு (ஆ) IV. 2. மாகு (எ ஈ) I. 3. மரும்வழி (இ ஊ) I; மிரும் வழி (ஒ) I; மரும்விழி (ஆ) I; மருவழி (ஈ எ) I.

கருத்து: சந்திர கலைகள் பதினாறினுள், ஆறாவது கலையாகிய 'நிரோதினி' அமுதக் கடல் ஆகும். உயிராற்றலை அக்கலையில் சேர்க்கும் நாடிகள் 1305. இக்கலையின் அனுபவம் சகஸ்ரார அனுபவம் பெறுதற்கு வழியாகும். உயிராற்றல் மூலாதாரம் முதல்

ஆறு ஆதாரங்களின் வழியே சகஸ்ராரத்தை அடைதல் வேண்டும். அங்குச் சிவ - சத்தி தரிசனம் வாய்க்கும்.

ஆறு (1ஆம் அடி) - சந்திரகலை 16ல் ஆறாவது ஆகிய நிரோதினி. சந்திரகலை பதினாறினுள், ஐந்தாவது அர்த்த சந்திரன். அஃது அமுதம் ஊறும் இடம், எனவே ஆறாவதை "அமர்தத்தலை" என்றார். தலை - மேல். ஆறு - (2 ஆம் அடி) - வழி. ஆயிரம், முந்நூறு, ஐந்து என்பவை நாடிகள். ஆறு (3 ஆம் அடி) - வழி. ஆயிரம் - சகஸ்ராரம். ஆறு (4 ஆம் அடி) - ஆறு ஆதாரம். இரண்டு - சிவம் சத்தி. அலை - கடல்.

நாதம் பாதி, விந்து பாதி

689. இரண்டினின் மேலே சதாசிவ நாயகி
இரண்டு-அது கால்கொண்டு எழுவகை சொல்லில்
இரண்டு-அது ஆயிரம் ஐம்பதொடு ஒன்றாத்
திரண்டது; காலம் எடுத்ததும் அஞ்சே.

இரண்டினின் மேலே சதாசிவ நாயகி
யிரண்டது கால்கொண் டெழுவகை சொல்லி
லிரண்டது வாயிர மைம்பதொ டொன்றாத்
திரண்டது [1]கால மெடுத்தது மஞ்சே. (53)

வேறு பாடம்: 1. கோல (ஆ) IV.

கருத்து: சுத்த மாயா தத்துவம் ஐந்தனுள், சுத்த வித்தை, மாயேச் சுரம் என்ற இரண்டிற்கும் மேலே (மூலமாய்) உள்ளதான சாதாக் கியத்தில் உள்ள சதாசிவனும் மனோன்மணியும் யோகியின் உடம்பில் இடகலை, பிங்கலை என்ற இரண்டு பாதங்களும் கொண்டு எழுந்தருளும் வகை யாது என்றால், ஐம்பத்தோர் எழுத்துகள் அகரம், உகரம் என இரண்டு எழுத்துகளுள் அடங்க, அந்தப் பிரணவ ஒலி ஆயிரக்கணக்கான நாடிகளில் பரவி, அதன் பிரசாதமாக (விளைவாக) நாதமும் விந்துவும் தோன்றும். நாதம் பாதி, விந்து பாதியாக (சிவன் பாதி, சத்தி பாதியாக) இணைந்து சதாசிவமாக சகஸ்ராரத்தில் காட்சியளிக்கும். அக்காலம் சதாசிவத்திற்கு ஐந்து முகங்கள் அமைந்திருக்கும். சதாசிவம் உயிரை வளர்க்கும் (மெய்ஞ்ஞானத்தைப் பெருக்கும்).

இரண்டு (1 ஆம் அடி) சுத்தவித்தை, மயேச்சுரம் ஆகியவை. மேலே என்பது உடலில் நெற்றி நடு முதல் தலை உச்சிவரை உள்ள இடம்.

இரண்டது கால் - இடகலை பிங்கலை. எழும் வகை என்க. இரண்டது (3 ஆம் அடி) - அகரம், உகரம். ஆயிரம் - பலப்பல நாடிகள். ஐம்பதொடு ஒன்று என்பவை அட்சரங்கள். ஐம்பத்தொன்றும் இரண்டாய்த் திரண்டது. காலம் - அக்காலத்தில். அஞ்சு - ஐந்து முகங்கள்; சதா சிவத்திற்கு முகம் ஐந்து.

மனோன்மணி

690. அஞ்சுடன் அஞ்சு முகம் உள நாயகி
அஞ்சுடன் அஞ்சு-அது ஆயுதம் ஆவது
அஞ்சு-அது அன்றி, இரண்டு - அது ஆயிரம்
அஞ்சு-அது காலம்; எடுத்துளும் ஒன்றே.

அஞ்சுட னஞ்சு முகமுள நாயகி
யஞ்சுட னஞ்சது வாயுத மாவது
வஞ்சது [1]வன்றி யிரண்டது வாயிர
மஞ்சது கால மெடுத்துளு மொன்றே. (54)

வேறு பாடம்: 1. வென்றி (அ ஈ ஊ ஒ) I பின்றி (சண்)

கருத்து: சதாசிவநாயகி மனோன்மணி ஐந்து முகம் உடையவள் ஆவதோடு, ஐந்து நிறமும் கொண்டவள். அவளது ஆயுதம் பத்து வாயுக்களாம். அவற்றுள் பிராணன் என்ற மூச்சுக் காற்று, இடகலை பிங்கலை நாடிகள் வழியாகச் செல்லுதலின் இரண்டாகும். அது ஐந்து நாழிகைக்கு ஆயிரம் மூச்சாக இயங்கும். அவள் திருப்பெயர் தியானிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

அஞ்சுடன் (1 ஆம் அடி) ஐந்து நிறங்களுடன். அஞ்சுடன் அஞ்சு (2 ஆம் அடி) பத்து வாயுக்கள். அஞ்சது அன்றி - பத்து வாயுக்களுள் ஐந்து நீங்க. ஆயிரம் - சகஸ்ராரம் எனலும் ஆம். உள்ளும் என்பது இடைக் குறைந்தது; தியானிக்கப்படும்.

கவிழ்ந்த தாமரை நிமிரும்

691. ஒன்று - அது ஆகிய தத்துவ நாயகி
ஒன்று - அது கால்கொண்டு ஊர்வகை சொல்லிடில்,
ஒன்று - அது வென்றிகொள் ஆயிரம் ஆயிரம்
ஒன்று - அது காலம்; எடுத்துளும் ஒன்றே.

ஒன்றது வாகிய தத்துவ நாயகி
ஒன்றது கால்கொண் டூர்வகை சொல்லிடி
லொன்றது [1]வென்றிகொ ளாயிர மாயிர
மொன்றது கால மெடுத்துளு மொன்றே[2]. (55)

வேறு பாடம்: 1. வொன்றிக்கொ (ஊ) IV. 2. முன்னே (அ ஆ எ ஒ ஓ ஊ) II.

கருத்து: சிவம் வேறு, சத்தி வேறு அல்ல. எனவே ஒரு பரம்பொருளாகிய பராசத்தி சுழுமுனை என்ற கால்வாய் வழியாக உச்சந் தலைக்கு ஏறும் வகையைக் கூறினால், அங்கு உள்ள கவிழ்ந்த சகஸ்ராரத் தாமரை ஒன்று. பிறகு அதுவே நிமிரும். அந்த அனுபவத்தை ஒரு நாழிகை நேரம் பெறலாம். ஆகவே அவள் தியானிக்கத் தக்கவள்.

ஒன்றது கால் - சுழுமுனை. ஆயிரம் - சகஸ்ராரம். முதலில் கவிழ்ந்த நிலையில் இருந்து, பிறகு நிமிர்தலின் இரண்டு சகஸ்ராரம் என்ற கருத்தில், 'ஆயிரம் ஆயிரம்' என இரண்டு முறை கூறினார்.

மந்திர உடம்பு

692. முன் எழும் அக்கலை நாயகி தன்னுடன்
முன் நூறு வாயு முடிவகை சொல்லிடின்
முன் நூறும் ஐம்பதோடு ஒன்றுடன் அஞ்சுமாய்
முன் நூறு வாயு முடிவகை ஆமே.

முன்னெழு மக்கலை நாயகி தன்னுடன்
[1]முன்னூறு வாயு முடிவகை சொல்லிடின்
[2]முன்னூறு [3]மைம்பதோ டொன்றுட னஞ்சுமாய்
[4]முன்னூறு வாயு முடிவகை யாமே. (56)

வேறு பாடம்: 1. முன்னுறு (சண்) (சைவ) 2. முன்னுறு (சைவ) 3. மைம் மலத்தோடொன்று மஞ்சுமாய் (அ) IV. 4. முன்னுறு (துடி) (சைவ)

கருத்து: ஆன்மா சதாசிவநாயகியாம் அருட்சத்தி மயமாகும் போது, பிரணவ உடம்பு பெறும்.

முன்நூறு - முன்னே ஆயுளாக விதிக்கப்பட்ட நூறாண்டு. வாயு - அந்நூறாண்டுக்குரிய மூச்சுக்காற்றின் எண்ணிக்கை. ஐம்பதோடு ஒன்று - 51 அட்சரம். அஞ்சு - ஐந்து; திருவைந்தெழுத்து.

மூச்சு வளம் பெறும்

693. ஆய்வரும் அத்தனி நாயகி தன்னுடன்
ஆய்வரு வாயு வளப்பு-அது சொல்லிடில்
ஆய்வரும் ஐஞ்ஞூற்று முப்பதோடு ஒன்பது
மாய்வு அரு வாயு வளப்புள் இருந்ததே.

ஆய்வரு மத்தனி நாயகி தன்னுட
னாய்வரு வாயு வளப்பது சொல்லிடி
லாய்வரு மைஞ்ஞூற்று முப்பதோ டொன்பது[1]
[2]மாய்வரு வாயு வளப்பு ளிருந்ததே. (57)

வேறு பாடம்: 1. முப்பத்தொன்றொ டொன்பது (த) 2. வாய்வரு (இ எ ஒ) II.

கருத்து: மனிதரின் ஒருநாள் சுவாச எண்ணிக்கை 21600. ஒவ்வொரு மூச்சிலும் 40 இல் 1 பங்கு குறைகிறது; அதாவது மொத்தம் 540 மூச்சுக் குறைகின்றன என்பர். அருட்சத்தியின் கலப்பால், அங்ஙனம் குறையும் இயல்பு நீங்கி, மூச்சு வளமை பெறும்.

தனி நாயகி - அருட் சத்தி. சத்தியுடனாய் வரும் வாயு என்க. வாயு - மூச்சுக்காற்று. வளப்பு - வளமை.

வாழ்நாள் நீளும்

694. இருநிதி ஆகிய எந்தை இடத்து
இருநிதி வாயு இயங்கும் நெறியில்
இருநூற்று முப்பத்து மூன்றுடன் அஞ்சாய்
இருநிதி வாயு இயங்கும் எழுந்தே.

இருநிதி யாகிய வெந்தை யிடத்து
விருநிதி வாயு வியங்கு நெறியி
லிருநூற்று முப்பத்து மூன்றுட னஞ்சா[1]
யிருநிதி வாயு [2]வியங்கு மெழுந்தே[3]. (58)

வேறு பாடம்: 1. னஞ்சில் (ஆ ஊ) IV. 2. வளப்புள்ளிருந்ததே (அ) IV. 3. மெழுத்தே (சண்) (சைவ).

கருத்து: இடகலை பிங்கலை என்ற இரண்டு நாடிகள் வழியே காற்று இயங்கும். இது இயல்பு. ஒரு நாளுக்கு 21600 முறை

இயங்கும் மூச்சு, சிவக்கலப்பு எய்திய யோகிக்கு 238 ஆகக் குறையும். குறையவே, இயல்பான 100 ஆண்டு ஆயுள் அவனுக்கு ஏறக்குறைய 9000 ஆண்டு ஆகும்.

இருநிதி (1ம், 3 ஆம் அடி) - பெரிய செல்வம்.

கனலாகவே

695. எழுகின்ற சோதியுள் நாயகி தன்பால்
எழுகின்ற வாயு இடம் - அது சொல்லில்
எழுநூற் றிருபத்தொன்பான் - அது நாலாய்
எழுந்துடன் அங்கி இருந்த இவ்வாறே.

எழுகின்ற சோதியுண் ணாயகி தன்பா
லெழுகின்ற வாயு விடமது சொல்லி
லெழுநூற் றிருபத்தொன் பானது நாலா
யெழுந்துட னங்கி [1]யிருந்தவிவ் வாறே. (59)

வேறு பாடம்: 1. யிருந்ததிவ் (எ) IV.

கருத்து: மூச்சு எவ்வகையில் புறப்பட்டு, எங்கெங்குச் சென்று எவ்விடம் சேர்கிறது என்றால், மூலாதாரம் நான்கு இதழ் உடையது; அதில் மூச்சு கனலை உண்டாக்கி, எழுந்து கனலாகவே 729 நாடிகளில் பரவியவாறு சுழுமுனை வழியாக முதலில் நெற்றி நடுவையும் பின்பு உச்சந் தலையையும் அடையும்.

எழுகின்ற - தலை உச்சியில் எழுகின்ற. அருட்சத்தி சகஸ்ராரத்தில் சோதியாக எழுகின்ற போது என்க.

நெற்றியில் அனுபவம்

696. ஆறு - அது கால்கொண்டு இரதம் விளைத்திடும்
ஏழு - அது கால்கொண்டு இரட்டி இறக்கிட
எட்டு - அது கால்கொண்டு இடவகை ஒத்தபின்
ஒன்பது மாநிலம் ஒத்தது வாயுவே.

ஆறது கால்கொண் டிரதம் [1]விளைத்திடு
மேழது கால்கொண் டிரட்டி யிறக்கிட
வெட்டது கால்கொண் டிடவகை யொத்தபின்[2]
னொன்பது மாநில மொத்தது வாயுவே. (60)

வேறு பாடம்: 1. விளைந்திடும் (உ) I. 2. யேற்றபின் (எ) IV.

கருத்து: கழுத்திற்கு மேற்பட்ட பகுதி சந்திர மண்டலம் ஆதலின் 6, 7, 8 எனக் கூறியவை சந்திரனின் கலைகள். ஆறாவது கலை நிரோதினி. இரதம் - தேர். இதன் வடிவம் முக்கோணம். எனவே இது நெற்றி ஆகும். தியானத்தின்போது இந்த ஆறாவது கலையால் நெற்றியின் மேற்பாகத்தில் புகை போன்ற நிறம் தோன்றும். ஏழாவது கலை நாதம். இதனால் ஒளி தோன்றிச் சாதனையைத் தீவிரமாக்கும். எட்டாவது கலை நாதாந்த சத்தி. இதனால் மின்னல் ஒளி உண்டாகும். ஒன்பது மாநிலம் - சத்தி மண்டலம். உயிர் உணர்வு இவ்விடத்தை அடைந்தால் மூச்சு அடங்கிவிடும்.

இஃது அருட் சத்தி ஆன்மாவிற் பதிதலால் விளையும் அனுபவம்.

சிவகலை

697. சந்திரன் சூரியன் தற்பரன் தாணுவில்
சந்திரன் தானும் தலைப்படும் தன்மையைச்
சந்தியிலே கண்டு தான் ஆம்; சகமுகத்து
உந்தி, சமாதி உடை ஒளி யோகியே.

சந்திரன் சூரியன் றற்பரன் றாணுவிற்
சந்திரன் றானுந் தலைப்படுந் தன்மையைச்
சந்தியி லேகண்டு தானாஞ் சகமுகத்[1]
துந்திச் சமாதி [2]யுடையொளி யோகியே. (61)

வேறு பாடம்: 1. சதுமுகத் (அ) IV. 2. யுடையோனி யோகியே (இ) IV.

கருத்து: தன் உடம்பில் இடக்கண் ஆகிய சந்திர ஒளியும் வலக் கண்ணாகிய சூரிய ஒளியும் உயிர் உணர்வுடன் கலந்த அக்கினியும் நெற்றி நடு வில் ஒன்றாக விளங்க, தலையுச்சியில், சகஸ்ராரத்தில் சிவப்பே ரொளியைச் சத்தியுடன் தரிசித்து, தனது நெற்றி மண்டலம் சந்திர மண்டலமாதலின், அதில் எங்கும் சிவகலை விளங்குதலைக் கண்டு யோகி அதில் ஒன்றிநிற்பான்.

சந்திரன் இடக்கண். சூரியன் வலக்கண். தற்பரன் - சிவன். தாணு - சிவன். சந்திரன் (2 ஆம் அடி) - ஆன்மா. சந்திர மண்டலத்தின் கலைகள். சந்தி - சந்திக்கும் இடம். நெற்றி நடுவாகிய ஆக்ஞைச் சக்கரம். சகமுகத்து - உலகில். 'சகமுகத்து உந்தி, சமாதி உடை ஒளி யோகி சந்தியிலே கண்டு தானாம்' என வினைமுடிவு செய்க.

698. அணங்கற்ற மாத லருஞ்சன நீவல்
வணங்குற்ற கல்விமா ஞான மிகுத்தல்
சுணங்குற்ற வாயர் சித்திதாங் கேட்டல்
நுணங்கற்றி ரோதல்கால் வேகத்து நுந்தலே. (ஔ, உ)

699. மரணஞ் சரைவிடல் வண்பர காயம்
இரணஞ்சேர் பூமி இறந்தோர்க் களித்தல்
அரணன் றிருவுரு வாதன்மூ வேழாங்
கரனுறு கேள்விக் கணக்கறிந் தோனே. (ஔ, உ)

700. ஓத மொலிக்கு முலகை வலம்வந்து
பாதங்க ணோவ நடந்தும் பயனில்லை
காதலி லண்ணலைக் காண வினியவர்
நாத னிருந்த நகரறி வோரே. (உ, ஔ)

701. மூல முதல்வேதா மாலரன் முன்னிற்கக்
கோலிய வைம்முகன் கூடிப் பரவிந்து
சாலப் பரநாதம் விந்து தனிநாதம்
பாலித்த சத்தி பரைபரன் பாதமே. (ஔ, உ)

உச்சிக்கு மேலே

702. ஆதார யோகத்து அதிதேவொடும் சென்று
மீதான தற்பரை மேவும் பரனொடு
மேதாதி ஈரெண் கலை செல்ல, மீதுஒளி
ஓதா அசிந்தம் இது ஆனந்த யோகமே.

ஆதார யோகத் ததிதேவொ டுஞ்சென்று
மீதான தற்பரை மேவும் பரனொடு
மேதாதி யீரெண் கலைசெல்ல மீதொளி
யோதாவ [1]சிந்தமி தானந்த யோகமே. (62)

வேறு பாடம்: 1. சிந்தமிர் (ஆ) I சிந்தமீ (துடி)

கருத்து: ஆதார யோகத்தில் உயிருணர்வு மூலாதாரத்திலிருந்து பல அதிதேவதைகளின் சத்தியுடன் சேர்ந்துவரும் உயிராற்றலால் (மூலக் கனலால்) தூண்டப்பெற்றுத் தலையுச்சிக்குச் சந்திரகலைகள் பதினாறுடனும் செல்லும். அங்குச் சகஸ்ராரத்தில் பராசத்தி,

பரசிவத்துடன் தரிசனம் தருவாள். அங்குத் தோன்றும் ஒளி சிந்தைக்கு எட்டாததாகும். இதைக் காணும் யோகம் நிராதார யோகம் ஆகும்.

யோகம் ஆதார யோகம், நிராதார யோகம் என இரு வகைப்படும். மேதாதி ஈரெண் கலை - சந்திர கலை மேதை முதல் உன்மனை வரை பதினாறு. அசிந்தம் - எண்ணம் செல்லாதது; சிந்திக்க வியலாத பொருள்.

வழிகாட்டுவாள்

703. மதியமும் ஞாயிறும் வந்து உடன் கூடித்
துதி செய்பவர் அவர் தொல் வானவர்கள்;
விதி-அது செய்கின்ற மெய்யடியார்க்குப்
பதி-அது காட்டும் பரமன் நின்றானே.

மதியமு ஞாயிறும் வந்துடன் கூடித்
துதிசெய் பவரவர் தொல்வா னவர்கள்
விதியது செய்கின்ற மெய்யடி யார்க்குப்
பதியது காட்டும் பரம னின்றானே. (63)

கருத்து: உச்சந்தலையில் உள்ள சகஸ்ராரம் சிவன் உறையும் இடமாக அமையும். அதைச் சிவனே யோகிக்குக் காட்டுவான். ஆனால், அண்டவெளியில் அவனைத் துதிக்கும் சூரியன், சந்திரன், தேவர்கள் ஆகியோருக்கு அவன் அரியவன்.

கூடி - கூடப்பெற்று.

தாமரைத் தேன்

704. கட்ட வல்லார்கள் கரந்து எங்கும் தான் ஆவர்;
மட்டு அவிழ் தாமரையுள்ளே மணம் செய்து
பொட்டு எழக் குத்திப் பொறி எழத் தண்டு இட்டு
நட்டு அறிவார்க்கு நமன் இல்லை தானே.

கட்டவல் லார்கள் [1]கரந்தெங்குந் தானாவர்[2]
மட்டவிழ் தாமரை யுள்ளே மணஞ்செய்து[3]
பொட்டெழக் குத்திப் [4]பொறியெழத் தண்டிட்டு
[5]நட்டறி வார்க்கு நமனில்லை தானே. (64)

வேறு பாடம்: 1. கலந்தெங்குந் (அ) I 2. தாமாவர் (த) 3. மணம் பெய்து (ஆ) IV 4. பொறிப்பெறக் கண்டிட்டு (ஓ) IV 5. நட்டிடு (ச ண்) (விசு) (துடி) (திரு)

கருத்து: யோகிக்கு மரணம் இல்லை. அவன் சிவமாம் தன்மை அடைவான். எவ்வாறு எனில், நிமிர்ந்து அமர்ந்து சுழுமுனை வழியாக மூலக்கனலைச் செலுத்தி, உச்சிக் குழியில் உயிருணர்வைத் தைத்து, அங்கு நிமிரும் ஆயிரவிதழ்த் தாமரையில் சத்தி - சிவத்தைத் தரிசித்து என்க.

கட்டவல்லார்கள் - மூச்சுக் காற்றைக் கட்டுப்படுத்த வல்லவர். எங்கும் கரந்த தான் ஆவர் எனக் கூட்டுக. தான் - சிவன். அவன் இயல்பு இது. நம்மாழ்வாரும் "கரந்தெங்கும் பரந்துளன்" என்பர் (திருவாய் முதற்பத்து 1 : 7) தாமரை - சகஸ்ராரம். மணம் செய்து - சிவனையும் சத்தியையும் சேர்த்து. பொட்டு - உச்சிக்குழி. பொறி - மூலக்கனல். தண்டு - சுழுமுனை. நட்டு - நின்று.

49. கலை நிலை

பிரணவ யோகம்

705. காதல் வழிசெய்த கண்ணுத லண்ணலைக்
காதல் வழிசெய்து கண்ணுற நோக்கிடிற்
காதல் வழிசெய்து கங்கை வழிதருங்
காதல் வழிசெய்து காக்கலு மாமே. (1)

கருத்து: இரண்டு கண்ணையும் சேர்த்து மேலே புருவநடுவைப் பார்த்தால் உயிரையும் உடம்பையும் காத்தலும் கூடும்.

கங்கை - அமுதம். பிரணவயோகம் பிராசாதயோகம் எனவும் படும்.

குறிப்பு. ஓ - சுவடி தவிர ஏனைச் சுவடிகள் இவ்வியலைக் 'கலைநிலை' என்று குறிக்கும். ஓ - சுவடி 'ஆயுள் பரீட்சை' எனக் குறிக்கிறது. இதன் தொடர்புள்ள செய்தியை, 764 - ஆம் பாடலின் குறிப்பிற் காண்க

மேல் நிலை உணர்வு

706. காக்கலு மாகுங் கரணங்க ணான்கையுங்
காக்கலு மாகுங் கலைபதி னாறையுங்
காக்கலு மாகுங் கலந்தநல் வாயுவுங்
காக்கலு மாகுங் [1]கருத்துறு நிலையே. (2)

வேறு பாடம்: 1. கருத்துறநில்லே (அ இ ஓ) II; கருத்து நிலையையே (ஆ) I.

கருத்து: அந்தக்கரணங்கள் நான்கினையும், சந்திரகலை பதினாறையும், பத்து வாயுக்களையும் உயிருணர்வின் மேம்பட்ட நிலையையும் யோகி காக்க வியலும்.

கலந்தது - சுழுமுனையில் செல்லும். கருத்து - உயிர் உணர்வு. உறுநிலை - மிக்க நிலை.

பிறப்பு நீங்க

707. நிலைபெற நின்றது நேர்தரு வாயு;
சிலைபெற நின்றது தீபமும் ஒத்து;
கலைவழி நின்ற கலப்பை அறியில்
அலைவு - அறவு ஆகும் வழி இது ஆமே.

நிலைபெற நின்றது நேர்தரு வாயுச்
சிலைபெற நின்றது தீபமு மொத்துக்
கலைவழி நின்ற கலப்பை யறியி
[1]லலைவற வாகும் [2]வழியிது வாமே. (3)

வேறு பாடம்: 1. மலைவறி வாகும் (எ) IV; மலைவறவாகும் (த) (துடி) 2. அளவிது (ஆ) IV.

கருத்து: சுழுமுனை நாடியில் இயங்கிய மூச்சு உடம்பினுள்ளே மட்டும் இயங்கியது. புருவமத்தியிலும் தலையுச்சியிலும் ஒளி, நிலையாகத் தரிசனமாயிற்று. சந்திர கலைகள் உயிருணர்வில் சேர்தலாலும், பிரணவத்தின் கலைகள் ஐந்தும் அதனுடன் சேர்தலாலும் அது ஆற்றல் பெருகப்பெற்று, சகஸ்ராரத்தில் சிவசத்தியை உணரும். மனம் அலைதலையும், உயிர் பிறந்து அலைதலையும் தடுக்கும் வழி இதுவே யாகும்.

பிரணவ கலைகள் - அ, உ, ம, நாதம், விந்து என்பவை. மூச்சு உடம்பினுள்ளேயே இயங்குவதை (cutaneous respiration) என்பர். மீன்களுள் ஒரு வகை இவ்வாறு மூச்சுவிடும் தன்மையுடையன என்பர் உயிர் நூலார்.

நேர்தரு வாயு - சுழுமுனை நாடியில் சென்ற மூச்சு. நின்றது - அடங்கியது. சிலைபெற - கற்சிலைபோல. கலை - சந்திர கலை, பிரணவ கலை. கலப்பு - சிவசத்தி கலப்பு. அலைவு - பிறப்பிறப்புகளில் அலைதல்.

சந்திரனில் சிவன்

708. புடையொன்றி நின்றிடும் பூதப் பிரானை
மடையொன்றி நின்றிட வாய்த்த வழியுஞ்[1]
சடையொன்றி நின்றவச் சங்கர நாதன்
விடையொன்றி லேறியே வீற்றிருந் தானே. (4)

வேறு பாடம்: 1. வழியிற் (எ) IV; வளியுஞ் (ஆ) I.

கருத்து: எல்லாப் பொருள்களுடனும் உயிர்களுடனும் 'ஒன்றாய்' நிற்கும் சிவனை, யோகி, சுழுமுனை வழி மூச்சை இயக்கி, தரிசித்து, அவனுடன் வேறுபாடு அற நிற்கும்போது, அச்சிவன் இருப்பது விந்து மண்டலமாகும்.

புடையொன்றி - அருகில் சத்தியுடன் சேர்ந்து. மடை - மூச்சுக்காற்று செல்லும் வழி; சுழுமுனை. விடை - இடபராசி. இவ்விராசியில் சந்திரன் உச்சமாக விளங்குவான். அச்சந்திர மண்டலத்தில் சிவன் வீற்றிருப்பான்.

இருள் ஓடும்

709. இருக்கின்ற காலங்கள் ஏதும் அறியார்
பெருக்கின்ற காலப் பெருமையை நோக்கி
ஒருக்கின்ற வாயு ஒளிபெற நிற்க,
தருக்கு ஒன்றி நின்றிடும் சாதகன் ஆமே.

இருக்கின்ற காலங்க ளேது மறியார்
பெருக்கின்ற [1]காலப் பெருமையை நோக்கி
யொருக்கின்ற வாயு [2]வொளிபெற நிற்கத்
தருக்கொன்றி நின்றிடுஞ் சாதக னாமே. (5)

வேறு பாடம்: 1. காலம் (ஆ ஊ) I. 2. வெளிப்பெற (சண்) (விசு); வெளிபெற (திரு).

கருத்து: யோகியர் சந்திர மண்டலத்தில் சிவனைத் தரிசித்து நீண்ட கால வாழ்நாள் பெறுவர். அதை நோக்கி மற்றொருவன் தனது மூச்சுக் காற்றை அடக்கி அப்பயிற்சியால் சோதியைத் தரிசித்து, ஆணவ மலத்தை வெல்ல முயலும் சாதகனாவான்.

இருக்கின்ற காலங்கள் - மேற் செய்யுளில் கூறியவாறு சந்திர மண்டலத்தில் சிவன் விளங்க, அதைத் தரிசித்து இருக்கின்ற

காலங்களில். காலம் - இவ்வாறு இருப்பவரின் ஆயுட் காலம். ஒருக்கின்ற - சுழுமுனையில் செலுத்தப்பட்டு ஒருமுகம் ஆகின்ற. வாயுவால் ஒளியைத் தரிசித்து என்க. தருக்கு - ஆணவமலம். ஒன்றி - செயலற்று.

ஒளியுடம்பு

710. சாதக [1]மாவன தன்மையை நோக்கியே
மாதவ மான வழிபாடு செய்திடும்;
போதக மாகப் [2]புகலுறப் பாய்ச்சினால்
[3]வேதக மாக விளைந்து கிடக்குமே. (6)

வேறு பாடம்: 1. மானதன் (அ) II மானவத் (எ) II. 2. புலனுறப் (ஆ இ ஊ) II. 3. மேதக (ஆ) I.

கருத்து: யோகி பயிற்சியின் தன்மையை அறிந்து, யோகமாகிய வழிபாட்டை ஆற்றுவான். அவன் மூச்சைச் சகஸ்ராரத் தாமரை யிடத்துப் பாய்ச்சினால், அவனது உடம்பு ஒளியுடம்பாக மாறும்.

முதல் இரண்டு அடிகளுக்கு உரிய 'யோகி' என்ற எழுவாய் தொக்கு நின்றது. போது அகம் - சகஸ்ராரத் தாமரை மலரினிடமாக. வேதகம் - (இங்கு) ஒளியாக மாறியமைதல்.

உச்சியை நோக்கி

711. கிடந்தது தானே கிளர்பயில் மூன்றும்;
நடந்தது தானே உள்நாடி, உள்நோக்கி;
படர்ந்தது தானே அப் பங்கயம் ஆகத்
தொடர்ந்தது தானே அச் சோதியுள் நின்றே.

கிடந்தது தானே [1]கிளர்பயின் மூன்றும்
நடந்தது தானேயுண் [2]ணாடியுண் ணோக்கிப்
படர்ந்தது தானேயப் பங்கய மாகத்
தொடர்ந்தது தானேயச் சோதியு ணின்றே. (7)

வேறு பாடம்: 1. கிளர் பயிர் (அ) I; கிளர்பயன் (எ) I. 2. ணாடியை (சண்)

கருத்து: இடகலை, பிங்கலை, சுழுமுனை என்ற மூன்று நாடிகளின் வழியே செல்லும் மூச்சு உள்நோக்கி நடந்தது. உணர்வு

அகமுகமாகத் திரும்பியது. புருவமத்தியில் சோதியைக் கண்டு, அதில் நின்று, சகஸ்ராரத் தாமரையில் அனுபவம் பெறுதற்கு நாடிற்று.

பயில் - முதனிலைத் தொழிற் பெயர். பயிலப்படும் மூச்சுக் காற்றிற்கு ஆகியது. மூன்று - இட கலை, பிங்கலை, சுழுமுனை என்ற மூன்று நாடி களின் வழிச் செல்லும் மூச்சுக்காற்று. உள்நாடி - உள்நோக்கி; ஆன்மா அனுபவத்தைப் பெறுதலைக் கருதி. பங்கயம் - சகஸ்ராரத் தாமரை.

ஊனுடம்பு ஆலயம்

712. தானே எழுந்த அத்தத்துவ நாயகன்
ஊனே வழிசெய்து எம் உள்ளே இருந்திட,
வானோர்-உலகு ஈன்ற அம்மை மதித்திடத்
தேனே பருகிச் சிவாலயம் ஆகுமே.

தானே யெழுந்தவத் தத்துவ நாயக[1]
[2]னூனே வழி செய்தெ முள்ளே யிருந்திட[3]
வானோ ருலகீன்ற வம்மை மதித்திடத்
தேனே [4]பருகிச் சிவாலய மாகுமே. (8)

வேறு பாடம்: 1. நாயகி (இ எ ஒ) II. 2. யூனே (இ எ ஒ) II. 3. யிருந்திடும் (சண்); 4. பருகச் (த).

கருத்து: சுயம்புவாகிய சிவன் யோகி உடம்பில் எழுந்தருளி, உணர்விற்குப் புலப்பட, பராசத்தி அவனுடன் அமர, அக்காட்சியை யோகி பருகிட, அவனது உடம்பு திருக்கோயில் ஆயிற்று.

சிவாலயம் ஆகும் என்பதற்கு 'அவ்வூன்' என எழுவாய் வருவிக்க. பருகி - உட்கொண்டு.

வேகாக் கால்

713. திகழும் படியே செறிதரு வாயு
அழியும் படியே அறிகிலர் ஆரும்;
அழியும் படியே அறிந்தபின் நந்தி
திகழ்கின்ற வாயுவைச் சேரலும் ஆமே.

திகழும் படியே செறிதரு வாயு
வழியும் [1]படியே யறிகில ராரு[2]
மழியும் [3]படியே [4]யறிந்தபின் னந்தி
திகழ்கின்ற வாயுவைச் [5]சேரலு மாமே. (9)

வேறு பாடம்: 1. படியை (சண்) (துடி) 2. ராகு (ஆ ஊ) I. 3. படியை (சண்) (துடி) 4. யறிந்துபின் (ஆ) I; யறிந்தவன் (இ) IV. 5. சேர்க்கலு (இ) IV; சேரலு (சண்)

கருத்து: மூச்சு நமது உடம்பினை என்றும் நிலைநிறுத்தும் வண்ணம் உள்ளே அடங்க வல்லது. ஆனால் பலருக்கு உடம்பு மூச்சுக் காற்றால் வெந்து அழிகின்றது. ஒருவன் இவ்வழிவை அறிந்து, அதைத் தடுப்பதற்கு யோக சாதகம் செய்தால், நந்தி அவனது உணர்வை இடமாகக் கொண்டு உய்தியைத் தருவான்.

அழியும்படி - ஒடுங்கும் தன்மையை. வேகாக் கால் - வேகச் செய்யாத காற்று. வாயு (இறுதியடி) - உயிருணர்வு.

செவிலி வேண்டா

714. சோதனை தன்னில் துரிசு அறக் காணலாம்
நாதனும் நாயகி தன்னின் பிரியும் நாள்;
சாதனம் ஆகும் குருவை வழிபட்டு
மாதனமாக மதித்துக் கொள்ளீரே.

சோதனை தன்னிற் றுரிசறக் காணலாம்
நாதனு நாயகி தன்னிற் பிரியுநாள்
[1]சாதன மாகுங் [2]குருவை வழிபட்டு
மாதன மாக மதித்துக்கொள் ளீரே. (10)

வேறு பாடம்: 1. சாதக (எ) IV. 2. குருவழிப்பட்டு (எ) IV.

கருத்து: சிவன் குண்டலி சத்தியைப் பிரியும் நாளை யோகப் பயிற்சியாகிய சோதனையில் யோகி காண்பான். தனது குருவை வழிபட்டுச் சிற்சத்தியின் துணையைப் பெறுவான். இந்த நிகழ்ச்சி அவனுக்குப் பெரிய செல்வம் வந்து அடைந்ததைக் காட்டுவது எனக் கொள்க.

இங்கு நாதன் என்றது உயிரை. உயிர் சிவோகம் பாவனை செய்தலின் அவ்வாறு கூறினார்.

துரிசு - குற்றம். நாதன் - சிவன். நாயகி - குண்டலிசத்தி. மாதனம் - பெரிய செல்வம். குண்டலியை விட்டுச் சிற்சத்தியுடன் சேர்தல் பெரிய செல்வம் என்றது, அவள் அருட்சத்தியைக் காட்டுதலால்.

சிவானுபவம்

715. ஈர் - ஆறு கால் கொண்டு எழுந்த புரவியைப்
பேராது கட்டிப் பெரிது உண்ண வல்லிரேல்
நீர் ஆயிரமும் நிலம் ஆயிரத்தாண்டு
பேராது காயம், பிரான் நந்தி ஆமே.

ஈராறு கால்கொண் டெழுந்த புரவியைப்
பேராது கட்டிப் பெரிதுண்ண வல்லிரே[1]
னீரா யிரமு நிலமா யிரத்தாண்டு
பேராது காயம் பிரானந்தி யாமே[2]. (11)

வேறு பாடம்: 1. வல்லிரா (அ) IV. 2. யாணையே (ஆ எ ஒ) III.

கருத்து: 12 அங்குலக் கனம் உள்ள மூச்சுக்காற்றை அடக்கி, சந்திர கலையின் அமுதத்தை மிகுதியும் உண்ணவல்லீராயின், உடம்பு இறவாது பற்பல காலம் இருக்கும். அனுபவிக்கப் பெறுவது அந்நந்தியையே ஆகும்.

ஈராறு கால் - 12 அங்குல நீளம் உள்ள மூச்சுக் காற்று. உண்ணல் - சந்திர கலை என்ற அமுதத்தை உண்ணுதல். பேராது - இறவாது.

சந்திர கலை

716. ஓசையில் ஏழும் ஒளியின்கண் ஐந்தும்
நாசியில் மூன்றும் நாவில் இரண்டும்
தேசியும் தேசனும் தன்னிற் பிரியும் நாள்
மாசு அறு சோதி வகுத்து வைத்தானே.

ஓசையி லேழு மொளியின்க ணைந்து
நாசியின் மூன்று நாவி லிரண்டுந்
தேசியுந் தேசனுந் [1]தன்னிற் பிரியுநாண்
மாசறு சோதி வகுத்துவைத் தானே. (12)

வேறு பாடம்: 1. தம்மிற் (த)

கருத்து: குண்டலி சத்தியை உயிர் பிரிந்து சிற்சத்தியுடன் கூடும் காலத்தில் நாதம் எழும். விந்துவாகிய ஒளியும் எழும். நாதம் ஏழுவகையாகக் கூறுபடும். ஒளி ஐந்துவகை, மணம் மூன்று வகைப் பட்டுத் தோன்றும். சுவை இரண்டு வகைப்பட்டுத் தோன்றும். இவ்வாறு இறைவன் வகுத்துவைத்தான்.

ஏழுவகை ஓசை; ஐவகை ஒளி; மூன்றுவகை மணம்; இரு வகைச் சுவை - இவை சந்திர கலை அனுபவம் என்க. தேசி - குண்டலி. தேசன் - உயிர். குண்டலியைப் பிரிந்து சிற்சத்தியுடன் கூட வேண்டும் என்க.

குறிப்பு: ஆசிரியர் இவ்வியலின் செய்திகளைச் சக்கரமாக வைத்து விளக்குதலை, 'ஏரொளிச் சக்கரம்' என்னும் இயலிற் காண்க.

50. சரீர சித்தியுபாயம்

உடம்பின் வளம்

717. உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.

உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டா
ருடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
னுடம்பை வளர்த்தே னுயிர்வளர்த் தேனே. (1)

கருத்து: உடற்சத்தி அழியின் உயிராற்றலும் அழியும். ஞானம் உறுதியாக அமையாது. உடம்பை வளர்க்கும் வழி யோக சாதனமே என அறிந்தேன். அச்சாதனத்தால் உயிரை வளர்த்தேன். அதன் உணர்வைப் பெருக்கினேன்.

திடம்பட - உறுதிபெற. உடம்பு - உடற் சக்தி.

உடம்பினுள் புதையல்

718. உடம்பினை முன்னம் அழுக்கு என்று இருந்தேன்;
உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்;
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே.

உடம்பினை முன்ன [1]மழுக்கென் றிருந்தே
[2]னுடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டே
[3]னுடம்புளே யுத்தமன் கோயில்கொண் டானென்
[4]றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே. (2)

வேறு பாடம்: 1. மிழுக்கென் (அ எ) IV. 2. னுடம்பினினுள்ளே (ஆ ஊ) IV. 3. னுடம்புள்ளே (ஊ) IV னுடம்பிலே (இ ஈ) IV. 4. னுடம்பினை (ஆ) I.

கருத்து: முன்பு உடம்பை மாயேயம் என்றும் மலம், கழிக்கத் தக்கது என்றும் எண்ணினேன். இப்பொழுது உடம்பினுள் மிக்க செல்வம் இருத்தலை அறிந்தேன். உடம்பில் இறைவன் கோயில் கொள்ள வருவான் என அறிந்து, உடம்பினைப் பாதுகாக்கின்றேன்.

அழுக்கென்று கருதி வாளாவிருந்தேன் என்க. உறுபொருள் - சிறந்த பொருளுமாம்; உடம்பினால் ஆகும் பயன். ஓம்புதல் - பாதுகாத்தல்.

உடம்பு புனிதமாகும்

719. சுழற்றிக் கொடுக்கவே சுற்றிக் கழியும்
கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரித்து
உழற்றிக் கொடுக்கும் உபாயம் அறிவார்க்கு
அழல்-தித் தவிர்த்து உடல் அஞ்சனம் ஆமே.

சுழற்றிக் கொடுக்கவே [2]சுற்றிக் கழியுங்
கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரித்
துழற்றிக் கொடுக்கு முபாய மறிவார்க்
கழற்றித் [3]தவிர்த்துட லஞ்சன மாமே. (3)

வேறு பாடம்: 1. கழித்துக் (சண்) 2. சுத்தி (இ ஒ) I சுத்திக் (அ ஈ எ) I. 3. தவிர்ந்து (சண்) (விசு) (தி) (த) (வ); தவித்துட (ஆ ஒ) I.

கருத்து: மூச்சுக்காற்றை முறையே இடகலை, பிங்கலை நாடிகளில் மாற்றி மாற்றிச் செலுத்துவதால் மனமாசுகள் சுழன்று நீங்கும். பின்பு மூச்சைச் சுழுமுனை வழியாகச் செலுத்தி, ஆணவ மலத்தை நீக்கி, சகஸ்ராரத் தாமரையை மேல்நோக்கி மலர்வித்து, ஒளி தரிசனம் பெற அறிவார்க்கு, உடல் தீயில் பக்குவப்பட வேண்டாத மைப்போல ஆகும்.

உழற்றி - தலை கீழாக இருந்ததனை நிமிர்த்தி. அழல் - தீ - அழற்றீ என்பது குறுக்கல் விகாரமாய், அழற்றி என்றாகியது.

720. அஞ்சனம் போன்றுட லையறு மந்தியில்
வஞ்சக வாத மறுமத்தி யானத்திற்
செஞ்சிறு காலையிற் செய்திடிற் பித்தறு
நஞ்சறச் சொன்னோ நரைதிரை யில்லையே. (க ங)

உடம்பு அழியாதிருக்க

721. மூன்று மடக்கு உடைப் பாம்பு இரண்டு எட்டு உள;
ஏன்ற இயந்திரம் பன்னிரண்டு அங்குலம்;
நான்ற இம் முட்டை இரண்டையும் கட்டியிட்டு
ஊன்றியிருக்க உடம்பு அழியாதே.

மூன்று மடக்குடைப் பாம்பிரண் டெட்டுள
வேன்ற வியந்திரம் பன்னிரண் டங்குல
[1]நான்றவிம் முட்டை யிரண்டையுங் கட்டியிட்
டூன்றி யிருக்க வுடம்பழி யாதே. (4)

வேறு பாடம்: 1. நான்றவிழ் (எ) IV நான்றவிம் முடை (ஆ) IV; மூட்டை (த)

கருத்து: உடம்பில் பிரம்ம கிரந்தி, விஷ்ணுகிரந்தி, உருத்திர கிரந்தி என்ற மூன்று முடிச்சுகளும், சூரிய கலை சந்திர கலைகளும் உள்ளன. இவை பாம்புகள் போலப் பின்னிக் கிடக்கின்றன. சூக்கும சரீரம் தலைக்கு மேலே பன்னிரண்டு அங்குலம் உள்ளது. சூரிய சந்திரர்களாகிய கண் பார்வையை மேல்நோக்கிச் செலுத்தி, நிலையாக இருந்தால் உடம்பு அழியாது.

முட்டை போல்வதால் கண்ணை முட்டை என்றார். நான்ற - கீழ் நோக்கிய; இரண்டு - உகரகலை; சூரியன். எட்டு - அகர கலை; சந்திரன்.

நூறாண்டுக்கு மேல் வாழ

722. நூறும் அறுபதும் ஆறும் வலம் வர;
நூறும் அறுபதும் ஆறும் இடம் வர,
நூறும் அறுபதும் ஆறும் எதிரிட,
நூறும் அறுபதும் ஆறும் புகுவரே.

நூறு மறுபது மாறும் வலம்வர
நூறு மறுபது மாறு மிடம்வர
நூறு மறுபது மாறு மெதிரிட'
நூறு மறுபது மாறும் புகுவரே. (5)

வேறு பாடம்: 1. மெதிரிடில் (இ ஈ) IV.

கருத்து: நூறு நாடிகளும் அறுபது தத்துவங்களும் ஆறு அத்து வாக்களும் முறையே வலநாடி (பிங்கலை), இடநாடி (இடகலை), நடுநாடி (சுழுமுனை) ஆகியவற்றைச் சாரும் இயல்புடையன. நடுநாடியைச் சார்ந்துள்ள நிலையை எய்தினால் 166 ஆண்டுக் காலம் வாழலாம்.

சிறப்புடைமை பற்றி நூறு நாடிகளைக் குறிப்பிட்டார். 60 என்பவை தாத்துவிகம்.

723. சத்தியார் கோயி லிடம்வலஞ் சாதித்தால்
மத்தியா னத்திலே வாத்தியங் கேட்கலாம்
தித்தித்த கூத்துஞ் சிவனும் வெளிப்படுஞ்
சத்தியஞ் சொன்னோஞ் சதாநந்தி யாணையே. (க, ங)

தவப்பயன்

724. திறத்திறம் விந்து திகழும் அகாரம்
உறப்பெறவே நினைந்து ஓதும் சகாரம்
மறிப்பது மந்திரம், மன்னிய நாதம்
அறப்பெற யோகிக்கு அறநெறி ஆமே.

திறத்திறம் விந்து திகழு மகார
[1]முறப்பெற வேநினைந் தோதுஞ் சகார[2]
மறிப்பது மந்திர மன்னிய நாத
[3]மறப்பெற யோகிக் கறநெறி யாமே. (6)

வேறு பாடம்: 1. முறப்பற (இ உ ஐ எ ஒ) I. 2. சிகாரம் (ஆ இ) IV. 3. மறப்பற (அ இ) IV; மறப்பெறல் (த)

கருத்து: அசபை மந்திரம் சகஸ்ராரத்தில் படரும்பொழுது நாதம் எழும். அதனை நிரம்பக் கேட்டல் யோகிக்குத் தவம்.

விந்து - 'ம்' என்ற ஒலி. இது சேரப் பெறும் அகாரம் என்பது 'அம்'. விந்து என்பதை இரண்டாம் அடிக்கும் கூட்டுக. அது உற்ற சகாரம் - என்பது - 'சம்'. இந்த மந்திரம் 'அம்சம்' என்பது. இதுவே 'அசபை' மந்திரம். இது மூச்சுக் காற்றைத் தடுத்து, தானே பிராணனாய் நிற்கும்.

725. உந்திச் சுழியி னுடனே பிராணனைச்
சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினான்
முந்தி முகட்டி னிறுத்தி யபானனைச்
சிந்தித் தெழுப்பச் சிவனவ னாமே. (ஆ, ண)

726. மாறா மலக்குதந் தன்மே லிருவிரற்
கூறா இலிங்கத்தின் கீழே குறிக்கொண்மின்
ஆறா உடம்பிடை அண்ணலு மங்குளன்
கூறா உபதேசங் கொண்டது காணுமே. (அ)

727. நீல நிறனுடை நேரிழை யாளொடுஞ்
சாலவும் புல்லிச் சதமென் றிருப்பார்க்கு
ஞால மறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவர் பராநந்தி யாணையே. (அ, ஔ)

728. அண்டஞ் சுருங்கி லதற்கோ ரழிவில்லை
பிண்டஞ் சுருங்கிற் பிராணன் நிலைபெறும்
உண்டி சுருங்கி லுபாயம் பலவுள
கண்டங் கறுத்த கபாலியு மாமே. (ஔ)

729. பிண்டத்து ளூற்ற பிழக்கடை வாசலை
யண்டத்து ளூற்று அடுத்தடுத் தேகிடில்
வண்டிச் சிக்கு மலர்க்குழன் மாதரார்
கண்டிச் சிக்குநற் காயமு மாமே. (ட, ஔ)

என்றும் இருக்கலாம்

730. சுழலும் பெருங்கூற்றுத் தொல்லை முன் சீறி,
அழலும் இரதத்துள் அங்கியுள் ஈசன்
கழல்கொள் திருவடி காண்குறில், ஆங்கே
நிழலுளும், தெற்றுளும் நித்தலும் ஆமே.

சுழலும் பெருங்கூற்றுத் [1]தொல்லைமுன் சீறி
யழலு மிரதத்து ளங்கியு ளீசன்[2]
கழல்கொ டிருவடி காண்குறி லாங்கே
[3]நிழலுளுந் தெற்றுளு [4]நித்தலு மாமே. (7)

வேறு பாடம்: 1. சொல்லுமுன் (ஆ) IV. 2. மீசன் (ஆ இ ஈ ஊ) II. 3. நிழலுருத்தோற்று (ஆ) IV. 4. நிற்றலு (சைவ)

கருத்து: எமனை வென்று, மூலாதாரத்தில் உள்ள சிவனைப் புணர்ந்து அருள் பெற்றால் நிழல், வெய்யில் என்ற வேறுபாடு இன்றி, எங்கும் என்றும் இருக்கலாம்.

மான் குட்டி வளர்கிறது

731. நான் கண்ட வன்னியும், நாலுகலை, ஏழும்,
தான் கண்ட வாயு, சரீரம் முழுதொடும்
ஊன் கண்டுகொண்ட உணர்வும் மருந்தாக
மான்கன்று நின்று வளர்கின்றவாறே.

நான்கண்ட வன்னியு நாலு கலையேழுந்
தான்கண்ட [1]வாயுச் சரீர முழுதொடு
மூன்கண்டு கொண்ட வுணர்வு மருந்தாக
மான்கன்று நின்று வளர்கின்ற வாறே. (8)

வேறு பாடம்: 1. வாயுவுஞ் (எ) IV.

கருத்து: அக்கினி, சூரியன், சந்திரன், நட்சத்திரம் என்ற நான்கு கலைகளின்மீதும், ஆறு ஆதாரங்களிலும், சகஸ்ராரத்திலும் நான் அனுபவித்த சிவம் (சிவாக்கினி), காற்று, உடல் உணர்வு ஆகிய மூன்றையும் மருந்தாகக் கொண்டு எனது உயிர் வளர்கின்றது.

ஊன் கண்டு கொண்ட உணர்வு - உடம்பில் பிரதிபலித்த உணர்வு. உயிர், பிரகிருதி மாயையின் காரியமாகிய உடம்பில் நின்று வளர்வ தாதலின், "மான் கன்று" என்றார். மான் - பிரகிருதி மாயை. "செம்மான்மகள்" என்றார் அருணகிரியார். (கந்தரனுபூதி, 12) வன்னியும் வாயுவும் உணர்வும் மருந்தாக மான்கன்று நின்று வளர்கின்ற வாறு என முடிக்க.

உடம்பின் மாற்றம்

732. ஆகுஞ்சன வேதசத்தியை, அன்புற
நீர்கொள நெல்லின் வளர்கின்ற நேர்மையைப்
பாகுபடுத்திப் பல்கோடி கட்டினால்
ஊழ்கொண்ட மந்திரம் தன்னால் ஒடுங்குமே.

ஆகுஞ் சனவேத சத்தியை யன்புற
[1]நீர்கொள நெல்லின் வளர்கின்ற நேர்மையைப்
பாகு படுத்திப் பல்கோடி கட்டினா[2]
லூழ்கொண்ட மந்திரந் தன்னா லொடுங்குமே[3]. (9)

வேறு பாடம்: 1. நீகொள (அ); நீகொள்ளின் (எ); நீகொள்ள (ஆ) II. 2. கடத்தினா (இ ஈ ஒ) களத்தினா (எ); தடத்தினா (ஆ ஊ) II. 3. லொடுங்கே (எ) II.

கருத்து: மாற்றும் சத்தியானது, ஆகுஞ்சன முத்திரையால், நீர்ப் பிடிப்புள்ள வயலில் நெல் போல வளர்கின்ற இயல்பைத் தனியே அறிந்து, பலகோடி சுற்றுகள் (ஆவிருத்தி) முறைப்படி செபிக்கப் படும் மந்திரத்தால் யோகஞ்செய்தால் உடம்பு மாற்றம் அடையும்.

ஆகுஞ்சனம் - இம் முத்திரையைப் பயன்படுத்திச் செபித்தல் என்க. வேதக சத்தி என்பது கடைக்குறைந்தது; வேதகம் - மாற்றுதல்.

51. கால சக்கரம்

சந்திர மண்டலமும் அப்பாலும்

733. மதிவட்டம் ஆக வரை அஞ்சும் நாடி,
இதுவிட்டு அங்கு ஈராறு அமர்ந்த அதனால்
பதி வட்டத்துள் நின்று பாலிக்குமாறும்,
அதுவிட்டுப் போமாறும் ஆயல் உற்றேனே.

மதிவட்ட மாக [1]வரையஞ்சு நாடி
[2]யிதுவிட்டங் கீரா றமர்ந்த வதனாற்
பதிவட்டத் துண்ணின்று பாலிக்கு மாறு
மதுவிட்டுப் போமாறு மாயலுற் றேனே. (1)

வேறு பாடம்: 1. வரையஞ்சினாடி (ஊ) IV. 2. யிதுவட்டங் (அ ஆ இ ஈ); யிதுவிட்டிங் (எ) I.

கருத்து: சந்திரமண்டலத்தில் உள்ள வியாபினி, வியோம ரூபை, அநந்தை, அநாசிருதை, உன்மனை என்ற ஐந்து சிவகலைகளையும் ஆய்ந்து அறிந்து, சிவன் உச்சந்தலைக்குமேல் 12 அங்குலம் உள்ள துவாதசாந்தப் பெருவெளியில் அமர்ந்திருத்தலால், அவன் சந்திர மண்டலம் என்ற எல்லையில் நின்று அருளுதலையும் அதையும் கடந்து நிற்றலையும் ஆராயப் புகுந்தேன்.

காலம் கழிகின்றது

734. உற்றறிவு ஐந்தும், உணர்ந்தறிவு ஆறு - ஏழும்
கற்றறிவு எட்டும், கலந்தறிவு ஒன்பதும்,
பற்று அறி பத்தும் பலவகை நாழிகை
அற்றது அறியாது அழிகின்றவாறே.

உற்றறி வைந்து முணர்ந்தறி வாறேழுங்
கற்றறி வெட்டுங் கலந்தறி வொன்பதும்
[1]பற்றறி [2]பத்தும் பலவகை நாழிகை
[3]யற்ற தறியா தழிகின்ற வாறே. (2)

வேறு பாடம்: 1. பற்றிய (அ இ ஊ எ ஒ) II. 2. பற்றும் (ஊ) I. 3. யற்றறியாது (ஆ ஈ உ ஒ) I.

கருத்து: புலனறிவு, ஆறாவதாகிய மன அறிவு, ஏழாவதாகிய ஆராய்ச்சியறிவு, எட்டாவதாகிய கல்வியறிவு, ஒன்பதாவதாகிய அனுபவ அறிவு, திருவடியைப் பற்றி நிற்கும் அறிவு எனப் பலவகை அறிவுகளை ஈட்டுவதில் காலம் செல்வதை அறியாமல் மக்கள் அழிகின்றனரே!

மரணம் எட்டிப் பார்க்கிறது

735. அழிகின்ற ஆண்டு - அவை ஐயஞ்சும் மூன்றும்,
மொழிகின்ற முப்பத்து மூன்று என்பது ஆகும்
கழிகின்ற கால் அறுபத்திரண்டு என்பது
எழுகின்றது ஈரைம்பது, எண்அற்று இருந்தே.

அழிகின்ற [1]வாண்டவை யையஞ்சு மூன்று
மொழிகின்ற [2]முப்பத்து [3]மூன்றென்ப தாகுங்
கழிகின்ற காலறு பத்திரண் டென்ப[4]
தெழுகின்ற தீரைம்ப தெண்ணற் றிருந்தே. (3)

வேறு பாடம்: 1. வாறவை (ஆ) IV. 2. முப்பது (சண்) 3. மூன்றொன்ப (ஆ ஈ ஊ) I. 4. டெண்ப (ஊ ஒ) I.

கருத்து: இறப்பு வரும் வயது முறையே 25 முதல் 28 வரை; 30 முதல் 33; 62; 100. இவை பொதுவான வரையறை. ஆண்டு இஃது எனச் சொல்ல முடியாத நிலையும் உண்டு.

யோகப் பயிற்சி தொடங்க

736. திருந்து தினம் அத்தினத்தினொடு நின்று
இருந்து அறி நாள் ஒன்று; இரண்டு - எட்டு; மூன்று
பொருந்திய நாளோடு புக்கு அறிந்து ஓங்கி
வருந்துதல் இன்றி மனை புகலாமே.

திருந்து தினமத் [1]தினத்தி னொடுநின்
றிருந்தறி நாளொன் [2]றிரண்டெட்டு மூன்று
பொருந்திய நாளோடு புக்கறிந் தோங்கி
வருந்துத லின்றி மனைபுக லாமே. (4)

வேறு பாடம்: 1. தினத்தினத் தோடுநின் (சண்) 2. றிரண்டிரு (த)

கருத்து: யோகப் பயிற்சி தொடங்குவதற்கு உரிய நாள் கூறுகின்றார்: பிறந்தநாளும், நட்சத்திரமும் ஆகாதன. ஜன்ம நட்சத்திரத்தி லிருந்து 17 ஆம், 7 ஆம் நாட்கள் கூடா. இவற்றின் அனு ஜன்ம, திரி ஜன்ம நட்சத்திரங்களாகிய 3, 5, 7, 10, 14, 19, 22, 27 ஆம் நாட்கள் ஆகாதன. பிறந்த இராசியிலிருந்து எட்டாம் இராசியில் உள்ள நட்சத்திரங்கள் தள்ளத்தக்கவை. இவை தவிர்த்த ஒரு நாள் யோகப் பயிற்சி தொடங்கலாம்.

மனை புகலாம் - யோகப் பயிற்சி தொடங்கலாம்.

உயிருணர்வு வேண்டும்

737. மனைபுகுவீரும் அகத்திடை நாடி
என, இருபத்தஞ்சும் ஈராறு - அதனால்
தனை அறிந்து, ஏறட்டு, தற்குறி ஆறு
வினை அறி ஆறும் விளங்கிய நாலே.

[1]மனைபுகு வீரும் [2]மகத்திடை நாடி
[2]யெனவிரு பத்தஞ்சு மீரா றதனால்
தனையறிந் [3]தேறட்டுத் தற்குறி யாறு
வினையறி [4]யாறும் விளங்கிய நாலே[5]. (5)

வேறு பாடம்: 1. மனை புகுவீர் கருத்திடை (ஆ) II; மனை புகுவீர் தருமத்திடை (ஊ) IV; மனத்திடை (எ) IV. 2. லெனவிரு (எ) IV;

யெனையிரு (த) (வ) 3. தெட்டுந் (ஆ); தெட்டுத் (ஊ ஊ); தோரட்டுத் (எ) II. 4. யாது (எ) II; யாறு (ஊ) I. 5. நாளே (ஊ) IV.

கருத்து: யோகம் பயிலுவீராகிய நீவிரும், உள் நோக்காக, நாடிகளைக் கண்டறிதல் போல ஆன்ம தத்துவங்களை அறிந்து, அவற்றுள், இருபத்தைந்தாவது ஆகிய புருட தத்துவத்தைச் சூரியனுடன் சேர்த்துத் தன்னை அறிந்து, அந்த உயிர் உணர்வைச் சார்ந்து, ஆறு ஆதாரங்களில் இறைவனை அனுபவிக்கும்பொழுது விளங்குபவை நான்கே. அவை சிவத்தின் நிலைகள் ஆகும்.

ஈராறு - 12 கலைகள் (சந்திரனுடையவை) தற்குறி - ஆதாரம்.

சகஸ்ராரத்தில் சிவன்

738. நாலும் கடந்தது, நால்வரும்; நால் - அஞ்சு;
பாலம் கடந்தது; பத்துப் பதின் அஞ்சு
கோலம் கடந்த குணத்து ஆண்டு மூவிரண்டு
ஆலம் கடந்தது ஒன்று; ஆர் அறிவாரே?

நாலுங் கடந்தது நால்வரு நாலஞ்சு
பாலங் கடந்தது [1]பத்துப் பதினஞ்சு
கோலங் கடந்த குணத்தாண்டு மூவிரண்
டாலங் [2]கடந்ததொன் றாரறி வாரே. (6)

வேறு பாடம்: 1. பத்திப் (எ) I. 2. கடந்ததை யாரறி (உ) IV.

கருத்து: சிவத்தின் நிலைகள் நான்கு, சிவம், சத்தி, விந்து, நாதம் என; அவற்றையும் பிரமன், திருமால், உருத்திரன், மயேசுரன் என்ற நால்வரையும் கடந்து, அந்த நவநிலைகளையும் புருவமத்தியிலும் அதன் மேலும் உணரும் அனுபவத்தைக் கடந்து, 25 மாயேசுர வடிவங்களைக் கடந்து, ஆறு ஆதாரங்களில் உணரும் அனுபவத்தைக் கடந்து, நீலகண்டப் பெருமான் விளங்குகின்றான். அவனை யார் அறிவார்?

சூரியன், சந்திரன்

739. ஆறும் இருபதும் ஐயஞ்சு மூன்றுக்கும்
தேறும் இரண்டு இருபத்தோடு ஆறு இவை
கூறும் மதிஒன்றினுக்கு இருபத்தேழு
வேறு பதியங்கள் நாள் விதித்தானே.

ஆறு [1]மிருபது மையஞ்சு மூன்றுக்குந்
தேறு [2]மிரண்டிரு பத்தோ டாறிவை
கூறு மதியொன் றினுக்கிரு பத்தேழு
வேறு பதியங்க ணாள்விதித் தானே. (7)

வேறு பாடம்: 1. மிருபதுக் கையஞ்சு (அ ஆ இ ஈ ஊ எ) II; மிருபது கையஞ்சு (சண்) 2. மிரண்டு மிருபத்தொ (சண்) (சைவ) (துடி)

கருத்து: 6, 48, 2, 16, 27 - இந்த எண்கள் ஒவ்வொரு பொருளைக் குறிப்பவை. ஆறு ஆதாரங்களையும், ஆக்ஞை தவிர மற்ற ஆதாரங்களில் உள்ள 48 இதழ்களையும் (தாமரை); 10 இதழ்களை உடைய உந்திக்கமலத்தை 16 இதழ்களை உடைய விசுத்தியுடன் சேர்ப்பதால் அமையும் "உ" என்ற சூரியனையும், சந்திர மண்டலத்தையும் அறிய வேண்டும்.

தத்துவங்களை உணரும் இடங்கள்

740. விதித்த இருபத்தெட்டொடு, மூன்று அறையாக,
தொகுத்து அறி முப்பத்து மூன்று தொகுமின்;
பதித்து அறி பத்தெட்டும் பார்ஆதிகள் நால்
உதித்து அறி மூன்று இரண்டு ஒன்றின் முறையே.

[1]விதித்த விருபத்தெட் [2]தொடுமூன் றறையாகத்
தொகுத்தறி முப்பத்து மூன்று தொகுமின்[3]
[4]பதித்தறி பத்தெட்டும் [5]பாரா திகணா
லுதித்தறி மூன்றிரண் டொன்றின் முறையே. (8)

வேறு பாடம்: 1. விரித்த (அ) I. 2. டோடு முறையாக (இ ஈ) II; முறையால் (ஆ) II. 3. தொகுமுன் (ஆ ஊ ஒ) I. 4. பதித்தெறி (துடி) 5. பாராதிகாணல் (இ ஈ ஒ) பாரங்கி காணில் (ஆ); பாராதி காணில் (உ) I.

கருத்து: 12 இதழ்களை உடைய அநாகதம், 16 இதழ்களை உடைய விசுத்தி - இரண்டையும் சேர்த்து அறிக. சாதாக்கியம், விந்து, நாதம் நீங்கலாக மற்ற 33 தத்துவங்களையும் முறையே அக்கினி, சூரியன், சந்திரன் என்ற மண்டலங்களில் தொகுத்து அறிக. 10(ய) என்ற புருடனையும் 8 (அ) என்ற சந்திரனையும் அறிக. வாயுவை அறிக. (வாயு நிலத்திலிருந்து நாலாவது; நீரிலிருந்து மூன்றாவது; தீயிலிருந்து இரண்டாவது; வாயு ஒன்றாவது)

பேசாதே; செய்

741. முறை முறை ஆய்ந்து முயன்றிலர் ஆகில்
இறை இறை யார்க்கும் இருக்க அரிது;
மறையது காரணம் மற்றொன்றும் இல்லை
பறை அறையாது பணிந்து முடியே.

முறைமுறை யாய்ந்து முயன்றில ராகி[1]
லிறையிறை யார்க்கு மிருக்க வரிது
மறையது காரண மற்றொன்று மில்லை
பறையறை யாது பணிந்து முடியே. (9)

வேறு பாடம்: 1. வாகி (சண்)

கருத்து: அடுத்து அடுத்து உபதேசப்பொருளை ஆய்ந்து முயலாராயின் இறைத் தொடர்புடன் இவ்வுலகில் நிலைத்திருத்தல் அரிது. உபதேசத்தை மறைவாகச் சொல்வதன் காரணம் இதுவே. பேசித் திரியாமல் அடக்கத்துடன் சாதனை பழகுக.

குறிப்பு: இப்பாடல் அ, உ, ஆ, ஐ, ஊ - ஆகிய சுவடிகளில் இல்லை. இவ்வதிகாரம் அந்தாதித்தொடை பெற்றுள்ளது. இப்பாடல் இல்லையேல் அந்தாதித் தொடர் சிதைதலின் இது கொள்ளப்படுகின்றது.

உச்சி விளக்கு

742. முடிந்தது அறியார் முயல்கின்ற மூர்க்கர்;
இடிஞ்சில் இருக்க விளக்கு - எரி கொண்டு
கடிந்து அனல் மூளக் கதுவ வல்லார்க்கு
நடந்திடும் பாரினில் நண்ணலும் ஆமே.

முடிந்த தறியார் முயல்கின்ற மூர்க்க
ரிடிஞ்சி லிருக்க விளக்கெரி கொண்டு
கடிந்தனன் மூளக் கதுவவல் லார்க்கு
நடந்திடும் பாரினி னண்ணலு மாமே. (10)

கருத்து: மறையாக உள்ளமையை மூடர் அறியாது பலவாறு வாழ்கின்றனர். சகஸ்ராரம் ஆகிய அகலில் சுடர் கொளுவி, இருளை நீக்கி, ஒளி பெறும் வண்ணம், மூலக் கனலை மூட்டுபவர்க்கு இறப்பு இல்லை.

இடிஞ்சில் - அகல். நடந்திடும் பார் - காலத்தால் அழியும் உலகம். நண்ணல் - இறவாது உலாவுதல்.

இது ஒரு முத்திரை

743. நண்ணும் சிறுவிரல் நாண் ஆக மூன்றுக்கும்
பின்னிய மார்பு - இடைப் பேராமல் ஒத்திடும்;
சென்னியில் மூன்றுக்கும் சேரவே நின்றிடும்;
உன்னி உணர்ந்திடும் ஓவியம் தானே.

நண்ணுஞ் சிறுவிர னாணாக மூன்றுக்கும்
பின்னிய மார்பிடைப் பேராம லொத்திடுஞ்
சென்னியின் மூன்றுக்குஞ் சேரவே நின்றிடு[1]
[2]முன்னி [3]யுணர்ந்திடு மோவியந் தானே. (11)

வேறு பாடம்: 1.நின்றிடின் (எ) IV நின்றிடி (சண்) 2. லுன்னி (சண்) 3. யணைந்திடுஞ் (எ) IV.

கருத்து: சிறுவிரல், அணிவிரல், நடுவிரல் என்ற மூன்றுள், சிறுவிரல் வில் போன்ற புருவங்கட்கு நாணாக அமைய, பிராணன், அபானன் என்ற இரண்டு வாயுவும் மார்பில் உள்ள நாடியில் (அனாகதம்) ஒத்து நிற்கும். அதனால், தலையில் அக்கினி, சூரியன், சந்திரன் என்ற மூன்று மண்டலங்களும் நிலைபெறும். அவற்றைத் தியானத்தில் வைக்கலாம்.

முதல் இரண்டு அடிகளில் 'சத்தி சாலனம்' என்னும் முத்திரை கூறப்பட்டது.

உணர்வு விளக்கு

744. ஓவியம் ஆன உணர்வை அறிமின்கள்;
பாவிகள் இத்தின் பயன் அறிவார் இல்லை;
தீவினையாம் உடல் மண்டலம் மூன்றுக்கும்
பூவில் இருந்திடும் புண்ணியத் தண்டே.

ஓவிய மான வுணர்வை யறிமின்கள்
பாவிக ளித்தின் பயனறி வாரில்லை
தீவினை யாமுடன் மண்டல மூன்றுக்கும்
பூவி லிருந்திடும் புண்ணியத் தண்டே. (12)

கருத்து: சித்திரம் போன்ற உயிருணர்வை அறிக. பாவிகள் இதன் பயனை அறியார். தீமையான மாயாமலத்தின் காரியமாம் உடலில் உள்ள அக்கினி, சூரியன், சந்திரன் என்ற மூன்று மண்டலத்திற்கும் ஒளி தருவதற்குச் சகஸ்ராரத் தாமரையில் சுழுமுனை ஆகிய தண்டு உள்ளது.

தண்டு - வேர்

யார் ஞானி?

745. தண்டு - உடன் ஓடித் தலைப்பெய்த யோகிக்கு
மண்டலம் மூன்றும் மகிழ்ந்து உடல் ஒத்திடும்;
கண்டவர் கண்டனர்; காணார் வினைப் பயன்
பிண்டம் பிரியப் பிணங்குகின்றாரே.

தண்டுட னோடித் தலைப்பெய்த யோகிக்கு
மண்டல மூன்று மகிழ்ந்துட லொத்திடுங்
கண்டவர் கண்டனர் காணார் வினைப்பயன்
பிண்டம் பிரியப் பிணங்குகின் றாரே. (13)

கருத்து: சுழுமுனை வழியே மூலக் கனலைச் செலுத்தி, சகஸ்ராரத்தில் தன் உணர்வு பொருந்தப் பெற்ற யோகிக்கு, அக்கினி, சூரிய, சந்திர மண்டலங்கள் ஒத்து ஒளி பெறும். இவ்வொளியைக் கண்டவர்களே மெய்ஞ்ஞானியர். இதனை அறியாதவர், வினைக்கு ஈடான உடம்பு இறக்குமாறு, மாறுபட்ட செயல் உடையவர் ஆவர்.

அருளால் பெறுவதே பேறு

746. பிணங்கி அழிந்திடும் பேறு; அது கேள் நீ;
அணங்குடன் ஆதித்தன் ஆறு விரிவின்
அணங்குடனே வந்த வாழ்வு குலைந்து
சுணங்கனுக்காகச் சுழல்கின்றவாறே.

பிணங்கி யழிந்திடும் பேறது கேணீ
[1]யணங்குட னாதித்த னாறு விரிவி[2]
[3]னணங்குட னேவந்த வாழ்வு குலைந்து
சுணங்கனுக் காகச் சுழல்கின்ற வாறே. (14)

வேறு பாடம்: 1. யணங்குள (எ) I. 2. விரிப்பி (ஆ) II விரியி (எ) II. 3. வணங்குட (விசு)

கருத்து: மாறுபட்ட செயலால், கிடைக்கத்தக்க நற்பேறு அழியும். சூரியனின் வழியாகிய காலம் எல்லாம், குண்டலி சத்தி சிற்றின்பச் செயல்களில் விரிவதால் அருட் சத்தியுடன் வாழும் வாழ்வு எய்தப் பெறாது இறந்து, நாய் தின்னுவதற்காக உடலை வளர்ப்பதாக முடியும்.

இங்கே பேரின்பம்

747. சுழல்கின்றவாறு இன்துணைமலர் காணான்
தழல் இடைப் புக்கிடும் தன்னுள் நிலாமல்;
கழல் கண்டு, போம் வழி காண வல்லார்க்குக்
குழல் வழி நின்றிடும் கூத்தனும் ஆமே.

சுழல்கின்ற வாறின் றுணைமலர் காணான்
றழலிடைப் புக்கிடுந் தன்னு ணிலாமற்[1]
கழல்கண்டு போம்வழி காணவல் லார்க்குக்
குழல்வழி நின்றிடுங் கூத்தனு மாமே. (15)

வேறு பாடம்: 1. ளிலாமற் (இ எ ஒ) I.

கருத்து: உலகியலில் சுழல்வதால், இறைவனது திருவடியைக் காணாமல், உயிர் உணர்வில் நிலைத்து நில்லாமல், தன் உடம்பு தீயில் புக இறப்பான். அவ்வாறின்றி, இறைவனது திருவடியைக் கண்டு பரவெளியில் வாழும் வழியைக் காண்பவர்க்கு, அவர்களது சுழுமுனையின் வழியே இறையனுபவம் கிட்டும்.

இன்பம் உன்னுள்ளே

748. கூத்தன் குறியில் குணம்பல கண்டவர்
சாத்திரம் தன்னைத் தலைப்பெய்து நிற்பர்கள்;
பார்த்திருந்து உள்ளே அனுபோகம் நோக்கிடில்
ஆத்தனும் ஆகி அலர்ந்திடும் ஒன்றே.

கூத்தன் குறியிற் குணம்பல கண்டவர்
சாத்திரந் [1]தன்னைத் தலைப்பெய்து நிற்பர்கள்
பார்த்திருந் துள்ளே யனுபோக நோக்கிடி
லாத்தனு மாகி [2]யலர்ந்திடு மொன்றே. (16)

வேறு பாடம்: 1. தன்னிற் (இ) IV. 2. யலந்திரு (இ ஊ ஒ), யலர்ந்திரு (ஆ எ) I.

கருத்து: சிவபெருமானது இடமாகிய சகஸ்ராரத்தில் பல அனுபவங்களைப் பெற்றவர் சாத்திரக் கூற்று மெய்யென அறிவர். உண்முகமாகப் பார்த்து அனுபவத்தை வேண்டினால், இறைவன் நெருக்கமானவன்ஆகி, மலர்ந்து விளங்கும் ஒரு பொருள் ஆவான்.

என்றும் கலந்திரு

749. ஒன்றில் வளர்ச்சி உலப்பு இலி; கேள் இனி
நன்று என்று; மூன்றுக்கு நாள் - அது சென்றிடும்;
சென்றிடும் முப்பதும் சேர இருந்திடில்
குன்றிடை ஒன்றிய கூத்தனும் ஆமே.

ஒன்றில் வளர்ச்சி யுலப்பிலி கேளினி
நன்றென்று மூன்றுக்கு நாளது சென்றிடுஞ்
சென்றிடு முப்பதுஞ் சேர விருந்திடிற்
குன்றிடை [1]யொன்றிய கூத்தனு மாமே. (17)

வேறு பாடம்: 1. பொன்றிதழ் (இ எ) IV.

கருத்து: பிராணாயாமத்தில் நாள் பல கழியும். முப்பது நாளும் சமாதியில் இருந்தால் இறைவன் சகஸ்ராரத்தில், உயிருணர்வில் கலந்து நிற்பான். அவ்வாறு ஒன்றி நின்றால், ஆன்மீக வளர்ச்சி எல்லையற்றதாகும்.

நூறாண்டு வாழ

750. கூத்து-அவன் ஒன்றிடும் கூர்மை அறிந்து அங்கே
ஏத்துவர் பத்தினில் எண் - திசை தோன்றிட,
பார்த்து மகிழ்ந்து, பதும்பரை நோக்கிடில்
சார்த்திடும் நூறு தலைப்பெய்யலாமே.

கூத்தவ னொன்றிடுங் கூர்மை யறிந்தங்கே[1]
யேத்துவர் பத்தினி லெண்டிசை தோன்றிடப்
பார்த்து மகிழ்ந்து [2]பதும்பரை நோக்கிடிற்
[3]சார்த்திடு நூறு [4]தலைப்பெய்ய லாமே. (18)

வேறு பாடம்: 1. யறிந்தங் (சண்) 2. பதுமரை (எ); பதும்பறை (ஆஇ ஈ) I. 3. சாத்திடு (சண்) (சைவ) (துடி) சாற்றிடு (த) 4. தலைப்பெய்த (சண்).

கருத்து: கூத்தப் பெருமான் உயிருணர்வில் கலந்துநிற்கும் நுட்பத்தை அறிந்து, சூரிய கலையிலும் சந்திர கலையிலும் அந்த உணர்வைச் செலுத்தி அவனைத் தரிசிப்பர். பிறகு அவன் பரமாண்டத்தில் விளங்குவதைக் காண்பர். தலையைச் சுற்றி எட்டுத் திசைகளிலும், மேலும் கீழும் ஆகப் பத்து இடங்களிலும் விளங்கும் பராசத்தியின் அருளைப் பெறின், மக்கட் பிறவிக்குச் சார்த்திய நூறாண்டும் வாழலாம்.

குறிப்பு: பெரும்பாலான சுவடிகளில் 4 - ஆம் அடியில் முதற்சீர் 'சாத்திடும்' என்றே உள்ளது. பொருள் நோக்கி இப்பதிப்பில் 'சார்த்திடும்' எனத் திருத்தப்படுகின்றது.

கோடிக் கண்கள்

751. சார்த்திடு நூறு தலைப்பெய்து நின்றவர்
காத்து உடல் ஆயிரம் கட்டு உறக் காண்பர்கள்;
சேர்த்து உடல் ஆயிரம் சேர இருந்தவர்
மூத்து உடன் கோடி முகம் - அது ஆமே.

[1]சார்த்திடு நூறு தலைப்பெய்து நின்றவர்
காத்துட லாயிரங் கட்டுறக் காண்பர்கள்
சேர்த்துட லாயிரஞ் சேர விருந்தவர்
மூத்துடன் [2]கோடி [3]முகமது வாமே. (19)

வேறு பாடம்: 1. சாற்றிடு (ஓ) I; சாத்திடு (சண்) (துடி) (சைவ) 2. கூடி (எ) I. 3. யுகமது (ஊ ஓ) II.

கருத்து: நூறாண்டு வாழ்பவர் ஆயிரம் ஆண்டும் மேலும் வாழ்வர். அவர்க்கு இறப்பு இல்லை. அவர் முகம் முதிர்ந்து கோடி முகத்தை ஒக்கும். முகம் என்பது பார்வையைக் குறிக்கும். கோடிக் கண் களால் பார்த்தலை ஒப்பப் பேரண்டத்தில் உள்ள ஒளியினைக் காண்பர்.

நாம் வேறு; சிவம் வேறு அல்ல

752. முகம் கோடி கண்டு முசிவு அற நின்று
அகம் கோடி கண்டு உள் அயல் அறக் காண்பர்கள்
சிவம் கோடி விட்டுச் செறிய இருந்து அங்கு
உகம் கோடி கண்டு உயர் உறுவாரே.

[1]முகங்கோடி கண்டு [2]முசிவற நின்று
வகங்கோடி கண்டு [3]ஏயலறக் காண்பர்கள்
சிவங்கோடி விட்டுச் செறிய விருந்தங்
[4]குகங்கோடி கண்டங் குயருறு வாரே. (20)

வேறு பாடம்: உகங்கோடி (எஓ) IV. 2. மொசிவற (எ) I. 3. ஏயர் வறக் (சைவ) 4. குதங்கோடி (ஆ) I.

கருத்து: பேரண்டத்தில் உறையும் இறைவனைக் கண்டு, அழிவு இன்றி நின்று, மனம் முடிந்த நிலையைக் கண்டு, அக முகக் காட்சியாக, 'எதுவும் இறைவனுக்கு அந்நியம் இல்லை' என்பதைக் காண்பர். 'தாமும் இறையும் ஒவ்வொரு கோடியில் தனியாக இருப்பவர் அல்லர்' என்பதையும் உணர்ந்தவாறு, இறைவனுடன் ஒன்றி நின்று, பல்லூழிக் காலம் வாழ்ந்து, உயர்வு அடைவர்.

இம்மை வாழ்வின் பயன்

753. உயர் உறுவார், உலகத்தொடும் கூடிப்
பயன் உறுவார் பலர்தாம் அறியாமல்;
செயல் உறுவார் சிலர் சிந்தை இலாமல்
கயல் உறு கண்ணியைக் காணகிலாரே.

[1]உயருறு வாருல கத்தொடுங் கூடிப்[2]
பயனுறு வார்பலர் தாமறி யாமற்
செயலுறு வார்சிலர் சிந்தை யிலாமற்
கயலுறு கண்ணியைக் காணகி லாரே. (21)

வேறு பாடம்: 1. உயலுறு (ஆ) I. 2. கூடிய (விசு)

கருத்து: (மேற்பாட்டில் கூறப்பட்டவர்) ஆன்மிக உயர்வினை எய்துவர். மக்களுடனும் கூடி வாழ்ந்து பயன்பெறுவர். இவ்வுண்மை யைப் பலரும் அறியார். மற்றும் சிலர் சிந்தனை இன்றி, வினைப் பயன்களை ஈட்டுவர். அவர் பராசத்தியைக் காண வியலாது நிற்பர்.

நூலறிவால் என்ன பயன்

754. காணகிலாதார் கழிந்து ஓடிப் போவர்கள்;
நாணகிலாதார் நயம் பேசி விடுவர்கள்;
காணகிலாதார் கழிந்த பொருள் எல்லாம்
காணகிலாமல் கழிகின்ற வாறே.

காணகி லாதார் கழிந்தோடிப் போவர்க
ணாணகி லாதார் நயம்பேசி விடுவர்கள்[1]
காணகி லாதார் [2]கழிந்த பொருளெல்லாங்
காணகி லாமற் கழிகின்ற வாறே. (22)

வேறு பாடம்: 1. திரிவர்கள் (இ ஈ) III. 2. கழிகின்ற வப்பொருள் (ஆ) IV.

கருத்து: பராசத்தியின் ஒளியைக் காணாதார் வாழ்வின் பயனைப் பெறாமல் வீணே அழிவர். அனுபவமின்றி, நூலறிவு மட்டுமே உடையோர் நாணமின்றி நூல்நயமே பேசி மறைவர். பராசத்தியைக் காணாதார் தத்துவப் பொருள் எதையும் உணரமாட்டாமல் பயன் இன்றி வாழ்கின்றனர். இஃது என்னே!

தத்துவங்களின் பயன்

755. கழிகின்ற அப்பொருள் காணகிலாதார்
கழிகின்ற அப்பொருள் காணலும் ஆகும்;
கழிகின்ற உள்ளே கருத்து உற நோக்கில்
கழியாத அப்பொருள் காணலும் ஆமே.

கழிகின்ற வப்பொருள் காணகி லாதார்
கழிகின்ற வப்பொருள் காணலு மாகுங்
கழிகின்ற வுள்ளே கருத்துற நோக்கிற்
கழியாத வப்பொருள் காணலு மாமே. (23)

கருத்து: பயன் கொள்ளாமல் அழிகின்ற தத்துவங்களின் உண்மையைக் காண இயலாதவர், அவை இயங்கும்போதே அவற்றது உண்மையை உணரவும் கூடும். எப்பொழுது? கழிந்து கொண்டிருக்கும் காலத்தில், அகமுகமாகப் பார்த்தால், மாறுதல் அற்ற இறையைக் காணலாம். அப்பொழுது என்க.

சிவபதம் அரியது அன்று

756. கண்ணன், பிறப்பு - இலி, காண்நந்தியாய் உள்ளே
எண்ணும் திசையுடன் ஏகாந்தன் ஆயிடும்;
திண் என்று இருக்கும்; சிவகதியாய் நிற்கும்;
நண்ணும் பதம் இது நாடவல் லார்க்கே.

கண்ணன் பிறப்பிலி காணந்தி யாயுள்ளே
யெண்ணுந் திசையுட [1]னேகாந்த னாயிடுந்
திண்ணென் றிருக்குஞ் சிவகதி யாய்நிற்கு[2]
நண்ணும் பதமிது நாடவல் லார்க்கே. (24)

வேறு பாடம்: 1. னேகாந்தியாயிடுந் (ஆ) IV. 2. யாநிற்கு (சண்)

கருத்து: கண் போன்றவன் ஆகிய இறைவன் பிறப்பு இறப்பு இல்லாதான். புறத்தே காணும் குருவாக எழுந்தருளியவன். எட்டுத் திசைகளிலும் கலந்திருப்பது அல்லாமலும், உயிரினுள், உணர்வில் கலந்து ஒளியாய் நிற்பதல்லாமலும், தனித்த பரம்பொருளாய் உள்ளவன். அசைவற்றவன். சிவகதி நல்குபவன். உரிய நெறியில் நாடுவோர்க்கு இச்சிவபதம் எய்தக் கூடியதே.

மரணம் இல்லை

757. நாட வல்லார்க்கு நமன் இல்லை; கேடு இல்லை;
நாட வல்லார்கள் நரபதியாய் நிற்பர்;
தேட வல்லார்கள் தெரிந்த பொருள் இது
கூட வல்லார்கட்கும் கூறலும் ஆமே.

நாடவல் லார்க்கு நமனில்லை கேடில்லை
நாடவல் லார்க ணரபதி யாய்நிற்பர்
தேடவல் லார்க டெரிந்த பொருளிது
கூடவல் [1]லார்கட்குங் [2]கூறலு மாமே. (25)

வேறு பாடம்: 1. லார்கட்குக் (இ ஈ எ ஒ) I. 2. கூடலு (ஆ ஊ) I.

கருத்து: இதனை அனுபவ அறிவால் அறியவல்லார்க்கு நமன் இல்லை; அழிவு இல்லை. அவர்கள் உயிர்கட்குத் தலைவராய் விளங்குவர். இஃது அறிவால் ஆராய்ந்தோரும் தனிச் சிறப்புடைய தாகக் கூறும் பொருள். இப்பொருளோடு ஒன்றி நிற்க வல்லவர்கூட இதைப் பற்றிச் கூற இயலுமா? இயலாது.

பிரணவத் தியானம்

758. கூறும் பொருள் இது; அகார உகாரங்கள்
தேறும் பொருள் இது; சிந்தையுள் நின்றிடக்
கூறும் மகாரம் குழல்வழி ஓடிட
ஆறும் அமர்ந்திடும் அண்ணலும் ஆமே.

கூறும் பொருளி தகார வுகாரங்க
டேறும் பொருளிது சிந்தையு ணின்றிடக்
[1]கூறு மகாரங் குழல்வழி யோடிட
[2]வாறு மமர்ந்திடு மண்ணலு மாமே. (26)

வேறு பாடம்: 1. கூறும் வகாரம் (ஆ) I. 2. வாறுந்திடுமதி யண்ணலு (இ ஆ) IV; மாறு (சண்).

கருத்து: சிறந்து எடுத்துக் கூறும் பொருள் இதுவே. பிரணவத்தின் அகார, உகார ஒலிகளால் அனுபவம் பெற்றுத் தெளியும் பொருளும் இதுவே. பிரணவம் தியானத்தில் நிறுத்தப்படும் பொழுது, அதன் இறுதி ஒலியாகிய மகாரம் சுழுமுனையில் மூலக் கனலைச் செலுத்தி னால் இறைவன் ஆறு ஆதாரங்களிலும் அமர்ந்து அனுபவத்திற்குப் பொருளாவான்.

ஒளியும் ஒலியுமாக இறைவன்

759. அண்ணல் இருப்பிடம் ஆரும் அறிகிலார்;
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்து கொள்வார்களுக்கு
அண்ணல் அழிவு இன்றி உள்ளே அமர்ந்திடும்;
அண்ணலைக் காணில், அவன் இவன் ஆமே.

அண்ண லிருப்பிட மாரு மறிகிலா
ரண்ண லிருப்பிட மாய்ந்துகொள் வார்களுக்
கண்ண லழிவின்றி யுள்ளே யமர்ந்திடு
மண்ணலைக் காணி லவனிவ னாமே. (27)

கருத்து: ‘இறைவன் ஒளியும் நாதமுமாக இருக்கிறான்; நம் உடம்புள்ளே இருக்கிறான்’ என்பதை ஒருவரும் அறியவில்லை. அதனை அனுபவத்தால் அறிபவர்க்கு, என்றும் இறப்பு வராதவாறு, இறைவன் அவர்தம் உயிர் உணர்வு மலரும் இடமாகிய தலை உச்சிச் சகஸ்ராரத்தில் எழுந்தருள்வான். அவ்வாறு, உயிர் உணர்வால், இவன் (யோகி) இறைவனைக் காணும் போது, இருவரும் ஒன்றாய் நிற்பர்.

பேரொளி காணலாம்

760. அவன் இவன் ஆகும் பரிசு அறிவார் இல்லை
அவன் இவன் ஆகும் பரிசு-அது கேள் நீ;
அவன் இவன் ஓசை ஒளியினில் ஒன்றிடும்
அவன் இவன் வட்டம் - அது ஆகி நின்றானே.

அவனிவ னாகும் பரிசறி வாரில்லை
யவனிவ னாகும் பரிசது கேணீ
யவனிவ னோசை யொளியினி லொன்றிடு
மவனிவன் வட்டம தாகிநின் றானே. (28)

கருத்து: இறைவன் உயிராகும் தன்மையை அறிபவர் இல்லை. உயிர் அகப்புலனால் கேட்கும் நாதத்திலும், காணும் பேரொளியிலும் இறைவன் ஒன்றி நிற்பான். பிரணவத்தினுள் இருவரும் ஒன்றி நிற்பர்.

வட்டம் - பிரணவம். ஆதாரம் எனலுமாம். இப் பொருளுக்கு, இறைவன் ஆறு ஆதாரங்களிலும் ஒன்றிநிற்பான் எனக்கொள்க. ஆகாயம் எனவும் பொருள் உண்டு. இதற்கு உயிரினது சிதாகாசம் எனக் கொள்க.

இறைவன் இருப்பிடம்

761. வட்டங்கள் ஏழும் மலர்ந்திடும் தம்முளே;
சிட்டன் இருப்பிடம்; சேர அறிகிலார்;
ஒட்டி இருந்து உள், உபாயம் உணர்ந்திடக்
கட்டி இருப்பிடம் காணலும் ஆமே.

வட்டங்க ளேழு [1]மலர்ந்திடுந் தம்முளே[2]
சிட்ட னிருப்பிடஞ் சேர வறிகிலா[3]
ரொட்டி யிருந்து ளுபாய முணர்ந்திடக்
கட்டி யிருப்பிடஞ் காணலு மாமே. (29)

வேறு பாடம்: 1. மலந்திடு (ஈ ஊ ஒ) I. 2. மும்முளே (சுவடிகள்) பதிப்புகள் V. 3. வறிகிலீ (எ) II; வறிகில (இ ஒ) I.

கருத்து: மனிதர்க்குத் தம்முடம்பில் உள்ள ஆதாரம் ஆறும், சகஸ்ராரமும் யோக சாதனையால் மலரும். அப்போது அவை இறைவனது இருப்பிடம் ஆகும். அவ்வாறு இருந்தும் அவனைச் சேர யோகத்தைக் கைக்கொள்ளாமல் இருக்கின்றனர். அவனைச் சார்ந்து, உபாயத்தை அறிந்தால், இங்குக் கூறிய அவனது இருப்பிடத்தை எல்லை கோலி அறியலாம்.

கட்டி என்பதன் முன் 'எல்லை' என ஒரு சொல் வருவிக்க.

ஒன்றே ஐந்து

762. காணலும் ஆகும் பிரமன், அரி என்று;
காணலும் ஆகும் கறைக் கண்டன், ஈசனை;
காணலும் ஆகும் சதாசிவ சத்தியும்;
காணலும் ஆகும் கலந்து, உடன் வைத்தே.

காணலு மாகும் பிரம னரியென்று[1]
காணலு மாகுங் கூறைக்கண்ட னீசனைக்
காணலு மாகுஞ் சதாசிவ சத்தியுங்[2]
காணலு மாகுங் கலந்துடன் வைத்தே[3]. (30)

வேறு பாடம்: 1. னரிவென்று (ஆ) IV. 2. சத்தியைக் (ஆ) II. 3. வைத்ததே (ஆ எ) IV.

கருத்து: இறைவனே பிரமன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னும் ஐந்து மூர்த்திகளாகவும் அவர்களின் சத்திகளாகவும் இருத்தலையும் இறைவன் தம்முட் கலந்து நிற்கும் போதே காணவும் கூடும்.

763. வைத்தகை சென்னியி னேரிதாய்த் தோன்றிடி
லுத்தம மிக்கிடி லோராறு திங்களா
மத்த மிகுத்திட் டிரட்டிய தாயிடி
னித்த லுயிர்க்கொரு திங்களி லோசையே. (ஐ)

ஓசையில் ஈசன்

764. ஓசையும் ஈசனும் ஒக்கும் உணர்வின்கண்;
ஓசை பிறந்தவர் ஈசனை உள்குவர்;
ஓசை பிறந்தவர் நெஞ்சினுள் ஈசனும்
ஓசை உணர்ந்த உணர்வு இது ஆமே.

ஓசையு மீசனு [1]மொக்கு முணர்வின்க
ணோசை [1]பிறந்தவ ரீசனை யுள்குவ
ரோசை [2]பிறந்தவர் நெஞ்சினு ளீசனு
மோசை யுணர்ந்த வுணர்விது வாமே. (31)

வேறு பாடம்: 1. யிறந்தவ (எ) IV. 2. யிறந்தவர் (இ எ) IV.

கருத்து: உயிருணர்விற்கு நாதமும் இறைவனும் ஒன்றேயாய்த் தோன்றும். நாதம் பிறக்கப்பெற்றவர் இறைவனை உணர்வர். அவரது உயிர்க்கு உயிராய் நிற்கும் இறைவனும் அந்த நாதத்தை உணர்வான்.

குறிப்பு: சுவடிகளிலும் பதிப்புகளிலும் இதற்கு முன்னையதாகிய "வைத்தகை" என்ற பாடல் முதல் 'ஆயுட் பரீட்சை' என்ற இயல் தொடங்குகின்றது. 'ஓ' - சுவடியில் 'கால சக்கரம்' என்ற இயலே தொடர் கின்றது. பொருத்தம் நோக்கி இப்பதிப்பில் அம் முறையே கொள்ளப் படுகிறது.

கதவைத் திற

765. ஆமே, அழிகின்ற வாயுவை நோக்கிடின்
நாமேல் உறைகின்ற நன்மை அளித்திடும்;
பூமேல் உறைகின்ற போதகம் வந்திடும்;
தாமே உலகில் தலைவனும் ஆமே.

ஆமே [1]யழிகின்ற வாயுவை நோக்கிடி
னாமே [2]லுறைகின்ற நன்மை யளித்திடும்
பூமே லுறைகின்ற போதகம் வந்திடுந்
தாமே யுலகிற் றலைவனு மாமே. (32)

வேறு பாடம்: 1. யழிக்கின்ற (ஆ ஊ) I. 2. யுறைகின்ற (அ ஆ) I.

கருத்து: உடம்பில் உண்ணாக்கிலிருந்து உச்சந்தலைக்குச் செல்லும் வழி அடைத்திருப்பதால் மூச்சுக் காற்றின் நான்கு விரற்கடை அளவு வீணாகின்றது. உண்ணாக்கு வழியைத் திறந்து, காற்றை வீணாகாமல் செய்தால் உயிருணர்வு சகஸ்ராரத்திற்குச் செல்லும். பின்பு அத்தாமரையில் வாழ்கின்ற ஞானம் கைவரும். பின்பு உயிர் இறைவனே ஆகி நிற்கும்.

புலன்கள் வசப்பட

766. தலைவன் இடம் வலம் சாதிப்பார் இல்லை;
தலைவன் இடம் வலம் ஆடிற்று அறையின்;
தலைவன் இடம் வலம் தன்வழி அஞ்சில்;
தலைவன் இடம் வலம் தன்வழி நூறே.

தலைவ னிடம்வலஞ் சாதிப்பா ரில்லை
தலைவ னிடம்வல [1]மாடிற் றறையிற்[2]
றலைவ னிடம்வலந் தன்வழி யஞ்சிற்
றலைவ னிடம்வலந் தன்வழி நூறே[3] (33)

வேறு பாடம்: 1. மாயிடிற்றையற் (எ) IV; மாடியிற் (இ) I. 2. றலையிற் (ஆ) றையல் (இ) IV.

கருத்து: தலைவன் ஆகிய இறைவன், உயிர் தன்னை அடைவதற்கு வழியாக உடம்பில் வைத்த இடக்கண் பார்வையை வலக்கண் பார்வையோடு பொருத்தும் வகையை அறிபவர் இல்லை. இறைவனே கூத்தப் பெருமானாக வலக் காலினை ஊன்றி இடக்காலினைத் தூக்கி ஆடியமை வரலாறு. இச் சாதகத்தால் புலன்கள் ஐந்தும் வசப்படும். ஆயுளும் நூறாண்டு ஆகும்.

தன் வழி அஞ்சில் - இடகலை, பிங்கலை நாடிகளில் ஐந்து விரற்கடை மூச்சுக்காற்று வெளியேறுவது என்றும் பொருள்படும்.

சுழுமுனையை அறிக

767. ஏறிய ஆறினில் எண்பது சென்றிடும்;
தேறிய ஏழில் சிறக்கும் வகை எண்ணில்
ஆறு ஒரு பத்தாய் அமீர்ந்த இரண்டையும்
தேறியே நின்று தெளி இவ்வகையே.

ஏறிய வாறினி லெண்பது சென்றிடுந்
தேறிய வேழிற் சிறக்கும் வகையெண்ணி
லாறொரு பத்தா யமர்ந்த விரண்டையுந்
தேறியே நின்று தெளியிவ் வகையே. (34)

கருத்து: ஆறு விரற்கடை மூச்சுக் காற்று வெளியேறினால் எண்பது ஆண்டு ஆயுள் அமையும். ஏழு விரற்கடை மூச்சுக் காற்று வெளியேறினால் அறுபதாண்டு வாழலாம். ஆதலின் இடகலை, பிங்கலை நாடிகளையும் சுழுமுனை நாடியையும் அறிந்து தெளிக.

இடைகலை, பிங்கலை நாடிகளில் மூச்சுக் காற்றைப் பிராணாயா மத்தின் மூலம் ஒழுங்குபடுத்தினால் இரண்டு நாடிகளிலும் வெளி யேறும் மூச்சு சமமாகவும் விரற்கடை யளவு குறைந்தும் இருக்கும். சுழுமுனை நாடியில் உச்சந்தலைக்குச் செல்லும் காற்று மிகுதியாகும். விரற்கடை என்பது நீளம்.

வாழ்நாள் உன் கையில்!

**768. இவ்வகை எட்டும் இடம்பெற ஓடிடில்
அவ்வகை ஐம்பதே என்ன அறியலாம்;
செவ்வகை ஒன்பதும் சேரவே நின்றிடின்
முவ்வகையாம் அது முப்பத்து மூன்றே.**

இவ்வகை யெட்டு [1]மிடம்பெற வோடிடி
லவ்வகை [2]யைம்பதே யென்ன வறியலாஞ்
செவ்வகை யொன்பதுஞ் சேரவே நின்றிடின்
முவ்வகை [3]யாமது முப்பத்து மூன்றே. (35)

வேறு பாடம்: 1. மிடம்பட (அ ஈ) IV. 2. யைம்பதமென்ன (ஆ) IV; யையொன்பதே (சண்) (விசு) 3. யாலது (இ ஈ ஒ) II; யாவது (அ ஆ) III.

கருத்து: எட்டு விரற்கடை அளவு மூச்சுக் காற்று வெளியேறினால் ஆயுள் ஐம்பது ஆண்டே. ஒன்பது விரற்கடை எனின், மூப்பு அடைந்து முடியும் வாழ்நாள் முப்பத்து மூன்று ஆண்டுகளே.

குறைவது உன்னால்

**769. மும்மூன்றும் ஒன்றும் முடிவு உற நின்றிடில்
எண்மூன்றும் நாலும் இடவகையாய் நிற்கும்;
ஐம்மூன்றும் ஓடி அகலவே நின்றிடில்
பன்மூன்றொடு ஈராறு பார்க்கலும் ஆமே.**

மும்மூன்று மொன்று [1]முடிவுற நின்றிடி
[2]லெண்மூன்று நாலு மிடவகை யாய்நிற்கு
மைம்மூன்று மோடி [3]யகலவே நின்றிடிற்
பன்மூன்றொ டீராறு பார்க்கலு மாமே. (36)

வேறு பாடம்: 1. முடியுற (ஆ ஊ ஒ) I. 2. லெண்மூன்றினாலு (அ ஈ) I. 3. லகல வே (ஊ) IV.

கருத்து: பத்து விரற்கடை அளவு மூச்சுக்காற்று வெளியேறினால் இருபத்தெட்டு ஆண்டுகள் வாழலாம். பதினைந்து விரற்கடை எனில், இருபத்தைந்து ஆண்டுகள் வாழலாம்.

முக்கதிர்ச் சந்திப்பு

770. பார்க்கலும் ஆகும் பகல் முப்பதும் ஆகில்
ஆக்கலும் ஆகும் அவ் ஆறிரண்டு உள் இட்டுப்
போக்கலும் ஆகும் புகல் அற ஒன்று எனின்,
தேக்கலும் ஆகும் திருந்திய பத்தே.

பார்க்கலு மாகும் பகன்முப் பதுமாகி
லாக்கலு மாகுமவ் வாறிரண் டுள்ளிட்டுப்[1]
போக்கலு மாகும் [2]புகலற வொன்றெனிற்
றேக்கலு மாகுந் [3]திருந்திய பத்தே. (37)

வேறு பாடம்: 1. டுள்ளிட்டும் (சண்) (விசு) 2. புகரற (இ) I. 3. திருத்திய (அ ஊ) I.

கருத்து: வலக்கண்ணில் உள்ள சூரியனை (அறிவை) இடக்கண்ணில் உள்ள சந்திரனோடு (உணர்வு) பொருத்தினால் எட்டாம் திசையாகிய ஈசானத்தில் உணர்வு விளங்கும். இடகலை, பிங்கலை நாடிகளில் புகுவதை மாற்றி, சுழுமுனையின் வழியே மூச்சைச் செலுத்தினால், மேற்கூறிய உணர்வு அக்கினியுடன் சேர்ந்து விளங்கும். முக்கதிரும் சேர்வது என்பது இதுவே.

பத்து - அக்கினி.

வாணாள் வளர

771. ஏய் இரு நாளும் இயல்பு உற ஓடிடில்
பாய் இரு நாலும் பகை அற நின்றிடும்;
தேய்வு உற மூன்றும் திகழவே நின்றிடில்
ஆயுரு ஆறு என்று அளக்கலும் ஆமே?

ஏயிரு நாளு மியல்புற வோடிடிற்[1]
[2]பாயிரு [3]நாலும் பகையற நின்றிடுந்
[4]தேய்வுற மூன்றுந் திகழவே நின்றிடி
லாயுரு [5]வாறென் றளக்கலு மாமே. (38)

வேறு பாடம்: 1. வோட்டிடிற் (ஒ) IV. 2. பாயுரு (தி) 3. நாளும் (எ) I. 4. தேயுற (ஊ ஒ) I. 5. வாமென் (எ) II.

கருத்து: இரண்டு நாள் மூச்சு சுழுமுனையில் ஓடினால், கீழ் நோக்கிப் பாய்கின்ற அபானனும் அதில் கலக்கும் சந்திரனும் உயிருக்கு உதவும். மூன்று நாள் அபானனின் சத்தியைக் குறைத்து மூச்சைச் சுழுமுனையில் செலுத்தினால், விந்து செயம் உண்டாகும். பின்பு ஆயுள் இன்னவாறு தான் வளரும் என்று அளக்கவும் முடியுமோ?

தெய்வக் காட்சி

772. அளக்கும் வகை நாலும் அவ்வழி ஓடில்
விளக்கும் ஒரு நாலும் மெய்ப்பட நிற்கும்;
துளக்கும் வகை ஐந்தும் தூய்நெறி ஓடில்
களக்கம் அற மூன்றில் காணலும் ஆமே.

அளக்கும் வகைநாலு மவ்வழி யோடில்[1]
விளக்கு மொருநாலு மெய்ப்பட நிற்குந்
துளக்கும் [2]வகையைந்துந் தூய்நெறி யோடில்
களக்க [3]மறமூன்றிற் காணலு மாமே. (39)

வேறு பாடம்: 1. யேயோடில் (துடி) (சைவ) 2. வகையாய்ந்தும் (அ ஊ ஓ) II. 3. மறமுன்றிற் (சண்).

கருத்து: மூச்சு சுழுமுனை வழியே நான்கு நாள் ஓடினால் நாதம், விந்து, சிவம், சத்தி என்ற நான்கு அருவமும் உடம்பில் இடம் கொள்ளும். ஐந்து நாள் ஓடினால், சதாசிவம், பரசிவம், பராசத்தி - காட்சி வழங்குவர்.

நாலு - நான்குநாள். நாலு (2 ஆம் அடி) அருவம் நான்கு:- நாதம், விந்து, சிவம், சத்தி. ஐந்து - ஐந்து நாள். மூன்று - சதாசிவமும், பரசிவம், பராசத்தி ஆகியவரும்.

பரசிவ தரிசனம்

773. காணலும் ஆகும் கருதிய பத்து ஓடில்
காணலும் ஆகும் கலந்த இரண்டையும்
காணலும் ஆகும் கலப்பு அற மூ - ஐந்தேல்
காணலும் ஆகும் கருத்து - உற ஒன்றே.

காணலு மாகுங் கருதிய பத்தோடிற்
காணலு மாகுங் கலந்த விரண்டையுங்
காணலு மாகுங் கலப்பற மூவைந்தேற்
காணலு மாகுங் கருத்துற வொன்றே. (40)

கருத்து: மூச்சு சுழுமுனையில் பத்து நாள் ஓடினால் பராசத்தியுடனாய பரசிவத்தையும், பதினைந்து நாள் ஓடினால் ஏகசிவத்தையும் தரிசிக்கலாம்.

கலந்த இரண்டு - பரசிவம், பராசத்திகளின் கலப்பு. மேற் பாடலிற் கூறியது தனிநிலை. மூவைந்து - பதினைந்து நாள். ஒன்று - ஏக சிவம்.

நிராதாரத்திலும் ஆதாரங்கள்

774. கருதும் இருபதில் காண ஆறு ஆகும்;
கருதிய ஐயைந்தில் காண்பது மூன்றாம்;
கருதும் இருபதுடன் ஆறு காணில்
கருதும் இரண்டு எனக் காட்டலும் ஆமே.

கருது மிருபதிற் [1]காணவா றாகுங்
கருதிய வையைந்திற் காண்பது மூன்றாங்
கருது மிருப துடனாறு காணிற்
கருது மிரண்டெனக் காட்டலு மாமே. (41)

வேறு பாடம்: 1. காணவற்றாகுங் (ஆ ஊ) I.

கருத்து: ஐம்பூதங்களுள் ஆகாயக் கூறு உச்சந்தலையிலும் அதற்கு மேல் உள்ள வெளியிலும் உள்ளது. அங்கும் ஆறு ஆதாரங்கள் உண்டு. இருபது நாள் சுழுமுனையில் மூச்சு இயங்கினால் அவற்றைக் காணலாம். இருபத்தைந்து நாள் இயங்கினால் அவற்றின் மூலாதாரம், சுவாதிட்டானம் என்ற இரண்டையும் கடந்து பிறவற்றில் அனுபவம் பெறலாம். இருபத்தாறு நாள் இயங்கினால் விசுத்தி, ஆக்ஞை என்ற இரண்டின் அனுபவம் எய்தும்.

ஞானாசிரியன் ஆகலாம்

775. காட்டலும் ஆகும் கலந்த இருபத்தேழில்
காட்டலும் ஆகும் கலந்து எழும் ஒன்று என;
காட்டலும் ஆகும் கலந்த இருபத்தெட்டில்
காட்டலும் ஆகும் கலந்த ஈரைந்தே.

காட்டலு மாகுங் கலந்திரு பத்தேழிற்
காட்டலு மாகுங் கலந்தெழு மொன்றெனக்[1]
காட்டலு மாகுங் கலந்திரு பத்தெட்டிற்
காட்டலு மாகுங் கலந்தவீ ரைந்தே[2]. (42)

வேறு பாடம்: 1. மொன்றெனிற் (எ) IV; மொன்றினிற் (சண்) (தி) 2. ரையைந்தே (ஒ) I.

கருத்து: இருபத்தேழு நாள் ஓடினால், சிவத்தைப் பிறர்க்கு 'ஏகம்' ஆகக் காட்டலாம். இருபத்தெட்டு நாள் ஓடினால், ஆன்மா சிவத்தோடு கலந்திருப்பதைப் பிறர்க்கு உணர்த்தலாம்.

இருபத்தேழு - இருபத்தேழு நாள். ஒன்று - ஏகசிவம். ஈரைந்து - பத்து அதாவது, 'ய' என்ற எழுத்தால் குறிக்கப்படும் ஆன்மா.

வாணாள் நீள்வது எப்படி

776. ஈரைந்தும் ஐந்தும் இருமூன்றும் எட்டுக்கும்
பார் அஞ்சி நின்ற பகை பத்துநாள் ஆகும்;
வாரம் செய்கின்ற வகை ஆறஞ்சு ஆமாகில்
ஓர் அஞ்சொடு ஒன்று ஒன்று என ஒன்றும் நாளே.

ஈரைந்து மைந்து மிருமூன்று மெட்டுக்கும்
பாரஞ்சி [1]நின்ற பகைபத்து நாளாகும்
வாரஞ்செய் கின்ற [2]வகையாறஞ் சாமாகி
லோரஞ்சொ டொன்றொன் றெனவொன்று நாளே. (43)

வேறு பாடம்: 1. நின்று பகைப்பது (அ) I. 2. வகையாஞ் சமாதியி (அ ஊ) I.

கருத்து: யோகிக்கு ஆயுள் நீட்டிக்கும் ஆதலின், பிறர்க்குக் கருமவினைகளைத் தேடும் காலமாயிருத்தலால் பகையாய் உள்ள 29 நாட்கள் யோகிக்கு 10 நாட்களே. பிறர்க்கு 30 நாட்கள் யோகிக்கு 7 நாட்களே (மூச்சு வீணாகாமல் இருத்தலின் இவ்வாறு ஆயுள் நீட்டிப்பு எய்துகின்றது).

நீளும் கணக்கு

777. ஒன்றிய நாள்கள் ஒரு முப்பத்தொன்று ஆகில்
கன்றிய நாளும் கருத்துற மூன்று ஆகும்;
சென்று உயிர் நால்-எட்டும் சேரவே நின்றிடின்
மன்று இயல்பு ஆகும் மனையில் இரண்டே.

ஒன்றிய நாள்க ளொருமுப்பத் தொன்றாகிற்
கன்றிய நாளுங் கருத்துற மூன்றாகுஞ்
சென்றுயிர் நாலெட்டுஞ் சேரவே நின்றிடின்
மன்றியல் பாகு மனையி லிரண்டே. (44)

கருத்து: யோகி இறைவனோடு ஒன்றியிருக்கும் நாள் 31 எனின், அவன் ஆயுளில் 3 நாளே கழியும். 32 எனின், இரு நாளே கழியும்.

சிவமாகலாம்

778. மனையினில் ஒன்றாகும் மாதமும் மூன்றும்
சுனையில் ஒன்று ஆகத் தொனித்தனன் நந்தி;
வினையற ஓங்கி வெளிசெய்து நின்றால்
தனைஉற நின்ற தலைவனும் ஆமே.

[1]மனையினி லொன்றாகு மாதமு மூன்றுஞ்[2]
சுனையிலொன் [3]றாகத் [4]தொனித்தன னந்தி
வினையற வோங்கி வெளிசெய்து நின்றாற்
றனையுற நின்ற தலைவனு மாமே. (45)

வேறு பாடம்: 1. மனையிலொன்றாக (ஆ) II. 2. மூன்று (அ இ ஈ) III. 3. றாகுந் (அ ஆ எ) II. 4. தொனித்தவ (தி).

கருத்து: மூன்று மாதம் சிவத்துடன் ஒன்றி நின்றவர்க்கு, சகஸ்ராரத் தாமரையில், உலகம் சூக்குமை வாக்காக மட்டுமே நிற்கும். அந்த நிலையில் தனது செயல் ஏதும் இன்றிச் (எல்லாம் சிவன் செயலாக) சிதாகாயத்தில் அனுபவம் பெற்றால், யோகி சிவமே ஆவான்.

சிவத்தை அறிந்தேன்

779. ஆரும் அறியார் அளக்கின்ற வன்னியை;
ஆரும் அறியார் அளக்கின்ற வாயுவை;
ஆரும் அறியார் அளக்கின்ற அப்பொருள்
ஆரும் அறியா அறிவு அறிந்தேனே.

ஆரு மறியா ரளக்கின்ற வன்னியை
யாரு மறியா ரளக்கின்ற வாயுவை
யாரு மறியா [1]ரளக்கின்ற வப்பொரு
ளாரு மறியா வறிவறிந் தேனே. (46)

வேறு பாடம்: 1. ரழிகின்ற (ஆ); ரழிக்கின்ற (ஓ) II.

கருத்து: பரவெளியில் சூக்கும நிலையில் கலந்துள்ள அக்கினியையும், வாயுவையும் எல்லா உலகமும் பொருள்களும் ஒடுங்கும் சிவத்தையும் யாரும் அறியார். யாரும் அறியாத அறிவாகிய பதிஞானத்தால் இவற்றை நான் அறிந்தேன்.

யோகத்தால் பதிஞானம்

780. அறிவது, வாயுவொடு, ஐந்து - அறிவு ஆய
அறிவு-ஆவதுதான்; உலகு, உயிர் அத்தின்
பிறிவு செய்யா வகை பேணி உள் நாடின்
செறிவது நின்று திகழும் அதுவே.

அறிவது வாயுவொ டைந்தறி வாய
[1]வறிவா வதுதா னுலகுயி ரத்தின்
[2]பிறிவுசெய் யாவகை பேணியுண் ணாடிற்
செறிவது நின்று திகழு மதுவே. (47)

வேறு பாடம்: 1. தறிவா (எ) IV; யறிவாயதுதா (சண்) வறிவறிவாயது தானுலகத்தின் (இ) IV. 2. அறிவறிவு செய் (ஆ) II.

கருத்து: மூச்சுக் காற்றைத் தலையுச்சிக்குச் செலுத்துவதால் பெறும் ஞானம், உலகியலில், ஐந்து புலனறிவைத் தான் அறிந்து உயிருக்கு அறிவிக்கும் சிவத்தினைப் பற்றியது ஆகும்; அது பதிஞானம் உலகிலும் உயிர்களிலும் அது பிரிவின்றிக் கலந்திருப்பதை யோக சாதனையால் உணர்ந்தால், பதிஞானம் செறிந்து விளங்கும்.

இருவகை அருள்

781. அது அருளும் மருள் ஆனது உலகம்;
பொது அருளும்; புகழாளர்க்கு நாளும்
மது அருளும் மலர் மங்கையர் செல்வி;
இது அருள் செய்யும் இறையவன் ஆமே.

அதுவரு [1]ளும்மரு ளான துலகம்
பொதுவரு ளும்புக ழாளர்க்கு நாளும்
மதுவரு ளும்மலர் மங்கையர் செல்வி
இதுவருள் செய்யு மிறையவ னாமே. (48)

வேறு பாடம்: 1. ளும்மதுவானவுலகம் (அ இ ஈ) II.

கருத்து: இறைவன் செய்யும் அருள் இரண்டுவகை. ஒன்று பொது; ஒன்று சிறப்பு. பொதுவருள், உயிர்கட்குத் தனுகரண புவன போகங்களை வழங்கி வாழ்விப்பது; அதே சமயம் மருள் ஆகிய ஆணவமலம் உயிரின் அறிவை மறைக்குமாறு இயக்குகிறது. சிறப்பருள், அன்பர்க்குப் பேரின்பம் வழங்குவது. யோகியர்க்குப் பராசத்தி சகஸ்ராரத் தாமரையில் இவ்வின்பத்தை வழங்குகிறாள்.

சிவம் வாழும் கோயில்

**782. பிறப்பு - அது சூழ்ந்த பெருந்தகை நந்தி
குறிப்பு - அது கூடிய கோலக் குரம்பை
பழப்பதி ஆவது; பற்று அறும் பாசம்
அழ, படிசெய்வார்க்கு அகலும் மதியே.**

பிறப்பது சூழ்ந்த பெருந்தகை நந்தி
[1]குறிப்பது கூடிய கோலக் குரம்பை
[2]பழப்பதி யாவது பற்றறும் பாச
[3]மழப்படி செய்வார்க் ககலு மதியே. (49)

வேறு பாடம்: 1. குறைப்பது (ஆ) I. 2. பழிப்பதி (ஆ) I. 3. மழிப்படி (ஆ) I.

கருத்து: உயிருக்குக் கதியளித்தற் பொருட்டு எண்ணிப், பிறப்பை நல்கிய நந்தியின் திருவருள் எய்தப் பெற்ற அழிவற்ற அழகிய உடம்பு, நந்திக்குப் பழம்பதியாகும் (நெடுங்காலம் நின்று பழைமை வாய்ந்ததாகும்). ஆணவ மலம் ஆழுமாறு சாதனை செய்வார்க்கு உலகப் பற்றும் அகப்பற்றும் நீங்கும். ஞானம் பெருகும்.

ஆழ என்பது குறுக்கல் விகாரம் பெற்றது. படிசெய்தல் - சாதனை செய்தல். படி - முறை. சாதனைமுறை.

52. வார சரம்

எக்கிழமையில் எந்த நாடி?

**783. வெள்ளி, வெண்-திங்கள் விளங்கும் புதன் இடம்;
ஒள்ளிய மந்தன் இரவி செவ்வாய் வலம்;
வள்ளிய பொன்னே வளரும் பிறை இடம்;
தெள்ளிய தேய்பிறை தான் வலம் ஆமே.**

வெள்ளிவெண் டிங்கள் விளங்கும் புதனிட
மொள்ளிய மந்த னிரவிசெவ் வாய்வலம்
வள்ளிய பொன்னே வளரும் பிறையிடந்
தெள்ளிய தேய்பிறை தான்வல மாமே. (1)

கருத்து: இயல்பாக, வெள்ளி, திங்கள், புதன் கிழமைகளில் மூச்சு இடகலை நாடியில் இயங்க வேண்டும். சனி, ஞாயிறு, செவ்வாய்க் கிழமைகளில் பிங்கலை நாடியில் இயங்க வேண்டும். வளர்பிறை வியாழனில் இடகலையிலும், தேய்பிறை வியாழனில் பிங்கலை யிலும் இயங்க வேண்டும்.

784. வெள்ளிவெண் டிங்கள் விளங்கும் புதன்மூன்றுந்
தள்ளி யிடத்தே தயங்குமே யாமாகி
லொள்ளிய காயத்துக் கூன மிலையென்று
வள்ள னமக்கு மகிழ்ந்துரைத் தானே. (க)

785. செவ்வாய் வியாழஞ் சனிஞாயி றேயென்னு
மிவ்வா றறிகின்ற யோகி யிறைவனே
யொவ்வாத வாயு வலத்துப் புரியவிட்
டவ்வா றறிவார்க்கவ் வானந்த மாமே. (ஔ)

786. மாறி வருமிரு பான்மதி வெய்யவன்
ஏறி யிழியு மிடைபிங் கலையிடை
யூறு முயிர்நடு வேயுயி ருக்கிரந்
தேறி யறிமின் றெரிந்து தெளிந்தே. (க)

787. உதித்து வலத்திடம் போகின்ற போது
அதிர்த்தஞ்சி யோடுத லாமகன் றாரும்
உதித்தது வேமிக வோடிடு மாகி
லுதித்த விராசி யுணர்ந்துகொ ளுற்றே. (ட, ச)

788. நடுவுநில் லாம லிடம்வல மோடி
யடுகின்ற வாயுவை யந்தணன் கூடி
யிடுகின்ற வாறுசென் றின்பணி சேர
முடிகின்ற தீபத்தின் முன்னுண்டென் றானே. (க)

மனத்தை அடக்க

789. ஆயும் பொருளும் அணி மலர் மேலது;
வாயு விதமும் பதினாறு உள; வலி
போய மனத்தைப் பொருகின்ற ஆதாரம்
ஆயுவும் நாளும் முகுர்த்தமும் ஆமே.

ஆயும் பொருளு மணிமலர் மேலது
வாயு விதமும் பதினா றுளவலி
[1]போய மனத்தைப் பொருகின்ற வாதாரம்
ஆயுவு நாளு முகுர்த்தமு மாமே. (2)

வேறு பாடம்: 1. போயம் (சண்) (வ)

கருத்து: அனுபவம் பெறுவதற்கு நாடும் சிவபரம் பொருள் உச்சந் தலையில் சகஸ்ராரத் தாமரையில் விளங்க இருப்பதாகும். அப் பகுதி சந்திரமண்டலம் ஆகும். அந்த மண்டலத்தில் பிராணவாயு பெற விருக்கும் கலைகள் பதினாறு. இக் கலைகளின் ஆற்றலால் மனத்தின் வலிமை தொலையுமாறு பொரவேண்டும். இதே ஆற்றலால் ஆயுளும் பெருகும்.

குறிப்பு: இவ்வியலை அடுத்து 'வாரசூலம்' என்னும் இயல் பதிப்பு களில் உள்ளது. சுவடி ஒன்றிலேனும் இல்லை. ஆதலின், இப்பொழு தைய பதிப்பில் அது இடைச்செருகலாகக் கருதப்படுகிறது.

வாரசூலம்

790. வாரத்திற் சூலம் வரும்வழி கூறுங்கால்
நேரொத்த திங்கள் சனிகிழக் கேயாகும்
பாரொத்த சேய்புதன் உத்தரம் பானுநாள்
நேரொத்த வெள்ளி குடக்காக நிற்குமே. (க)

791. தெக்கண மாகும் வியாழத்துச் சேர்திசை
யக்கணி சூலமு மாமிடம் பின்னாகிற்
றுக்கமு மில்லை வலமுன்னே தோன்றிடின்
மிக்கது மேல்வினை மேன்மேல் விளையுமே' (க)

1. *வாரசூலம் - இயலின் இரண்டு பாடலும் இடைச் செருகல்.*

53. கேசரி யோகம்

அருவத்தியானம்

792. கட்டக் கழற் கன்று, கீழ் நான்று வீழாமல்
அட்டத்தைக் கட்டி, அடுப்பை அணை கோலி,
விட்டத்தைப் பூட்டி வெறும்பாழைத் தாழ் கோத்து
நட்டம் இருக்க நமன் இல்லை தானே.

கட்டக் [1]கழற்கன்று கீழ்நான்று வீழாம
[2]லட்டத்தைக் கட்டி யடுப்பை யணைகோலி
விட்டத்தைப் பூட்டி [3]வெறும்பாழைத் தாட்கோத்து
நட்ட மிருக்க நமனில்லைத் தானே. (1)

வேறு பாடம்: 1. கழன்று (எ) I; கழக்கன்று (அ ஆ ஈ) I. 2. லட்டத்திற் (எ) IV. 3. மேற்பையைத் (அ இ ஈ எ ஒ) II.

கருத்து: உயிர் உணர்வை அகண்ட ஆகாயத்தில் விளங்கும் அருவ இறைவனிடம் நிறுத்தவும், நில்லாது கீழ் இறங்கும். மூச்சும் இறங்கும். அங்ஙனம் இறங்காமல் அண்ணாக்கு வழியை அடைத்து, மலவழியில் அபான வாயு கீழ்நோக்கி வெளியேறாவாறு அவ் வழியை வச்சிராசனத்தால் அழுத்தி, அடைத்து, இரண்டு கண் பார்வையையும் ஒன்றாய் மேல்நோக்கி, உணர்வை அருவ இறைவனிடம் நிறுத்தி, நிமிர்ந்திருக்க, மரணம் இல்லை.

முன் "கண் ஆறொடே சென்று கால்வழி காணுமே" என்று கூறியதை நினைவு கூர்க. "மான் கன்று" எனச் சீவனை முன்னர்க் கூறியவர் இங்கேயும் அதனைத் தொடர்கிறார். "நுந்து கன்று" எனத் திருவாசகத்திலும் வருவது காண்க.

கேசரர் என்பது ஆகாயத்தில் சஞ்சரிப்பவரைக் குறிக்கும். கேசரி - ஆகாயத்தில் சஞ்சரித்தல்; அதற்கான யோகம் கேசரி யோகம் என இப்பெயர் வந்திருக்கலாம் அல்லது இவ் யோகம் செய்வோர் உச்சந்தலைக்கு மேல் 12 அங்குலம் உள்ள ஆகாயத்துடன் தொடர்பு கொள்ளுதலால் இப்பெயர் வந்திருக்கலாம். கேசரி முத்திரை என்னும் முத்திரை இவ்யோகத்தில் செய்யப்படும். இம் முத்திரை உள்நாக்கைத் தொடுமாறு நாக்கு நுனியைத் திருப்பித் தொடுதலாகும். கேசரி ஆசனம் என்பதில் அமர்ந்து இவ்யோகத் தைச் செய்வதாலும் இப்பெயர் வந்திருக்கலாம். இது 'நிராதார யோகம்' என்றும் கூறப்படும்.

'கழற் கட்டக் கன்று கீழ் நான்று வீழாமல்' என மாற்றுக. "கட்டவும்" என்பதில் உம்மை தொக்கது. கழல் என்பதை அருவ இறைவனுக்குப் படிமம் ஆக்கினார். கன்று என்பது சீவன், மூச்சுக்காற்று என்ற இரண்டையும் குறிக்கும்.

ஆணவமலம் நீங்க

793. வண்ணான் ஒலிக்கும் சதுரப் பலகை மேல்
கண் ஆறு மோழைபடாமல், கரை கட்டி,
விண் ஆறு பாய்ச்சிக் குளத்தை நிரப்பினால்
அண்ணாந்து பார்க்க, அழுக்கு அற்றவாறே.

வண்ணா னொலிக்குஞ் சதுரப் பலகைமேற்
கண்ணாறு மோழை [1]படாமற் கரைகட்டி
விண்ணாறு பாய்ச்சிக் குளத்தை நிரப்பினா
லண்ணாந்து பார்க்க வழுக்கற்ற வாறே. (2)

வேறு பாடம்: 1. போகாமற் (இ ஈ) IV.

கருத்து: சலவைத் தொழிலாளர் ஆடையைத் துவைத்து அழுக்கு அகற்றல் போல், சீவன் தனது உணர்வில் உள்ள ஆணவ மலத்தை யோக சாதனத்தால் அகற்றுவதைக் கூறிற்று. சதுரக் கல்லைப் போல உள்ள நெற்றியில் (முன் மூளையில்) நாதத்தால் மோதி, ஆக்ஞைச் சக்கரத்தில் தரிசித்த ஒளியும் சந்திர மண்டலத்தில் பெற்ற அமுதமும் ஓட்டை வழியாகக் கசிந்து வெளியேறி வீண் ஆகிவிடாமல், அந்த ஒளி வழியே உச்சந் தலைக்கு உணர்வைப் பாய்ச்சி, சிதாகாயத்தில் விளையும் ஒளியைக் கொண்டு சகஸ்ராரத்தை நிரப்பினால் சீவன் அழுக்கு அறும்.

சுழுமுனை வழி

794. இடக்கை, வலக்கை - இரண்டையும் மாற்றித்
துதிக்கையால் உண்பார்க்குச் சோரவும் வேண்டா;
உறக்கத்தை நீக்கி, உணர வல்லார்கட்கு
இறக்கவும் வேண்டா, இருக்கலும் ஆமே.

இடக்கை வலக்கை யிரண்டையு மாற்றித்
துதிக்கையா லுண்பார்க்குச் சோரவும் வேண்டா
[1]வுறக்கத்தை [2]நீக்கி யுணரவல் லார்கட்
கிறக்கவும் வேண்டா [3]விருக்கலு மாமே. (3)

வேறு பாடம்: 1. துறக்கத்தை (ஆ) IV. 2. மாற்றி (ஆ) IV. 3. திருக்கலு (ஆ) IV.

கருத்து: இடகலை, பிங்கலை நாடிகளில் மூச்சை இயக்காது, சுழு முனையில் இயக்கினால் உடம்பில் தளர்ச்சி வராது. பிரம முகூர்த்தத் தில் தியானம் செய்து சிவத்தை உணர்வோர் இறவாதிருப்பர்.

துதிக்கை - சுழுமுனை. உண்பார்க்கு - மூச்சினை இயங்கச் செய்பவர்க்கு. உறக்கத்தை நீக்கி - விடிய ஆறு நாழிகைக்கு முன் இந்த யோகம் செய்ய வேண்டும் என்பது. உணர்தல் - உயிர் உணர்வினால் சிவத்தை உணர்தல்.

தலைக் காவிரி

795. ஆய்ந்து உரைசெய்யில் அமுதம் நின்று ஊறிடும்;
வாய்ந்து உரை செய்யும் வருகின்ற காலத்து;
நீந்து உரை செய்யின் நிலாமண்டலம்-அது ஆய்ப்
பாய்ந்து உரை செய்தது பாலிக்குமாறே.

ஆய்ந்துரை செய்யி [1]லமுதநின் றூறிடும்
வாய்ந்துரை செய்யும் வருகின்ற காலத்து
நீந்துரை [2]செய்யி னிலாமண் [3]டலமதாய்ப்
பாய்ந்துரை செய்தது பாலிக்கு மாறே. (4)

வேறு பாடம்: 1. அமுதம் வந்தூறிடும் (ஒ) IV. 2. செய்யும் (ஆ எ ஒ) II. 3. டபமதாய்ப் (ஆ இ ஈ எ ஒ) I.

கருத்து: பின்னே 'வானீர்' என்றும் 'கங்கை' என்றும் கூறுவதை இங்கு 'அமுதம்' என்றார். இது பரமாகாயத்துடன் தொடர்பு கொள்வதால் உச்சந்தலையில் ஊறும் அமுதம். இதுவே நெற்றியிலும் பாய்ந்து தங்கும். பின்னர் உடம்பின் மற்ற இடங்கட்கும் பாய்ந்து அதனை நெடிது காக்கும்.

ஆகாய வெளியுடன் தொடர்பு

796. நாவின் நுனியை நடுவே விசிறிடில்
சீவனும் அங்கே சிவனும் உறைவிடம்;
மூவரும் முப்பத்து மூவரும் தோன்றுவர்;
சாவதும் இல்லை சதகோடி ஊனே.

நாவின் [1]னுனியை நடுவே விசிறிடிற்[2]
சீவனு மங்கே சிவனு முறைவிட
மூவரு முப்பத்து மூவருந் தோன்றுவர்
சாவது மில்லைச் சதகோடி ஊனே. (5)

வேறு பாடம்: 1. னுனியின் (சண்) 2. சிவிறிடிற் (எ) IV.

கருத்து: நாக்கை நடுவிடத்தில் பின்புறமாக மேல்நோக்கி வளைத்து அண்ணாக்கைத் தொட்டால் (இது கேசரி முத்திரை) அதன்பின் சிவனோடு சீவன் கலக்கும் இடமாகிய தலையுச்சிச் சகஸ்ராரத்திற்கு மூச்சுக்காற்றையும் புருவமத்தியில் உள்ள உயிருணர்வையும் மூலாதாரத்திலிருந்து ஏறிச் சந்திரமண்டலத்தில் குளிர்ந்துள்ள மூலக்கனலையும் செலுத்தலாம். இது பரமாகாயத்துடன் கொள்ளும் தொடர்பு ஆதலின் மூவரையும் தேவரையும் காணலாம் (சத்தர்களாகக் காணலாம்). உடம்பு இறவாது.

ஞானம் பெறலாம்

797. ஊன் ஊறல் பாயும் உயர் வரை உச்சி மேல்
வான் ஊறல் பாயும் வகை அறிவார் இல்லை;
வான் ஊறல் பாயும் வகை அறிவாளர்க்குத்
தேன் ஊறல் உண்டு தெளிதலும் ஆமே.

ஊனூறல் பாயு முயர்வரை யுச்சிமேல்
வானூறல் பாயும் வகையறி வாரில்லை
வானூறல் பாயும் வகையறி வாளர்க்குத்
தேனூற லுண்டு தெளிதலு மாமே. (6)

கருத்து: உடம்பில் இருந்து வாழுங்கால் அறிவு ஊறும் இடம் மூளை. அஃது உள்ள உச்சந்தலை, யோக இயலில் மலை எனப்படும். இவ்வுச்சிமேல் சகஸ்ராரத் தாமரையில் அனுபவம் பெறுபவர்க்குப் பரமாகாயத்தின் ஞானத்தொடர்பு உண்டாகும் என்னும் உண்மையைப் பலரும் அறியார். அதனை அனுபவத்தால் அறிபவர் அங்கு அமுதம் பெற்று ஞானம் எய்துவர்.

என்றும் இளமை

798. மேலை அணாவில் விரைந்து இரு கால் இடில்
காலனும் இல்லை, கதவும் திறந்திடும்;
ஞாலம் அறிய நரை திரை மாறிடும்;
பாலனும் ஆவான் பராநந்தி ஆணையே.

மேலை யணாவில் விரைந்திரு காலிடிற்
காலனு மில்லைக் [1]கதவுந் திறந்திடு
ஞால மறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவான் பராநந்தி யாணையே[2] (7)

வேறு பாடம்: 1. கதவு (ஆ) IV. 2. தானே (அ இ ஈ எ) II.

கருத்து: அண்ணாக்கின் வழியே மூச்சுக் காற்றை உச்சந்தலைக்குச் செலுத்தினால் இறப்பு வராது. இளமை நிலைக்கும்.

அணா - அண்ணாக்கு. இருகால் - இடகலை பிங்கலை வழியாக, பொதுவாக இயங்கும் மூச்சு. (அது நடுநாடியில் இயங்கும்படி மாற்றப்பட வேண்டும்) கதவு - அண்ணாக்கு வழி.

உலகம் உன் கைக்குள்

799. நந்தி முதலாக நாமேலே ஏறிட்டுச்
சந்தித்து இருக்கின் தரணி முழுது ஆளும்;
பந்தித்து இருக்கும் பகலோன் வெளியாகச்
சிந்தித்து இருப்பவர் தீவினையாளரே.

நந்தி முதலாக [1]நாமேலே யேறிட்டுச்
சந்தித் திருக்கிற் றரணி முழுதாளும்
பந்தித் திருக்கும் பகலோன் வெளியாகச்
சிந்தித் திருப்பவர் தீவினை யாளரே. (8)

வேறு பாடம்: 1. நாமே லெறிந்திட்டு (ஆ) III.

கருத்து: சிவமாகிய முதல்வனை உணர்வின் அடிப்படையில் நிறுத்தி, அண்ணாக்கின் மேலே அவ்வுணர்வையும் மூச்சையும் செலுத்தி, நெற்றி மண்டலத்தையும் தாண்டி, சகஸ்ராரத்தில் சிவத்தைக் கூடியிருப்பவர் உலகத்தைத் தம் கட்டுக்குள் வைத்திருப்பார்.

(மாயை அவர்க்கு மேற்படா). உலக பந்தத்தைச் செய்யும் அறிவாகிய சூரிய நாடி (பிங்கலை) வழியாக மூச்சினை வெளிவிட்டு, உலகியற் சிந்தனை உடையவராயிருப்பவர் தீவினையாளராவர்.

சிவத்தோடு கலக்குமுன்

800. தீவினை ஆட, திகைத்து அங்கு இருந்தவர்
நாவினை நாடின் நமனுக்கு இடம் இல்லை;
பாவினை நாடிப் பயன் அறக் கண்டவர்
தேவினை ஆடிய தீங்கரும்பு ஆமே.

தீவினை [1]யாடத் திகைத்தங் கிருந்தவர்
[2]நாவினை நாடின் னமனுக் கிடமில்லை
பாவினை நாடிப் [3]பயனறக் கண்டவர்
தேவினை [4]யாடிய தீங்கரும் பாமே. (9)

வேறு பாடம்: 1. யார்க்குத் (ஆ ஈ) IV. 2. நாதனை (அ ஆ இ ஈ ஓ) II. 3. பயனுறக் (இ) IV. 4. நாடிய (ஆ) IV.

கருத்து: தீவினைப் பயன் ஆகிய துன்பம் தங்களை வெற்றி கொள்ள, அதனால் திகைத்து இருப்பவர், கேசரி யோகம் செய்தால் மரணம் இல்லை. பரவிய பல வினைகளைச் செய்து பயன் ஒன்றும் எய்தாமையைக் கண்டவர் சிவத்தைக் கலந்து மகிழ்வதற்காகக் கரும்பு போன்ற அமுதம் எய்தும்.

அமுதம் பிறக்கும் ஊற்று

801. தீங்கரும்பு ஆகவே செய்தொழில் உள்ளவர்
ஆம் கரும்பு ஆக அடைய நா ஏறிட்டுக்
கோங்கு அரும்பு ஆகிய கோணை நிமிர்த்திட
ஊன் கரும்பு ஆகிய ஊன்நீர் வருமே.

தீங்கரும் [1]பாகவே செய்தொழி லுள்ளவ
ராங்கரும் பாக வடையநா வேறிட்டுக்
கோங்கரும் பாகிய [2]கோணை நிமிர்த்திட
வூன்கரும் [3]பாகிய வூனீர் வருமே. (10)

வேறு பாடம்: 1. பாமே (ஆ) II. 2. கோனை (அ ஆ ஈ ஓ) I. 3. பாகியே (எ) IV.

கருத்து: கரும்பு போலவே இனிமை தோன்றும் யோகசாதனை புரிபவர், அண்ணாக்கிற்கு அப்பால் முழுதும் உச்சியை நோக்கி மூச்சுக் காற்றைச் செலுத்தி, நடு நாடியில் கோங்கு மரத்தின் அரும்பைப் போலத் தோன்றும் கோணலை நிமிர்த்தினால், உடம்பை இனிமையானதாகச் செய்தற்காக நெற்றியில் அமுதம் பிறக்கும்.

அமுதம் வரும் வழி

802. ஊன்நீர் வழியாக உள்நாவை ஏறிட்டு,
தேன்நீர் பருகி, சிவாயநம என்று
கான்நீர் வரும்வழி கங்கை தருவிக்கும்
வான்நீர் வரும்வழி வாய் திறவீரே.

ஊனீர் வழியாக வுண்ணாவை யேறிட்டுத்
தேனீர் பருகிச் சிவாய நமவென்று
கானீர் வரும்வழிக் கங்கை தருவிக்கும்
வானீர் வரும்வழி [1]வாய்திற வீரே. (11)

வேறு பாடம்: 1. வாய்ந்தறிவீரே (எ) IV.

கருத்து: சந்திர மண்டலத்து அமுதம் ஆகிய நீர் உடலில் இறங்குவதற்கு வழியாகுமாறு அண்ணாக்கினைக் கடந்து சென்று 'சிவாயநம' என்று உணர்வில் இனிமை ஊறத் தியானித்து, அன்பை வெளிப்படுத்தும் கசிவுத் தன்மை தோன்றும் பொழுது, அம்மந்திரம் வான்நீர் ஆகிய கங்கையை உச்சந்தலையில் பாயச் செய்யும். ஆகவே அந்த ஆறு வரும் வழியைத் திறப்பீர்களாக.

இவ்வான் நீரையே "சிவ வானச் சிறப்பு" என்னும் அதிகாரத்தில் 'வானீர் அருவி'; "எந்தை கழுமணி யாறே" என்று கூறினார். 'கலை நிலை' என்னும் இயலில் "காதல் வழி செய்து கங்கை வழி தரும்" என்றார்.

"ஊனில் உயிர்ப்பை" என்னும் தேவாரத்திலும் 'நன்புலத் தேனை வழிதிறந்து ஏத்துவார்க்கு இடரான கெடுப்பன அஞ்செழுத்துமே' என்றார் ஞானசம்பந்தர் (3 ஆம் திருமுறை, பஞ்சாக்கரப் பதிகம், 3)

அருளறிவு பெற

803. வாய் திறந்து உள்ளே வழிபாடு செய்தவர்
காய்ந்த அறிவு ஆகக் கருணை பொழிந்திடும்;
பாய்ந்து, அறிந்து உள்ளே படிக்கதவு ஒன்று இட்டுக்
கூய்ந்து அறிந்து உள் உறை கோயிலும் ஆமே.

[1]வாய்திறந் துள்ளே வழிபாடு செய்தவர்
காய்ந்தறி வாகக் கருணை பொழிந்திடும்
பாய்ந்தறிந் துள்ளே படிக்கத வொன்றிட்டுக்
[2]கூய்ந்தறிந் [3]துள்ளுறை கோயிலு மாமே. (12)

வேறு பாடம்: 1. வாய்ந்தறிந் (இ எ ஒ) IV; வாய்ந்திறந் (ஆ) I. 2. கோய்ந்தறிந் (அ ஆ இ ஈ) I; கோய்ந்திறந் (ஒ) I. 3. துள்ளூற்ற (ஈ) IV.

கருத்து: வான் நீர் வரும் வழியின் வாயிலைத் திறந்து நிராதார யோகம் ஆகிய அகப்பூசை செய்தவரின் அறிவு (உயிர் உணர்வு) ஆணவ மலம் நீங்கிய அறிவாகுமாறு சிவம் கருணை காட்டி அருளும்; அருளை வழங்கும். அவ்வருள் உயிருணர்வில் பதியும். அது மாறாதவாறு, யோகத்தில் “ஜாலந்திர பந்தனம்” என்ற தடுப்பைச் செய்தால், எல்லாவற்றையும் அருளாக, உணர்வு குவிந்து அறியும்படி, உடம்பு சிவம் உறையும் கோயிலாக நிற்கும்.

பாய்ந்து அறிந்து - உயிர் உணர்வால் அறிவது, தான் பதிந்து அறிவது ஆகும். இதனைத் ‘யோகக் காட்சி’ என்பர். உயிர் எதை உணரவேண்டுமோ, அதுவேயாக உயிர் ஆகி அறிவது ஆதலின் ‘பாய்ந்துஅறிந்து’ என்றார். பாய்ந்து - பரவி; வியாபித்து. வழிபாடு செய்தவரது அறிவு காய்ந்த அறிவாக என்க. இதனால் சீவனின் அறிவு அருளறிவு ஆகும் வகை கூறினார். கூய்ந்து - குவிந்து. தூய்மையாகி என்றும் ஆம்.

தாயிற் சிறந்த தயாவான் ஆவான்

804. கோயிலின் உள்ளே குடிசெய்து வாழ்பவர்
தாயினும் நல்லார் தரணி முழுதுக்கும்;
காயினும் நல்லவர்; காய்ந்தவர் தம்முளும்
தீயினும் தீயாகத் தீவினையார்க்கே.

கோயிலி னுள்ளே குடிசெய்து வாழ்பவர்
தாயினு நல்லார் தரணி முழுதுக்குங்
காயினு நல்லவர் காய்ந்தவர் தம்முளுந்
தீயினுந் [1]தீயாகத் தீவினை யார்க்கே. (13)

வேறு பாடம்: 1. தீயரத் (ஆ எ) II.

கருத்து: நிராதார யோகிக்கு உடம்பே கோயில். அங்கு இறைவன் நடனம் ஆடும் சபை, உடலைச் சேர்ந்த (உச்சிக்குமேல் உள்ள) ஆகாயம். அருளே சந்நிதி. எங்கும் பரவியுள்ள அருளைக் கண்டு, தானும் அருள் வியாபகத்தினுள் அடங்கி, அருட்குடியாகி, அருளறிவால் அறிந்து வாழும் யோகி, உலகில் யாவர்க்கும், எதனுக்கும் தாயிற் சிறந்த தயா உடையவன் ஆவான். அவர் இவர்; அது இது என வேறுபாடு காணமாட்டான். பிறர் கோபித்தாலும் அவர்க்கு நன்மையே செய்வான். அங்ஙனம் கோபித்தவருள்ளும் தீயைவிடத் தீமையுடைய தீவினையினைச் செய்பவர்க்கு மிக்க நன்மை செய்வான். 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும்' சால்புடைமை, அருளுடைமையின் விளைபயனாக அவனிடம் அமையும்.

"மகவெனப் பல்லுயிரையும் ஒக்கப் பார்க்கும் செல்வத் தொண்டர்" என இவ்வருட் செல்வம் உடையாரைப் பட்டினத்துப்பிள்ளை புகன்றதும் காண்க. உடம்பைச் சேர்ந்த ஆகாயம் சிதாகாயம். அஃது உச்சந்தலையிலிருந்து 12 அங்குல அளவு உயரம் வரை பரவியுள்ளது. தீயினும் தீயாகச் சுடும் என ஒரு சொல் வருவிக்க.

சிவமே யோகியின் அறிவு

805. தீவினையாளர் தம் சென்னியில் உள்ளவன்;
பூ வினையாளர்தம் பொற்பதி ஆனவன்;
பா வினையாளர், தம் பாவகத்துள் இவர்
மாவினையாளர் மதியில் உள்ளானே.

தீவினை யாளர்தஞ் சென்னியி லுள்ளவன்[1]
பூவினை யாளர்தம் பொற்பதி யானவன்
பாவினை யாளர்தம் பாவகத் துள்ளிவர்[2]
மாவினை யாளர் மதியிலுள் ளானே. (14)

வேறு பாடம்: 1. லுள்ளவர் (ஆ இ ஈ ஒ) I. 2. துள்ளவன் (ஆ எ) I; லுள்ளிவன் (அ இ ஈ) I.

கருத்து: குண்டலிக்கனலை எழுப்பிச் செயல்புரியும் ஆதார யோகிக்கு அவனது தலையில் வாழ்பவன்; சகஸ்ராரத் தாமரையில் அனுபவம் பெற்ற நிராதார யோகிக்கு, ஒளி மண்டலத்தில் விளங்கும் தலைவனாக விளங்குபவன். ஆன்ம வியாபகத்தை உணர்ந்து அருள்நெறியில் செயல்படும் அந்த நிராதார யோகியர் அருவத் தியானத்தில் மேன்மேல் முன்னேற்றம் எய்துவர். அத்தகு சிறப்புறு செயல் உடையவரின் அறிவாகச் சிவம் திகழ்கின்றது.

உருவத்தியானத்தில் பாவனை உண்டு-ஆனால் இது அருவத்தியானம் ஆதலின், பாவனை கடந்து செல்லும் செயல் என்பார், "பாவகத்துள் (நின்று) இவர் மா வினை" என்றார்.

பாவகத்துள் நின்று இவர்கின்ற என ஐந்தன் உருபு விரிக்க. இவர்தல் - ஏறுதல்.

உடலில் ஒளி பரவும்

806. மதியினின் எழும் கதிர் பதினாறாய்,
பதிமனை நூறு நூறு ஐம்பத்தோடு ஒன்றாய்,
கதிமனை உள்ளே கலைகள் பரப்பி
எதிர்மனையாமல் இருந்தனன் தானே.

[1]மதியி னினெழுங்க திர்பதி னாறாய்ப்
பதிமனை [2]நூறு நூற் [3]றைம்பத்தோ டொன்றாய்க்
கதிமனை யுள்ளே [4]கலைகள் பரப்பி
[5]எதிர்மனை யாம லிருந்தனன் றானே. (15)

வேறு பாடம்: 1. மதியினினின்றெழுங் (ஆ இ) II; மதியினின் றேபுகுங் (அ) IV; மதியினெழுங் கதிர் பதினாறதாய் (ஒ) II; மதியினெழுங் கதிர் போற்பதினாறாய்ப் (எ) II. 2 நூறுடன் நூற்றைம்பத்தொன்றாய் (ஆ) IV. 3. றிருபத்து நாலா (எ) IV. 4. கணைகள் (அ ஆ இ எ) I. 5. எதிர் மலை (எ) IV.

கருத்து: யோகிக்குத் தலை யுச்சியில் தோன்றும் ஒளி, பின்பு அவனது உடல் முழுதும் பரவும். சிவன் சந்திர கலை பதினாறாகவும் தன் இருப்பிடமாகிய சகஸ்ர இதழ்த் தாமரையினிடத்து ஐம்பத் தொன்றாகவும் கலைகள் பரப்பி உடல் முழுதும் அவ்வொளி பரவச்

செய்து, ஒளிக்கு மாறாகிய இருளினைச் (ஆணவமலத்தை) செயற் பட விடாமல் விளங்குவான்.

ஒளியுடன், சூக்கும வாக்காக 51 அட்சரங்களும் உடலில் நிலை பெறுவதால் "ஐம்பத்தோடு ஒன்றாய்க் கலைகள் பரப்பி" என்றார். "சூக்கும வாக்கது உள் ஓர் சோதியாய்" என்றும் "தன்னைக் கண்டால் நீக்கமில் அறிவானந்த முதன்மை நித்தியம் உடைத்தாய், போக்கொடு வரவு, இளைப்பும், விகாரமும் புருடன் இன்றாம்" என்றும் வரும் சிவஞான சித்தியார் கூற்றைக் காண்க. (சிவ. சித். சுபக்கம் : 23) கதி மனை - வீடு பேறடையும் உயிரின் உடம்பு. எதிர் - மாறுபட்டது. ஒளிக்கு மாறுபட்டது இருள். அஃது ஆணவ மலம். வனைதல் - செய்தல்; (ஈண்டு) இயங்கச் செய்தல். 'எதிர் வனையாமல்' என்பது எதுகை நோக்கித் திரிந்தது. நூறு நூறு என்றது, பல இதழ்களை உடைய தலை உச்சித் தாமரை.

அருளமுதம்

807. இருந்தனள் சத்தியும் அக்கலை சூழ;
இருந்தனள் கன்னியும் அந்நடு ஆக;
இருந்தனள் மான் நேர்முகம் நல ஆக;
இருந்தனள் தானும் அமுதம் பொழிந்தே.

[1]இருந்தனள் சத்தியு மக்கலை சூழ
விருந்தனள் கன்னியு மந்நடு வாக
விருந்தனண் [2]மானேர் [3]முகநல வாக
விருந்தன டானு மமுதம் பொழிந்தே. (16)

வேறு பாடம்: 1. இருந்தாரச் (ஆ) II. 2. மானே (எ) IV. 3. முகநில வார (எ) IV; முகம் நலவார (ஒ) I.

கருத்து: (மேற் பாடலில் கூறிய) கலைகள் சூழச் சத்தியும் விளங்குவாள். அவளது இருப்பிடமும், சகஸ்ராரத் தாமரையே. அவள் கண்கள் கருணை பொழியும். அருட்சத்தியாக அமுதம் பொழிவாள்.

முகம் - ஆகுபெயராய்க் கண்களைக் குறித்தது ஆதலின் 'நல' எனப் பன்மைக் குறிப்புவினை ஏற்றது. சிவத்தோடு பிரிப்பு இன்றிச் சத்தி விளங்குவாள் என்றபடி.

ஒளியுடம்பு

808. பொழிந்து அவிருவெள்ளி பொன் மன் நடையில்
வழிந்து, உள் இருந்தது வான் முதல்; அங்குக்
கழிந்து, அது போகாமல் காக்க வல்லார்கட்கு
ஒழிந்து அது ஆகும் குணம் - அது தானே.

[1]பொழிந்த [2]விருவெள்ளி [3]பொன்மன் னடையில்
வழிந்துள் ளிருந்தது வான்முத லங்குக்
கழிந்தது போகாமற் காக்கவல் லார்கட்[4]
[5]கொழிந்தது வாகுங் குணமது தானே. (17)

வேறு பாடம்: 1. பொழிந்துமிருவெள்ளி (ஆ இ ஈ ஒ) II. 2. விரும்வெள்ளி (த) 3. பொன்மண்ணடையில் (எ) I. பொன்மன்றடையில் (த) 4. வார்க்குக் (ஆ இ ஈ எ ஒ) II. 5. கொழுந்தது (இ ஈ எ ஒ) II.

கருத்து: ஆகாயத்திடத்தே பொழிந்து ஒளி வீசுகின்ற இவ்வமுதம் சூரிய நாடிப் பக்கமாக வழிந்து உடம்பினுள் பரவும். உடம்பினின்றும் அது நீங்காமல் காக்க வல்லவர் தம் ஊனுடம்பு, ஊன் தன்மை ஒழிந்து ஒளித்தன்மை எய்தப் பெறுவர்.

அவிர் - என்ற பகுதி உகரச்சாரியை பெற்றது. "வான்முதல் பொழிந்து, அவிருவெள்ளி, பொன்மன் நடையில் வழிந்து, உள் இருந்தது" எனக் கூட்டுக. அது (இறுதியடி) - ஒளி.

சத்தி தரிசனம்

809. குணம்-அது ஆகிய கோமளவல்லி
மணம்-அது ஆக மகிழ்ந்து அங்கு இருக்கில்,
தனம்-அது ஆகிய தத்துவ ஞானம்
இனம்-அது ஆக இருந்தது என்றானே.

குணமது வாகிய கோமள வல்லி
[1]மணமது வாக மகிழ்ந்தங் கிருக்கிற்
றனமது வாகிய தத்துவ ஞான
மினமது வாக [2]விருந்ததென் றானே. (18)

வேறு பாடம்: 1. மனமது (ஒ) I. 2. விரிந்ததென் (ஆ) IV; விருந்தனன் (சண்) (துடி)

கருத்து: இறைவனோடு, அவனது குணமாகப் பிரிப்பின்றி உள்ள அருட்சத்தி, யோகியின் உச்சந்தலைச் சகஸ்ராரத்தில் வெளிப்பட்டு, சிவத்துடன் கூடியிருந்தால், அவ் யோகிக்குச் செல்வமாக மெய்ஞ்ஞானம் வாய்க்கப் பெற்று அவனுக்குத் துணையாக இருக்கும் என நந்தி கூறியருளினான்.

தாமரை நிமிரும்

810. இருந்த அப்பிராணனும் உள்ளே எழுமாம்
பரிந்த இத்தண்டுடன் அண்டம் பரிய
இருந்த அப் பூவுடன் மேல் எழ வைக்கின்
மலர்ந்தது மண்டலம்; வாழலும் ஆமே.

[1]இருந்தவப் பிராணனு முள்ளே யெழுமாம்
பரிந்தவித் தண்டுட னண்டம் பரிய
[2]விருந்தவப் பூவுடன் மேலெழ வைக்கின்
மலர்ந்தது மண்டலம் வாழலு மாமே. (19)

வேறு பாடம்: 1. இருந்த (சண்) 2. விரிந்த (எ) I.

கருத்து: விசுத்தி ஆதாரம் வரை ஓடிக்கொண்டிருந்த மூச்சு, உள்முகமாக அண்ணாக்கு வழியே உச்சந்தலைக்குச் செல்லும். உடலைத் தாங்கிய முதுகந்தண்டை விட்டுக்கடந்து உடம்பினது ஆகாயத் தானத்தை அடையும். அடைந்து சகஸ்ராரத் தாமரை மலரை நிமிர்த்தி அதன் மேலும் சென்றால், தலை ஆகிய சந்திர மண்டலம் ஒளி எய்தி மலரும். இவ்வுடம்புக்கு அழிவில்லை.

சகஸ்ராரத் தியானம்

811. மண்டலத்துள்ளே மன ஒட்டியாணத்தைக்
கண்டு, அகத்து அங்கே கருதியே கீழ்க் கட்டி,
பண்டு அகத்துள்ளே பகலே ஒளி ஆகக்
குண்டலக் காதனும் கூத்து ஒழிந்தானே.

மண்டலத் துள்ளே மனவொட்டி யாணத்தைக்
[1]கண்டகத் தங்கே கருதியே கீழ்க்கட்டிப்[2]
பண்டகத் துள்ளே பகலே யொளியாகக்
குண்டலக் காதனுங் [3]கூத்தொழிந் தானே. (20)

வேறு பாடம்: 1. கண்டிடத் (ஈ) IV. 2. கீழ்க்கட்டிற் (எ) IV. 3. கூத்துகந் (ஐ ஒ) II.

கருத்து: சந்திர மண்டலத்தில், மனத்தைக் கட்டுவதாகிய சகஸ்ராரத் தைக் கண்டு, அங்கே தியானித்து, மனம் கீழே செல்லாதவாறு கட்டி, உடம்பின் உட்புறத்தில், பகல் போன்ற ஒளி தோன்ற, சிவத்தின் அருவத்தைத் தரிசிக்கலாம்.

ஒட்டியாணம் - ஒருவகைப் பந்தம். இங்குக் கட்டுவது என்ற பொருள் மட்டும் தந்தது. அருவமாதலின் 'கூத்தில்லை' என்றார். மற்றும் இயக்கம் இல்லை யாதலின் 'கூத்து இல்லை' என்றார் எனினுமாம்.

உச்சி செல்லும் மூச்சு

812. ஒழிகின்ற வாயுவும் உள்ளே அமரும்;
கழிகின்ற ஆயுவும் காக்கலும் ஆகும்;
வழிகின்ற காலத்து, வட்டக் கழலைப்
பழிகின்ற காலத்துப் பை அகற்றீரே.

[1]ஒழிகின்ற வாயுவு முள்ளே யமருங்
கழிகின்ற வாயுவுங் காக்கலு மாகும்
வழிகின்ற காலத்து வட்டக் கழலைப்[2]
பழிகின்ற காலத்துப் [3]பையகற் றீரே. (21)

வேறு பாடம்: 1. மொழிகின்ற (ஐ) IV. 2. கழலை (ஈ) I. 3. பையகத்தீரே (அ) I.

கருத்து: உச்சந்தலைக்குப் பாயாமல் நின்ற நான்கு அங்குல மூச்சு, இப்போது பாயும். அதனால் ஆயுளைக் காக்கலாம். (நீட்டலாம்). உச்சியிடத்தில், சகஸ்ராரத்தில் ஒளியைக் காணும் போது திருவடிக்காட்சி எய்தும். அதை வணங்கி, உடல் நினைவை நீக்குக.

வட்டம் - மலர். இங்குச் சகஸ்ராரம். கழல் - திருவடி. உச்சந்தலையில் தோன்றும் ஒளி உடம்பெங்கும் பரவுதலின் 'வழிகின்ற' என்றார். பழிச்சுதல் - பரவுதல். அது மருவிப் பெயரெச்சமாக நின்றது.

கோயில் விளக்கு

813. பையினின் உள்ளே படிகதவு ஒன்று இடின்,
மெய்யினின் உள்ளே விளங்கும் ஒளியது ஆம்;
கையினுள் வாயு கதித்து அங்கு எழுந்திடின்,
மை அணி கோயில் மணி விளக்கு ஆமே.

பையினி னுள்ளே [1]படிகத வொன்றிடின்
மெய்யினி னுள்ளே விளங்கு மொளியதாங்
[2]கையினுள் வாயுக் கதித்தங் கெழுந்திடின்
மையணி கோயின் மணிவிளக் காமே. (22)

வேறு பாடம்: 1. படிக்கதவு (எ) I. 2. கையினுள் (துடி)

கருத்து: மூலாதாரத்திலிருந்து அபானன் கீழ் நோக்கிச் செல்லாத வாறு மூலபந்தம் செய்தால் (எருவாயை இறுகப் பிடித்தால்) ஒளி வடிவாம் சிவன் உடம்பினுள் விளங்குவான். சுழுமுனை நாடி வழியாக மூச்சுக் கிளர்ந்து மேலே எழுந்தால், உடம்பின் புலன்கள் (முன்னே மயக்கம் உடையவையாய் இருந்தவை) உடம்பாகிய கோயிலில் ஏற்றப்பட்ட விளக்குகளாம்.

"கள்ளப் புலன் ஐந்தும் காள மணி விளக்கே" என்னும் ஆசிரியர் வாக்கை ஒப்புநோக்குக. மை - மயக்கம். ஆகு பெயர்.

அக்கினிச் சுடர்

814. விளங்கிடும் வாயுவை மேல் எழ உன்னி,
நலங்கிடும் கண்டத்து, நாபியின் உள்ளே,
வணங்கிடும் மண்டலம் வாய்த்திட, கும்பிச்
சுணங்கிட, நின்றவை சொல்லலும் ஆமே.

விளங்கிடும் வாயுவை மேலெழ வுன்னி
நலங்கிடுங் கண்டத்து [1]நாபியி னுள்ளே
வணங்கிடு மண்டலம் வாய்த்திடக் கும்பிச்
[2]சுணங்கிட நின்றவை சொல்லலு மாமே. (23)

வேறு பாடம்: 1. நாடியி (அ) IV. 2. சுணங்கிடை (அ ஐ ஈ ஒ) I.

கருத்து: மூச்சுக்காற்றை (அபானனை) மேல் நோக்கி எழுமாறு எண்ணி, "சாலந்திர பந்தத்தால்" கழுத்தையும் நாபியையும் சுருக்குவதால் (நெற்றியில்) சந்திர மண்டலம் உண்டாக, பிராணன் - அபானன் சேர்க்கை உண்டாகி, அக்கினி கலை ஒளிவிடும்.

கும்பி - குவிந்து. சுணங்கிட - சுருங்கிட. நின்றவை - விளையும் பயன்கள்.

தொலைக் காட்சி

815. சொல்லலும் ஆயிடும் மாகத்து வாயுவும்
சொல்லலும் ஆகும் அனல் நீர் கடினமும்
சொல்லலும் ஆகும் இவை அஞ்சும் கூட்டிடின்
சொல்லலும் ஆம் தூர தரிசனம் தானே.

சொல்லலு மாயிடு [1]மாகத்து வாயுவுஞ்
சொல்லலு மாகு [2]மனனீர் கடினமுஞ்
சொல்லலு மாகு மிவையஞ்சுங் கூட்டிடிற்[3]
சொல்லலு மாந்தூர தரிசனந் தானே. (24)

வேறு பாடம்: 1. மாம்பத்து (உ ஐ) IV. 2. மண்ணீர்க் (ஹண்) 3. கூடிடிற் (எ) I; கூறிடிற் (த)

கருத்து: யோகிக்கு ஆகாயம் எனக் கூறப்படும் தலையிடத்தே ஐம்பூதங்களையும் ஒருங்கே ஒளியாகக் கண்டால், நெடுந்தொலையில் உள்ளவற்றையும் காணும் ஆற்றல் உண்டாகும்.

தொலை, காலத் தொலையையும் உணர்த்தும். கடினம் - நிலம்.

காண்பது எவ்வாறு?

816. தூரதரிசனம் சொல்லுவன், காணல் ஆம்;
கார் ஆரும் கண்ணி கடை ஞானம் உட்பெய்து,
தேர் ஆரும் தீபத்து எழில் சிந்தை வைத்திடின்
பார் ஆர் உலகம் பகல் முன்னது ஆமே.

தூர தரிசனஞ் [1]சொல்லுவன் காணலாங்
காராருங் கண்ணி கடைஞான முட்பெய்து[2]
[3]தேராருந் தீபத் [4]தெழிற்சிந்தை வைத்திடிற்
பாரா ருலகம் பகன்முன்ன தாமே. (25)

வேறு பாடம்: 1. சொல்லலுங் (ஐ) IV. 2. முட்பெய்துந் (ஈ) I; முட்பெய்திட் (விசு); முட்பெய்தே (த) 3. டேராருந் (விசு) 4. தெளிசிந்தை (இ) I.

கருத்து: திருவருட் சத்தியின் ஞானமாகிய முடிநிலை ஞானத்தை உள்ளிட்டுச் சிவஞானத்தில் சிந்தை வைத்தால் தூர தரிசனம் காணலாம். பூமி முதலிய உலகங்கள் பகல் போல் தெளிவாக விளங்கும்.

தேர்தல் என்பது முதனிலையளவாக நின்றது; ஆராய்தல்.

உடம்பே கோயில்

817. முன் எழு நாபிக்கு முந்நால் விரற்கீழே
பன் எழு வேதம் 'பகல் ஒளி உண்டு' என்னும்;
நன் எழு நாதத்து நல் தீபம் வைத்திட,
தன் எழு கோயில்-தலைவனும் ஆமே.

முன்னெழு [1]நாபிக்கு முந்நால் விரற்கீழே
பன்னெழு [2]வேதம் பகலொளி யுண்டென்னு
நன்னெழு நாதத்து நற்றீபம் வைத்திடத்
[3]தன்னெழு கோயிற் றலைவனு மாமே. (26)

வேறு பாடம்: 1. நாவிற்கு (த) 2. வேதப் (அ இ) I. 3. தென்னெழு (ஆ) I.

கருத்து: உந்திச் சுழிக்குக் கீழ், பன்னிரண்டு அங்குலத் தொலைவில் உள்ள மூலாதாரத்தில் புருடன் ஆகிய சூரியன் (சூரியன் போல் ஒளி வீசும் புருடன்) உள்ளான் என வேதம் புகலும். அந்த விளக்கை, புருவமத்தியில் நாதமயமாக விளங்கும் ஜோதியுடன் குண்டலி, மூச்சுக் காற்று ஆகியவற்றின் உதவியால் இணைத்தால் உடம்பே கோயிலாய் மாறும். சிவன் அங்கே பதியாய் எழுந்தருள்வான்.

முன்எழு - முன்னே துறுத்திக் கொண்டிருக்கும். பன் எழு - பன்னுதல் எழும்; பலமுறை சொல்லப்படும். நன் - மை கெட்டது.

54. பரியங்க யோகம்

பெண்போகத்தில் சிவபோகம்

818. பூசுவன எல்லாம் பூசி, புலர்த்திய
வாச நறுங்குழல் மாலையும் சாத்திய
காயக் குழலி கலவியொடும் கலந்து,
ஊசித் துளைஉற, தூங்காது போகமே.

பூசு வனவெல்லாம் பூசிப் புலர்த்திய
வாச நறுங்குழன் மாலையுஞ் சாத்திய
[1]காயக் குழலி கலவி யொடுங்கலந்
தூசித் [2]துளையுறத் தூங்காது போகமே. (1)

வேறு பாடம்: 1. காசக் (த) 2. துளையாகத் (ஆ ஓ) II.

கருத்து: வாசப் பொடிகள் பூசி, உலர்ந்த கூந்தலில் மாலை அணிந்த பெண்ணுடன் புணர்ந்து அதே வேளை பிரமரந்திரத்திலேயே (சகஸ்ராரம்) எண்ணத்தை நிறுத்தினால், சிவபோகம் தளராது.

காசம், காயம் என மருவியது; மயிர்ச்சாந்து. பிரமரந்திரத்தில் சிவனும் சத்தியும் கலப்பதை அனுபவத்தால் அறிய வேண்டும் என்ற நினைவுடன் புணர்ந்தால் என்க.

பரியங்கம் - கட்டில். கட்டிலில் கணவனும் மனைவியும் நிகழ்த்தும் போகமே யோகமாகும் முறை.

அருட் சத்தியுடன் சேர்க்கை

819. போகத்தை உன்னவே போகாது வாயுவும்
மோகத்தை வெள்ளியும் மீளும் வியாழத்தில்;
சூகத்த மென் முலையாளும் நல் சூதனும்
தாதில் குழைந்து, தலை கண்டவாறே.

போகத்தை யுன்னவே போகாது வாயுவு
[1]மோகத்தை வெள்ளியு மீளும் வியாழத்திற்
[2]சூகத்த மென்முலை யாளுநற் சூதனுந்
தாதிற் குழைந்து [3]தலைகண்ட வாறே. (2)

வேறு பாடம்: 1. மோகத்து (எ), மேகத்து (ஆ ஈ) மேகத்த (அ) II. 2. சூதொத்த (இ எ) II சூகத்தை (இ) I. 3. தலைக்கண்ட (த)

கருத்து: பிராண சத்தியும், குண்டலி சத்தியும் ஆன்ம சத்தியும் அருட்சத்தியும் கலத்தல் இப்பாடலில் கூறப்படுகின்றது. புணர்ச்சியில் ஈடுபடும் கணவனும் மனைவியும் தமது உடற் போகத்தை அன்றி, தமது பிரமரந்திரத்தில் விந்துவும் நாதமும் (சத்தியும் சிவமும்) கலக்கும் காட்சியைக் காண வேண்டும் என்று நினைத்தால், பிராண சத்தி வீணாகாது, பெண்ணின் கருவிதையான சுரோணிதத்துடன் சேரும் மோகத்துடன் ஆணின் சுக்கிலம் பிரிந்து வெளியாவது நிற்கும். அதாவது புலனின்பம் இராது. கணவனும் மனைவியும் தம் உயிருணர்வு, பிராணசத்தி, குண்டலிசத்தி ஆகியவற்றுடன் கலக்கப் பெற்று அருட் சத்தியின் சேர்க்கை பெற்றுத் தலையாய சிவபோகத்தை அனுவிப்பர்.

சூகம் - தாமரை.

முதுகு தளராது

820. கண்டனும் கண்டியும் காதல்செய் போகத்து,
மண்டலம் கொண்டு இருபாலும் வளிநிற்கும்
வண்டியை மேல்கொண்டு வான்-நீர் உருட்டிட,
தண்டு ஒரு காலும் தளராது அங்கமே.

கண்டனுங் கண்டியுங் காதல்செய் போகத்து[1]
மண்டலங் கொண்டிரு பாலும் வளிநிற்கும்[2]
வண்டியை [3]மேல்கொண்டு வானீ ருருட்டிடத்[4]
தண்டொரு காலுந் தளராது வங்கமே. (3)

வேறு பாடம்: 1. யோகத்து (ஒ) IV. 2. வெளிநிற்கும் (எ) IV; வழிநிற்கும் (அ ஆ இ ஈ) I. 3. மேற்கொண்டு (சண்) 4. ருருட்டிடந் (எ) I.

கருத்து: கணவனும் மனைவியும் விரும்பும் புணர்ச்சியில் அவ்விருவரிடமும், நெற்றிச் சந்திர மண்டலத்தை அடைந்து மூச்சுக் காற்று நிற்பதாகிய பிரயாணத்தை மேலும் நிகழ்த்தி, வான கங்கை ஆகிய அமுதத்தைப் பெற்று, உடம்பில் பரவச்செய்ய, உடம்பில் வீணா தண்டாகிய முதுகுத் தண்டு ஒருகாலும் தளர்ந்து போகாது.

கண்டன் - ஒரு பகுதியாக உள்ளவன். கண்டி - பகுதியாக உள்ளவள். இவ்விருவரும் புணர்ந்து இந்த யோகத்தைச் செய்வதால், தனித் தனியே பகுதி எனப்பட்டனர். போகம் - புணர்ச்சி என்ற அளவில் நின்றது. வண்டி - ஆகுபெயர். பயணம்; யோக சாதனையைக் குறித்தது.

சுக்கிலம் வரலாகாது

821. அங்குஅப் புணர்ச்சியும் ஆகின்ற தத்துவம்
அங்கத்தில் விந்து வருகின்ற போகத்துப்
பங்கப் படாமல் பரிகரித்துத் தம்மைத்
தங்கிக் கொடுக்க, தலைவனும் ஆமே.

[1]அங்கப் புணர்ச்சியு [2]மாகின்ற தத்துவ[3]
[4]மங்கத்தில் விந்து வருகின்ற போகத்துப்
பங்கப் படாமற் [5]பரிகரித் துத்தம்மைத்[6]
தங்கிக் கொடுக்கத் தலைவனு மாமே. (4)

வேறு பாடம்: 1. அங்கம் (ஈ ஓ) I. 2. மாய்கின்ற (இ) I. 3. தத்துவம் (த) 4. மங்கத்தில் (த) 5. பரியகத் (ஆ) II. 6. துத்தன்னைத் (த)

கருத்து: பிரமரந்திரத்தில் விந்துவும் நாதமும் கலக்கின்ற புணர்ச்சி யாகவும் அமையவல்ல ஆண் பெண் சேர்க்கையில், உடம்பில் உள்ள சுக்கிலம், விளைகின்ற போகத்தில் நீங்காமல் காத்து, புணர்ச்சியில் நெடுநேரம் தங்கி தமது உயிருணர்வை (ஆன்ம போதத்தை) அருளில் கரைத்தால், சிவன் (இருவர்க்கும்) பேரின்பம் நல்கும் தலைவனாக விளங்குவான்.

தத்துவம் - விந்து தத்துவம். விந்து தத்துவத்தின் காரியமான சுக்கிலத்தை விந்து என்றே கூறினார்.

அக வாழ்க்கை

822. தலைவனும் ஆயிடும், தன் வழி ஞானம்;
தலைவனும் ஆயிடும், தன் வழி போகம்;
தலைவனும் ஆயிடும், தன்வழி உள்ளே;
தலைவனும் ஆயிடும், தன்வழி அஞ்சே.

தலைவனு மாயிடுந் தன்வழி ஞானந்'
தலைவனு மாயிடுந் தன்வழி போகந்
தலைவனு மாயிடுந் தன்வழி யுள்ளே
தலைவனு மாயிடுந் தன்வழி யஞ்சே. (5)

வேறு பாடம்: 1. ஞாலந் (அ) I.

கருத்து: அருள்வழி இன்னது என இப்பாடல் விளக்குகின்றது: சிவன் உயிருக்குச் சிவபோகம் நல்கும் தலைவன் ஆனபின், அவனால் உயிர்க்குப் பதி ஞானம் பிறக்கும்; சிவானுபவம் விளையும். அருள் வழியாவது அகவாழ்வு வழி (ஆன்மீக வழி) யாகும். இவ்வாறு அக வாழ்வில் சிவத்தைத் தலைக்கூடிய உயிருக்கு ஐம்புலனும் வயப்படும்.

மன நிறைவு

823. அஞ்சு கடிகைமேல், ஆறாம் கடிகையில்
துஞ்சுவது ஒன்றத் துணைவி துணைவன்பால்
'நெஞ்சு நிறைந்தது வாய்கொளாது' என்றது
பஞ்ச கடிகைப் பரியங்க யோகமே.

அஞ்சு [1]கடிகைமே லாறாங் கடிகையிற்[2]
றுஞ்சுவ தொன்றத் துணைவி துணைவன்பா
னெஞ்சு நிறைந்தது வாய்கொளா தென்றது
பஞ்ச கடிகைப் [3]பரியங்க யோகமே. (6)

வேறு பாடம்: 1. கடிகையி (அ எ ஒ) I. 2. கடிகைமேற் (அ எ ஒ) I. 3. பரியங்கி (அ ஆ இ ஈ ஒ) I.

கருத்து: ஐந்து நாழிகை புணர்ச்சியில் கழிய, ஆறாம் நாழிகையில் மனைவி கணவன்பால் துயில, அந்த ஐந்து நாழிகைப் பரியங்க யோகத்தின் பயனாக, மனம் நிறையும். பேச்சு எழாது.

துயில்வதாகிய செயலே 'நெஞ்சு நிறைந்தது வாய் கொளாது' எனக் குறிக்கப்பட்டது.

குண்டலியை விடுக; அருட்சத்தியைக் கூடுக

824. பரியங்க யோகத்துப் பஞ்ச கடிகை
அரிய; இவ்யோகம் அடைந்தவர்க்கு அல்லது
சரிவளை முன்கைச்சி சந்தனக் கொங்கை
உருவித் தழுவ ஒருவர்க்கு ஓணாதே.

பரியங்க யோகத்துப் பஞ்ச கடிகை
யரியவிவ் யோக மடைந்தவர்க் கல்லது
சரிவளை [1]முன்கைச்சி [2]சந்தனக் கொங்கை
[3]யுருவித் தழுவ வொருவர்க்கொ ணாதே. (7)

வேறு பாடம்: 1. முன்கைச் (ஆ இ) II; முன்கச்ச (அ) I. 2. சரிசந்தனக் (இ) IV. 3. யுருகத் (எ); யுருவத் (ஈ); யுருகித் (அ) I.

கருத்து: யோகத்தின் முழுப் பலனை அடையக் குண்டலிசத்தியைக் கடந்து அருட்சத்தியின் கருணையைப் பெற வேண்டும். இதனை இப்பாடல் கூறுகின்றது. ஐந்து நாழிகை பரியங்க யோகம் செய்தல் அரியது. இந்த யோக சாதனை நிறைவுபெற்றவர்க்கு அன்றிப் பிறர்க்கு, குண்டலி சத்தியைக் கடந்து சென்று, அருட்சத்தியைச் சேர (சத்தி நிபாதம் பெற) இயலாது.

சரிவளை - அடுக்குகளாக உள்ள வளைகள். இவை 'நாதம்' என்ற தத்துவத்தைக் குறிப்பால் உணர்த்தும். நாதமாக உள்ள சிவனைக் காட்டித் தருபவள் சத்தி. புணர்ச்சி பற்றிய அதிகாரப்பொருளுக்கு

ஏற்ப, 'தழுவ' என்று கூறினாரேனும் 'அருள்பெற' என்பதே பொருளாகக் கொள்க.

அருவத்தியானம்

825. ஒண்ணாத யோகத்தை உற்றவர் ஆர்? என்னில்,
விண் ஆர்ந்த கங்கை விரிசடை வைத்தவன்-
பண் ஆர் அமுதினை - பஞ்ச கடிகையில்
'எண்ணாம்' என எண்ணி இருந்தான் - இருந்தே.

ஒண்ணாத யோகத்தை யுற்றவ ராரென்னில்[1]
விண்ணார்ந்த கங்கை விரிசடை வைத்தவன்
பண்ணா ரமுதினைப் பஞ்ச கடிகையி[2]
லெண்ணா மெனவெண்ணி யிருந்தா னிருந்தே[3]. (8)

வேறு பாடம்: 1. ரெண்ணில் (ஆ) I. 2. கடிகையை (அ ஈ) II. 3. னிருந்ததே (எ) I; ரீருந்ததே (த)

கருத்து: எளிதில் இயல்வது அல்லாத இப்பரியங்க யோகத்தை இருந்து எய்தியவர் யார் எனக் கேட்பின், வான கங்கையைச் சடையில் சூடியவனும், அழகிய அமுதம் போன்றவனும் ஆகிய சிவனது அருவத்தை ஐந்து நாழிகை நேரம் எண்ணாமல் எண்ணி இருந்தவன் என்க.

கங்கை அமுதினைக் குறிப்பால் உணர்த்துகின்றது.

சிவானந்தம்

826. ஏய்ந்த பிராயம் இருபதும் முப்பதும்
வாய்ந்த குழலிக்கும் மன்னற்கும் ஆனந்தம்;
ஆய்ந்த குழலியோடு ஐந்தும் மலர்ந்திட,
சோர்ந்தன சித்தமும், சோர்வு இல்லை வெள்ளிக்கே.

ஏய்ந்த பிராய மிருபது முப்பதும்
வாய்ந்த குழலிக்கு மன்னற்கு மானந்த[1]
[2]மாய்ந்த குழலியோ டைந்து மலர்ந்திடச்
சோர்ந்தன் சித்தமுஞ் சோர்வில்லை வெள்ளிக்கே. (9)

வேறு பாடம்: 1. மானந்தம் (அ ஆ) I. 2. வாய்ந்த (அ ஆ) I.

கருத்து: முறையே இருபதும் முப்பதுமாகப் பொருந்திய வயது உடைய மனைவிக்கும் கணவனுக்கும் இந்த யோகத்தால் ஆகும் சிவானந்தம் எய்தும். மனைவியால் கணவனுக்கு ஐம்புலன்களும் மலர்ச்சி அடைந்து நல்லனுபவம் நல்கும். மனம் மாயும். சுக்கிலம் விழாது.

புருவத்துச் சோதி

827. வெள்ளி உருகிப் பின் பொன்வழி ஓடாமே
கள்ளத் தட்டானார் கரியிட்டு மூடினார்,
கொள்ளி பறியக் குழல் வழியே சென்றும்
அள்ளி, உள் நாவில் அடக்கி வைத்தாரே.

வெள்ளி [1]யுருகிப்பின் பொன்வழி யோடாமே[2]
கள்ளத்தட் டானார் கரியிட்டு மூடினார்[3]
கொள்ளி பறியக் குழல்வழி யேசென்று
[4]மள்ளியுண் ணாவி லடக்கிவைத் தாரே[5]. (10)

வேறு பாடம்: 1. யுருகிப் (அ ஒ) II; யுருக்கி (இ ஈ எ) II; யுருகியே (விசு) 2. யோடாமுன் (சண்) 3. மூட்டினார் (அ ஆ) I. 4. யுள்ளியுண் (ஆ) IV; வள்ளியனாவில் (எ) II. 5. தானே (அ ஆ இ ஈ எ) I.

கருத்து: காமத் தீயால் சுக்கிலம் உருகி, சுரோணிதத்தில் கலப்பதற்காகப் பிரியாமல், மறைவாக உள்ள சிவன் அருள் என்ற கரியைக் (சாட்சி என்றும் பொருள் கொள்க) கொண்டு தடுத்தார். அதனால் மூலக்கனல் மூச்சுக்காற்றால் சுழுமுனை நாடியின் வழியே உந்தப்பட்டுச் சென்று வெளிப்பட, அதை அள்ளி உள் நாக்குப் பகுதி ஆகிய சந்திர மண்டலத்தில் செறித்து வைத்தார். அது அங்கு அக்கினி கலையாக ஒளி வீசி விளங்கியது. புருவமத்திச் சோதி இதுவே.

அருவ தரிசன ஆனந்தம்

828. வைத்த இருவரும் தம்மில் மகிழ்ந்து உடன்
சித்தம் கலங்காது செல்கின்ற ஆனந்தம்
பத்து வகைக்கும் பதினெண் கணத்துக்கும்
வித்தகனாய் நிற்கும் வெங்கதிரோனே.

வைத்த விருவருந் தம்மின் மகிழ்ந்துடன்[1]
சித்தங் கலங்காது [2]செல்கின்ற வானந்தம்
பத்து வகைக்கும் பதினெண் கணத்துக்கும்
வித்தக னாய்நிற்கும் வெங்கதி ரோனே. (11)

வேறு பாடம்: 1. மகிழ்ந்திடச் (அ) IV. 2. செய்கின்ற (எ) I.

கருத்து: யோகத்தில் நாட்டம் வைத்த கணவன்-மனைவியர் இருவரும், தாம் தாம் மகிழ்ந்து, அதே சமயம், அறிவு கலங்காமல் அனுபவிக்கின்ற ஆனந்தம் எதனால் விளைகின்றது எனின், பத்துத்திசைகளுக்கும் பதினெட்டுத் தேவகணங்களுக்கும் பதி ஞானம் வழங்குவதற்கு உரிமையுடைய ஞானதேசிகன் ஆகிய ஒளி வடிவினனே அவர்களுக்கு அருவமாய்க் காட்சி அளித்தலால் என்க.

வித்தகன் - குரு. "உத்தரகோச மங்கையுள் இருந்து வித்தக வேடம் காட்டிய இயல்பும்" (திருவா. கீர். அக. அடி 48-49) வெங்கதிர் - விரும்பத்தக்க ஒளி; ஞான ஒளி.

ஆனந்தம் என்ன?

829. வெங்கதிருக்கும் சனிக்கும் இடைநின்ற
நங்கையைப் புல்கிய நம்பிக்கு ஓர் ஆனந்தம்,
தங்களில் பொன்இடை வெள்ளி தாழாமுனம்
திங்களில் செவ்வாய் புதைத்திருந்தாரே.

வெங்கதி ருக்குஞ் சனிக்கு மிடைநின்ற
நங்கையைப் [1]புல்கிய நம்பிக்கோ ரானந்தந்
தங்களிற் பொன்னிடை [2]வெள்ளிதா ழாமுனந்
திங்களிற் செவ்வாய் [3]புதைத்திருந் தாரே. (12)

வேறு பாடம்: 1. புல்லிய (ஆ ஓ) III. 2. வெள்ளிதள்ளா முன்னந் (ஆ) I. 3. புதனிருந்தானே (அ ஆ இ ஈ) II; புதைத்திருந்தானே (சண்).

கருத்து: (சென்ற பாடலில், யோகத்தில் ஈடுபடும் கணவன் மனைவியர்க்கு ஒளிவடிவினன் ஆகிய சிவம் அருவமாகக் காட்சி யளித்தல் சுட்டப்பட்டதை நினைவு கூர்ந்து இப்பாடற்குப் பொருள் செய்க) ஒளிவடிவச் சிவனைத் தரிசிப்பதற்கும் பிறகு அவனை அடையும் பேற்றுக்கும், ஒரு குழந்தையைப் பிறப்பிக்கும் பிள்ளைப் பேற்றுக்கும் இடனாக நின்ற பெண்ணை, இந்த யோக

நிலையில் புணர்ந்த ஆடவனுக்கு விளையும் மகிழ்ச்சி யாதெனில், தங்களது சுக்கிலமானது சுரோணிதத்தில் வீழ்ந்து இழிவடைவதற்கு முன்பாக, (அங்ஙனம் வீழாது தடுத்து) சந்திர மண்டலத்தில் சூக்கும வாக்காகிய நாதத்தைக் கேட்டு, அதில் உணர்வு ஒன்றி நிற்பதே ஆகும்.

நாதத்துடன் கலப்பு

830. திருத்திப் புதனை, திருந்தல் செவ்வாய்க்குக்
கருத்தழலாலே கலந்து, அங்கு இருக்கில்
வருத்தமும் இல்லையாம் மங்கை பங்கற்கு;
துருத்தியுள் வெள்ளியும் சோராது எழுமே.

[1]திருத்திப் புதனைத் [2]திருந்தல்செவ் வாய்க்குக்[3]
கருத்தழ [4]லாலே கலந்தங் கிருக்கில்
வருத்தமு மில்லையா மங்கைபங் கற்குத்[5]
[6]துருத்தியுள் வெள்ளியுஞ் சோரா தெழுமே. (13)

வேறு பாடம்: 1. திருத்தப் (எ) IV. 2. திருத்தல் (ஆ எ) IV. 3. செய்வார்க்குக் (அ ஆ எ ஒ) II. 4. காலே (அ இ ஈ எ ஒ) II. 5. கற்குந் (எ) I. 6. துருத்தி பின் (ஒ) I.

கருத்து: பரியங்க யோகம் செய்யும் மங்கைக்கும் அவள் துணை வனாகிய கணவனுக்கும் தமது அறிவைத் திருத்தி (உயிருணர்வுடன் சேர்த்து) திருத்தமான சூக்கும வாக்காகிய நாத மண்டலத்தில் (சந்திர மண்டலத்தில்) மூலக் கனலின் ஆற்றலால் சென்று அடைந்து, அங்குத் தங்கி, நாதமாக உள்ள சிவத்தோடு கலந்து இருந்தால் எத்துன்பமும் இல்லை. அவர்களின் உடம்பில் விந்துசத்தி (முறையே சுரோணிதமும் சுக்கிலமும்) கீழ் விழுந்து வீணாகாமல், ஊர்த்துவரேதசாக மேல் நோக்கி எழும் (மூலக்கனலாக மாறிச் செல்வது அதுவே ஆதலின்).

திருத்தல் - செம்மையுடைய. செவ்வாய் - மூலமான வாக்கு. இது சுத்தமாயையில் பிறப்பது. நாத தத்துவம் இதுவே. செவ்வாய்க்கு - செவ்வாயின் கண்; உருபு மயக்கம். கரு - மூலம். வெள்ளி, இங்குச் சுக்கிலம், சுரோணிதம் இரண்டையும் குறிக்கும், பரியங்க யோகத்தால் பயன் பெறுவோர் கணவன் மனைவி இருவருமாதலின்.

ஊன் உருக...

831. எழுகின்ற தீயை முன் கொண்டு சென்றிட்டால்
மெழுகு உருகும் பரிசு எய்திடும் மெய்யே;
உழுகின்றது இல்லை ஒளியை அறிந்தால்;
விழுகின்றது இல்லை வெளி அறிவார்க்கே.

எழுகின்ற [1]தீயைமுன் கொண்டுசென் றிட்டால்
[2]மெழுகுரு கும்பரி செய்திடு மெய்யே[3]
உழுகின்ற தில்லை யொளியை யறிந்தால்[4]
விழுகின்ற தில்லை வெளியறி வார்க்கே. (14)

வேறு பாடம்: 1. தீயின் முன்னே கொண்டு சென்றிட்டால் (எ) IV; தீயை முன்னே கொண்டு சென்றால் (த) 2. மெழுகு வரும்படி (ஆ) I. 3. மெய்யை (எ) IV. 4. யறிந்தபின் (அ இ ஈ எ ஒ) III.

கருத்து: மூலாதாரத்தில் சுக்கிலமே தீயாக மாறியதை மேல் நோக்கிப் புருவ மத்திக்குக் கொண்டு சென்றால், அங்கு உயிருணர்வில் அன்பு மயமாகி இறைவனைத் தியானிக்கும் பொழுது, உடல் உருகுவது போல் தோன்றும்.

உடல் உணர்ச்சி நீங்கும். அப்புருவமத்தியில் சோதியாகத் தோன்றும் இறைவனைத் தரிசித்தால் எந்த முயற்சியும் வேண்டா. (அருள்நெறி உண்டாவதால்-இறைவன் செயலே அன்றி என் செயல் இல்லை என்ற உணர்வு உண்டாவதால் - தான் செய்யும் முயற்சி எதுவும் இல்லை.) சகஸ்ராரத்தை உயிருணர்வால் உணர்ந்து, பரமாகாயமாக விளங்கும் இறைவனைத் 'தரிசித்தால்' உடம்பு விழாது.

"உருகுவது உள்ளம் கொண்டு ஓர் உருச் செய்தாங்கு எனக்கு அள்ளூறு ஆக்கை அமைத்தனன்" என்ற திருவாசகம் (திருவண் : அடி 175 - 7 அடி) காண்க.

ஆகாயத்தை அறிந்தேன்

832. வெளியை அறிந்து, வெளியின் நடுவே
ஒளியை அறியின், உளி முறி ஆமே;
தெளிவை அறிந்து, செழு நந்தியாலே
வெளியை அறிந்தனன், மேல் அறியேனே.

வெளியை யறிந்து வெளியி னடுவே
[1]யொளியை [2]யறியி னுளிமுறி யாமே
தெளிவை யறிந்து செழுநந்தி யாலே
வெளியை யறிந்தனன் மேலறி யேனே. (15)

வேறு பாடம்: 1. யுளியை (அ இ ஒ) I. 2. யறிவி (ஆ ஓ) I.

கருத்து: ஆசிரியர் நூலறிவையும், தம் அனுபவத்தையும் ஒருங்கே உரைக்கும் பாடல் இது. யோகத்தின் பயனைக் கூறும் முறையில் இது இவ்வதிகாரத்தில் நின்றதே தவிர, பரியங்கயோகத்தின் கூறுபாட்டை விளக்குவது அன்று. பரமாகாயத்தை அறிந்து, அதன் நடுவே ஒளியாக விளங்கும் சிவத்தை அறிந்தால், மனம் அவனுக்கு ஆட்படும். அதனை அனுபவத்தால் அறியப் புகுந்து, நந்தியம் பெருமானின் உபதேசத்தால் அறிந்தேன். அதன்பிறகு நிகழ்ந்ததைச் சொல்ல அறியேன்.

சத்திக்கும் மேற்பட்டவன்

833. மேல் ஆம் தலத்தில் விரிந்தனன் தான், எனின்,
மால், ஆம் திசைமுகன், வான்நந்தியாம் இவர்
நால் ஆம் நிலத்தின் நடு ஆன அப்பொருள்,
மேலாய் உரைத்தனன் மின் இடையாளுக்கே.

மேலாந் தலத்தில் [1]விரிந்தனன் றானெனின்
மாலாந் திசைமுகன் [2]வானந்தி யாமிவர்[3]
நாலா நிலத்தி னடுவான வப்பொருள்
மேலா [4]யுரைத்தனன் மின்னிடை யாளுக்கே. (16)

வேறு பாடம்: 1. விரிந்தகன்றாரென்னில் (அ இ) I; விரிந்தவரா ரெனின் (எ) IV. 2. மாநந்தி (எ ஒ) I. 3. யாயவர் (எ) III; யாயிவர் (இ ஈ) I; யாவோர் (ஆ) II. 4. யுரைத்தனர் (எ) I.

கருத்து: சிவபரம்பொருள் மேலான தலமாகிய பரமாகாயத்தில் அருவமாக வியாபித்திருந்தான். அவ்வாறாயின், அவன், திருமால், பிரமன், உருத்திரன், நந்தி மகேசுவரன்) என்னும் உருவக் கடவுளர் நால்வரையும் அதிட்டித்து நிற்கும் பரம்பொருள் ஆவான். அவன் பராசத்திக்கும் மேம்பட்டவனாக உரைக்கப்பட்டவன்.

இப்பாடலும் பரியங்க யோகக் கூறுபாட்டைக் கூறுவதன்று. யோகப் பயனான பரமாகாய அனுபவத்தைக் கூறுவது. ஆம் திசைமுகன் - ஆக்கல் தொழில் செய்யும் பிரமன்.

பரம்பொருளுடன் ஒன்றுக

834. மின் இடையாளும் மணாளனும் கூட்டத்துப்
பொன் இடை வட்டத்தின் உள்ளே புகப்பெய்து
தன்னொடு தன்னைத் தலைப்பெய்ய வல்லீரேல்
மண் இடைப் பல் ஊழி வாழ்தலும் ஆங்கே.

மின்னிடை [1]யாளு மணாளனுங் கூட்டத்துப்
பொன்னிடை வட்டத்தி னுள்ளே புகப்பெய்து
தன்னொடு தன்னைத் [2]தலைப்பெய்ய வல்லீரேன்[3]
மண்ணிடைப் பல்லூழி வாழ்தலு மாங்கே[4]. (17)

வேறு பாடம்: 1. யாளுமின்னாளனுங் (எ ஒ) IV. 2. தலைப்பெய்த (அ. சுவ) V. 3. வல்லராய் (ஓ) IV; வல்லாரேல் (ஓ) IV. 4. மாமே (த) (வ)

கருத்து: மனைவியும் கணவனும் ஆகிய நீவிர், புணர்ச்சியில், நுமது உயிருணர்வானது பொன்னிறமான பரமாகாயத்தில் இணைதலைத் திருவருளால் பெற்று, சிவபரம்பொருளோடும் ஒன்றிக் கலக்கும் நிலையைப் பெறுவீராயின், உலகில் அவ்வாறே பல்லூழிக் காலம் வாழவும் வல்லீர்.

புணர்ச்சி ஒரு வேள்வி

835. வாங்கல் உறுதலை வாங்கலின் வாங்கிய
வீங்க வலிக்கும் விரகு அறிவார் இல்லை;
வீங்க வலிக்கும் விரகு அறிவாளரும்
ஓங்கி அதனை உதம் பண்ணினாரே.

வாங்க [1]லுறுதலை வாங்கலின் வாங்கிய
வீங்க வலிக்கும் விரகறி வாரில்லை
வீங்க வலிக்கும் விரகறி வாளரு[2]
[3]மோங்கி யதனை யுதம்பண்ணி னாரே. (18)

வேறு பாடம்: 1. விறுதலை (அ) II; லிறுதலை (எ ஒ) I; லறுதலை (இ) I; லுறுகலை (அ) I. 2. வாளர்க்கு (இ) IV. 3. மோங்கிய தன்னை (அ இ எ) I; மோங்கிய தம்மை (த)

கருத்து: சிற்றின்பத்தில் வீணாகாமல் உள் வாங்கக் கூடிய சுக்கிலத்தை, உள் இழுக்கும் முறைப்படி இழுத்து, ஊர்த்துவரேத சாக மாறுமாறு முயலும் உபாயத்தை அறிந்தவர் அரியர். அவ்வுபாயம் அறிந்தோர் யோக சாதனையில் உயர்ந்து, அந்த ரேதஸை (சக்தியை) ஆகுதியாகச் சொரிந்தனர். (புருவமத்தி யாக குண்டமாகவும், இச்சக்தி ஆகுதியாகவும் கொள்க) இந்நூலுள், பின்னர் "ஆமத்து இனிது இருந்து அன்ன மயத்தினை ஓமத்திலே உதம் பண்ணும் ஒருத்தி" என ஆசிரியர் கூறுவர். (திருவம்பலச் சக்கரம்).

தலையுச்சியில் சத்தி

836. உதம் அறிந்து அங்கே ஒரு சுழிப்பட்டால்,
கதம் அறிந்து அங்கே கபாலம் கறுக்கும்,
இதம் அறிந்து அங்கே இருப்பாள் ஒருத்தி
பதம் அறிந்தும் உளே பார் கடிந்தாளே.

உதமறிந் தங்கே [1]யொருசுழிப் பட்டாற்
கதமறிந் தங்கே கபாலங் கறுக்கு
மிதமறிந் [2]தங்கே யிருப்பா ளொருத்தி
பதமறிந் தும்முளே பார்கடிந் தாளே[3]. (19)

வேறு பாடம்: 1. யொருவழிப் (இ ஈ ஐ) IV. 2. தெங்கு (ஈ) தென்று (அ இ எ) தென்பதிருப்பா (ஒ) II. 3. தானே (அ ஈ) II.

கருத்து: புருவமத்தியில், ஆக்ஞை என்ற ஆதாரத்தில் சத்தியாகிய ஆகுதியைச் சொரிந்து, ஒளியைத் தரிசித்து அதன் பிறகு, இன்னும் மேற்சென்று, உச்சந்தலையில் பிரமரந்திரத்தை உயிருணர்வால் எட்டினால், அங்கே எய்தப்பெறும் அமுதத்தை நுகரலாம். அதனால் தலைமயிர் கறுக்கும் (உடம்பு இளமை எய்தும்). "மேலை நிலத்தினாள் வேதகப் பெண்பிள்ளை ... பாலனுமாவன்" (திருமந். தாரணை:3) என ஆசிரியர் கூறியவாறு அங்கே உயிருக்கு நன்மை இதுவென அறிந்து பராசத்தி வீற்றிருப்பாள். அவள் உயிரின் அகப் பக்குவத்தை நோக்கி, அருள்நெறியை நல்கி, உலகியலை விலக்கியருள்வாள்.

சுழி - சுழி வடிவில் உள்ள பிரமரந்திரம். கதம் - அடையப்படுவது. (இங்கு) "வானீர்" எனப்படும் அமுதம் (திருமந்திரம்: பரியங்க:3) பார் - ஆகுபெயர்.

அந்தரத்தில் தாமரை

837. பார் இல்லை, நீர் இல்லை, பங்கயம் ஒன்று உண்டு;
தார் இல்லை, வேர் இல்லை, தாமரை பூத்தது;
ஊர் இல்லை, காணும் ஒளி-அது ஒன்று உண்டு
கீழ் இல்லை, மேல் இல்லை, கேள்வியிற் பூவே.

பாரில்லை நீரில்லை பங்கய மொன்றுண்டு
தாரில்லை வேரில்லை தாமரை பூத்தது
வூரில்லை காணு மொளியது வொன்றுண்டு[1]
கீழில்லை மேலில்லை கேள்வியிற் பூவே. (20)

வேறு பாடம்: 1. வொன்றில்லை (இ) IV.

கருத்து: மண் இன்றி, தண்ணீர் இன்றி, வேர் இன்றி, அரும்பு தோற்றாமல் தாமரை பூத்தது. இது சகஸ்ராரத் தாமரை. அது பூத்த ஊர் என ஒன்றும் இல்லை. பரமாகாயத்தோடு உயிருணர்வு தொடர்பு கொள்ளும் பொழுது, உச்சந்தலையில், இத்தாமரை (சகஸ்ராரம்) மலரும். அப்போது அருள்வெளியில் திகழும் ஒளியாகிய சிவத்தைத் தரிசிக்கலாம். இது ஞானத்தின் பயனான சிவானுபவம் ஆகும். இதனைப் பெறுவார்க்கு ஆதியந்தம் (கால எல்லை) இல்லை.

கேள்வியிற் பூ - ஞானத்தில் மலரும் பூ. அதாவது சிவானுபவம். சகஸ்ராரத்தில் உயிருணர்வால் கலந்து எய்தும் இவ்வனுபவம் நிராதார அனுபவம் ஆகும். நிராதார யோகத்தை இப்பாடலில் விளக்கினார்.

55. அமுரிதாரணை

கிணற்று நீர்

838. உடலில் கிடந்த உறுதிக் குடிநீர்
கடலில் சிறுகிணறு ஏற்றம் இடல் ஒக்கும்;
முடிவில் ஒரு வழி, ஒன்றுக்கு இறைக்கின்
நடலைப் படாது, உயிர் நாடலும் ஆமே.

[1]உடலிற் கிடந்த வுறுதிக் குடிநீர்
கடலிற் [2]சிறுகிண [3]றேற்றமிட லொக்கு
[4]முடிவி லொருவழி யொன்றுக் கிறைக்கி
ணடலைப் படாதுயிர் நாடலு மாமே. (1)

வேறு பாடம்: 1. உடலிக் (ஆ) I. 2. சிறுகிணற் (எ) I. 3. றேற்றமிட் டாலொக்கு (அனை. சுவ) (அனை. பதிப்) V. 4. முடலி (ஈ எ) IV.

கருத்து: சிவவானச் சிறப்பு அதிகாரத்திலும் பரியங்கயோக அதிகாரத்திலும் 'வானீர்' என்று கூறிய அமுதத்தைப் பற்றித் தனியதிகாரம் கூற எடுத்துக் கொண்டார். பருகக் கூடியதாய் (உடலால் நுகரக் கூடியதாய்) உடலிலேயே எய்தப்பெறுவதும், நன்மைதருவதுமாகிய வானீர், கடற்கரையில், சிறு கிணற்றில் ஏற்றமிட்டு இறைத்து எடுப்பது போல, யோக சாதனம் என்ற முயற்சியால் எய்தப் பெறுவதாகும். யோக சாதனத்தின் முடிவில்-முடி நிலையில் (இறுதிக் கட்டத்தில்) உச்சந் தலையில், சகஸ்ராரம் என்ற இடத்தில், நிராதார யோகம் என்ற முயற்சியினால், பரமாகாயத்துடன் உயிர் உணர்வு கொள்ளும் தொடர்பால் இவ்வமுதம் ஊறும். இது சூரிய கலை வழியாகக் கீழ் இறங்கி உடல் முழுதும் பரவும். எனவே உயிர் கலங்காது. உடம்பில் பல்லூழிக் காலம் வாழும். ஞான நாட்டமும் தொடர்ந்து நடைபெற ஏதுவாகும்.

குறிப்பு: 1. அனைத்துச் சுவடிகளிலும் இயலின் பெயர் 'அமுரி தாரணை' என்றே உள்ளது. இஃது இவ்வதிகாரப் பொருளான வானீரைச் சிறுநீர் என மயங்கியோர் தவறாகக் கொடுத்த பெயராதல் வேண்டும். மற்றும் இவ்வதிகாரத்தின் இம் முதற் பாடலும் இறுதிப்பாடலும் ஒழிந்த பிற பாடல்கள் நான்கும் மருத்துவ நூலார் ஒருவர் இயற்றி இடைச் செருகியவையாகத் தோன்றுகின்றன.

2. இப்பாடல் 2 - ஆம் அடியில் 'ஏற்றமிட்டாலொக்கும் என்றே அனைத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ளது. யாப்புப் பிழைபடுதலின், இப்பதிப்பில் 'ஏற்றமிடலொக்கும்' எனத் திருத்தப்பட்டது.

839. நூறு மிளகு நுகருஞ் சிவத்தினீர்
மாறு மிதற்கு மருந்தில்லை மாந்தர்கள்
தேறி லிதனைத் தெளியுச்சி கப்பிடின்
மாறு மிதற்கு மறுமயி ராமே. (த)

840. தெளிதரும் இந்தச் சிவநீர் பருகில்
ஒளிதரு மோராண்டி லூனமொன் றில்லை
வளியுறு மெட்டின் மனமும் ஒடுங்குங்
களியுறுங் காயங் கனகம தாமே. (த)

841. கரையரு கேநின்ற கான லுவரி
வரைவரை யென்பர் மதியிலா மாந்தர்
நுரைதிரை நீக்கி நுகரவல் லார்க்கு
நரைதிரை மாறு நமனுமங் கில்லையே. (த)

842. அளக நன்னுத லாயோ ரதிசயங்
களவு காயங் கலந்தவிந் நீரிலே
மிளகு நெல்லியு மஞ்சளும் வேம்பிடி
லிளகு மேனி யிருளுங் கபாலமே. (த)

அருள் - அமுது

843. வீர மருந்து என்றும், விண்ணோர் மருந்து என்றும்
நாரி மருந்து என்றும் நந்தி அருள் செய்தான்,
நாரி மருந்து என்று அறிவார் அகலிடம்
சேரா மருந்து இது, சொல்ல ஒண்ணாதே.

வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்று
[1]நாரி மருந்தென்று நந்தி யருள்செய்தா
[2]னாரி மருந்தென் றறிவா ரகலிடஞ்
[3]சேரா மருந்திது சொல்லவொண் ணாதே. (2)

வேறு பாடம்: 1. நார (எ) I. 2. னாதி (எ) I. 3. சோதி (எ) IV.

கருத்து: ஊக்கம் தரும் மருந்து என்றும், விண்ணோர் அமுதம் என்றும் அருள் அமுது என்றும் இதனை நந்தி கூறியருளினான். அருளமுது என்று அனுபவத்தால் அறிபவர் உலகியலிற் சேரா வண்ணம் காக்கும் மருந்து இது. இதன் நன்மை சொல்லுக்கு அடங்காது.

56. சந்திர யோகம்

உடம்பில் சந்திர மண்டலம்

844. எய்தும் மதிக்கலை சூக்கத்தில் ஏறியே
எய்துவ தூலம்; இருவகைப் பக்கத்துள்
எய்தும் கலையே போல் ஏறி இறங்குமாம்;
துய்யது சூக்கத்துக் காலத்த காயமே.

எய்து மதிக்கலை சூக்கத்தி லேறியே
[1]யெய்துவ தூல மிருவகைப் பக்கத்து
ளெய்துங் [2]கலையேபோ லேறி யிறங்குமாந்
துய்யது சூக்கத்துக் [3]காலத்த காயமே. (1)

வேறு பாடம்: 1. யெய்து மவர்தூல (அ) IV. 2. கலைபோல வேறி (சைவ) 3. தூலத்த (ஆ இ) IV.

கருத்து: சந்திர மண்டலம் பற்றி விளக்குவது இவ்வியல். யோக சாதனையில் ஒரு முக்கிய கூறுபாடு இது. சந்திர யோகம் என்பது பரியங்க யோகம் போல் தனிவகை யோகம் அன்று. உடம்பு சூக்குமம், தூலம் என இருவகை. இவை யாவர்க்கும் உண்டு. உடம்பில் சந்திர கலையின் இயக்கத்தைக் காணுங்கால்: இது தூலவுடம்பிலிருந்து சூக்கும வுடம்பிற்கு ஏறியும், அதிலிருந்து தூலவுடம்பிற்கு இறங்கியும் நிகழும். இவ்வியக்கம், அண்டத்தில் உள்ள சந்திரன் வளர்பிறை தேய்பிறைகளில் முறையே வளர்வதும் தேய்வதும் போன்றதாகும். யோகியின் அனுபவத்தில் சிறப்பிக்கப் படுவது சூக்குமவுடம்பில் உள்ள சந்திர கலையே. கலை என்பது ஆற்றல்.

காலத்த - குறிப்பிட்ட காலம் நிற்கும். காயம் - உடம்பு.

மூன்று மண்டலங்கள்

845. ஆகின்ற சந்திரன், சூரியன், அங்கியுள்
ஆகின்ற ஈர்- எட்டொடு, ஆறு-இரண்டு, ஈர் ஐந்துள்
ஏகின்ற அக்கலை எல்லாம் இடைவழி
ஆகின்ற யோகி அறிந்த அறிவே.

ஆகின்ற [1]சந்திரன் சூரிய னங்கியு
ளாகின்ற வீரெட்டொ டாறிரண் டீரைந்து
ளேகின்ற வக்கலை யெல்லா மிடைவழி
யாகின்ற யோகி யறிந்த வறிவே. (2)

வேறு பாடம்: 1. சந்திர சூரியாங்கியு (ஆ) II.

கருத்து: உடம்பில் மூன்று மண்டலங்கள் உள்ளன. இடுப்பு, தொப்புள் பகுதி அக்கினி மண்டலம். அதன் மேல் கழுத்துவரை

சூரிய மண்டலம். மேல் உச்சந் தலைவரை சந்திர மண்டலம். இந்த மண்டலங்களில் மூச்சுக்காற்று இயங்கும்போது (இடைகலை, பிங்கலை, சுழுமுனை என்ற நாடிகளுள் யாதேனும் ஒன்றின் வழியாக) அதன் ஆற்றல் முறையே அக்கினி கலை, சூரிய கலை, சந்திர கலை எனக் கூறப்படும். இக்கலைகளின் (ஆற்றலின்) அளவைக் கூறுகிறார். இதில் குறிக்கப்படும் அளவுகள், யோகி மூச்சுக் காற்றைச் சுழுமுனை வழியாகச் செலுத்தும் பொழுது, தன் உயிருணர்வால் அறிந்தவை. சந்திரகலை 16; சூரியகலை 12; அக்கினி கலை 10.

ஒன்றில் இரண்டு

846. ஆறு-ஆறு-அது ஆம் கலை ஆதித்தன், சந்திரன்
நாறா, நலங்கினால், ஞாலம் கவர்கொளப்
பேறு ஆம்; கலைமுற்றும் பெருங்கால் ஈரெட்டும்
மாறாக் கதிர்கொள்ளும், ஆற்று அங்கி கூடவே.

ஆறாற தாங்கலை [1]யாதித்தன் சந்திரன்
நாறா [2]நலங்கினால் [3]ஞாலங் கவர்கொளப்[4]
பேறாங் கலைமுற்றும் [5]பெருங்கா லீரெட்டு
மாறாக் கதிர்கொள்ளு [6]மாற்றங்கி கூடவே. (3)

வேறு பாடம்: 1. யாதித்த சந்திரர் (அ எ ஒ) II. 2. நலங்கினார் (எ) I. 3. ஞானங் (இ ஈ) I. 4. கவர்கொள்வர் (ஆ) II. 5. பெருங்காலி (ஒ) II; பெருகுங் கனலிட்டு (ஆ) IV. பேருங்கா (த) 6. மற்றங்கி (எ) I

கருத்து: சூரிய கலைகளும் அக்கினி கலைகளும் சந்திர மண்டலத்தில் ஒன்றி அடங்கிவிடும் என்று இப்பாடலிற் கூறுகின்றார். 12 கலைகளை உடைய சூரியன், சந்திர மண்டலத்தில் கலந்து வற்றினால் (தன் ஆற்றலையும் சந்திரனுக்கே கொடுத்து, தான் வறியதானால்) யோகிக்கு உலகையே கவர்ந்துவிடும் பேறு எய்தும். மாறாத சந்திரனில் இயங்கும் பிராணவாயுவின் 16 கலைகளும் அக்கினி கலை பத்தையும், அவை தன்னுடன் முறைப்படி கூடும்பொழுது சேர்த்துக் கொள்ளும்.

நாறா - தோன்றி. செய்யா என்ற வாய்பாட்டு வினையெச்சம். நலங்குதல் - வாடுதல். கலை முற்றும் என்றது அக்கினி கலை பத்தையும்.

மூவர் கலை

847. பத்தும் இரண்டும் பகலோன் உயர்கலை;
பத்தினொடு ஆறும் உயர்கலை பால்-மதி,
ஒத்தனன் அங்கியது எட்டு-எட்டு உயர்கலை,
அத்திறம் நின்றமை ஆய்ந்துகொள்வார்க்கே.

பத்து மிரண்டும் பகலோ னுயர்கலை
பத்தினொ டாறு முயர்கலை பான்மதி
[1]யொத்தன [2]னங்கிய [3]தெட்டெட் டுயர்கலை
யத்திற நின்றமை யாய்ந்துகொள் வார்க்கே[4]. (4)

வேறு பாடம்: 1. யொத்தநல்லங்கிய (எ) IV. 2. வங்கிய (இ ஈ) IV; நந்திய (அ) II. 3. தெட்டோ (ஈ ஒ) II. 4. வீரே (சண்) (துடி) (சைவ)

கருத்து: சூரியனுக்கு உயர் அளவு கலைகள் 12; சந்திரனுக்கு 16. அக்கினி சூரிய மண்டலத்தில் பொருந்திப் பின்பு சந்திர மண்டலத்தில் பொருந்தும் பொழுது, உயர் அளவு கலைகள் 64 பெறும். சாதனையால் ஆய்பவர்க்கே இவ்வாறு இவை நின்றமை தெரியவரும்.

848. எட்டெட் டனலின் கலையாகு மீராறுட்
சுட்டப் படுங்கதி ரோனுக்குஞ் சூழ்கலை
கட்டப் படுமீ ரெட்டா மதிக்கலை
யொட்டப் படாவிவை யொன்றொடொன் றாவே.
(அ, க, ப)

கலை மூலம்

849. எட்டெட்டும், ஈராறும், ஈரெட்டும் தீக்கதிர்
சுட்டிட்ட சோமனில் தோன்றும் கலை என்ப;
சட்டப்படும் தாரகை கதிர் நால் உள;
கட்டிட்ட தொண்ணூற்றொடு ஆறும் கலாதியே.

எட்டெட்டு மீராறு மீரெட்டுந் தீக்கதிர்
சுட்டிட்ட சோமனிற் றோன்றுங் கலையென்ப[1]
[2]சட்டப் படுந்தா ரகைகதிர் நாலுள
கட்டிட்ட தொண்ணூற்றொ டாறுங் கலாதியே. (5)

வேறு பாடம்: 1. கலையென (விசு) (தி) (வ) (த) 2. கட்டப் (விசு) (தி) (வ) (த).

கருத்து: தீ, சூரியன், சந்திரன் - இவற்றின் கலைகள் தோன்றும் இடம் சந்திரன். செப்பம் உறும் இடம் மூலாதாரம். அது நான்கு இதழ்களை உடையது. அது பூமி தத்துவத்திற்கு ஏற்ப அமைவது. இவை தொண்ணூற்றாறும் கலைகள் எனப்படும்.

கலைகள் மேலே ஏறுதல்

850. எல்லாக் கலையும் இடை, பிங்கலை, நடு,
சொல்லா நடுநாடி ஊடே, தொடர் மூலம்
செல்லா எழுப்பிச் சிரத்துடன் சேர்தலால்
நல்லோர் திருவடி நண்ணி நிற்பாரே.

எல்லாக் கலையு மிடைபிங் கலைநடுச்
சொல்லா நடுநாடி யூடே தொடர்மூலஞ்
செல்லா வெழுப்பிச் சிரத்துடன் சேர்தலா
னல்லோர் திருவடி [1]நண்ணிநிற் பாரே. (6)

வேறு பாடம்: 1. நாடி (ஒ) IV.

கருத்து: மேற்கூறிய மூவகைக் கலைகளையும் அந்தந்த மண்டலத்தில், இடைகலை, பிங்கலை, நடு நாடி வழியாகச் செல்லும் மூச்சுக் காற்றாகிய பிராண சத்தியால் எழுப்பி, அவற்றின் ஆதாரமான மூலாதாரத்தை நோக்கி அவை கீழ்ச்செல்லாமல், பிரமரந்திர நினைவால் தடுத்து, உவமை சொல்ல இயலாத சந்திரமண்டலத்தின் வழியாகச் சகஸ்ராரத்தில் சேர்த்தலால், நல்ல யோகிகள் தமது சகஸ்ராரப்பகுதியில் இறைவன் திருவடியைத் தலைப்பட்டவர் ஆவர்.

அக்கினியில் இரண்டு கிளை

851. அங்கியில் சின்ன கதிர் இரண்டு ஆட்டத்துத்
தங்கிய தாரகை ஆகும் சசி பானு,
வங்கிய தாரகை ஆகும் பரை ஒளி,
தங்கு நவசக்ரம் ஆம் தரணிக்கே.

அங்கியிற் [1]சின்ன கதிரிரண் டாட்டத்துத்
தங்கிய தாரகை யாகுஞ் சசிபானு
[2]வங்கிய தாரகை [3]யாகும் பரையொளி
தங்கு [4]நவசக்ர [5]மாந்தர ணிக்கே. (7)

வேறு பாடம்: 1. சின்னக் (அ ஆ இ ஈ ஒ) I. 2. வங்கியத் (எ) I; தங்கிய (ஒ) IV; பங்கிய (த) 3. யாவும் (எ) IV. 4. நவக்கர (அ) II. 5. மாகுந்தரணிக்கே (அ ஆ இ ஈ எ) II.

கருத்து: அக்கினி மண்டலத்திலிருந்து இரண்டு சிறிய கதிர்கள் பிரிந்து, ஒளிவடிவில் பின்னிட, மேலே சூரிய, சந்திர மண்டலங்கள் அமைந்துள்ளன. இம்மண்டலங்கள் மூன்றும் அருட்சக்தி நல்கும் அருள்ஒளியில், தலையில் ஒன்று கூடி நாதத்துடன் கூடிய விண்மீன்கள் போல விளங்கும். இவற்றுடன் ஐம்பூதங்களையும் உடன் எண்ண, ஒன்பது மண்டலங்கள் உள்ளன. அவை அடுத்த பாடலில் கூறப்படும்.

வங்கியம் - குழல்வாத்தியம். (ஈண்டு) நாதத்தைக் குறித்தது.

ஒன்பது இடங்கள்

852. தரணி, சலம், கனல், கால், தக்க வானம்,
அரணிய பானு, அருந்திங்கள், அங்கி,
முரணிய தாரகை முன்னிய ஒன்பான்
பிரணவம் ஆகும் பெருநெறி தானே.

தரணி சலங்கனல் [1]காறக்க வான
மரணிய பானு வருந்திங்க ளங்கி
முரணிய தாரகை முன்னிய வொன்பான்
பிரணவ மாகும் பெருநெறி தானே. (8)

வேறு பாடம்: 1. காற்றத்த (எ) I.

கருத்து: மேற்பாடலில் தொகுத்துக் கூறப்பட்ட ஒன்பது மண்டலங்கள் வருமாறு: நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், அக்கினி, அருட்சத்தி மாறுபடுத்திய (நட்சத்திரம் போன்ற) ஒளி - இந்த ஒன்பது மண்டலங்களும் பிராசாத யோகத்தில் கூறப்படும் பிராசாத கலைகளின் இடங்கள் ஆகும். இவற்றுள் ஒளி, உடம்பைக் கடந்து விளங்குவது.

ஒன்று வளர, ஒன்று தளரும்

853. தாரகை மின்னும் சசி தேயும் பக்கத்து;
தாரகை மின்னா சசிவளர் பக்கத்து,
தாரகை பூவில் சகலத்து யோனிகள்
தாரகை தாரகை தான் ஆம் சொரூபமே.

தாரகை மின்னுஞ் சசிதேயும் பக்கத்துத்
தாரகை மின்னாச் சசிவளர் பக்கத்துத்
தாரகை பூவிற் சகலத்தி யோனிகள்[1]
தாரகை தாரகை தானாஞ் சொரூபமே. (9)

வேறு பாடம்: 1. யோனிக்குந் (இ) IV.

கருத்து: உடம்பில் சந்திரகலை தேயும் பொழுது மூலாதாரம் சக்தி மிகுந்திருக்கும். (மனம் உலகிய லின்பத்தை நாடும்) சந்திரன் வளரும் போது மூலாதாரத்தின் சக்தி குறையும். மனம் அருள் நிலையை நாடும். மூலாதாரம் சார்ந்துள்ள பூமி தத்துவத்தில் எல்லாச் சீவராசிகளின் பிறவிகளும் உள்ளன. யோக சாதனையின் முடிவில் இம் மூலாதாரம் உயிரின் அகவொளியில் அடங்கிவிடும்.

854. முற்பதி னஞ்சின் முளைத்துப் பெருத்திடும்
பிற்பதி னஞ்சிற் பெருத்துச் சிறுத்திடு
மப்பதி னஞ்சு மறியவல் லார்கட்குச்
செப்பரி யான்கழல் சேர்தலு மாமே. (அ ஆ ஔ)

முக்கூட்டு ஒளி

855. அங்கி எழுப்பி, அருங்கதிர் ஊட்டத்துத்
தங்கும் சசியாம்; மற்று ஆம் ஐந்தும் ஐந்து ஆகிப்
பொங்கிய தாரகையாம் புலன் போக்கு அற,
திங்கள், கதிர், அங்கி சேர்கின்ற யோகமே.

அங்கி யெழுப்பி யருங்கதி ரூட்டத்துத்[1]
தங்குஞ் [2]சசியாமற் [3]றாமைந்து மைந்தாகிப்
பொங்கிய தாரகை [4]யாம்புலன் போக்கறத்
திங்கள் கதிரங்கி சேர்கின்ற யோகமே. (10)

வேறு பாடம்: 1. வட்டத்து (த), ரூடத்துச் (சண்) 2. சசியாற் (அ எ ஒ) I; சசியினாற் (த) 3. நாமமைந்தைந்தாகிப் (எ) I. 4. யாம்புனல் (ஆ ஒ) IV; வாம்புலன் (அ) I.

கருத்து: அக்கினி கலைகள் பத்தும் எழுப்பப்பட்டு, சூரிய மண்டலத்தில் தமது ஆற்றலைக் கொடுத்துச் (விரவச் செய்து) சந்திரமண்டலத்தில் தங்கும். பூமி தொடர்புள்ள ஐம்புலன்களின் வழியே மனம் ஓடுதல் நிற்குமாறு சந்திரன், சூரியன், அக்கினி என்ற கலைகள் சந்திர மண்டலமாகிய இடத்தில் ஒன்றுவது சந்திர யோகம் (இது தனிவகை யோகம் அன்று. யோகத்தின் ஒரு கூறுபாட்டை இவ்வாறு விளக்கினார்)

2 ஆம் அடியில் மற்று - அசை.

குறிப்பு: இதனை அடுத்துப் பதிப்புகளில் "ஒன்றிய வீரெண்" என்னும் பாடல் உள்ளது. அஃது 'இளமை நிலையாமை' - இயலில் வந்தது. எனவே இங்கு விடப்படுகிறது.

உச்சி விளக்கு

856. அங்கி மதிகூட வாகுங் கதிரொளி
யங்கி கதிர்கூட வாகு மதியொளி
யங்கி [1]சசிகதிர் கூடவத் தாரகை
தங்கி யதுவே சகலமு மாமே. (11)

வேறு பாடம்: 1. சிவத்தினிற் (எ) IV.

கருத்து: மூலாக்கினியுடன் சந்திரன் சேர்ந்து மேல்நோக்கிச் செல்ல, சூரிய மண்டலத்தில் கலைகள் பிறக்கும். அந்த அக்கினியுடன் சூரியனின் கலைகள் சேர, சந்திர மண்டலத்தில் கலைகள் பிறக்கும். அக்கினி, சந்திரன், சூரியன் - இந்த மூன்றின் கலைகளும் உச்சந்தலையில் ஒன்றாய்ச் சேர, உடம்பைக் கடந்து விளங்கும் அருட்சத்தியின் ஒளியைத் தரிசிக்கலாம்.

857. ஈராறு பெண்கலை யெண்ணிரண் டாண்கலை
பேராமற் புக்குப் பிடித்துக் கொடுவந்து
நேராகத் தோன்று நெருப்பிற் புகப்பெய்யி
லாராத வானந்த மானந்த மானதே. (அ, இ)

858. காணும் பரிதியின் காலை இடத்திட்டு
மாணு மதியதன் காலை வலத்திட்டுப்
பேணியே யிவ்வாறு பிழையாமற் செய்வீரே
லாணி கலங்காதவ் வாயிரத் தாண்டே. (க)

ஒளியும் ஒலியும்

859. பாலிக்கு நெஞ்சம் பறையோசை யொன்பதில்
ஆலிக்கு மங்கே யமரர் பராபரன்
மேலைக்கு முன்னே விளக்கொளி யாய்நிற்குங்
காலைக்குச் சங்கு கதிரவன் றானே. (12)

கருத்து: தலையில் எட்டுத் திசைகள் உண்டு. உச்சந்தலைக்கு மேல், உடம்பைக் கடந்து விளங்கும் இடம் ஒன்பதாம் இடமாகக் கூறப்படும். அங்கே கேட்கப்பெறும் நாதம் ஆன்மாவை வளர்க்கும். அங்கே சிவன் பேரொளியாக விளங்குவான். இவை முறையே காலையில் முழங்கும் சங்கொலியையும் கிழக்கே உதிக்கும் சூரிய உதயத்தையும் போன்றவை.

சிதாகாயம்

860. கதிரவன் சந்திரன் காலம் அளக்கும்;
பொதிர் அவன் உள்ளே பொதிமழை நிற்கும்,
அதிர அவன் அண்டப்புறம் சென்று அடர்ப்ப,
எதிர் அவன் ஈசன் இடம்-அது தானே.

கதிரவன் சந்திரன் கால மளக்கும்
பொதிரவ னுள்ளே பொழிமழை நிற்கு
மதிரவ னண்டப் புறஞ்சென் றடர்ப்ப[1]
வெதிரவ னீச னிடமது தானே. (13)

வேறு பாடம்: 1. றடிப்ப (அ) IV.

கருத்து: பிராண வாயு சூரிய, சந்திர கலைகளில் தனித்தனியாக இயங்கும் பொழுது மனிதனின் ஆயுள் கால வரையறைக்கு உட்பட்டது. ஆனால், யோகியின் ஆற்றல் மிக்க உடம்பிலேயே அமுதமழை (மரணமில்லர்மையைத் தரும் சத்தி) யும் நிலையாக உள்ளது. அவன் தன் தலையில் நாதம் பிறக்கச் செய்து, பின்பு

தலையையும் கடந்து, வெளியே தன் உணர்வைச் செலுத்து வானாயின், அவன் எதிரே ஈசனின் இருப்பிடம் தோன்றும்.

உயிருணர்வும் சிவ ஒளியும்

861. உந்திக் கமலத்து உதித்து எழும் சோதியை
அந்திக்கும் மந்திரம் ஆரும் அறிகிலர்;
அந்திக்கும் மந்திரம் ஆரும் அறிந்தபின்
தந்தைக்கு முன்னே மகன் பிறந்தானே.

உந்திக் கமலத் துதித்தெழுஞ் சோதியை
யந்திக்கு மந்திர மாரு மறிகில
ரந்திக்கு மந்திர மாரு மறிந்தபின்
றந்தைக்கு முன்னே மகன்பிறந் தானே. (14)

கருத்து: தொப்பூளின் இடத்தில், மணிபூரகத்தில் தோன்றி எழும் சோதியைத் தரிசிப்பதற்கு உரிய மந்திரத்தை ஒருவரும் அறியவில்லை. அதனை அறிந்தால் சீவ உணர்வு தோன்றிப் பின் சிவ ஒளி தோன்றும்.

அந்தித்தல் - சந்தித்தல்

சிவஒளி எப்பொழுது தோன்றும்?

862. ஊதியம் ஏதும் அறியார் உரைப்பினும்;
ஓதியும் ஏதும் அறியாத ஊமர்கள்
ஆதியும் அந்தமும் அந்திக்க வல்லரேல்
வேதியன் அங்கே வெளிப்படும் தானே.

ஊதிய மேது மறியா ருரைப்பினு
மோதியு மேது மறியாத வூமர்க
ளாதியு மந்தமு மந்திக்க வல்லரேல்[1]
வேதிய னங்கே வெளிப்படுந் தானே. (15)

வேறு பாடம்: 1. வல்லிரேல் (சண்) வல்லீரேல் (சைவ)

கருத்து: பிறர் கூறினாலும் தாமே படித்தாலும் நன்மை ஏதும் அறியாத ஊமைகள் சூரிய கலையின் ஆதியையும் சந்திர கலையின்

முடிவையும் சேர்க்க வல்லார் ஆயினால், இறைவன் சோதியாய்க் காட்சி அளிப்பான்.

ஆதியும் அந்தமும் சேர்தலை இனி, "வளர்கின்ற ஆதித்தன்" (868) என்னும் பாடலிற் கூறுவார்.

பகையை நீக்குக

863. பாம்பு மதியைத் தினல் உறும்; பாம்பினைத்
தீங்கு கதிரையும் சேரத் தினல் உறும்;
பாம்பும் மதியும் பகைதீர்த்து உடன் கொளின்
நீங்கல் கொடான் எம் நெடுந்தகையானே.

பாம்பு மதியைத் [1]தினலுறும் பாம்பினைத்[2]
[3]தீங்கு கதிரையுஞ் [4]சேரத் தினலுறும்
பாம்பு மதியும் பகைதீர்த் துடன்கொளின்[5]
[6]னீங்கல் கொடானெந் நெடுந்தகை யானே. (16)

வேறு பாடம்: 1. தினலும் (ஆ) I; தினலுறு (த) 2. பாம்பது (இ) II; மப்பாம்பு (த) 3. தீங்கதிர் தன்னையுஞ் (ஆ இ) II. 4. சோதித் தனிலுறும் (எ) II. 5. துடன் கொளீஇ (எ) I. 6 நீங்கல் கொடானே (இ எ) I; 4 ஆம் அடி; முதல் 2 சீர்கள் நீங்கல் குடானெம் (அ) நீங்கல் கொடானே (இ எ) என்ற இரு பாடங்களையும் மாற்றுருவாகக் (variants) கொண்டு எழுதுமுறை வாய்ப்பால் (Transcriptional possibility) 'நீங்கல் கொடானெம்' என்பது பாடமாக மேற்கொள்ளப்பட்டது.

கருத்து: குண்டலி ஆகிய பாம்பு சுவாதிட்டானத்தில் பொருந்திச் சந்திர கலையை வளர விடாமல் சுக்கிலத்தை நீங்கச் செய்து வருகின்றது. காமம் என்ற தீய பண்பினால் குண்டலி சத்தியும் பயனின்றி நிற்க, சூரிய கலையும் வீணாகும். முதலில், யோகி குண்டலிக்கும் சந்திர கலைக்கும் உள்ள மாறுபாட்டை நீக்கி ஒருங்கே வளர்த்தால், சிவன் தன் அருளால், அவ்விரண்டையும் சூரிய கலையையும் ஒருங்கே வளர்த்திட அருள்வான்.

சந்திர கலையை வளர்க்க

864. அயின்றது வீழ்வு - அளவும் துயில் இன்றிப்
பயின்ற சசி வீழ் பொழுதில் துயின்று,
நயம் தரு பூரணை உள்ளம் நடத்தி
வியன்தரு பூரணை மேவும் சசியே.

அயின்றது வீழ்வள வுந்துயி லின்றிப்[1]
பயின்ற சசிவீழ் பொழுதிற் றுயின்று
[2]நயந்தரு பூரணை யுள்ள நடத்தி[3]
வியன்றரு பூரணை மேவுஞ் சசியே. (17)

வேறு பாடம்: 1. லன்றிப் (ஆ) I. 2. நயந்த பூரணையுள்ளளவு (அ) I. 3. நடத்திய (இ) II; நடத்தின் (த)

கருத்து: குண்டலிப் பாம்பினால் சந்திரன் வளராமல் தடுக்கப்படாத பொழுது உறங்காமல் யோகம் பயின்று, சந்திர கலை மாறும் பொழுது உறங்கி வந்தால், சந்திரன் நிறைநிலை அடைந்து (வளர்ந்து) யோகியின் உள்ளத்தை (உயிரை) நிறையொளியினைத் தரிசிக்குமாறு செய்யும்.

உணவும் உறக்கமும்

865. சசி உதிக்கும் அளவும் துயில் இன்றி,
சசி உதித்தஆறே தனது ஊண் அருந்தி,
சசி சரிக்கின்ற அளவும் துயிலாமல்
சசி சரிப்பின்கண் தன் கண் துயில் கொண்டே.

சசியுதிக் கும்மள வுந்துயி லின்றிச்
[1]சசியுதித் தாறே தனதூ ணருந்திச்
சசிசரிக் கின்றள வுந்துயி லாமற்
சசிசரிப் [2]பின்கட்டன் கண்டுயில் கொண்டே[3]. (18)

வேறு பாடம்: 1. சசியுதித்ததே (எ) சசியுதித்தாதே (அ ஈ ஓ) I; சசியுதித் தானேற் (தி) (த) (வ) 2. பின்கடன் (ஒ) I. 3. கொண்டதே (எ) II.

கருத்து: இப்பாடல் குளகம். சந்திர மண்டலம் தோன்றும் வரை தளராமல் யோகம் பயின்று, அது நெற்றியில் தோன்றியதும் அதன் அமுதை உண்டு, அது இயங்கும் போது துயிலாமல், இயங்கி நின்றபின் உறங்கி.

துயில் - (1 ஆம் அடி) - சோம்பல்

ஆறே - வழியே. காலப்பொருள் தந்தது. 4ஆம் அடியில் சரி - முதனிலைத் தொழிற் பெயர். பின் என்பது பெயராய் நின்று ஏழன் உருபு ஏற்றது.

மரணமிலாப் பெருவாழ்வு

866. ஊழி பிரியாது இருக்கின்ற யோகிகள்
நாழிகை ஆக நமனை அளப்பர்கள்
ஊழி முதலாய் உயர்வர், உலகினில்
தாழவல்லார், இவ்வழிச் சைவர் ஆமே.

ஊழி [1]பிரியா திருக்கின்ற யோகிக
[2]ணாழிகை யாக நமனை யளப்பர்க
[3]ளூழி முதலா [4]யுயர்வ ருலகினிற்
றாழவல் [5]லாரிவ் [6]வழிச்சைவ ராமே. (19)

வேறு பாடம்: 1. தரியா (சண்) 2. நாழியதாக (ஆ); நாழிகளாக (ஈ) I. 3. ளூனி (இ); ணாழி (ஆ) I. 4. யுமாவா (இ); யுய்வ (ஆ) I. 5. லாரிச் (எ) II. 6. சசிவன்ன (எ); வழிச் சமைவாரே (ஆ) II; வழிச்சைவர் தாமே (த).

கருத்து: ஊழி முடிந்தாலும் இறவாமல் இருக்கும் யோகிகள் அப்படி இருக்கும் ஒவ்வொரு நாழிகையும் நமனது ஆற்றலை அளந்து காட்டுபவர் ஆவார். (தம் உயிரைக் கவரும் வலிமை அவனுக்கு இல்லை என்பதை). ஊழி முதல்வனான சிவத்தைத் தன்மையால் ஒத்திருக்கும் அளவு உயர்வார். உலகில் இவ்வனுபவத்தை நுகர்ந்தவாறு வாழ்வர். இவ்வகையில் அவர் சைவர் ஆவர். (சைவர் - சிவத்தோடு சம்பந்தம் உடையவர் என ஆசிரியர் விளக்குவதும் காண்க.

அமுதம் பருகுவான்

867. தண்மதி பானு சரி பூமியே சென்று,
மண்மதி காலங்கள் மூன்றும் வழி கண்டு,
வெண்மதி தோன்றிய நாளில் விளைந்த பின்
தண்மதி வீழ்வு-அளவில் கணம் இன்றே.

தண்மதி பானுச் [1]சரிபூமி யேசென்று
மண்மதி காலங்கண் மூன்றும் வழிகண்டு
வெண்மதி தோன்றிய நாளில் விளைந்தபின்[2]
றண்மதி வீழ்வள [3]விற்கண மின்றே. (20)

வேறு பாடம்: 1. சரிப்பு வழி சென்று (ஆ) சரிபூமி சென்று (இ) II. 2. விழைந்தபின் (இ) I. 3. விற்கண்டுயின்றே (ஆ) II.

கருத்து: யோகி தனது குண்டலிசத்தியும் மூலக்கனலும், சந்திரன் சூரியன் ஆகிய இரண்டும் தனித்தனி இயங்கும் மண்டலங்களின் வழியாக உச்சந்தலைக்குச் செல்வதால் சந்திர மண்டலத்தில் அமுதம் விளைய, அதை நுகர்ந்து, இயல்பான ஆயுட் காலத்தைக் கடந்து, பல காலம் வாழ்வான். சந்திரன் மறையும் போது அமுத விளைவு ஒரு கணமும் இராது.

சந்திர மண்டலம் எப்போது தோன்றும்

868. வளர்கின்ற ஆதித்தன் தன் கலை ஆறும்
தளர்கின்ற சந்திரன் தன் கலை ஆறும்
மலர்ந்து எழு பன்னிரண்டு அங்குலம் ஓடி
அலர்ந்து விழுந்தமை யார் அறிவாரே?

வளர்கின்ற வாதித்தன் றன்கலை யாறுந்
தளர்கின்ற சந்திரன் றன்கலை யாறு
மலர்ந்தெழு பன்னிரண் டங்குல மோடி
யலர்ந்து விழுந்தமை யாரறி வாரே. (21)

கருத்து: சந்திர மண்டலம் தோன்றும் காலத்தை இப்பாடலில் உணர்த்துகின்றார். சூரியனின் கலைகள் பன்னிரண்டுள் முன் ஆறும், சந்திரனின் கலைகள் பதினாறனுள் பின் ஆறும் கூடவேண்டும். அப்போது விடும் மூச்சு தன் முழு விரிவான 12 அங்குல கனம் வெளியிலிருந்து உள்ளேயும், உள்ளேயிருந்து வெளியேயும் இயங்க வேண்டும். அண்ணாக்கு வழி திறந்து, அதன் வழியே தலைக்கு மூச்சுக்காற்றுச் செல்ல வேண்டும். அப்பொழுது சந்திர மண்டலம் பூரணமாகத் தோன்றும்.

கனலைச் சந்திரனில் செலுத்துக

869. ஆம் உவாவில் தேய்மதி நாள் எனல், விந்து
போம் வழி; எங்கணும் போகாது யோகிக்குக்
காமுறவு இன்மையின்; கட்டுண்ணும் மூலத்தில்,
ஓம் மதியத்துள் விட்டு, உறை உணர்வாறே.

[1]ஆமுவாவிற் றேய்மதி [2]நாளெனல் விந்து[3]
போம்வழி யெங்கணும் போகாதி யோகிக்குக்
[4]காமுற வின்மையிற் கட்டுண்ணு மூலத்தி
[5]லோமதி யத்துள்விட் டுறையுணர் வாறே[6]. (22)

வேறு பாடம்: 1. ஆமுயிர்த் (எ) II ஆமதியிற் (இ) I. 2. நாளேயெனல் (அ ஓ) I. 3. விந்துப் (ஆ) I. 4. காமுறி (அ) I. 5. லோமயத் (ஆஇ) I; லோமதியுள் விட் (த) 6. வாலே (எ இ) II; லோமதியத்துள்விட்டுரை (சண்) (சைவ)

கருத்து: அமாவாசை மதி தேயும் நாள்; அது போல் உடம்பில் சுக்கிலம் நீங்கும் நிலையே மூலாதாரத்தில் உள்ள சந்திரன் கெடும் நாள். யோகிக்கு ஆசை இல்லாமையால், சுக்கிலம் எங்கும் போகாது; மூலாதாரத்தில் கட்டுப்பட்டு அனலாய் மேல்எழும். மூலாதாரத்தில் பிரணவத்தை வைத்துத் தியானித்து, அதனைச் சந்திர மண்டலத்தில் கொண்டு சேர்த்து, ஒளியைக் கண்டு வாழும் உணர்வு, அந்த அனலால் எய்தப் பெறும்.

உறை - சந்திரமண்டலத்தில் உறையும் இறையொளி. ஆகுபெயர்.

நிறை நிலா என்று?

870. **வேறு உறச் செங்கதிர் மெய்க்கலை ஆறொடும்**
சூறு உற நான்கும் தொடர்ந்து உறவே நிற்கும்;
ஈறு இல் இனன் கலை ஈரைந்தொடே மதித்
தாறுள், கலையுள் அகல் உவா ஆமே.

வேறுறச் செங்கதிர் மெய்க்கலை யாறொடுஞ்
சூறுற நான்குந் தொடர்ந்துற வேநிற்கு
[1]மீறி லினன்கலை யீரைந்தொ டேமதித்
தாறுட் [2]கலையு [3]ளகலுவா வாமே. (23)

வேறு பாடம்: 1. மீறிலன் (ஆ); மீறலி (ஒ) I. 2. கலையுங் (ஆ) III. 3. கொளவுவா (ஆ) III.

கருத்து: சூரியனின் தொடக்கக் கலை ஆறுடன், மூலாதாரத்தில் உள்ள அக்கினி கலையுள் நான்கு சேர்ந்தே இருக்கும். சூரியனின் கலைகளுள் இறுதிப் பகுதியாகிய ஆறு கலைகள் அல்லாத முன் ஆறு கலைகள், அக்கினி கலைகள் பத்தோடும் சேர, அவை சந்திரனின் பிற்பகுதிக் கலைகள் ஆறுடன் சேர்ந்து, சந்திர மண்டலத்தினைச் சென்றடைந்தால், அந்த மண்டலம் பௌர்ணமி யாகும். நிறையொளி பெறும்.

உணர்வு அழியாமை எப்போது?

871. உணர் விந்து சோணி உற இனன் வீசும்
புணர்வு இந்து வீசும் கதிரிற் குறையில்
உணர்வும் உடம்பும் இவை ஒக்க நிற்கில்
உணர்வும் உடம்பும் ஒருக்கால் விடாவே.

உணர்விந்து சோணி [1]யுறவினன் வீசும்[2]
[3]புணர்விந்து வீசுங் [4]கதிரிற் குறையி
[5]லுணர்வு முடம்பு [6]மிவையொக்க நிற்கி
லுணர்வு முடம்பு மொருக்கால் விடாவே. (24)

வேறு பாடம்: 1. யுறவின் (ஆ) I; யுறவினான் (இ) I. 2. விசும்பின் (ஆ) I. 3. னுணர்விந்து I (ஆ) 4. கதிர்நீர் (ஆ) I. 5. யுணரு முடம்பிலிவை போக (ஆ) I. 6. முவையொக்க (சைவ) (துடி)

கருத்து: பெண்ணுடன் புணரும் காலத்தில் சுக்கிலமும் சோணிதமும் சேர்வதற்காகச் சூரியன் வீசும் கதிராற்றல், அதே காரணத்திற்காகச் சந்திரன் வீசும் கதிரைவிட வலிமையில் குறைவாக இருந்தால், யோக சாதனையால், உயிருணர்வும் உடம்பின் சத்தியும் இந்த இரண்டு கதிர்களையும் சமமாக இணைக்கும் அளவில் நின்றால், எடுத்த உடம்பில் உணர்வு அழியாமல் பலகாலம் வாழலாம்.

புலன்கள் அடங்கும்

872. விடாத மனம் பவனத்தொடு மேவி,
நடாவு சிவசங்கின் நாதம் கொளுவி
கடா விடா ஐம்புலன் கட்டுண்ணும்; வீடு
படாதன இன்பம் பருகு ஆர் அமுதே.

விடாத [1]மனம்பவ னத்தொடு மேவி
நடாவு சிவசங்கி னாதங் கொளுவிக்[2]
கடாவிடா வைம்புலன் கட்டுண்ணும் வீடு
படாதன வின்பம் பருகா ரமுதே[3]. (25)

வேறு பாடம்: 1. மனபவ (அ எ); மனப்பவ (ஆ) I. 2. கொளுவின் (தி) 3. ரமுதாமே (ஆ) ; ரமுதமே (எ ஒ) I.

கருத்து: ஐம்புலன்களை விடாத மனம், பிரத்தியாகாரத்தால், அவற்றை விட்டு, மூச்சோடு பொருந்தி (தனது அலைவு ஒன்றும்

இன்றி) நிற்க, பிராணாயாமத்தால் எழுகின்ற நாதம் என்ற தத்துவத்தின் ஒலி, உயிருணர்வினுக்குக் கேட்க, அப்பொழுது புலன்கள் மனத்தைப் பல விடயங்களில் செலுத்துவதை விடுத்து, அடங்கும். இதன் வாயிலாகப் பற்றுக்களினின்றும் விடுபட்டால், அடுத்து, ஆரமுதாகிய சிவப்பேறு வாய்க்க, அது வரை விளையாத பேரின்பம் எய்தும்.

அமுதம் இறங்குதல்

873. அமுதப் புனல் வரும் ஆற்றங்கரை மேல்,
குமிழில் கலைச்சுடர் ஐந்தையும் கூட்டிச்
சமை அத்தண்டு ஓட்டித் தரிக்க வல்லார்க்கு
நமன் இல்லை, நரகு இல்லை, நாள் இல்லை தானே.

அமுதப் [1]புனல்வரு மாற்றங் கரைமேற்
[2]குமிழிற் கலைச்சுட ரைந்தையுங் கூட்டிச்
சமையத்தண் டோட்டித் தரிக்கவல் லார்க்கு
நமனில்லை [3]நரகில்லை நாளில்லை தானே. (26)

வேறு பாடம்: 1. புலன் வரு (சண்) 2. குமிளிக்குட்சுட (இ) II; குமிறிச் சுடரைந்துங் (ஒ) I; குமிழிக்கத் தற்சுட (எ) IV; குமிழிற் சுடரைந்து நாதமுங் (ஆ) IV குமிழிக்கலச்சுட (அ) V இவ் விறுதிப் பாடத்தையே ஆசிரியரின் கருத்திற்கு ஒப்பத் திருத்தி இப்பதிப்பிற் பாடங் கொள்ளப்பட்டது. ('கலைச்சுடர்' என்பதைப் படியெடுப்போர் 'கலச்சுடர்' என்று எழுத வாய்ப்புண்டு) 3. நற்கலை (சண்) (சைவ)

கருத்து: உடம்பு இறவாமல் இருப்பது எவ்வாறு என இப்பாடலிற் கூறப்பட்டது. உடம்பின் சந்திர மண்டலத்தில், சகஸ்ராரத்தில் அமுதம் ஊற்றெடுத்துப் பெருக, அங்குச் சூரிய கலை, சந்திர கலை, அக்கினி கலை, சிவகலை, சத்திகலை என்னும் ஐந்து சுடர்களையும் ஒருங்கே கூட்டி, அவ்வமுதம் முதுகந்தண்டு வழியாக உடம்பு முழுதும் பரவப் பெறுபவர்க்கு எமன் இல்லை; நரக வாழ்க்கை இல்லை; வாணாள் எல்லையும் இல்லை. யோகி தனது உச்சந்தலைச் சகஸ்ராரத்தில் தரிசிப்பது சிவகலை, சத்திகலை என்ற இரண்டும் சேர்ந்த பேரொளியையே. ஆயினும் அதற்கு உதவுபவை அக்கினி கலை, சூரியகலை, சந்திர கலை என்பவையாதலின், 'ஐந்து சுடர்களையும் கூட்டி' என்றார்.

குறிப்பு: இதனை அடுத்துள்ள "உண்ணீரமுதம்" என்னும் பாடல் "கள்ளுண்ணாமை" இயலில் வந்தது. எனவே இங்கு விடப்படுகிறது.

874. மாறு மதியுமா தித்தனு மாறின்றித்
தாறு படாமற்றண் டோடே தலைப்படி
லூறு படாதுடல் வேண்டு முபாயமும்
பாறு படாவின்பம் பார்மிசைப் பொங்கவே. (அ, ண)

57. அசபை

சிவயோகம்

875. போற்றுகின்றேன் புகழ்ந்தும் புகல் ஞானத்தை;
தேற்றுகின்றேன் சிந்தை நாயகன் சேவடி;
சாற்றுகின்றேன் அறையோ சிவயோகத்தை;
ஏற்றுகின்றேன் எம்பிரான் ஓர்எழுத்தே.

போற்றுகின் றேன்புகழ்ந் [1]தும்புகல் ஞானத்தைத்
தேற்றுகின் றேன்சிந்தை நாயகன் சேவடி
சாற்றுகின் றேனறை யோசிவ யோகத்தை
யேற்றுகின் றேனெம் பிரானோ ரெழுத்தே. (1)

வேறு பாடம்: 1. தும்புகழ் (அ ஆ இ ஈ ஒ) I.

கருத்து: கதியாக உள்ள ஞானத்தைப் புகழ்தலும் போற்றுதலும் செய்வேன். நாயகன் திருவடியே கதி என்று சிந்தையைத் தெளிவிப்பேன். சிவயோகத்தைக் கூறுவேன். அந்நிலையில், முதற்கண் எம்பிரானுக்குரிய ஓரெழுத்து மந்திரத்தைக் கூறும் பொருட்டு நாவில் ஏற்றுவேன். ஓர்எழுத்து மந்திரம் ஓ - என்பது. அசபை - செபிக்கப்படாதது.

பிரணவ மந்திரத்தில் மகர மெய் ஒலித்து முடிக்கப் பெறாதிருத்தல் திருமூலர் கூறும் உச்சாரண முறை (திருவம்பலச் சக்கரம் : 911, 912)

குறிப்பு: அ, உ; எ, ஓ; இ; ஈ - சுவடிகள் இவ்வியலை 'அசபை' என்று குறிக்கும். ஆ, ஐ சுவடிகளிலும் இவ்வதிகாரம் இப்பெயருடன் இருப்பினும், அதற்கு முன், "அசைவை" என்னும் அதிகாரம், 10 பாடலுடன் பெற்றுள்ளன. இப்பாடல்கள் பிற சுவடிகளில் இல்லை. இவற்றின் நடை ஆசிரியரின் நடையினின்று முற்றிலும் வேறுபடுகிறது. எனவே இவை இடைச்செருகல் என்பது தெளிவு. ஓ - சுவடி 'அசபை' யை, 'ஆனந்தத் தாண்டவம்' என இயலின் பெயர் குறிக்கிறது.

பிரணவ விளக்கம்

876. ஓர் எழுத்தாலே உலகு - எங்கும் தான் ஆகி,
ஈரெழுத்தாலே இசைந்து அங்கு இருவர் ஆய்,
மூ எழுத்தாலே முளைக்கின்ற சோதியை
மா - எழுத்தாலே மயக்கமே உற்றதே.

ஓரெழுத் தாலே யுலகெங்குந் தானாகி
யீரெழுத் தாலே யிசைந்தங் கிருவராய்
மூவெழுத் தாலே முளைக்கின்ற சோதியை
[1]மாவெழுத் தாலே [2]மயக்கமே யுற்றதே. (2)

வேறு பாடம்: 1. நாவெழுத் (ஆ) IV. 2. நயந்து கொண்டானே (ஆ) IV.

கருத்து: 'ஓ' என அருவ ஒலியாக நின்று, எல்லா உலகங்களிலும் வியாபித்து நின்று, 'அ', 'உ' என இரண்டு ஒலிகளாய், உயிரும் சத்தியும் ஆக நின்று, 'ஓம்' என்ற முக்கூட்டு ஒலியால் (இம்மந்திர செபத்தால்) உடம்பினுள், சகஸ்ராரத்திலும் புருவ மத்தியிலும், நாதமும் விந்துவும் ஆகிய சோதியாய், உயிர் உணர்வுக்குக் காட்சி நல்கும் சிவனை, மக்கள் 'ம' என்ற எழுத்தால் சுட்டப்படும் ஆணவமலத்தின் மறைப்பால், உணராமல் மயங்குகின்றனரே!.

இம் மகரம் 'நமசிவாய' மந்திரத்தில் உள்ளது.

பொது

877. தேவ ருறைகின்ற சிற்றம் பலமென்றுந்
தேவ ருறைகின்ற சிதம்பர மேயென்றுந்
தேவ ருறைகின்ற திருவம் பலமென்றுந்
தேவ ருறைகின்ற தென்பொது வாமே. (3)

கருத்து: 'தென் பொது என்றும், என்றும் ஆமே' என வினைமுடிவு செய்க. உணர்வுடைய உயிர்க்குச் சிவன் மேலே கூறியவாறு சோதியாய்க் காட்சி நல்குதலால், 'பொது' என வழங்கப்படும் சகஸ்ராரத்தானம், சிவன் உறைகின்ற தில்லைச் சிற்றம்பலத்திற்கும், சிதாகாசத்திற்கும், பராகாயத்திற்கும் இணையாம். சகஸ்ராரத்தில் பெறுவது சிதாகாயம் எனப்படும் தகராகாய அனுபவமே. சிதாகாச நடனமே தில்லையம்பலத்தில் ஆடும் கூத்தில் நுண்மையாக விளங்குதலால், அது சிதம்பரம் எனப்பட்டது.

சிறுமை - நுண்மை. சித் - ஆகாசம், சித் - அம்பரம் - இவை ஒரு பொருளன. திரு - பரஞானம். இதனை வழங்கும் அனுபவம் பராகாய அனுபவம். பராகாயத்தை ஆசிரியர் "திருவம்பலம்" என வழங்குகிறார்.

ஆட்டுவிக்கிறான்

878. ஆமே பொன்னம்பலம் அற்புதம் ஆனந்தம்
ஆமே திருக்கூத்து அனவரத தாண்டவம்
ஆமே பிரளயம் ஆகும் அத் தாண்டவம்
ஆமே சங்காரத்து அருந்தாண்டவங்களே.

ஆமேபொன் னம்பல மற்புத மானந்த
மாமே திருக்கூத் தனவரத தாண்டவ
மாமே பிரளய மாகுமத் தாண்டவ
மாமேசங் காரத் தருந்தாண்ட வங்களே. (4)

கருத்து: உடம்பின்கண் உள்ள சகஸ்ராரமே பொன்னம்பலம் ஆவது அற்புதம் ஆகும். அங்குச் சிவன் ஆடும் திருக்கூத்து உயிருக்குப் பேரின்பம் நல்குவதாகும். இத்திருக்கூத்து, சிவனால் என்றென்றும் நிகழ்த்தப்படுவதாகும். உலகங்களைப் படைத்து, காலமாக நின்று, அக்காலங்கள் தோறும் செயல்களைச் செய்விப்பதும் இத்திருக் கூத்தே. அவ்வுலகங்களை அழித்து, மீளப் படைத்தலாகிய அருஞ்செயல்களைக் செய்வதும் இத்திருக்கூத்தே.

அருள்தர ஆடுகிறான்

879. தாண்டவம் ஆன தனி எழுத்து ஓர் எழுத்து;
தாண்டவம் ஆனது அனுக்கிரகத் தொழில்;
தாண்டவக் கூத்து தனி நின்ற தற்பரம்;
தாண்டவக் கூத்து தமனியம் தானே.

தாண்டவ மான தனியெழுத் தோரெழுத்
தாண்டவ மான தனுக்கிர கத்தொழில்
[1]தாண்டவக் கூத்துத் தனிநின்ற தற்பரஞ்
[2]தாண்டவக் கூத்துத் தமனியந் தானே. (5)

வேறு பாடம்: 1. தாண்டவங் (இ எ) I; தாண்டவத்துத்தனி நின்றவத் தற்பரன் (ஆ) I. 2. தாண்டவங் (எ) I.

கருத்து: தாண்டவத்தை நிகழ்த்துபவன், 'வேறாய்' நின்ற - அது என்ற பொருளாய் நின்ற - மேலானவனாகிய சிவன். அவன் அதை நிகழ்த்தும் இடம் பொன்னம்பலம் ஆகும். தாண்டவத்தின் மந்திர வடிவம் திருவைந்தெழுத்தாம். அது பிரணவத்தின் விரிவே. இத்தாண்டவத்தை, உயிர்கட்கு அனுக்கிரகம் செய்யும் பொருட்டுச் சிவன் நிகழ்த்துகின்றான்.

தத்பரம் - தத் என்பது அது எனப்பொருள்படும். அது, பரம்பொருள்.

தனியும் அவன்; உறவும் அவன்

880. தானே பரஞ்சுடர் தத்துவ மாய்நிற்குந்
தானே யகார [1]வுகாரம தாய்நிற்குந்
தானே பரஞ்சுடர் தத்துவக் கூத்துக்குத்
தானே தனக்குத் தராதலந் தானே. (6)

கருத்து: மேலான ஒளியாய்த் தனி நிற்கும் சிவனே, தத்துவங்கள் முப்பத்தாறிலும் 'ஒன்றாய்' நிற்கிறான். அத்தத்துவங்களுள் நாதமாக உள்ள ஓங்காரத்தைத் தியானித்து, யோகி உயிருணர்வால் தரிசிக்கும் சோதியும் அவனே. தத்துவங்களின் செயற்பாட்டுக்கு ஒளியை வழங்குபவனும், இயக்குபவனும் அவனே. அவ்வாறு அவற்றை இயக்கி அவன் ஆடும் கூத்துக்கு ஆதாரமாக - பற்றுக் கோடாக - உள்ளவனும் அவனே.

அவன் அருள்வெளியில் ஆடுகின்றான். அருள் அவனது குணமே யாதலின் அவனைத் 'தராதலம்' என்றார்.

ஐந்தெழுத்துப் பொருள்

881. **தராதல மூலைக்குத் தற்பரம் மாபரன்;**
தராதல வெப்பு 'நமவாசியா' னாம்;
தராதலம் சொல்லின் தான் 'நவாசிய' ஆகும்;
தராதலம் யோகம் தயாவாசி ஆமே.

தராதல [1]மூலைக்குத் தற்பர மாபரன்[2]
றராதல [3]வெப்பு [4]நமவாசி யானாந்
தராதலஞ் சொல்லிற்றா [5]னவாசி யவாகுந்
தராதலம் யோகந் தயாவாசி யாமே. (7)

வேறு பாடம்: 1. மேலைக்குத் (ஆ) I. 2. மான (ஆ) IV; மாவான் (இ) IV. 3. வெற்பு (அ); வெம்பு (ஒ) I. 4. நமசிவாயனாந் (உ) நமசிவ ாயனாற் (ஆ) II நமவாசியவாந் (எ) ; நமவாசியா நாதந் (ஒ) I. 5. னவாசியாகுந் (அ ஆ ஈ ஒ) I.

கருத்து: உடல் வாழ்க்கைக்கு ஆதாரமாகிய மூலாதாரத்தில், 'நமசிவய' என்ற திருவைந்தெழுத்து மந்திர வடிவாக உள்ள தற்பரன் ஆகிய பெரியோன், சுவாதிட்டானம், மணிபூரகம் என்ற ஆதாரங்கள் அடங்கிய அக்கினி மண்டலத்தில் 'நமவசிய' என்ற வடிவினனாம். அதற்கு மேல் உள்ள சூரிய மண்டலத்தில் 'நவசிய' என நிற்கின்றான். சகஸ்ராரத்தில் 'யவசி' என நிற்கின்றான்.

தராதலம் - ஆதாரம். 'தயாவாசி' என்பதில் தகரம் தகராகாயம் ஆகிய சகஸ்ராரம். சி - சிவம். வ - சத்தி. ய - ஆன்மா. தயாவாசியாமே என்பதில் கருணையோடு கூடிய மூச்சு எனப் பொருள் தோன்றும் நயம் காண்க.

உருவம் கடந்த பரம்

882. ஆமே சிவங்கள் அகார உகாரங்கள்;
ஆமே பரங்கள் அறியா இடம் என;
ஆமே திருக்கூத்து அடங்கிய சிற்பரம்
ஆமே சிவகதி; ஆனந்தம் ஆமே.

ஆமே சிவங்க ளகார வுகாரங்க
ளாமே பரங்க ளறியா விடமென
வாமே 'திருக்கூத் தடங்கிய சிற்பர
மாமே சிவகதி யானந்த மாமே. (8)

வேறு பாடம்: 1. திருக்கூத்துமடங்கிய (அ) I.

கருத்து: அகாரமும் உகாரமும் மயேச்சுரன் முதலிய சிவவடிவங்கள் ஆகும். ஆன்மா அவற்றின் நிலையைக் கடந்து, பரத்தை அடையும் போது, பரத்தை அன்றி எதையும் அறியாது. சிவத்தின் திருக்கூத்து ஞானமாத்திரமாக நடைபெறும் சிற்பரத்தைச் சேர்தலே சிவகதி சேர்தலாம். அதுவே பேரின்ப வீடு.

முதலில் இரண்டு, பிறகு ஒன்று

883. ஆனந்தம் மூன்றும் அறிவு இரண்டு, ஒன்று ஆகும்;
ஆனந்தம் 'சிவாய'; அறிவார் பலர் இல்லை;
ஆனந்தமோடும் அறிய வல்லார்கட்கு
ஆனந்தக் கூத்தாய் அகப்படுந்தானே.

ஆனந்த மூன்று மறிவிரண் டொன்றாகு
மானந்தஞ் சிவாய [1]மறிவார் பலரில்லை
யானந்த மோடு மறியவல் லார்கட்கு
வானந்தக் கூத்தா யகப்படுந் தானே. (9)

வேறு பாடம்: 1. அறிவார் (இ ஈ ஓ) I.

கருத்து: ஆனந்தம் நல்குபவையாம் அ, உ, ம என்ற முக்கூட்டாகிய பிரணவம், அனுபவ அறிவில் முதலில் சத்தி, சிவம் ஆக இரண்டாயும், பின்னர்ச் சிவமாக ஒன்றாயும் விளங்கும். அதனையே 'சிவாய' என்னும் மந்திரம் புலப்படுத்துகின்றது. இதனைப் பலரும் அறியார். இதனை ஞானானந்தமாகப் பெற வல்லவர்களுக்கு அவர்களின் அகத்தே, ஆனந்தக் கூத்தாக உணரப்படும். (கூத்து ஞானமாத்திரமாக நிகழ்தல் உணரப்படும்.)

உயர் அனுபவத்திற்குச் சாதனம்

884. படுவது இரண்டும் பலகலை வல்லார்;
படுவது ஓங்கார பஞ்சாக்கரங்கள்;
படுவது சங்காரதாண்டவப் பத்தி;
படுவது கோணம் பரந்திடும் வாறே.

படுவ திரண்டும் பலகலை வல்லார்
படுவது வோங்கார பஞ்சாக்க ரங்கள்
படுவது சங்கார தாண்டவப் பத்தி
படுவது கோணம் [1]பரந்திடும் வாறே. (10)

வேறு பாடம்: 1. பரந்திடுமாறே (அ) II.

கருத்து: அக்கினி, சூரியன், சந்திரன் இவற்றின் கலைகளைச் சந்திர மண்டலத்தில் ஒருங்கு இணைக்க வல்லவர் அங்கே அனுபவத்தில் பெறுபவை விந்து, நாதம் என்ற சத்தியும் சிவமும் ஆகும்.

இவ்வனுபவத்திற்குச் சாதனம் அசபை ஆகிய பிரணவமும் திருவைந் தெழுத்தும். திருவைந்தெழுத்தைச் சங்கார தாண்டவ முறையில் 'சிவாயநம' எனத் தியானிக்க வேண்டும். இவ்வனுபவம் சகஸ்ராரத்தில் உள்ள தாமரை மலரை விரியச் செய்து, வாய்ப்பது ஆகும். இது சிதாகாச அனுபவம் ஆதலின், வியாபகம் உணரப்படும்.

கோணம் - சகஸ்ராரம். வாறு - தன்மை.

திருமந்திரம் கூறும் சிவயோகம்

885. வாறே சதாசிவ மாறு இலா ஆகமம்;
வாறே சிவகதி வண்துறை; புல்நையும்;
வாறே திருக்கூத்து ஆகம வசனங்கள்;
வாறே பொது ஆகும் மன்றின் அமலமே.

வாறே சதாசிவ மாறிலா வாகமம்
வாறே சிவகதி [1]வண்டுறை புன்னையும்
வாறே திருக்கூத்து வாகம வசனங்கள்
வாறே பொதுவாகு [2]மன்றி னமலமே. (11)

வேறு பாடம்: 1. வந்துறை (ஆ) I. 2. மன்றம் பலமே (இ) I.

கருத்து: இத்தன்மைக்கு மாறுகோள் இன்றி, இச்சதாசிவ ஆகமம் கூறிச் செல்கின்றது. இவ்வனுபவத்தில், சிவகதி என்னும் வளம் பொருந்திய நீர்த்துறையில், ஆன்ம போதம் என்னும் புல் வாடும். இவ்வனுபவத்தின் முடிநிலையாகத் தரிசிப்பதே திருக்கூத்து. ஏனைய ஆகமங்களின் பிரமாணங்கள் இவ்வுண்மையை உறுதிப் படுத்தும். 'பொது' என்று கூறப்படும் அம்பலத்தின் தூய தன்மை இருந்தவாறு என்னே!

பொது அம்பலம் - உச்சந்தலை. மனிதர் யாவர்க்கும் உளதாதலின் அதனைப் 'பொது அம்பலம்' என்றார்.

தூய்மை யாகும்

886. அமலம் பதிபசு பாசங்கள் ஆகமம்;
அமலம் திரோதாயி ஆகும் ஆனந்தமாம்;
அமலம் சொல் ஆணவம் மாயை காமியம்
அமலம் திருக்கூத்து அங்கு ஆம் இடம் தானே.

[1]அமலம் [2]பதிபசு பாசங்க ளாகம[3]
[4]மமலந் திரோதாயி யாகுமா னந்தமா
[5]மமலஞ்சொல் லாணவ மாயை காமிய
[6]மமலந் திருக்கூத்தங் [7]காமிடந் தானே. (12)

வேறு பாடம்: 1. அம்பலம் (அ ஆ இ ஈ) I. 2. பசுபாசங்களாகம (இ) I. 3. ளாக (ஒ) I. 4. மம்பலந் (அ ஆ இ ஈ) I. 5. மம்பலஞ் (அ ஆ இ ஈ) I. 6. மம்பலந் (அ ஆ இ ஈ) I. 7. காடுமிடந் தானே (சண்)

கருத்து: யோகியின் சகஸ்ராரக் கமலத்தில் ஞானசதாசிவத் திருக்கூத்து நடைபெறின், ஆகமங்கள் வெவ்வேறு இயல்பின என்று கூறும் பதி, பசு, பாசம் என்ற மூன்றும் தூயனவாக விளங்கும். மறைப்புச் சத்தி ஆகிய திரோதாயி ஆனந்த சத்தியாவாள். ஆணவம், மாயை ஆகியவற்றின் செயல்களும் கான்மியமும் தூயனவாகும்.

சத்தியும் அவனே

887. தானே தனக்குத் [1]தலைவனு மாய்நிற்குந்
தானே தனக்குத் [2]தனமலை யாய்நிற்குந்
தானே தனக்குத் [3]தன்மய மாய்நிற்குந்
தானே தனக்குத் 4தலைவனு மாமே. (13)

வேறு பாடம்: 1. தலைவியு (விசு) 2. தண்மலை (இ ஈ) I; தன்மையதாய் (ஆ) III. 3. தத்துவ (ஆ) IV. 4. தலையவனாமே (ஈ) III.

கருத்து: ஒருவனே சத்தி, சிவம் என இருவராக உளன். ஆதலின் தானே தனக்குத் தலைவன். உயிர்களுடன் ‘உடனாய்க்’ கலந்து உள்ளான் ஆதலின், அவை செல்வங்களைத் துய்த்தல் அவன் துய்த்தலேயாம். அவை பேரின்பம் துய்த்தலும் அவன் துய்த்தலே யாம். அதே சமயம் அவன் ‘தன்மயம்’ ஆகவும் நிற்பான். அவனன்றித் தலைவர் இல்லை.

திருவடியே அருள் புரிந்தது

888. தலைவனு மாய்நின்ற தற்பரக் கூத்தனைத்
தலைவனு மாய்நின்ற சற்பாத் திரத்தைத்
தலைவனு மாய்நின்ற தாதவிழ் ஞானத்
தலைவனு மாய்நின்ற தாளிணை தானே. (14)

கருத்து: கூத்தாடுவோரில் தலைவனான தற்பரக் கூத்தன்; சற்பாத்திரங்களுள் சிறந்தவன்; ஞானத் தலைவன்; அவன் தாளிணையே எமக்கு இன்னருள் புரிந்தன.

கூத்தன், பாத்திரம் - இவை சாரியை பெற்றன.

மந்திரங்களின் உயிர்

889. இணை ஆர் திருவடி எட்டு-எழுத்து ஆகும்;
இணை ஆர் கழல் இணை ஈரைஞ்சு-அது ஆகும்;
இணை ஆர் கழல் இணை ஐம்பத்தொன்று ஆகும்;
இணை ஆர் கழல் இணை ஏழாயிரமே;

இணையார் திருவடி யெட்டெழுத் தாகு
மிணையார் [1]கழலிணை யீரைஞ்ச தாகு
மிணையார் கழலிணை யைம்பத்தொன் றாகு
மிணையார் கழலிணை யேழா யிரமே. (15)

வேறு பாடம்: 1. திருவடி (அ) III.

கருத்து: சத்தி - சிவத்தின் திருவடி 'அ' என்னும் எழுத்தாகும். உயிர் அங்குச் சேர்தலின், 'ய' என்னும் எழுத்தும் ஆகும். அதுவே ஐம்பத்தோர் எழுத்துக்கள் ஆகும். அதுவே ஏழாயிரம் மந்திரங்களின் பொருளாய் நிற்பதும் ஆகும்.

சத்தி - சிவத்தின் திருவடிகள் ஆதலின் 'இணையார் கழலிணை' என்றார்.

மந்திர வகை

890. ஏழாயிரமாய், இருபதாய், முப்பதாய்,
ஏழாயிரத்தும் எழுகோடி தான் ஆகி,
ஏழாயிரத்து உயிர் எண் இலா மந்திரம்
ஏழாய், இரண்டாய் இருக்கின்றவாறே.

ஏழா யிரமா யிருபதாய் முப்பதா
யேழா யிரத்து மெழுகோடி தானாகி
யேழா யிரத்துயி ரெண்ணிலா மந்திர
மேழா யிரண்டா யிருக்கின்ற வாறே. (16)

கருத்து: மந்திரத் தொகுதிகள் பல. அவை 7000; 20; 30 முதலியன. ஏழாயிரம் மந்திரங்களும், 7 வகையான முடிவுகளை (நம:, ஸ்வதா, ஸ்வாஹ, வஷட், வௌஷட், ஹூம், ஹூம்பட்) உடையவை. இந்த 7 முடிவுகளும் 'பல்லவங்கள்' எனப்படும். ஏழுகோடி மந்திரங்களும் உண்டு.

இரண்டு - ஹம், ஸம் என்ற மந்திரங்கள்.

மந்திரம் எல்லாம் சிவ வடிவம்

891. இருக்கின்ற மந்திர மேழா யிரமா
[1]மிருக்கின்ற மந்திர [2]மெத்திற மில்லை
யிருக்கின்ற மந்திரஞ் சிவன்றிரு மேனி
யிருக்கின்ற மந்திர மிவ்வண்ணந் தானே. (17)

வேறு பாடம்: 1. யிருக்கின்ற (ஆ) IV. 2. மித்திற (விசு)

கருத்து: ஏழாயிரம் மந்திரங்கள் உள்ளன. மந்திரங்கள் எல்லா வகையாலும் அமைந்துள்ளன. அவை எல்லாம் சிவனின் வடிவங்களே. எல்லாம் பிரணவ மந்திரத்தை அடிப்படையாக உடையவையே.

செயல் வடிவும் ஞான வடிவும்

892. தானே தனக்குத் தகுநட்டந் தானாகுந்
தானே யகார வுகாரம தாய்நிற்குந்
தானே யிறீங்கார [1]தத்துவக் கூத்துக்குத்
தானே யுலகிற் றனிநடந் தானே. (18)

வேறு பாடம்: 1. தத்துவமாய் நிற்குந் (இ) II.

கருத்து: உலகை அழித்து ஆடும் பேரூழிக்கூத்து, யார் தூண்டுதலும் இன்றி நடப்பது. மீண்டும் உலகைப் படைக்கும்போது, 'அ' எனச் சிவமாயும், 'உ' எனச் சத்தியாயும் தனி நிற்பான். மாயையினின்று தத்துவங்களைத் தோற்றுவிப்பதற்கு, "ஹ்ரீம்" என்ற வித்து மந்திரத்தை (பீஜம்) எழுப்பி, படைத்தல் முதலிய ஐந்தொழிற் கூத்தை இயற்றுகின்றான். இதே சமயம் 'வேறாக' நின்று ஞானமாநடராச மூர்த்தியாகவும் திகழ்வான். தனி நடம் - ஞான மாத்திரையாக ஆடும் கூத்து.

திருநடன வகை

893. நடம் இரண்டு; ஒன்றே நளினம்-அது ஆகும்;
நடம் இரண்டு; ஒன்றே நமன் செய்யும் கூத்து;
நடம் இரண்டு; ஒன்றே நகைசெய்யா மந்திரம்;
நடம் சிவலிங்கம்; நலம் செம்பு பொன்னே.

நடமிரண் டொன்றே நளினம தாகு
நடமிரண் டொன்றே [1]நமன்செய்யுங் கூத்து
நடமிரண் [2]டொன்றே [3]நகைசெய்யா மந்திர
நடஞ்சிவ லிங்க [4]நலஞ்செம்பு பொன்னே. (19)

வேறு பாடம்: 1. நயஞ்செய்யுங் (ஓ) IV. 2. டொந்தை நமஞ்செய்யு மந்திரம் (ஆ) IV + I. 3. நகைசெயு (விசு) (தி) 4. நடஞ்செம்பு (இ) I.

கருத்து: இதில் நடன வகைகளைத் தன்மை பற்றி இரண்டு இரண்டாகக் கூறினார். அற்புதம், ஆனந்தம் எனத் தாண்டவம் இரண்டு. அவற்றுள், ஆனந்த தாண்டவம் பேரின்பம் தருவது. பிரளயம், சங்காரம் எனத் தாண்டவம் இரண்டு வகை. அவற்றுள் பிரளயம் படைப்பது. சங்காரம் எமனுக்கு வேலை அளிப்பது. பொது, அனவரதம் எனத் தாண்டவம் இரண்டு வகை. அவற்றுள் பின்னது, உயிர்களுக்கு ஞானம் வழங்கி, பிறர் நகை செய்யா வண்ணம் காப்பது. இந்நடனங்கள் சிவலிங்க மூர்த்தி இயற்றுபவை. இவற்றின் பயன், செம்பைப் பொன்னாக்குவது போல, பெத்தான் மாக்களை முத்தான்மாக்கள் ஆக்குவது; பிறவியிலிருந்து நீக்கி வீடுபேறு அளிப்பது.

உயிரும் உடம்பும் எய்தும் பேறு

894. செம்பு பொன் ஆகும் சிவாயநம என்னில்;
செம்பு பொன்னாகத் திரண்டது சிற்பரம்;
செம்பு பொன் ஆகும் ஸ்ரீம் ஹ்ரீம் என;
செம்பு பொன் ஆன திருவம்பலமே.

செம்புபொன் னாகுஞ் சிவாய நமவென்னிற்
செம்புபொன் னாகத் திரண்டது சிற்பரஞ்
செம்புபொன் னாகுஞ் சிறீயும் கிறீயுமெனச்
செம்புபொன் னான திருவம் பலமே. (20)

கருத்து: திருவைந்தெழுத்தைச் செபித்து யோகம் செய்தால், பெத்தநிலை மாற, முத்திநிலை வரும். அவ்வாறு மாறிய நிலையில் அனுபவமாவது சத்தி-சிவம். 'ஶ்ரீம்' "ஹ்ரீம்" என்ற மந்திரங்களைச் செபித்தால் (இவற்றைப் பீஜங்களாகக் கொண்டு, 'ஓம் ஶ்ரீம் நமசிவாய' 'ஓம் ஹ்ரீம் நமசிவாய' எனச் செபித்தால்) உடம்பு பொன் ஆகும். (சுத்த உடம்பாகும் - தத்துவங்கள் சுத்ததத்துவ மாகும்) சிற்றம்பலத்தில் பருப்பொருட் காட்சியாக ஆடும் கூத்து, ஞானக் கூத்தின் வெளிநின்ற கோலமே. "உணர்வின் நேர்பெறவருஞ் சிவபோகத்தை ஒழிவின்றி உருவின்கண் அணையும் ஐம்பொறி அளவினும் எளிவர அருளினை" என்ற சேக்கிழார் வாக்குக் காண்க. (பெ. பு. திருஞான 161) ஶ்ரீம், ஹ்ரீம் என்பன சத்தி பீஜங்கள். முதல் 2 அடிகளால் உயிர் எய்தும் பேற்றைக் கூறி, 3 ஆம் அடியால் உடம்பு எய்தும் பேற்றைக் கூறினார்.

செம்பு (4 ஆம் அடி) - மலம். பொன்னாதல் - தூயதாதல்.

திருவம்பலச் சக்கரம்

895. திருவம்பலம் ஆகச் சீர்ச் சக்கரத்தைத்
திரு அம் பலம் ஆக ஈராறு கீறித்
திரு வம்பு அலம் ஆ இருபத்தஞ்சு ஆக்கித்
திருவம்பலம் ஆச் செபிக்கின்ற வாறே.

திருவம் பலமாகச் [1]சீர்ச்சக்க ரத்தைத்
திருவம் பலமாக வீராறு கீறித்
திருவம் [2]பலமா விருபத்தஞ் சாக்கித்
திருவம் பலமாச் செபிக்கின்ற வாறே. (21)

வேறு பாடம்: 1. திரிசக்க (ஆ) IV. 2. பலமாக (அனைத்துச் சுவடிகளும்) (சண்)

கருத்து: திருவம்பலச் சக்கரம் (யந்திரம்) அமைக்கும் முறை கூறினார். திருவம்பல யந்திரம் எழுதுவதற்கு, சத்தியின் அழகிய பலமாக, குறுக்கும் நெடுகிலும் ஆறு ஆறு கோடு வரைந்து, அவற்றுள் அமையும் 25 அறைகள் ஆக்கி, அவ்வறைகளில் திருவைந்தெழுத்தை எழுதி (பின்னே, "கூத்தே சிவாய" என்ற திருமந்திரப் பாடலைக் காண்க) மாறுபட்ட புதுமை ஒன்றும் இல்லாதவராக நின்று, சிவவடிவம் பெறும் பொருட்டு, அதனை அந்த முறையில் செபிக்க வேண்டும்.

புதுமை - மாயையுடன் சார்தல்.

குறிப்பு: 3 ஆம் அடி 2 ஆம் சீரும் 4 ஆம் அடி 2 ஆம் சீரும் "பலமாக" என அனைத்துச் சுவடிகளிலும் தளை சிதைய இருந்தமையால் தருமையாதீனப் பதிப்பின்படி பாடம் மேற்கொள்ளப்பட்டது.

திருவைந்தெழுத்துத் தியானம்

896. வாறே சிவாயநம, மசிவாயந
வாறே செபிக்கில், வரும் பேர் பிறப்பு இல்லை
வாறே அருளால் வளர்கூத்துக் காணலாம்
வாறே செபிக்கில் வரும் செம்பு பொன்னே.

வாறே [1]சிவாய நமம சிவாயந
வாறே செபிக்கில் [2]வரும்பேர் பிறப்பில்லை
வாறே யருளால் வளர்கூத்துக் காணலாம்
வாறே செபிக்கில் வருஞ்செம்பு பொன்னே. (22)

வேறு பாடம்: 1. சிவாயநம சிவாயநம (எ), சிவாயநம சிவாய (அ) II. 2. வருமப் (ஐ) IV.

கருத்து: ஈற்றெழுத்தை முதல் எழுத்தாகக் கொண்டு திருப்பும் முறையில், 5 முறை திருவைந்தெழுத்தை (1) சிவாயநம (5) மசிவாயந (2) நமசிவாய (3) யநமசிவா (4) வாயநமசி என்று செபித்தால் - மூலா தாரத்தில் வைத்துத் தியானித்தால், வந்து நீங்கும் பிறப்பு இல்லாமற் போகும். அருளால் திருவம்பலக் கூத்தைக் காணலாம். உயிர் மலம் நீங்கப் பெறும். (இங்கு உள்ள எண்கள் செபிக்கும் வரிசைமுறை எண்கள். ஆசிரியர் பின்னும் விளக்குவார்)

உணர்வு பெருக வேண்டும்

897. பொன் ஆன மந்திரம் புகலவும் ஒண்ணாது
பொன் ஆன மந்திரம் பொறி கிஞ்சுகத்து ஆகும்;
பொன் ஆன மந்திரம் புகை உண்டு, பூரிக்கின்
பொன் ஆகும் வல்லோர்க்கு உடம்பு பொற்பாதமே.

பொன்னான மந்திரம் [1]புகலவு மொண்ணாது
பொன்னான மந்திரம் பொறிகிஞ் சுகத்தாகும்[2]
பொன்னான மந்திரம் புகையுண்டு பூரிக்கிற்
பொன்னாகும் வல்லோர்க் குடம்புபொற் பாதமே. (23)

வேறு பாடம்: 1. புகலவே (ஆ) I. 2. சித்தாகும் (உ) I.

கருத்து: திருவைந்தெழுத்துப் பொன் போன்றது. அதன் பெருமை சொல்லில் அடங்காது. அதனை உதட்டினுள் அடக்கியே செபிக்க வேண்டும். அதனைத் தியானிக்கும் பொழுது, தலையில் அக்கினி திசையிலிருந்து ஈசானிய திசையில் உயிருணர்வு பாய்ந்து பெருகினால், இதனைச் செய்ய வல்லவர்க்கு உடம்பு பொன் ஆகும். இது பொன்னடிகளின் அருள்.

பயன்கள்

898. பொற்பாதங் காணலாம் புத்திர ருண்டாகும்
பொற்பதத் தாணையே செம்புபொன் னாயிடும்
பொற்பாதங் காணத் திருமேனி யாயிடும்
[1]பொற்பாத நன்னடஞ் சிந்தனை சொல்லுமே. (24)

வேறு பாடம்: 1. பொற்பாதந் தன்னடம் (இ ஈ) I.

கருத்து: திருவைந்தெழுத்தைத் தியானித்தால் சிவன் பொன்னடி காணலாம். புத்திரப்பேறு உண்டாகும். ஆன்மா மலநீக்கம் பெறும். சாரூப பதவி எய்தலாம். இதற்குப் பொன்னடியின் மீது ஆணை. ஆகவே திருவம்பலக் கூத்தைப் பற்றியே சிந்தனையும் சொல்லும் அமையும்.

புத்திரர் என்பது பேற்றைக்குறித்தது. இங்ஙனம் கொள்ளாக்கால் இலக்கண வழுவாம்.

பயன்கள் - 2

899. சொல்லு மொருகூட்டிற் புக்குச் சுகிக்கலா
நல்ல மடவார் நயந்துட னேவருஞ்
சொல்லிலும் பாசச் சுடர்ப்பாம்பு நீங்கிடுஞ்
சொல்லுந் திருக்கூத்தின் [1]சூக்குமந் தானே. (25)

வேறு பாடம்: 1. சூக்கமு (சண்)

கருத்து: பிறிதோர் உடம்பில் புகுந்து இன்புறலாம். அழகிய பெண் விரும்புவாள். இந்த யோகி சொன்னாலே ஆணவம் நீங்கும். இவை யாவும் திருக்கூத்தினது பெருமையின் நுட்பம் ஆகும்.

வினை அழியும்

900. சூக்குமம் எண்ணாயிரம் செபித்தாலும், மேல்
சூக்குமமான வழியிடைக் காணலாம்;
சூக்குமமான வினையைக் கெடுக்கலாம்
சூக்குமமான சிவனது ஆனந்தமே.

சூக்கும மெண்ணா யிரஞ்செபித் தாலுமேற்
சூக்கும மான வழியிடைக் காணலாஞ்
சூக்கும மான வினையைக் கெடுக்கலாஞ்
சூக்கும மான [1]சிவனதா னந்தமே. (26)

வேறு பாடம்: 1. சிவசுகானந்தமே (ஒ)

கருத்து: சூக்கும பஞ்சாக்கரம் எண்ணாயிரம் முறை செபித்தால், உச்சந்தலையில் உள்ள சகஸ்ராரத்தைக் காணலாம். சஞ்சிதவினை, ஆகாமிய வினை - ஆகியவற்றை அழிக்கலாம். அதற்குப் பின் பேரின்பம் பெறலாம்.

விதை யெழுத்துகள்

901. ஆனந்தம் என்று என்று அறைந்த இடம் ஆனந்தம்;
ஆனந்தம் ஆ ஈ ஊ ஏ ஓம் என்ற ஐந்து இடம்;
ஆனந்தம் அஞ்சும் ஆயிடும் ஆனந்தம்;
ஆனந்தம் அம்-ஹ்ரீம்-ஹம்-க்ஷம்-ஹாம் ஆமே.

ஆனந்த [1]மென்றென் றறைந்திட மானந்த[2]
மானந்த மாயீயூ யேயோமென் றைந்திட
மானந்த [3]மஞ்சு மாயிடு மானந்த
மானந்த மம்மிரீ மம்க்ஷமா மாமே. (27)

வேறு பாடம்: 1. மொன்றென் (ஒ); ஆனந்தம் ஒன்றென் றறிந்திட (த);
2. வானந்த (திரு) 3. ஆனந்த மஞ்சும தாயிடு (ஒ)

கருத்து: ஆனந்தம் என அருளாளர் பலரும் கூறிய வீடு பேறு ஆனந்தமே. அதைப் பெறுவதற்குச் சாதனமான இடங்கள் நம் உடம்பில் உள்ள ஐம்பூதங்கள் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன. அவற்றைக் குறிக்கும் குறியீடுகள் முறையே அ இ உ எ ஒ என்பவை. அவற்றில் இயங்கும் சத்திகளைக் குறிக்க, முறையே ஆ,

ஈ, ஊ, ஏ, ஓ என்ற குறியீடுகள் வழங்கும். இந்தச் சத்திகளை ஒருங்கே இணைத்தல் ஆனந்தம். இந்தச் சத்திகளுக்குரிய வித்து எழுத்துக்கள் (பீஜ மந்திரங்கள்) முறையே அம், ஹ்ரீம், ஹம், க்ஷம், ஹாம் என்பவை. இவற்றோடு திருவைந்தெழுத்தைத் தனித்தனி சபிப்பது ஆனந்தம்.

மேற்கண்ட விளக்கத்தின் படம் வருமாறு:-

ஐம்பூதம்	ஐந்தெழுத்து	குறியீடு	சத்திகளின் குறியீடு	உடம்பில் உள்ள இடம்
ஆகாயம்	ய	ஓ	ஓ	புருவமத்தி
வாயு	வா	எ	ஏ	கழுத்து
தீ	சி	உ	ஊ	இருதயம்
நீர்	ம	இ	ஈ	தொப்பூள்
நிலம்	ந	அ	ஆ	மூலாதாரம்

உடம்பில் திருக்கூத்து

902. மேனி இரண்டும் விலங்காமல் மேற்கொள்ள
மேனி இரண்டும் மிகார், அவிகாரி ஆம்
மேனி இரண்டும் ஊ ஆ ஈ ஏ ஓ - என்று
மேனி இரண்டும் ஈ ஓ ஊ ஆ ஏ - கூத்தே.

மேனி யிரண்டும் [1]விலங்காமன் மேற்கொள்ள
மேனி [2]யிரண்டு [3]மிகாரவி காரியா
மேனி [4]யிரண்டுமூ வாயியே யோவென்று[5]
மேனி யிரண்டுமீ யோவூவா வேகூத்தே. (28)

வேறு பாடம்: 1. விளங்காமல் (எ) IV. 2. யிரண்டுடு (சண்) 3. மிக்கார் (எ) IV. 4. யிரண்டுமும் ஆம் இ எ (சண்) 5. யோ வென்னு (த)

கருத்து: தூல உடம்பு, சூக்கும உடம்பு - இவ்விரண்டும் ஒன்றை ஒன்று தடுக்காமல், "திருவைந்தெழுத்து - யோக" சாதனையை மேற்கொள்ள, அவ்வுடம்புகள் ஒன்றை ஒன்று மேற்படாமல் விகாரம் இன்றி நிற்கும். இவ்விரண்டு உடம்பிலும் ஊ, ஆ, ஈ, ஏ, ஓ, என்ற சத்திகளை, அவற்றுக்கு உரிய பீஜமந்திரங்களால் திருவைந்தெழுத்தோடு சேர்த்தால், அச்சத்திகள் இவ்விரண்டு உடம்புகளிலும் செயற்படுவர். பிறகு, இரண்டு உடம்பிலும் சத்திகள் ஈ, ஓ, ஊ, ஆ, ஏ என்று மாறி நிற்க, இறைவனின் திருக்கூத்து அங்கு நிகழும்.

சக்கர அமைப்பு

903. கூத்தே சிவாய நமமசி வாயிடுங்
கூத்தே யாயீயூ யேயோ [3]நமசிவாய வாயிடுங்
கூத்தே [4]யோவாவீ யூயே [5]யநமசிவா வாயிடுங்
கூத்தே [6]யேயோவா யீயூவா யநமசி கோளொன்றுமாறே
(29)

வேறு பாடம்: 1. நமசி (அ) 2. ஈயூவா வேயோம் (இ ஈ எ ஒ) 3. சிவாயநம (இ ஈ எ ஒ) 4. யீயூவாவேயோம் (இ ஈ எ ஒ) 5. சிவாயநம (இ ஈ எ ஒ); நமசிவாயநம (உ) 6. யூயீவா வேயோம் (எ) ஈயூவோவா (ஒ), ஈயூ வோவாவே (இ) யீயூவாவே (ஈ) யீயாவே (உ) 7. நமசிவாய (இ ஈ உ எ ஒ)

கருத்து: திருவம்பலச்சக்கரம் 25 அறைகள் கொண்டதாக அமையும் என முன்பு ("திருவம்பல" என்ற பாடல்) கூறிய ஆசிரியர், இப்பாடலில் அவ்விருபத்தைந்து அறைகளில் திருவைந்தெழுத்து மந்திரம் சிவாயநம எனத் தொடங்கி, 5 அடுக்காக அமையும் முறையைக் கூறுகின்றார்.

அதன்படி இச்சக்கரம்,

சி	வா	ய	ந	ம
ந	ம	சி	வா	ய
ய	ந	ம	சி	வா
வா	ய	ந	ம	சி
ம	சி	வா	ய	ந

என அமையும். சிவாயநம என்பதற்கு ஐம்பூதசத்திக் குறியீடுகள் 'ஊ ஏ ஓ ஆ ஈ'; மசிவாயந என்பதற்கு - ஈ ஊ ஏ ஓ ஆ எனக் கொள்ளக் கிடக்கின்றது. இதற்கு இப்பாடலுடன், "இருந்த இவ்வட்டம் இருமூன்றிரேகை"; "நாடும் பிரணவம்" "ஆயும் சிவாய" என்னும் பாடல்களும் சான்றாகும். திருமூலர் கருத்திற்கு ஏற்ப இச்சக்கரத்தை வெளியிட்டவர் கோட்டையூர் அ. அ. ராம. சுப்பையா செட்டியார் (தில்லைத் திருவம்பலச்சக்கரம், 1969). சுவடிகள் இப்பாட்டுக்குப் பலவாறான பாடவேறுபாடுகளைக் காட்டுகின்றன. பதிப்புகளும் அவ்வாறே. சுப்பையா செட்டியார் வெளியிட்ட சக்கர அமைப்புக்குத் தக்கவாறு, இப்பதிப்பில் பாடம் தேரப்பட்டது. இந்த அமைப்பினை ஒப்ப முதல் 3 அடிகளும் அமைந்த 'ஆ' குடும்பச் சுவடிகளின் (ஆ - ஐ) பாடங்கள் அப்படியே மேற்கொள்ளப்பட்டன. 4ஆம் அடிக்கு அவை காட்டும் பாடம் சிறிதே திருத்தப்பட்டு இச்சக்கர அமைப்பிற்கு ஏற்ப, இப்பதிப்பில் தரப்படுகின்றது. ஆ ஈ ஊ முதலிய எழுத்துக்கட்கு, "ஆனந்தம்" என்ற பாட்டின் அடிக் குறிப்பில் விளக்கம் காண்க. திருமந்திர யாப்பிற்கு இப்பாடல் விதிவிலக்கு.

உடம்பில் நடப்பவை

904. ஒன்றில் இரண்டு ஆட, ஓரொன்று உடன் ஆட
ஒன்றினில் மூன்று ஆட, ஓரேழும் ஒத்துஆட,
ஒன்றினில் நால் ஆட, ஓர் ஒன்பதும் ஆட
மன்றினில் ஆடினான் மாணிக்கக் கூத்தே

ஒன்றி லிரண்டாட வோரொன் றுடனாட
[2]வொன்றினின் மூன்றாட வோரேழு மொத்தாட
[3]வொன்றினி னாலாட [4]வோரொன் பதுமாட
மன்றினி லாடினான் மாணிக்கக் கூத்தே. (30)

வேறு பாடம்: 1. ஒன்றிரண்டாட (எ) II; ஒன்றிரண்டா டலரொன்று (ஐ) II. 2. வொன்றில் (ஆ ஈ) I. 3. வொன்றினிலாட (ஆ) II; வொன்றினாலாட (ஈ எ) II. 4. வோரோன்ப துடனாட (த), வோரொன்பது முடனாட (சண்)

கருத்து: ஆன்ம உணர்வு விளங்கும் மன்றாகிய சகஸ்ராரத்தில், சிதாகாய வெளியில் சத்தி, சிவம் - இரண்டும் புணர்ந்து விளங்க, அதற்கு முன்னர், சத்தி முதலிலும், சிவம் அடுத்தும் உயிருணர்வில் நடமாடித் தோன்ற, அதற்கு முன்னர் சந்திர மண்டலம் ஆகிய ஒன்றில் (நெற்றி, தலை) சந்திரன், சூரியன், அக்கினி என்ற மூன்று ஒளிகளும் முக்கூட்டு ஒளியாக விளங்க, மூலாதாரம் முதல் சகஸ்ராரம் வரை ஏழு ஆதாரங்களும் (ஆதாரம் ஆறும் நிராதாரம்

ஒன்றும்) ஒருங்கே ஒளிபெற (புது உயிர், புதுமலர்ச்சிபெற) உயிருணர்வின் காட்சியில், சிவம் என்ற ஒன்றிலேயே சிவம், சத்தி, நாதம், விந்து என்ற நான்கு தத்துவங்களும் (இவற்றுள் சிவம் பர நாதம் ஆகும்; சத்தி பரவிந்து ஆகும். அவ்விரண்டும் தத்துவம் கடந்தவை) விளங்க, இந்நான்குடன் சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், திருமால், பிரமன் என்ற ஐந்தும் சேர்ந்து ஒன்பதும் விளங்க, இறைவன் இரத்தின மேனியனாகக் கூத்தினை நிகழ்த்தினான். (சிதம்பரத்தில் மாணிக்கக் கல்லில் நடராச வடிவம் இருப்பது அறிக. சகஸ்ராரத்தில் நடனமாடிய இறையொளி செவ்வண்ணமாக இருந்தமையால் இவ்வாறு கூறினார் போலும்.)

58. திருவம்பலச் சக்கரம்

ஒருவகைச் சக்கரம்

905. இருந்த இவ் வட்டங்கள் ஈராறு இரேகை;
இருந்த இரேகைமேல் ஈராறு இருத்தி,
இருந்த மனைகளும் ஈராறு பத்து ஒன்று;
இருந்த மனை ஒன்றில் எய்துவன் தானே.

இருந்தவிவ் வட்டங்க ளீராறி ரேகை
யிருந்த விரேகைமே லீரா றிருத்தி
யிருந்த மனைகளு மீராறு பத்தொன்[1]
றிருந்த மனையொன்றி லெய்துவன் றானே. (1)

வேறு பாடம்: 1. தோன்றி (ஆ) II.

கருத்து: முன்பு கூறிய திருவம்பலச் சக்கரத்தில் 25 அறைகள், 12 கோடுகளால் அமைக்கப்பட்டன. இந்த 12 கோடுகளுடன் மேலும் 12 கோடுகள் வரைய அவற்றினுள் அமையும் 121 அறைகளுள், நடுவில் உள்ள ஓர் அறையில் 'சி' என்னும் எழுத்தாகச் சிவன் வீற்றிருப்பான்.

சிவன் இருக்கை

906. தான் ஒன்றி வாழ் இடம் தன் எழுத்தே ஆகும்;
தான் ஒன்றும் அந் நான்கும் தன் பேர் எழுத்து ஆகும்;
தான் ஒன்றும் நாற்கோணம் தன் ஐந்தெழுத்து ஆகும்;
தான் ஒன்றிலே ஒன்றும் அவ் அரன் தானே.

தானொன்றி வாழிடந் தன்னெழுத் தேயாகுந்
தானொன்று மந்நான்குந் தன்பே ரெழுத்தாகுந்
தானொன்று [1]நாற்கோணந் தன்னைந் தெழுத்தாகுந்
தானொன்றி லேயொன்று மவ்வரன் றானே. (2)

வேறு பாடம்: 1. கோணந் (சண்)

கருத்து: சிவவெருமான் வாழும் எழுத்து 'சி'. அது உள்ளிட்ட ஐந்து எழுத்துக்களும் அவன் திருப்பெயர் ஆகும். நான்கு கோணத்திலும் சூழ உள்ளவை அத்திருவைந்தெழுத்தாகும். இவ்வறைகளுள் நடு வறையில் 'சி' - என்ற எழுத்தாக அவன் வீற்றிருப்பான். இதனைக் காட்டும் சக்கரம் இணைக்கப்பட்டுள்ளது.

திருவம்பலச் சக்கரம் - 1

சி	வ	ய	ந	ம	சி	வ	ய	ந	ம	சி	சி	-	9
ம	ம	ம	ம	ம	ம	ம	ம	ம	ம	வ	வ	-	16
ந	ம	ந	ந	ந	ந	ந	ந	ந	ம	ய	ய	-	24
ய	ம	ந	ய	ய	ய	ய	ய	ந	ம	ந	ந	-	32
வ	ம	ந	ய	வ	வ	வ	ய	ந	ம	ம	ம	-	40
சி	ம	ந	ய	வ	சி	வ	ய	ந	ம	சி	மொத்தம் அறை		121
ம	ம	ந	ய	வ	வ	வ	ய	ந	ம	வ	சிகரம் நடுவிலும் நான்கு திசையிலும் நான்கு கோணங்களிலும் உள்ளது		
ந	ம	ந	ய	ய	ய	ய	ய	ந	ம	ய			
ய	ம	ந	ந	ந	ந	ந	ந	ந	ம	ந			
வ	ம	ம	ம	ம	ம	ம	ம	ம	ம	ம			
சி	ம	ந	ய	வ	சி	ம	ந	ய	வ	சி			

சிவன் திருப்பெயர்

907. அரகர என்ன அரியது ஒன்று இல்லை;
அரகர என்ன அறிகிலர் மாந்தர்;
அரகர என்ன அமரரும் ஆவர்;
அரகர என்ன அறும் பிறப்பு அன்றே?

அரகர வென்ன வரியதொன் றில்லை
யரகர வென்ன வறிகிலர் மாந்த
ரரகர வென்ன வமரரு மாவ
ரரகர வென்ன வறும்பிறப் பன்றே. (3)

கருத்து: வெளிப்படை.

சிவ-சத்தி சக்கரம்

908. எட்டுநிலை உள எங்கோன் இருப்பிடம்;
எட்டினில் ஒன்றும் இருமூன்றும் ஈரேழும்
ஒட்டிய விந்துவும் நாதமும் ஓங்கிட,
பட்டது மந்திரம் பால்மொழிபாலே.

எட்டு [1]நிலையுள வெங்கோ னிருப்பிட
[2]மெட்டினி லொன்று மிருமூன்று மீரேழு
[3]மொட்டிய விந்துவு நாதமு மோங்கிடப்
பட்டது மந்திரம் பான்மொழி பாலே[4]. (4)

வேறு பாடம்: 1. எட்டு நிலையினெங்கோ (ஓ) II. 2. மொட்டினி (விசு) 3. மொட்டியல் (சண்). 4. யாலே (சண்)

கருத்து: "தானொன்றி" என்னும் பாடலில் காட்டப்பட்ட சக்கரத்தில், சிவபெருமானது இருப்பிடம், நான்கு திசையும், நான்கு கோணமும் ஆக எட்டாகும். அந்த ஒவ்வொன்றையும் தியானிக்கும் பொழுது, அதன் முன்னால், 'ஓம் ஹம், உற: ஹூம், ஸௌ:' என்ற 4 பீஜ எழுத்துக்களையும் சேர்த்துத் தியானித்தால், இந்தச் சக்கரம் 'சிவசத்தி' சக்கரமாய்விடும்.

ஒன்று - பிரணவம். இருமூன்று - ஆறாவது எழுத்தாகிய 'ஊ' சேர்ந்த 'ஹூம்' என்ற பீஜம். ஈரேழு - 14 ஆவது எழுத்தாகிய 'ஔ' சேர்ந்த 'ஸௌ:' என்ற பீஜம். விந்துவின் பீஜம் ஹம். நாதத்தின் பீஜம் ஹ:

சத்தி பீஜத்துடன் திருவைந்தெழுத்து

**909. மட்டு அவிழ் தாமரை மாது நல்லாளுடன்
ஒட்டி இருந்த உபாயம் அறிகிலர்
விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்
கட்ட வல்லார் உயிர் காக்க வல்லாரே.**

மட்டவிழ் தாமரை மாதுநல் லாளுட
னொட்டி யிருந்த வுபாய மறிகிலர்
விட்ட வெழுத்தை விடாத வெழுத்துடன்
கட்டவல் லாருயிர் [1]காக்கவல் லாரே. (5)

வேறு பாடம்: 1. காட்டவல் (சண்)

கருத்து: திருவம்பலச் சக்கரத்தின் திருவைந்தெழுத்தை அசபையாகத் தியானித்து யோகசாதனை பயிலுதலின் பயன் கூறுகிறார். சகஸ்ராரத் தாமரையில் அமுதம் பொழிய, அருட் சத்தியுடன் சிவபிரான் புணர்ந்து வீற்றிருந்த காட்சியைக் காணும் வழியைப் பலரும் அறியார். மந்திரம் ஆகிய திருவைந்தெழுத்தை, சிவபிரானை என்றும் பிரியாத சத்தியின் பீசங்களுடன் சேர்த்து, அசபையாகத் தியானித்து மூச்சினைக் கட்டி யோகம் பயின்றால், உயிரை அருள்வெளியில் நிறுத்தி உடம்பையும் பாதுகாக்கலாம். உடம்பு ஒளியுடம்பு ஆகி நிலைத்து நிற்கும்.

விட்ட எழுத்து - திருவைந்தெழுத்து. விடாத எழுத்து - சத்தியின் பீஜம்.

தூல - சூக்கும மந்திரங்கள்

**910. ஆலயம் ஆக அமர்ந்த பஞ்சாக்கரம்
ஆலயம் ஆக அமர்ந்த இத்தூலம் போய்,
ஆலயம் ஆக அறிகின்ற சூக்குமம்
ஆலயம் ஆக அமர்ந்திருந்தானே.**

ஆலய மாக வமர்ந்தபஞ் சாக்கர
மால்ய மாக வமர்ந்தவித் தூலம்போ[1]
[2]யாலய மாக [3]வறிகின்ற சூக்கும
மாலய மாக வமர்ந்திருந் தானே. (6)

வேறு பாடம்: 1. தூலம்பே (எ) I. 2. ராலய (எ); மாலய (இ) I. 3. வருகின்ற (எ) I.

கருத்து: சிவன் திருவைந்தெழுத்தைத் தனது மந்திரக் கோயிலாக உடையவன். மக்கள் உணர்வில் முதலில், தூலபஞ்சாக்கரம் ஆகிய 'நமசிவாய' என்பதே அவனது ஆலயமாக உணரப்படும். பின்னர், அவர்கள் பதிஞானம் பெற்று, அதனால் சிவனது ஆலயம் என அறியும் சூக்கும பஞ்சாக்கரத்தைத் தியானம் செய்யும் பொழுது, அந்த யோகம் முதிர்ந்து, சிவன் அதனையே ஆலயமாகக் கொண்டு, அவர்களது உயிர் உணர்வுக்குப் பரானுபவமாக விளங்குவான். தூலபஞ்சாக்கரம் உடம்பில் மூலாதாரத்தை இடமாகக் கொண்டது. சூக்கும பஞ்சாக்கரம் சகஸ்ராரத்தின் மேற்காணும் ஒளியை மூலமாகக் கொண்டது.

"நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன் தேனாய், இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான் தானே வந்து, எனதுள்ளம் புகுந்து, அடியேற்கு அருள் செய்தான் ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே" என்று மணிவாசகர் பாடுவதை (திருவா. திருவேசறவு, 10) இப்பாடலுடன் ஒப்புநோக்குக. அவர் இறைவனை 'மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடராகக் கண்டு, அந்த 'ஒளி - அனுபவத்தில்' சூக்கும பஞ்சாக்கர அனுபவமும் பெற்றார் என்றும், அப்பரானுபவமே தேனாய், அமுதமாய்த் தித்தித்தது என்றும் கருதலாம்.

திருவம்பலச் சக்கரம் - மற்றொரு வகை

911. இருந்த இவ்வட்டம், இரு மூன்று இரேகை
இருந்த அதனுள் இரேகை ஐந்தாக,
இருந்த அறைகள் இருபத்தைஞ்சு ஆக,
இருந்த அறை ஒன்றில் எய்தும் மகாரமே.

[1]இருந்தவிவ் வட்ட மிருமூன்றி ரேகை
யிருந்த வதனு ளிரேகையைந் தாக[2]
விருந்த வறைக ளிருபத்தைஞ் சாக
விருந்த வறையொன்றி லெய்து மகாரமே. (7)


வேறு பாடம்: 1. இருந்த விவ்விட (அ) IV. 2. யைந்தாக (ஓ) II.

கருத்து: 25 அறைகள் கொண்ட சக்கரத்தில் நடு அறையில் திருவைந்தெழுத்தின் மகரம் அமையும்.

இச்சக்கரத்தின் இரேகைகள் (படுக்கை வசமாகவும், நின்ற வசமாகவும் உள்ள கோடுகள்) தனித்தனி 6 ஆகும். இவற்றால் 5

திருவம்பலச் சக்கரம் - 2

(911-912 ஆம் பாடல்களில் குறிப்பிடப்படுவது)



குறிப்பு: இப்படத்தை வெளியிட இசைவளித்த கோட்டையூர் திரு. அ. அ. ராம.சுப்பையா செட்டியாருக்கு நன்றி

பிரிவான 25 அறைகள் உண்டாகின்றன. அவற்றுள் ஒன்றில் (நடுவறையில்) மகாரம் (சூக்குமத் திருவைந்தெழுத்தில் ஐந்தாவது எழுத்து) அமையும்.

இவ்வாறு மகாரம் நடுவே அமையும் என்பது அடுத்த பாடலால் தெளிவுறும்.

குறிப்பு: இச்சக்கர அமைப்பை வெளியிட்டவர் கோட்டையூர் திரு. அ. அ. ராம. சுப்பையா செட்டியார். அவர் வெளியிட்ட முழுப்படம் நல்லிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது. அந்தப் படத்திற்கு ஆதாரம் இந்தத் திருமந்திரப் பாடலும் அடுத்ததும் இதனை அடுத்ததும் ஆகும். அப்படத்திற்கு, 914, 915, 916, 917, 918, 919 ஆகிய பாடல்களும் உதவியுள்ளன. இப்பாடலில் "இருந்த அறை" என்பது நடுவறையே என்பது திரு. செட்டியாரின் கருத்து.

மந்திரவரிசையின் பொருட் சிறப்பு

912. மகாரம் நடுவே; வளைந்திடும் சத்தி
ஓகாரம் வளைத்திட்டு, 'ம' - பிளந்து ஏற்றி,
யகாரம் தலையாய் இருகண் சிகாரமாய்
நகார வகாரம் நற்காலும் நாடுமே.

மகார [1]நடுவே [2]வளைந்திடுஞ் சத்தி
[3]யொகாரம் [4]வளைத்திட்டு [5]மப்பிளந் தேற்றி
[6]யகாரந் தலையா யிருகண் சிகாரமாய்
நகார [7]வகார நற்காலு நாடுமே. (8)

வேறு பாடம்: 1. நடுவாய் (ஆ) IV. 2. வளைத்திடுஞ் (எ) I; வளைந்தது (ஆ) III. 3. யுகாரம் (இ ஈ) I. 4. வளைத்திட்டும் பிளந் (சண்) (விசு) (சைவ) வளையிட் (ஆ) II. 5. டுட்பிளந் (இ ஈ) II; டுடல்பிளந் (ஆ) II; வளைத்திட்டுப் பிளந் (த) 6. அகாரம் (த) (வ) 7. வகாரநற் காலது (எ) II.

கருத்து: இப்பாடலில் உள்ள பல சொற்கள் இருபொருள்பட அமைந்துள்ளன. "ய ந ம சி வ" ; ய சி ம ந வ என்னும் மந்திர வரிசைகளில் மகரம் நடுவே உள்ளது. மனித உடம்பில் தொப்பூள் நடுவே உள்ளது. எனவே, 'ம' என்ற எழுத்துத் தொப்பூளைக் குறிக்கும். 'ம' எழுத்து மலசத்தியையும் குறிக்கும். தொப்பூளில் சுருண்டு மூலாதாரம் வரை கிடக்கும் குண்டலிசத்தியைப் பிரணவ மந்திரத்தால் முற்றுகையிட்டு எழுப்பி, மல சத்தியை உடைத்துக் குண்டலியையும் மூலக்கனலையும் புருவமத்திக்கு ஏற்றி, ய - எழுத்துக் குறிக்கும் உச்சந்தலை ஆகாயமாக விளங்க; சி - எழுத்துக்

குறிக்கும் இரண்டு கண்களும் ஒளியை (தீயை) வெளிப்படுத்த, 'ந' எழுத்தால் சுட்டப்படும் மூலாதாரத்தில் கீழ் நோக்கும் காற்று, சுழுமுனையில் ஏறி, வா - எழுத்தால் சுட்டப்படும் கழுத்தை - அங்குள்ள விசுத்தி என்ற ஆதாரத்தை - அடைந்து, நல்ல காற்றாக இயங்கும். இச்சக்கரத்தில் நின்ற வசமான மூன்றாவது வரிசையில் ய - தலை, முதல் எழுத்து; ஆகாயம். சி - கண்; ஒளி. ந, வ - இரண்டு கால்கள். அபானன் உதானன் ஆதல் என்பது 'நற்கால்' எனப்பட்டது. திருவைந்தெழுத்து, முன்பு கூறியது போலவே ஐம்பூதங்களையும் குறிக்கும் எழுத்துக்களாகவும் ஆணவமலம், திரோதான சத்தி, அருட்சத்தி, சிவம், ஆன்மா ஆகியவற்றைக் குறிக்கும் எழுத்துக்களாகவும், உள்ளமையை இங்கும் கூறினார். "கூத்தே சிவாய" என்னும் பாட்டில் கூறப்பட்ட தியான எழுத்துவரிசையைச் சிறிது மாற்றி இங்கே கூறியுள்ளார். யோகத்தில் ஒவ்வொரு செயலையும் மந்திர எழுத்தைத் துணைக்கொண்டு செய்யும் முறையை விளக்கியுள்ளமை காண்க.

911 ஆம் பாடலிற் சுட்டிய மந்திர வரிசையில், நின்ற நிலையில் உள்ள 3 ஆவது வரிசை மனித உருவம் போன்றது. ய - தலை; சி - கண்கள்; மகரம் தொப்பூள்; ந வா - கால்கள். தொப்பூழிடத்தில் பிரணவ மந்திரத் தியானம் செய்வதால், அம்மந்திரத்தில் சிவமாக உள்ள மகாரம், மலசத்தியை உடைக்கும். இம் மலசத்தி திருவைந்தெழுத்தில் 'ம' என்ற எழுத்தினால் குறிக்கப்படுவது. மலசத்தி தன் செயல் அற்று, சிவமே ஆகி நிற்கும்.

"தானொன்றி வாழிடம்" என்ற பாடலில் (906) சக்கரத்தின் நடுவில் 'சி' என்ற எழுத்து (சிவனைக் குறிப்பது) இடம் பெறுதலைக் கூறினார். இங்கோ, 'ம' என்ற எழுத்துச் சிவமாகிச் சக்கரத்தின் நடுவே இடம் பெறுதலைக் கூறுகின்றார். பிரணவமும் திருவைந்தெழுத்தும் ஒன்றே என்பது இதனால் தெளிவுறும்.

பிரணவமும் ஐந்தெழுத்தும்

913. நாடும் பிரணவம் நடு; இரு பக்கமும்
பாடும் அவ்வாயு பரந்து அங்கு நின்றது;
நாடும் நடுவுள் முகம் 'நமசிவாய';
ஆடும் 'சிவாய நம' புறத்து ஆயதே.

நாடும் பிரணவ நடுவிரு பக்கமும்[1]
[2]பாடுமவ் வாயுப் பரந்தங்கு நின்றது
நாடு நடுவுண் முகநம சிவாய
வாடுஞ் சிவாய [3]நமபுறத் தாயதே. (9)

வேறு பாடம்: 1. பக்கமு (அ இ ஈ எ ஒ) II. 2. மாடு மவர்வாயமந்தங்கு (அ இ ஈ எ ஒ) II; யமர்ந்தங்கு (சண்) 3. நமபுற வட்டத்தாயதே (அ எ) II; நற்புறத் தாயதே (இ) I; நமபுற வட்டமே (ஆ) III; நமபுறவட்டத்தாயே (ஒ) II.

கருத்து: "இருந்தவிவ்", "மகார நடுவே" என்னும் பாடல்கள் கூறிய சக்கரத்தைப் பற்றி இப்பாடல் மேலும் விளக்கம் தருகின்றது. (இப்பாடலின் ஆதாரத்தால், 'மகார நடுவே' என்னும் பாட்டிற்கு இப்பதிப்பிற் பாடங் கொள்ளப்பட்டது. சக்கரம் பற்றி அப்பாட்டிற்கு முன்னைய பாட்டின் குறிப்பிற் காண்க. அச்சக்கரத்தில் 'ஓம்' என்ற பிரணவ மந்திரம், எழுத்தை வளைத்து எழுதப்பட்டுள்ளது. அதன் இரண்டு பக்கமும் முறையே 'ந' 'வா' என்ற எழுத்துக்களால் குறிக்கப்படும் மூச்சுக் காற்று நல்ல இசையொலி உடையதாய், சுழுமுனையின் வழியாக ஏறி நின்றது. நடுவில் உள்ள மூன்று வட்டங்களுள் (அடுக்குகளுள்) மேலே, முகமாக உள்ளது 'நமசிவாய'. அதற்கு மேலே, வெளி வட்டத்தில் உள்ளது 'சிவாய நம', இந்த அமைப்பு, தூல பஞ்சாக்கரமே சூக்கும பஞ்சாக்கரமாக, "ஆலயமாக" என்னும் பாட்டில் கூறியவாறு, ஆகின்றது என்பதைச் சுட்டும். 'புறத்து' என்பதற்கு உச்சந்தலைக்கு மேல் என்று மற்றோர் உரையும் கொள்வது இக் கருத்திற்குப் பொருந்தும். அதுபோல "நடுவுள் முகம் நமசிவாய" என்பதற்கு உடம்பின் நடுவே உள்ள மூலாதாரத்தில் முதலில் தியானிக்கப்படும் 'நமசிவாய' நெற்றியில் உள்ள ஆக்ஞை என்ற ஆதாரம் வரை தொடர்ந்து தியானிக்கப்படும் என்று பொருள் கொள்ளக்கிடக் கின்றது. அண்ணாக்கில் அடைப்பைத் திறந்து, 4 அங்குல மூச்சுக் காற்றை உச்சந்தலைக்கு ஏற்ற இம்மந்திரமே துணை.

மந்திர வரிசை

914. ஆயும் சிவாயநம; மசிவாயந;
ஆயும் நமசிவய; யநமசிவா;
ஆயுமே வாயநமசி எனும் மந்திரம்;
ஆயும் சிகாரம் தொட்டு ஆனது அடைவிலே.

ஆயுஞ் சிவாய [1]நமமசி வாயந
வாயு [2]நமசிவ யயந மசிவா[3]
வாயுமே வாய [4]நமசியெனு மந்திர
[5]மாயுஞ்சி காரந்தொட் [6]டான தடைவிலே. (10)

வேறுபாடம்: 1. நமசி (அ) I. 2. சிவாயய (அ) II. 3. மசிவாய (ஈ) I. 4. மசிவாயந (விசு) 5. சிகாரத் தொ (இ ஈ) I. 6. டந்தத் (விசு); டந்தந்

தடைவிலே (சண்) (சைவ) தொட்டானடைவிலே (ஓ); தொட்டானத் தடைவிலே (அ) I.

கருத்து: திருவம்பலச் சக்கரத்தின் மந்திர வரிசை முறையை இங்குக் கூறுகின்றார். "கூத்தே" என்னும் பாட்டில் கூறியது போலவே முதல் அடுக்கு மந்திரத்தையும் இறுதி அடுக்கு மந்திரத்தையும் கூறி வட்டத்தை நிறைவு செய்து, பின்பு உள்ளே உள்ள மூன்று அடுக்கு மந்திரங்களை வரிசைப்படக் கூறிகிறார்.

சிகாரம் தொட்டு ஆனது அடைவிலே - இவ்வரிசை சூக்கும பஞ்சாக்கரத்தின் முதல் எழுத்தாகிய 'சி' காரத்தில் தொடங்கி, தூல பஞ்சாக்கர முதல் எழுத்தாகிய 'ந' காரத்துடன் முடிகின்றது. மற்ற 4 அடுக்கிலும் 'மல சத்தி' ஆகிய 'ம' - வும், 'திரோதான சத்தியாகிய 'ந' வும் சேர்ந்தே இருக்க, இறுதி அடுக்கு ஆகிய 'மசிவாயந' வில் அவை பிரிந்திருப்பதைக் காண்க. 'ய' - என்ற ஆன்மா 'சிவ' த்துடன் சேர்ந்து நிற்றலையும் காண்க. 'சிவாய நம' என்ற திருப்பெயர், ஆன்மாவுக்கு இந்தப் பேற்றினைத் தருகின்றது என்பதால் இந்த இரண்டு அடுக்குகளையும் புற அடுக்குகளாக வைத்தார் போலும்.

சக்கரத்தில் தாய் எழுத்துகள்

915. அடைவினில் ஐம்பதும் ஐயைந்து அறையின்
அடையும்; அறை ஒன்றுக்கு ஈரெழுத்து ஆக்கி,
அடையும் மகாரத்தில் அந்தமாம் க்ஷவ்வும்
அடைவின் எழுத்து ஐம்பத்தொன்றும் அமர்ந்தே.

அடைவினி லைம்பது மையைந் தறையி
னடையு மறையொன்றுக் கீரெழுத் தாக்கி[1]
யடையு மகாரத்தி லந்தமாம் க்ஷவ்வு[2]
மடைவி னெழுத்தைம்பத் தொன்று மமர்ந்தே[3]. (11)

வேறு பாடம்: 1. தாகி (ஈ) I. 2. மட்சர (ஆ) IV. 3. யமர்ந்ததே (அ ஆ எ) II.

கருத்து: திருவம்பலச் சக்கரத்தில் மையப் பகுதி ஆகிய திருவைந் தெழுத்து அடுக்குகளை இதுவரை கூறிய ஆசிரியர், இப்பாடல் முதல், அவ்வடுக்குகளின் உள்ளும், அவ்வடுக்குகளைச் சூழவும் அமைவனவாகிய எழுத்துக்கள் (மாத்ருகாட்சரங்கள்), வித்தெழுத்துக்கள் (பீஜாட்சரங்கள்) முதலியவற்றைக் கூறிச் சக்கரத்தின் முழு அமைப்பையும் விளக்கத் தொடங்குகிறார். மூல எழுத்துக்கள் வடமொழியில் மொத்தம் 51. இருபத்தைந்து

அறைகளிலும், அறைக்கு இரண்டாக இவற்றை எழுதி, இறுதி எழுத்தாகிய 'க்ஷ' வை நடு அறையில், திருவைந்தெழுத்து - மகாரத்தின் கீழே மூன்றாவது எழுத்தாக எழுதி அமைப்பர்.

உள் வட்டம், புற வட்டம்

916. அமர்ந்த 'அரகர' - ஆம் புற வட்டம்;
அமர்ந்த 'அரிகரி' - ஆம் ஆன் உள் வட்டம்;
அமர்ந்த அசைவை ஆம் அதனுள் வட்டம்;
அமர்ந்த இரேகையும் ஆகின்ற சூலமே.

அமர்ந்த வரகர வாம்புற வட்ட
மமர்ந்த வரிகரி [1]யாமானுள் வட்ட
மமர்ந்த [2]வசைவை யாமதனுள் வட்ட
மமர்ந்த விரேகையு மாகின்ற சூலமே. (12)

வேறு பாடம்: 1. யாதனுள் (அ இ ஈ எ ஒ) II; யாமதனுள் (சண்)
2. வசைவசை (அ ஈ ஓ) I; வசபை (எ) III.

கருத்து: அடுக்குகளைச் சூழ அமையும் பல வட்டங்களுள், வெளிவட்டத்தில் 'அர ஹர' என்னும் திருப்பெயர் சுற்றிலும் எழுதப்படும். அதற்கு அடுத்த உள் வட்டத்தில் 'அரி ஹரி' என்று எழுதப்படும். அதை அடுத்த உள் வட்டங்களில் அசபா மந்திரங்கள் ஆகிய 'அம் - ஹ்ரீம் - ஹம் - ஹாம்' என்ற தொடரும், சத்தியைக் குறித்தும், உடம்பில் ஐம்பூதத் தானங்களைக் குறித்தும் நிற்பனவாகிய 'ஆ - ஈ - ஊ - ஏ - ஓ' என்ற குறியீடுகளும் அவற்றின் குறில்களும் எழுதப்படும். அடுக்குகளை உண்டாக்கும் கோடுகளின் இரு முனைகளும் சூலமாக ஆக்கப்படும்.

ஆன் - அங்கு. அசபை அசைவை ஆயிற்று.

பிற எழுத்துக்கள் - 1

917. சூலத் தலையினில் தோற்றிடும் சத்தியும்;
சூலத் தலையினில் சூழும் ஓங்காரத்தால்;
சூலத்து இடைவெளி தோற்றிடும் அஞ்செழுத்து;
ஆலப் பதிக்கும் அடைவு-அது தானே.

சூலத் தலையினிற் [1]றோற்றிடுஞ் சத்தியுஞ்
சூலத் [2]தலையினிற் சூழுமோங் காரத்தாற்[3]
சூலத் [4]திடைவெளி தோற்றிடு மஞ்செழுத்
[5]தாலப் பதிக்கு மடைவது தானே[6]. (13)

வேறு பாடம்: 1. சென்றிடுஞ் (ஆ) IV. 2. தடியினிற் (அ) I. 3. காரத்தாள் (சண்) 4. தலைவெளி (ஆ) IV. 5. தாலைப் (ஆ இ ஈ உ) I. 6. வாமே (சண்)

கருத்து: சூலம் ஒவ்வொன்றின் உச்சியிலும் ஓங்காரம் எழுதப்படும். சக்கரத்தின் (5 அடுக்குகள்) 4 மூலையிலும் சத்தி அமர்ந்திருக்கும். சிவனது பீஜமாகிய 'ஔம் ஸௌ:' எழுதப்படும். அதன் நான்கு பக்கமும் சூலங்களுக்கு இடையில் ஐம்பூதங்களைக் குறிக்கும் 'அ இ உ எ ஒ' என்ற எழுத்துக்கள் எழுதப்படும்.

பிற எழுத்துக்கள் - 2

918. அது ஆம் அகார இகார உகாரம்
அது ஆம் எகார ஒகாரம் இது அஞ்சாம்;
அது ஆகும் சக்கர வட்டம் மேல் வட்டம்
பொது ஆம் இடைவெளி பொங்க 'நம'ப் பேரே.

அதுவா மகார விகார வுகார
மதுவா மெகார வொகார மிதஞ்சா[1]
மதுவாகுஞ் சக்கர [2]வட்டமேல் வட்டம்
பொதுவா மிடைவெளி [3]பொங்கநமப் பேரே. (14)

வேறு பாடம்: 1. மதஞ்சா (எ) I. 2. வட்டத்துமேல் (ஆ) I. 3. பொங்குநம் (எ) I; போதகப் (ஆ) IV.

கருத்து: மேற்பாட்டில் கூறிய ஐந்து எழுத்துக்கள் அ, இ, உ, எ, ஒ என்பவை. இந்த ஐந்து எழுத்துக்களும் 'சக்கர வட்டம்' எனப்படும் 5 அடுக்கைச் சூழ அமையும் வட்டமாகவும் எழுதப்படும். இவ்வட்டத்திற்கும் அடுக்குகட்கும் உள்ள இடைவெளியில் 'நம' என்பதில் முடியும் பஞ்சப்பிரம மந்திரங்கள் ஆகிய, ஓம் ஈசானாய நம: ஓம் தத்புருஷாய நம: ஓம் அகோராய நம: ஓம் வாமதேவாய நம: ஓம் சத்யோஜாதாய நம: என்பவை ஒரு வட்டமாக எழுதப்படும்.

அமைப்பில் மற்றொரு கூறுபாடு

919. பேர் பெற்றது மூலமந்திரம் பின்னது,
சேர்வு உற்ற சக்கர வட்டத்துள், சந்தியில்
நேர்பெற்று இருந்த இடம் நின்றது, சக்கரம்
ஏர்பெற்று இருந்த இயல்பு இது ஆமே.

பேர்பெற் றதுமூல மந்திரம் பின்னது
[1]சேர்வுற்ற [2]சக்கர வட்டத்துட் சந்தியி
னேர்பெற் றிருந்திட [3]நின்றது சக்கர[4]
[5]மேர்பெற் றிருந்த வியல்பிது வாமே. (15)

வேறு பாடம்: 1. சோர்வுற்றது (அ ஈ) I; சோர்வுற்ற (சண்) (சைவ) சேர்வுற்றது (இ ஒ ஓ) I; சாருற்ற (ஆ) IV. 2. சக்கரம் (ஆ) IV. 3. நின்ற (ஆ) I. 4. சக்கரம் (அ) I; சக்கரப் (சண்) (விசு) 5. பேர் பெற் (அ) IV.

கருத்து: பஞ்சப்பிரம மந்திரங்கட்கும் அடுக்குகட்கும் இடையில், மூல மந்திரம் ஆகிய 'நமசிவாய' என்பது, அடுக்கின் நான்கு பக்கத்திலும், பக்கத்துக்கு ஒன்றாய் எழுதப்படும். இதுவரை கூறியவை திருவம்பலச் சக்கரத்தின் அழகிய அமைப்பு ஆகும்.

"கூத்தே" என்ற திருமந்திரப் பாடல் முதல் இப்பாடல் வரை ஒரு திருவம்பலச் சக்கரத்தின் அமைப்பே கூறப் பட்டது பதிப்புகளில் உள்ள திருவம்பலச் சக்கரப்படம் நூற்பாடல்களுக்கு ஒத்ததாக இல்லை.

ஐம்பூதத் தானங்களில் தியானம்

920. இயலும் இம் மந்திரம் எய்தும் வழியின்
செயலும் அறியத் தெளிவிக்கும் நாதன்;
புயலும் புனலும் பொருந்து அங்கி, மண், விண்
முயலும் எழுத்துக்கு முன்னா இருந்ததே.

இயலுமிம் மந்திர மெய்தும் வழியின்
செயலு மறியத் [1]தெளிவிக்கு நாதன்
புயலும் புனலும் பொருந்தங்கி மண்விண்
முயலு மெழுத்துக்கு முன்னா விருந்ததே[2]. (16)

வேறு பாடம்: 1. தெளிவிக்குந் தானம் (அ) I. 2. யிருந்ததே (ஆ ஒ) I.

கருத்து: மேலே கூறிய சக்கரத்தில், ஐந்து அடுக்காக நடைபெறும் திருவைந்தெழுத்து, அவ்வாறு அமைவதில் உள்ள யோகச்

செய்கையையும் குருநாதன் தெளிவுபடுத்துகிறான். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐம்பூதங்கள் நமது உடம்பில் உள்ள இடங்களாகிய முறையே, மூலாதாரம், உந்தி, இருதயம், கழுத்து, புருவமத்தி ஆகிய இடங்களில் யோகச் செய்கை, ஐந்துமுறை மாறி நடைபெறுவதற்கு, திருவைந்தெழுத்து, ஐந்து அடுக்காக அமைந்து நின்று உதவும் (இதை அடிப்படையாக வைத்தே "கூத்தே", "நாடும் பிரணவம்", "ஆயும் சிவாய" என்ற திருமந்திரப் பாடல்கள் செய்யப்பட்டன.

எழுத்து - திருவைந்தெழுத்தில் ஒவ்வோர் எழுத்தும். முன் - காரணம்.

மந்திர வடிவம் - ஒரு பகுதி

921. ஆறெட்டு எழுத்தின்மேல் ஆறும் பதினாலும்
ஏறட்டு, அதன் மேலே விந்துவும் நாதமும்
சீறிட்டு நின்று, 'சிவாயநம' என்ன,
கூறு இட்டு மும்மலம் கூப்பிட்டுப் போமே.

ஆறெட் டெழுத்தின்மே லாறும் பதினாலு
[1]மேறட் [2]டதன்மேலே [3]விந்துவு நாதமுஞ்
சீறிட்டு நின்று சிவாய நமவென்னக்
[4]கூறிட்டு மும்மலங் கூப்பிட்டுப் போமே. (17)

வேறு பாடம்: மேறிட் (சைவ); மேறெட் (துடி) 2. டதன்மேல் (அ ஆ) II. 3. இசைவிந்து (ஆ) IV. 4. கூறிட்ட (இ ஈ) IV.

கருத்து: வடமொழி நெடுங்கணக்கில் 48 ஆவது எழுத்து ஸ. அதன் மேல் ஆறாவது எழுத்தாகிய 'ஊ' ஏற 'ஸூ - ஆகும். இதனோடு விந்துவுக்கு உரிய குறியீடாகிய அனுஸ்வாரத்தைச் சேர்க்க, 'ஸூம்' ஆகும் . பதினான்காவது எழுத்தாகிய 'ஔ' ஸ-வோடு சேர, 'ஸௌ' ஆகும். அதனோடு நாதத்திற்கு உரிய குறியீடாகிய விசர்க்கத்தைச் சேர்க்க, 'ஸௌ:' ஆகும், "ஓம் ஸூம் ஸௌ: சிவாயநம" என்று செபித்தால் மும்மலங்களும் சிதறி யோடும்.

மந்திரத்தின் முழு வடிவம்

922. அண்ணல் இருப்பது அவள் அக்கரத்துளே;
பெண்ணின் நல்லாளும் பிரான் அக்கரத்துளே;
எண்ணி இருவர் இசைந்து அங்கு இருந்த இடம்
புண்ணியவாளர் பொருள் அறிவாரே.

அண்ண [1]லிருப்ப தவளக் கரத்துளே
பெண்ணினல் வாளும் பிரானக் கரத்துளே
யெண்ணி யிருவ ரிசைந்தங் கிருந்திடம்
புண்ணிய வாளர் பொருளறி வாரே[2]. (18)

வேறு பாடம்: 1. லிருப்பது மவளக் (ஆ) IV. 2. வார்களே (அ இ ஈ எ ஓ) II.

கருத்து: சிவன் வீற்றிருப்பது சத்தியின் வித்து எழுத்தாகிய 'ஹ்ரீம்' என்பதில்; எம்பிராட்டி வீற்றிருப்பது சிவனது வித்து எழுத்தாகிய 'ஸௌ:' என்பதில். இவ்வாறு மாறி இருப்பதன் உண்மையைப் புண்ணியரே அறிவர். (எனவே, செப மந்திரத்தின் முழுவடிவம் "ஓம் ஹ்ரீம் ஸூம் ஔம் ஸௌ: சிவாயநம" என்பதாகும். பிற அடுக்குகளையும் இப் பீசங்களுடன் செபிக்க).

அருவ தரிசனம்

923. அவ் இட்டு வைத்து, அங்கு 'அர' இட்டு மேல்வைத்து
'இ'-இட்டுப் பார்க்கில் இலிங்கம்-அதாய் நிற்கும்;
'ம' விட்டு, மேலே வளி உறக்கண்ட பின்
'தொம்' இட்டு நின்ற சுடர்க்கொழுந்து ஆமே.

அவ்விட்டு வைத்தங் கரவிட்டு மேல்வைத்து
விவ்விட்டுப் பார்க்கி லிலிங்கம தாய்நிற்கு
மவ்விட்டு மேலே வளியுறக் கண்டபின்
றொம்மிட்டு நின்ற சுடர்க்கொழுந் தாமே. (19)

கருத்து: மேற்பாட்டில் கூறிய 'ஹ்ரீம்', 'ஸௌ:' என்ற பீஜமந்திரங்களுடன் கூடிய திருவைந்தெழுத்தைத் தலையின் ஈசான திக்கில் வைத்துத் தியானித்து, 'ஹர' என்று சிவாக்கினியைத் தூண்டி, 'ஹர' வுடன் இகரம் சேர்த்து 'ஹ்ரீம்' என்று தியானித்தால் அருவுருவம் ஆகிய சோதி தோன்றும். 'ம' வின் இடமாகிய மூலாதாரத்தை விட்டு, நல்ல மூச்சுக்காற்று, சுழுமுனையின் வழியே சகஸ்ராரத்தை அடைந்தால், அங்குச் சிதாகாசத்தில் (தகராகாசத்தில்) நடனமாடுகின்ற சிவபெருமானைத் தரிசிக்கலாம்.

அவ் - அவை; ஹ்ரீம், சௌ: என்பவை. 'தொம்', தாளக் குறிப்பு.

சதாசிவ மந்திரம்

924. அவ்-உண்டு, சவ்-உண்டு, அனைத்தும் அங்கு உள்ளது;
கவ்வுண்டு நிற்கும் கருத்து அறிவார் இல்லை;
கவ்வுண்டு நிற்கும் கருத்தறிவாளர்க்குச்
சவ்-உண்ட சத்தி சதாசிவன் தானே.

அவ்வுண்டு சவ்வுண் டனைத்துமங் குள்ளது
கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வாரில்லை
கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வாளர்க்குச்
சவ்வுண்ட சத்தி சதாசிவன் றானே. (20)

கருத்து: சகஸ்ராரத்தில் சிவம் விளங்கும். சத்தி விளங்கும். அகிலமே விளங்கும். இவை அங்குக் காரண உருவமாக விளங்குவதைப் பலரும் அறியார். அதை அறிந்தால் 'ஸௌ:' என்ற எழுத்தால் குறிக்கப்படும் சதாசிவன் விளங்குவான். இப்பீச மந்திரத்தில் ஸ, ஔ என்ற ஒலிகள் சேர்ந்திருந்தலால், 'ஔம்'; 'ஸௌம்' என இரண்டு பீச மந்திரங்களாகவும் கொள்ளலாம்.

ஹ - அசபாமந்திரத்தில் சிவனைக் குறிக்கும் குறியீடு. ஸ - அதில் சத்தியைக் குறிக்கும் குறியீடு. கவ்வுண்டு - அடங்கி.

எல்லாம் ஐந்து

925. அஞ்செழுத்தாலே அமர்ந்தனன் நந்தியும்;
அஞ்செழுத்தாலே அமர்ந்த பஞ்சாக்கரம்;
அஞ்செழுத்து ஆகிய அக்கர சக்கரம்
அஞ்செழுத்துள்ளே அமர்ந்திருந்தானே.

அஞ்செழுத் தாலே யமர்ந்தன னந்தியு
மஞ்செழுத் தாலே யமர்ந்தபஞ் சாக்கர
மஞ்செழுத் தாகிய வக்கர சக்கர
மஞ்செழுத் துள்ளே யமர்ந்திருந் தானே. (21)

கருத்து: திருவைந்தெழுத்தின் தியானத்தால் சிவன் உடம்பில் எழுந்தருளினான். அத் திருவைந்தெழுத்தும் அ இ உ எ ஒ என்ற ஐந்து எழுத்துக்களால் குறிக்கப்படும் ஐம்பூதங்களை நம் உடம்பில் யோகச் செய்கையில் இயக்குதற்கு, ஐந்து அடுக்கு ஆயிற்று.

இச்சக்கரத்தின் பீஜம் 'அம் ஹ்ரீம் ஹம் க்ஷம் ஹாம் - என்னும் தொடர். சிவம் -பிராசாத மந்திரத்தின் உட்பொருளாக உள்ளவன். (இம்மந்திரம் ஓம், நாதம், விந்து - என்னும் மூன்றையும் கொண்டது)

சிவனோடு ஒன்ற

926. கூத்தனைக் காணும் குறிபல பேசிடில்,
கூத்தன் எழுத்தின் முதல் எழுத்து ஓதினால்
கூத்தனோடு ஒன்றிய கொள்கையராய் நிற்பர்,
கூத்தனைக் காணும் குறி - அது ஆமே.

கூத்தனைக் காணுங் குறிபல பேசிடிற்
கூத்த னெழுத்தின் முதலெழுத் தோதினாற்[1]
கூத்தனோ டொன்றிய கொள்கைய ராய்நிற்பர்
கூத்தனைக் காணுங் குறியது வாமே. (22)

வேறு பாடம்: 1. தோதினார் (எ) I.

கருத்து: சிவன் வடிவம் பல. சூக்கும பஞ்சாக்கரத்தின் முதல் எழுத்தை, விந்துவின் குறியீடாகிய அனுஸ்வாரம் சேர்த்து 'சிம்' என மூச்சுக் காற்றைக் கும்பகம் செய்தால் அவனோடு ஒன்றி நிற்கலாம்.

சிவனோடு தொடர்பு கொள்ள

927. அத்திசைக்கு உள் நின்ற அனலை எழுப்பியே
அத்திசைக்கு உள் நின்ற 'ந' - எழுத்து ஓதினால்,
அத்திசைக்கு உள் நின்ற அந்த மறையனை
அத்திசைக்கு உள் உறவு ஆக்கினன் தானே.

அத்திசைக் [1]குண்ணின் றனலை யெழுப்பியே
யத்திசைக் குண்ணின்ற [2]நவ்வெழுத் தோதினா
லத்திசைக் குண்ணின்ற வந்த மறையனை
யத்திசைக் குள்ளுற [3]வாக்கினன் றானே. (23)

வேறு பாடம்: 1. குன்றின் (ஆ) - (முதல் மூன்றடிகளின் இரண்டாம் சீர்களில், இச்சுவடிப் பாடம் 'குன்றின்' என்றே உள்ளது. I; குண்ணின்ற வனலை (சண்) (சைவ) 2. தவ்வெழுத் (இ ஈ எ) I. 3. வாக்கி நின்றானே (ஈ ஒ) IV.

கருத்து: யோகி அகர கலை விளங்கும் திசையாகிய மூலாதாரத்தில் கனலை எழுப்பித் 'திருவைந்தெழுத்தின் 'ந' எழுத்தைத் தியானித் தால் அங்கு உள்ள, வேதத்தின் அந்தமாகிய சிவனைத் தனக்கு உறவாக்கிக் கொள்ளலாம்.

சத்தி தியானம்

928. தானே யளித்திடுந் தையலை நோக்கினாற்
றானே [1]யளித்திட்டு மேலுற வைத்திடுந்
தானே யளித்த மகாரத்தை யோதிடத்[2]
தானே யளித்ததோர் கல்லொளி யாமே. (24)

வேறு பாடம்: 1. யளித்திடு (ஆ) III. 2. யோதினாற் (ஆ) IV.

கருத்து: அருட்சத்தி என்ற பெயர் உண்மையால், தானே அன்பர்க்கு அருள் செய்யும் உமாதேவியை, 'வா' என்ற எழுத்தால் தியானித்தால், அவள் அருள் செய்து, சகஸ்ராரத்தினை உயிருணர்வு அடைய உதவுவாள். அவள் வழங்கிய 'ம' எழுத்தைத் தியானிக்க, தலையில் ஒளி தோன்றும்.

கல் - மலை. சித்தர் மொழியில் தலையைக் குறிக்கும்.

சிவ ஒளி

929. கல்லொளி யேயென நின்ற வடதிசைக்
கல்லொளி யேயென நின்றன னிந்திரன்
கல்லொளி யேயென நின்ற சிகாரத்தைக்
கல்லொளி யேயெனக் [1]காட்டிநின் றானே. (25)

வேறு பாடம்: 1. கட்டிநின் (ஆ ஓ) I; காட்டினான் (சண்)

கருத்து: தலையின் வடதிசையாகிய இடப்புற மூளையில் மலை யொளியாகச் சிவம் எழுந்தருளிய பொழுது இந்திர திசையான கிழக்குப் பகுதியிலும், முகத்தின் முன் புறத்திலும் ஒளி விளங்கியது. கயிலை மலையின் பேரொளியாக விளங்கும் சிவம், என் உயிருணர்வுக்கு மாணிக்க வண்ண ஒளியாகக் காட்சி நல்கியது.

நற்பண்பு அவனே

930. தானே எழுகுணம், தண்சுடராய் நிற்கும்;
தானே எழுகுணம், வேதமுமாய் நிற்கும்;
தானே எழுகுணம் ஆவதும்; ஓதிடின்,
தானே எழுந்த மறையவன் ஆமே.

தானே யெழுகுணந் [1]தண்சுட ராய்நிற்குந்
தானே [2]யெழுகுணம் வேதமு மாய்நிற்குந்
தானே [3]யெழுகுண மாவது மோதிடிற்
றானே யெழுந்த மறையவ னாமே. (26)

வேறு பாடம்: 1. தன்கட (சண்) 2. யெழுகுணமேகமு (ஆ) II. 3. யெழுகுணம் வரவது (சண்)

கருத்து: சிவன் தானே யோகி உடம்பின் சந்திர கலையில் விளங்குவான். அவன் அருட் குணங்களே வேதமாய்ப் பரவும். எல்லா நற்பண்புகளும் அவனே. அவனைத் தியானிப்பவர்க்கு, மறைப்பிலிருந்து வெளிப்படுவான்.

உயிரிலும் உடம்பிலும் சிவம்

931. மறையவன் ஆக மதித்த பிறவி
மறையவன் ஆக, மதித்திடக் காண்பர்
மறையவன் அஞ்செழுத்துள் நிற்கப் பெற்று
மறையவன் அஞ்செழுத்தாம் அவர்தாமே.

மறையவ னாக மதித்த பிறவி
மறையவ னாக மதித்திடக் காண்பர்[1]
மறையவ னஞ்செழுத் துண்ணிற்கப் பெற்று[2]
மறையவ னஞ்செழுத் [3]தாமவர் தாமே. (27)

வேறு பாடம்: 1. காண்பவர் (இ) I. 2. பெற்ற (சண்) (சைவ) 3. தாமது வாகுமே (எ) II.

கருத்து: சிவமாகும் தன்மை பெறுதற்காகவே சிவனால் எண்ணி, வழங்கப்பட்ட இம் மனிதப் பிறவியைப் பெற்ற யோகியர்–சிவனது திருவைந்தெழுத்து, தமது உயிரிலும் உடம்பிலும் நிற்கப்பெற்று,

அவ்வெழுத்துக்களின் அனுபவத்தைப் பெறுபவர்–பிறர் மதித்திடச் "சிவமாகிப்" பெருவாழ்வு வாழ்வர்.

ஐந்தெழுத்தில் திருமேனி

932. ஆகின்ற பாதமும் அந் 'ந'- ஆய் நின்றிடும்;
ஆகின்ற நாபியுள் அங்கே மகாரமாம்;
ஆகின்ற 'சி' - இருதோள், 'வ'- ஆய்க் கண்டபின்,
ஆகின்ற அச்சுடர் அவ் இயல்பு ஆமே.

ஆகின்ற பாதமு [1]மந்நவாய் நின்றிடு
மாகின்ற நாபியு ளங்கே மகாரமா
மாகின்ற [2]சீயிரு தோள்வவ்வாய்க் கண்டபி
னாகின்ற [3]வச்சுட ரவ்வியல் பாமே. (28)

வேறு பாடம்: 1.மண்ணலாய் (அ) I. 2. தீயிருந்தோன் (ஆ) I. 3. வச்சுடர் யவ்வியல் (எ) I; ரவ்வியமாகுமே (ஓ) I ரவ்வியவ்வாமே (த)

கருத்து: திருவைந்தெழுத்தைக் கூத்தப் பெருமானது திருமேனி உறுப்புகளாகக் கூறும் மரபைச் சொல்கின்றார். பாதம் -ந, உந்தி - ம. தோள்கள் - சி, முகம் - வா. இத்திருக்காட்சியைத் தனது சகஸ் ராரத்தில் யோகானுபவமாகக் கண்ட யோகியின் உயிர் ஒளிமய மாகி, திருவைந்தெழுத்தின் இயல்பினை உடையதாகி, அதன் இறுதி எழுத்தாகிய 'ய' - ஆக நிற்கும்.

நாதப்பிரமம்

933. அவ் இயல்பு ஆய இரு மூன்று எழுத்தையும்
செவ்வியல்பாகச் சிறந்தனன் நந்தியும்;
'ஓ' - இயல்பு ஆக, ஒளி உற ஓங்கிடின்,
ப-இயல்பு ஆகப் பரந்து நின்றானே.

அவ்வியல் [1]பாய விருமுன் றெழுத்தையுஞ்
செவ்வியல் பாகச் சிறந்தன னந்தியு
மொவ்வியல் பாக [2]வொளியுற வோங்கிடிற்[3]
பவ்வியல் பாகப் பரந்துநின் றானே. (29)

வேறு பாடம்: 1. பாய்வரு மூன்றெழுத்தையுஞ் (அ) I; பாக விருமூன் (இ ஈ) I. 2. வொளிபட (ஆ) II. 3. நோக்கிடிற் (அ) II.

கருத்து: யோகி சிவமே ஆகிய திருவைந்தெழுத்தைப் பிரணவத்துடன் சேர்த்துத் தியானித்துச் செம்மை பெறும் நிலையில் அவனிடத்தில் சிவன் சிறந்து வீற்றிருப்பான். திருவைந்தெழுத்தின் மூலம் ஆகிய பிரணவமாகவே - நாதப்பிரம்மமாகவே-அவனை உணரும் உணர்வும், அக் காட்சியும் யோகியினிடத்து ஓங்கினால், 'பா' என்பது பரந்து நிற்பதோர் ஓசையாமாறு போல, நாதமாய், எங்கும் வியாபியாய் இருப்பான்.

உயிருக்கு வலிமை பெருக

**934. பரந்தது மந்திரம்; பல்லுயிர்க்கு எல்லாம்
வரம் தரு மந்திரம்; மாய்த்திட வாங்கித்
துரந்திடு மந்திரம் சூழ்பகை போக;
உரம்தரு மந்திரம்; 'ஓம்' - என்று எழுப்பே.**

பரந்தது மந்திரம் பல்லுயிர்க் கெல்லாம்
வரந்தரு மந்திர [1]மாய்த்திட வாங்கித்
துரந்திடு மந்திரஞ் சூழ்பகை போக
வுரந்தரு மந்திர மோமென் றெழுப்பே. (30)

வேறு பாடம்: 1. வாய்த்திட (எ) I.

கருத்து: யாவர்க்கும் ஓசை பொது. யாவரும் ஓசையை-பிரணவ ஓசையை எழுப்பலாம். ஆதலின் அது உலகெங்கும் உள்ளது. தன்னைப் பிரணவத்தால் தியானிப்போர் யாவர்க்கும் இறைவன் வரம் அளித்து வாழ்வு அருள்வான். சுற்றியுள்ள பகை நீங்குமாறு அவற்றை வளைத்துத் துரத்தும் காரணத்தால், உயிருக்கு வலிமை தருவது பிரணவ மந்திரம். ஆதலின் 'ஓம்' என மூலக்கனலை எழுப்புக.

உண்மைத் திருவம்பலம்

**935. 'ஓம்' என்று எழுப்பிய உத்தம நந்தியை,
நாம் என்று எழுப்ப, நடு எழு தீபத்தை
ஆம் என்று எழுப்பி, அவ்வாறு அறிவார்கள்
மாமன்று கண்டு மகிழ்ந்து இருந்தாரே.**

ஓமென் [1]றெழுப்பிய வுத்தம நந்தியை
நாமென் [2]றெழுப்ப நடுவெழு தீபத்தை
யாமென் றெழுப்பி யவ்வா றறிவார்கண்
மாமன்று கண்டு [3]மகிழ்ந்திருந் தாரே. (31)

வேறு பாடம்: 1. றெழுப்பின் (அ இ ஈ ஒ ஓ) II. 2. றெழுப்பு (அ) I; றெழுப்பி (ஓ) I றெழுப்பித்தன் (எ) II. 3. மகிழ்ந்தளித்தானே (ஈ) II.

கருத்து: யோகி மூலாதாரத்தில் பிரணவத்தைத் தியானித்து, மூலக்கனலோடு சிவனை எழுப்பி, அக்கனல் புருவநடுவில் ஆக்ஞை என்ற ஆதாரத்தை அடைந்தபின், தத்துவங்களிலிருந்து விலகி, தன்னை 'ஹம்' என சிவத்தோடு ஒற்றித்து உணர்ந்து, 'நம' என்பதை இறுதியாக்கி, 'சிவாயநம' என்று தியானிக்க, சகஸ்ராரத்தின் நடுவே எழுகின்ற சோதியைக் கண்டு, உண்மைத் திருவம்பலம் ஆகிய அதனைத் தரிசித்து மகிழ்ந்தான்.

936. ஆகின்ற சக்கரத் துள்ளே யெழுத்தைந்தும்
பாகொன்றி நின்ற பதங்களில் வர்த்திக்கும்
ஆகின்ற ஐம்பத் தோரெழுத் துண்ணிற்கப்
பாகொன்றி நிற்கும் பராபரன் றானே. (அ, ட, ஔ)

மற்றோர் அடுக்கு

937. பரம் ஆய அஞ்செழுத்து உள் நடு ஆக,
பரம் ஆய் 'யநவசிம' பார்க்கில், 'மவயநசி'
பரம் ஆய 'சியநமவ' ஆம் பரத்து ஓதில்
பரம் ஆய 'வாசிமயந' மாய் நின்றே.

பரமாய வஞ்செழுத் துண்ணடு வாகப்
பரமாய [1]நவசிம பார்க்கின் மவயநசி
பரமாய [2]சியநம வாம்பரத் தோதிற்
பரமாய [3]வாசி மயநமாய் நின்றே. (32)

வேறு பாடம்: 1. மந்நய வாசிபஞ் சாக்கரம் (ஆ) IV. 2. வசிமா நய (ஆ) IV. 3. சிமநய வவ்வாகி நின்றதே (ஆ) IV.

கருத்து: மேலே கூறிய திருவம்பலச் சக்கரத்தில் 'சிவாயநம' மேல் அடுக்கில் வைக்கப்பட்டது. இப்பாடலில் நமசிவய என்பதை நடு அடுக்கில் வைத்து, வேறு ஓர் அடுக்கு முறை கூறுகின்றார். நமசிவாய என்னும் திருவைந்தெழுத்து நடுவடுக்காக அமைய, அதற்கு மேல் உள்ள அடுக்காக 'யநவாசிம' அமைய, அதற்கு மேல் உள்ள அடுக்காக, 'மவாயநசி' அமைய, கீழ் அடுக்காக, 'சியநமவா' அமைய, அதற்கு மேல் உள்ள அடுக்காக 'வாசிமயந' அமையும்.

உடம்பில் ஐம்பூதத் தானங்களில் சிவன்

938. நின்ற எழுத்துக்கள் நேர்தரு பூதமும்
நின்ற எழுத்துக்கள் நேர்தரு வண்ணமும்
நின்ற எழுத்துக்கண் நேர்தர நின்றிடில்,
நின்ற எழுத்துள்ளும் நின்றனன் தானே.

நின்ற [1]வெழுத்துக்க ணேர்தரு பூதமு
நின்ற [2]வெழுத்துக்க ணேர்தரு வண்ணமும்
நின்ற [3]வெழுத்துக்கண் [4]ணேர்தர நின்றிடி
னின்ற வெழுத்துள்ளு நின்றனன் றானே. (33)

வேறு பாடம்: 1. வெழுத்துக்கண் (அ இ ஈ எ ஒ) I. 2. வெழுத்துக்கண் (அ ஈ எ ஒ) I. 3. வெழுத்துக்க (இ ஈ) I. 4. ணேராக (ஆ) IV; ணேரதாய் (ஒ) IV; ணேர்தரு (சண்).

கருத்து: சக்கரங்களில் உள்ள திருவைந்தெழுத்து அடுக்கு வரிசைப்படியே, யோகி இயக்குதற்குரிய பூதங்கள் ஐந்தும் (முறையே ந - நிலம்; ம - நீர்; சி - தீ; வா - காற்று; ய - ஆகாயம்) அப்பூதங்களின் நிறமும், இவ்வெழுத்துக்களை யோகி தன் உடம்பில் தியானிக்கும் இடங்கள் ஆகிய, முறையே ந - மூலாதாரம்; ம - உந்தி; சி - இருதயம்; வா - கழுத்து; ய - புருவநடு என்பவற்றில் இயக்கப்படுமாயின் அப்பூதங்கட்குக் குறியீடாகச் சொல்லப்பட்ட ஆ ஈ ஊ ஏ ஒ என்ற சத்தி யெழுத்துக்கள் வாயிலாக, உடம்பில் அந்தந்த இடங்களில் சிவன் வீற்றிருப்பான். இப்பொருளைக் 'கூத்தே' முதலிய முன்னைப் பாடல்களுக்கும் பொருத்துக.

சிற்றம்பலம் உடையானின் செல்வப் பிள்ளை

939. நின்றது சக்கரம் நீளும் புவி எல்லாம்
மன்று-அது ஆ நின்ற மாய நல் நாடனைக்
கன்று-அதுவாக, கரந்தனன் நந்தியும்
குன்றிடை நின்றிடும் கொள்கையன் ஆமே.

[1]நின்றது சக்கர [2]நீளும் புவியெல்லா
மன்றது [3]வாநின்ற மாயநன் னாடனைக்
கன்றது வாகக் [4]கரந்தன னந்தியுங்
[5]குன்றிடை நின்றிடுங் கொள்கைய னாமே. (34)

வேறு பாடம்: 1. நின்ற (ஆ) II. நின்றன (சண்); 2. நீள்புவி (ஆ) II. 3. வாய்நின்ற (சுவடிகள் எல்லாம்) (சண்) (விசு) (தி) (வ) II. 4. கறந்தன (இ ஒ) I. 5. குன்றிட (ஆ) I; குன்றிடு (சண்)

கருத்து: சக்கர அமைப்பில் காட்டப்பட்ட பொருளுக்கு ஏற்ப, உலகம் எல்லாம் அதாவது ஐம்பூதங்களும் தன் உடம்பில் மன்றங்களாகக் கொண்டு விளங்கும் ஆன்மாவை, மாயாகாரியமான உடம்பில் வாழ்பவனை, அவனிடம் ஏற்கனவே ‘உடனான’ நிலையில் மறைந்து விளங்குபவனாகிய சிவன், தனது பிள்ளையாகக் (தான் பசுவாகவும் ஆன்மா கன்றாகவும்) கொண்டு, அவ்வான்மப் பிள்ளை வளர, அவனது தலையாகிய மலையில் நின்று, ஒளிக்காட்சி வழங்கி, அமுது ஊட்டுவான். இதுகாறும் மறைந்து நின்றவன் இப்பொழுது மலை மீது நிற்பான் என ஒரு நயம் தோன்றுவதைக் காண்க.

940. கொண்டவிச் சக்கரத் துள்ளே குணம்பல
கொண்டவிச் சக்கரத் துள்ளே குறியஞ்சுங்
கொண்டவிச் சக்கரங் கூத்த னெழுத்தஞ்சுங்
கொண்டவ்விச் சக்கரத் துண்ணின்ற கூத்தே. (அ)

கலைகளை இயக்கும் பிரணவம்

941. வெளியில் இரேகை, இரேகையில் அத்தலை
சுளியில் உகாரமாம் சுற்றிய வன்னி
நெளிதரு கால் கொம்பு நேர் விந்து நாதம்
தெளியும் பிரசாதம் சிவ மந்திரமே.

வெளியி லிரேகை [1]யிரேகையி லத்தலை
சுளியி லுகாரமாஞ் சுற்றிய வன்னி
நெளிதரு கால்கொம்பு நேர்விந்து நாதந்
தெளியும் [2]பிரசாதஞ் சிவமந் திரமே. (35)

வேறு பாடம்: 1. வெண்பிறை (ஆ) I. 2. பிரகாரஞ் (அ இ ஈ எ) I.

கருத்து: பிராசாத மந்திரம் ஆகிய ‘அ உம நாதம் விந்து’ என்பவற்றின் கூட்டு ஆகிய ‘ஓம்’, திருவைந்தெழுத்தின் பீஜங்கட்கு முன் இருப்பது. அது சூரிய கலை, சந்திர கலை, அக்கினி கலை ஆகியவற்றை இயக்குவதை இப் பாடலிற் கூறுகின்றார். அகரம் சந்திரன்; உகரம் - சூரியன்; ம - அக்கினி; திருவம்பலச் சக்கரத்தில், அடுக்குகளை உண்டாக்குவதற்காகப் படுக்கை வசமாகவும் நின்ற

வண்ணமாகவும் வரையப்பட்ட கோடுகள் 12ம் இரேகை எனப்பட்டன. 12 இரேகையின் முனையிலும் சூலக்குறி இடுமாறு முன்பு கூறி, அச்சூலத் தலையில் 'ஓம்' எழுதப்படும் என்றார். இப்பாடலில் அவ் வோங்காரத்தை 'பிராசாத மந்திரம் என்று சுட்டி, அதன் கூறுகள் ஐந்தினையும் விளக்குகின்றார்: 'ஓ' என்பதில் இடப்பக்கம் உள்ள சுழி உகரம். இது சூரியன்; நமது உடம்பில் வலக்கண். அதிலிருந்து வலப்பக்கமாக வரும் கொம்பு அகரம். ஓகரத்தால் சூழப்பட்டு அதன் நடுவில் உள்ளது ஆகிய மகரம் அக்கினி. வலப்பக்கத்தில் வளைந்து, காலாக உள்ளது நாதம். காலிலிருந்து கீழ்ப் பக்கம் உள்ள கொம்பு (சுழி) விந்து.

வெளி - அடுக்குகட்கும் வட்டங்கட்கும் இடையில் உள்ள வெற்றிடம். சூரியகலை 12 ஆதலின், 12 கோடுகளின் முனையிலும் 'ஓம்' எழுதுமாறு கூறினார். "கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே" - (விநாயகர் அகவல்) இரேகை - ஒளி என்ற பொருளிலும் ஆசிரியரால் வேறு இடத்தில் ஆளப்பட்டுள்ளது.

942. அகார வுகார சிகார நடுவாய்
வகாரமொ டாறும் வளியுடன் கூடிச்
சிகார முடனே சிவன்சிந்தை செய்ய
வொகார முதல்வ னுவந்துநின் றானே. (அ, க)

943. அற்ற விடத்தே யகாரம தாவது
வுற்ற விடத்தே யுறுபொருள் கண்டிடச்
செற்ற மறுத்த செழுஞ்சுடர் மெய்ப்பொருள்
குற்ற மறுத்தபொன் போலுங் குளிகையே. (அ)

சிவானுபவம்

944. 'அ'-என்ற போதினில் 'உ' - எழுத்து ஆலித்தால்,
உவ் வென்ற முத்தி உருகிக் கலந்திடும்;
ம-என்று என் உள்ளே வழிபட்ட நந்தியை
எவ்வண்ணம் சொல்லுகேன் எந்தை இயற்கையே.

அவ்வென்ற போதினி லுவ்வெழுத் தாலித்தா
[1]லுவ்வென்ற முத்தி [2]யுருகிக் கலந்திடு
மவ்வென்றெ னுள்ளே [3]வழிபட்ட நந்தியை
யெவ்வண்ணஞ் சொல்லுகே னெந்தை யியற்கையே.
(36)

வேறு பாடம்: 1. லும்மென்ற (அ ஆ இ ஈ ஓ) I. 2. யுருக்கிக் (ஆ) IV. 3. வழிப்பட்ட (அ) IV.

கருத்து: அ, உ, ம என்று தனித்தனியே கூறி விளக்கப்பட்டாலும் 'ஓம் ' எனச் சேர்த்தே செய்யும் தியானத்தால் ஆன்ம போதம் உருகி நிற்க, முத்தி நிலை எய்தும். சிவாக்கினியாக என்னுள்ளே வழிபட்ட நந்தி தந்த சிவானுபவத்தை எவ்வாறு இயம்புவேன்?

யார் பெறுவார் பதிஞானம்?

945. நீரில் எழுத்து இவ் உலகர் அறிவது
வானில் ஏழுத்து ஒன்று கண்டு அறிவார் இல்லை,
யார் இவ் எழுத்தை அறிவார்? அறிவார்கள்
ஊனில் எழுத்தை உணர்கிலர் ஆமே.

நீரி லெழுத்திவ் வுலக ரறிவது[1]
வானி லெழுத்தொன்று கண்டறி வாரில்லை
யாரிவ் வெழுத்தை யறிவா ரறிவார்க[2]
ளூனி லெழுத்தை [3]யுணர்கில ராமே. (37)

வேறு பாடம்: 1. ரறிவெல்லாம் (ஆ) IV. 2. ரவர்க (விசு) (சைவ); ரவர்களே (த) 3. யுணர்கிலர்தாமே (எ) III.

கருத்து: பாசஞானம் ஆகிய உலக அறிவெல்லாம் நீர்மேல் எழுத்துப் போல் நிலையற்றது; மாறிக்கொண்டேயிருக்கும். சிதாகாயத்தில் தோன்றும் எழுத்தாகிய 'ஒலி' யை அறிபவர் இல்லை. யார் ஒருவர் அதனை அறிவாரோ, அவர் பதிஞானம் பெற்றுப் பிறப்பு இறப்புகளைக் கடப்பர்.

தாய் எழுத்துக்கள் ஏன்?

946. காலை நடு உற, காயத்தில் அக்கர
மாலை நடு உற ஐம்பதும் ஆவன
வேலை நடு உற வேதம் விளம்பிய
மூலம் நடு உற முத்தி தந்தானே.

காலை நடுவுறக் காயத்தி லக்கர
மாலை நடுவுற [1]வைம்பது மாவன
[2]மேலை நடுவுற வேதம்வி ளம்பிய
[3]மூல நடுவுற முத்திதந் தானே. (38)

வேறு பாடம்: 1. வைப்பது (ஆ) I. 2. மேலு (சண்) 3. மூலன் (த)

கருத்து: பிரணவத்திலிருந்து தோன்றிய ஐம்பது எழுத்துக்களும் ஒரு மாலையே போல் ஆறு ஆதாரங்களில் பொருந்தி நின்றன. மூச்சுக் காற்றைச் சுழுமுனையில் செலுத்தி, வேதம் கூறிய மூலமந்திரம் ஆகிய திருவைந்தெழுத்தைத் தலையுச்சியில் உள்ள சகஸ்ராரத்தில் வைத்து, உயிர் உணர்வால் தியானிக்க, ஐம்பது எழுத்தும் மறைய (பாச ஞானம் விலக), பதிஞானமாகத் திருவைந்தெழுத்தே அனுபவப்படும். இதுவே திருவம்பலச் சக்கரத்தில், அடுக்குகளில் திருவைந்தெழுத்துடன் ஐம்பது எழுத்தும் எழுதப்படுவதால் உணர்த்தப்பட்டது. இந்த அனுபவம் முத்திப் பேற்றிற்கு வழியாகும்.

947. நாவியின் கீழது நல்ல வெழுத்தொன்று
பாவிக ளத்தின் பயனறி வாரில்லை
யோவிய ராலு மறியவொண் ணாதது
தேவியுந் தானுந் திகழ்ந்திருந் தானே. (ஆ)

948. அவ்வொடு சவ்வென் றரனுற்ற மந்திர
மவ்வொடு சவ்வென்ற தாரு மறிகில
ரவ்வொடு சவ்வென்ற லாரு மறிந்தபி
னவ்வொடு சவ்வு மனாதியு மாமே. (அ)

குண்டலி விரும்பும் மந்திரம்

949. மந்திரம் ஒன்று, உள் மலராள் உவப்பது,
உந்தியின் உள்ளே உதயம் பண்ணா நிற்கும்,
சந்தி செய்யாநிற்பர் தாம் அது அறிந்திலர்,
அந்தி தொழுது போய், ஆர்த்து அகன்றார்களே.

மந்திர [1]மொன்றுண் மலரா ளுவப்பது[2]
வுந்தியி னுள்ளே யுதயம்பண் ணாநிற்குஞ்
சந்திசெய் யாநிற்பர் தாம தறிந்தில[3]
[4]ரந்தி தொழுதுபோ யார்த்தகன் றார்களே. (39)

வேறு பாடம்: 1. மொன்று (அ ஆ ஒ) I. 2. ளுதிப்பது (ஆ இ ஒ) II; லுதிப்பதும் (எ) II. 3.தறிகிலர் (சண்) 4. நந்தி (சண்) (துடி)

கருத்து: மூலாதார மலரில் உள்ளவளாகிய குண்டலிசத்தி விரும்பும் மந்திரம் அசபை மந்திரம். அது உந்தியில் தோன்றும். சந்தியா வந்தனம் செய்வோர் அதனை அறியார். சடங்காக அவ்வழி பாட்டினைச் செய்து, வீண் ஆரவாரம் செய்கின்றனர். (இம்மந்திரம் முன்பு விளக்கப்பட்டது.

உச்சியில் உணர்வை வைக்கும்

950. சேவிக்கும் மந்திரம் செல்லும் திசைபெற;
ஆவிக்குள் மந்திரம் ஆதாரம் ஆவன;
பூவுக்குள் மந்திரம் போக்கு அற நோக்கிடில்,
ஆவிக்குள் மந்திரம் அங்குசம் ஆமே.

சேவிக்கு மந்திரஞ் செல்லுந் திசைபெற[1]
வாவிக்குண் மந்திர மாதார மாவன
பூவுக்குண் மந்திரம் போக்கற நோக்கிடி
லாவிக்குண் மந்திர [2]மங்குச மாமே. (40)

வேறு பாடம்: 1. திசைபிற (ஒ) I. 2. மாலயமாமே (ஆ) IV.

கருத்து: யோகி தன் உயிருணர்வைச் செலுத்த வேண்டுவது, தலையுச்சியாகிய வடதிசை. அத்திசையில் தன் உணர்வைச் செலுத்துவதற்கு, இறைவனை வழிபடும் மந்திரம் அசபை ஆகிய அங்குசமாகும். (அசபையை 'ஹம்சம்' என்பர். விளக்கம் கீழே உள்ளது.) உந்தித் தாமரையில் உள்ள மந்திரம் அது. மூலக்கனல் புருவமத்தியை அடைந்தபின், அங்குள்ள உயிருணர்வு, தலையுச்சியை அடைவதற்கு உதவும் மந்திரம் அதுவே. 'ஹம் சம்' என்பது இரண்டு பகுதிகளை உடையது. பிராணாயாமத்தில் மூச்சுக்காற்றை உள்ளே இழுக்கும் போது 'சம்' (சங்) என்ற ஒலி இயல்பில் உண்டாகும். வெளிவிடும்பொழுது, அம் (அங்) - என்ற ஒலி உண்டாகும். இவை இயல்பான ஒலி யாதலின் 'அசபை' என்றனர். எந்த இறைவருடைய மந்திரத்தையும் மூச்சுக்காற்றோடு (பிராணாயாமம் செய்யும்போது) தியானித்தாலும், அந்த மந்திரம் 'அசபை' எனப்படும். திருமூலர் 'ஓம்', 'நமசிவாய', 'அம் ஹ்ரீம் ஹம் க்ஷம் ஹாம்' என்ற மந்திரங்களை 'அசபை' எனக் கூறுகின்றார். இப்பாடலில் 'ஹம்சம்' என்பதே 'அங்குசம்' எனப்படுகின்றது.

யானையைச் செலுத்தும் அங்குசம் போல, அசபா மந்திரம் உயிருணர்வைச் செலுத்தும் என்ற கருத்தும் தோன்ற இவ்வாறு ஆள்கின்றார்.

ஆதாரம் ஆவன பூ என்க. ஆதாரம், மூலாதாரம். அதைத் தாமரை என்றல் யோக நூல் மரபு. அ ஜபை - ஜபிக்கப் படாதது; அசபை எனத் தமிழாயிற்று.

மூன்று ஒளி நடுவே சிவமும் சத்தியும்

951. அருவினில் அம்பரம் அங்கு எழும் நாதம்
பெருகு துடியிடை பேணிய விந்து
மருவி, யகார சிகார நடுவாய்
உருவிடல் ஆறும் உறு மந்திரமே.

அருவினி லம்பர மங்கெழு நாதம்
பெருகு துடியிடை பேணிய விந்து
மருவி யகார சிகார நடுவா
[1]யுருவிட [2]லாறு முறுமந் திரமே. (41)

வேறு பாடம்: 1. யுருவிடி (ஆ) IV. 2. லூறு (இ) I; வூறு (எ) IV.

கருத்து: அசபா மந்திர தியானத்தின் அனுபவத்தைக் கூறகின்றார். ஐந்து அடுக்காக உள்ள திருவைந்தெழுத்துக்கு, முன்பு 'ஓம்', 'அம்', ஹ்ரீம்' 'ஹம்' 'க்ஷும் 'ஹாம்' என்ற ஆறு பீஜ மந்திரங்கள் கூறினார். அவற்றையே இங்கு 'ஆறும்' எனக் குறிப்பிடுகின்றார். தலையுச்சியில் உணரப்படும் சிதாகாயத்தில் எழும் நாதமும், அருட்சத்தியாகிய விந்துவும் (ஒளியும்) புருவமத்தியில் உள்ள ஆன்மாவாகிய ஒளி, இரு கண்களாகிய சூரியன், சந்திரன் என்ற ஒளி - இவற்றின் நடுவே தோன்றுதல், ஆறு பீஜங்களுடன் உள்ள திருவைந்தெழுத்துத் தியானத்தின் பயனாக எய்தும்.

952. விந்துவு நாதமு மேவி யுடன்கூடிச்
சந்திர ளோடே தலைப்படு மாயிடி
னந்தர வானத் தமுதம்வந் தூறிடு
மங்குதி மந்திர மாகுதி யாமே. (அ)

953. ஆறெழுத் தோது மறிவா ரறிகில
ராறெழுத் தொன்றாக வோதி யுணரார்கள்
வேறெழுத் தின்றி விளம்பவல் லார்கட்
கோரெழுத் தாலே யுயிர்பெற லாமே. (ச)

உச்சியில் ஒளி எழ

954. ஓதும் எழுத்தோடு உயர்கலை மூவைந்தின்
ஆதி எழுத்து-அவை ஐம்பத்தோடு ஒன்று என்பர்,
சோதி எழுத்தினில் ஐ - இருமூன்று உள;
நாத எழுத்திட்டு நாடிக்கொள்ளீரே.

ஓது மெழுத்தோ [1]டுயர்கலை மூவைந்தி[2]
[3]னாதி யெழுத்தவை யைம்பத்தோ டொன்றென்பர்
சோதி யெழுத்தினி லையிரு மூன்றுள[4]
நாத வெழுத்திட்டு நாடிக்கொள் ளீரே. (42)

வேறு பாடம்: 1. டுயிர்க்கலை (எ ஈ ஒ) II. 2. மூவஞ்சு (எ) IV; மூவஞ்சி (இ) (ஈ) I. 3. மாதி (எ) IV; லாதி (இ ஈ) I. 4. மூன்றில் (ஈ) ; மூன்றினு (ஆ) IV.

கருத்து: 'ஓம்' என்னும் மந்திரம்; ஐம்பூதங்களின் குறியீடுகள் ஆகிய அ, இ, உ, எ, ஒ; அப்பூதங்களை அதிட்டிக்கும் சத்திகளின் குறியீடுகள் ஆகிய ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்பவை; திருவைந்தெழுத்து - இந்த 16 எழுத்துக்கட்கும் 'வன்னம்' என்று பெயர். இந்த வன்னங்களின் ஆதி எழுத்துக்கள் (மாதுருகாட்சரங்கள்) மொத்தம் 51 என்பர். (ஆகவே திருவம்பலச்சக்கரத்தில் 25 அறைகளிலும் அவை இரண்டிரண்டாக எழுதப்பட்டன. சகஸ்ராரத்தில் சோதியை எழச் செய்யும் தியான மந்திரத்தில், 5 அடுக்கான திருவைந் தெழுத்து 25-ம் சக்திசிவ பீஜங்கள் ஆகிய 'அம், ஹ்ரீம், க்ஷும், ஹம், ஹாம்' என்பவையும் ஆக 30 எழுத்துக்கள் உள்ளன.

இனி, 'ஐ' இரு மூன்று என்பதைத் தலைமையான ஆறு ஆதாரங்கள் என்று கொண்டு, அவற்றில் இந்த 51 எழுத்துக்களும் சோதி வடிவாக உள்ளன; அவற்றை நாதவடிவ எழுத்தாக உணர்வீர் எனவும் பொருள் கொள்ளலாம்.

நாத அனுபவம்

955. விந்துவிலும் சுழி நாதம் எழுந்திட,
பந்தத் தலை பதினாறு கலையதா,
கந்தர ஈகாரம் கால் உடம்பு ஆயினார்,
அந்தமும் இன்றியே ஐம்பத்தொன்று ஆமே.

விந்துவி லுஞ்சுழி நாதமெ ழுந்திடப்
பந்தத் [1]தலைபதி னாறு கலையதாக்[2]
[3]கந்தர [4]வீகாரங் காலுடம் பாயினா[5]
[6]ரந்தமு மின்றியே யைம்பத்தொன் றாமே. (43)

வேறு பாடம்: 1. தலைவிற் (ஈ ஓ) II; தலையிற் (அ இ) II; தலைவி பதினாறு (எ) II. 2. கலையதாய்க் (ஆ இ) I. 3. கந்த (ஆ) II. 4. வாகரங் (எ) II; பீகரங் (ஈ) விகாரங் (ஓ) I. 5. பாயினார்க் (ஆ) IV. 6. ளந்தமு (எ) I; கந்தமு (ஆ) IV.

கருத்து: நாதத்திலிருந்து விந்து தோன்றும் என்பதின்றி, யோகியின் அனுபவத்தில் விந்துவிலும் நாதம் உண்டாக, அந்தச் சிவசத்தி கலந்த காட்சி, சகஸ்ராரத்தில், திருவம்பலச்சக்கரத் தியானத்தின் பயனாகக் கிடைக்கும் பொழுது, 'ஓம்' என்பதில் முதல் உயிர் எழுத்தாகிய 'அகரத்' திலிருந்து ஏனைய 15 உயிரெழுத்துக்களும் தோன்றும். அகரம் என்பதால் குறிக்கப்படும் சந்திரன் முழுச் சந்திரனாய்ப் பதினாறு கலை உடையதாய் விளங்கும் (விளக்கம் 'சந்திர யோகம்' என்னும் அதிகாரத்தில் காண்க.) அச்சமயம் கழுத்தில் 'இகரம்' என்பதால் குறிக்கப்படும் அக்கினி மெய்யெழுத்துக்கள் 35 - ஐயும் வெளிப்படுத்தும். ஆக, யோகிக்கு அனுபவம் கழுத்திற்கு மேல் என்றபடி 51 எழுத்துக்களும் அவனது கழுத்திற்கு மேல் தோன்றும். இந்த நாத அனுபவம் முடிவற்றது ஆகும்.

956. ஐம்ப தெழுத்தே யனைத்துவே தங்களு
மைம்ப தெழுத்தே யனைத்தா கமங்களு
மைம்ப தெழுத்தேயு மாவ தறிந்தபி
னைம்ப தெழுத்தும்போ யஞ்செழுத் தாமே. (ஔ, ப)

படைத்தவன்

957. அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தன
னஞ்செழுத் தாற்பல யோனி படைத்தன
னஞ்செழுத் தாலிவ் வகலிடந் தாங்கின
னஞ்செழுத் தாலே யமர்ந்துநின் றானே. (44)

கருத்து: சிவபெருமான் திருவைந்தெழுத்திலிருந்து ஐம்பூதங் களையும் சீவ வகைகளையும் படைத்தான். உயிர்களைத் திருவைந்

தெழுத்தால் காப்பாற்றுகின்றான். அம்மந்திரத்தை விரும்பி அருள் செய்வான்.

அகலிடம் - அண்டங்கள், அமர்ந்து - விரும்பி.

958. வீழ்ந்தெழ லாம்விகிர் தன்றிரு நாமத்தைச்
சோர்ந்தொழி யாமற் றொடங்கு மொருவற்குச்
சார்ந்த வினைத்துயர் போகத் தலைவனும்
போந்திடு மென்னும் புரிசடை யோனே. (ங)

உடல், உள்ளம், உயிர் - இவற்றின் துணை

959. உண்ணும் மருந்தும், உலப்பு - இலி காலமும்,
பண் உறு கேள்வியும் பாடலுமாய் நிற்கும்,
விண் நின்று அமரர் விரும்பி அடி தொழ
எண் நின்று, எழுத்து அஞ்சும் ஆகி நின்றானே.

உண்ணு மருந்து முலப்பிலி காலமும்
பண்ணுறு கேள்வியும் பாடலு மாய்நிற்கும்
விண்ணின் றமரர் விரும்பி யடிதொழ
வெண்ணின் றெழுத்தஞ்சு மாகிநின் றானே. (45)

கருத்து: தேவர்கள் வணங்க, எத்துணையோ காலமாகத் திருவைந் தெழுத்து வடிவமாக இருக்கும் சிவபரம்பொருள், இக்காலம் எல்லாம் நோய் தீர்க்கும் மருந்தாகவும், அறியாமை நீக்கும் நூலறிவாகவும், அருளாளர் பாடும் பாடலின் பொருளாகவும் இருக்கின்றான்.

மருந்து - உணவு. உலப்பு - அழிவு. கேள்வி - வேதம். பாடல் - அருளாளர் பாடல். எண் இன்று - கால அளவின்றி.

அருட் கொடை

960. ஐந்தின் பெருமை யகலிட மாவது
வைந்தின் பெருமையே யாலய மாவது
வைந்தின் பெருமை யறவோன் வழக்கமு
மைந்தின் [1]வகைசெயப் பாலனு மாமே. (45)

வேறு பாடம்: 1. வகையேயப் (அ) IV.

கருத்து: உலகின் பெருமை திருவைந்தெழுத்தின் பெருமை. அதுவே திருக்கோயில். சிவம் தந்த அருட்கொடை அது. அதைத் தியானித்தால் என்றும் இளமையோடு இருக்கலாம்.

ஐந்து - திருவைந்தெழுத்து. அகல் இடம் - உலகம். அறவோன் - இறைவன், வழக்கம் - கொடை. பாலன் - இளையோன்.

பிரணவம் சிவமே

961. வேர் எழுத்து ஆய், விண் ஆய், அப்புறமாய் நிற்கும்,
நீர் எழுத்து ஆய், நிலம் தாங்கியும் அங்கு உளன்,
சீர் எழுத்து ஆய், அங்கி ஆய், உயிராம் எழுத்து
ஓர் எழுத்து ஈசனும் ஒண்சுடர் ஆமே.

வேரெழுத் தாய்விண்ணா யப்புற மாய்நிற்கு
நீரெழுத் தாய்நிலந் தாங்கியு மங்குளன்[1]
சீரெழுத் தாயங்கி யாயுயி ராமெழுத்
தோரெழுத் தீசனு மொண்சுட ராமே. (47)

வேறு பாடம்: 1. மங்குள்ள (எ ஈ) IV.

கருத்து: 'நமசிவாய' என்னும் புகழ்உடைய மந்திரமாய், மூலக் கனலாய், உயிருணர்வுக்கு உயிராய் உள்ள எழுத்து ஓர் எழுத்து ஆகிய பிரணவமே. ஈசன் அப்பிரணவத்தின் வேர் எழுத்தாகிய அகரமாகவும், ஆகாயமாகவும் நின்று, அப்பாலும் உள்ளான். தன்மை வாய்ந்த மந்திரமாய் நிலத்தைத் தாங்குபவனாகவும், சோதியாகவும் உள்ளான்.

சத்தி வடிவம்

962. நாலாம் எழுத்து ஓசை ஞாலம் உரு அது;
நாலாம் எழுத்தினுள் ஞாலம் அடங்கிற்று;
நாலாம் எழுத்தே நவில வல்லார்கட்கு
நாலாம் எழுத்து - அது நன்னெறி தானே.

நாலா மெழுத்தோசை ஞால முருவது[1]
நாலா மெழுத்தினுள் ஞால மடங்கிற்று
நாலா மெழுத்தே நவிலவல் லார்கட்கு
நாலா மெழுத்தது நன்னெறி தானே. (48)

வேறு பாடம்: 1. முழுவது (ஈ) III.

கருத்து: திருவைந்தெழுத்தில் 4 - ஆம் எழுத்தாகிய வகாரம் சத்தியைக் குறிக்கும். உலகமே சத்தியின் உருவம். அவ்வெழுத்தில் அனைத்துப் பொருள்களும் அடங்கும். அதனை உச்சரிப்பதும், தியானம் செய்வதும் வல்லவர்க்கு அது நன்னெறியைக் (சிவத்தை அடையும் ஞானத்தைக்) காட்டும்.

முதலடி நான்காம் சீருக்குப் பெரும்பாலான சுவடிகளில் உள்ள பாடமே இங்குத் தரப் பட்டுள்ளது. அஃது 'வுருவது' என விருப்பது பொருந்தும்.

பற்று நீங்கிற்று

963. இயைந்தனள் ஏந்திழை என் உளம் மேவி;
நயந்தனள்; அங்கே நமசிவ என்னும்
பயம் தனை ஒரும் பதம்-அது பற்றும்
பெயர்ந்தன; மற்றும் பிதற்று அறுத்தானே.

இயைந்தன ளேந்திழை யென்னுள மேவி
நயந்தன ளங்கே [1]நமசிவ வென்னும்
பயந்தனை [2]யோரும் பதமது பற்றும்[3]
[4]பெயர்ந்தன மற்றும் பிதற்றறுத் தானே[5]. (49)

வேறு பாடம்: 1. நமசிவய (சண்) 2. யோதும் (அ ஐ) II. 3. மற்றும் (ஒ) I; பெற்று (ஐ) I. 4. பெயர்ந்தனன் (எ ஐ) II. 5. தேனே (எ) IV.

கருத்து: நாலாம் எழுத்தின் தியானத்தால் பராசத்தி என் உயிரில் பொருந்திக் கலந்தாள். விருப்புடன் அருள் வழங்கினாள். நற்பலனை எண்ணித் தியானிக்கும் திருவைந்தெழுத்தால் என் உள்ளத்திலிருந்து பற்றுக்கள் நீங்கின. அத்திருப்பெயரை அல்லது வேறு சொற்களைப் பிதற்றுதலைச் சிவபெருமான் போக்கினான்.

சத்தி உடம்பில் நிலவுவாள்

964. ஆமத்து இனிது இருந்து, அன்ன மயத்தினை
ஓமத்திலே உதம் பண்ணும் ஒருத்தி தன்
நாமம் நமசிவா என்று இருப்பார்கட்கு
நேமித் தலைவி நிலவி நின்றாளே.

ஆமத் தினிதிருந் தன்ன மயத்தினை
யோமத்தி லேயுதம் பண்ணு மொருத்திதன்
[1]நாம நமசிவா வென்றிருப் பார்கட்கு
[2]நேமித் தலைவி நிலவிநின் றாளே. (50)

வேறு பாடம்: 1. நாமத்தினை நம சிவாயவென் பார்க்கு (ஆ) IV; நாமநமசிவய (சண்) 2. நேமத் (ஆ எ) IV.

கருத்து: தானியத்தில், அதன் தன்மையாக இருந்து, அதனை உண்பாரின் 'அன்ன மயகோசம்' ஆகிய உடம்பை, அவர் யோகியராயின், அவரது நெற்றி மண்டலம் ஆகிய ஓம குண்டத்தில் விளைக்கும் சிவாக்கினியில் அவியாக்கிச் சிவ கரணங்களை உடைய சுத்தவுடம்பாக வேதகம் செய்யும் பராசத்தியின் ("மேலை நிலத்தினாள் வேதகப் பெண்பிள்ளை" என்ற வண்ணம் மாற்றுபவள் பராசத்தி) திருப்பெயர் 'நமசிவா' என்று, அதனையே தியானித்தும், பேசியும், அருளால் உணர்த்தப்பட்டனவற்றைச் செய்தும், 'தான்' அற்று இருப்பாருக்கு, திருவம்பலச் சக்கரத்தின் தலைவி, அவரது உடம்பில் நிலவி நிற்பவள் ஆகிறாள்.

நேமி - சக்கரம்.

உச்சி நடனம்

965. பட்ட பரிசே பரம் அஞ்செழுத்து - அதின்
இட்டம் அறிந்திட்டு, இரவும் பகல்வர
நட்டம் - அது ஆடும் நடுவே நிலையம் கொண்டு,
அட்ட தேசு அப்பொருள் ஆகி நின்றானே.

[1]பட்ட பரிசே [2]பரமஞ் செழுத்ததி[3]
னிட்ட மறிந்திட் [4]டிரவும் பகல்வர
நட்டம தாடு நடுவே நிலையங்கொண்
டட்டதே சப்பொரு ளாகிநின் றானே[5]. (51)

வேறு பாடம்: 1. பட்டம் (எ) IV. 2. பரவஞ் (ஆ) IV. 3. செழுத்தினி (ஐ) III. 4. புரவு (சண்) 5. றாளே (சண்) (சைவ)

கருத்து: ஐம்பூதம், சூரியன், சந்திரன், இயமானள் - இவ்வெட்டுப் பொருள்களிலும் அவ்வவற்றின் ஒளியாய் (தன்மையாய்) நின்ற சிவபெருமான், திருவம்பலச் சக்கரத்தில், திருவைந்தெழுத்துப் பொருந்திய வகையில், வீடுபேறாகிய விருப்பத்தை (யோகியின் விருப்பத்தை) அறிந்து, இரவிலும் அவன் ஒனியைக் காணுமாறு, அவனது உச்சந்தலை நடுவே நடனமாடுவான்.

பரம் - மேலான. இரவு - இருள்; ஆணவமலம்.

பிரணவமே ஐந்தெழுத்து

966. அகாரம் உயிரே; உகாரம் பரமே;
மகாரம் சிவமாய் வரும் முப்பதத்தில்
சிகாரம் சிவமாய், வகாரம் பரமாய்,
யகாரம் உயிர் என்று அறையலும் ஆமே.

அகார முயிரே யுகாரம் பரமே
[1]மகாரஞ் சிவமாய் [2]வருமுப் பதத்திற்
சிகாரஞ் சிவமாய் வகாரம் பரமா[3]
யகார முயிரென் றறையலு மாமே. (52)

வேறு பாடம்: 1. மகார மலமாய் (இ ஈ எ) II. 2. வருமுப்பத்தாறிற் (இ ஈ எ) II. 3. வடிவமாய் (சண்) (சைவ)

கருத்து: பீரணவம் போன்றே திருவைந்தெழுத்து அமைந் திருப்பதைக் கூறுகிறார். பிரணவத்தை வியட்டியாக ‘அ உ ம’ - என நோக்கினால், அகரம் சீவர்களைக் குறிக்கும். உகரம் பரநிலையைக் குறிக்கும். மகரம் சிவத்தைக் குறிக்கும். அதைப் போலவே, திருவைந்தெழுத்தில், ‘சி’ என்பது சிவத்தையும் ‘வ’ என்பது பரநிலையையும், ‘ய’ என்பது சீவர்களையும் குறிக்கும். ‘பிரணவ சமாதி’ என்னும் அதிகாரத்தில், ‘ஓங்கார சீவ பரசிவ ரூபமே” (பா. 2677 - விசு. பதிப்பு) என ஆசிரியர் கூறுதல் காண்க.

உள்ளத்தில் சிவன் விளங்க

967. நகாரம் மகாரம் சிகாரம் நடுவாய்
வகாரம் இரண்டும் வளியுடன் கூடி
ஓகாரம் முதல்கொண்டு ஒருகால் உரைக்க
மகார முதல்வன் மனத்தகத் தானே.

நகார மகாரஞ் சிகார நடுவாய்
வகார [1]மிரண்டும் வளியுடன் கூடி[2]
[3]யொகார முதல்கொண் டொருக்கா லுரைக்க[4]
மகார முதல்வன் மனத்தகத் தானே. (53)

வேறு பாடம்: 1. மிரண்டு (தி) 2. கூட (ஈ) III; கூட்ட (ஆ) I; கூட்டி (விசு) 3. வுகார (அ) I; யுகார (ஓ) I. 4. லுறைக்க (தி)

கருத்து: 'நம' முதலாகவும் 'சி' நடுவாகவும் அதன்பின் வகாரமும் ஆகக் கூற 'நமசிவா' என்ற மந்திரம் ஒலிக்கும். யகரம் ஆகிய உயிர், அருளாகிய வகாரத்தில் அடங்கும். இந்த நான்கெழுத்து மந்திரத்தை, 'ஓம்' என்ற பிரணவத்தை முன்னர்க்கூட்டி, அசபையாக ஒருமுறை உரைப்பின், பிரணவத்தில் மகார முதல்வனாகிய சிவன் மனத்தில் விளங்குவான்.

உயிர் அருளில் அடங்குதலின் 'வகாரம் இரண்டும்' என்றார். 'இரண்டு வளி' எனக் கொண்டு, ஏற்றி இறக்கி இருமுறை பூரிக்கும் காற்று என்றும் பொருள் செய்யலாம்.

புலன்களை அடக்க

968. அஞ்சு உள ஆனை அடவியுள் வாழ்வன;
அஞ்சுக்கும் அஞ்செழுத்து அங்குசம் ஆவன;
அஞ்சையும் கூடத்து அடக்கவல்லார்கட்கே
அஞ்சு-ஆதி ஆதி அகம் புகலாமே.

அஞ்சுள வானை யடவியுள் வாழ்வன
வஞ்சுக்கு மஞ்செழுத் தங்குச மாவன
வஞ்சையுங் [1]கூடத் [2]தடக்கவல் லார்கட்கே
யஞ்சாதி [3]யாதி யகம்புக லாமே. (54)

வேறு பாடம்: 1. கட்டத் (ஆ) I. 2. தடுக்கவல் (எ) IV. 3. யாகி (அ) I.

கருத்து: தத்துவக் கூட்டமாகிய உடம்பில் ஐந்து பொறிகள் ஆகிய யானைகள் வாழ்கின்றன. இவ்வைந்திற்கும் திருவைந்தெழுத்தே அங்குசம் ஆகும். மனம் என்ற கூடத்தில் அந்த ஐந்தையும் அடக்க வல்லவர்களே ஆன்ம தத்துவங்கட்கெல்லாம் தலைவனாகிய சிவபிரானது திருவடி என்ற தமது வீட்டினை அடைய இயலும்.

புற வழிபாடு வேண்டா

969. ஐந்து கலையில் அகர ஆதி தன்னிலே
வந்த நகர ஆதி மாற்றி, மகர ஆதி,
நந்தி ய - மூலத்தே நாடி, பரையொடும்
சந்தி செய்வார்கட்குச் சடங்கு இல்லை தானே.

ஐந்து கலையி லகராதி தன்னிலே
வந்த நகராதி மாற்றி மகராதி[1]
[2]நந்திய [3]மூலத்தே நாடிப் பரையொடுஞ்
சந்திசெய் வார்கட்குச் சடங்கில்லை தானே. (55)

வேறு பாடம்: 1. யகராதி (அ ஆ ஒ) II. 2. நந்தியை (எ) II. 3. மூலத் திதைநாடி (அ) IV மூலத்தை (இ ஒ) II.

கருத்து: யோக சாதனை புரிவார்க்குக் கிரியை நெறி வேண்டா வென்பது கூறினார். 'ய' என்ற எழுத்தாற் குறிக்கப்படும் உயிர், நமசிவாய மந்திரத்தால் சிவனை மூலாதாரத்தில் தியானித்து, கண்டறிந்து, சத்தி தத்துவத்தில் உள்ள நிவிர்த்திகலை, பிரதிட்டா கலை, வித்தியா கலை, சாந்தி கலை, சாந்தியதீத கலை என்ற ஐந்துடனும் இணைந்து, 'அ' என்ற எழுத்தால் குறிக்கப்படும் சந்திரனின் கலைகள் பதினாறையும் மூச்சுக் காற்றில் இணைக்கும் பொழுது, 'நமசிவாய' என்பதை 'மசிவாயந' என்று மகர முதலாக மாற்றி (திருவம்பலச் சக்கரம் ஐந்து அடுக்குத் திருவைந்தெழுத்தில் கீழே உள்ள அடுக்கு) தியானித்து, சிவத்தைச் சகஸ்ராரத்தில் உள்ள சத்தியோடு ஒருங்கே தரிசித்தால் கிரியை முறை வேண்டா.

சந்தி - முதனிலைத் தொழிற் பெயர். மூலம் - சகஸ்ராரம்.

வீடுபேறு தருபவை

970. மருவும் "சிவாய"-மே மன்னும் உயிரும்,
அருமந்த யோகமும் ஞானமும் ஆகும்;
தெருள்வந்த சீவனார் சென்று, இவற்றாலே
அருள் தங்கி, அச்சிவம் ஆவது வீடே.

மருவுஞ் சிவாயமே மன்னு முயிரு
மருமந்த [1]யோகமு ஞானமு மாகுந்
தெருள்வந்த சீவனார் [2]சென்றிவற் றாலே
யருடங்கி யச்சிவ மாவது வீடே. (56)

வேறு பாடம்: 1. போகமு (அ ஓ) I. 2. சென்றறிவற்றா (ஓ) I.

கருத்து: "நந்தியைப் பரையொடும்" யகரமாக நின்று "சந்தி செய்வார்கட்குச் சடங்கில்லை" என மேற்பாடலில் கூறினார். ஈண்டு அங்ஙனம் கலத்தலின் பயன் கூறுகின்றார்: உயிரானது 'சி' 'வா' என்ற சிவசத்திகளுடன் கலத்தலைச் 'சிவாய' என்ற மூன்றெழுத்து மந்திரம் குறிக்கும். (கலத்தலைச் செய்விக்கும்) அங்ஙனம் கலத்தலே, உயிரின் நிலைபேற்றிற்கு வழியாம். மேலும் அமிர்தமனைய சிவயோகமும் ஆகும். சிவஞானமும் பெறுவிக்கும். சிவஞானம் பெற்ற சீவன் (உயிர்) இஞ்ஞானானுபவத்தில் மேலும் ஆழ்ந்து சென்று, தனது நிலைபேறு, சிவயோகம், சிவஞானம் என்ற மூன்றின் காரணமாகவும், 'வா' என்ற எழுத்துக்குரிய அருளில் தங்கி, (அருள் வெளியில் ஆடி) பிறகு சிவமேயாக அமர்தல் வீடுபேறாகும். இவ்வாறு கூறுதலால் சிவயோகமும் சிவஞானமுமே வீடு பேறு தருவன என்பது தெளிவாம்.

ஐம்மலம் நீங்கும்

971. அஞ்சு உக அஞ்செழுத்து உண்மை அறிந்த பின்
நெஞ்சகத்துள்ளே நிறையும் பராபரம்;
வஞ்சமும் இல்லை, மனைக்கும் அழிவு இல்லை,
தஞ்சம் இது என்று சாற்றுகின்றேனே.

அஞ்சுக வஞ்செழுத் துண்மை யறிந்தபின்
னெஞ்சகத் துள்ளே நிறையும் பராபரம்
வஞ்சமு மில்லை மனைக்கு மழிவில்லை
தஞ்ச [1]மிதுவென்று சாற்றுகின் றேனே. (57)

வேறு பாடம்: 1. மதுவென்று (ஓ) IV.

கருத்து: திருவைந்தெழுத்தை 'மசிவாயந' எனத் தியானிப்பதால் ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்ற ஐந்து மலங்களும் நீங்கும் என்பதை அனுபவமாகக் கண்டால், பராபரப் பொருள் நெஞ்சில் நிறைந்து நிற்கும். உடம்பின் ஐம்பொறிகள் செய்யும் வஞ்சம் நீங்கும் உடம்பும் அழியாது. இஃது உண்மை.

சிவனைக் காணலாம்

972. சிவாய-வோடு 'அவ்-வே தெளிந்து உள்ளத்து ஓத,
சிவாய-வோடு 'அவ்'-வே சிவன் உரு ஆகும்;
சிவாய-வோடு 'அவ்'-வும் தெளிய வல்லார்கள்
சிவாய-வோடு 'அவ்'-வே தெளிந்திருந்தாரே.

சிவாயவோ டவ்வே தெளிந்துள்ளத் தோதச்
சிவாயவோ டவ்வே சிவனுரு வாகுஞ்
சிவாயவோ டவ்வுந் தெளியவல் லார்கள்
சிவாயவோ டவ்வே தெளிந்திருந் தாரே. (58)

கருத்து: மேலே 'அவ்வுண்டு' என்ற பாடலில் கூறப்பட்ட பீச எழுத்துக்களைத் திருவைந்தெழுத்துடன் சேர்த்து ஓதும் முறையை இங்குக் கூறுகின்றார். 'ஓம் ஔம் ஸௌ: மசிவாயந' என்று, ஞானத்தால் தெளிந்த உள்ளத்துடன் தியானித்தால், அம்மந்திரமே சிவபெருமானது காட்சிக்கு ஏதுவாகும். பயிற்சியால் இம்மந்திரத்தின் பயனை அனுபவமாக அடைந்தவர்கள், திருவைந்தெழுத்து ஒன்றையே உறுதியெனத் தெளிந்தனர்.

973. சிகார வகார யகார முடனே
நகார மகார நடுவுற நாடி
ஒகார முடனே யொருக்கா லுரைக்க
மகார முதல்வன் மதித்துநின் றானே. (அ)

ஒவ்வொரு வரிசைக்கும் பயன்

974. நம்முதல் ஓர் ஐந்தில் நாடும் கருமங்கள்
அம்முதல் ஐந்தின் அடங்கிய வல்வினை;
சிம்முதல் உள்ளே தெளிய வல்லார்கட்குத்
தம்முதல் ஆகும் சதாசிவம் தானே.

நம்முத லோரைந்தி னாடுங் கருமங்க
ளம்முத லைந்தி னடங்கிய வல்வினை[1]
சிம்முத லுள்ளே தெளியவல் லார்கட்குத்
தம்முத லாகுஞ் [2]சதாசிவந் தானே. (59)

வேறு பாடம்: 1. வவ்வினை (ஆ இ) IV. 2. சதாசிவன்றானே (சண்)

கருத்து: நகாரம் முதலாக நின்ற ஐந்தெழுத்து மந்திரத் தியானத்தால் எண்ணிய செயல் கை கூடும். இம்மந்திரத்தில் இறுதியாக நின்ற யகரத்தை முதலாகக் கொண்ட ஐந்தெழுத்து மந்திர தியானத்தால் வலிய வினைகள் நீங்கும். சிகரத்தை முதலாகக் கொண்ட ஐந்தெழுத்துத் தியானத்தால் ஞானானுபவம் பெறுவோருக்குச் சதாசிவன் தலைவனாக நிற்பான்.

வீடு தரும் தவம்

975. நவமும் சிவமும் உயிர் பரம் ஆகும்
தவம்; ஒன்றிலாதன தத்துவம் ஆகும்;
சிவம் ஒன்றி ஆய்பவர் ஆதரவால், அச்
சிவம் என்ப தான் ஆம் எனும் தெளிவு உற்றதே.

நவமுஞ் சிவமு முயிர்பர மாகுந்
தவமொன் றிலாதன தத்துவ மாகுஞ்
சிவமொன்றி யாய்பவ ராதர வாலச்
சிவமென்ப தானா மெனுந்தெளி வுற்றதே[1] (60)

வேறு பாடம்: 1. வார்க்கே (ஒ) II.

கருத்து: பிரணவம், திருவைந்தெழுத்து - இவற்றைத் தியானித்தல், உயிர் ‘பரம்’ என்ற நிலையை அடையச் செய்யும் தவம். வீடு பேற்றுக்குரிய தவம். இவற்றின் தொடர்பில்லாத மந்திரங்கள் யாவும் உயிரைத் தத்துவங்களிலே நிறுத்தும். சிவத்தோடு ஒன்றி நின்று உணர்பவர், அவ்வுணர்ச்சியால், ‘அந்தச் சிவமே நாம்’ ஆய் உள்ளது என்னும் ஞானத்தைப் பெறுவர். அப்பேறே வீடு.

புலன்கள் உறவாகும்

976. கூடிய எட்டும் இரண்டும் குவிந்து அறி
நாடிய நந்தியை ஞானத்துளே வைத்து,
வாடிய ஐவரும் அங்கே உறவு ஆவர்கள்,
தேடி அதனைத் தெளிந்து அறியீரே.

கூடிய வெட்டு மிரண்டுங் குவிந்தறி
நாடிய நந்தியை ஞானத்து ளேவைத்து
வாடிய வைவரு மங்குற வாவர்க
[1]டேடி யதனைத் தெளிந்தறி யீரே. (61)

வேறு பாடம்: 1. தேடிய தன்னைத் (இ) IV.

கருத்து: இடக்கண்ணாகிய சந்திரனும் வலக்கண்ணாகிய சூரியனும் புருவமத்தியில் குண்டலியால் கொண்டுவரப்படும் மூலக் கனலுடன் சேர்ந்து, சோதியாகக் காணுகின்ற சிவபெருமானை, மெய்ஞ் ஞானப் பொருளாக உணர்ந்தால், அதுகாறும் விடயங்களிற் சென்று வாட்டமுற்ற புலன்கள் உறவாகும். எனவே சிவனைத் தேடித் தெளிந்தறிக.

சித்தாந்த ஞானபாத உண்மை

977. எட்டும் இரண்டும் இனிது அறிகின்றில;
எட்டும் இரண்டும் அறியாத ஏழையர்;
எட்டும் இரண்டும் இரு மூன்று நான்கு எனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே.

எட்டு மிரண்டு மினிதறி கின்றில
[1]வெட்டு´மிரண்டு மறியாத வேழைய
ரெட்டு மிரண்டு மிருமூன்று நான்கெனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே. (62)

வேறு பாடம்: 1. ரெட்டு (சண்) (சைவ)

கருத்து: எட்டு - அ; சந்திரன். இரண்டு - உ; சூரியன். இவ்விரண்டும் நம் உடம்பில் முறையே இடக்கண், வலக்கண்ணாக உள்ளன. அவ்வொளி இரண்டும் புருவமத்தியில் கூடுவது "எட்டும் இரண்டும்" எனப்படும். அதை யறியாதார் அவற்றை வெற்று எண்களாகக் கருதுவர். இவை கூடினால், 'ய' (10 - ஐக் குறிக்கும் வடிவம்) என்ற உயிர் உணரப்படும். இது சைவ சித்தாந்தம் ஆகிய ஞானபாதத்துக் கூறப்பட்ட உண்மையாகும். இது ஆன்மா தன்னை அறிதல்.

திருவம்பலச் சக்கரம் - மற்றொரு வகை

978. எட்டு வரையின் மேல் எட்டு வரை கீறி
இட்ட நடுவுள் இறைவன் எழுத்து ஒன்றில்,
வட்டத்திலே அறை நாற்பத்தெட்டும் இட,
சிட்ட அஞ்செழுத்தும் செவ்விதிற்கு ஆமே.

எட்டு வரையின்மே லெட்டு வரைகீறி
யிட்ட நடுவு ளிறைவ னெழுத்தொன்றில்[1]
வட்டத்தி [2]லேயறை நாற்பத்தெட் டும்மிடச்[3]
சிட்டஞ் செழுத்துஞ் [4]செவ்விதிற் காமே. (63)

வேறு பாடம்: 1. னெழுத்தாறில் (இ ஈ) IV. 2. லேமறை (அ ஒ) I; லேவரை (ஆ) III. 3. டும்மிட்டுச் (எ) IV. 4. செவிகிறகாமே (இ ஓ) IV; செவிசக்கரமே (ஓ) III; செபிசீக்கிரமே. (எ) II.

கருத்து: திருவம்பலச்சக்கரத்தில் மற்றொரு வகை கூறுகின்றார். குறுக்கிலும் நெடுகிலும் எட்டு எட்டுக் கோடு வரைந்து. 7 அடுக்குகளில் 49 அறைகள் உண்டாக்க, நடு அறையில் இறைவன் எழுத்தாகிய 'ஓகாரம் வளைத்துப் புள்ளி நீக்கிய மகரத்தை - ஓம் என்பது வருமாறு மற்ற நடு அறைகள் 24 - ஐயும் முன்னைப் பாடல்களில் கூறியவாறு, 2 - வது அடுக்குத் தொடங்கி, முறையே 'சிவாயநம', நம சிவாய; 'யநமசிவா'; 'வாயநமசி' 'மசிவாயந' என 6 வது அடுக்கு வரை எழுத, மேன்மையான திருவைந்தெழுத்து மந்திரம் செவ்விய செபத்திற்கும் தியானத்திற்கும் உதவும்.

இறைவன் எழுத்து - திருவம்பலச் சக்கரத்தில் சத்தி எழுத்தாகிய ஓ என்பதும், சிவன் எழுத்து ஆகிய, புள்ளியில்லா மகர மெய்யும் ஆகும். இச்சக்கரத்தின் சிறப்பு இது.

புற வட்டமாக உள்ள ஏனைய அறைகள் 24 - இலும் இடும் எழுத்துக்கள் பல தெய்வங்கட்குரிய பீஜங்கள் ஆகும். அவற்றை அடுத்த பாடலில் கூறுகின்றார்.

சக்கர அமைப்பு

979. தானவர், சட்டர், சதிரர் இருவர்கள்
ஆன இம்மூவரோடு ஆற்றவர் ஆதிகள்
ஏனைப் பதினைந்தும் விந்துவும் நாதமும்
சேனையும் செய்யச் சிவாக்கரம் தானே.

திருவம்பலச் சக்கரம் (மற்றொரு வகை)

(978 - 979 - ஆம் பாடல்களில் குறிப்பிடப்படுவது)

	1	2	3	4	5	6	7	
	ஹ்யம்	ஸம்	ப்ரும்	ஹ்வம்	ஹ்லாம்	கம்	ஈம்	
24	வம்	சி	வா	ய	ந	ம	ஹ்விம்	8
23	ஶம்	ந	ம	சி	வா	ய	ஹ்ரூம்	9
22	ரும்	ய	ந	ஓம்	சி	வா	ஹ்யைம்	10
21	நம்	வா	ய	ந	ம	சி	ஹ:	11
20	கம்	ம	சி	வா	ய	ந	ளம்	12
	ந்ரூம்	யம்	பம்	சம்	அ:	அம்	ரம்	
	19	18	17	16	15	14	13	

திருவம்பலச் சக்கரத்தில் புற வட்டமாக 1 முதல் 24 வரை எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றின் விளக்கம்

பீஜ எழுத்துக்களும் தெய்வங்களும்

1.	hyam	-	வாயு	13.	ram	-	அக்கினி
2.	sam	-	மகாகாளன்	14.	am	-	விந்து
3.	brum	-	பிருங்கி	15.	ah	-	நாதம்
4.	hvam	-	வீரபத்திரன்	16.	cam	-	சண்டன்
5.	hlām	-	பிரமன்	17.	bham	-	வயிரவன்
6.	gham	-	குபேரன்	18.	yam	-	இயமன்
7.	ஈம்	-	ஈசானன்	19.	nrūm	-	நிருதி
8.	hvim	-	திருமால்	20.	gam	-	கணபதி
9.	hrūm	-	உருத்திரன்	21.	nam	-	நந்தி
10.	hyaim	-	மகேச்சுரன்	22.	rum	-	இயன்
11.	hah	-	சதாசிவன்	23.	zam	-	முருகன்
12.	ḷam	-	இந்திரன்	24.	vam	-	வருணன்

தானவர் சட்டர் சதிர ரிருவர்க
ளானவிம் மூவரோ டாற்றவ ராதிக
ளேனைப் பதினைந்தும் விந்துவு நாதமுஞ்
சேனையுஞ் [1]செய்யச் சிவாக்கரந் தானே. (64)

வேறு பாடம்: 1. செய்சிவ சக்கரந் (எ) IV.

எண்டிசைக் காவலர் எண்மர், பைரவர், வீரபத்திரர், விநாயகர்[1], முருகன், உருத்திரர் முதலியோர், நந்தி , இடபன், மகாகாளன், பிருங்கி, சண்டன், விந்து, நாதம் - ஆக 24 தெய்வங்களின் பீஜ எழுத்துகளையும் இட, சிவ அட்சரமாக - திருவைந்தெழுத்துச் சக்கரமாக - அமையும். இச்சக்கரம் இணைக்கப்பட்டுள்ளது.

உடம்பில் பராபரம் நிறையும்

980. பட்டன மாதவம் ஆறும் பராபரம்;
விட்டனர் தம்மை, 'விகிர்தா நம' என்பர்;
எள் தனை ஆயினும் ஈசன் திறத்திறம்
ஒட்டுவன், பேசுவன், ஒன்று அறியேனே.

[1]பட்டன மாதவ [2]மாறும் பராபரம்
விட்டனர் தம்மை விகிர்தா நமவென்ப
ரெட்டனை யாயினு மீசன் றிறத்திற
மொட்டுவன் பேசுவ னொன்றறி யேனே. (65)

வேறு பாடம்: 1. பட்டண (எ) I; 2. மாற்றும் (எ) IV.

கருத்து: திருவம்பலச் சக்கர தியானம் ஆகிய பெரிய தவத்தைப் பொருந்திய ஆறு ஆதாரங்களும் பராபரம் நிறையப் பெறும். இத்தவமுடையோர் தற்போதத்தை விட்டு, 'விகிர்தாநம' எனப் பர உணர்வுடனே இருப்பர். அத்தவத்தின் கூறுபாடுகளில் ஒன்றேனும் அறியாத நான், அவ்வன்பர்களுடன் சேர்ந்து, இறைவனின் பல்வகைத் திறங்களுள் ஒரு திறத்தில் சிறிதைப் பேசுவேன்.

1 *திருமூலர் காலத்தில் விநாயகர் வழிபாடு தமிழகத்தில் இல்லை யாதலின் இப்பாடலின் உரையிலும், இது குறிக்கும் சக்கரத்திலும் விநாயகர் இடம் பெற்றது பிற்காலத்தில் எனக் கருதலாம்.*

கொண்டு கூட்டு: மாதவம் பட்டன ஆறும் பராபரம்; தம்மை விட்டனர் விகிர்தா நம என்பர்.

குறிப்பு: அடுத்துள்ள "சிவன் முதல்" என்ற பாடல் 'திரிமூர்த்தி' இயலில் வந்தது. எனவே, இங்கு விடப்படுகிறது.

துணைச் சக்கரம்

981. வித்து ஆம் சகமயம் ஆக வரை கீறி
நத்து ஆர் கலைகள் பதினாறு நாட்டி, பின்
உத்தாரம் பன்னிரண்டு ஆதி கலைதொகும்
பத்தாம் பிரமசடங்கு பார்த்து ஓதிடே.

வித்தாஞ் சகமய மாக வரைகீறி
நத்தார் [1]கலைகள் பதினாறு நாட்டிப்பின்
னுத்தாரம் பன்னிரண் டாதி கலைதொகும்
பத்தாம் பிரம சடங்குபார்த் தோதிடே. (66)

வேறு பாடம்: 1. கலைபதினாறு (எ) IV.

கருத்து: திருவம்பலச் சக்கரத்திற்கு உபசக்கரம் அமைத்தல் பற்றிக் கூறுகின்றார். உலகிற்கு வித்தாகிய 36 தத்துவங்களின் அளவில் அறை அமைத்து, இடப்பக்கம் சந்திரனின் கலைகளாக, க்ஷ முதல் டகாரம் வரை எழுதி, வலப்பக்கம் 12 அறைகளில் சூரிய கலைகளாக ஞ முதல் எ வரை எழுதி, எஞ்சிய எட்டு அறைகளிலும் இந்த அடுக்கிற்கு மேலே முடிபோல வரையும் இரண்டு அறைகளிலும் அக்கினியின் கலைகளாக லு முதல் 10 உயிரெழுத்துக்களை எழுதுக. இவற்றைச் செபிக்கும் போது, விந்துவின்-எழுத்தாகிய 'உ' - என்பதில் முடிக்க வேண்டும். இதனைத் திரிமண்டல சக்கரம் என்பர்.

பிரம சடங்கு - யாகம். இச்சக்கரம் இணைக்கப்பட்டுள்ளது.

ஆண்டான் - அடிமை உறவு

982. கண்டொழிந்தேன் கமலமலர் உள்ளிடை;
கொண்டு ஒழிந்தேன் உடன் கூடிய காலத்துப்
பண்டு அழியாத பதிவழியே சென்று
நண்பு அழியாமே நம எனலாமே.

திரிமண்டலச் சக்கரம்

(முன்பக்கம் 981 - ஆம் பாடலில் குறிப்பிடப்படுவது)



விளக்கம் :

I. *இடப்பக்கம் மூன்றாம் அடுக்கு முதல் ஆறாம் அடுக்கு வரை ஒவ்வோர் அடுக்கிலும் 4 அறை வீதம் 16 அறைகள் சந்திர மண்டலம்*

II. *வலப்பக்கம் முதலாம் அடுக்கு முதல் ஆறாம் அடுக்கு வரை ஒவ்வோர் அடுக்கிலும் 2 அறை வீதம் 12 அறைகள் சூரிய மண்டலம்*

III. *முதல் 2 அடுக்கிலும் 8 அறைகளும் கொண்டை அறை 2 ம் அக்கினி மண்டலம்.*

[1]கண்டொழிந் தேன்கம [2]லம்மல ருள்ளிடைக்
[3]கொண்டொழிந் தேனுடன் கூடிய காலத்துப்
[4]பண்டழி யாத பதிவழி யேசென்று
நண்பழி யாமே நமவென லாமே. (67)

வேறு பாடம்: 1. கண்டெழுந் (எ) II. 2 லமல (சுவ) V. 3. கொண்டேழுந் (த) (வ) 4. பண்பழி (எ) IV.

கருத்து: சிவபெருமானை என் தலையுச்சியில் சகஸ்ராரத் தாமரையின் உள் நின்று எழும் சோதியாகக் கண்டு, அந்நிலையிலே நின்றேன். அச்சிவத்துடன் ஒன்றிநின்றேன். அப்பொழுது அவனை என்னுள் கொண்ட வண்ணமே நின்றேன். எல்லையில்லாக் காலம் முதல் அவன் தலைவன்; உடையான். நான் அடியவன். நான் சிவனோடு ஒன்றி உணரினும் இந்த உறவு மாறவில்லை. இவ்வுறவு நல்கிய ஞானம் பதிஞானம். அதன் வயமே நின்று, அவனை 'நமசிவாய' என்று கூறி வணங்கப் பெற்றேன்.

தேவர்களின் அருச்சனை

983. புண்ணிய வானவர் பூமழை தூவிநின்
[1]றெண்ணுவ ரண்ண லிணையடி மந்திர
நண்ணுவர் நண்ணி நமவென்னு நாமத்தைக்
கண்ணென வுன்னிக் கலந்துநின் றானே[2]. (68)

வேறு பாடம்: 1. றெண்ணிய வண்ண (அ) III. 2. றாரே (சைவ)

கருத்து: தேவர்கள் சிவபெருமான் திருவடிகளைத் தமது கண் எனக் கருதி அன்பு செலுத்தித் திருவைந்தெழுத்து அர்ச்சனை செய்வர். அவனும் அவர்களுக்கு அருள் புரிந்து, தன்னோடு கலப்பித்தான்.

நண்ணுவர் - சரண்புகுவர். உன்னி என்ற வினையெச்சத்தை 'உன்ன' என மாற்றுக. கண் - அறிவு; பதி ஞானம். தலையுச்சியில் இறைவனின் சோதி வடிவத்தைக் காட்டும் கண் திருவைந்தெழுத்தே என ஊன்றி நினைக்க எனலும் ஆம்.

984. ஆறெழுத் தாவது வாறு சமயங்க
ளாறுக்கு நாலே யிருபத்து நாலெனபர்
சாவித் திரியிற் றலையெழுத் தொன்றுள
பேதிக்க வல்லார் பிறவியற் றார்களே. (ட, ண)

இசையுடன் மந்திரம்

985. எட்டினில் எட்டு அறை இட்டு, ஓர் அறையிலே
கட்டிய ஒன்று, எட்டால் காணும் நிரை இட்டுச்
சுட்டி, இவற்றைப் பிரணவம் சூழ்ந்திட்டு
மட்டும் உயிர்கட்கு உமாபதியான் உண்டே.

எட்டினி லெட்டறை யிட்டோ ரறையிலே
கட்டிய [1]வொன்றெட்டாற் காணு நிரையிட்டுச்[2]
சுட்டி யிவற்றைப் பிரணவஞ் சூழ்ந்திட்டு
மட்டு முயிர்கட் குமாபதி யானுண்டே. **(69)**

வேறு பாடம்: 1. வொன்றெட்டாய்க் காண (எ) I. 2. நிறையிட்டு (ஆ இ ஈ எ ஒ) I.

கருத்து: திருவம்பலச் சக்கரத்தில் ஐந்து அடுக்குகளாக உள்ள திருவைந்தெழுத்தைச் செபித்தல், இசையுடன் ஓதல், யோகி தன் உள் எழும் நாதத்துடன் தியானித்தல் என்ற மூன்றுக்கும் இப்பாடலில் முறை கூறுகின்றார். குறுக்கிலும் நெடுகிலும் நான்கு நான்கு கோடாக, எட்டுக் கோடு கீறி, அவற்றுள் அமையும் 9 அறைகளுள், நடு அறையில், திருவைந்தெழுத்தின் முதல் அடுக்கின் முதல் எழுத்தாகிய 'சி' என்பதை எழுதுக. அதைச் சுற்றிலும் உள்ள 8 அறைகளில், உயிரெழுத்து 16 - ஐயும் அறைக்கு இரண்டு எழுத்தாக எழுதுக. அவ்வுயிரெழுத்துக்களுக்கு 'ஸ்வரங்கள்' என்பது பெயர். இவ்வாறு எழுதுவதால் 'சி' எனத் தொடங்கும் திருவைந்தெழுத்தை 16 உயிரொலிகளாக உள்ள 8 ஸ்வரங்களும் நெருங்கும். அதாவது திருவைந்தெழுத்திற்கு இசையூட்டிப் பண் அமைக்கப்படும். அவ்வுயிர்களைக் காரணமாகக் கொண்டு 'ஓம்' என்ற பிரணவம் திருவைந்தெழுத்தைச் சூழும். அந்த முறையில், மற்ற 4 அடுக்கு களையும் இசைப்படுத்த வேண்டும். ஓர் உதாரணம்: "ஓம் சௌ: அம் ஹரீம் ஹம் க்ஷம் ஆம் நம சிவாய" என்பது. மற்றுமோர் உதாரணம்: "ஓம் சௌ: ஹம் கம் ஆம் அம் ஹ்ரீம் சிவாயநம" என்பது. இவ்வாறு பல்லாயிரம் முறை சக்கரத்தியானம் அல்லது இசைவழிபாடு, அல்லது செபம் செய்யின், உமாபதி தரிசனம் அருள்வான்.

கொண்டு கூட்டு: 2ஆம் அடியின்பின், "மட்டும் உயிர்கட்கு, இவற்றைச் சுட்டிப் பிரணவம் சூழ்ந்திட்டு உமாபதியான் உண்டே". நிரை - பண்ணுக்கு ஏற்ற ஸ்வரவரிசை. சூழ்ந்திட்டு என்பதைச் 'சூழ்ந்திட' என மாற்றுக.

சத்தி நாதன்

986. ந-முதல் அ-ஒடு நாவினர் ஆகியே
அ-முதலாகிய எட்டு இடை உற்றிட்டு,
உ-முதலாக உணர்பவர் உச்சிமேல்
உ-முதல் ஆயவன் உற்று நின்றானே.

நம்முத லவ்வொடு நாவின ராகியே
யம்முத லாகிய வெட்டிடை யுற்றிட்டு
வும்முத [1]லாக வுணர்பவ ருச்சிமே
லும்முத லாயவ னுற்றுநின் றானே. (70)

வேறு பாடம்: 1. லாகவேயுண்பவ (ஆ இ ஈ எ) II.

கருத்து: மேற்பாடலில் திருவைந்தெழுத்து அடுக்கிற்கு இசையூட்டும் முறை கூறி, இப்பாடலில் அம் மந்திரத்தைக் கூறும் முறையில் மற்றுமொரு செய்தியைக் கூறுகின்றார். 'நமசிவாய' எனச் செபிக்கத் தொடங்கி அகர வுயிர் முதல் உள்ள 8 ஸ்வரங்களை ஊட்டி, 'உ' என்பதை இறுதியில் வைத்து, பரம்பொருளைத் தியானிப்பவரின் சகஸ்ராரத்தில் 'உ' என்ற குறியீட்டால் குறிக்கப்படும் சத்திநாதன் விளங்குவான். இம்முறையில் 'ஓம் சௌ: அம் ஹ்ரீம் ஹம் கம் ஆம் நமசிவாய - உ "எனச் செபித்தலும் தியானித்தலும் செய்க.

3 ஆம் அடி: முதல் - இறுதி.

987. நின்ற வரசம் பலகைமே னேராக
வொன்றிட மவ்விட்டு வோலையிற் சாதகந்
துன்று மெழுகையுள் பூசிச் சுடரிடைத்
தன்ற வெதுப்பிடத் தம்பனங் காணுமே. (த)

988. கரண_விரளிப் பலகை யமன்றிசை
மரண மிட்டெட்டின் மகார வெழுத்திட்டு
வரணமி லைங்காயம் பூசி யடுப்பிடை
முரணிற் புதைத்திட மோகன மாகுமே (த)

989. ஆங்கு வ்டமேற்கி லையனார் கோட்டத்திற்
பாங்கு படவே பலாசப் பலகையிற்
காங்கரு மேட்டிற் கடுப்பூசி விந்துவிட்
டோங்காரம் வைத்திடு முச்சா டனத்துக்கே. (த)

990. உச்சியம் போதி லொளிவன்னி மூலையிற்
பச்சோலை யிற்பஞ்ச காயத்தைப் பாரித்து
முச்சது ரத்தின் முதுகாட்டில் வைத்திடு
வைச்சபின் மேலோர் மாரணம் வேண்டிலே. (த)

991. ஏய்ந்த வரிதார மேட்டின்மே லேபூசி
யேய்ந்த வகார முகார மெழுத்திட்டு
வாய்ந்ததோர் வில்லம் பலகை வசியத்துக்
கேய்ந்தவைத் தெண்பதி னாயிரம் வேண்டிலே. (த)

992. எண்ணாக் கருடனை யேட்டின் யகாரமிட்
டெண்ணாப் பொன்னாளி லெழுவெள்ளி பூசிடா
வெண்ணாவற் பலகை யிட்டுமேற் கேநோக்கி
யெண்ணா வெழுத்தொடெண் ணாயிரம் வேண்டிலே.
(த)

அர்ச்சனை

993. அம்புய நீலங் கழுநீ ரணிநெய்தல்
வம்பவிழ் பூகமும் மாதவி மந்தாரந்
தும்பை வகுளஞ் சுரபுன்னை மல்லிகை
செண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே.[1] (த)

994. சாங்கம தாகவே சந்தொடு சந்தனந்
தேங்கமழ் குங்குமம் கற்பூரங் காரகிற்
பாங்கு படப்பனி நீராற் குழைத்துவைத்
தாங்கே யணிந்துநீர் அர்ச்சியு மன்பொடே. (த)

995. அன்புட னேநின் றமுதமு மேற்றியே
பொன்செய் விளக்கும் புகைதீபந் திசைதொறுந்
துன்ப மகற்றித் தொழுவோர் நினையுங்கால்
இன்புட னேவந் தெய்திடு முத்தியே. (த)

996. எய்தி வழிப்படி லெய்தா தனவில்லை
யெய்தி வழிப்படி லிந்திரன் செல்வமுன்
எய்தி வழிப்படி லெண்சித்தி யுண்டாகு
மெய்தி வழிப்படி லெய்திடு முத்தியே. (த, ட)

1 *திருவம்பலச் சக்கரம் என்ற அதிகாரத்தின் இறுதியில் யந்திரம் எழுதுவது பற்றிய பாடல்கள் பிற்காலத்தால் எழுதிச் சேர்க்கப்பட்டமை போல, அவ் யந்திரத்தை அருச்சிக்கும் முறை பற்றி இப்பாடல் முதல் 12 பாடல் கொண்ட "அர்ச்சனை" என்ற அதிகாரமும் பிற்காலத்தாரால் எழுதிச் சேர்க்கப்பட்டது.*

997. நண்ணும் பிறதார நீத்தா ரவித்தார்
மண்ணிய நைவேத் தியமன்னு சந்தான
நண்ணிய பஞ்சாங்க நண்ணுஞ் செபமென்னு
மன்னு மனபவ னத்தொடு வைகுமே. (த, ட)

998. வேண்டார்கள் கன்மம் விமலனுக் காட்பட்டோர்
வேண்டார்கள் கன்ம மதிலிச்சை யற்றபேர்
வேண்டார்கள் கன்ம மிகுசிவ யோகிகள்
வேண்டார்கள் கன்ம மிகுதியோ ராய்ந்தன்பே. (த)

999. அறிவரு ஞானத் தெவரு மறியார்
பொறிவழி தேடிப் புலம்புகின் றார்கள்
நெறிமனை யுள்ளே நிலைபெற நோக்கி
வெறிமணி யுள்ளே யிருக்கலு மாமே. (த)

1000. இருளும் வெளியும்போ லிரண்டா மிதய
மருளறி யாமையு மன்னு மறிவு
மருளிவை விட்டெறி யாமை மயங்கு
மருளுஞ் சிதைத்தோ ரவர்களா மன்றே. (த)

1001. தானவ னாக வவனேதா னாயிட
வான விரண்டி லறிவன் சிவமாகப்
போனவ னன்பிது நாலா மரபுறத்
தானவ னாகுமோ ராதித்த தேவரே. (த, ஔ)

1002. ஓங்கார முந்திக்கீழ் உற்றிடும் எந்நாளும்
நீங்கா வகாரமும் நீள்கண்டத் தாயிடும்
பாங்கார் நகாரம் பயில்நெற்றி யுற்றிடும்
வீங்காகும் விந்துவும் நாதமே லாகுமே. (த)

1003. நமவது வாசன மான பசுவே
சிவமது சித்திச் சிவமாம் பதியே
நமவற வாதி நாடுவ தன்றாஞ்
சிவமாகு மாமோனஞ் சேர்தல்மெய் வீடே (த)

1004. தெளிவரு நாளிற் சிவஅமு தூறும்
ஒளிவரு நாளில் ஓரெட்டில் உகளும்
ஒளிவரும் அப்பதத் தோரிரண் டாகில்
வெளிதரு நாதன் வெளியாய் இருந்தே (த)

**** திருமந்திரம் முதற் பகுதி முற்றும் ****

பின்னிணைப்பு I

பாடல் முதற்குறிப்பு அகர நிரல்

பின்னிணைப்பு – II

இம்முதற் பகுதியில் இருமுறை / மும்முறை வந்த பாடல்கள்

எண்	பாடல்	வந்த இடம்
1.	அவனை யொழிய	கடவுள் வாழ்த்து – திரிபுரைச் சக்கரம்
2.	உண்ணீரமுத	கள்ளுண்ணாமை – சந்திர யோகம்
3.	ஏனோர் பெருமைய	கர்ப்பக் கிரியை – பசு இலக்கணம் : சீவன் – தோத்திரம்
4.	ஐம்பதெழுத்தே	திருவம்பலச்சக்கரம் –தூலபஞ்சாக்கரம்
5.	ஒன்றிய வீரெண்	இளமை நிலையாமை – சந்திரயோகம்
6.	ஓலக்கஞ் சூழ்ந்த	திரிமூர்த்தி – பொறையுடைமை
7.	சத்திசிவன்	மூவகைச் சீவவருக்கம் – ஞானலிங்கம்
8.	சிவன்முதல்	திரிமூர்த்தி – திருவம்பலச்சக்கரம்
9.	தேடுந்திசை	சருவ சிருட்டி– திதி
10.	நின்றதுதானாய்	சருவ சிருட்டி – திரோபவம்

பின்னிணைப்பு – III

கலைச் சொல் அகர நிரல்

எண் : பாட்டெண்

1. சைவ சித்தாந்தம்

அகலர்	–	கலை நீங்கியவர்,	305
அசித்து	–	அறிவில்லாப் பொருள்	88
அணு	–	உயிர்	487
அதோமுகம்	–	கீழ் நோக்கியது	187, 192
அந்தக் கரணம்	–	உட் கருவி	706
அமுரி	–	அமுதம்	838
அருட் சத்தி	–	சிவத்தின் அருட் பண்பு என்ற ஆற்றல்	1
ஆணவம்	–	ஒரு மலம்,உயிரை அணுத் தன்மையது ஆக்குவது.	209
இரு மல பெத்தர்	–	பிரளயாகலர்; ஆணவம், கன்மம் என்ற இரு மலம் உடையோர், பெத்தர் – கட்டுண்டோர்,	302
இருவினை	–	நல்வினை, தீவினை ஆகியவற்றின் பயன்,	103
உடனாதல்	–	சைவ சித்தாந்தம் 'அத்வைதம்' என்ற சொல்லுக்குத் தரும் முந்நிலை விளக்கத்துள் ஒன்று. சிவம் உயிரோடு உடன் நின்று அறிதல்.	240
எண் குணம்	–	சிவத்தின் குணங்கள்	253
ஐம்மலம்	–	ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி,	304
காரணக் கடவுளர்	–	பிரமன், திருமால், உருத்திரன்,	200
சகலர்	–	மும்மலமும் உடையோர்,	300
சத்தி புவனங்கள்,			686
சாக்கிராதீதம்,			235
சிவம்	–	திருவைந்தெழுத்து,	975
சிற்பரம்,			882

தேசி	–	குண்டலி,	716
நடுநாடி	–	சுழுமுனை,	582
நவகுண்டம்,			164
நிராதார யோகம்	–	சகஸ்ராரம், அதற்கு மேல் உள்ள சிதாகாயம், பராகாயம் – இவற்றுடன் தொடர்புடைய யோகம்	792
பரகாயம்	–	ஞானவுடம்பு,	636
பாதம்	–	ஆகாயம்,	199
பிங்கலை	–	ஒரு நாடி,	467
பிரசாதம்	–	மந்திர வகை	941
பிரணவவுடம்பு,			692
பிராணசத்தி	–	மூலக்கனல் என்ற சொல் காண்க.	
பூரி	–	பூரகம்,	564
மண்டலம்			607, 616, 745
மூலம்	–	மூலாதாரம், 58	
மூலக் கனல்	–	உயிர்ச்சத்தி, உயிராற்றல் (உடலோடு தொடர்புடையது. உடலில் உள்ளமையால் உயிர் பெறும் ஆற்றல்)	300
மூலபந்தம்	–	ஒரு முத்திரை,	813
மேரு	–	தலை,	612
மேலைத்துவாரம்	–	பிரமரந்திரம், உச்சந்தலைக் குழி,	149
யோகாந்தம்	–	யோக நெறி,	228
வட்டம்	–	பிரணவம்,	760
		ஆதாரம்,	761
		ஆகாயம்,	834
வன்னி	–	சிவாக்கினி, மூலக்கனல்,	731
வான்னீர்	–	அமுதம்	404

பின்னிணைப்பு – IV

கலைச் சொல் விளக்கம்

1.	அத்துவா 6	.....	வன்னம், பதம், மந்திரம், புவனம், தத்துவம், கலை.
2.	அவத்தை 5	..	சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்
3.	இந்திரியம் 2 வகை	..	(1) ஞானேந்திரியம் 5: மெய், வாய், கண், மூக்கு, செவி (2) கன்மேந்திரியம் 5: வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்.
4.	ஐந்து மூர்த்திகள்	..	பிரமன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன்
5.	உடம்பு வகை 5	..	அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்த மய கோசம்.
6.	உடம்பின் மற்றொரு வகைப்பாடு	..	தூல சரீரம், சூக்கும சரீரம், குணசரீரம், கஞ்சுக சரீரம், காரண சரீரம்.
7.	உயிருணர்வு	–	உணர்வது உயிரே. ஐம் பொறி, புலன், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் முதலிய கருவிகளால் உணர்கிறது. அவ்வாறன்றி, அது தானே உணர்வது உயிருணர்வு. ஏனைய, முறையே புலனுணர்வும், மனவுணர்வும்.
8.	உலகம் 7	..	பிரம லோகம், விட்டுணு லோகம், உருத்திர லோகம், மகேசுர லோகம், சதாசிவலோகம், சத்திலோகம், சிவ லோகம்.
9.	கலைகள் (சைவ சித்தாந்தம்) 5	...	நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை.
10.	கன்மேந்திரிய விடயங்கள்	..	வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம்.
11.	காமியம் 8	..	தருமம், ஞானம், வைராக்கியம்,

			செல்வம், அதருமம், அஞ்ஞானம், மனவுறுதியின்மை, வறுமை,
12.	காரியக் கடவுளர்	..	பிரமன், திருமால், உருத்திரன், சீகண்டர், அனந்தர்.
13.	சத்தி நிபாதம்	–	சத்தி வீழ்தல்; அருள் வீழ்ச்சி; அருள் உயிரின் அறிவிற் கலத்தல்.
14.	சந்திர மண்டலத்துக் கலைகள் 16	..	அகரம், உகரம், மகரம், விந்து, அர்த்தசந்திரன், நிரோதினி, நாதம், நாதாந்தம், சத்தி, வியாபினி, வியோம ரூபிணி, அனந்தை, அனாதை அனாசிருதை, சமனை, உன்மனை.

சந்திர கலைகள் பதினாறும் அவற்றின் இடங்களும்

எண்	கலைகளின் பெயர்	வேறு பெயர்	இடம்
1.	அகரம்	மேதை	தொப்புள் (நாபி)
2.	உகரம்	அர்க்கீசம்	இருதயம்
3.	மகரம்	விடகலை	கழுத்து
4.	விந்து	––	புருவமத்தி
5.	அர்த்த சந்திரன்		நடுநெற்றி
6.	நிரோதினி		தலை
7.	நாதம்		தலை
8.	நாதாந்தம்		தலை
9.	சத்தி		தலை
10.	வியாபினி		
11.	வியோம ரூபிணி (வியோம ரூபை)		தலைக்கு மேல்
12.	அனந்தை		
13.	அனாதை		
14.	அனாசிருதை		
15.	சமனை		
16.	உன்மனை		

இப்பதினாறனுள், முதல் பத்தும், இறுதி இரண்டும் ஆக பன்னிரண்டும் பிராசாத கலைகள் என்பர்.

சிதாகாயம் – உயிரின் உணர்வு நிலை 36 தத்துவங்களையும் கடந்து, சிவத்தை உணரும் பொழுது, அவனைப் பரநிலையில் (தத்துவம் கடந்த நிலை) அருவமாகவும் அதற்கும் அப்பால் சொரூபமாகவும் (சிவத்தின் இயல்பான நிலை)

உணரும். அந்த உணர்வு நிலையைச் சிதாகாயம் என்பர். இந்த உணர்வுக்கு எட்டாத சிவத்தின் நிலை கணக்கில் அடங்காது. அவை 'பரமாகாயம்' எனப்படும். ஆகாயம் – வெளி. நாம் காணும் பௌதீக ஆகாயம் அன்று இது.

15. சிவகலைகள் – 10

1. இந்திகை	–	எல்லா அசுத்தங்களையும் போக்குபவள்
2. தீபிகை	–	ஒளி வழங்குபவள்
3. ரோசிகை	–	அழகை விளைவிப்பவள்
4. மோசிகை	–	அனைத்துத் தொடக்கு களிலிருந்தும் விடுபட்டவள்
5. ஊர்த்துவகாமினி	–	மேல் நோக்கிச் செல்பவள்
6. வியாபினி	–	எங்கும் பரவுபவள்
7. வியோம ரூபிணி	–	ஆகாய வடிவு கொண்டு, எங்கும் நிறைந்தவள்
8. அனந்தை	–	அழிவற்ற நிலையை அருள்பவள்
9. அனாசிருதை	–	சிவ தத்துவம், சத்தி தத்துவம் – இவற்றைப் பற்றாத நிலையில் உள்ளவள்.
10. உன்மனி		

16. சிவனும் சத்தியும் – சிவன் – சத்தி, நாதம் – விந்து, சதாசிவன் – மனோன்மணி, உருத்திரன் – உமை, திருமால் – இலக்குமி, பிரமன் – வாணி

(சதா) சிவன் முகம் 5: .. ஈசானம், தத்புருடம், வாமதேவம், அகோரம், சத்யோஜாதம்.

17. சிவாகமம் 28 – காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூட்சுமம், சகஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம், விசயம், நிஸ்வாஸம், சுவாயம்புவம், ஆக்னேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திர ஞானம், முகவிம்பம், புரோத்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேச்சுரம், கிரணம், வாதுளம்.

18. சுத்தாத்து விதம் .. இது இறை, உயிர், உலகம் – என்பவை கொள்ளும் சம்பந்தம். அது மூன்று கூறுகளை உடையது:

1. ஒன்றாதல்: சிவம் உலகிலும் உயிர்களிலும் வியாபகமாக நிற்றல்
2. வேறாதல்: சிவம் வேறாக நின்று, நிமித்த காரணனாகி உலகையும் சீவர்களையும் படைத்தல்; உயிர்கட்கு, அறிவுக்கு அறிவாக இருந்து அறிவு ஊட்டுதல்
3. உடனாதல் : உயிர்கள் அறியும் போது உடன் நின்று அறிதல்.


19. சூக்கும உடம்பு .. தன்மாத்திரை 5ம் – மனம், புத்தி, அகங்காரம் என்ற 3 அந்தக் கரணங்களும், ஆக 8 தத்துவங்கள் உடைய உடம்பு

20. செவிலித்தாய் இருவர் .. குண்டலிசத்தி, சிற்சத்தி. (நற்றாய் அருட் சத்தி)

21. முப்பத்தாறு தத்துவங்கள் :–

மாயை

- சுத்த மாயை (மாமாயை, குடிலை, குண்டலி, விந்து)
  - சத்தப் பிரபஞ்சம்
    1. சூக்குமை
    2. பைசந்தி
    3. மத்திமை
    4. வைகரி
  - அத்தப் பிரபஞ்சம்
    - சுத்த தத்துவம் (சிவதத்துவம்)
      1. சிவம் (நாதம்)
      2. சத்தி (விந்து)
      3. சதாசிவம்
      4. ஈசுரம்
      5. சுத்த வித்தை
    - கலை
      1. நிவிருத்தி
      2. பிரதிட்டை
      3. வித்தை
      4. சாந்தி
      5. சாந்தியதீதை
- அசுத்த மாயை (அதோமாயை, மாயை, மோகினி)
  - அசுத்தப் பிரபஞ்சம் வித்தியா தத்துவம் (7)
    1. காலம்
    2. நியதி
    3. கலை
    4. வித்தை
    5. அராகம்
    6. புருடன்
    7. மூலப்பகுதி (பிரகிருதிமாயை, மான்)



பிரகிருதி மாயையில் தோன்றும் தத்துவங்கள்
அந்தக் கரணம் 4 – மனம், புத்தி, சித்தம், அகங்காரம்
தன்மாத்திரை 5
ஐம்பூதம் 5
ஞானேந்திரியம் 5
கன்மேந்திரியம் 5
என்ற 24 மட்டுமே; – பிறவெல்லாம் வகைப்பாடுகள்.
இந்த 24 – ம் ஆன்ம தத்துவம்

சுத்த தத்துவம் –	5
வித்தியா தத்துவம் –	7
ஆன்ம தத்துவம் –	24
	36

22. தாத்துவிகங்கள் 60

நிலத்தின் கூறு : (5) எலும்பு முதலியன
நீரின் கூறு : (5) மூத்திரம் முதலியன
தீயின்கூறு (5) வெம்மை முதலியன
காற்றின் கூறு (10) பிராணவாயு முதலிய தசவாயுக்கள்
ஆகாயத்தின் கூறு (10) அத்தி முதலியவை

காமம், குரோதம் லோபம், மோகம், மதம், மாற்சரியம்	–	(6)
வசனம், நடத்தல் செய்தல், மூத்திர வெளியேற்றம் மல வெளியேற்றல்	–	(5)
சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்	–	(5)
சத்துவம், இராஜசம், தாமதம்	–	(3)
அகங்காரம் முதலிய மூன்று	–	(3)
காமம், கோபம், திரிபு (மயக்கம்)	–	(3)

23.	தாதான்மிய சம்பந்தம்	..	சத்தியும், சிவமும் வேறாகாது, பூவும் மணமும் போல இருதிறப் பட்டு நிற்றல்.
24.	தேவர் முப்பத்து மூவர்	..	(33 கோடி) : உருத்திரர் 11, சூரியர் 12, வசுக்கள் 8, அசுவினி தேவர் 2
25.	நவ சத்திகள்	..	வாமை, சேட்டை, ரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரதமனி, சர்வபூத தமனி, மனோன்மணி.
26.	நவநிலை	..	1. அருவம் : சிவம், சத்தி, நாதம், விந்து 2. அருவுரு : சதாசிவன் 3. உருவம் : மகேச்சுரன், பிரமன், திருமால், உருத்திரன்.
27.	நாடி (10)	..	புருடன், காந்தாரி, அக்கினி, அலம்புலி, இடகலை, பிங்கலை, சுழுமுனை, சிங்குவை, சங்குனி, குருதம் (குணா)
28.	பட்சம் 2	..	சம்பு பட்சம், அணு பட்சம்
29.	மலம் 5	..	ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி
30.	முத்தி 3	..	சீவன்முத்தி, பத முத்தி, பரமுத்தி
31.	முடிச்சு 3	..	பிரமக்கிரந்தி, விஷ்ணுக்கிரந்தி, உருத்திரக் கிரந்தி–இவை ஆறு

			ஆதாரங்களுள், இரண்டு இரண்டு கொண்டவை.
32.	மூன்று வகை உயிர்கள்	..	சகலர் – மும் மலமும் உடையோர் பிரளயாகலர் – ஆணவம், மாயை என்ற இருமலம் உடையோர் விஞ்ஞானாகலர் – ஆணவ மலம் மட்டும் உடையோர்.
33.	வாக்கு 4	..	சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி
34.	தசவாயுக்கள்		
	1. பிராணன்	..	இதயம் இயங்கிச் சுவாசம் விட உதவுவது
	2. அபானன்	..	கீழ் நோக்கும் வாயு, மலசலம் முதலியவற்றை வெளியேற்றுவது.
	3. சமானன்	..	உண்ட உணவைச் சீரணிக்கச் செய்வது
	4. உதானன்	..	மேல் நோக்கும் வாயு, நாபியில் நிற்பது
	5. வியானன்	..	உடல் முழுதும் வியாபித்திருப்பது, இரத்த ஓட்டத்தை உண்டாக்குவது.
	6. நாகன்	..	நீட்டல், முடக்கல், சொல்லல், விக்கல் இவற்றிற்குக் காரணமாவது
	7. கூர்மன்	..	இமைத்தல், விழித்தல், மயிர் சிலிர்த்தலைச் செய்வது
	8. கிரிகரன்	..	தும்மல், இருமல், வெம்மை, சினம் – இவற்றை உண்டாக்குவது
	9. தேவதத்தன்	..	ஓட்டம், இளைப்பு, வியர்வை, கொட்டாவி – இவற்றை விளைவிப்பது
	10. தனஞ்சயன்	..	உயிர் பிரிந்தாலும் உடம்பில் நின்று, உச்சந்தலை வெடித்து வழிவிடப் போவது.
35.	வித்தியேசுரர்	..	(8) அனந்தர், சூட்சுமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏக முத்திரர், திரிமூர்த்தர், சீகண்டர், சிகண்டி.

பின்னிணைப்பு – V

சிறப்புப் பெயர் அகர நிரல்

எண் : பாட்டெண்

பின்னிணைப்பு – VI

தமிழ் எழுத்துக்கள் - பிறமொழி எழுத்துக்கள்

உயிர் எழுத்துகள் — Vowels

Tamil தமிழ்	Nagari நாகரம்	Grandha க்ரந்தம்	Malayalam மலயாளம்	Telugu తెలుగు	Kannada ಕನ್ನಡಂ
அ	अ	𑌅	അ	అ	ಅ
ஆ	आ	𑌆	ആ	ఆ	ಆ
இ	इ	𑌇	ഇ	ఇ	ಇ
ஈ	ई	𑌈	ഈ	ఈ	ಈ
உ	उ	𑌉	ഉ	ఉ	ಉ
ஊ	ऊ	𑌊	ഊ	ఊ	ಊ
ரு	ऋ	𑌋	ഋ	ఋ	ಋ
ரூ	ॠ	𑍠	ൠ	ౠ	ೠ
லு	ऌ	𑌌	ഌ	ఌ	ಌ
ஏ	ए	𑌏	എ	ఎ	ಎ
ஐ	ऐ	𑌐	ഐ	ఐ	ಐ
ஓ	ओ	𑌓	ഒ	ఒ	ಒ
ஔ	औ	𑌔	ഔ	ఔ	ಔ
அம்	अं	𑌅𑌂	അം	అం	ಅಂ
அஹ	अः	𑌅𑌃	അഃ	అః	ಅಃ

மெய் யெழுத்துக்கள் — Consonents

Tamil	Nagari	Grandha	Malayalam	Telugu	Kannada
க	क	𑌕	ക	క	ಕ
க^2	ख	𑌖	ഖ	ఖ	ಖ
க^3	ग	𑌗	ഗ	గ	ಗ
க^4	घ	𑌘	ഘ	ఘ	ಘ
ங	ङ	𑌙	ങ	ఙ	ಙ
ச	च	𑌚	ച	చ	ಚ
ச^2	छ	𑌛	ഛ	ఛ	ಛ
ஜ	ज	𑌜	ജ	జ	ಜ
ச^4	झ	𑌝	ഝ	ఝ	ಝ
ஞ	ञ	𑌞	ഞ	ఞ	ಞ

Tamil தமிழ்	Nagari நாகரம்	Grandha க்ரந்தம்	Malayalam മലയാളം	Telugu తెలుగు	Kannada ಕನ್ನಡಂ
ட	ट	𑌟	ട	ట	ಟ
ட^2	ठ	𑌠	ഠ	ఠ	ಠ
ட^3	ड	𑌡	ഡ	డ	ಡ
ட^4	ढ	𑌢	ഢ	ఢ	ಢ
ண	ण	𑌣	ണ	ణ	ಣ
த	त	𑌤	ത	త	ತ
த^2	थ	𑌥	ഥ	థ	ಥ
த^3	द	𑌦	ദ	ద	ದ
த^4	ध	𑌧	ധ	ధ	ಧ
ன/ந	न	𑌨	ന	న	ನ
ப	प	𑌪	പ	ప	ಪ
ப^2	फ	𑌫	ഫ	ఫ	ಫ
ப^3	ब	𑌬	ബ	బ	ಬ
ப^4	भ	𑌭	ഭ	భ	ಭ
ம	म	𑌮	മ	మ	ಮ
ய	य	𑌯	യ	య	ಯ
ர/ற	र	𑌰	ര	ర	ರ
ல	ल	𑌲	ല	ల	ಲ
வ	व	𑌵	വ	వ	ವ
ச	श	𑌶	ശ	శ	ಶ
ஷ	ष	𑌷	ഷ	ష	ಷ
ஸ	स	𑌸	സ	స	ಸ
ஹ	ह	𑌹	ഹ	హ	ಹ
ள	ळ	𑌳	ള	ళ	ಳ
		உயிர்மெய் யெழுத்துக்கள்			
கா	का	𑌕𑌾	കാ	కా	ಕಾ
கி	कि	𑌕𑌿	കി	కి	ಕಿ

Tamil	Nagari	Grandha	Malayalam	Telugu	Kannada
தமிழ்	நாகரம்	க்ரந்தம்	മലയാളം	తెలుగు	ಕನ್ನಡಂ
கீ	की	𑌕𑍀	കീ	కీ	ಕೀ
கு	कु	𑌕𑍁	കു	కు	ಕು
கூ	कू	𑌕𑍂	കൂ	కూ	ಕೂ
க்ரு	कृ	𑌕𑍃	കൃ	కృ	ಕೃ
க்ரூ	कॄ	𑌕𑍄	കൄ	కౄ	ಕೄ
க்லு	कॢ		കൢ	కౢ	ಕೢ
கே	के	𑌕𑍇	കെ	కె	ಕೆ
கை	कै	𑌕𑍈	കൈ	కై	ಕೈ
கோ	को	𑌕𑍋	കൊ	కొ	ಕೊ
கௌ	कौ	𑌕𑍗	കൌ	కౌ	ಕೌ
கம்	कं	𑌕𑌂	കം	కం	ಕಂ
கஹ	कः	𑌕𑌃	കഃ	కః	ಕಃ

கூட்டெழுத்துக்கள் — Congruants

க்க	क्क	𑌕𑍍𑌕	ക്ക	క్క	ಕ್ಕ
க்ம	क्म	𑌕𑍍𑌮	ക്മ	క్మ	ಕ್ಮ
க்ய	क्य	𑌕𑍍𑌯	ക്യ	క్య	ಕ್ಯ
க்ர	क्र	𑌕𑍍𑌰	ക്ര	క్ర	ಕ್ರ
க்ல	क्ल	𑌕𑍍𑌲	ക്ല	క్ల	ಕ್ಲ
க்வ	क्व	𑌕𑍍𑌵	ക്വ	క్వ	ಕ್ವ
ர்க	र्क	𑌰𑍍𑌕	ർക	ర్క	ರ್ಕ
க^{2}த^3	ग्द	𑌗𑍍𑌦	ഗ്ദ	గ్ద	ಗ್ದ
க^{2}த^3	ग्ध	𑌗𑍍𑌧	ഗ്ധ	గ్ధ	ಗ್ಧ
ங்க	ङ्क	𑌙𑍍𑌕	ങ്ക	ఙ్క	ಙ್ಕ
ச்ச	च्च	𑌚𑍍𑌚	ച്ച	చ్చ	ಚ್ಚ
ச்ச^2	च्छ	𑌚𑍍𑌛	ച്ഛ	చ్ఛ	ಚ್ಛ
ஜ்ஜ	ज्ज	𑌜𑍍𑌜	ജ്ജ	జ్జ	ಜ್ಜ
ஜ்ஞ	ज्ञ	𑌜𑍍𑌞	ജ്ഞ	జ్ఞ	ಜ್ಞ

Tamil தமிழ்	Nagari நாகரம்	Grandha க்ரந்தம்	Malayalam മലയാളം	Telugu తెలుగు	Kannada ಕನ್ನಡಂ
ஞ்ச	ञ्च	𑌞𑍍𑌚	ഞ്ച	ఞ్చ	ಞ್ಚ
ட்ண	ट्ण	𑌟𑍍𑌣	ട്ണ	ట్ణ	ಟ್ಣ
ட்³ட³	ड्ड	𑌡𑍍𑌡	ഡ്ഡ	డ్డ	ಡ್ಡ
ண்ட	ण्ठ	𑌣𑍍𑌠	ണ്ഠ	ణ్ఠ	ಣ್ಠ
ண்ட³	ण्ड	𑌣𑍍𑌡	ണ്ഡ	ణ్డ	ಣ್ಡ
ண்ண	ण्ण	𑌣𑍍𑌣	ണ്ണ	ణ్ణ	ಣ್ಣ
த்த	त्त	𑌤𑍍𑌤	ത്ത	త్త	ತ್ತ
தத²	त्थ	𑌤𑍍𑌥	ത്ഥ	త్థ	ತ್ಥ
த்வ	त्व	𑌤𑍍𑌵	ത്വ	త్వ	ತ್ವ
த்த	द्ध	𑌦𑍍𑌧	ദ്ധ	ద్ధ	ದ್ಧ
த்வ	द्व	𑌦𑍍𑌵	ദ്വ	ద్వ	ದ್ವ
ந்த	न्त	𑌨𑍍𑌤	ന്ത	న్త	ನ್ತ
ந்த²	न्थ	𑌨𑍍𑌥	ന്ഥ	న్థ	ನ್ಥ
நத³	न्द	𑌨𑍍𑌦	ന്ദ	న్ద	ನ್ದ
நத⁴	न्ध	𑌨𑍍𑌧	ന്ധ	న్ధ	ನ್ಧ
ந்ந	न्न	𑌨𑍍𑌨	ന്ന	న్న	ನ್ನ
ப்த	प्त	𑌪𑍍𑌤	പ്ത	ప్త	ಪ್ತ
ம்ம	म्म	𑌮𑍍𑌮	മ്മ	మ్మ	ಮ್ಮ
ம்ப³	म्ब	𑌮𑍍𑌬	മ്ബ	మ్బ	ಮ್ಬ
ல்வ	ल्व	𑌲𑍍𑌵	ല്വ	ల్వ	ಲ್ವ
சச	श्च	𑌶𑍍𑌚	ശ്ച	శ్చ	ಶ್ಚ
சவ	श्व	𑌶𑍍𑌵	ശ്വ	శ్వ	ಶ್ವ
சர	श्र	𑌶𑍍𑌰	ശ്ര	శ్ర	ಶ್ರ
ஷ்ட	ष्ट	𑌷𑍍𑌟	ഷ്ട	ష్ట	ಷ್ಟ
க்ஷ	क्ष	𑌕𑍍𑌷	ക്ഷ	క్ష	ಕ್ಷ

பின்னிணைப்பு - VII

சுவடிகளின் இயல் வைப்பு
ஒப்பு நோக்கு

சுவடி	கடவுள் வாழ்த்து	வேதச் சிறப்பு	ஆகமச் சிறப்பு	குருபாரம்பரியம்	குறியீட்டு விளக்கம்
அ	1	2	3	4	△ 2 - ஆம் பெயரை உடையது
ஆ	1	2	3	4	● 1 - ஆம் பெயரை உடையது
இ	1	2	3	4	□ முழுப்பெயரும் உடையது
ஈ	1	2	3	4	← முன் உள்ள அதிகாரத்தில் அடங்குவது
உ	1	2	3	4	→ பின் உள்ள அதிகாரத்தில் அடங்குவது
ஊ	1	2	3	4	
எ	சிறப்புப்பாயிரம் 1	2	3	4	✱ தன் பெயருடன் பின் வரும் இயலின் பெயரையும் இணைத்துக் பொள்வது
ஐ	1	2	3	4	
ஒ	1	2	3	4	+ தன் பெயருடன் முன் உள்ள இயலின் பெயரையும் இணைத்துக் கொள்வது
ஓ	1	2	3	குருபரம்பரை 4	

எண் : இயல் வரிசையெண்

சுவடி	திருமூலர்வரலாறு	அவையடக்கம்	திருமந்திரத் தொகைச் சிறப்பு	குருமட வரலாறு / குருமட தெரிசனம்
அ	திருமூலர் வருமாறு 5	6	மந்திரத் தொகை 7	○ 8
ஆ	5	6	7	Δ 8
இ	5	6	7	○ 8
ஈ	5	6	7	Δ 8
உ	5	6	7	○ 8
ஊ	5	6	7	—
எ	5	6	7	○ 8
ஐ	5	6	7	Δ 8
ஒ	5	→ 6		○ 7
ஓ	5	6	தொகைச் சிறப்பு 7	—

சுவடி	திரிமூர்த்தி	அகத்தியம்	பதி வலி வீரட்டம்	இலிங்க புராணம்
அ	திரிமூர்த்தி சேடம் 9	—	வீரட்டம் எட்டு 10	11
ஆ	9	10	11	12
இ	சேட்டம், கனிட்டம், திரிமூர்த்தி 9	10	பதி வலியம் வீரட்டம் 33	34
ஈ	9	10	30	31
உ	திரிமூர்த்தி சேடம் 9	× 10	பதிவலி வீரட்டம் எட்டு 11	× 12
ஊ	8	9	பதிவியல் வீரட்டம் 10	11
எ	திரிமூர்த்திகளின் சேட்டகனிட்ட முறைமை 9	31	பதிவலியில் வீரட்டம் எட்டு 32	33
ஐ	9	10	11	12
ஒ	திருமூலகஞ் சேட்ட கனுட்ட முறை 8	9	பதி வலியில் வீரட்டம் 10	11
ஓ	திரிமூர்த்தி ஜேஷ்ட கனிஷ்ட முறைமை 8	அகபதி, வியல் → விசிட்டம் 33		34

சுவடி	தக்கன் வேள்வி	பிரளயம்	சக்கரப்பேறு	அடிமுடிதேடல்	கங்காளம் / எலும்பு கபாலம்
அ	←	12	13	→	Δ 14
ஆ	13	14	15	16	O 17
இ	35	36	37	39	Δ 38 +
ஈ	32	33	34	35	—
உ	13	14	15	← 16	Δ
ஊ	12	13	14	15	—
எ	34	38	37	36	Δ 35
ஐ	13	14	15	16	O 17
ஒ	12	13	14	மகப்பால் அடிமுடி தேடல் 15	
ஓ	35	36	37	39	Δ 38

சுவடி	சருவ சிருட்டி	திதி	சங்காரம்	திரோபவம்	அனுக்கிரகம்
அ	சிருட்டி 15	16	17	18	19
ஆ	18	19	20	21	22
இ	40	41	42	43	44
ஈ	36	37	38	39	40
உ	சிருட்டி 17	18	19	20	21
ஊ	16	17	18	19	20
எ	சர்வசிருட்டி 39	40	41	42	43
ஐ	18	19	20	21	22
ஒ	சிருட்டி 16	17	18	19	20
ஓ	40	41	42	43	44

சுவடி	கர்ப்பக் கிரியை	மூவகை ஆருயிர் வர்க்கம்	அக்கினி காரியம்	அந்தணரொழுக்கம்	இராசதோடம்
அ	20	21		+22	23
ஆ	23	24	× 25		26
இ	45	46	× 19		20
ஈ	41	42	→ 18		19
உ	22	23		← 24	25
ஊ	21	22	23	24	25
எ	44	45	19	20	21
ஐ	23	24	× 25		26
ஒ	21	22	→ 23		24
ஓ	45	46	20	21	22

சுவடி	சிவ /வானச் சிறப்பு	யாக்கை நிலையாமை	செல்வ நிலையாமை	இளமை நிலையாமை	உயிர் நிலையாமை
அ	24	25	26	27	28
ஆ	27	28	29	30	31
இ	21	11	12	13	14
ஈ	20	11	12	13	14
உ	26	27	28	29	30
ஊ	Δ 26	27	28	29	30
எ	வான் சிறப்பு 26	10	11	12	13
ஐ	2 7	28	29	30	31
ஒ	2 5	26	27	28	29
ஓ	அமுதச் சிறப்பு 23	11	12	13	நிலையாமை 14

சுவடி	தானச் சிறப்பு	அறஞ் செய்யான் தன்மை / திறம் / அறஞ்செய்யாமை	அன்புடைமை	அன்பு செய்வாரை அறிவன் சிவன்
அ	29	Δ 30	31	32
ஆ	+ இரந்தார்க்கீதல் 32	○ 33 தன்மை	34	35
இ	22	○ 23 தன்மை	26	27
ஈ	21	○ 22	23	24
உ	31		32	33
ஊ	+ இரந்தார்க்கீதல் 31	32	33	34
எ	22 இரந்தார் கீதல் 23		24	25
ஐ	32	33	34	35
ஒ	30	அறனறியாமை 31	32	33
ஓ	ஈந்தவிரேல் 24 25	26		← 27

சுவடி	கல்வி	கேள்வி கேட்டமைதல்	கல்லாமை	கொல்லாமை	புலால் மறுத்தல்
அ	33	34	35	36	—
ஆ	37	38	36	39	—
இ	28	29	30	15	—
ஈ	25	26	27	15	—
உ	34	35	36	37	—
ஊ	36	37	35	38	—
எ	26	27	28	14	15
ஐ	36	38	37	→ 39	—
ஒ	34	35	36	37	—
ஓ	28	29	30	15	16

சுவடி	பிறன்மனை நயவாமை	மகளிர் இழிவு	நல்குரவு	நடுவு நிலைமை	கள் உண்ணாமை
அ	37	38	39	40	41
ஆ	40	41	42	43	44
இ	16	17	18	31	32
ஈ	16	17	—	28	29
உ	38	39	40	41	42
ஊ	39	40	41	42	43
எ	16	17	18	29	30
ஐ	40	41	42	43	44
ஒ	38	—	39	40	41
ஓ	17	18	19	31	32

சுவடி	பாத்திரம்	அபாத்திரம் அவபாத்திரம்	தீர்த்தம்	திருக் கோயிலிழிவு	அதோமுக தெரிசனம்	அதோ முகம்
அ	42	△ 43	44	45	46	
ஆ	45	○ 46	47	திருக்கோயில் 48	50	49
இ	47	○ 48	49	50	51	
ஈ	43	○ 44	45	46	47	
உ	43	△ 44	45	46	47	
ஊ	44	△ 45	46	47	48	49
எ	46	○ 47	48	49	50	
ஐ	45	○ 46	47	48	49	
ஒ	பாத்திர மறிதல் 43	△ 42	44	45	46	
ஓ	47	○ 48	49	50	51	

அதோமுக தரிசனம் சுவடிகளில் உள்ள இடம் பொருத்தமன்று ஆதலின், இப்பொழுதைய பதிப்பில், அது 15 ஆவது இயலாக வைக்கப்படுகின்றது.

சுவடி	சிவ நிந்தை	குரு நிந்தை	மயேசுர நிந்தை	பொறைஉடைமை	பெரியாரைத் துணைக்கோடல்
அ	47	48	49	50	51
ஆ	—	+ 51	52	53	54
இ	52	50	54	55	56
ஈ	48	49	50	51	52
உ	48	49	—	50	51
ஊ	50	48	—	49	51
எ	51	52	53	54	55
ஐ	50	51	52	53	54
ஒ	47	48	49	50	51
ஓ	சருவநிந்தை 52	53	54	55	56

இப்பதிப்பில் மேற்கொண்ட இயல் வைப்பு

1. கடவுள் வாழ்த்து
2 வரலாறு
3. அவையடக்கம்
4. வேதச் சிறப்பு
5. ஆகமச் சிறப்பு
6. திரிமூர்த்தி
7. அகத்தியம்
8. பதிவலி வீரட்டம் எட்டு
9. இலிங்க புராணம்
10. தக்கன் வேள்வி
11. பிரளயம்
12. சக்கரப் பேறு
13. எலும்பு கபாலம்
14. அடிமுடி தேடல்
15. அதோமுக தரிசனம்
16. சர்வ சிருட்டி
17. திதி
18. சங்காரம்
19. திரோபவம்
20. அனுக்கிரகம்
21. கர்ப்பக் கிரியை
22. மூவகையாருயிர் வர்க்கம்
23. யாக்கை நிலையாமை
24. செல்வ நிலையாமை
25. இளமை நிலையாமை
26. உயிர் நிலைபேறு[1]
27. அந்தணரொழுக்கம்[2]
28. இராச தோடம்
29. சிவ வானச் சிறப்பு
30. தீர்த்தம்
31. தானச் சிறப்பு
32. அறஞ் செய்யான் தன்மை
33. அன்புடைமை
34. அன்பு செய்வாரை அறிவன் சிவன்
35. கல்வி
36. கேள்வி கேட்டமைதல்
37. கல்லாமை
38. கொல்லாமை[3]
39. பிறன்மனை நயவாமை
40. மகளிரிழிவு
41. நல்குரவு
42. கள்ளுண்ணாமை
43. சிவநிந்தை[4]
44. பொறையுடைமை
45. பெரியாரைத் துணைக்கோடல்
46. நடுவுநிலைமை

1. அனைத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் அதிகாரப் பெயர், 'உயிர்நிலையாமை' என்றே உள்ளது. அது பொருட் பொருத்தமில்லாதது ஆதலின், இப்பொழுதைய பதிப்பில் "உயிர்நிலைபேறு" எனத் திருத்தப்படுகிறது.

2. பதிப்புகளில் இதற்கு முன் உள்ள 'அக்கினி காரியம்' என்னும் அதிகாரம், பழைய சுவடிக் குடிவழிகளைப் பின்பற்றி, இதில் அடக்கப்படுகிறது.

3. 'கொல்லாமை' – அதிகாரத்தை அடுத்துப் பதிப்புகளில் உள்ள 'புலான் மறுத்தல்' என்னும் அதிகாரம் 2 சுவடிகளில் மட்டுமே தனியாக உள்ளமையாலும், பொருட்பொருத்தம் காரணமாகவும் 'கொல்லாமை' – அதிகாரத்தில் அடக்கப்படுகிறது.

4. 'சிவநிந்தை' – அதிகாரத்தை அடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள 'குருநிந்தை', 'மயேசுர நிந்தை' என்னும் அதிகாரங்கள் இடைச் செருகல்.

பின்னிணைப்பு – VIII

அருஞ்சொல் அகர நிரல்
எண் : பாட்டெண்

(முன்பக்க தொடர்ச்சி)

1981 - ஆம் ஆண்டில் "சிறந்த கல்லூரி முதல்வர்" எனத் தமிழக அரசின் விருது பெற்றார்.

இலக்கணம், மொழியியல், காப்பிய இலக்கியம், திருமுறைகள், சைவ சித்தாந்தம் ஆகியவை இவர் பயிலும் சிறப்புத் துறைகள். இசையில் பயிற்சி பெற்றவர்.

"பழந்தமிழகத்தில் கலைகளும் அறிவியலும்" என்னும் பொருள் பற்றி 1962 - இல் ஆய்வேடு வழங்கி, "எம். லிட்.," பட்டமும், "இராமலிங்க சுவாமிகளின் நூல்கள்" பற்றி 1968 - இல் ஆய்வேடு வழங்கி "பிஎச்.டி." பட்டமும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பெற்றார்.

இராமலிங்க சுவாமிகள் பற்றி இவர் எழுதிய ஆங்கிலநூல்: "Life and Teachings of st. Ramalingar" – மும்பைப் பாரதீய வித்யாபவனத்தால் 1973 இல் வெளியிடப் பட்டது.

இவர் எழுதிய பிற நூல்கள் : உருவும் உணர்வும், பண் சுமந்த பாடல், கல்லும் கனியாகும், மக்களை எட்டிய மறைத் தமிழ், பன்னிரண்டாம் திருமுறை – ஓர் ஆய்வு, திருக்குறள் சிந்தனை, பாடுவார் முத்தப்பரின் 'செயங் கொண்டார் சதகத்திற்கு உரை, பண்டித மணி கதிரேசனாரின் 'மண்ணியல் சிறு தேர்' – நாடக நூலுக்கு உரை ஆகியவை.

இவரது மேற்பார்வையில் 20 மாணவ மாணவியர்கட்கு மேல், ஆய்வு நடத்தி, "பிஎச். டி." பட்டம் பெற்றுள்ளனர்.

இந்நூல் ...

திருமந்திரம் யோகநூல். தமிழ் நாட்டின் முதல் சித்தராகிய திருமூலர் இயற்றியது. யோகம் என்பது கலத்தல்; உணர்வால் ஒன்றுபடுதல். பரம்பொருளோடு – சிவத்தோடு – மனிதன், இந்த உடம்பில் வாழும் போதே, ஒன்றுபட்டிருப்பது சிவயோகம்.

சிவயோகம் பற்றிய முழு விவரண நூல் திருமந்திரம். உடலால், மனத்தால் அனுபவிப்பது போல், உயிரால் அனுபவிக்கலாம். அதுவும் சிவத்தை – அந்தப் பெரிய அறிவு நிலையை – அனுபவிக்கலாம் என்று கூறி, அதற்கு விதியும் (Theory) சாதனை வழியும் (Practice) வகுத்து, வாழ்விற்கு ஒரு புதுத் துறையைத் தருகின்றார் திருமூலர்.

இச் சிவயோகம் பதஞ்சலியின் அஷ்டாங்க யோகத்தில் இருந்து, வளர்த்து உருவாக்கப்பட்டது. திருமந்திரப் பதிப்பின் இந்த முதற் பகுதி, சிவயோகத்தின்

1. தத்துவ (Philosophical)
2. புராண (Mythological)
3. அறநெறி (Ethical)

பின்னணிகளை முதலில் விளக்குகின்றது. வேதநெறியாளரும், புத்த ஜைன சமயங்களும் வலியுறுத்திக் கூறும் 'நிலையாமை' க் கொள்கையை விரிவாகக் கூறி, அதை மறுத்து, இந்த உடம்பு இறக்க வேண்டியதில்லை, இதை அழியா உடம்பு ஆக்கலாம் என்று நிலைநாட்டுகின்றது.

பிறகு, சிவயோகத்தின் அட்டாங்கத்தை – இயமம், பிராணாயாமம் முதலிய எட்டு அங்கங்களை – விளக்குகின்றது.